


கடல் கடந்த நாட்கள்

பயண அனுபவப் பதிவுகள்



கலையார்வன்

கடல் கடந்த நாட்கள்

- பயண அனுபவப் பதிவுகள் -



கலையார்வன்

வெளியீடு

ஜெயந்த் சென்ரர்

யாழ்ப்பாணம்

கடல் கடந்த நாட்கள்

பயண அனுபவப் பதிவுகள்

நூலாசிரியர் : கலையார்வன் (கு. இராயப்பு)
பக்கங்கள் : 420 + XX
முதற்பதிப்பு : மார்கழி 2015
பதிப்புரிமை : ஆசிரியர்
வெளியீடு : ஜெயந்த் சென்ரர், 165, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.
கணினி, வடிவமைப்பு, அட்டை : ஜெயந்த் சென்ரர்
அச்சுப்பதிப்பு : யே. எஸ். பிரின்டர்ஸ், பண்டத்தரிப்பு
விலை : 500/=

Kadal Kadanthe Naadkal

Experiences of Journey

Author : Kalayarvan (K.Rayappu)
Pages : 420 + XX
First Edition : December 2015
Copy Right : Author
Published by : Jeyanth Centre, 165, Vempady Road, Jaffna.
Computer, Layout, Cover : Jeyanth Centre
Print by : J.S.Printers,Pandathruppu.
Price : 500/=

International Standard Book Number
ISBN 978-955-0197-05-7



பிறந்த மண்ணிலும்
புலம்பெயர் மண்ணிலும்
உறவு கொண்டாடி உயிர் துறந்த
நண்பர்கள் மற்றும் உறவினர்களுக்கு
இந்நூல் அர்ப்பணம்



புதிய அனுபவங்களைத் தொற்றவைத்துள்ளது

கலையார்வனுக்கு என் வாழ்த்துக்கள்...

400 இற்கும் மேற்பட்ட பக்கங்களைக் கொண்ட 'கடல் கடந்த நாட்கள்' எனும் பயண அனுபவப் பதிவு நூலில், தன் வாழ்வில் பல்வேறு காரணங்களுக்காக இலங்கையிலும், பிற நாடுகளிலும் பயணித்ததால் பெற்றுக்கொண்ட தன் அனுபவங்களை ஓர் ஆவணமாக எமக்குத் தந்துள்ளார் கலையார்வன்.

ஒரு வாசகனான எனக்கு அவரது பயணக் குறிப்புகளை வாசிக்கும்போது நானும் அவருடன் கூடப் பயணித்ததான ஓர் உணர்வே ஏற்பட்டது. பல்வேறு தகவல்களை, ஆதாரபூர்வமான தரவுகளை சுவாரஸ்சியமான சொல்லாடல் மூலம் கலையார்வன் எமக்குத் தந்துள்ளார்.

ஏலவே பல பயணக் கட்டுரைகளை நான் வாசித் திருக்கிறேன். ஆயினும், ஓரிரு நாட்கள், ஓரிரு வாரங்கள் பயணித்து எழுதப்பட்ட அக்கட்டுரைகளை விட வித்தியாசமாக, தான் அங்கு வாழ்ந்த, வாழ்ந்து அனுபவித்தவற்றை கலையார் வன் மிக மிக நயம்படத் தந்திருக்கிறார். இங்கு அவரது நூலின் இலகுத் தன்மைக்கு, எளிமைக்கு, அவரது எழுத்துப் பரீச்சயமும் ஒரு காரணமாயிருக்கிறது.

இலங்கையில் ஒரு சில இடங்களுக்குள் மட்டுமே நடமாடிய... நாடோடியாகிய எனக்கு, இந்த நூல் புதிய அனுபவங்களைத் தொற்றவைத்துள்ளது. இந்த நூலை வாசிக்கப்போகும் வாசகர்கள் இந்த அனுபவத் தொற்றலை நிச்சயம் அனுபவிப்பார்கள்.

'நிறைவாக' எனும் தலைப்பில் அவர் வைத்துள்ள முத்தாய்ப்புக் குறிப்புகள், நிறைவானவையும், நேர்மையான வையும், சிந்திக்கவேண்டியனவும் ஆகும். அக்குறிப்புகளை

அவர் எழுதியதற்கான உள்ளார்ந்தத்தை பின்வருமாறு தெரியப்படுத்துகிறார் (பக்கம் 408);

"... ஐரோப்பிய நாடுகள் தன்நிலையெண்ணிக் கலங்குகின்ற வேளையில் அந்நாடுகளில் எம்மவரின் நிலையையும் எண்ணிப் பார்க்கவேண்டிய நிலையில் நலன் விரும்பிகள் உள்ளனர். பல்வகை மாற்றங்களுக்கு இலக்காகியிருக்கும் எம்மவர்களில் வரவேற்கத்தக்க மாற்றங்களும் அதேவேளை, விரும்பத்தகாத மாற்றங்களும் உள்ளன. இத்தகையோர் மத்தியில் சரியான திசையை நோக்கிய பயணம் அவசிய மென்பதை வெளிப்படுத்துவதாக அமையும் இப்பகுதி, எவரது மனதையும் புண்படுத்தும் மற்றும் எவரையேனும் அடையாளப்படுத்தும் நோக்கத்தைக் கொண்டதல்ல."

கலையார்வனுக்கு (கு. இராயப்பு) எனது நன்றியும், வாழ்த்துக்களும்!

அன்புடன்

நந்தினி சேவியர்

இல. 269, என். சி. வீதி,
திருகோணமலை.



தமிழின் பயண இலக்கியத்திற்கு பாங்கான ஒரு பங்களிப்பு

தமது வாழ்வின் அனுபவங்களை, குறிப்பாக தமது பயண அனுபவங்களை எழுத்தில் பதிவு செய்யவேண்டும் என்ற எண்ணமும், அதற்குரிய ஆற்றலும், இயலுமையும் எல்லோருக்கும் வாய்த்து விடுவதில்லை. அந்த எண்ணம், ஆற்றல், இயலுமை கலையார்வனுக்கு வாய்த்துள்ளமை மகிழ்ச்சிக்குரிய விடயமே.

ஏற்கெனவே பல நூல்களை வெளியிட்ட இவர், 'எழுத்தை ஆளும் எழுத்தாளனாக' இருக்கின்றார். இவருக்குள் இருக்கும் எழுத்துப் பயிற்சி - ஏன் எழுத்து முதிர்ச்சி காரணமாக தனது பயண அனுபவங்களை சிறப்பான முறையில் எழுத்தாகப் பதிவு செய்திருக்கின்றார். ஒவ்வொரு நிகழ்வையும் சொல்லிச் செல்லும்போது கூடவே தனது மன உணர்வையும், சில சந்தர்ப்பங்களில் தனது விமரிசனங்களையும் ஆசிரியர் பதிவு செய்கின்றமை குறிப்பிடத்தக்கது.

பயணக் கட்டுரைகள் - தனித்த ஓர் இலக்கிய வடிவம்

'பயண இலக்கியம்' (Travel Literature) என்பது இன்று தனித்த ஓர் இலக்கிய வடிவமாக வளர்ந்துள்ளதைக் காண முடிகிறது. இன்று வெளிவருகின்ற பத்திரிகைகள் பலவற்றிலும் பயணக் கட்டுரைகள் இடம்பெற்று வருகின்றன. இத்துறை சார்ந்த பல நூல்களும் வெளிவந்துள்ளன.

"மனிதன் தான் சென்ற இடங்களில் பார்த்தவற்றை, கேட்டவற்றை மட்டுமல்ல, அதனூடாக தான் பெற்ற அனுபவங்களை, எழுந்த உணர்வுகளை, ஏற்கெனவே அதுபற்றி இருந்த அறிவுடனும், இப்போது பெற்றுக்கொண்ட புரிதலுடனும் ஒப்பு நோக்கி இலக்கியச் சுவையோடு வாசகர்களுக்குத் தருவது பயணக் கட்டுரையாகும். அவ்வாறில்லாது சென்ற இடங்களின் தகவல்களை மட்டும் தருவது வரலாற்றுக் குறிப்பாக இருக்குமேயன்றி பயணக் கட்டுரையாகாது." ('புனித நாட்டுப் பயணம்'

(2000) நூலின் அறிமுக உரை, பக். IV)

பயணக் கட்டுரைகள் இடங்களைப் பற்றிய வார்த்தைகளாக மட்டும் அல்லாமல், அந்த இடங்களை மனக் கண்ணில் கொண்டு வருபவையாகவும் (Pictorial View) உள்ளன. பல்வேறு மொழிகளில் பல பயண இலக்கியங்கள் வெளிவந்துள்ளன. குறிப்பாக ஆங்கிலத்தில் இவ்விலக்கியம் தொடர்பான கலைக் களஞ்சியங்களே (Encyclopedias) உள்ளன. தமிழிலும் ஏராளமான பயண இலக்கியங்கள் வெளிவந்துகொண்டே உள்ளன.

தனிநாயகம் அடிகளாரின் பயண நூல்

தமிழ்த்தூது தனிநாயகம் அடிகள் எழுதிய 'ஒன்றே உலகம்' என்ற நூல் (1974) அவருடைய பயண அனுபவங்களின் தொகுப்பாக உள்ளது. 'பயணம்' என்பதை 'செலவு' என்ற வார்த்தையால் அவர் குறிப்பிடுகின்றார். 'ஒன்றே உலகம்' என்ற அவருடைய நூலுக்கு அவர் எழுதிய முன்னுரையின் தலைப்பே 'சுற்றுச் செலவுக் கலை' என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. இதைச் 'சுற்றுப் பயணக் கலை' என்று இக்காலத் தமிழில் குறிப்பிடலாம் எனக் கருதுகின்றேன்.

"நான் கண்ட நாடுகளைப் பற்றி எனக்குத் தோன்றும் கருத்துக்களையும், ஆங்காங்கே நான் கண்ட காட்சிகளையும், நான் பட்டறிந்த அனுபவங்களையும் ஒன்று சேர்த்து இந்நூலில் கட்டுரைகளாக ஆக்கியுள்ளேன். இன்னும் பல கருத்துக் களையும் காட்சிகளையும் அனுபவங்களையும் பற்றி நான் எழுதியிருத்தல் கூடும். ஆயினும், சுற்றுச் செலவைப் பற்றிய விரிந்த நூல்கள் மக்களுக்குச் சலிப்பை உண்டாக்குதல் கூடும் என அஞ்சி இந்நூலைச் சுருக்கியுள்ளேன். வெளிநாட்டுச் செலவு செய்யாத முதியோருக்கும், வருங்காலத்தில் வெளிநாடு செல்ல விரும்பும் இளைஞர்களுக்கும், தம் அறிவை வளர்க்க விரும்பும் சிறுவர்களுக்கும் பயன்படக் கூடும் என்று நினைத்து இந்நூலை அச்சேற்றுவதற்கு உடன்பட்டேன்."

என தனிநாயகம் அடிகளார் தனது பயணக் கட்டுரைகள் அடங்கிய 'ஒன்றே உலகம்' என்ற நூலின் நோக்கத்தைக் குறிப்பிட்டுள்ளார். அடிகளாருடைய இந்த நோக்கத்தை நிறைவு செய்யும் ஒன்றாகவே கலையார்வனின் 'கடல் கடந்த நாட்கள்' நூலையும் நாம் கருதலாம்.

கலையார்வன் தனது நினைவுகளை இரை மீட்டுள்ளார்

பயண அனுபவங்களை எழுத்தில் வடிக்கும் எழுத்தாளர்கள் பொதுவாகத் தமது பயணங்களின்போது குறிப்புகளையும் எடுத்துக் கொள்வார்கள். அதனால், பயணத்தின் பின்னர் அவர்கள் அக்குறிப்புகளின் உதவியோடு தமது பயணக் கட்டுரைகளை இலகுவாக எழுதுவர். ஆனால், கலையார்வனின் நிலை அவ்வா றானதல்ல.

தனது பயண அனுபவங்களை உடனுக்குடன் குறிக்காமல், பல ஆண்டு

களுக்கும் பின்னர் தனது 'நினைவுகளை' இரை மீட்டு இந்நூலை எழுதியுள்ளார். ஆயினும், அன்றன்று எழுதிய நாட்குறிப்புகள் போல மிக விரிவான தகவல்களை இவர் பதிவு செய்துள்ளமை ஆச்சரியத்தை அளிப்பதாக உள்ளது.

நாவலுக்குரிய விறுவிறுப்பு

பயணக் கட்டுரைகளின் தொகுப்பாக இந்நூல் இருந்தாலும், இதைப் படிக்கும்போது ஒரு நாவலைப் படிப்பது போன்ற விறுவிறுப்பும் உணர்வும் ஏற்படுகின்றது என்பதை இங்கு குறிப்பிட்டே ஆகவேண்டும். தனது அனுப வங்களைச் சிறப்பாக வெளிப்படுத்தும் ஆற்றலும், விடயங்களை விறுவிறுப்பாகச் சொல்லும் திறனும் இவருக்கு வாய்க்கப் பெற்றதால் இவருடைய எழுத்துக்கள் நாவலுக்குரிய தன்மையைப் பெற்றுள்ளன எனலாம்.

அரிதான தமிழ்ப் பதங்கள்

இவருடைய நூலில் பல அரிதான, அழகான தமிழ்ப் பதங்களை அறிமுகம் செய்துள்ளார். வானூர்தி (Air graft), நீரூர்தி (Ship), தானுந்து (Car), மழை காப்பு உடை (Rain Coat), பற்சக்கர தொடருந்து (Cogwheel), இழுவைச் சிற்றூர்தி (Cable Car), உருக்குக் கம்பிப் பாதை (Cableway), பனித்தரை வழுக்கி (Ski) போன்ற பதங்கள் அவற்றுள் சிலவாகும்.

யாழ்ப்பாண அயல் தீவுகளுக்கான பயணங்கள் பற்றி இவர் எழுதும்போது பல கிராமிய வழக்காற்றுப் பதங்களைப் பயன்படுத்துவது குறிப்பிடத்தக்து. கடல்சார் தொழிலோடு தொடர்புடைய சொற்களாக சுக்கான், லோமியா, அரிக்கன் லாந்தர், மரக்கோல், கூத்துவாரி, தண்டையல், மட்டி எனப் பல பதங்கள் இவருடைய நூலில் இடம்பெற்றுள்ளன. தற்கால கணினி யுகத்தில் காலாவதியாகிப் போகும் ஆபத்தில் இருக்கும் இச்சொற்களை இவர் பயன்படுத்துவதன் மூலம் அவற்றிற்கு மீள் உயிர் கொடுத்துள்ளார் எனலாம்.

வரலாற்றுப் பொக்கிசங்களாக விளங்கிய பயணக் குறிப்புக்கள்

கடந்த பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் தாம் அறியாத வேற்று நாடுகளுக்குப் பயணம் செய்த பயணிகளின் குறிப்புக்களில் இருந்தே அந்நாடுகளில் அக்காலத்தில் வாழ்ந்த மக்களுடைய வாழ்வு முறை, பண்பாடு, பழக்க வழக்கங்கள், கலை இலக்கிய வளர்ச்சி போன்றவற்றை அறிந்துகொள்ள முடிகிறது. அன்று அவர்கள் எழுதிய பயணக் குறிப்புக்கள் இன்று அரும்பெரும் வரலாற்றுப் பொக்கி சமாகப் போற்றப்படுகின்றது.

உதாரணமாக; இத்தாலி நாட்டின் வெனிஸ் நகரத்தைச் சேர்ந்த மார்க்கோ போலோ (1254 - 1324), ஐரோப்பாவில் இருந்து ஆசிய நாடுகளுக்கு மேற்கொண்ட பயணக் குறிப்புக்கள் அக்காலகட்டத்தின் வரலாற்றை அறியக்கூடிய பெரும் வரலாற்றுப் பொக்கிசமாக கணிக்கப்படுகின்றது.

அருமையான வரலாற்றுத் தகவல்கள்

இவருடைய கடல் கடந்த பயணங்களின்போது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைத் தரிசிப்பதில் இவர் அதிக கவனம் எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இவருடைய வரலாற்றுக் குறிப்புகளை நோக்கும்போது, இவர் வரலாற்றுத் தேடல் நிரம்பிய ஒரு வரலாற்று மாணவனாகவே எமக்குத் தோற்றம் அளிக்கிறார்.

கலையார்வனின் பயண அனுபவங்கள் எமக்கு வரலாற்றுப் பாடங் களாகவும் அமைகின்றன எனலாம். தான் தரிசித்த இடங்கள் பற்றிய பல அரிய வரலாற்றுத் தகவல்களை இவர் ஆங்காங்கே தந்துள்ளார். எனவே, இந்நூலை வெறுமனே பயணக் கட்டுரைகளின் தொகுப்பாக - பயண நூலாக மட்டும் பார்க் காமல் இதை ஒரு வரலாற்று நூலாகவும் பார்க்கலாம்.

சில வரலாற்றுப் புகழ்மிக்கக் கட்டடங்கள், ஆலயங்கள், கோவில்களைப் பற்றிய அரிய தகவல்களை இந்நூலில் தந்துள்ளார். கட்டடக் கலையின் சிறப்பை, சிற்ப வேலைப்பாடுகளின் செம்மையை மிகவும் தெளிவாக, துல்லியமாக விளக்கியுள்ளார். சிறப்பாக பிரான்ஸ், சுவிற்சர்லாந்து, இந்தியா போன்ற நாடுகளில் உள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைப் பற்றி விரிவாகப் பேசியுள்ளார்.

வெளிநாட்டு வாழ்க்கை முறையை சிறப்பாகப் படம் பிடித்துள்ளார்

தாய் நாட்டிலிருந்து புலம் பெயர்ந்து மேலை நாடுகளில் வாழ்கின்ற வர்களுடைய வாழ்க்கை அனுபவங்களை, கஷ்ரங்களை, சவால்களை தனது அனுபவங்களோடு சேர்த்து இவர் சிறப்பாகப் பதிவு செய்துள்ளார். வெளிநாட்டில் வாழ்கின்றவர்களுடைய - ஏன் தன்னுடைய தொழில் அனுபவங்களை ஒழிவு மறைவின்றி வெளிப்படையாகப் பதிவு செய்துள்ளமை இவரது நேர்மைக்கு ஓர் எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது. வெளிநாட்டு வாழ்க்கையின் உண்மையான ஜதார்த்தத்தை உணராமல் 'வெளிநாட்டு மோகம்' கொண்டு அலையும் பலர் கலையார்வனின் அனுபவக் குறிப்புகளை வாசிக்கும்போது உண்மை நிலையை அறிந்துகொள்வர்.

இன்னும் புலம் பெயர்ந்து வாழும் தமிழர்களால் நடத்தப்படும் விளையாட்டு நிகழ்வுகள், கலை நிகழ்வுகள், தமிழ் வானொலி, தமிழ் பாடசாலை மற்றும் பல்வேறு அமைப்புகள் போன்றவற்றையும் அவற்றில் தனது அனுபவங் களையும் இந்நூலில் பதிவு செய்துள்ளார்.

யுத்த அனுபவங்களின் பதிவு

நூலாசிரியர் வெளிநாட்டில் வசித்த நாட்களில் தனது தாயகமான இலங்கைக்குப் பல பயணங்களை மேற்கொண்டுள்ளார். யுத்த காலங்களில் அவர்

மேற்கொண்ட பயண அனுபவங்கள் அக்காலகட்டத்து யதார்த்தத்தை வெளிச்சம் போட்டுக் காட்டுவதாக அமைந்திருக்கின்றது.

யுத்தத்திற்குப் பின்னரான இக்காலப் பகுதியில் 'போர் இலக்கியம்' பற்றி அதிகம் பேசப்படுகின்றது. இந்நிலையில் இவருடைய போர்க்கால அனுபவப் பதிவுகள் ஈழத்துப் போர் இலக்கியத்திற்கு மெருகூட்டுபவையாக அமைந்துள்ளன.

நிறைவாக

நம்மில் எல்லோருக்கும் கடல் கடந்த நாடுகளுக்குச் செல்வதற்குரிய வாய்ப்பு வசதிகள் இல்லாமல் இருக்கலாம். ஆனால், கலையார்வன் போன்றோருடைய எழுத்துக்களை வாசிப்பதன் மூலம் அவர் பயணித்த நாடுகளுக்கு, அவர் பார்வையிட்ட இடங்களுக்குச் சென்றுவந்த அனுபவத்தை ஓரளவுக்கேனும் பெற்றுக்கொள்ளலாம்.

இந்நூலின் இறுதிப் பகுதியாகிய 'நிறைவாக' என்ற பகுதி புலம்பெயர் நாட்டு வாழ்க்கை பற்றிய ஒரு விமர்சனப் பார்வையாகவும், இன்னுமொரு வகையில் எச்சரிக்கையாகவும், அறிவுரையாகவும் அமைந்துள்ளது.

கலையார்வனின் 'கடல் கடந்த நாட்கள்' என்னும் இந்நூலாக்க முயற்சி தமிழின் பயண இலக்கியத்திற்கு அணி சேர்க்கும் அருமையான, காத்திரமான ஒரு முயற்சியாகும்.

"சென்றிடுவீர் எட்டுத் திக்கும் - கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்"

என்ற பாரதியின் எண்ணத்தைச் செயற்படுத்திய கர்ம வீரராக கலையார்வன் எம்முன் காட்சி தருகின்றார். சிறந்த எழுத்தாளராக, சீரிய சிந்தனையாளராக விளங்கும் கலையார்வனின் இலக்கியப் பயணம் தொடர வாழ்த்துகின்றேன். இறை ஆசீர் வேண்டுகின்றேன்.

ஒரு மலரின் அங்கீகாரம் அதன் வாசனையில்,
ஒரு மரத்தின் அங்கீகாரம் அதன் கனியில்,
ஒரு மனிதனின் அங்கீகாரம் அவன் குணத்தில்,
ஒரு நூலின் அங்கீகாரம் உங்கள் ஆதரவில்!

அருள்திரு தமிழ் நேசன் அடிகளார்
இயக்குனர்,
கலையருவி, மன்னார் மாவட்டம்.
ஆசிரியர் 'மன்னா' பத்திரிகை.

பல விடயங்களையும் ஒரு சாம்பாராக்கித் தந்திருக்கிறது



பயணம் என்பது பலரும் விரும்பும் ஒரு அனுபவம். வருடத்தில் ஒரு முறையாவது முன்னர் ஒருபோதும் போயிருக்காத புதிய இடத்திற்குச் செல்வது உள நலத்திற்கும் நல்லது என்று உளவியல் அறிஞர்கள் குறிப்பிடுவர். பயணத்தின் போது ஒருவர் பெறும் புதிய அனுபவங்களை மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்புவதும் மனித இயல்பு. கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் கிரேக்க நாட்டுப் பயணம் பற்றி Pausanias எழுதிய நூல் இத்துறைக்கான மிக ஆதி உதாரணமாகக் கூறப்படுகிறது.

ஒரு பயண அனுபவம், ஒரு குறிப்பிட்ட மொழியில் இலக்கியச் சுவையோடு எழுதப்படும்போது அது 'பயண இலக்கியம்' என்று பின்னர் பேசப்படலாயிற்று. மத்திய கால அராபிய இலக்கியங்களில் பயண இலக்கியம் மிகப் பொதுவான ஒன்றாக இருப்பது அராபியர்கள் செய்த வியாபாரப் பயணங் களின் பண்பைக் காட்டுவது.

பயணங்கள் பல சந்தர்ப்பங்களில் மிக முக்கியமான கண்டுபிடிப்புகளுக்கு உதவியுள்ளன. புதிய நாடுகளைக் கண்டு பிடிக்க உதவியவை பயணங்களே. சார்ள்ஸ் டாவின் தனது கூர்ப்புக் கொள்கையை வெளியிட முன்னர் எச். எம். எஸ். பீகிள்ஸ் என்ற கப்பலில் ஐந்து வருட உலகச் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டிருந்தார். அதன்போது அவர் அவதானித்த பல்வேறு வகையான உயிரினங்கள் பற்றிய தேடலும் ஆழ்ந்த சிந்தனையுமே அவரது மிக முக்கியமான கொள்கை முன் வைப்புக்கு வழி சமைத்தது. இயற்கை பற்றிய விபரிப்புகளும் தமது கலாசாரத்துக்கும் நாட்டுக்கும் வெளியே ஏனைய மனிதர்கள் பற்றிய சுவாரசியமான கலைத்துவப் படைப்பு களுமாக உலகில் ஏராளமான சிறந்த பயண இலக்கியங்கள் தோன்றியுள்ளன.

பயண நூல்கள் வெறும் ஆவணமாக இருக்கலாம். வாசிப்பவரின் உணர்வுகளைத் தட்டி எழுப்பவும் சமூகப்

பெறுமானம் உள்ளவையாகவும் இருக்கலாம். பத்திரிகை எழுத்துப்போல வெறும் புதினம் தழுவியதாகவும் இருக்கலாம். இலக்கியச் சுவையோடு வாசிப்போரைச் சுண்டி இழுக்கும் முறையிலும் அமையலாம். நகைச்சுவை இழையோட மேலெழுந்த வாரியாகவும் எழுதப்படலாம். உலகம் மீதான ஆழ்ந்த பார்வையோடு விளையாட்டுத்தனம் சிறிதுமின்றி மிகக் கரிசனையோடும் எழுதப்படலாம். எல்லாம் எழுத்தாளனின் ஆளுமையைப் பொறுத்து வேறுபடும்.

Paulo coflho எழுதிய The alchemist உலகம் கண்ட சிறந்த பயண இலக்கியங்களில் ஒன்று. அது ஒரு நாவல் போலக் கனவு இலக்கியமாகப் படைக்கப் பட்டது. Jack kerouac எழுதிய On the road என்ற பரிசு பெற்ற பயண இலக்கியம் தூக்கினால் வைக்கமுடியாத ஈர்ப்புக் கொண்டது.

தமிழ் மொழிக்கும் பயண இலக்கியம் புதிதல்ல. 1940இல் ஏ.கே. செட்டியார் எழுதிய 'உலகம் சுற்றும் தமிழன்' பிரபலமானது. எமது சிறு வயதில் பலரையும் ஈர்த்த பயண இலக்கிய எழுத்தாளராக 'மணியன்' இருந்தார். இப்போது எமது நாட்டிலும் பல பயண இலக்கியங்கள் வந்துவிட்டன. இந்தப் பின்னணியில் இப்போது கலையார்வனின் 'கடல் கடந்த நாட்கள்' வருகிறது. ஏறத்தாழ நானூறு பக்கம் கொண்ட இந்த நீண்ட நூல், யாழ்ப்பாணத்தில் இருந்து யாழ்ப்பாணத்தைச் சுற்றியுள்ள தீவுகளுக்குப் போன அனுபவம், இங்கிருந்து இந்தியாவுக்குச் சென்ற அனுபவம், ஐரோப்பிய நாடு ஒன்றுக்கு அகதியாகச் சென்று பின்னர் அங்கிருந்து பல நாடுகளுக்குப் பயணித்த அனுபவம், கடும் யுத்தம் எமது நாட்டில் நிலவிய காலத்தில் அங்கிருந்து எமது நாட்டுக்கு வந்துசென்ற அனுபவம் என்று பல விடயங்களையும் ஒரு சாம்பாராக்கித் தந்திருக்கிறது. உப்பு, புளிப்பு, உறைப்பு எல்லாம் அளவாக இருந்தால் சாம்பார் மிகச் சத்துள்ள சுவையான உணவு.

இலங்கையில் இருப்பவர்கள் பொதுவாக வெளிநாடுகள் தொடர்பான விபரிப்புகளையே விரும்பி வாசிப்பர் என்று கலையார்வன் கருதுகிறார். ஆயினும், உள்ளூர் அனுபவங்களே எமது நினைவில் மீட்டலாக அமைந்து, எம்மை அதிகம் ஈர்த்து, வாசிக்கத் தூண்டுகின்றன. சிறுத்தீவு, கற்கடதீவு போன்ற அதிகம் அறியப்படாத தீவுகள் பற்றிய தகவல்கள் பயன்மிக்கவை. 'பெருக்கமரம்' பற்றிய குறிப்பை நான் நிதானித்து வாசித்தேன். இப்போது அந்த இடம் சுற்றுலாப் பயணிகளின் கவனிப்பைக் கவரும்படி விருத்தி செய்யப்படும் அல்லது பாதுகாக்கப்படும் செய்தி அண்மையில் பத்திரிகையில் வெளிவந்தது. யுத்த காலத்தின் பயண நெருக்கடிகள் இங்கிருந்த பலரும் அனுபவித்த ஒன்றுதான். "நுளம்பு கடித்ததால் தலையாட்டியின் தலை அசைந்தாலும் பயணிக்கு ஆபத்து காத்திருக்கும்" என்று எழுத்தாளர் சிறிய நகைச்சுவையுடன் சொன்னாலும் அந்தக் கணப்பொழுதின் 'பயங்கர அனுபவம்' என்ற இதயத் தந்தியை மீட்பதில் ஒரு வகையான சுகம் இருக்கத்தான் செய்கிறது. 'படையினருக்குக் காசு கொடுப்பதாகச் சொல்லி கை நீட்டும் தரகர்கள்' போன்ற பாத்திரங்கள் வரலாற்றில் மறக்க

முடியாதவை. பதிவில் இருக்க வேண்டியவை.

1979இல் மடு மாதா ஆலயத்திற்கு அண்மையில் நீராடச் சென்ற வேளை ஆபத்தில் சிக்கிக்கொண்ட பெண்களை நீரில் இருந்து மீட்ட அனுபவம் பற்றி இவர் எழுதும்போது இவரது ஆளுமை பற்றிய நேர்க்கணியப் பெறுமதி ஒரு புள்ளியாய் எமது மனதில் உயர்வு பெறுகிறது.

தனது ஆளுமையின் வேறு பல கூறுகளையும் - அவை மறையாக இருந்தாலும் - ஒருவித வெளிப்படையான தன்மையுடன் மனம் திறந்து விபரிப்பது பற்றி பாராட்டலாம். நூறு அமெரிக்கன் டொலர்களை மறைத்து வைத்துக் கொண்டு பயணம் செய்தமை பற்றி ஒரு இடத்தில் குறிப்பிடுகிறார். தான் மதுபானம் அருந்தியதைப் பற்றிப் பல இடங்களில் கூறிச் செல்கிறார். "நிரையாகப் பலரும் அவ்வாறு கழித்ததால் தயக்கமின்றிக் காலைக் கடனை முடித்தேன்" என்று பலர் செய்வதைப் பார்த்தால் கூச்சமின்றி அந்த சூழலுக்கு இசைவாக்கப் பெற்று, எதையும் செய்யும் பொதுவான மனித சுவாபம் பற்றி இன்னுமோர் இடத்தில் குறிப்பிடுகிறார். 'சிற்றி அடித்தல்' பற்றி மிக விரிவாகக் குறிப்பிட்டுள்ளார். கடவுச் சீட்டினுள் காசு வைத்துக் கொடுத்த நிகழ்வு பற்றியும் ஒரு நாட்டிலிருந்து சட்ட விரோதமாக மறு நாட்டினில் நுழைதல் பற்றியும் விபரித்துள்ளார். புதியவர்கள் அவற்றைத் தொடரக்கூடாது என்பதில் தெளிவாகவும் உள்ளார்.

கிறிஸ்தவ தேவாலயங்கள் மற்றும் இந்து கோயில்களுக்கான யாத்திரை, நூலின் பெருமளவு பக்கங்களைப் பிடித்திருக்கிறது. இரண்டு ஆலய வணக்கஸ் தலங்களுக்கும் சம முக்கியத்துவம் கொடுத்து அவர் விபரித்துள்ளமை அவரது ஆளுமையின் மற்றொரு சிறந்த விடயம்.

எமது நாட்டில் இருந்து புலம்பெயர்ந்து வெளிநாட்டுக்குச் செல்ல விரும்பும் பல்லாயிரக் கணக்கான இளைஞர்கள் கட்டாயம் தெரிந்துகொள்ள வேண்டிய பல செய்திகள் அங்கொன்றும் இங்கொன்றுமாக இருந்தாலும் அவையே நூல் கொண்டுவரும் முக்கிய செய்தி என்று நான் கருதுகிறேன். பிரான்ஸ் நாட்டுக்குள் அகதியாக நுழையும் ஒருவர் அந்த நாட்டில் 'நிலைபெற' என்ன எல்லாம் செய்யவேண்டி இருக்கிறது என்ற விபரிப்பே இந்நூலில் என்னைக் கவர்ந்த விடயம். எவ்வாறு ஒரு ரிக்கற்றில் இருவர் பயணம் செய்கிறார்கள் - (அப்போது ஏற்படும் பயமும் பதற்றமும் மட்டுமல்ல, சுயகணிப்புக் குறைவுந்தான்) - ஒரு அறையில் எத்தனை பேர் படுக்கிறார்கள், சாப்பிடுவது ஒரு இடம், படுப்பது ஒரு இடம், குளிப்பது ஒரு இடம் என்று எத்தனை பேர் வாழ்கிறார்கள், எந்த வேலையையும் செய்ய ஆயத்தமான கையறு நிலையில் எத்தனைபேர் இருக்கிறார்கள் என்பவை மனதை மிகுதியாக நெருடும் இடங்கள்.

ஆங்காங்கே 'பிறவுணி'களுக்குக் கிடைக்கும் அவமரியாதையும் அவமானமும் மற்றொரு சுட்டத்தக்க செய்தி "அங்கு அமர்ந்திருந்த ஐரோப்பியர் களின் அழைப்பை ஏற்று துரிதமாகச் செயற்பட்ட சிப்பந்தி எம்மைக் கண்டு

கொள்ளவில்லை" என்பது பிரான்ஸில் நெவேர் என்ற இடத்தில் உள்ள 'சாப்பாட்டுக் கடை'யில் எழுத்தாளர் பெற்ற அனுபவம். 'மொன்றெக்ஸ்' என்ற இடத்தில் ஒரு வயோதிப மாது எந்தக் காரணமும் இல்லாமல் இவர்களைப் பார்த்து துப்பிச் சென்ற அனுபவம் கொடியது.

உல்லாசப் பயணத்துக்குரிய உலகின் முக்கிய இடங்கள், அவற்றின் சரித்திர முக்கியத்துவம், விபரிப்பு போன்றவற்றை இணையம் ஒரு நொடியில் தந்துவிடும். ஆனால், நாம் பயணிக்கும்போது ஏற்படும் சில சொந்த அனுபவங்கள் எங்கு தேடியும் பெற முடியாதவை. அந்த வகையில் தலைமன்னாரில் எழுத்தாள ருக்கு ஏற்பட்ட இலையான் அனுபவம் சிறப்பானது. "கறி காய்ச்சுவதற்குத் தேங்காய்த் துருவலில் பால் பிழிந்தால், இன்னொருவர் கூடவே இருந்து விசிறியால் விசுக்கியவாறே இருக்க வேண்டும்". அந்த அளவுக்கு அதிகமாகக் காணப்படும் இலையான்களைப் பற்றி இவர் பேசும்போது "ஈயும் இலையானும் இன்னும் குறையவில்லை" என்ற சங்கக் கடை பற்றிய மஹாகவியின் கவிதை வரி எனது மனதில் வந்து போயிற்று.

அதேபோலப் பழைய கட்டடத்தின் பண்பு காப்பாற்றப்பட வேண்டும் என்பதற்காகப் பாசல் நகரில் 'தூக்கப்பட்ட' கட்டடம் பற்றிய செய்தியும் விபரிப்பும் பயனுள்ளது.

பிரித்தானியாவின் துஷாட்ஸ் அருங்காட்சியகத்தை தரிசித்தபோது இருந்த பயங்கர ஒலி எழுப்பும் இடமும், நான்கு பரிமாணத் திரை அரங்கும் 1995இல் இவர் அங்கு சென்றபோது இருக்கவில்லை என்ற விடயத்தை வெறும் செய்தியாக இவர் கூறிச் சென்றாலும், "ஏன்?" என்ற கேள்வியும் அதற்குரிய விடையும் எம்மை ஆழ்ந்து சிந்திக்க வைக்கும்.

நூலில் விபரிக்கப்படும் இடத்திற்குப் பொருத்தமான பல படங்கள் அமைந்து நூலுக்குச் சிறப்பு சேர்த்துள்ளன. அதிகம் பாவனை இல்லாத தமிழ்ச் சொற்கள் சிலவற்றை ஆசிரியர் பாவித்துள்ளமை நல்ல விடயமாகும் 'தீடை', 'துரவு', 'கோரி' போன்றவற்றை உதாரணமாகக் கொள்ளலாம்.

குறுங்காவியம், கூத்து, நாவல் என்று பல தளங்களிலும் தன் கால்களை அகலப் பதிக்க முனையும் கலையார்வனின் பணிகள் தொடர வாழ்த்துகின்றேன்.

கலாபூஷணம்
திருமதி கோகிலா மகேந்திரன்

கே.கே.எஸ் வீதி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்
17.11.2015

அனுபவித்தேன் வெளிப்படுத்துகின்றேன்



நண்பர்களின் ஆலோசனைக்கு இணங்க, 18 ஆவது ஆக்கமாக வெளிவரும் 'கடல் கடந்த நாட்கள்' என்னும் இந் நூலில், எனது கடல் கடந்த பயணங்களின் அனுபவப் பதிவுகளை எழுத முன்வந்த நான், இளமைக் கால மற்றும் 35 வருடங் களுக்குரிய (1979 - 2014) பயண அனுபவங்களை நினைவி லிருந்து மீட்டெடுப்பதில் எதிர்கொள்ளக்கூடிய சிரமங்களை சிந்திக்கவில்லை. மேலோட்டமான நினைவுகளுடன் திட்டமிடத் தொடங்கிய பின்னர்தான் எத்தகைய சிக்கலுக்குள் சிக்குண் டுள்ளேன் என்பதை உணரமுடிந்தது.

நீண்ட காலங்கள் மாத்திரமல்ல இலங்கையைத் தவிர்த்து எட்டு நாடுகள், அங்குள்ள சில நகர்கள், அவற்றிலுள்ள இடங்கள் சில போன்றவற்றுடன் சில நாடுகளுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பயணங்களில் கிடைத்த அனுபவங்கள், குறித்த காலங்களுக்கு உரிய இலங்கை பற்றிய தகவல்கள் போன்ற வற்றை என்னுள்ளிருந்து மீட்டு வெளிக்கொண்டு வருவது இலகுவான செயலன்று என்பதை எழுத முனைந்த பின்பே விளங்கிக்கொண்டேன்.

ஏதாவதொரு நோக்கை இலக்காகக்கொண்டு அனுபவப் பதிவாக்கம் செய்வதற்கேற்ற திட்டமிடலில் எனது பயணங்கள் அமைந்திருந்தால் தேவையான அனுபவக் குறிப்புகள், காலத்துக்குரிய தகவல்கள், சம்பந்தப்பட்ட நிழற்படங்கள் போன்றவற்றை அவ்வப்போது சேகரித்து வைத்திருந்து பயன் படுத்தியிருக்க முடியும். ஆனால், எனது நிலை அவ்வாறான தன்று. நினைவுக் கடலில் சுழியோடி அங்கே புதையுண்டும், சிதறுண்டும், மறையுண்டும் கிடக்கும் கடந்தகால அனுபவங் களை தோண்டியும் தேடியும் எடுக்க வேண்டிய நிலை.

10.06.2013 இற்கு முன்னரான மூன்று நாட்கள் எனது நினைவகம் முற்றாகச் செயலிழந்த நிலையில் நடமாடியதையும்,

தொடர்ந்து ஐந்து நாட்கள் ஆழ்நிலை மயக்கத்தில் கிடந்ததையும், இதன் தொடராக இரண்டு நாட்கள் இனங்காணப்பட்ட சம்பந்தமில்லாத உரையாடலையும் சுகமடைந்த பின்னர் அறிந்தபோது பயந்தே விட்டேன். எனது நினைவகத்துக்கு பாதிப்பு எற்பட்டிருக்குமா? என்ற அச்சம் என்னுள் குடிகொண்டது. பலரது வேண்டுதலின் பயனாக இறைவன் துணையால் அவ்வாறு நிகழாமலிருந்தது நான் செய்த பாக்கியமே.

கடந்த ஆண்டு (2014) மாசி மாதம் ஐரோப்பிய நாடுகளின் காலநிலை மற்றும் எனது உடல்நிலை சாதகமாக இல்லாத நிலையிலும் இங்கிலாந்து, பிரான்ஸ், சுவிற்சர்லாந்து, நோர்வே ஆகிய நாடுகளுக்கு மேற்கொண்ட குறுகியகால ஓய்வுக்கான பயணம் மற்றும் என் கைவசமிருந்த சில நிழற்படங்கள் எனது முன்னைய பயண அனுபவங்களை ஓரளவேனும் ஒருங்கிணைக்க உதவியுள்ளது. அத்துடன், என் மனப் பதிவிலிருந்து ஒருங்கிணைத்த தகவல்களை உறுதிப்படுத்தி சீர் செய்யவும், மீட்டொழுங்கு செய்யவும், பொருத்தமான படங்களைப் பெறவும் கணினி ஒத்துழைத்துள்ளது. 1998ஆம் ஆண்டு சுவிஸில் 'மின்மினி' மாதாந்த விளம்பர இதழுக்கு லண்டன் நகரம் பற்றி எழுதிய குறிப்புகள் எதிர்பாராத விதமாக இறுதியில் கிடைத்தும் பேருதவி புரிந்துள்ளது. இவற்றைக்கொண்டு என்னால் முடிந்தவரை முயற்சியெடுத்துப் பதிவாக்கியுள்ளேன். இருப்பினும் நான் அனுபவித்த, உள்வாங்கிய, கண்டுகொண்ட எவையேனும் தவறவிடப்படவில்லை என்று உறுதிபடக் கூறிட முடியாது.

பயணம் செய்யும் ஒவ்வொருவருடைய தேவை, இரசனை, ஈர்ப்பு, கண்ணோட்டம் ஒரே மாதிரி இருக்கும் என்று எண்ணவோ, நான் பயணித்த நாடுகள் மற்றும் இடங்களில் பிறர் கண்டவற்றை, உணர்ந்தவற்றை, அனுபவித்தவற்றை நானும் உள்வாங்கியிருப்பேன் என்றும் சொல்லவோ முடியாது. நான் தவற விட்டவற்றை மற்றவர்கள் உள்வாங்கியிருக்கலாம். மற்றவர்கள் தவறவிடப்பட்ட வற்றை நானும் சேகரித்திருக்கலாம். கோணம் வெவ்வேறாகவும் இருக்கலாம். அதனால், இந்நூலை வாசிக்கும் வாசகர்கள் பயண அனுபவங்களைப் பெற்றி ருந்தால், பிறிதொருவரின் பயண அனுபவங்களைப் படித்திருந்தால் அவர்களது எண்ணத்திற்கும் எனது எழுத்தாக்கத்திற்கும் ஒருவேளை வித்தியாசம் காணப் படலாம். இந்நூலில் நான் வெளிக்கொண்டுவந்தவற்றில் குறைபாடுகள், அன்றேல் நினைவிலில்லாமல் வெளிக்கொண்டுவராமலே தவறவிடப்பட்ட ஏதாவது இருக்குமாயின் எனது இடர்மிகு சூழ்நிலையை மனத்திற்கொண்டு பாரபட்சமின்றி நீங்கள் ஏற்றுக்கொள்வீர்களென நம்புகிறேன்.

பிரபல எழுத்தாளர் பலர் தமது பயண அனுபவங்களை நூலாகவும், பத்திரிகை - சஞ்சிகைகளிலும் எழுதிவந்துள்ளனர். அவை பெரும்பாலும் குறுகிய காலத்தில் குறித்த நாட்டிற்கு மேற்கொள்ளப்பட்ட பயணங்களின் அனுபவமாக அமைந்துள்ளது. எனது பயண அனுபவம் நீட்சியானதாக - எட்டு நாடுகளை

உள்ளடக்கி இலங்கையையும் தொட்டதாக இருப்பினும், அவர்கள் வழியில் எனது பாணியில், பயண அனுபவப் பதிவுகளை உங்களுக்கு முன்வைக்கிறேன்.

நான் பயணித்த காலத்துக்குரிய இலங்கையின் களநிலை, பயணித்த நாடுகள் - நகர்களின் புவியல் அமைப்பு, அதன் சிறப்புக்கள், வரலாற்று தகவல்கள் போன்றவை வாசகர்களுக்குப் பயனுள்ளதாக இருக்குமென்பதால் முடிந்தவரை அறிந்திருந்தவற்றை, பலவகையிலும் சேகரித்தவற்றை வெளிக்கொண்டு வந்திருக் கிறேன். அதேபோல் நான் சென்ற இடங்களின் பின்புலத் தகவல்கள், தரிசித்த கோயில்கள், ஆலயங்கள் போன்றவற்றின் அமைவிடம், சிறப்புக்கள், தொன்மைகள் பற்றிய விபரங்களில் அறிய முடிந்தவற்றையும் வெளிக்கொண்டு வந்துள்ளேன். ஆனால், கோயில்கள் மற்றும் ஆலயங்களின் வழிபாட்டு முறை பற்றிய தகவல்களை பதிவுசெய்ய முனையவில்லை. வழிபாடு அல்லது வழிபாட்டு முறை மதத்துக்கு மதம், இடத்துக்கு இடம், சமூகத்துக்கு சமூகம், மனிதருக்கு மனிதர் வேறுபட்டு இருக்கலாம். அதனால், சாதாரண ஒரு பார்வையாளனின் நிலையிலேயே பதிவாக்கம் செய்துள்ளேன்.

கடந்த கால மனப் பதிவுகளை மீட்டெடுத்து பதிவாக்கம் செய்யும் எனது முயற்சியில் அனுகூலங்கள் இருந்தாலும் நான் எதிர்கொண்ட சிரமங்களும், எடுத்துக்கொண்ட காலங்களும் பல. இருப்பினும், பதிவாக்கம் எனக்கு மனநிறைவைத் தந்ததெனக் கூறிவிட முடியாது. சுற்றிச் சுற்றி பல விடயங்கள் ஆங்காங்கு நினைவுகளில் துளிர்விட்டுக் கொண்டிருந்தபோதும் அவற்றைத் தொடர்பு படுத்தி உருவம் கொடுப்பது சிரமமாகவே இருந்தது. அதிகரித்துச்சென்ற நூல் பக்கங்களும் ஒரு காரணம்.

பயணித்த இடங்கள், கண்டுணர்ந்தவை பற்றி பதிவுகளை மட்டும் இந் நூலில் உள்ளடக்கவில்லை. இலங்கையில் மறைக்கப்படுகின்ற, மெல்ல மெல்ல மறக்கப்படுகின்ற தமிழ் மக்களின் பக்கங்களை, பலரும் அனுபவித்த இன்னல் களை, அவர்கள் எதிர்நோக்கிய துன்பியல் வரலாற்றுத் தடங்களில் சிலவற்றை, பயணித்த காலத்துக்குப் பொருந்தும் வகையில் நினைவூட்டலாக வெளிக்கொண்டு வந்துள்ளேன். மேலும், எனது கடமையாக எண்ணி இவற்றுடன் இணைந்ததாக கடல் கடந்த நாட்கள் - 04 பகுதியிலும் (பக்கம் 180), 'நிறைவாக' என்னும் பகுதியிலும் (பக்கம் 408) சில குறிப்புகளை முன்வைத்திருக்கின்றேன். இவை வாசகர்களுக்கு பயனுள்ளவையாக அமையும் என்பது எனது எதிர்பார்ப்பு.

ஒரு நாடு, ஒரு நகர் அல்லது ஒரு இடத்தில் பெற்ற அனுபவங்களை எழுதி முடித்து, வேறு இடங்களில் பெற்றவற்றை எழுதிக் கொண்டிருக்கும் வேளையில் முன்னர் எழுதி முடித்த இடங்களில் விடப்பட்ட விடயம் நினைவிற்கு வரும். உடனே அந்தப் பகுதிக்குச் சென்று சேர்க்க வேண்டியவற்றை சேர்த்த பின்னரே தொடர வேண்டியிருந்தது. இது ஒரிரு தடவையல்ல பல தடவைகள் நிகழ்ந்துள்ளன. நினை விலுள்ளதை தாள்களில் எழுதிக் கணினியில் பதிவு செய்யாது நேரடியாகவே கணினி

யில் பதிவு செய்வதனால் இந்நிலை ஏற்பட்டிருக்கலாம். ஒருவாறாக இந்நூலை ஒப்பேற்றி முடித்ததும் குழந்தையைப் பிரசவித்த ஒரு தாயின் மகிழ்ச்சி எனக்கு.

அடைந்த மகிழ்வில் இந்நூல் வெளிவரத் துணையாய்க் கரம் கொடுத்த அத்தனைபேரும் நினைவுத் திரையில் பவனிவரக் காணுகின்றேன். சிறப்பாக, எழுத்துக்களுடன் ஒட்டிக்கொண்ட பிழைகளைத் திருத்தி நிழலாக நின்று உதவி செய்துள்ளனர். தமது வேலைப் பளுவின் மத்தியிலும் நூலின் பிரதியை முற்றாக வாசித்துச் சுவைத்த இருவேறு மதத்தைச் சார்ந்தவர்கள் பொருத்தமான அணி செய் குறிப்பினை வழங்கியுள்ளனர். வாசகனாய் ஒருவர் தனது உள்ளக் கிடக்கையை வெளிப்படுத்தியுள்ளார். எனது எண்ணம்போல சிறப்பாக அச்சுப்பிரதி யாக்கம் செய்துள்ளனர். எல்லோர்க்கும் நன்றி என்ற சொல்லால் அந்நியராய் ஆக்கிவிடாமல் கரம் பற்றியணைத்து குவிந்த அன்பைப் பகிர்ந்து கொள்கிறேன்.

அன்புடன்

கலையார்வன்

(கலாபூஷணம் கு.இராயப்பு)

இல. 165, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.
077 724 9536
kalayarvan@yahoo.com

பதிவொழுங்கு

நுழைமுகம் 01

வரவேற்பு

கடல் கடந்த நாட்கள் – 01 03

இளவயது பயணங்கள்

❖ யாழ்ப்பாண அயல் தீவுகள்

கடல் கடந்த நாட்கள் – 02 34

திருத்தல தரிசிப்புப் பயணம்

❖ இந்தியா

கடல் கடந்த நாட்கள் – 03 76

புகலிடம் தேடிய பயணம்

❖ பிரான்ஸ்

கடல் கடந்த நாட்கள் – 04 164

புகலிடக் கோரிக்கைப் பயணம்

❖ சுவிற்சர்லாந்து

கடல் கடந்த நாட்கள் – 05 220

சுற்றுலா, வர்த்தக, ஒய்வுக்கான பயணங்கள்

❖ சிங்கப்பூர் ❖ மலேசியா ❖ நோர்வே

❖ இத்தாலி ❖ ஐக்கிய இராச்சியம்

கடல் கடந்த நாட்கள் – 06 294

உறவுகளைத் சந்திக்கும் பயணங்கள்

❖ இலங்கை

கடல் கடந்த நாட்கள் – 07 334

சுற்றுலா, நூற்றாண்டு விழா பயணங்கள்

❖ இந்தியா

நிறைவாக 408

சில குறிப்புகள்



இக் கடல் கடந்த நாட்கள் குறிக்கும் இடங்களுக்கு
இற்றைவரை பயணியாது இருப்போருக்கும்
இனிமேல் பயணிக்க இருப்போருக்கும்
இப்போது கல்வி கற்போருக்கும்
இதுகாறும் கற்றோருக்கும்
இனிய வாசகர்களுக்கும்
இளகிய இரும்பாகப் பயன்படலாம் என்னும் நோக்கில்
இருகரம் கூப்பி வரவேற்று இன்முகத்துடன் அழைத்துச் செல்கிறேன்.



கடல் கடந்த நாட்கள்

(பயண அனுபவப் பதிவுகள்)

நுழைமுகம்

ஏரஞேற்பு

தமிழ் இலக்கியங்கள் 'கடற்கோள்' என்று குறிப்பிடும் இயற்கைப் பேரிடர் இந்தியா குமரிக்கண்டத்தை மூன்று தடவைகள் தாக்கி பேரழிவுகளை ஏற்படுத்தியுள்ளதாகத் தகவல்கள் கூறுகின்றன. ஏறக்குறைய 3,000 ஆண்டுகளுக்கு முன்பாக மூன்றாவது தடவையாக தாக்கிய இயற்கைப் பேரிடர் குமரிக்கண்டத்தை முற்றாக அழித்து, அமிழச் செய்ததாகப் பதிவாகியுள்ள கடற்கோளினால் இலங்கையும் துண்டாடப்பட்டதாகக் கூறப்படுகின்றது. இது எந்தளவு உண்மையெனத் தெரியாதிருப்பினும் கலாநிதி கந்தையா குணராசாவின் 'இலங்கை சுருக்க வரலாறு' நூலில்; "இராமேஸ்வரமும் தலைமன்னாரும் புவிச்சரிதவியற் காலத்தில் நிலப்பாலம் ஒன்றினால் இணைக்கப்பட்டிருந்தன. அதனால் தென்னிந்தியாவிலிருந்து மக்கள் கால்நடையாக இந்த நிலப்பாலத்தினூடாக இலங்கையின் மேற்குக் கரைப் பிரதேசத்தில் குடியேற வாய்ப்பிருந்தது" எனக் குறிப்பிட்டுள்ளமை உறுதிசெய்கின்றது.

இலங்கை, எந்தவொரு நாட்டுடனும் தரைத் தொடர்பின்றி தனித் தீவாக மாறிய காரணத்தால் இங்குள்ள தீவுகள் மற்றும் ஏனைய நாடுகளுக்கான போக்குவரத்துக்கள் யாவும் கடல் கடந்த பயணங்களாக மாறி படகு, நீரூர்தி (கப்பல்), வானூர்தி போன்றவற்றை எதிர்பார்த்திருக்க வேண்டிய நிலையேற்பட்டது. இதனாலேயே எனது பயணப் பதிவுகளுக்கு 'கடல் கடந்த நாட்கள்' எனப் பெயரிட்டுள்ளேன்.

எனது இளவயது முதல் 2014ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் பல்வேறு நோக்கங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட 'கடல் கடந்த நாட்கள்' பின்வருமாறு:

* யாழ்ப்பாண அயல் தீவுகளுக்கான இளவயது பயணங்கள்.
* இந்தியாவுக்கான திருத்தல தரிசிப்புப் பயணம்.
* பிரான்ஸுற்கான புகலிடம் தேடல் பயணம்.
* சுவிற்சர்லாந்துக்கான புகலிடக் கோரிக்கைப் பயணம்.
* சிங்கப்பூர், மலேசியா, பிரான்ஸ், இங்கிலாந்து, நோர்வே, இத்தாலி போன்ற நாடுகளுக்கான சுற்றுலாப் பயணங்கள்.
* சிங்கப்பூருக்கான சுற்றுலா மற்றும் வர்த்தகப் பயணங்கள்.
* இந்தியாவுக்கான சுற்றுலாப் பயணங்கள்.
* இந்தியாவுக்கான நூற்றாண்டு விழாப் பயணம்.
* இங்கிலாந்து, பிரான்ஸ், சுவிற்சர்லாந்து, நோர்வே ஆகிய நாடுகளுக்கான ஓய்வுப் பயணங்கள்.
* சுவிற்சர்லாந்தில் நிரந்தர வதிவிட விசா பெற்று வசித்து வந்ததால் அங்கிருந்து இலங்கைக்கான உறவுகளைச் சந்திக்கும் பயணங்கள்.

இவ்வாறு கட்டங்களாக வகுக்கக்கூடிய 'கடல் கடந்த நாட்கள்' குறிக்கும் பயணங்களில் இலங்கையை விட எட்டு நாடுகள் உள்ளடக்கப் படுகின்றன. நாடுகள் அல்லது இடங்களுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் பயணம் மேற்கொள்ள வேண்டிய சந்தர்ப்பமும் கிடைத்தது. அவ்வாறு அமைந்த பயணங்கள் குறிக்கும் நாடுகள், இடங்களை மேற்குறித்தவாறான பயண ஒழுங்குகளில் பதிவு செய்யுமிடத்து திரும்பத் திரும்பச் சிலவற்றைப் பதிவாக்கம் செய்ய நேரிடுமென்பதால் நோக்கங்களின் அடிப்படையில் ஏழு பிரிவுகளாகப் பிரித்து, அவற்றுள் அடங்கும் வகையில் ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் பயணம் மேற்கொண்ட நாடுகள், இடங்களில் அனுபவித்த, கண்டுணர்ந்தவற்றை அந்தந்த நாடுகளின், இடங்களின் தலைப்பின் கீழ் அனுபவத் தொகுப்பாக பதிவு செய்கின்றேன். இது வாசகர்களுக்கு குழப்பத்தை ஏற்படுத்தாது என்பது என் எண்ணம்.

நான் பயணித்த இடங்களில் பெற்ற பயண அனுபவங்களை எழுத்தாக்கும் எண்ணம் எனக்கு எள்ளவும் இருந்ததில்லை. அவ்வாறு இருந்ததிருந்தால் இளவயதுப் பயணங்களைத் தவிர்த்து ஏனைய பயணங்களில் பெற்ற அனுபவங்களை குறிப்புகளாகச் சேகரித்து வைத்திருப்பேன். எனது பார்வைக்கும், கிரகிப்பிற்கும், இலக்கிற்கும், அறிவிற்கும் ஏற்புடைய பல விடயங்களை பதிவு செய்திருப்பேன். அவையெல்லாம் இப்போதைய எனது தேவைக்குப் புதையலாக பயனளித்திருக்கும். அவ்வாறில்லாமல், இந்நூல் குறிக்கும் பயண அனுபவங்கள் எவற்றையும் பதிவுசெய்து வைக்காது தவறிழைத்துவிட்டேனென்ற மனக்குறையை தெரியப்படுத்தி வரவேற்றுத் தொடர்கின்றேன். ■

கடல் கடந்த நாட்கள் – 01

இளவயது பயணங்கள்

துயரும் மகிழ்வும்

இலங்கை வரலாற்றில் காலத்துக்குக் காலம் ஆட்சியைக் கைப்பற்றிய போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், பிரித்தானியரின் ஆளுகைக்கு முன்னர். தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் தனித்தனி பிரதான இராசதானிகள் இருந்தன. அங்கெலாம் சிறப்பான அரசாட்சி நிலவியதாக வரலாறு சான்று பகர்கின்றது.

பிரித்தானியரின் ஆளுகையின் கீழ் முழு இலங்கையும் கொண்டு வரப்பட்ட பின்னர், தமது நிர்வாக வசதிக்காக அவற்றை ஒன்றிணைத்து ஒற்றை ஆட்சியின் கீழ் கொண்டு வந்தனர். அவ்வாறு கொண்டுவந்த அவர்கள் 1948இல் சுதந்திரம் வழங்கி நாட்டைவிட்டு வெளியேறியபோது, இரண்டு இனங்களுக்குமான இராசதானிகளை முன்னர் இருந்தமைபோல் பிரித்துக் கொடுக்கத் தவறிவிட்டனர். இந்த தவறின் அறுவடை தரணியில் இலங்கையைப் பேசும் பொருளாக்கியது என்பது வெள்ளிடைமலை.

ஒவ்வொரு தேசிய இனத்துக்கும் ஒரு மொழி, ஒரு பொது பொருளாதாரம், ஒரு வரலாற்று ரீதியாக நிலைபெற்ற கலாசாரம், ஒரு தொடர்ச்சியான வாழ் நிலப்பகுதி என்பன அவ்வினத்தின் தனித்துவமான அடையாளங்கள். இவற்றில் எந்தவொரு அம்சத்தைச் சீர்குலைக்க முயன்றாலும் அது ஒரு இன அழிப்பு முயற்சி என்று மாக்சிஸம் கூறுகின்ற ஜதார்த்த நிலை பிரித்தானியரின் செயலால் இங்கு கருக்கொள்ளத் தொடங்கியது.

ஒன்றுபட்ட இலங்கையில் ஒன்றிணைந்து வாழ்வதாக ஏற்றுக் கொள்ளப்பட்ட நிலையில், 1956 ஆம் ஆண்டு S.W.R.D. பண்டாரநாயக்கா பிரதம மந்திரியானதும் சிங்கள மொழியை நாட்டின் ஒரே ஆட்சிமொழியாக அறிவிக்கும் 'தனிச் சிங்களச் சட்டத்தை' பாராளுமன்றத்தில் கொண்டுவந்து நிறைவேற்றினார்.

இந்தச் சட்டத்தால் தமது மொழி, கலாசாரம், பொருளாதாரம் பாதிக்கப்படுமென அஞ்சிய தமிழர், இச்சட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்க, இலங்கை தமிழரசுக் கட்சி அரசியல்வாதிகள் அறப் போராட்டங்களை ஆரம்பித்தனர். அவற்றை முறியடிக்க சிங்கள அரசியல்வாதிகள் முனைந்ததால் இனங்களுக்கிடையே முறுகல் நிலை அதிகரித்தது. அதனால், கிழக்கு மாகாண கிராமமான கல்லோயாவில் 150 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

இதனையடுத்து பிரதமர் பண்டாரநாயக்கா தமிழரசுக் கட்சியைப் பேச்சுவார்த்தைக்கு அழைத்ததால் 1957இல் பண்டா செல்வா ஒப்பந்தம் கைச்சாத்தானது. இதன்மூலம் தமிழர் பெரும்பான்மையாக வாழும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ்மொழி நிர்வாக மொழியாக இருக்க உடன்பாடு எட்டப்பட்டது.

சிங்கள தேசியவாதிகள், பௌத்த துறவிகள் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். மேலாக எதிர்க்கட்சியாக இருந்த ஐக்கிய தேசியக் கட்சியினர் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா தலைமையில் எதிர்ப்பைத் தெரிவிக்க கண்டிக்கு நடைப்பயணம் மேற்கொண்டனர். இவ்வெதிர்ப்பை அடுத்து பண்டார நாயக்கா அரசு ஒப்பந்தத்தைக் கிழித்தெறிந்தது.

சார்த்வீகப் போராட்டத்தில் ஈடுபட்ட தமிழ்த் தலைவர்கள், 1958 ஆம் ஆண்டு காலிமுகத்திடலில் மேற்கொண்ட சத்தியாக்கிரகம் அரசின் ஆசீர்வாதத்துடன் நிகழ்த்தப்பட்ட காடையர்களின் தாக்குதலால் குழப்பப்பட்டது.

இதற்கு சிகரம் வைத்தாற்போல் இனக்கலவரம் என்ற பெயரில், சிறுபான்மையாக வாழும் தமிழர்களுக்கு எதிரான முதலாவது நாடு தழுவிய வன்முறை 1958 மே 22 முதல் 27 வரை மிக மோசமாக இடம் பெற்றது. தமிழர்கள் பரவலாக வெட்டிக் கொலைசெய்யப்பட்டு, காயப்படுத்தப்பட்டு, எரியூட்டப்பட்டனர். 1958 ஜூன் முதலாம் திகதி அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்ட பின்னரும் ஆங்காங்கு வன்முறைகள் நிகழ்ந்தன. இதனால் 300 பேர் வரை கொல்லப்பட்டு 1,000 பேருக்கு மேலானோர் காயமடைந்தனர்.

இவ்வன்செயலால் பாதிக்கப்பட்டவர்கள் பெரும்பாலான தமிழர்களேயாயினும் தமிழர்களுக்குப் பாதுகாப்புக் கொடுத்த காரணத்தினால் சில சிங்களவர்களின் உடைமைகளும் சேதமாக்கப்பட்டன. தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் வடகிழக்கு பகுதிகளில் சிங்களவர் சிலர் தமிழர்களால் தாக்கப்பட்டனர்.

இத்தகை துன்பியல் நிகழ்வுகள், அரசியல் நிகழ்வுகள், சாத்வீகப் போராட்டங்கள் எனப் பல தொடராக அரங்கேறியபோதிலும் எனது இளவயதுக் காலங்கள் மறக்கமுடியாதவை. அது ஒரு பொற்காலம்...!

உறவுகள் கூடி ஒன்றாய் உண்டு களித்த காலம்!

பெற்றோர், சகோதரர், அண்ணி, அத்தான் எனக் கூட்டுக் குடும்ப வாழ்வில் குதூகலித்த காலம்!

சிறியதொரு விழாவென்றாலும் சிறப்பூட்டிட, சில நாட்களுக்கு முன்னரே கூடிவிடும் சொந்தங்கள் நிறைந்திருந்த காலம்!

துன்பமென்றதும் துடிப்புடன் உதவிடவந்து, துணையென நிற்கும் நல்மனம் கொண்டோர் மலிந்திருந்த காலம்!

பண்டிகை காலங்களில் பல்வகை பலகாரங்களை ஒன்றிணைந்து

தயாரித்து, பங்கிட்டுக்கொள்ளும் பாசங்கள் பெருகியிருந்த காலம்!

பெரியோரைக் கண்டதும் தலை குனிந்து கனம் பண்ணும் இளையோர் வாழ்ந்த காலம்!

கலாசார விழாக்கள், நாடக - நாட்டுக்கூத்து அளிக்கைகள் மெருகூட்டி சிறப்பூட்டிய காலம்!

விளையாட்டுக்கள், விளையாட்டுப் போட்டிகள் போட்டி போட்டு நடந்தேறிய காலம்!


ஆலயத் திருவிழாக்களில் அதீத சிறப்புகள், ஆர்வத்துடனான ஒன்றிணைவுகள் வெளிப்பட்ட காலம்!

தொழில் வளங்கள் பெருகி, மீன்பிடியிலும் கடலுணவு ஏற்று மதியிலும் முன்னிலை வகித்ததால் வறுமையை அகற்றி நின்ற காலம்!

அரிசி முதல் காய்கறி ஈறாக உணவுப் பொருட்களுக்கு தட்டுபாடின்றி விவசாயத்தில் பெருக்கத்தைக் கண்டகாலம்!


இரவில் எவ்வித பயமுமற்று உலாவந்த காலம்!

இத்தகைய சிறப்பில் திளைத்திருந்த காலகட்டத்தில், பெற்றோரின் வழிகாட்டல், வழித்துணையுடன் தரை கடந்தும், கடல் கடந்தும் பயணித்த இளவயதுப் பயணங்கள், சுயமான பயணத்துக்கு ஊக்குவித்தது மட்டுமல்ல, அந்த பயணங்கள் தந்த அனுபவம், தொடரவிருந்த எனது கடல் கடந்த நாட்களுக்கு வாயிலாக அமைந்தது என்றும் சொல்லலாம்...



யாழ்ப்பாண அயல் தீவுகள்

(1956 முதல்)



பெற்றோரின் கரம்பற்றித் திரிந்த சிறு பராயத்தில் என்னையும் அழைத்துக்கொண்டு பல்வேறு நகர்களில் உள்ள ஆலயங்களுக்கான பயணங்களை மேற்கொண்டதாக பெற்றோர் வாயிலாக அறிந்திருந்த போதும், சென் ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலையில் 'அரிவரி' வகுப்பில் சேர்க்கப்பட்டது முதல் மேற்கொள்ளப்பட்ட பயணங்கள் எனது ஞாபகத்தில் உள்ளன. (அரிவரி வகுப்பில் சேருவதற்கு முன்னர் புனித யாகப்பர் ஆலய வளாகத்தில் இயங்கிய பாடசாலைக்கு உறவினர் ஒருவருடன் சென்று, சிறிது நேரத்தால் சொல்லிக்கொள்ளாமல் அங்கிருந்து வெளியேறி, யாரும் காணாத வகையில் புனித யாகப்பர் ஆலயத்தில் இரண்டு தூண்களின் இணைப்பிற் கிடையில் மறைந்திருந்து, பெற்றோரால் கண்டுபிடிக்கப்பட்டது ஞாபகத்தி லிருக்கிறது.) அவ்வாறான பயணங்களில் 'கடல் கடந்த நாட்களு'க்குப் பொருந்தக்கூடிய வகையில் யாழ்ப்பாண அயல் தீவுகளுக்கான பயணங்களில் சிலவற்றை மட்டும் இங்கு பதிவு செய்கிறேன்.

'ஏழு தீவுகளைக் கொண்ட யாழ்ப்பாணக் குடாநாடு' எனப் பலராலும் அழைக்கப்பட்டபோதும், யாழ்ப்பாணக் குடாநாட்டின் கரைக்கு அப்பால் தெற்கு மற்றும் தென்மேற்குத் திசைகளில் சிறியதும் பெரியதுமான இருபதுக்கும் மேற்பட்ட தீவுகள் உள்ளன. இவற்றில் நான்கு தீவுகள் தரைவழித் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டுள்ளன. இத்தீவுகளில் சிறிய தீவுகள் சிலவற்றிற்கு தேவையின் நிமித்தம் பல தடவைகள் சென்றுவந்துள்ள போதிலும் அவை தவிர்க்கப்பட்டு, அனுபவப் பதிவு செய்வதற்கு ஏற்புடைய அனுபவங்களைப் பெற்றுக்கொண்ட தீவுகளுக்கான பயணங்களாகவே 'கடல் கடந்த நாட்கள் - 01' அமைகிறது. இத்தீவுகளில் பெரியது நெடுந்தீவு. தொலைவிலுள்ளது கச்சத்தீவு ஆகும்.

பாலதீவு

யாழ்ப்பாணம், குருநகர் இறங்குதுறையிலிருந்து (ஜெற்றி) 21 கி.மீ.

தொலைவிலுள்ளது 'பாலதீவு'. இத்தீவு, 5 கி.மீ. சுற்றளவைக் கொண்ட அழகியதொரு தீவாகும். வெண்மணல், சிப்பிகள் மற்றும் சிறிய ஊரிகள் கலந்த கலவையாக உள்ள கடற்கரையாலும், கணிசமான தூரம் கடலினடியில் மறுவற்ற வெண்மணலைக் கொண்ட, ஆழம் குறைந்த பரவைக் கடலாலும் சூழப்பட்ட தீவாக இருப்பதால் கடற்குளிப்பிற்குப் பெரிதும் உகந்ததாக இருக்கின்றது. இதனால் யாத்திரிகர் மத்தியில் முக்கியத்துவம் பெறுகிறது.

பற்றைக் காடுகளும், 'சம்பு'ப் புற்களும் நிறைந்த அத்தீவிற்கு செல்லும் யாத்திரிகர், தீவின் வடக்குப் பக்கமாக பற்றைகளை வெட்டி, 'தறப்பாள்' - தென்னோலைக் கிடுகுகளால் 'விடுதி' அடைத்து தங்குவர். விற்பனை நிலையங்கள் தீவின் வட மேற்கு கடற்கரையை அண்டியதாக இரு வரிசையாக இருக்கும். குடிநீர் வசதி அங்கில்லை. அங்கு செல்பவர்கள் தம்மு டன் குடிநீரை எடுத்துச் செல்லவேண்டிய நிர்ப்பந்தம் உள்ளது.

குடிநீர்த் தேவையை ஓரளவேனும் நிவர்த்தி செய்யும் முகமாக குருநகர் வாசியான 'மூப்பர் பாக்கியமுத்து'வின் ஏற்பாட்டில், பாரிய வத்தையில் நீர்த்தாங்கிகள் மூலம் குடிநீர் எடுத்துச் செல்லப்பட்டு, அங்கு அமைக்கப்பட்டுள்ள பெரிய தொட்டியில் நிரப்பி, அதிலிருந்து பகிர்ந்து வழங்கப்பட்டது. இதற்காகத் தினமும் ஒரு தடவை குருநகர் ஜெற்றிக்கு வத்தை கொண்டுசெல்லப்பட்டு கொள்கலன்களில் நீர் ஏற்றிவரப்படும்.

தீவின் மத்தியில் வடக்கே உயர்ந்த வழிகாட்டி கோபுரமும், வடக்குக் கடற்கரை ஓரமாக புனித அந்தோனியார் ஆலயமும் அமைந்துள்ளன. கடற்றொழிலாளரின் நம்பிக்கைக்குரிய ஆலயம் இதுவாகும். திருநாள் அல்லாத நாட்களில் தொழிலுக்குச் செல்லும் தொழிலாளர் ஆலயம் தரிசிக்கச் செல்வதாயின் திரும்பி வரும்போது பின்புறத்தால் நடந்து அடி அழித்தே வருவர் என்று சொல்லப்படுகிறது. இந்த ஆலயத்தில் ஆண்டுதோறும், தவக்காலத்தின் மூன்றாம் ஞாயிறு திருவிழா கொண்டாடப்படுகிறது.

தோணிப் பயணம்

பாலதீவு அந்தோனியார் திருவிழாவுக்கு நான் 'பாய்த் தோணி'யில் பயணம் செய்ததே முழுமையாக ஞாபகத்திலுள்ள முதற் பயணமாகும். 1955ஆம் ஆண்டு என நினைக்கின்றேன். 1957ஆம் ஆண்டில் புதிய வரவான உள்ளிணை இயந்திரப் படகுகளின் பாவனை அதிகரித்திருந்தது.

ஒரு வாரத்திற்கு மேலாகத் திட்டமிட்டு, மெல்ல மெல்ல ஆயத்தங் களைச் செய்து, வியாழக்கிழமை அதிகாலை பாலதீவு பயணத்தை மேற்கொள்ளத் தயாரானோம். எனக்கு அளவிட முடியாத மகிழ்ச்சி. முன்னர் ஒரு தடவை பாலைதீவு சென்றுவந்த நினைவுகள் மெல்ல மெல்ல துளிர்விட; கடலில் குளிக்கவேண்டும், கடற்கரையில் விளையாட வேண்டும், கடைகளுக்குப் போகவேண்டும் என்ற கற்பனைகள்.

புனித யாகப்பர் ஆலயத்தில் அதிகாலைத் திருந்தாதி மணி அடித்தது.

இருள் நீங்காத நேரம். அம்மா, அப்பா, இரு சகோதரிகள், இரு சகோதரருடன் நானும் புறப்பட்டுச் சென்றேன். சூழ்ந்திருக்கும் இருளைக் கடுகளவு போக்கி வழிகாட்டும் நோக்கில் அரிக்கன் லாந்தரை நான் தூக்கிச்செல்ல ஏனையோர் பயணத் தேவைக்கான பொதிகளை சுமந்தவாறு வந்தனர். தம்பிக்கு நாலு வயதாக இருந்தபோதும் அவனும் எழுந்து, எம்முடன் இணைந்து நடந்து வந்தான்.

'அலுப்பாந்தி'க்கு (குருநகர் துறை) அருகில் அமைந்துள்ள 'மலாயன் புகையிலை நிறுவனத்தின்' பாரிய கட்டடத்திற்கு அருகாமை தரித்து நின்ற பயணிகளுடன் நாமும் இணைந்து நின்றோம் ஏனையோர் வரும்வரை. பயணிகளின் அரிக்கன் லாந்தர்கள் அந்தப் பகுதிக்கு ஒளியூட்டின.

சிறிது நேரத்தால் தோணியில் ஏறிக்கொள்ளுமாறு 'தண்டையல்' ('சுக்கானை'ப் பயன்படுத்தி தோணியை உரிய இடம்நோக்கிச் செலுத்துபவர்) பணித்தார். மலாயன் புகையிலை நிறுவனத்திற்கு மேற்குப் பக்கமாயுள்ள கடலணைக்குச் சற்றுத் தள்ளியே தோணி கட்டப்பட்டுக் கிடந்தது. கடலணையிலிருந்து தோணிக்குச் செல்வதற்கு குறுக்காக பெரிய 'சவள்' (12 அடி நீளமுள்ள முனைகள் வளைந்த கனமான பலகை) போடப்பட்டிருந்தது.

தோணியின் 'அணியத்'திலும் (முன் பக்கம்) 'கடையாலி'லும் (பின்பக்கம்) வைக்கப்பட்டிருந்த 'லோமியா'க்கள் தோணிக்கு ஒளியைக் கொடுத்தபோதும் பலரும் அரிக்கன் லாந்தருடனே சவள்மீது நடந்து தோணியிலேறி உள்ளே இறங்கினர். தண்டையலுடன் மேலும் இருவர் நின்று, பயணிகள் தோணியில் இறங்குவதற்கு உதவி செய்தனர்.

தோணியின் உள்ளே பரவப்பட்டிருந்த பலகைகள் மீது பொதி களுடன் அனைவரும் அமர்ந்துகொண்டனர். அரிக்கன் லாந்தர்கள் அணைக்கப் பட்டன. லோமியாவும் அணைக்கப்பட்ட பின்னர் தோணி நகரத் தொடங்கியது. போதிய காற்று இல்லாதபடியால் 'பாய்' விரிக்காமல் 'மரக்கோல்'களால் தாங்கியே தோணியைச் செலுத்தினர்.

'முகத்துவார வெளிச்சவீட்டை' நெருங்கும்போது நன்றாக விடிந்து விட்டது. அதனைக் கடந்து சிறிது தூரம் சென்ற பின்னர், பாரிய தோணிப் 'பாய்', 'பாய்மரத்தின்' முனைவரை உயர்த்தி விரிக்கப்பட்டது. வேகம் குறைந்த காற்று என்றாலும் படகு பாயின் உதவியுடனே மெதுவாகப் பயணித்தது.

தோணியின் உள்ளே இருந்தபடியால் கடலைப் பார்க்க முடிய வில்லை. அப்பாவிடம் இதுபற்றிக் கூறியதும் என்னை அழைத்துக்கொண்டு பயணிகளைக் கடந்து 'கூத்துவாரி'யில் (பாய்மரம் மேல்நோக்கி நேராக நிற்பதற்கு ஏற்றவாறு நடுவில் பெரிய துவாரமி டப்பட்ட கனமான பலகை. தோணியின் மேற்பகுதியில் குறுக்காகப் பொருத்தப்பட்டிருக்கும்.) இருத்திவிட்டார். இப்போது என்னால் கடலைப் பார்க்க முடிந்தது. அதனால் மகிழ்வாகவும் இருந்தது. சிறிது நேரத்தின் பின்னர், நான் விரும்பாதபோதும்

முன்னைய இடத்திற்கு அழைத்து வரப்பட்டேன்.

வேகமற்ற காற்று என்பதால் வெயிலின் அகோரம் அதிகமாக இருந்தது. அதனைத் தாங்குவது கடினமாகவும், தாகமாகவும் இருந்தது. அம்மா 'பிப்பினிக்காய்' வெட்டித் தந்தார். அதைச் சாப்பிட்டதும் தாகம் தீர்வதுபோல இருந்தது.

யாரும் எதிர்பார்க்காத நிலையில் திடீரென வீசியது வேகமான காற்று. அதனால் கடலில் கொந்தளப்பு. தோணி கடல் அலையோடு சேர்ந்து ஆட்டம் போட்டது. பயணிகள் 'செபமாலை' சொல்லத் தொடங்கினர். இவ்வேளை தண்டையல், "ஆராவது இங்க தூஷணம் பேசினதா? ஆராவது சாராயம் கொண்டு வந்தனீங்களா?' என உரத்த சத்தமாய் திரும்பத் திரும்பக் கேட்டார்.

'அணியப்' பக்கம் சலசலப்பு கேட்டிட உடனே தண்டையல் அங்கு சென்றார். அங்கே இருந்த பயணி காட்டிய உடுப்பு 'சூட்கேஸை' திறந்து உள்ளே இருந்த சாராயப் போத்தலை வெளியே எடுத்து உயரக் காண்பித்தார். சாராயம் வைத்திருந்தவரை ஏசிவிட்டு அதனைக் கடலில் வீசிவிட்டார். பயணிகளும் சாராயம் கொண்டு வந்தவரை ஏசியதைக் கேட்கக்கூடியதாக இருந்தது.

எனக்குப் புரியவில்லை. 'கடல் கடந்து ஆலயங்களுக்குச் செல்லும் போது சாராயம் கொண்டுபோதல், தூஷண வார்த்தை பேசுதல், பக்தியின்றி கேளிக்கையிலிருத்தல் போன்றவற்றால் கடல் பயணத்திற்கு இடைஞ்சல் ஏற்படுமாம். அதைக் கண்டுபிடித்து நீக்கினால் பயண இடையூறு நீங்கிவிடுமாம். தூஷண வார்த்தை பேசியவரை, தோணி கரையை அடையும் வரை பாய்மரத்தின் அடியில் கட்டி வைப்பார்களாம்' என அம்மாதான் தெளிவுபடுத்தினார்.

பயணிகளின் நம்பிக்கை உண்மையென்பதுபோல சிறிது நேரத்தின் பின்னர் கடல் அமைதியாகிட எமது பயணம் இடையூறின்றி தொடர்ந்ததால் பாலதீவுக் கரையை அடைந்தோம்.

பாலதீவு அந்தோனியார் ஆலயம்

உயர்ந்த நிழல்தரு மரங்கள் எதுவும் இல்லாமையால் சிறிய மரங்களின் கொப்புகளை இணைத்து, கம்புகளை நட்டு, 'தறப்பாள்' கொண்டு 'விடுதி' அடைத்து முடித்தோம். பின்னர் குடும்பமாக புனித அந்தோனியார் ஆலயம் நோக்கிப் பயணித்தோம். மணலில் நடக்கும் போது சூடாக இருந்ததுடன் ஊரிகள், சிப்பிகள் குத்தவும் செய்தது. (செருப்புப் போடும் பழக்கம் இருக்கவில்லை.) ஆலயத்தில் வழிபட்டு, வந்த நோக்கத்தை நிறைவேற்றிய பின்னர் கடைப்பக்கம் சென்றோம். கடைகளுக்கான கொட்டில்கள் போடும் வேலை நடைபெற்றுக்கொண்டிருந்ததால் சில கடைகளே திறந்திருந்தன. கடலை மற்றும் கச்சான் வாங்கிச் சாப்பிட்டுவிட்டு விடுதியை அடைந்து உடைமாற்றிக்கொண்டு கடலில் நீராட இறங்கினோம்.

கண்ணாடியில் பார்ப்பது போலிருந்த கடலடி வெண்மணலால் பய மற்று நேரம்போனதே தெரியாமல் நீராடினோம். அம்மாவும் சகோதரிகளும் அடிக்கடி என்னை அழைப்பதும் கண்காணிப்பதுமாக இருந்தனர். அதனால் அவர்களுக்கு அண்மையிலே நிற்கவேண்டியதாயிற்று. இருள் சூழும் முன்னர் வெளியேறி, நன்நீரால் உடலைக் கழுவிக் கொண்டோம்.

மறுநாள் வெள்ளிக்கிழமை விடுதியில் சமைத்தபோதும், மதியம் 'பீங்கான்' ஏந்தி ஐந்து விடுதிகளில் உணவு பெற்று, அதனையே நான் மதிய உணவாக அருந்தினேன். நான் குழந்தையாக இருக்கையில் எனக்கு அடிக்கடி வலிப்பு வருமாம். மருந்துகளால் மாற்ற முடியாமற்போனதால் பாலதீவு புனித அந்தோனியாருக்கு அம்மா 'நேர்த்தி' வைத்தார்களாம்.

பாலதீவு திருவிழாவுக்குச் செல்லும்போது, அங்கு 'தங்கியிருக்கும் நாட்களில் ஐந்து விடுதிகளில் உணவுபெற்று சாப்பிட வேண்டுமென்பதே' நேர்த்தி. நேர்த்தி வைத்த பின்னர் வலி வரவேயில்லையாம் என அம்மா அடிக்கடி கூறுவார். அந்த நேர்த்தியை நிறைவேற்றுவதற்காகவே ஐந்து விடுதிகளில் உணவைப் பெற்றுச் சாப்பிடுவதை வழமையாய்க் கொண்டேன். எனக்கு சங்கடமாக இருந்தாலும் தவறாது செய்வேன்.

சனிக்கிழமை காலை யாத்திரிகரால் நிரம்பி வழிந்தது பாலதீவு. ஆலயத்திற்கு வழிபடச் செல்வோரைவிட, குடிநீர் பெறுவதற்குச் செல்வோர், கடைத்தொகுதி மற்றும் கடலுக்கு சென்று வருவோராலும் ஆலய முன்றல் கலகலப்பாக இருந்தது.

பித்தளைக் குடங்களில் கூடவே எடுத்து வந்திருந்த குடிநீர் முடிவுற்றதால், குடிநீர்த் தொட்டியில் வழங்கப்படும் நீரைப் பெற்று வருவதற்கு வாளியை ஏந்தியவாறு ஓடியோடி, குத்தும் ஊரிகளையும் பொருட்படுத்தாது மாறிமாறி பெற்றுவருவதும், வரிசையின் இடையில் புகுந்ததைக் கண்டவர்களின் ஏச்சை கேட்டும் கேட்காததைப்போல் நிற்கும்போதும் மகிழ்வாக இருந்தது.

அந்தச் சுற்றாடலில், நேர்த்திகடனுக்காக 'பணிஸ்', பாண் துண்டு, 'சூசானா' என்று அழைக்கப்படும் 'கேக்பாண்' போன்றவற்றை கொடுத்துக்கொண்டிருக்க, அதைப் பெறுவதற்கு பலரும் முண்டியடித்துக் கொண்டிருந்தனர். நானும், அங்கு சந்தித்து இணைந்து கொண்ட நண்பர்களும் சளைத்தவர்களில்லை என்பதை நிரூபித்துக் காட்டியபோது அடைந்த சந்தோஷம் கணக்கற்றது.

ஓய்வின்றி வழங்கிக்கொண்டிருந்த 'சர்க்கரை - ஊறுகாய் - தண்ணீர்'ப் பந்தல் மற்றும் தேநீர் வழங்கும் பந்தலில் காலை முதல் மாலை வரை கூட்டம் தாராளமாக இருக்கும். அடிக்கடி நண்பர்களுடன் இணைந்து சென்று குடித்துத் தாகம் தீர்த்ததில் அடைந்த இன்பம் அளவில்லாதது.

பல உபகாரிகள் இணைந்து, மூன்று நாட்களாக இரண்டு வேளை வழங்கப்படும் அன்னதான பந்தலில், இரவு உணவுக்கான தயாரிப்பு வேலைகள்

நடைபெற்றுக்கொண்டிருந்தபோது, தென்னை ஓலைக் கிடுகுகளால் வேயப்பட்ட அந்தப் பெரிய பந்தலில் வெயிலின் அகோரத்தைத் தவிர்ப் பதற்காக ஒதுங்கி அவர்களுக்குச் சிறிய உதவிகளைச் செய்தபோது மனதிலுண்டான திருப்தி நிறைவானது. இந்த அன்னதான சேவை பல யாத்திரிகர்களுக்கு வரப்பிசாதமாய் இருந்தது.

அங்கிருந்து கடலுக்குச் சென்று பெரியவர்களின் கண்காணிப்பின் கீழ் நண்பர்களுடன் மணிக்கணக்கில் நீராடி, விளையாடுகையில் ஏற்பட்ட உற்சாகம் கிடைக்க முடியாதது. நீராடி முடித்து விடுதி சென்ற சிறிது நேரத்தால் ஏற்படும் உடல்சோர்வு சினத்தை ஏற்படுத்தத் தவறாது. அப்போது உண்டாகும் வெறுப்பு தற்காலிகமானது.

சாயந்தரமானால் கடைக்குச் செல்கையில் குடும்பத்தினரிடம் அடம்பிடித்து விரும்பிய விளையாட்டுப் பொருட்களை வாங்கிக் கொள்கின்றபோது கோடி பெற்ற மகிழ்வு ஏற்படவே செய்யும்.

வேண்டுதல் நிறைவேறியதற்காய் காணிக்கை கொடுப்பதற்கெனக் கையில் தென்னங் கன்றுகள், சேவல், கோழி, சேலைத் துண்டில் முடிந்த பணம், உப்பும் மிளகும் கலந்த பொட்டலம் போன்றவற் றுடன் பக்தர்கள் நீண்ட வரிசையில் நின்றனர். இவற்றை ஆலயத்தின் முன்றலில் குருசு உள்ள தனிப் பீடத்தில் வைத்து தமது நேர்த்தியை நிறை வேற்றிக் கொள்வர். சிலர் எண்ணெயும் ஊற்றுவர்.


பாலைதீவு அந்தோனியார் ஆலயம் – 2011

பேய் பிடித்தவர் என அறியப்பட்டவரை 'குருசு' உள்ள பீடத்தைத் தேடி அழைத்து வருகையில், குருசினை நெருங்கும்போது மேற்கொண்டு வரமறுத்து அடம்பிடிப்பர். சிலர் உரத்துக் கூக்குரலிடுவர். கூடவே வருபவர் பிரம்பால் அடித்து இழுத்துவந்து குருசில் கட்ட முனையும்போது பறித்துக்கொண்டு ஓடுவர்.

ஓடியவரை துரத்திப் பிடித்து ஆலயத்தின் இடதுபக்க மூலையில் நிற்கும் பூவரசு மரத்தில், கையை அல்லது காலைக் கயிற்றால் கட்டிவைத்து, குருசு பீடத்தில் வைக்கப்பட்டிருந்த எண்ணெய் மற்றும் உப்புடன் கலந்த மிளகு போன்றவற்றை தலையில் தேய்ப்பார். அப்போது மண்ணெண்ணெய் தெளிக்கப்பட்ட பாம்பைப்போல பேய் பிடித்தவர் துள்ளிப் பாய்ந்து ஓட முனைந்து கூக்குரலிடுவார். தலையை விரித்து பலங்கொண்ட மட்டும் முன்பின்னாக அசைத்து ஆடுவர்.

அழைத்து வந்தவர் கோபம் கொண்டவராய் மூங்கில் பிரம்பால்

அடிப்பார். பலமுறை அடிப்பதைப் பார்க்க எனக்குப் பயமாக இருக்கும். அதனால் சற்றுத் தள்ளியே நிற்பேன். இதனைப் பார்வையிட ஒரு கூட்டம் வட்டமாய் நிற்கும்.

எப்படி அடித்தாலும் சிலர் அசையாது நிற்பர். இத்தகையோரை இழுத்துச் சென்று குருசு பீடத்தில் கட்டிவிட்டதும் தலையை உயர்த்தி ஆடி, சுடு மணலில் வீழ்ந்து கிடப்பர். சிலர் அடி தாங்க முடியாமல் வாய்விட்டு ஓலமிடுவர். சிலவேளைகளில் "நான் இவர விட்டுப் போறன்" என்று சொல்ல, "எங்க போவாய்? எப்ப போவாய்?" என அடிப்பவர் கேட்க, பேய்பிடித்தவர் மௌனமாகிடத் திரும்பவும் அடிக்க, பார்க்கும்போது அவர்மீது இரக்கமே பிறந்தது.

சிலர் "நான் இப்பவே கடலுக்குப் போறன்" என்று சொல்ல, "சரி உடனே போ!" என அடிப்பவர் உரத்துச் சொல்ல, பேய்பிடித்தவர் களைப்புற்றவராய் கீழே விழுந்திடுவார். முகத்தில் நீர் தெளித்ததும் சற்று நேரத்தால் சாவசமாக எழுந்து நிற்பார். 'பேய் போய்விட்டதாக' அங்கு பேசிக்கொள்வார்கள்.

பார்த்த காட்சிகளை அம்மாவிடம் கூறினேன். அம்மா எனக்கு இரைச்சல்தான். "இப்ப பாத்திற்று ராவில் பயந்து அழுகிறதாக்கும்!" என்று ஏசினார். நீண்ட காலமாக திருவிழாக் காலங்களிலும் இவ்வாறு நடக்கிறதாகவும், மத வேறுபாடின்றி பேய் பிடித்தவர்கள் அழைத்து வரப்படுவதாகவும், பெரும்பாலும் பெண்களாகவே இருப்பார்கள் என்றும் அம்மா கூறினார்.

ஞாயிற்றுக்கிழமை திருவிழா திருப்பலி முடிவுற்றதும் தோணியில் மதியம் புறப்பட்டு வீடு வந்துசேர இரவு எட்டு மணியாகிவிட்டது.

தொடர்ந்த காலங்களில் பல தடவைகள் பாலதீவு புனித அந்தோனியார் திருவிழாவுக்கு சென்று வந்துள்ளேன். இரண்டு தடவைகள் பாய்த் தோணியில் பயணித்ததைத் தவிர மேலும் பாய்த் தோணியில் பயணித்த ஞாபகம் இல்லை. பாலதீவு புனித அந்தோனியார் திருவிழா காலத்தில், சிலவேளை சரக்குக் கப்பல் வந்து நிற்பதுண்டு. கப்பலில் உள்ள சரக்குகளை ஏற்றிவர தோணிகள் அனைத்தும் பயன்படுத்தப்படுவதால் தோணிப் பயணம் சாத்தியமில்லாது இருந்திருக்கலாம். அல்லது இயந்திரப் படகுகள் பாவனை அதிகரித்து பயணம் இலகுபடுத்தப்பட்ட காரணமாகவும் இருந்திருக்கலாம்.

இயந்திரப் படகுகளில் பெரும்பாலும் தொடர்ச்சியாகப் பயணித்திருக்கின்றேன். இயந்திரப் படகுப் பயணத்தின்போது 'டீசல்' மணம் எனக்கு சத்துராதி. தவறாது வாந்தியை வரவழைக்கும். அப்பாதான் என்னைத் தாங்கி தலையைப் பிடித்து கடலில் வாந்தியை எடுக்கச் செய்வார். கைகளால் கடல் நீரைக் கோலி குடிக்கத் தருவார். பல ஆண்டுகளாகியும் வாந்தி எடுப்பது நிற்கவேயில்லை.

வளர வளர எனக்கு வாந்தியெடுப்பது வெட்கமாக இருந்தது. சிலரது ஆலோசனையின்பேரில் சில நாட்கள் தொடர்ச்சியாக கொண்டல் கடலை அவித்துச் சாப்பிட்டு வந்தேன். கொண்டல் கடலை முனையில் உள்ள இரசாயனப் பொருள் உடலிலுள்ள பித்தத்தை அகற்றும் தன்மை கொண்டதாகச் சிலர் கூறினார்கள் அவர்கள் கூறியது சரியோ பிழையோ தெரியாது பின்னரான கடற் பயணங்களில் வாந்தி வரவேயில்லை.

எனக்கு 12 அல்லது 13 வயதில் பாலதீவுக்குச் சென்றிருந்தபோது வெட்கத்தினால், விடுதிகளுக்குச் சென்று மதிய உணவு பெற்றுக்கொள்ளாமல் தவிர்த்தேன். அம்மா, 'வெட்கத்தை விடுத்து உணவைப் பெற்று வருமாறு' வற்புறுத்தினார். நான் திரும்பத் திரும்ப மறுத்ததால் மேற்கொண்டு கூறாமல் விட்டுவிட்டார்.

நான் விடுதிக்கு வெளியே நின்றபோது எமது விடுதிக்கு மேலாக உள்ள மரக்கொப்பில் பாம்பு ஒன்று வந்து நிற்பது தெரிந்தது. என்னைப் போல் பலரும் பார்த்துக்கொண்டு நின்றனர். அக்கா இதைக் கண்ணுற்று என்னை அழைத்து, 'நேர்த்தி செய்யாதபடியாலதான் பாம்பு வந்ததாகவும், போய் சாப்பாட்டை பெறுமாறும்' கூற, நானும் கட்டுப்பட்டவனாக பீங்கானுடன் சென்றேன் மனதிலேற்பட்ட பயத்துடன். அருகருகாக உள்ள சில விடுதிகளில் இருந்த சிலரும் தாம் செலுத்த மறந்த நேர்த்திக்குரியவற்றை எடுத்துக்கொண்டு ஆலயம் நோக்கிச் சென்றனர். நான் திரும்பி வரும்போது பாம்பு எங்கோ மறைந்து விட்டது.

நேர்த்தி செய்யத் தவறுகிறவர்களுக்கு நினைவூட்டிட பாம்பு வருவதாக பெரியவர்கள் பேசிக்கொள்வதை நான் அறிந்திருக்கிறேன். பலநூறு மக்கள் நெருக்கமாக விடுதி அடைத்திருக்கும் இடத்தில் எப்படி? எங்கிருந்து பாம்பு வருகின்றதென ஆச்சரியமாகப் பலரும் பார்ப்பதுண்டு. அந்தோனியாரின் புதுமை என்று சொல்லத் தவறுவதில்லை.

27.02.1970இல் பாலதீவுப் பயணத்தின்போது ஏற்பட்ட படகு விபத்து ஒரு துன்பியல் நிகழ்வாகும். 80 பயணிகள் பலியாயினர். அன்றைய தினம், திட்டமிடப்படாததும் தவிர்க்கமுடியாததுமான காரணத்தினால் இறங்கு துறைக்கு வர சாயந்தரமாகியபோதும், நானும் 'அல்பிரட்' என்னும் எனது நண்பனும் பாலைதீவுக்குச் செல்வதில் மாற்றமின்றி காத்து நின்றோம். ஆனால், இறங்குதுறையில் ஆயத்தமாக பயணிகளை ஏற்றிக்கொண்டிருந்த 'வெல்லம்' படகில் பயணிகள் நிரம்பியிருந்ததால் விருப்பற்று, அடுத்த படகில் பயணிக்கும் நோக்கில் இறங்குதுறையிலே தரித்து நின்றோம்.

'வெல்லம்' படகு பயணிகளுடன் புறப்பட்டது. 50 பேர் வரையே ஏற்றிச் செல்லக்கூடிய படகில் இவ்வளவு பேரை ஏற்றியமை கண்டு ஜெற்றியில் நின்ற வயதில் முதியவர்கள் ஏசியபோதும், தண்டையல் அதைக் கருத்தில் எடுக்காமல் வீராப்புடன் நின்றார். அதன் விளைவு...

இருள் சூழக் காத்திருக்கும் நேரம் மற்றும் பயணிகள் மிகக் குறைவாக

இருந்த காரணத்தால், வேறு படகுகள் பாலைதீவுக்கு பயணிகளை ஏற்றிச் செல்ல முன்வரவில்லை. இதனால், நாம் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்ல நேரிட்டது. நாம் பாலைதீவுக்கு செல்ல முடியாமற்போன காரணத்தால் உறக்கம் வர மறுத்தபோதும், இரவு பதினொரு மணியளவில் குருநகரை வந்தடைந்த செய்தி கேட்டு இதயமே நின்றதுபோல இருந்தது.

'வெல்லம் படகு பயணிகளுடன் கடலில் மூழ்கிவிட்டது. சிலர் நீந்திக் கரையை அடைந்தனர். ஏனையோர் பற்றிய தகவல் இல்லை.' குருநகரே இரவு உறக்கமின்றி விழித்திருந்தது.

மறுநாள் கடலில் கண்டெடுக்கப்பட்ட உடல்கள் படகுகளில் தொடராக எடுத்து வரப்பட்டு இறங்குதுறையில் இறக்கப்பட்ட காட்சி இதயத்தைப் பிழிந்தது. படகில் சென்றவர்களில் நீந்தக்கூடிய 12 பேர் உயிர் தப்பிக் கரையை அடைந்தனர். நீந்தத் தெரியாதவர்கள், பெண்கள், சிறுவர்கள் உட்பட 80 பேரின் உயிர்களை கடலன்னை பறித்துக் கொண்டாள். இவற்றுள், மன்னாரிலிருந்து யாழ்ப்பாணம் வந்து, உறவினருடன் தங்கியிருந்து பாலைதீவு சென்றிருந்த ஒன்பது பேரைக்கொண்ட ஒரு குடும்பமும் அடங்கும்.

துன்பியல் மற்றும் விரும்பாத நிகழ்வுகள் நிகழ்ந்தபோதும் எனது தொடரான பாலைதீவுப் பயணங்கள் சுகமான அனுபவங்களாகவே இருந்தன.

சிறுத்தீவு

குருநகரிலிருந்து இரண்டு கி.மீ. தொலைவிலுள்ளது 'சிறுத்தீவு'. சோளகக் காற்றினால் எழுந்து வீழும் அலைகளுக்கு நடுவே, 'கண்ணா' மரங்களும் 'சம்பு' புற்களாலும் நிறைந்து, கம்பீரமாய், பசுமை மாறாத நிலையில் தென்படும் அத்தீவில் 'லூர்துமாதா சிற்றாலயம்' இருக்கின்றது. வருடத்தில் மாசி மாதம் 11ஆம் திகதிக்கு அடுத்துவரும் ஞாயிற்றுக்கிழமை அன்று திருவிழா நடைபெறுவது வழமை. சிறுத்தீவு அண்மையில் இருப்பதால் சிறு வயது முதல் பெற்றோருடனும் பின்னர் தனித்தும் தவறாது அத்திருவிழாவுக்குச் சென்றுவந்துள்ளேன்.

சிற்றாலயத் திருவிழாவுக்கு தோணியிலும், வள்ளங்களிலும் பக்தர்கள் செல்வர். அப்போது தீவு மனிதர்களால் நிறைந்து காணப்படும். திருப்பலி முடிவுற்றதும் வருகை தந்தவர்களுக்கு 'மனவற்பிள்ளை' என்பவரால் இலவசமாக வழங்கப்படும் தேநீரையும், நேர்த்திக்காக பலராலும் வழங்கப் படும் 'பணிஸ்', 'பிஸ்கற்' போன்றவற்றையும் சாப்பிட்டு மீளும்போது இருளாகிவிடும். திரும்பி வரும்நேரம் மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட அத்தீவு மிதக்கும் தீவாகத் தெரிவது கண்டு மனம் குளிரும்.

மின்மினிப் பூச்சிகளைப் பிடித்து 'சேட் பைக்குள்' போட்டு அவற்றின் மூலம் தோணிக்குள்ளே இருப்பவர்களுக்கு ஒளியை ஏற்றும் போது கிடைக்கும் ஆனந்தம் அளவிட முடியாதது.

1961ஆம் ஆண்டு பாடசாலை 'சாரணர் குழு'வில் இணைந்துகொண்ட

பின்னர் ஆண்டுதோறும் சாரணர் குழுவாகச் செல்லவேண்டிய தேவை ஏற்பட்டது. திருவிழா நடைபெறும் நாளுக்கு முதல் வாரம் சனிக்கிழமை காலை, சிறுத்தீவுத் திருவிழாவுக்கான முன் ஆயத்தங்களைச் செய்வதற்கென 'சாரணர் குழுவினர்' அழைத்துச் செல்லப்படுவர். ஞாயிறு சாயந்தரம்தான் அங்கிருந்து அழைத்து வரப்படுவோம்.

சாரணிய குழுவின் நடைமுறைப்படி விடுதி அமைத்துத் தங்கி, எமக்கு தேவையான உணவை நாங்களே சமைத்துக் கொள்வோம். உணவுக்கான கறித் தேவையை ஈடுசெய்வதுதான் சிரமம். மிளகாய்த் தூள், தேங்காய், சீனி, தேயிலை பருப்பு போன்றவற்றுடன் விறகு, தண்ணீர், பாத்திரங்களையும் வரும்போதே கொண்டு வந்திடுவோம்.

கடல் வற்றாக உள்ள நேரத்தில் தீவின் வடக்குப் பக்கம் 'தப்பு'த் தண்ணியாகத் தெரியும் கடல் நிலத்தில் அங்குமிங்குமாக நடப்போம். அப்போது நண்டுகள் 'கல்லி' இருக்கக் கண்டால் பிடித்துக் கொள்வோம். மண்ணுக்குள் புதைந்து கிடந்து, கால்களில் மிதிபடும் 'மட்டி'களை (இரண்டு சிப்பிகள் ஒன்றாய் மூடப்பட்டிருக்கும்) சேகரித்துக் கொள்வோம். மட்டிகளை அவிக்கும்போது மூடப்பட்டுள்ள சிப்பிகள் விரிந்துகொள்ளும். மேற்கொண்டு உள்ளிருக்கும் 'மட்டி' (சதை)யை எடுத்து துப்பரவு செய்து அவற்றைக் கறியாக்குவோம். நண்டுகளை அவித்துக்கொள்வோம். எவரேனும் மீன் பிடித்துக் கரைக்கு வந்தால் அவர்களிடமிருந்தும் மீன் பெற்றுக்கொள்வோம். திருவிழா ஏற்பாட்டாளர்கள் சிலவேளை இறைச்சி கொண்டுவந்து தருவார்கள். இதனால் கறித் தட்டுப்பாடு நிவர்த்தியாகும்.

சுவை எப்படியிருந்தாலும் சிரமம் அதிகமாக இருந்தாலும் தேவையானவற்றைத் தேடிப்பெற்று ஒன்றிணைந்து சமைப்பதில் உள்ள மகிழ்வு, தீவின் தெற்குப் பக்கமுள்ள ஆழமான கடலில் குளித்து நீந்தி விளையாடும் போது ஏற்படும் சந்தோஷம், இரவு நேரம் தீ மூட்டி சுற்றிவர இருந்து மாறி மாறி பாட்டுப் பாடுவதில் உண்டாகும் இன்பம். மறக்கமுடியாத இனிமையான நாட்களாக அமையும்.

தங்கியிருக்கும் இரண்டு நாட்களிலும் எமக்கு தரப்பட்ட பணிகளை நிறைவு செய்துவிடுவோம். அவையாவன; சிற்றாலயம் அமைந்துள்ள சுற்றாடல் வெண்மணலாகவும் மேட்டு நிலமாகவும் உள்ளது. ஆனால், அங்கே 'நெருஞ்சி' முட்கள் மணல்மேல் ஏராளமாய்ப் பரவிக் கிடக்கும். திருவிழா நாளில் வருகைதரும் பக்தர்களுக்கு முட்கள் தொல்லை ஏற்படுத்தாத வகையில் வாழைத் தண்டை மணல்மேலாக உருட்டி அவற்றை அகற்றுதல்.

வடக்குப் பக்க கடற்கரையிலிருந்து சிற்றாலயம் வரை இருக்கும் மணற் பாதையின் ஓரங்களில் வளர்ந்துள்ள புற்களை வெட்டி, பள்ளங்களை மண்கொண்டு மேவி செம்மைப்படுத்துதல்.

பாதைக்குக் குறுக்காக ஆறு அடி அகலத்தில் வாய்க்கால் போன்று நீரோடி உள்ளது. மழைநீர் கடலுக்குச் செல்லும் வழி அது. அதனைப் பக்தர்கள்

கடந்து செல்வதற்கு ஏதுவாக பலகைகள், தென்னம் குற்றிகள் கொண்டு பாலம் அமைத்தல் போன்றவற்றை திட்டமிட்டுச் செய்து முடித்திடுவோம்.

1962 வைகாசி மாதம் பாலைதீவுக்கும் யாழ்ப்பாணத்துக்குமிடையில் சரக்குக் கப்பல் தரித்து நின்று பொருட்களை இறக்கும் பணி நடைபெற்றுக் கொண்டிருந்த நாட்களில் யாழ்ப்பாணத்தை சேர்ந்த இருவர் மண்டைதீவு முனையிலிருந்து கப்பல் வரை நீந்திச் செல்வது என்ற தீர்மானத்தில் நீந்தத் தொடங்கினர்.

ஒருவர் குறித்த இலக்கை அடைந்தபோதும் மற்றவரைக் காண வில்லை. மூன்றாம் நாள் அவரது உடல் கடலிலிருந்து மீட்கப்பட்டது. 'குறண்டல் வாய்வு' அவரது காலைப் பிடித்ததாகவும், அதனாலேதான் கடலில் மரணமானார் எனவும் பலர் பேசிக்கொண்டனர்.

இது நடந்து சில நாட்கள் கழித்து சனிக்கிழமை நானும் மருமகனும் ஐந்து பாடசாலை நண்பர்களுமாகச் சேர்ந்து, வள்ளத்தில் சிறுத்தீவு சென்றுவரத் தீர்மானித்து உடனேயே செயலில் இறங்கினோம். கடையில் பாணும் - சர்க்கரையும் வாங்கிக் கொண்டு, கடலில் கட்டிக் கிடந்த ஒரு வள்ளத்தை அவிழ்த்து எடுத்தோம்.


சிறுத்தீவு லூர்துமாதா சிற்றாலயம் - 2011

அது எவரது வள்ள மெனத் தெரியாதுவிடினும் விரைவாகக் கொண்டுவந்து இருந்த இடத்தில் கட்டிவிடலா மென்ற முடிவில் கடலணை வரை இழுத்துவந்து, ஏழு பேரும் ஏறி புறப்படும்வேளை அவ்விடம் வந்த பெண் ஒருத்தி, "ரெண்டு மூண்டு நாளைக்கு முன்னதான் ஒருத்தன் பிரேதமானான். நீங்களும் வெளிக் கிட்டீங்களா?" எனக் கேட்டாள். நாங்கள் பதிலுக்கு ஏசிவிட்டு புறப் பட்டோம். எங்களில் எவருக்கும் வள்ளத்தைத் தாங்கிச் செலுத்தத் தெரியாது. இப்படித்தான் தாங்குவது என்பதைப் பார்த்த ஞாபகம்.

வள்ளம் கட்டிக்கிடந்த கம்பை பிடுங்கியும், வள்ளத்துக்குள் கிடந்த கம்பைக் கொண்டும் இருவர் தாங்கிச் செலுத்த முயற்சித்தோம். வள்ளம் முன்னேறிச் சென்றது. ஆனால், நேராகச் செல்லாமல் பாம்பு செல்வதுபோல அங்குமிங்கும் வளைந்து, நெளிந்து சென்றது. மாறிமாறி, வியர்க்க வியர்க்க தாங்கியபோதும் அவ்வளவுதான எம்மால் முடிந்தது.

பரவைக் கடல் பகுதியையும், சிறிது தூரம் சற்று ஆழமான பகுதியையும் தாண்டி சிறுத்தீவை நோக்கி முன்னேறினோம். இடையில் நல்ல வெள்ளை மணலாக கடலடி நிலம் தெரிந்ததால் அங்கே வள்ளத்தைக்

கட்டிவிட்டு கடலில் இறங்கினோம். இடுப்பளவு நீர், ஆசை தீரும்வரை மூழ்கி எழுந்தோம். வெயிலின் அகோரத்திற்கும் உடலின் வியர்வைக்கும் இதமாக இருந்தது குளிப்பு. பசி எழுந்ததால் வள்ளத்தில் ஏறி பாணையும் சர்க்கரை யையும் பங்கிட்டுச் சாப்பிட்டுவிட்டு ஒருவாறாக சிறுத்தீவின் வடக்குப் பக்க கரையை அடைந்தோம்.

பெரும் சாதனை செய்த மகிழ்வாய் இருந்தது எமக்கு. கரையோரம் கம்பை நட்டு வள்ளத்தை அதில் கட்டிவிட்டு, தீவின் தெற்காக மத்தியிலிருந்த 'லூர்து அன்னை சிற்றாலயம்' நோக்கிச் சென்றோம். சிற்றாலயச் சுற்றாடல் மணலில் கிடந்த நெருஞ்சி முட்கள் கால் பாதங்களில் குத்தித் தங்கிட அவற்றைப் பிடுங்கி எறிந்தவாறு முன்னேறி சிற்றாலயத்தை அடைந்து வழிபட்டோம். தீவின் தெற்குப் பக்கமாக மண்டைதீவைப் பிரிக்கும் கடல் ஆழமானது என்பதால் அங்கு பார்வையிட மட்டும் சென்றோம். குளிக்கும் ஆசை ஏற்பட்டபோதும் அதைக் கட்டுப்படுத்த வேண்டிய நிலமை அப்போது.

சிற்றாலயத்திற்கு மேற்குப் பக்கமுள்ள உப்புநீரும் நன்நீரும் கலந்த ஆழமற்ற சிறிய குளத்தில் நீர் குறைவாக இருந்ததால் மீன்கள் நிற்பது தெரிந்தது. ஓடியோடி தடியால் அடித்து மீன்கள் சிலவற்றைப் பிடித்தோம். இவற்றைப் பிடித்த பின்னர்தான் என்ன செய்யலாம் என்பதை யோசிக்க வேண்டியதாய் இருந்தது. பிடித்த மீன்கள் யாவும் 'யப்பான் சள்ளை'கள். இதனை எம்மவர் வீடுகளில் சாப்பிடுவதில்லை. (இலங்கையின் தென் பகுதிகளில் 'செல்வன்' என்று பெயரிட்டு பலரும் விருப்புடன் சாப்பிடுவதுண்டு.)

தீவின் வடக்குப் பக்கம் நாங்கள் வள்ளம் கட்டியபோது இரண்டு 'சிப்பிச் சூளை'கள் எரிந்துக் கொண்டிருந்தமை நினைவிற்பட்டதால் துடிக்கும் மீன்களை கைகளில் ஏந்தியவாறு அங்கு சென்றோம். அவர்களின் அனுமதியுடன் 'சூளை'யில் வைத்து மீன்களைச் சுட்டெடுத்து அவர்களுக்கும் கொடுத்து எஞ்சியிருந்த பாணுடன் சாப்பிட்டுவிட்டுப் புறப்பட ஆயத்தமானோம்.

கடல் வற்றியிருந்ததால் கட்டியிருந்த வள்ளத்தை சிறிது தூரம் தள்ளியே செலுத்த வேண்டியதாயிருந்தது. எண்ணியதை நிறைவேற்றிய மகிழ்வில் வள்ளத்திலேறி குருநகரைத் தேடித் தாங்கத் தொடங்கினோம். வரும்போது இருந்ததைவிட 'சோளகக் காற்று' சற்று வேகமாக வீசியது. காற்றுக்கு எதிரே தாங்கி வந்ததைவிட சாய்வாகத் தாங்கிச் செல்வது, பழக்கமற்ற எமக்கு சிரமமாகவே இருந்தது. வரும்போது இருந்த உற்சாகம் குறைந்தும் காணப்பட்டதுடன் களைப்பாகவும் இருந்தது. முடிந்தவரை முயற்சியெடுத்து தாங்கி வந்தோம். ஒழுங்கான தாங்குதல் இல்லாமையால் வள்ளம் காற்றுக்கு விலங்காக வர, அதைத் திருப்ப முயற்சியெடுக்க, அங்கு மிங்கும் ஆடியதால் நீர் கோலி வள்ளம் கடலில் மூழ்கியது.

நாம் கடலில் வீழ்ந்து மூழ்கியபோதும் பாதிப்பின்றி எழுந்து நின்றோம். மார்பளவு நீர் இருந்தது. வள்ளம் நீரின் மட்டத்தில் அமிழ்ந்து கிடந்தது.

வள்ளத்திலுள்ள நீரை கடலில் நின்றவாறு வெளியேற்ற முடியாது என்பதால் வள்ளத்தை இழுத்தவாறு நடக்கத் தொடங்கினோம். கடல் வற்றாக இருந்த தாலும் ஆழமான பகுதியைக் கடந்து விட்டதாலும் நடப்பதற்கு ஏதுவாக இருந்தது. நெடிதான 'வாட்டாளை' செடிகள்தான் காலைப் பதம் பார்த்தன.

வள்ளத்தை குருநகர் வரை இழுத்துவந்தோம். வள்ளத்தின் உரிமை யாளர் நின்றால் பிரச்சினையாகிவிடும் என்பதால் வள்ளம் கட்டிக் கிடந்த இடத்திற்குச் செல்லாமல் சற்றுத் தூரத்தில் கம்பை நட்டு அதில் கட்டிவிட்டு விரைந்து அங்கிருந்து வீடு நோக்கிச் சென்றோம்.

புறப்படும்போது சந்தித்த பெண்ணால், நாம் சிறுத்தீவு சென்ற விபரம் வீடுவரை எட்டியதை அறியாமல், நானும் மருமகனும் எதுவுமே தெரியாதது போல வெளிப் படலையைத் திறந்து வளவினுளே சென்றோம். எம்மை எதிர்பார்ப்பதைப்போல் அப்பா நின்றார். எனக்கு ஓரளவு புரிந்ததால் நெஞ்சு திக்கென்றது.

எம்மைக் கண்டதும், "எங்க போயிற்று வாறீங்க?" எனக் கேட்டார். நாங்கள் எதுவும் கூறாது நின்றோம். "என்ன நனைஞ்சு வந்திருக்கிறீங்க? சிறுத்தீவுக்கா போனனீங்?" எனக் கேட்டதற்கு தலையசைத்து ஏற்றுக் கொண்டோம். மறைத்து வைத்திருந்த பிரம்பால் எமக்கு அடி விழுந்தது. இருவரும் அழத் தொடங்கினோம். அடிக்காமல் விடுத்து முழங்காலில் இருக்குமாறும், கைகள் இரண்டையும் விரிக்குமாறும் எம்மைப் பணித்தார். நாம் அவ்வாறே செய்தோம். இரண்டு கைகளிலும் சிறிய கல்லை வைத்துவிட்டு "இப்பிடியே இருக்கவேணும் நான் வரும்வரை" என்று கூறிச் சென்றார்.

நாங்கள் அழுதுகொண்டே இருந்தோம். சிறிது நேரத்தால் வந்த அம்மா, எழுந்து குளிக்குமாறு கூறினார் நாமும் துள்ளலுடன் எழுந்து குளிக்கச் சென்றோம். இவையெல்லாம் சுவையான அனுபவங்களே.

கச்சதீவு

யாழ்ப்பாண குடாநாட்டின் தீவுக்கூட்டங்களில் தென்மேற்காக 65 கி.மீ. தொலைவிலிலும், இந்தியா 'இராமேஸ்வரத்'திற்கு 16 கி.மீ. தூரத்திலும், ஆழமான கடலின் நடுவிலும் அமைந்துள்ளது 'கச்சதீவு'. இத்தீவு 285 ஏக்கர் பரப்பளவைக் கொண்டது.

முன்னர் இந்தியா 'இராமநாதபுரம் ஜமீனு'க்குச் சொந்தமானதே இத்தீவு. ஜமீன் ஒழிப்புக்கு முன்னர் இவர்கள் தனியாளுக்கு குத்தகைக்கு விட்டுக்கொண்டிருந்தனர். இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இராமேஸ்வரத்தைச் சேர்ந்த 'சீனிக்குப்பன் படையாச்சி' என்பவர் இத்தீவில் புனித அந்தோனியார் சிற்றாலயத்தைக் கட்டினார். இந்த ஆலயத்திற்கு இலங்கையிலிருந்தும் பக்தர்கள் சென்றுவருவதால் இருநாட்டு மக்களும் சங்கமிக்கும் தீவாக கச்சதீவு விளங்கியது.

1964இல் இலங்கைப் பிரதமர் 'திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க'

வும், இந்திய பிரதமர் 'திரு. லால்பகதூர் சாஸ்திரி' யும் செய்துகொள்ளப்பட்ட, 'சிறிமா - சாஸ்திரி' ஒப்பந்தத்தினால் கச்சதீவு இலங்கைக்குச் சொந்தமானது. ஒப்பந்தத்தின் பிரகாரம் இந்திய மீனவர்கள் தீவில் தங்கிச் செல்வதற்கும், வலை உலரவைப்பதற்கும், ஆலயத் திருவிழாவுக்கு சென்றுவருவதற்கும் அனுமதி இருந்தது.

இந்தியாவின் ஏற்பாட்டில் நடைபெற்றுவந்த புனித அந்தோனியார் ஆலயத் திருவிழா நிகழ்வுகள், ஒப்பந்தத்தின் பின்னர் இலங்கை ஏற்பாடு செய்யத் தொடங்கியது. ஆயினும், 1983 ஆம் ஆண்டுவரை ஆலயத் திருப்பலி சடங்குகளை இந்தியா 'தங்கச்சிமடம்' றோமான் கத்தோலிக்க பங்குத் தந்தையர்களே செய்துவந்தனர். இலங்கை குருக்களும் பங்கேற்றனர். நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழல் காரணமாக 2001 ஆம் ஆண்டுவரை திருவிழா நடைபெறவில்லை. 2002 இல் இருந்து யாழ்ப்பாண மறை மாவட்ட பங்குத் தந்தையர்களால் நடத்தப்படுகின்றது. இந்திய குருக்களும் பங்கேற்றனர். இப்போதும் இரு நாட்டவரும் சந்திக்கும் இடமாகவே விளங்குகிறது.

பாலதீவு புனித அந்தோனியார் திருவிழாவுக்கு அடுத்து வரும் ஞாயிற்றுக்கிழமை, 'கச்சதீவு புனித அந்தோனியார் திருவிழா' நடை பெறுவது வழமை. சிறுவயது முதல் பாலதீவுக்கு பல தடவைகள் சென்றுவந்த போதிலும் கச்சதீவுக்கு, இந்தியாவின் கட்டுப்பாட்டில் இருக்கையில் 1962ஆம் ஆண்டும் பின்னர் இரண்டு தடவைகளும் சென்று வந்துள்ளேன்.

மிக ஆழமான கடற்பகுதியாலேயே பயணிக்க வேண்டுமென்பதால் அந்தப் பயணத்தைப் பலரும் தவிர்த்துக்கொள்வர். இந்தியப் பொருட்களின் பண்டமாற்றுக்கு பிரபல்யமாக அத்தீவு இருப்பதால் அதில் நாட்டமுள்ள வர்கள் சென்றுவர முனைப்புக் காட்டினர்.

அங்கு சென்று வருபவர்கள் தமது பயணம் பற்றி, கொள்வனவு செய்த பொருட்கள் பற்றி கதை கதையாய்ச் சொல்வார்கள். வெண் சங்கில் பெயர் பதித்துவந்து காண்பிப்பார்கள். சில்வர் சங்கிலிகள், விளையாட்டுப் பொருட்கள் எனப் பலவற்றைக் காண்பிப்பார்கள். அப்போதெல்லாம் போய் வரவேண்டுமென்ற ஆவல் பிறக்கும். ஆனாலும், ஆழமான கடல் என்ற பயம் ஆவலை மழுங்கடிக்கச் செய்துவிடும். இருந்தபோதும் அப்பா ஊட்டிய உற்சாகத்தால் அப்பாவுடன் 1962ஆம் ஆண்டு சென்றுவரத் துணிவுகொண்டேன்.

கச்சதீவுக்குச் செல்லவிருப்பதை நினைத்தபோது இனித்தது. முன்னர் சென்றுவந்தவர்கள் காண்பித்த பொருட்கள் நினைவில் தோன்றி மறைந்தன. கச்சதீவு செல்வது என்பதைத் தவிர வேறு நடவடிக்கை பற்றி அறிந்திருக்க வில்லை. அப்பாவுடன் சேர்ந்து பயணித்தபடியால் எனக்கு அவசிய மிருக்கவில்லை. இந்தியாவில் 'அம்மை நோய்' பரவுவதால் கச்சதீவு செல்பவர்கள் தொற்றாதிருப்பதற்காக 'அம்மைப்பால்' ஏற்றியே செல்ல வேண்டியிருந்ததால் வெள்ளிக்கிழமை அதிகாலை இறங்குதுறையில் வரிசையாக நின்று அம்மைப்பால் ஏற்றிய பின்னர் ஆர்வமாய், மகிழ்வுடன்

இயந்திரப் படகில் ஏறிக்கொண்டேன். ஒருவருக்கு பணயக் கட்டணமாக ஐந்து ரூபாய் அறவாக்கினர். படகு மண்டைதீவு முனையைக் கடந்த பின்னர் எனக்கு வாந்தி வரத் தொடங்கியது. வாந்தி எடுத்து களைப்புற்று, சோர்வடைந்த நிலையிலேயே கச்சதீவை அடைந்தேன்.

பாலைதீவுப் பயணத்தைப்போல் சந்தோஷமாக இல்லாததால் எதிலும் நாட்டமோ, ஆர்வமோ இருக்கவில்லை. நீண்டநேரப் பயணமும் அதனால் ஏற்பட்ட தாக்கமுமே இதற்குக் காரணம். அப்பாவும் கூடவந்த உறவினரும் ஒன்றாக விடுதி அடைத்துக் கொண்டனர். நான் விடுதியில் படுத்துவிட்டேன். மறுநாள் வழமைக்குத் திரும்பியதும் சற்று உசாரானேன். கடைகளுக்கு சென்ற அப்பா தேவையான பொருட்களை பண்டமாற்றாகப் பெற்றுக்கொண்டார். என் நினைவுகளில் சுழன்று கொண்டிருந்த பொருட்கள் சிலவற்றை அப்பாவிடம் கேட்டு வாங்கிக்கொண்டு மறுநாள் யாழ்ப்பாணம் திரும்பினோம். வரும்போது எடுத்த வாந்திக்கு எள்ளவும் குறைவாக இருக்கவில்லை திரும்பும்போது.

ஒன்பது வருடங்களின் பின் நண்பனுக்குச் சொந்தமான படகில் கச்சதீவு புனித அந்தோனியார் திருவிழாவுக்கு தனியாகச் சென்றுவரத் தீர்மானித்தேன். இந்தியப் பயணிகளிடமிருந்து 'அம்மை நோய்' பரவும் அபாயம் இன்னமும் இருப்பதால் வெள்ளிக்கிழமை புறப்படக்கூடியதாக புதன்கிழமை அம்மைப்பால் ஏற்றிய சான்றிதழ் பெற்றுக் கொண்டேன்.

பாலதீவு படகு விபத்திற்குப் பின்னர் மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையிலேயே பயணிகள் ஏற்றிச்செல்ல அனுமதி வழங்கப்பட்டது. எமது படகில் 32 பேரை அனுமதித்து அனுமதிப் பத்திரமும் தரப்பட்டது. அத்துடன், கச்சதீவுக்கு எடுத்துச்செல்லும் பொருட்களுக்கும் கட்டுப்பாடு இருந்தது. சுங்கப் பிரிவினரின் கடுமையான சோதனையின் பின்னரே பொருட்கள் எடுத்துச்செல்ல முடியும். பொதுவாக தேங்காய் எண்ணெய், சவர்க்காரங்கள் போன்றவற்றையே எடுத்துச் செல்வர். குறித்த தொகைக்கு மேல் ஒருவருக்கு அனுமதியில்லை. நகை எடுத்துச் செல்லத் தடை. இருப்பினும் மறைவாக எடுத்துச் செல்வதுண்டு.

காலையில் சோதனை முடித்து, பயணிகள் கணக்கிடப்பட்டு பூரணப்படுத்தப்பட்ட பத்திரம் தரப்பட்டதும் கச்சதீவு நோக்கிப் புறப்பட்டோம். அன்று காற்று சற்று வேகமாக இருந்தது. முகத்துவார வெளிச்சவீட்டை கடந்து மண்டைதீவு முனையைநோக்கிச் செல்கையில் காற்றின் வேகத்தால் படகு எழுந்து விழ, கடல் நீர் கோலி இறைக்க, பயணிகள் நனைந்தவாறே செல்லவேண்டியிருந்தது. மண்டைதீவு முனையைக் கடக்கும்வரை காற்றின், கடலில் அழுத்தம் அதிகமாக இருக்குமெனக் கூறப்பட்டபோதும், கச்சைதீவு செல்லும்வரை நனைந்த நிலைதான்.

முன்னரென்றால் எனக்கு வாந்தி முந்திக்கொண்டு வந்துவிடும். இப்போது வாந்தி வாரமை மனதுக்கு ஆறுதலாக இருந்தது. இருந்தாலும் கடல்

பயணத்தில் போதிய அனுபவமின்மையால் கரும் பச்சை நிறமான கடலாலும், வேகமான காற்றாலும் உள்ளூரப் பயமாகவே இருந்தது. கடந்த ஆண்டு நிகழ்ந்த பாலதீவு விபத்து ஒருதடவை மனக்கண்ணில் தோன்றி மறைந்தது.

படகில் 'ஓடு கயிறு' எனப்படும் நீண்ட 'தங்கூசி'க் கயிற்றில் கட்டப் பட்டுள்ள 'மிதவைத் தூண்டிலி'ன் கயிற்று முனையை படகில் கட்டியபடி செலுத்தினார் படகோட்டி. 'மாதவமுனை'யைக் (புங்குடுதீவின் கிழக்கு முனை) கடந்து படகு சென்றுகொண்டிருக்கையில் அத்தூண்டலில் மீன் கொழுவிக்கொண்டதைக் கண்டு, படகின் வேகத்தைக் குறைத்து, தங்கூசியை இழுத்து தூண்டிலில் கொழுவிக் கிடந்த மீனை எடுத்தார். நான்கு அடிக்கு மேல் நீளமுள்ள 'கட்டாப்பாரை'யே சிக்குண்டது. மீனைக் கழற்றிவிட்டு முன்ன ரைப்போல் ஓடுகயிறைக் கட்டியபோதும் மீண்டும் மீன் சிக்கவில்லை.

கச்சதீவுக்கு அண்மையில் இலங்கைக் கடற்படைக் கப்பல்கள் இரண்டு நங்கூரமிட்டுக் கிடந்தன. நான்கு கடற்படைப் படகுகள், பயணிகளின் படகுகளை கண்காணித்தவாறு வட்டமிட்டுத் திரிந்தன. கச்சதீவு இலங்கைக்குச் சொந்தமான பின்னர் நாளடைவில் இலங்கை கடற்படையின் ஆளுமையே முனைப்புப் பெற்றிருந்தது.



கப்பலில் நின்ற படையினர் கொடியை அசைத்து அருகே வருமாறு அழைத்ததும், இயந்திரத்தின் வேகம் குறைக்கப்பட்டது. தண்டையல் படகை கப்பலுக்கு அண்மையாகச் செலுத்தினார். கடல் மட்டம் வரை இருந்த கப்பலின் படிகளில் நின்ற கடற்படை சிப்பாய் கயிற்றின் முனையை எமது படகை நோக்கி எறிந்தான். அதனைப் பற்றிக் கொண்ட படகோட்டி, படகில் இழுத்துக் கட்டியதும் கப்பலுடன் மருவியதாக படகு தரித்தது.

தண்டையலிடம் அனுமதிப் பத்திரத்தையும் பயணிகள் குறிப்பையும் பெற்று, பயணிகளைக் கணக்கிட்டனர். விபரங்களை பதிவு செய்துகொண்டு ஒரு பிரதியையும் அனுமதிப் பத்திரத்தையும் திருப்பித் தந்ததும், புறப்பட்ட படகு கச்சதீவுக் கரையை அடைந்தது. பாலதீவுக் கடல் போலன்று இக்கடல். ஆழமாகவும் கற்பாறை நிறைந்ததாகவும் இருந்தது. வேகமாக வீசிய சோழகக் காற்றை கச்சதீவு தடுத்ததால் சிரமமின்றி பயணிகள் பொருட்களுடன் படகிலிருந்து இறங்கிக்கொண்டனர்.

உயர்ந்த, மூடப்பட்ட பரல்கள் பலவற்றில் நன்நீர் கொண்டு வரப்பட்டதால் அவற்றைப் பாதுகாப்பாக இறக்கிக்கொண்டதும் காற்றின் பாதிப்பற்ற பகுதிக்கு படகைக் கொண்டுசென்று நங்கூரமிட்டனர். சாதாரணமாக ஆறு மணித்தியாலங்களால் வந்திருக்கவேண்டிய கச்சதீவுக்கு இன்று ஒன்பது

மணித்தியாலங்களுக்கும் கூடுதலான நேரத்தை எடுத்தது. களைப்புற்ற நிலையிலே அனைவரும் இருந்தோம்.

உயர்ந்த மரங்கள் காணப்படவில்லை. சில பகுதிகளில் பற்றைகளும் சில பகுதி தரவை நிலமுமாகக் காணப்பட்டது. கடற்கரையோரம் காணப் பட்ட வெண்மணல் கலவையான தரையிலேயே பலரும் விடுதி அடைத்தி ருந்தனர். ஆண்கள் தறப்பாள்கொண்டு விடுதி போட, பெண்களும் சிறுவர்களும் புனித அந்தோனியார் ஆலயத்திற்கு வழிபடச் சென்றனர்.

ஓடுகயிற்றுத் தூண்டிலில் சிக்குண்ட மீனை வெட்டிப் பங்கிட்டு உறவினர் நண்பர்களுக்குப் பகிர்ந்து கொடுத்து, தாமும் இரவுணவுக்காக கறியைத் தயார் செய்தனர். தொடர்ந்து பண்டமாற்றுச் செய்வதற்காக தாம் கொண்டுவந்த பொருள்கள் சிலவற்றுடன் புறப்பட்டுச் செல்ல நானும் அவர்களைத் தொடர்ந்து சென்றேன்.

ஆலயத்துக்குப் பின்புறம் கடைகள் சில போடப்பட்டிருந்த பரந்த தரைப் பகுதியில் இந்திய - இலங்கைப் பயணிகள் செறிவாகக் காணப்பட்டனர். கடைகளில் 'பெற்ரோமைக்ஸ்' ஒளிதர, பயணிகள் கூடுமிடத்தில் மின்னொளி இடையிடையே தெரிந்தது. தனித்தனியாகவும் குழுமமாகவும் பொருட் களைக் காண்பித்து பண்டமாற்றுக்குப் பேரம் பேசுவதை ஆங்காங்கு காணக்கூடியதாக இருந்தது.

பண்டமாற்றுக்குப் பொருட்களைப் பெறும் அதேவேளை, தங்க நகைகளை இந்தியப் பணத்திற்கு விற்பனை செய்வதையும், அப்பணத்தைக் கொண்டு பொருட்களை கொள்வனவு செய்வதையும் பார்க்கக்கூடியதாக இருந்தது. சிறிய பெட்டிக் கடைகளில் தயிர்ச்சாதம் விற்பனை செய்யும் இந்தியப் பயணிகளிடம் பலரும் வாங்கி அருந்தினர். கச்சைதீவின் காலநிலைக்கு ஏற்ற உணவு இதுவெனப் பேசிக் கொண்டனர்.

பயணிகள் புறப்படும் இறுதிநாள் வரை இந்த நிலை தொடரும் என அறிந்தேன். இறுதிநாளில் மேலும் பலர் இந்தியாவிலிருந்து வருவார்கள். அவர்களிடம் பொருட்களை மலிவாகக் கொள்வனவு செய்யவோ, பண்டமாற்று செய்யவோ முடியுமென நம்பியதால் சிலர் இறுதி நாளுக்காகக் காத்திருந்தனர்.

இந்தியா அண்மையிலே இருப்பதால் அதனைக் கண்காணிக்க, ஆங்கிலேயர் காலத்தில் பயன்படுத்தப்பட்ட காவலரணும், கம்பிகளாலான 'கோரி'யும் (இரும்புப் சட்டங்களாலான கோபுரம்) சிதைவுற்ற நிலையில் தீவின் கிழக்கு முனையில் இருக்கின்றன. அவ்விடம் பாறையும் உயரமான மண் குவியலாக, கட்டடச் சிதைவுகளுடன் காணப்பட்டது. சிதைவுற்ற படிகள் வழியாக ஏறி கட்டடத்தின் மேற்தளம் வரை செல்லமுடியும். மேற்தளத்தில் நின்று பார்த்தபோது தெற்குப்பக்கம் இராமேஸ்வரப் (இந்தியா) பகுதியை நுட்பமாக இனங்காண முடிந்தது. வடக்குப் பக்கமுள்ள நெடுந்தீவைவிட அண்மையாய்த் தெரிந்தது இராமேஸ்வரம்.

தீவின் வடக்குப் பக்கம் இலங்கைப் பயணிகளின் படகுகள் தரித்து நிற்பதைப்போல் தீவின் தெற்குப்பக்கம் இந்தியப் பயணிகளின் படகுகள் தரித்து நிற்கின்றன. வடக்குப் பக்க கடற்கரையை அண்மித்திருக்கும் ஆலயத்திலிருந்து தெற்குப் பக்கக் கடற்கரை வரை மணல் பாதை உண்டு. திரளான மக்கள் அப்பாதையால் சென்று தெற்குப் பக்கத்தால் தெரியும் இந்தியக் கரையின் காட்சியைப் பார்த்து மகிழ்வர்.

கடற்கரையுடன் பாதை இணையுமிடத்தில் கடலை நோக்கி வளைவான மண்மேடு நீண்டு காணப்படுகிறது. கடல் நீர் வழமையவிட பெருகும்போது பெரும்பாலும் மாரி காலங்களில் மட்டும் அம்மண் மேட்டை நீர் முடிவிடும். ஏனைய நாட்களில் வெண்மணலாகக் காணப்படும் அப்பிட்டியில் கடல்நீரால் தள்ளிவரப்பட்ட பல வர்ணங்களிலான சிப்பிகள், பலவகை அமைப்புகள் நிறங்களில் ஊரிகள், சிறியதும் பெரியதுமான சங்குகள் எனப் பல கடல் பொருட்கள் பரவிக் கிடந்தன. அங்கு சென்ற பயணிகள் அவற்றைச் சேகரித்துக் கொண்டனர்.

நானும் வேறு சிலரும் இணைந்து அங்கிருந்து கடலோரமாக தீவைச் சுற்றிப் பார்த்துவரப் புறப்பட்டோம். கடல் நீர் வற்றியிருந்தது. தீவின் கிழக்குப் பக்க காவற்கோபுரக் கடற் பகுதி முனை ஐம்பது மீற்றர் வரை கற்பாறையாய் பரந்திருந்ததால் சம தரைபோல் தெரிந்தது. ஒரு சாணைவிடக் குறைவான உயரத்தில் சில இடங்களில் நீர் தெரிந்தது. இந்தப் பாறை காரணமாக படகுகள் எதுவும் முனையை நெருங்கி வரமுடியாது. நாங்கள் அப்பாறை மேலாக நடந்து ஆழமான கடல் பகுதியின் எல்லைவரை சென்று திரும்பினோம். முனைப் பகுதியைத் தவிர தீவைச் சுற்றிக் கரையோரம் ஆழமான கடலாகவும், கடலடியில் பாறைகளாகவும், சில பகுதிகளில் கரையோரம் உயர்ந்த பாறைகளாகவும் இருந்தன. கடலில் குளிப்பதற்கேற்ற வாய்ப்பான கடற்பகுதி காணப்படவில்லை. இருந்தாலும் குளித்தோம்.

ஞாயிற்றுக்கிழமை திருப்பலி முடிந்ததும் கொள்வனவு பண்டமாற்றுச் செய்த பொருட்களுடன் படகிலேறிக்கொண்டோம். காற்று சீராக இருந்ததால் எல்லோர்க்கும் மகிழ்வு. கடற்படைக் கப்பலோரம் மறிக்கப்பட்டு அனுமதிப் பத்திரத்தில் உள்ளவாறு ஆட்கள் இருப்பதைக் கணக்கிட்டு திருப்தியடைந்த பின்னர் செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

பொருட்கள் கொள்வனவு செய்ததுபற்றி கடற்படையினருக்கு எவ்வித ஆட்சேபனையும் இருக்கவில்லை. குருநகர் இறங்குதுறையில்தான் சுங்கப் பிரிவினரின் கண்காணிப்புக்கு உட்படுத்தப்படுமென்பதால் பொருட்களைப் பகிர்ந்து வைத்திருக்க ஏற்பாடு செய்தனர். நான் இரண்டு 'சாரம்'கள், ஒரு நாலுமுள வேட்டி, 'பொண்ட சூட்கேஸ்' போன்றவை மட்டுமே கொள்வனவு செய்திருந்தபடியால் என்னிடமும் சில பொருட்கள் தரப்பட்டது. எந்தப் பிரச்சினையுமின்றி குருநகர் இறங்குறையிலிருந்து வெளியேறினோம்.

சில ஆண்டுகளின் பின்னர் மீண்டுமொருமுறை கச்சதீவுக்குப் பயணம்

செய்திருந்தேன். அவ்வேளை, இப்போது எதிர்கொண்ட பிரச்சினைகள் மாற்றமின்றி இருந்தன. ஆனால், உலகிலே அம்மை நோய் இல்லா தொழிக்கப்பட்ட காரணத்தால் அம்மைப்பால் ஏற்றுதல் மட்டும் நிறுத்தப் பட்டிருந்தது.

திருநாள் அல்லாத நாள்களில் இரண்டு தடவைகள் படகில் சென்று வந்துள்ளேன். அதற்கு முன்னனுமதி பெறவேண்டிய அவசியமோ, பாதுகாப்பு கெடுபிடியோ இருக்கவில்லை. அங்கு நான் சந்தித்த இந்திய தொழிலாளர் வந்து செல்வதற்கும் பிரச்சினை இல்லையென்று கூறினார்கள்.

ஆழமான கடலாக, தூரமான இடமாக இருந்தபோதும் பயணங்களில் பெற்ற அனுபவத்தை மீட்டுப் பார்க்கையில் மகிழ்ச்சியாகவே இருந்தது.

கற்கடதீவு

'கற்கடதீவு', குருநகர் இறங்குதுறையிலிருந்து 34 கி.மீ. தூரத்தி லுள்ளதும், ஆழமான கடலில் இருப்பதுமான சிறியதொரு தீவாகும். 'காக்கேர தீவு' என்றும் பதிவிலுள்ளது. பாலதீவுக் கடற் பகுதியாலேயே கற்கடதீவுக்குச் செல்லவேண்டும். கச்சதீவு திருநாளுக்கு அடுத்துவரும் ஞாயிற்றுக்கிழமை அன்று அங்கு புனித அந்தோனியார் திருநாள் நடைபெறுகின்றது. பாலைதீவு மற்றும் கச்சத்தீவு திருநாளுக்கு வருகைதரும் பக்தர்கள் போலல்லாமல் மிகக் குறைந்த பக்தர்களையே காணமுடியும். எந்த அடிப்படை வசதிகளுமற்ற, பெயருக்கேற்றாற்போல் கற்பாறைகள் நிறைந்த ஆழ் கடல் சூழ்ந்த தீவு என்பதால் செல்ல விரும்புவது குறைவு.

குருநகர் இறங்குதுறையிலிருந்து புறப்பட்டு பி.ப. 3.00 மணிக்கு கற்கடதீவை அடைந்தோம். காற்று சீராக இருந்ததால் வெயிலின் அகோரம் தாங்க முடியவில்லை. அங்கு தொழிலாளர் தமக்கெனப் போடப்பட்டிருந்த பெரியதொரு கொட்டில்தான் ஆதரவாக இருந்தது.

சிறிய தீவாக இருப்பதால், புனித அந்தோனியார் சிற்றாலயம் அமைந்திருக்கும் சற்று மேடான பகுதியிலிருந்து சூழவுள்ள பகுதியையும், கடலைப் பார்த்து இரசிக்கக் கூடியதாக இருந்தது. சிறிய பற்றைகளும், பூண்டுகளும் காணப்பட்டன. சிற்றாலயத்தின் முன்பக்க சுற்றாடல் மட்டும் வெண்மணலாவும் பற்றைகளற்றும் இருந்தது.

கிழக்கு - மேற்கை முனைகளாகக் கொண்ட முட்டை வடிவிலான தீவின் வடக்குப் பக்கம் பாறைகள் நிறைந்த பகுதியாகும். இடையிடையே முளைத்த கற்களைப்போல உயர்ந்து தெரிந்தன தனித்தனி பாறைகள். அந்தப் பகுதியில் ஆட்கள் நடமாட்டம் இருந்ததற்கான அறிகுறியில்லை. கடற் கரையும் பாறைகளால் நிறைந்திருந்தது.

கிழக்குப் பக்கம் கடலில் பாறைகள் மேற்தெரியாவிட்டாலும் கடலடி நிலம் கருமையாகத் தெரிந்ததால் பரந்த கற்பாறை கடலடியில் இருப்பதை உணர்த்தியது. மேற்குப் பக்க முனையில் முன்று ஆழ்கடல் 'சிறகுவலை'கள்

(பொறிவலை) காணப்பட்டன. அப்பகுதி உயரமற்ற பாறையாய் இருந்த தனால், கரைக்கு சற்றுத் தூரத்தில் கடலில் பாறையின் பகுதி உடைக்கப்பட்டு அங்கே சிறகுவலைகள் பாயப்பட்டுள்ளன. மூன்று குடும்பத்தினர் இணைந்தே இத்தொழில் செய்கின்றார்கள்.

தீவின் அமைப்பால், மேற்கு முனை கடுமையான நீரோட்டத்தை கொண்டது. அதனால் அங்கு உள்ள சிறகுவலைகளில் மீன்கள் தாராளமாகக் கிடைக்கும். தீவின் ஏனைய பகுதிகளில் இவ்வாறாக மீன்கள் கிடைக் காமையால் அங்கு சிறகுவலைகள் பாய்வது குறைவு. இடையிடையே சிலர் பாய்வதுண்டு. முனையில் சோழகக் காற்றுக் காலங்களில் தொழில் செய்ய முடியாதென்பதால் ஆறு மாதங்கள்தான் அங்கு தொழில் செய்ய முடியும்.

தெற்குப் பக்கம், தீவின் பாதித் தூரம் வரை வெண்மணலும் ஊரியுமாக கடற்கரை இருந்தது. ஆழமான கடலாக இருந்தபோதிலும் கரையை அண்டிய கடலினடியில் தெரிந்த வெண்மணல் குளிக்கும் ஆவலைத் தூண்டவே செய்தது. அரை மணித்தியாலம் வரை கடலில் நீந்தி மூழ்கி கரையேறினோம். சிறகுவலைத் தொழிலாளர்கள் தமது வள்ளம், மற்றும் இயந்திரப் படகைக் கட்டுவதும், கொட்டில் போட்டுத் தங்கியிருப்பதும் இக்கரைப் பக்கம்தான்.

இருளாகும் நேரம் சில படகுகளில் பக்தர்கள் வந்திறங்கினர். குருவானவரும் வந்திருந்தார். இயந்திரம் மூலம் மின்னொளி ஏற்றப்பட்டது. இரவு வழிபாடு முடிந்த பின்னர் குருநகர் நாட்டுக்கூத்துக் கலைஞர்களால் 'தேவசகாயம்பிள்ளை' கூத்துப் பாடப்பட்டது. காலையில் திருப்பலி மற்றும் ஊர்வலத்துடன் திருவிழா முடிவுற்றதும் வழங்கப்பட்ட விருந்துச்சோறு பக்தர்களுக்கு பேருதவியாக இருந்தது. சிறிது நேரத்தால் பக்தர்கள் புறப்பட்டுச் செல்ல, தீவு வெறுமையாகியது. நாமும் புறப்பட்டோம்.

மீண்டுமொருமுறை தொழிலாளரோடு இணைந்து கற்கடதீவில் செய்யப்படும் சிறகுவலை முறையைப் பார்வையிடுவதற்காக அங்கு சென்றேன். முதல் நாள் பி.ப. 4.00 மணிக்கு தீவை அடைந்து, கடலில் குளித்து, இரவு கொட்டிலில் தங்கிக்கொண்டேன். அதிகாலை ஒரு மணியளவில் சிறகுவலையிலுள்ள மீன்களை சேகரிக்க வள்ளத்தில் புறப்பட் டனர். நானும் இணைந்து கொண்டேன். வள்ளம் வலையை அடைந்ததும் 'ரோச்லைற்'றின் ஒளியில் சிறைப்பட்டிருந்த மீன்களைப் பார்த்தேன். என் கண்களையே நம்ப முடியாமல் மூடி மூடி விழித்தேன். 'பட்டி' என அழைக்கப்படும் சிறகுவலை யின் பிரதான 'பொறி' பூராவும் 'சீலா' மீன்களால் நிறைந்திருந்தது. அனைத்தும் உயிரோடு நின்றன. 'கடிப்புவலை' (பட்டியில் நிற்கும் மீன்களை சேகரிப்பதற்காக கம்புகளில் பொருத்தப்பட்ட வலை)கொண்டு மீன்களைச் சேகரித்து வள்ளத்தில் ஏற்றினர். பெரிய வள்ளத்தில் பாதிக்கு மேற்பட்ட உயரத்தில் மீன்கள் பரவிக்கிடந்தன.

தொடர்ந்து ஏனைய இரண்டு வலைகளிலுள்ள மீன்களைச் சேகரிக்கச் சென்றனர். அந்த வலைகளில் இவ்வளவு தொகையான மீன்கள் இருக்கவில்லை.

முன்னையதின் மூன்றிலொரு பகுதி மீன்தான் இரண்டு வலைகளிலும் கிடைத்தன. வள்ளத்தில் சேகரிக்கப்பட்ட மீன்கள் இயந்திரப் படகிற்கு மாற்றப்பட்டதும் உடனேயே குருநகர் நோக்கிப் புறப்பட்டோம்.

நெடுந்தீவு

யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு தென் மேற்கில் அமைந்துள்ள தீவுக் கூட்டங்களில் ஒன்று 'நெடுந்தீவு'. ஒல்லாந்தர் இதனை 'டெல்வ்ற்' (*Delft*) என்றே அழைத்தனர். இப்போதும் இப்பெயர் வழக்கிலுள்ளது. தொல்லியல் வரலாற்றுப் பாரம்பரியம் கொண்ட இத்தீவு, விவசாயம், கால்நடை, கடல் வளங்களுடன் உள்ளது. இதனால்தான் வரலாற்றுக்கு முற்பட்ட காலம்முதல் நெடுந்தீவு, தலைத்தீவு, பசுந்தீவு, அபிசேகத்தீவு, தயிர்த்தீவு போன்ற பெயர்களால் அழைக்கப்பட்டுள்ளன. ஆயினும் நெடுந்தீவு என்ற பெயரே நிலைத்து நிற்கின்றது.

கிழக்கு மேற்காக 8 கி.மீ. நீளத்தையும் வடக்குத் தெற்காக 6 கி.மீ. அகலத்தையும் 30 கி.மீ. சுற்றளவையும் கொண்ட சரிந்த இணைகர அமைப்பில் காணப்படுகின்றது. யாழ்ப்பாணக் குடாநாட்டிலிருந்து நெடுந்தொலைவில் இருப்பதனாலோ, தீவுக்கூட்டங்களில் நெடும் (நீளமான) தீவாக இருப்பதனாலோ 'நெடுந்தீவு' எனப்பெயர் பெற்றிருக்கலாமெனக் கருதப்படுகிறது.

அந்நியரின் ஆதிக்கத்துக்கு முன்னர் தனி இராசதானியாக விளங்கிய இத்தீவின் வடமேற்குப் பகுதியிலுள்ள 'கோட்டைக்காடு' என்னுமிடத்தில் 'வெடியரசன்' கோட்டை அமைத்து நல்லாட்சி புரிந்துள்ளான். இக்கோட்டை சிதைந்த நிலையில் (கல்மேடாக) காணப்படுகின்றது.

யாழ்ப்பாணத்திற்கு 45 கி.மீ. தூரத்திலும் புங்குடுதீவிற்கு 10 கி.மீ. தூரத்திலும் நெடுந்தீவு உள்ளது. நெடுந்தீவுக்குச் செல்வதாயின் யாழ்ப்பாணத் திலிருந்து புங்குடுதீவு 'குறிகட்டுவன்' வரை பேருந்திலும், அங்கிருந்து 'லோஞ்சி'யிலும் (பயணிகள் படகு), குருநகர் இறங்குதுறையிலிருந்து குறுக்காகப் படகிலும் செல்லலாம். 1977, 1978களில் படகிலும் லோஞ்சியிலும் பயணம் செய்துள்ளேன்.

நெடுந்தீவிலிருந்து இந்தியா 'இராமேஸ்வரம்' 38 கி.மீ. தொலைவில் உள்ளது. புங்குடுதீவு வரையுள்ள தீவுகள் யாழ்ப்பாணத்துடன் தரைப்பாதை யால் இணைக்கப்படாமல் தனித் தீவுகளாக இருந்த காரணத்தால் போக்கு வரத்தின் இலகுநிலையைக் கருத்திற்கொண்டு ஒல்லாந்தரின் ஆட்சிக்கால முற்பகுதி வரை நெடுந்தீவிலிருந்து இந்தியா வரையான போக்குவரத்து அதிகமாக இருந்தது. இந்த போக்குவரத்துக்காக 'பெரியதுறை' பயன்படுத்தப் பட்டதாக அறியப்படுகிறது.

படகில் சென்றபோது தீவின் தெற்குப் பக்கம் பெரியதுறைக்கு அண்மையிலுள்ள 'வெல்லை' என்ற இடத்திலே இறங்கினேன். இதனை 'வெல்லாத்துறை' என்றும் அழைப்பர். கற்பாறைகள் நிறைந்த கடற்கரை

யாகவே இருந்தது அந்தப் பகுதி. பொதுவாக தீவின் பெரும்பாலான கரையோரம் கற்பாறையே. படகை கரைக்கு கொண்டுசெல்ல முடியாது என்பதால் படகிலிருந்து சிறிய கட்டுமரத்தின் மூலம் கரை சென்றேன். தரை ஊரிகலந்த வெண்மணலாக இருந்தது

கடற்கரையோரம் புனித அந்தோனியார் சிற்றாலயம் இருந்தது. குடியிருப்புகளும் காணப்பட்டன. கடற்றொழிலாளரின் மீன் வாடிகளும் இருந்தன. நான் சென்ற தேவையின் நிமித்தம் அன்றைய பொழுதை அங்கே கழிக்கவேண்டியிருந்தது. வெயிலின் தாக்கம் கடுமையாக இருந்ததால் வெளியே சென்றுவர விரும்பாமல் அங்கேயே தங்கிவிட்டேன். ஓலைக்குடில் வெயிலின் தாக்கத்தை குறைத்தது. அங்கிருந்து பார்த்தபோது கண்ணுக் கெட்டிய தூரம்வரை வெளியாகவும் உயரமற்ற சுவர்களாகவும் தெரிந்தன. சற்றுத் தூரத்தில்தான் மரங்கள் தெரிந்தன.

வானொலி கேட்பதே அங்குள்ள பலரது பொழுதுபோக்கு. பி.ப. ஒலிபரப்பாகும் இனிமையான திரைப்படப் பாடல்கள், 'அப்துல் ஹமீட்'டின் 'பாட்டுக்குப் பாட்டு' நிகழ்ச்சி களைக் கேட்பதில் மிகவும் ஆர்வம் காட்டினார்கள் நானும் அங்கு இருந்தவர்களுடன் இணைந்து கொண்டேன்.


மாவிலித்துறை

வெயிலின் தாக்கம் குறைந்த நேரத்தில் சற்றுத் தூரம் நடந்து சுற்றாடலைப் பார்வையிடச் சென்றேன். முருகைக்கல் தரையாக இருந்தது அந்தப்பகுதி. அதனாலேதான் இத்தனை அகோரமா? என்று எண்ணத் தோன்றியது. தொடராக பல காணிகள் இருந்தன. அவற்றின் எல்லைச் சுவர் மூன்று அடி உயரத்திற்கு முருகைக் கற்கள் கொண்டு அடுக்கப்பட்டிருந்தது. சீமேந்தோ அல்லது வேறொரு கலவையையோ பயன்படுத்தி ஒட்டாமல் இவ்வளவு செம்மையாக இருந்த சுவர்களைப் பார்த்தும் ஆச்சரிய மடைந்தேன். அருகே சென்று கல்களைத் தூக்கியும் அசைத்தும் பார்த்து சந்தேகத் தைத் தீர்த்துக் கொண்டேன்.

அந்தக் காணிகளில் காலபோக விவசாயம் செய்யப்படுவதாக தென்பட்டது. குதிரைகள், கோவேறு கழுதைகள் தன்னிச்சையாக மேய்வதை யும் சுவர்களைக் கடந்து பாய்ந்து ஓடித்திரிவதைப் பார்க்கையில் மகிழ்ச்சியாக இருந்தது. சிறுவயதில் மரண ஊர்வலத்திற்குப் பயன்படுத்திய குதிரை வண்டி லில் குதிரையைக் கண்டபோதிருந்த மகிழ்வை அடைந்தேன்.

இக்குதிரைகளும், கோவேறு கழுதைகளும் ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் கப்பல் மூலம் கொண்டுவரப்பட்டு வளர்க்கப்பட்டவையாகும்.

தொடர்ந்து பிரித்தானியர் ஆட்சிக்காலத்தின்போது நன்கு பராமரிக்கப்பட்டு வளர்க்கப்பட்டன.

மறுநாள் காலை நான் வந்த நோக்கம் நிறைவேறியதும், 'லோஞ்சி' யில் யாழ்ப்பாணம் வருவதற்கு ஆயத்தமானேன். 'மாவலி' என்னும் ஊரிலுள்ள 'மாவலித் துறைமுகத்'திலேயே லோஞ்சி புறப்படும் என்பதால் அங்கு செல்லவேண்டும். வாகன வசதி எதுவும் இருக்கவில்லை. "கொஞ்சத் தூரம்தான் நடந்துபோகலாம்" என அங்கிருந்தவர்கள் கூறியதற்கிணங்க நானும் நடக்கத் தொடங்கினேன். பாதி தூரம் கடந்தபின் களைப்பு மிகுதி யானபோதுதான் தார்ப்பரியம் புரிந்தது.

வெயிலின் நேரடித் தாக்கம், கல் தரையில் மோதி மேலெழும் அகோரம், மரங்களற்ற வெட்டவெளி, கல் தரையில் 'லான்ட் மாஸ்ரர்' சென்று வந்த அடையாளத்தை மட்டும்கொண்ட பாதை எனக்கு அனுபவமற்ற பயணமாக இருந்ததால் பெரிதும் சங்கடமாக இருந்தது. இருப்பினும் யாழ்ப் பாணம் செல்லவேண்டுமே என்பதால் நடந்தேன்.

இடையிடையே மரங்கள் வளர்ந்துள்ள பகுதிக்கு வந்ததும் அங்கு தரித்து சற்று ஓய்வெடுத்துப் புறப்பட்டேன். அந்தப் பகுதியில் ஒரு பெரிய மரம் காணப்பட்டது. இதுவரை கண்டிராத சுற்றளவையும் கிளைகளையும் கொண்ட பாரிய மரமது. அம்மரத்திலுள்ள துளையால் உள்ளே சென்று பார்த் தால் குகைபோன்ற அமைப்பில் காணப்பட்டது. ஏழெட்டுப் பேர் நிற்கலாம் போலிருந்தது. இம்மரம் போர்த்துக்கேயர் காலத்தில் நடப்பட்ட 'பெருக்கம் மரம்' என்று அறிந்தேன். பின்நாளில் இதே போன்ற பெருக்கம் மரத்தை மன்னார் 'பள்ளிமுனை'யில் பராமரிப்புடன் நிற்கக் கண்டேன்.

ஒருவாறாக 'மாவலித் துறைமுகத்தை' அடைந்தேன் 'மாவிலித் துறைமுகம்' என்றும் அழைத்தனர். கிட்டத்தட்ட 300 அடி நீளமும் 60 அடி அகலமுமாகக் காணப்பட்டது. ஒல்லாந்தர் காலத்தில் தங்களது நீரூர்தி (கப்பல்) பயணத் தேவைக்காகக் கட்டப்பட்ட இத்துறைமுகம், தற்போது நெடுந்தீவு மக்களுக்கான பிரதான படகுத் துறையாக உள்ளது.


துறைமுகத்தில் ஒரு வெளிச்ச வீடு காணப்பட்டது. 30 அடி உயரம் வரை மூன்று உருளைகள் ஒன்றின்மேல் ஒன்று வைக்கப்பட்டது போன்ற அமைப்பில் உயர்ந்து அதன் மேலே கூம்பு வடிவிலான முடியுடன் உள்ளது. நீரூர்திகளுக்கு அடையாளம் காண்பிப்பதற்காக ஒல்லாந்தரால் அமைக்கப் பட்டுள்ள இந்த வெளிச்ச வீட்டின் முடியில் இரவு நேரத்தில் தொடராய் ஒளி வெளித்தெரியும் என அறிந்தேன்.

உடல் அலுப்புடன், புறப்பட்டு வந்த அலுவல் நிறைவுற்ற திருப்தியில், சிலவற்றைப் பற்றி அறிந்த மனநிறைவுடன் 'லோஞ்சி'யில் எனது பயணத்தைத் தொடர்ந்தது.

மீண்டுமொரு தடவை மதியத்திற்குப் பின் கடற்தொழிலாளர் புறப்பட்ட படகிலேறி நெடுந்தீவு கிழக்குப் பக்க முனைக்குச் சென்றேன். கரை

கற்பாறையாக உயர்ந்து இருந்தபோதும் முனையின் வடக்குப் பக்கத்தால் படகை செலுத்தி கரையை அடையக்கூடிய வாய்ப்பு இருந்தது. தெளிவாக கண்ணாடி போல் தெரிந்தது கடலடியில் பாறை. இடையிடையே வெண்மையான தரைத் துண்டுகளும் தெரிந்தன. ஆழமான அந்தப் பகுதியில் பாய்ந்து நீந்த வேண்டுபோல தோன்றியது. கூட வந்தவர்களது சம்மதமில்லாமல் செய்ய விரும்பவில்லை.

படகுக்கு நங்கூரமிட்டுக் கட்டிய பின்னர் கரையேறினோம். கதிரோனின் மேற்குப் பக்கத் தாக்கம் குறைவாக இருந்தது. கடற்கரையிலிருந்து 50 அடிக்கு அப்பால் புங்கு (புங்கை) மரங்களே செறிவாக நின்றன. அங்கு சற்று இளைப்பாறிய பின்னர் இருள் சூழும்வரை ஆசை தீரக் கடலில் குளித்தேன். எடுத்துவரப்பட்ட உணவைச் சாப்பிட்டு கரையில் படுத்துக்கொண்டோம். காலையில் எழுந்து தேநீர் தயாரித்து எடுத்துவந்த 'பணிஸு'டன் சாப்பிட்ட பின்னர் படகு கச்சத்தீவை நோக்கிப் புறப்பட, நான் மாவலித் துறைமுகம் நோக்கிய பயணத்தை ஆரம்பித்தேன்.


பெருக்கம் மரம்

மணலும் கிறவலுமான பாதையால் நடந்து தார் வீதியை அடைந்தேன். அது பேரூந்து பாதையென்றாலும் பேருந்து வரத் தாமதமாகும் என்பதால் நடையைத் தொடர்ந்தேன். அந்தப் பகுதியெங்கும் குடியிருப்புகள் காணப்பட்டன. வீதியில் சந்திப்பவர்களிடம் மாவலித் துறையை கேட்டறிந்து அதன் படியே பயணித்தேன். அந்த வீதியின் ஓரம் இருந்த ஒரு வீட்டுக் காணியில் போடப்பட்டிருந்த குடிலினுள் தென்னம் குற்றியில் நால்வர் அமர்ந்து கள்ளு அருந்திக் கொண்டிருந்தனர். தாகமாய் இருந்ததால் எனக்கும் குடிக்க வேண்டும் போலிருந்தது. அவர் களை நெருங்கி "கள்ளு ஒரு போத்தல் எடுக்கலாமா?" எனக் கேட்டேன். உடனே அவர்களில் ஒருவன் கோபத்துடன் எழுந்து ஏசிய படி என்னை அடிக்க வந்தான். ஏனென்று புரியாமல் திரும்பிப் பார்க்காமலே விரைந்து நடந்தேன்.

மாவலித் துறைமுகத்தில் ஏற்கெனவே அறிமுகமான தபால் விநியோகஸ்தரைச் சந்தித்தேன். அவரிடம் நான் கள்ளு கேட்டபோது நடந்த விபரத்தைக் கூறியதும் சிரிப்புடன் அவர்; 'அவர்கள் கள்ளு விற்பதில்லையாம் தாமாக மரத்திலேறி இறக்கிவரும் கள்ளை தாங்களே பகிர்ந்து குடிப் பார்களாம். நான் கள்ளுத் தவறனை என்று நினைத்துக் கள்ளு கேட்டது அவர்களுக்குத் தப்பாகத் தோன்றியுள்ளது' என விபரித்தார்.

மேலும் தொடர்ந்த உரையாடலில், போர்த்துக்கேயர் நெடுந்தீவைக் கைப்பற்றும் முன்னர் ஆட்சிசெய்த 'வெடியரசன்' என்பவர் கட்டிய கிணறு கள் பல இருப்பதாக அறிந்திருந்ததால் அதுபற்றிக் அவரிடம் கேட்டேன். அக்கிணறுகள் பெரும்பாலும் சிதைவுற்றுக் காணப்படுவதாகவும் அவற்றில் சிலவற்றிலிருந்து நீர் கோலி எடுப்பது தொடர்வதாகவும் கூறிய அவர், அழைத்துச் சென்று காண்பிப்பதாகக் கேட்டார். எனக்கிருந்த களைப்பு மிகுதியால் அதை மறுத்து, நான் வந்த அலுவலைக் கூறியதும், சம்பந்தப் பட்டவரிடம் அழைத்துச் சென்றார். கடற்கரையோரம் போதிய வசதியற்ற ஓலை வீடாக இருந்தது அவரது வீடு. நான் எதிர்பார்த்து வந்த தேவை இலகுவாகவே நிறைவேறியது. அந்த மகிழ்வில் 'லோஞ்சி'யில் ஏறி குறிகட்டு வான் நோக்கிப் பயணித்தேன்.

மீண்டுமொருமுறை நெடுந்தீவு பயணத்தை மேற்கொண்டபோது நண்பனின் உதவியுடன் மாவலித்துறையிலிருந்து மேற்குநோக்கி பேருந்தில் பயணித்து வெடியரசன் கட்டிய கோட்டையின் சிதைவுகளையும், சிதைவுகள் இடையே நிமிர்ந்து நிற்கும் ஒல்லாந்தர் காலத்துப் புறாக் கூண்டையும் பார்வை யிட்டேன். இப்புறாக் கூண்டானது வெளிச்சவீட்டுக் கோபுரம்போல 20அடி உயரத்தில் சதுர வடிவில் அமைந்திருந்தது. நான்கு பக்கத்தாலும் புறாக்கள் உட்சென்று தங்கி வெளியேறுவதற்கான சதுர துவாரங்கள் பல காணப்பட்டன.

தொடர்ந்து சற்றுத் தொலைவிலிருந்த வெடியரசன் கட்டிய கிணறு களில் இரண்டைப் பார்வையிட்டேன். அங்கிருந்து கற்பாறைகள் நிறைந்த பனங்காணி முனைக்குச் சென்றேன். இது நெடுந்தீவின் மேற்குப்பக்க முனை. ஏனைய பகுதியைவிட சற்று உயரமாக இருந்தது. இரவில் இந்தியா / இராமேஸ்வர ஒளிக்கதிரை இங்கிருந்து பார்க்க முடியுமாம். ஆழமான அந்தக் கடற்பகுதியை முனையில் நின்று பார்க்க கண்ணுக்கு விருந்தாக இருந்தது. பயணத்தில் கிடைத்த மகிழ்வும் நிறைவாக இருந்தது.

'லோஞ்சி' பயணத்தில் 'குமுதினிப் படுகொலைகள்' என அழைக்கப் படும் 15.05.1985இல் நிகழ்ந்த 'குமுதினி'ப் படகுப் படுகொலைகள் மிலேச்சத் தனமான செயலாகும். இப்படுகொலை எனது கடல் கடந்த நாட்கள் - 01 நிகழ்ந்த காலப்பகுதியைக் கடந்தது எனினும் நெடுந்தீவு சார்ந்த முக்கிய நிகழ்வு என்பதால் இதனைத் தகவலாகப் பதிவு செய்கிறேன்.


நெடுந்தீவு, 'மாவலி'த்துறையிலிருந்து 'குறிகாட்டுவான்' துறை முகத்திற்கு பயணிகளை ஏற்றிச்சென்ற 'குமுதினிப் படகு', கடற்படையி னரால் வழிமறிக்கப்பட்டு அதில் பயணம் செய்தவர்களில் 'சுபாஜினி' என்ற 07 மாதக் குழந்தை முதல், 'தெய்வானை' என்ற 70 வயதுப் பெண் உட்பட 36 பேர் குத்தியும் வெட்டியும் கொல்லப்பட்டனர். ஏனையோர் படுகாயங் களுடன் மீட்கப்பட்டனர். இப்படகில் 94 பேர் பயணம் செய்ததாக 'பன்னாட்டு மன்னிப்பு அவை' அறிவித்திருந்தது.

இப்படுகொலைகள், 'நயினாதீவு கடற்படைத்தளத்தைத் சேர்ந்

தோரால் மேற்கொள்ளப்பட்டது' என பன்னாட்டு மன்னிப்பு அவை குற்றம்சாட்டி விரிவான அறிக்கை சமர்ப்பித்து, 'குற்றவாளிகள் அடையாளம் காணப்பட்டு, சட்டநடவடிக்கை எடுக்கும்படி' கூறிய வேளையில் இலங்கை அரசின் பாதுகாப்பு அமைச்சர் லலித் 'அத்துலத்முதலி', 'இக்குற்றத்தை யார் புரிந்தார்கள் என அறிவதற்கு எந்தவிதமான ஆதாரமும் இல்லை' என்றார். அதேவேளை எவ்வாறு நடந்தது, யாரால் மேற்கொள்ளப்பட்டது என்பதை விபரிக்கும் வகையில் பயணம் செய்து உயிர் தப்பியவர்களின் சாட்சியங்கள் பத்திரிகைகளில் வெளியானதை மறுப்பதற்கில்லை.

நயினாவு

யாழ்ப்பாணத்திலிருந்து தென்மேற்குத் திசையில் 36 கி.மீ. தூரத்தி லுள்ளது 'நயினாதீவு'. ஏழாற்றுப் பிரிவுச் சுற்றாடலில் கிழக்கே புங்குடு தீவையும் வடக்கே அனலதீவையும் கொண்டமைந்துள்ளது. சோழ, பாண்டிய அரசர்கள் முதல் பிரித்தானியர் வரை ஆட்சி புரிந்தவர்கள் முத்துக் குளித்தல், சங்கு குளித் தல் போன்ற தொழில்களுக்கு ஊக்குவித்து வந்ததால் இத் தொழில்கள் சிறப்புற்றி ருந்தன. இத்தீவுக்கு நேரடியாகத் தரைப் பாதை இல்லையென்பதால் புங்குடுதீவு குறிகாட்டுவான் சென்று அங்கிருந்து படகுகள் மூலமே செல்ல முடியும்.



நயினாதீவு, நாகதீபம் (சிங்கள மொழியில் நாகதீப) என அழைப்பர். முற் காலத்தில் நயினார்தீவு, நாகநயினார் தீவு, மணிநாகதீவு போன்ற பல பெயர்களிலும், ஒல்லாந்தரால் 'ஹர்லெம்' எனவும் அழைக்கப்பட்டது. இப்பெயர்கள் வழங்கப் பட காரணமாயிருந்த பல வாய்வழிவந்த கதைகள் நின்றுலாவுகின்றன. 'நயினார்தீவு' என அழைக்கப்பட்ட காலத்தில் அம்மன் கோயிலை 'நயினார் கோயில்' என்றும் அழைத்துள்ளனர்.

1620களில் நயினார் கோயில் போர்த்துக்கேயரால் தாக்கி அழிக்கப் பட்டவேளையில், அங்கு வாழ்ந்த நாகர் வழிவந்த மக்களில் பெரும்பாலா னோர் கோயிலைக் காக்கும் முயற்சியில் உயிரிழந்தார்கள். இன்றும் வாழும் 'வள்ளுவ சமூகத்தவர்கள்' எஞ்சிய நாகர்களில் நேரடிப் பிற்சந்ததியார் ஆவர். இவர்களே இத்தீவின் முதற் குடிகளாவர். வரலாற்று ரீதியாக தமிழர்களின் வாழ்விடமாகிய இத்தீவில் உள்ள 'நாகபூசணி அம்மன் கோயில்' வரலாற்றுச் சிறப்பு மிக்க கோயிலாகும். திருவிழாக் காலங்களில் இலங்கையின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் மக்கள் திரளாக வந்து கூடுவர்.


படகின் உள்ளிணை இயந்திரத்தின் உதிரிப்பாகம் ஒன்றை

நயினாதீவிலுள்ள இயந்திர உரிமையாளரிடம் பெற்றுக்கொள்ளும் நோக்கில், உரிமையாளருடன் யாழ்ப்பாணமிருந்து பேருந்தில் குறிகட்டுவான் வரை பயணித்து, அங்கிருந்து அவருக்குச் சொந்தமான வெளியிணை இயந்திரம் பூட்டப்பட்ட வள்ளத்தில் சென்று நயினாதீவின் வட கிழக்குப் பகுதியை வந்தடைந்தேன்.

வள்ளம் கட்டிவைக்கும் இடத்திலிருந்து நூறு மீற்றர் தூரத்தில் உரிமையாளரின் வீடு இருந்தது. அங்கு சென்றதும் உடலுக்கு இதமாக மோர் வழங்கப்பட்டது. அதை அருந்தி தாகத்தைத் தீர்த்துக் கொண்டதும் உதிரிப் பாகத்தைப் பெற்று பணம் செலுத்திப் பின்னர் நாகபூஷணி அம்மன் கோயிலைத் தரிசிக்கப் புறப்பட்டேன்.

தீவின் தென் கிழக்கே இஸ்லாமியர்களின் பள்ளிவாசல் உள்ளது. நேரத்தைக் கருத்தில் கொண்டு அங்கு செல்லாது மேற்குத் திசையிலுள்ள கோயிலைத் தேடி நடக்கத் தொடங்கினேன்.

நாகபூசணி அம்மன் கோயிலுக்கு அண்மையில் 'நாகவிகாரை' என்று அழைக்கப்படும் பௌத்த விகாரை இருந்தது. நாகவிகாரையை இலக்காகக் கொண்டு பௌத்தபிக்குகளின் வசிப்பிடமும் அங்கிருந்தது. இலங்கையிலுள்ள பௌத்த மதத்தினர் புத்த பெருமான் இந்தத் தீவுக்கு வருகை தந்ததாக நம்புகிறார்கள். இங்கு 'புத்த தாதுகோபம்' 1944ஆம் ஆண்டு கட்டப்பட்டதாக அறியப்படுகிறது. இதனைத் தரிசிக்க தென்பகுதி யாத்திரிகர்கள் அடிக்கடி வருவதுண்டு.



'மகாவம்சம்' நூலில் புத்தர் வாழ்ந்த காலத்தில் இலங்கையில் ஆட்சி புரிந்த இரண்டு நாக அரசர்களுக்கிடையில் ஒரு 'மணியாசன'த்தின் உரிமை தொடர்பாக ஏற்பட்ட பிணக்கை தீர்த்துவைப்பதற்காக புத்தர் நாகதீபத்துக்கு வந்ததாகக் கூறப்படுகிறது. இதே 'பிணக்கு யுத்தம்' 'மணிபல்லவத்'தில் இடம்பெற்றது என்று 'மணிமேகலை காப்பியம்' கூறுகிறது. நாகதீபம் - மணிபல்லவம் இரண்டையும் குறிக்கும் இடம் எது? என்ற சர்ச்சை முடிவற்றுத் தொடர்கிறது.

நாகவிகாரையைப் பார்வையிட்டுத் தொடர்ந்தேன். இடையில் 'அமுதசுரபி' எனப் பெயர் பொறித்த கட்டடம் இருந்தது. அங்கே நாகபூஷணி அம்மனைத் தரிசிக்கவரும் பக்தர்களுக்கு இலவசமாக உணவு வழங்கப்படுகிறது. அதனைக் கடந்து சென்று வரலாற்றுச் சிறப்புமிக்க நாகபூஷணி அம்மன் கோயிலை அடைந்தேன்.

திராவிட இனமாகிய தமிழர்களின் முன்னோர்களாக 'நாகர்' இனத்தவர் போற்றப்படுகின்றனர். நாகர்களின் முக்கிய வழிபாடாக காணப்பட்ட நாக வழிபாடு, ஈழத்தமிழர்களிடையேயும் இருந்துள்ளது என்பதற்கு அதன் எச்சங்களாக காணப்படும் வழிபாட்டு முறைகள், பெயர் சுட்டும் கோயில்கள், ஊர்ப்பெயர்கள் போன்றவை சான்றாக உள்ளன.

நாகர்களின் வழிபாட்டிடமாக இருந்து நாகபூசணி அம்மன் கோயிலாக மாற்றம் பெற்ற இடமே நயினாதீவு என்றும், நாகபூசணி அம்மன் கோயில் கருவறையிலுள்ள 'சீறும் ஐந்துதலை நாகச்சிலை' எண்ணாயிரம் ஆண்டுகள் வரை பழமையான தென்றும் அறியப்படுகிறது. பாம்பு - கருடன் போராட்டத்தின் விளைவாகவே இக்கோயில் அமைக்கப்பட்டது எனவும் வாய்வழிக் கதை உள்ளது. ஆனால், அது உண்மை என்பதுபோல் கடலில் காணப்படும் பாம்பு சுற்றிக் கல்லையும், கருடன் கல்லையும் மக்கள் தரிசிக்கின்றனர்.

கடற்கரையை நோக்கியவாறு அழகுற காட்சிதரும் முகப்புக்கு முன்னால் மணலும், நேராக படகுத்துறையும் உள்ளது. இது தினந்தினம் பல்லாயிரம் மக்களது படகுப் பயணத்துக்குப் பயன்படும் துறையாக இருக்கிறது. அத்தனை மக்களும் தரிசித்து பயனடைந்து செல்லும் அற்புதமான கோயிலாக நாகபூஷணி அம்மன் கோயில் விளங்குகிறது.

அழகான சிற்ப வேலைப்பாடுகளுடன் கூடிய முகப்புக் கோபுரமும், முகப்புக் கோபுரத்தின் முன்னால் பிரமாண்டமான நந்தியும், உள்வீதியில் வரிசையாக அமைக்கப்பட்டுள்ள நாயன்மார்களின் உருவச் சிலைகளும் தத்ரூபமாக விளங்குகின்றன. கோயிலைச் சுற்றி அதன் அழகை உள்வாங்கி அம்மனை வழிபட்டு மனநிறைவோடு, நிறைவான அனுபவத்தோடு குறி காட்டுவான் செல்வதற்கான படகில் ஏறிப் பயணத்தைத் தொடர்ந் தேன்.

எனது சிறுபராயம் முதல் கடல் கடந்த நாட்கள் - 02இனை ஆரம்பிக்கும் வரையான காலப்பகுதியில் பெற்ற பயண அனுபவங்களெனப் பலவற்றை வெளிக்கொணர்ந்துள்ளேன். இருந்தபோதிலும் அனுபவங்களில் எவையேனும் தவறவிடப்படவில்லை என்று சொல்வதற்கில்லை. திரும்பத் திரும்பச் சொல்லக்கூடாது என்பதனால் விடுபட்டவைகள் இல்லாமலுமில்லை. முடிந்தவரை முயற்சித்து வெளிக்கொண்டுவந்த மனநிறைவில் அடுத்த கடல் கடந்த நாட்களைத் தொடர்கிறேன். ■

கடல் கடந்த நாட்கள் – 02

திருத்தல தரிசிப்புப் பயணம்

அசாதாரண சூழலின் தோற்றம்

சுகந்தமான காலகட்டம் மெல்லமெல்லக் கரைந்து செல்லத் தொடங்கியதும், அசாதாரண சூழல் ஊற்றெடுத்துத் தரையை நனைக்கத் தொடங்கியதும், எதிர்பாராத நிகழ்வுகள் தோற்றம்பெறத் தொடங் கியதுமான 1979ஆம் ஆண்டில்தான் இலங்கைக்கு வெளியேயான 'கடல் கடந்த நாள்' 'திருத்தல தரிசிப்பாக' அமைந்தது.

1958ஆம் ஆண்டு வன்செயலால் ஊமைக்காயமடைந்த மக்களை, சத்தியாக்கிரகங்களை முறியடிக்க மேற்கொள்ளப்பட்ட வன்முறைகளால் துயருற்றிருந்த மக்களை, 1974ஆம் ஆண்டு நடைபெற்ற நான்காவது 'உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்'டின் இறுதிநாள் நிகழ்வு கிலி கொள்ளவே செய்தது.

'உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டு' நிகழ்வில் வெள்ளப் பிரவா கம்போல இருந்த மக்கள், காவல்துறையினர் நடத்திய தாக்குதலால் கிலிகொண்டு சிதறி ஓடினர். வானம் நோக்கிய துப்பாக்கிப் பிரயோகத்தால் அறுந்த 'மின்சார வயர்' ஓடியவர்கள் மேல் விழுந்த அக்கணமே எட்டுப்பேர் துடிதுடித்து விழுந்தனர். ஒருவர் இடறுப்பட்டு வீழ்ந்து மாரடைப்பில் இறந்தார். இந்நிகழ்வானது தமிழர் மனங்களில் நீறுபூத்த நெருப்பானது.

ஒரு வாரமாக யாழ். சம்பத்தரிசியார் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற 'களியாட்ட விழாவில்' *(Carnival)*, 13.08.1977 சனிக்கிழமை மாலை நுழைவுச் சீட்டு இல்லாமல் நுழைய முனைந்த காவல்துறையினருக்கும் அங்கு பணியாற்றிய தமிழ் இளைஞர்களுக்கும் இடையில் ஏற்பட்ட வாக்கு வாதம் கைகலப்பாக மாறியது.

இராணுவத்துக்குத் தகவல் கிடைத்ததும், தாக்குதலுக்கு ஏதுவாக பலாலி இராணுவ முகாமிலிருந்து இராணுவத்தினர் தமது வாகனங்களில் யாழ்நகர் நோக்கி வந்துகொண்டிருந்தனர். இந்தத் தகவலை அறிந்த யாழ். அரச அதிபர் 'லயனல் பெனாண்டோ' அவர்கள், தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி விடுக்கப்பட்ட உத்தரவினால், யாழ்நகரின் மையப் பகுதியை இராணுவம் நெருங்கும் முன்னரே தடுத்து நிறுத்தப்பட்டு பலாலி முகாமுக்குத் திருப்பப் பட்டனர்.

இராணுவத்தினரின் தாக்குதலிலிருந்து மக்களைக் காப்பாற்றிய அரச அதிபர், மக்களின் மனங்களில் பெரிதும் இடம்பிடித்துக்கொண்டார். (1978இல்

இறந்த அவரது தாயாரின் இறுதி ஊர்வலத்தின்போது யாழ்நகரே திரண்டு, ஊர்வலத்தில் கலந்துகொண்டு தமது நன்றியை வெளிப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.)

யாழ்ப்பாணத்தில் நிகழவிருந்த பெரும் விபரீதம் அரச அதிபரினால் தடுக்கப்பட்டதாயினும், மூன்றாம் நாளில், தென்னிலங்கையில் இனக்கலவரம் என்னும் போர்வையிலான வன்செயல் ஆரம்பித்து, நாடுமுழுவதையும் மூழ்கடித்துச் சின்னாபின்னப்படுத்திக் கொண்டிருந்ததால் பல்லாயிரம் தமிழர்கள் சொல்லொண்ணாத் துன்பத்துக்கும், உயிர் - பொருட்சேதத்திற்கும் ஆளாகி அகதிகளானார்கள்.

"போர் என்றால் போர். சமாதானம் என்றால் சமாதானம்." என்ற இலங்கைப் பிரதமர் ஜே.ஆர்.ஜயவர்த்தனாவின் முழக்கமும்,

"யாழ்ப்பாணத்திலிருந்து புத்தபிக்குவை வெட்டி மீன் பெட்டிக்குள் ஐஸ்போட்டு அனுப்பியிருக்கிறாங்க", "சிங்களப் பெண்ணுகள வெட்டி பனை மரத்தில தொங்கப் போட்டிருக்கிறாங்க", "அங்கே ஒரு சிங்களவனும் மிச்ச மில்லை" என 'கலு அல்பேட்' போன்ற காடையர் கூட்டத் தலைவர்களின் பரப்புரைகளும் - வழிநடத்தல்களும், சில அமைச்சர்கள் கக்கிய வகுப்புவாதமும், வழங்கிய ஆசீர்வாதத்துடனும் வன்செயல் தென்னிலங்கையில் மலைநாடு உட்பட பல இடங்களிலும் கொழுந்து விட்டு எரிந்தது.



வன்செயல் நிகழ்ந்த இடங்களிலெல்லாம் இரத்த வாடையே வீசியது. கூட்டம் கூட்டமாக வந்த பெரும்பான்மை இனத்துக் காடையர்களால் நிகழ்த்தப்பட்ட வன்செயல்களால், சிறு குழந்தைகள் முதல் வயோதிபர் வரை வெட்டித் துண்டாடப்பட்டனர். நகரின் பல பகுதிகள் தீயில் எரிந்தன. கடைகள் பல கொள்ளையிடப்பட்டுத் தீவைக்கப்பட்டன. வீதிகளெங்கும் இரத்தக் காட்சிகள்... வன்செயலின் உச்சத்தின் சாட்சிகள்...

அயலிலுள்ள சிங்கள மக்களின் வீடுகளில் தஞ்சம் புகுந்த தமிழர்களையும் காடையர்கள் விட்டுவைக்கவில்லை. அவர்கள் வெளியேற்றப் பட்டுத் தாக்கப்பட்டதுடன் அவர்களது வீடுகளும் தீ வைக்கப்பட்டன... இதனால் இலங்கையின் தென் பகுதியிலிருந்து ஆயிரமாயிரம் தமிழர்கள் பல்வேறு முகாம்களில் தஞ்சம் புகுந்தனர். இராணுவப் பாதுகாப்புடனும் முகாமுக்குக் கொண்டுவரப்பட்டனர். வன்செயல் கட்டுப்படுத்தல் இல்லாமையால் காட்டுத்தீயாகப் பரவியிருந்தது...

வன்செயல் ஆரம்பித்தபோது (15.08.1977) நானும் குடும்பத் தினரும்

மன்னாரிலுள்ள 'மடுமாதா' ஆலயத்தில் தங்கியிருந்தோம். அன்று மடு அன்னையின் திருவிழா. திருவிழாத் திருப்பலி மற்றும் அன்னையின் ஊர்வலம் முடிந்து, இலங்கையின் பல பகுதிகளிலும் இருந்துவந்த மக்களில் பெரும் பாலானோர் மடுவிலிருந்து வெளியேறிய நிலையிலும், பலர் (நாம் உட்பட) இன்னமும் தங்கியிருந்தனர்.

கொழும்பில் ஆரம்பமான வன்செயல் பற்றிய தகவல் அன்று மாலைச் செய்தியின் பின்னர்தான் மடுத்திருப்பதியில் தங்கியிருந்தவர்களால் அறிய முடிந்தது. இரவு பூராவும் உறக்கமின்றித் தவித்த மக்களில் வாகனத்தை தம்முடன் வைத்திருந்தவர்கள், அதிகாலை புறப்படுவதற்கான ஆயத்தங்களை மேற்கொண்டனர். ஏனைய மக்கள் மறுநாள் விடியலை எதிர்பார்த்துக் காத்திருந்தனர் பேரூந்தில் செல்வதற்காய்.

15ஆம் திகதி யாழ்ப்பாணம் சென்ற பேரூந்துகளில் முதலில் புறப்பட்டுச் சென்ற பேரூந்தைத் தவிர ஏனையவை திரும்பி வரவில்லை. என அதிகாரிகள் தெரிவித்தனர். இதனால், யாழ்ப்பாணம் செல்லவிருந்த பயணிகளின் நிலை சங்கடமானது. திரும்பிவந்த பேரூந்தில் முண்டியடித்து ஏறியவர்களால் நிரம்பிட, அது புறப்பட்டது. ஏனையோர் செய்வதறியாது அந்த தற்காலிக பேரூந்து நிலையத்திலேயே தங்கிவிட்டனர். ஏனைய இடங்களுக்கான சேவைகள் வழமைபோல் நடைபெற்றன.

தொடருந்து சேவை இடம்பெற்றபோதும் அதனில் பயணித்தால் மதவாச்சியில் பலமணி நேரம் தங்கி நின்று கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வருகின்ற தொடருந்தில் ஏறியே யாழ்ப்பாணம் செல்லவேண்டும். இதனால், பயம் காரணமாக எவரும் செல்லத் துணியவில்லை. நாங்களும் வரும்போது தொடருந்திலே பயணித்திருந்தோம்.

இலங்கைப் போக்குவரத்துச் சபை அதிகாரியின் முயற்சியால் அனுராதபுரத்திலிருந்து சில பேரூந்துகள் தருவிக்கப்பட்டும், வேறு இடங்களுக்கான சேவைகள் சில குறைக்கப்பட்டும் யாழ்ப்பாணத்துக்கான சேவைக்குப் பயன்படுத்தப்பட்டது. இவற்றில் நெருக்கமாக என்றாலும் நாமும் பயணிக்கக்கூடியதாக இருந்தது.

அன்று சாயந்தரம் யாழ்ப்பாணம் வந்த பின்னர்தான் எம்மைப் பீடித்திருந்த பயம் நீங்கியது. யாழ்ப்பாணத்தில் இரவு ஊரடங்குச் சட்டம் அமுலிலிருந்தது. இரவில் வன்செயலால் இறந்த யாழ்ப்பாணத்தவர் சிலரது பெயர் விபரங்களை, உறவினர் அறிந்துகொள்வதற்காக ஒலிபெருக்கி ஊடாக காவல்துறையினர் அறிவிப்பை மேற்கொண்டனர்.

முடிவற்றுத் தொடர்ந்த வன்செயலின் பாதிப்பால் முகாம்களில் தஞ்சம் புகுந்த அகதிகளில் 1,200 பேர் எந்த அடிப்படை வசதியுமற்ற 'லங்காராணி' சரக்குக் கப்பலில் யாழ்ப்பாணத்திற்கு ஏற்றிவரப்பட்டனர்.

இலங்கை வரலாற்றில் கறையாகவும், எதிர்கால வரலாற்றின் அடிக் கோடாகவும் அமைந்ததாகப் பேசப்பட்ட, வன்செயலில் சிக்குண்டவர்களை

ஏற்றியவாறு காங்கேசன்துறைக்கு வருகைதந்த 'லங்காராணி' கப்பலின் கப்பலிலிருந்த அகதிகளை தோணிகளில் ஏற்றி கரைகொண்டுவரும் பணியில் நானும் இணைந்துகொண்டதில் ஆத்ம திருப்தி எனக்கு.

பயண ஆயத்தம்

திடீர் ஏற்பாடாக நானும் மேலும் மூவரும், புதுமை நிறைந்த ஆலயமாக கத்தோலிக்க மக்களால் பேசப்படும் இந்தியா / 'வேளாங்கண்ணி ஆலய'த்தை தரிசிக்கச் செல்லும் நோக்கில், வேறு தலங்களுக்கான யாத்திரைக்கு மாக புறப்பட ஆயத்தமானோம். இந்தியாவிலுள்ள பல தலங்களின் பிரசித்தம், அவை தொடர்பான தொன்மங்கள், அவற்றில் நிகழ்ந்த அற்புதங்கள் போன்ற வற்றை ஓரளவேனும் அறிந்திருந்ததால் இந்திய யாத்திரையை மேற்கொள் ளும் ஆவல் வெகுவாக இருந்தது. அத்துடன் சிறுவயது முதல் இலங்கையில் பல இடங்களிலுள்ள ஆலயங்கள் கோயில்களைத் தரிசிப்பதிலும் அவை பற்றி அறிய முயற்சிப்பதிலும் ஈடுபாடு இருந்ததால் அதுவும் உத்துதலாக இருந்தது.

பயணத்திற்கான முன்னேற்பாடாக யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி - மணிக்கூண்டுக் கோபுரச் சந்தியில் இருந்த முகவரூடாக கடவுச்சீட்டு மற்றும் இந்திய விசா போன்றவற்றைப் பெற்றுக்கொண்டோம். யாழ்ப்பாணம் - திருச்சி விமானசேவை தடைப்பட்ட பின்னர் தலைமன்னார் - இராமேஸ்வரத்துக்கான நீரூர்தி சேவையே தொடர்ந்து நடைபெற்றது. இப்பயணத்திற்கான பிரயாணச் செலவு குறைவாகவும் இருந்தது.

தோணியிலும், பின்னர் இயந்திரப் படகுகளிலும், யாழ். குடா நாட்டுத் தீவுகளில் நடைபெற்ற ஆலயத் திருவிழாக்களுக்குச் சென்றுவந்ததைத் தவிர வேறு கடற்பயணம் எதுவும் செய்ததில்லை. அப்போதெல்லாம் கடற் பயணம் மனதில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தவில்லை. பழகிய கடல் போன்ற உணர்வு, சுற்றங்கள் - உறவுகள் - நண்பர்கள் சூழ்ந்த பயணம் என்பதால் தென்பு இருந்தது. பயத்தை மறக்கக்கூடியதாகவும் இருந்தது.

இப்போது, கூடவே இருவர் வந்தார்களாயினும் ஏனையோர் அறிமுகமற்றவர்கள். பாரிய நீரூர்தியாக இருந்தபோதும் முன்னரெப்போதும் அறிந்திராத, ஆழமான, அதிக நீரோட்டத்தைக்கொண்ட கடற்பகுதியில் பிரயாணம் செய்ய முடிவெடுத்தது எனக்கே ஆச்சரியம்தான். நீந்தத் தெரியும் என்ற நம்பிக்கை துடுப்பாக, ஆறுதலாக என்னுள்ளத்தை நிறைத்திருந்தது.

25 ஆனி 1979இல் 'மடுமாதா' ஆலயத் திருவிழாவுக்கு குடும்பமாகச் சென்றிருந்தோம். ஆடி 02ஆம் திகதி நடைபெறவுள்ள அத்திருவிழாவுக்கு, பத்து நாட்களுக்கு முன்னரே குருநகர் மக்கள் சென்று 'விடுதி' அடைத்துத் தங்கிடத் தொடங்கிடுவர். திருவிழாக் காலங்களில் மக்களின் பாதுகாப்புக்கருதி அங்குள்ள குளத்தில் நீராடுவதற்கு அனுமதி மறுக்கப்பட்டு, தினமும் குறித்த நேரத்தில் பெரிய பல தொட்டிகளில் தொடராக நீர் நிறைக்கப்பட்டு, வாளிகளால் கோலி, நீராடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும். இதனால்,

தாம் நினைத்த நேரத்தில் விரும்பியவாறு நீராடுவதற்கென மடு வீதி - மன்னார் வீதி சந்திப்பிலிருந்து 200 யார் தூரத்தில் கருங்கல் பாறைகளின் மத்தியிலிருந்த குளத்தில் பலரும் நீராடச் செல்வது வழமை.

அவ்வாறே, நானும் மனைவியும் இரண்டு வயது நிரம்பாத மகனும் அக்குளத்திற்கு நீராடச் சென்றிருந்தோம். அந்தக் குளத்தின் மத்திய பகுதி மிக ஆழமானது. கரையோரங்களில் கற்கள் அகழ்ந்தெடுக்கப்பட்ட ஆழமான குழிகளும் ஆங்காங்கு உள்ளன. நீர் பெருகி நிற்கும் காலங்களில் குழிகளை நீர் மூடிவிடுவதால் அவற்றை இனங்காணுவது கடினமாகும். அன்றும் நீர் பெருகி நின்றது.

குருநகர் மக்கள்தான் அங்கு பெருமளவில் நீராட வருவதால் ஏற்கெனவே பலதடவைகள் அங்கு நீராடிச் சென்றவர்களின் அறிவுரையை அறிந்து வைத்திருந்து, குறித்த பகுதியில் மாத்திரம் பெண்கள், சிறுவர்கள், நீந்தத் தெரியாதவர்கள் கூட்டாக நீராடுவர். கரையிலிருந்து ஆழமான பகுதியை நோக்கி சரிவாகச் செல்லும் ஆழம் குறைந்த, அகலமற்ற, மார்பளவு நீர் வரை உள்ள பகுதியில் மனைவி உட்பட பலரும் நீராடிக் கொண்டிருந்தனர். பெரும்பாலானோர் பெண்களேயாவர்.

வேகமற்ற நீரோட்டமே அப்பகுதியில் காணப்பட்டது. மகனைக் கண்காணிக்கும் நோக்கில் அவர்களுக்கு அண்மையில் ஆழமான பகுதியில் நீந்தியவாறு நின்ற நான், பெண்களின் உரத்த குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தபோது ஒரு பெண் நீரினுள் மூழ்குவதைக் கண்டேன். அந்த இடத்தில் உதவிக்கு எவரும் இல்லாமையால் அவளைக் காப்பாற்றும் நோக்கில் விரைந்து நீந்திச்சென்று குறித்த இடத்தில் சுழியோடி பார்த்த பின்னர்தான் மூழ்கியது ஒரு பெண்ணல்ல என்பது தெரிந்தது.

பெரும் சிரமத்தின் மத்தியில், அரைநிலை நீரில் மூழ்கி தத்தளிப்பில் காணப்பட்ட மூன்று இளம் பெண்களையும் நடுத்தர வயதுள்ள ஒரு பெண்ணையும் ஒவ்வொருதராக மீட்டெடுத்து கரையில் சேர்த்தேன்.

அனுபவம் புதிதானது மட்டுல்ல, மூழ்கிய சுற்றாடலில் உள்ள ஆழமான குழியில் காணப்பட்ட குறுக்கு நீரோட்டத்தையும் எதிர்த்துச் சுழியோடித் தேடி, கண்டுபிடித்தவரை தலைமுடியைப் பிடித்து இழுத்துவந்து (மூழ்கித் தத்தளிப்பவர் கைகளில், காப்பாற்ற முனைபவர் சிக்கிக்கொண்டால் அவருக்கு பெரும் ஆபத்தாக முடியும். அதனால், தலைமுடியைப் பிடித்து இழுப்பதுதான் பாதுகாப்பானது) கரையில் சேர்த்துவிட்டு மீண்டும் மீண்டும் அவ்வாறே சுழியோடி, அதுவும் சில நிமிடங்களுக்குள் உடலை வருத்திச் செய்ததால் மிகவும் களைப்புற்று, இயலாமையால் அதிக மூச்சுவாங்க தரையில் அமர்ந்துவிட்டேன்.

'ஒரு பெண்ணைக் காணவில்லை' என்ற அழுகுரல், அந்நிலையிலும் தலைநிமிர்த்தி பார்க்கவைத்தது. களைப்பு மிகையாக இருந்தபோதும் அந்தக் கணத்தில் உசாரானேன். அந்தப் பெண்ணையும் காப்பாற்ற வேண்டிய

முனைப்பில், எனது இயலாமை நிலையிலும் திடீரென ஏற்பட்ட வேகத்தால், ஆழமான அக்குழியில் மீண்டும் இறங்கினேன்.

என்நிலை எனக்கும் மரணபயத்தை உண்டாக்கியது. இருந்தும் சுழியோடிச் சென்றபோது, மற்றவர்களைப் போலன்றி இப்பெண் நிலத் தடியில் கிடக்கக் கண்டேன். அவள் மயக்க நிலையில் கிடக்கிறாளென்பதை ஊகிப்பதில் எனக்கு சிரமமிருக்கவில்லை. நன்நீரில் மூழ்கும் உடல், கடல்நீரைப் போலன்றி விரைவாகவே நிலத்தடி சென்றுவிடும் என்பதை நான் அறிவேன்.

தலைமயிர்கள் மேல்நோக்கி நீரில் இழுபட்டு மிதந்தன. அவற்றை துரிதமாகப் பற்றிக்கொண்டேன். உடனேயே கிரகித்து, எவ்வாறு இதைச் செய்ய முனைந்தேனென்பது எனக்கே தெரியாது. விரைந்து இழுத்துவந்து கரையில் நின்றவர்களிடம் ஒப்படைத்துவிட்டு, இயலாமையால் தரையில் படுத்துவிட்டேன்.

அங்கு நின்றவர்கள் பெரும் பிரயத்தனத்துடன் செய்யப்பட்ட முதலுதவியால் சில மணித்துளிகளில் அப்பெண் நலமாக எழுந்தாள். என்னால் அவ்வளவு இலகுவாக இயல்பு நிலையை அடைய முடியவில்லை. இதயத் துடிப்பு வேகமாகவே இருந்தது...

பாடசாலையில் கல்விகற்ற நாட்களில் சாரணர் இயக்கத்தில் இணைந்து பணியாற்றிய அனுபவமும், 'எப்போதும் தயாராய் இரு' என்னும் சாரணியத்தின் தாரக மந்திரமும், குருநகர் 'ஜெற்றி'யில் (இறங்கு துறை) இடையிடையே குதித்து நீந்தி விளையாடிய மற்றும் பயணித்த தீவுகளில் நீந்தக் கிடைத்த வாய்ப்புகளில் பெற்ற அனுபவமுமே இன்று இத்துணிவு ஏற்பட காரணமெனலாம்.

ஒருவர் மீதொருவர் மாறிமாறி தண்ணீரைக் கைகளால் அடித்து விளையாடிக் கொண்டிருந்த இளம் பெண்களில் நால்வர், விளையாட்டில் தம்மை மறந்து நீராடவேண்டிய இடத்திலிருந்து விலகியோடி, ஒருவர் பின் ஒருவராய் ஆழமான குழியில் வீழ்ந்து விட்டனர். துடிப்புடன் கைகொடுக்க முயன்ற அப்பெண்களில் இருவரினது தாயும் குழிக்குள் வீழ்ந்துவிட்டாள் என்பதை அங்கு நிகழ்ந்த நிகழ்வாக பின்னர் அறிந்து கொண்டேன். இது மறக்கமுடியாத ஒன்றாக என்னுள் இருந்து உந்துதலை தந்தது.

இந்தியாவில் விற்பனை செய்வதற்கென சாதிக்காய் பூ, கராம்பு, கறுவா போன்றவை தலா இரண்டேகால் இறாத்தல், ஒரு டசின் ராணி சோப், இரண்டு பி.சீ.சி.பார் சோப், 6 போத்தல் கொள்ளளவில் தகரத்திலான பி.சீ.சி. தேங்காய் எண்ணெய், இரண்டு 'மொண்டியா' கைக்கடிகாரங்கள் போன்ற பொருட் களையும் கொள்வனவு செய்திருந்தோம்.

தலைமன்னாரிலிருந்து இராமேஸ்வரம் வரை 'நீரூர்தி'யில் சென்று திரும்புவதற்கான பயணச்சிட்டை யாழ்ப்பாண தொடருந்து நிலையத்தில் பெற்றுக்கொள்ளக்கூடிய நடைமுறை இருந்தமை எமக்கு இலகுவாக இருந்தது. தேவையான பயணச்சிட்டையைப் பெற்றுக்கொண்டோம்.

பயணம்

20.09.1979 அன்று தலைமன்னார் நோக்கி பேருந்தில் இந்தியா / வேளாங்கண்ணி ஆலயத் தரிசிப்புக்கான பயணத்தை ஆரம்பித்தோம். தலைமன்னாருக்கு யாழ்ப்பாணத்திலிருந்து நேரடியான தொடருந்து சேவை இல்லை. யாழ்ப்பாணத்திலிருந்து மதவாச்சி சென்று, அங்கு பலமணி நேரம் காத்திருந்து, கொழும்பிலிருந்து வருகைதரும் தொடருந்தில் ஏறியே தலைமன்னார் செல்லமுடியும். இது நேரவிரயம் என்பதாலும், தொடருந்தில் வரக்கூடிய பயணிகளுக்கு முன்னரே நாம் அங்கு சென்றுவிடலாம் என்பதாலும் பேருந்தில் பயணிக்க முடிவு செய்தோம்.

மதியத்துக்கு முன்னர் புறப்பட்ட பேருந்து தலைமன்னார் தொடருந்து நிலையத்தைச் சென்றடைய சாயந்தரமாகிவிட்டது. தொடருந்து நிலைய மேடையில் குறைந்தளவிலான பயணிகள் பொதிகளுடன் வரிசையாய் இருந்தனர். அவற்றின் தொடராக எமது பொதிகளையும் வைத்துவிட்டு, அங்கிருந்தவர்களிடம் கண்காணிக்குமாறு கேட்டுக்கொண்டு வெளியே வந்தோம். சாயந்தரமாகியும் வெயிலின் அகோரம் குறைந்தபாடாயில்லை. செருப்புப் போட்டிருந்தும் தரையில் கால் வைக்க மணலின் அனல் கடுமையாகத் தாக்கியது.

கடற்கரையுடன் இணைந்துள்ள தலைமன்னார் தரைப்பகுதி பற்றைகளும் வெண் மணலுமாகக் காணப்பட்டது. கடற்றொழிலாளர் பலர் 'வாடி' (கொட்டில்) அமைத்து அங்கு தங்கித் தொழில் செய்து வருகிறார்கள். சோளகக்காற்று காலங்களில் யாழ்ப்பாணம் மற்றும் பல ஊர்களிலிருந்தும் இங்குவந்து தங்கியிருந்து தொழில்செய்வது வழமை.

நிரந்தரமாக மக்கள் வசிக்கும் வீடுகளையோ, வாகனப் போக்கு வரத்தையோ அச்சுற்றாடலில் காணமுடியவில்லை. கடற்றொழிலாளர்கள் தாம் பிடிக்கும் மீன்களை வெட்டிக் கருவாடாக உரலப்போடும் வேலையைச் செய்வதைக் காணக்கூடியதாக இருந்தது. அண்மையில் இருந்த வாடியைச் சென்று பார்வையிட்டோம். தொழிலாளர் தங்குவதற்கும், வலைகளை வைப்பதற்கும், சமைப்பதற்கும் வசதியாக வாடி அமைந்திருந்தது. தென்னோலைக் 'கிடுகு'இனால் வேயப்பட்டு, சுற்றுப்புறம் அடைக்கப்பட்டிருந்தது. கிடுகினாலான கதவும் இருந்தது.

'இலையான்'கள் (ஈ) அங்குதான் உற்பத்தியாகின்றன போலும். பார்க்குமிடமெல்லாம் அதுகளே. இலையானைப் பற்றி நாம் கதைத்தபோது அங்கிருந்த தொழிலாளி சொன்னவை வேடிக்கையாக இருந்தது. 'தாம் கறி காய்ச்சுவதற்கு தேங்காய் துருவினால், துருவலில் பால் பிளிந்தால் இன்னொருவர் கூடவேயிருந்து விசிறியால் விசிக்கியவாறே இருக்க வேண்டுமாம். அல்லது தேங்காய்த் துருவல் மற்றும் பிளிந்து போடும் துருவல் தெரியாதாம் இலையான்களால் மூடப்பட்டு விடுமாம்.' அவ்வளவுக்கு அங்கு இலையான்களின் அட்டகாசம்.

தொழிலாளரிடமிருந்து விடைபெற்று கடற்கரையோர வெண் மணலில் நின்று பரந்து விரிந்த கடலைப் பார்த்து மகிழ்ந்தோம். ஆழமான கடல் என்பதை பார்த்ததும் கிரகிக்கக் கூடியதாக இருந்தது. தொழிலுக்குத் தொடராய்ப் புறப்பட்டுச் செல்லும் படகுகளின் காட்சி மனதைக் கவர்ந்தது

10 யார் தூரத்துக்கு அப்பால் ஆழம் என்பதால் கடலுக்குள் இறங்க வேண்டாமென்றும் தொழிலாளர் கூறினர். 'கரைமோதித் திரும்பும் பாரிய அலைகளின் இழுவையால் ஆழமான பகுதிவரை இழுபட்டுச்செல்ல நேரிடும்' எனவும் அறிவுறுத்தினர். எழுந்துவரும் பாரிய அலைகளை அப்போதுதான் கவனித்தோம். இதுபோன்ற அலைகளை நான் முதலில் சந்தித்திருந்தாலும் அப்போதைய சூழலால் பயம் தொற்றிக்கொள்ள அங்கிருந்து அகன்றோம்.

கடற்கரையை அண்மித்ததாக சீமேந்தால் கட்டப்பட்ட ஒரு பொதுக் கிணறு காணப்பட்டது. நீர் கோலுவதற்கு வாளி ஒன்றை வாடியில் பெற்று அக்கிணற்றில் உடம்பைக் கழுவிக்கொண்டோம்.

தொடருந்து நிலையத்தின் முன்பக்க ஓரமாக தகரங்கள் கொண்டு போடப்பட்ட தேநீரகம் ஒன்று காணப்பட்டதால் அங்கு சென்றோம். தேநீரகத்தின் உள்ளே இரண்டு மேசைகளும் வாங்குகளும் வெளியே நிழல் தட்டியின் கீழ் இரண்டு வாங்கு களும் போடப்பட்டிருந்தன. அங்கு சொற்ப உணவுகளே விற்பனைக்கிருந்தன. இரவுக் கான உணவை நாம் கூடவே எடுத்து வந்ததால் அதுபற்றி அக்கறைப்படாமல் தேநீர் அருந்தினோம்.


சிதைவுற்ற தலைமன்னார் துறைமுகம்

தொடருந்து நிலையத்துடன் இணைந்ததாகவே குடிவரவு குடியகல்வு பிரிவும் சுங்கப்பிரிவும் இருந்தன. தொடருந்துப் பாதை, தொடருந்து நிலையத் தையும் கடந்து கடலினுள்ளே 100 யார் வரை உள்ள தாம்போதியில் நீண்டுள்ளது. அதுவே நீரூர்தி தரித்துநிற்கும் துறையாகும்.

தொடருந்து நிலையத்தில் நீண்ட வரிசையில் இருந்தவர்களுடன் இணைந்து, அவ்விடத்திலேயே தங்கி, உறங்கியும் உறங்காத நிலையில் படுத் திருந்தோம். எமது கவனமெல்லாம் நாங்கள் கொண்டு வந்த பொதிகளி லிருந்தது. அதிகாலை கொழும்பு தொடருந்து வந்து தரித்ததும் பெருந்தொகை யில் பயணிகள் வந்திறங்கினர். ஏற்கெனவே எமக்கு முன்னால் இருந்த வரிசையைவிட மூன்று மடங்கு நீளமாக மாறியது வரிசை.

விடிந்ததும் பொதிகள் அப்படியே இருக்க எழுந்து சென்றனர். நாமும் அவ்வாறே சென்று பலரையும்போல் கடற்கரையில் காலைக்கடனைக் கழித்து. பொதுக்கிணற்றில் உடலைக் கழுவி, தேநீர்க் கடையில் காலை உணவாகக்

'கல்பணிஸ்' சாப்பிட்டு, தேநீர் அருந்தி மீண்டும் வரிசையில் வந்தமர்ந்து கொண்டோம்.

காலை 8.00 மணிக்கு குடிவரவு குடியகல்வு பிரிவு, சுங்கப்பிரிவு அலுவலகங்கள் திறக்கப்பட்டதும் பயணிகள் தொடராக உள்ளே சென்றனர். அவர்களைத் தொடர்ந்து நாமும் தனித்தனியாக கரும பீடத்திற்குச் சென்றோம். குடிவரவு குடியகல்வு பிரிவில் சிரமமிருக்கவில்லை. சுங்கப்பிரிவில் பொருட்கள் சோதனை நடைபெற்றது.

நான் கொண்டுவந்த பொருள்களில் எண்ணெயைத் தவிர ஏனைய வற்றை அனுமதித்தார்கள். இரண்டு போத்தல் எண்ணெய்தான் ஒருவர் கொண்டுபோக முடியுமாம். எமக்கு இது முன்னர் தெரியாது. 'எண்ணெய்ரின்'னை இங்கேயே வைத்துவிட்டுத் திரும்பி வரும்போது 'பாஸ்போட்'டைக் காண்பித்துப் பெற்றுக்கொள்ளும்படி கூறி ஒரு அறையில் அதனை வைத்து விட்டார்கள்.

எண்ணெய் கொண்டுசெல்ல முடியாத வேதனையுடன் சுங்கப்பிரிவை விட்டு வெளியேறினோம். தாம்போதியின் மேலாகப் போடப்பட்டுள்ள தொடருந்து இரும்புப் பாதையைத் தாங்கும் மரக்கட்டைகளின் மேலாக பரவப்பட்டிருந்த பலகைகள் மீது பொதிகளுடன் நடந்து நீரூர்தியில் ஏறிக்கொண்டோம்.

நீரூர்தியில் இருக்கைகள் இருக்கவில்லை. அது ஒரு சரக்கு நீரூர்தி. முன்தளத்தில் சில வாங்குகள் இருந்தன. அவை பயணிகளால் நிறைந்திருந்தன. நீரூர்தியின் மேல் தளத்தில் விரிக்கப்பட்டிருந்த 'படங்கின்' மேல் பயணிகளுடன் பயணிகளாக நாங்களும் அமர்ந்து கொண்டோம்.

அயல் நாட்டுக்கான புதிய பயணம், ஆழமான கடல், கிட்டத்தட்ட 27 மைல் தூரத்தைக் கடக்கவேண்டும். என்னுடன் கூடவந்தவர்களிடம் எந்த பிரதிபலிப்பும் இல்லாதுவிடினும் எனக்கு சற்றுப் பயமாகவே இருந்தது. இதயம் வழமையைவிட வேகமாகவே துடித்தது. ஒருவாறாக சமாளித்துக் கொண்டு எதுவும் பேசாது கடலையே வெறித்துப் பார்த்தவாறிருந்த நான், சிறிது நேரத்தால் சாதாரணமாகிவிட்டேன்.

ஏற்கெனவே இந்தியாவின் ஆளுமைக்கு உட்பட்ட கச்சைதீவுக்கு 1962இல் சென்றுவந்தபோதும் அது இளவயதுப் பயணமாக மறக்கப்பட்டு, முதன்முறையாக வேற்று நாடான இந்தியாவுக்குச் செல்லும் சந்தோஷம் என்னை ஆட்கொண்டதே இந்த மாற்றத்திற்கான காரணம்.

மறைத்து வைத்திருந்த 'டொலர்' உறுத்திக்கொண்டிருந்ததால் இடையிடையே தொட்டுப் பார்த்துக்கொண்டேன்.

சற்று நேரத்தால் தலைமன்னார் துறையைவிட்டு அகன்ற நீரூர்தி, பயணத்தைத் தொடர்ந்தது இந்தியாவை நோக்கி...

இந்தியா (பாரதநாடு)

(1979)



பாரதநாடு, இந்திய துணைக் கண்டத்தின் பெரும்பகுதியை அடக்கியுள்ளதும் தெற்காசியாவிலுள்ள ஒரு குடியரசு நாடுமாகும். பாரதத்திற்கு 'இந்தியா' என்ற பெயர் சிந்துநதியின் பெயரிலிருந்து பெறப்பட்டது. இதன் எல்லைப் பகுதிகளாக தெற்கே இந்தியப் பெருங்கடல், மேற்கே அரபிக்கடல் - பாக்கிஸ்தான், கிழக்கே வங்காள விரிகுடா - வங்காளதேசம் - மியான்மர், வடக்கே பூட்டான் - மக்கள் சீனக் குடியரசு - நேபாளம் போன்றவற்றைக் கொண்டுள்ளது. இமயமலைத் தொடர்கள், இந்து - கங்கை சமவெளி, தார் பாலை வனம், தக்கணப் பீடபூமி போன்றவையும் கங்கை மற்றும் பிரமபுத்திரா போன்ற முக்கிய ஆறுகளுடன் பத்துக்கும் மேற்பட்ட பிரபலமான ஆறுகளும் இயற்கையாக அமைந்த பல துறைமுகங்களும் உள்ளடங்குகின்றன.

உலகின் மிகப்பெரிய குடியரசு நாடாகத் திகழும் இந்தியா, பரப்பளவில் ஏழாவது இடத்திலும், மக்கள் தொகையில் இரண்டாவது இடத்திலும், இராணுவ பலத்தில் மூன்றாம் இடத்திலும் உள்ளது. இந்திய நாகரிகம் பண்டைய நாகரிகங்களில் ஒன்றாக விளங்குகிறது. சிந்து சமவெளி நாகரிகமும். இந்து, புத்தம், சமணம், சீக்கியம் போன்ற சமயங்களும் இங்கே தோன்றியவைகளாகும்.

ஏறத்தாள 600 மாவட்டங்களையும், தெலுங்கானா தவிர்த்து 28 மாநிலங்களையும் 07 ஒன்றியப் (Union) பிரதேசங்களையும் கொண்ட கூட்டமைப்பு ஆகும். ஒன்றியப் பிரதேசங்களில் 'பாண்டிச்சேரி' மற்றும் 'டில்லி' மட்டுமே சட்டசபைகளை அமைத்துக்கொள்ளும் உரிமையைப் பெற்றுள்ளன. இக்கூட்டமைப்பு அதிகாரபூர்வமாக 'இந்திய சமூகவுடமை, சமய சார்பற்ற, மக்களாட்சிக் குடியரசு' என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியா, பொருளாதாரம் மற்றும் பல்துறைகளில் சிறப்புற மிளிர்ந்த போதும் சமனற்ற பொருளாதாரப் பகிர்வே காணப்படுகிறது. 35% மக்கள் வறுமைக்கோட்டின் கீழும் 40% மக்கள் எழுத வாசிக்கத் தெரியாதவர்களாகவும் இருக்கின்றனர்.

இலங்கையிலிருந்து தமிழர்கள் பெரும்பாலும் தமிழ்நாடு மற்றும் கேரளா மாநிலங்களுக்கே பயணிகளாகச் செல்வார்கள். அங்குள்ளவர்களின் கலாசாரம் எம்மவருடன் இணைந்து காணப்படுவதாலும், இலகுவாகக் காரியமாற்றக்கூடிய தன்மை இருப்பதாலும், பிரசித்த வணக்கத்தலங்கள் - வரலாற்று சிறப்புகள் கணிசமாக இருப்பதாலும் விருப்புடன் செல்ல முனைகின்றனர்.

இலங்கைத் தமிழர்கள் தென்னிந்தியத் தமிழர்களை தொப்பிள்கொடி உறவெனவே கூறுகின்றனர். இதற்கு, நான் ஆரம்பத்தில் குறிப்பிட்டுள்ள தைப்போல முன்பொரு காலத்தில் இலங்கையின் வடபகுதியுடன் இந்தியா தரைவழியாய்த் தொடர்புபட்டிருந்தமையும் வரலாற்று ரீதியாக இந்திய தமிழ் மன்னர்கள், அவர்களின் வாரிசுகளது ஆட்சிக்குட்பட்டதாக இலங்கையின் பகுதிகள் இருந்ததுமே காரணமாகும்.

இலங்கை/ தலைமன்னார் பழைய பாலத்திலிருந்து இந்தியா/ தனுஸ்கோடி முனை வரை ஆங்காங்கு மணற்திட்டியாக நீண்டு காணப்படும், 'தீடை' எனப் பலராலும், குறிப்பாகக் கடற்றொழிலாளரால் அழைக்கப்படும் 'இராமர் அணை', 'குமரிக்கண்ட' அழிவின் எச்சமாக இருப்பதாக ஆய்வாளர் கள் கருதும் அவ்வேளை, சீதையை மீட்க இராமர் இலங்கைக்குப் படையெ டுத்துச் சென்றபோது கடலைக் கடப்பதற்கு வானரப் படைகளால் போடப் பட்ட பாதை என இராமாயணம் கூறுகிறது.

பாக்கு நீரிணையை ஊடறுத்து இருப்பதால் நீரிணையின் இருபக்க வேகமான நீரோட்டத்தையும் எதிர்கொள்கிறது இராமர் அணை . நீரோட்டம் குறைவாக உள்ளதும், ஆழம் குறைந்த கரையை அண்டியதுமான பகுதிகள் மணற்திட்டிகளாகவும் நீரோட்டம் அதிகரித்துக் காணப்படும் பகுதியில் கடல் மட்டத்தைவிடப் பதிவாகவும் இருக்கின்றது. இருப்பினும் கடல் 'வடு' (வற்று) காணும் நேரத்தில் இராமர் அணையின் சில பகுதிகள் சற்று உயரமாகவும் இடையிடையே துண்டாடப்பட்டும் இருப்பதைக் காணமுடியும்.

அணையை ஊடறுத்து நீரூர்திகளோ பாரிய படகுகளோ பயணம் செய்ய இயலாது. கடல் 'வெள்ளம்' (பெருக்கு) காணும் நேரத்தில் துண்டாடப் பட்ட பகுதியை இனங்கண்டு அதனூடாக சிறிய, சாதாரண படகுகள் பயணம் செய்ய முடியும்.

சரக்கு நீரூர்திப் பயணம்


எனக்குள் துளிர்விட்ட பயம் சாதாரணமாகியபோதும், நீரூர்தி அசைவின்றி சாதாரண வேகத்தில் பயணித்ததை பார்த்ததும் முற்றாக அடங்கிக்கொண்டது. அப்போது காற்று குறைவாக இருந்ததும் நீரூர்தியின் அமைதியான பயணத்திற்கு ஒரு காரணம்.

நீரூர்தி பயணிக்கும் பாதையில் இடது பக்கம் (தெற்கு) தெரிந்த 'இராமர் அணை'யின் ஆரம்பப் பகுதிகளும், வலது பக்கம் (வடக்கு) தெரிந்த

பரந்த கடலும், தலைமன்னார் கடற்கரையின் அழகும் கண்ணுக்கு விருந்தாகிட இரசிப்பில் மூழ்கிவிட்டேன் அனைத்தையும் மறந்து.

தெளிவாய்த் தெரிந்த இராமர் அணையைத் தொடர்ந்து பார்த்தவாறு செல்வதற்கு ஏதுவாக நீரூர்தியின் பயணம் அமைந்தமை மனதுக்கு மகிழ்வாக இருந்தது. பயண நேரம் இரண்டு மணித்தியாலத்தைக் கடந்தும் நேரம் போனதே தெரியாமல் அமர்ந்திருந்தேன். என்னுடன் கூடவந்தவரில் ஒருவர், "இதுதான் அழிஞ்சரை" என்று வெண்மணல் குவியலாகத் தெரிந்த கரையைக் காட்டினார். அதுமுதல் என் கண்கள் அந்தக் கரையையே சுற்றிச் சுற்றி வந்தன.

'அழிஞ்சகரை' என தற்போது அழைக்கப்படும் 'தனுஸ்கோடி' இராமர் அணையின் எல்லையாக இருப்பதுடன், நீண்ட காலமாக தலை மன்னாரிலிருந்து நீரூர்தி சேவை அதுவரையே நடைபெற்றும் வந்தது. 1964 மார்கழி 23 அன்று இரவு வீசிய புயலின் பின்னர் அது தடைப்பட்டு இராமேஸ் வரத்திற்கு மாற்றம் செய்யப்பட்டது. அந்தக் கோரப் புயலின் உக்கிரத்திற்கு அடையாளமாய், 'அழிஞ்சகரை'யாய்க் காணப்படும் புராதன நகரான 'தனுஸ்கோடி'யை அண்டிய பகுதியால் நீரூர்தி சென்ற போது அதன் நிலையைப் பார்த்து மனதுக்குள் நொந்து கொண்டேன்.



அந்தப் புயலினால் 5,000 வீடுகள், 700 மீன்பிடிப் படகுகள் அழிக்கப்பட்டு பல நூறு பேர் கொல்லப்பட்டனர். அங்கு வாழ்ந்த கால்நடைகள் அனைத்தும் அழிக்கப்பட்டன. செழிப்பாய் வளர்ந்திருந்த திரளான தென்னை மரங்கள் உட்பட பல்வேறு மரங்களும் வேருடன் பெயர்க்கப்பட்டு தூக்கி எறியப்பட்டன. தொடருந்துப் பாதை சிதறியும், புரட்டப்பட்டும் விட்டன. மணல் அரிப்பால் அந்த நகரின் இருப்பும், செழிப்பும் கேள்விக்குறியானது. மக்கள் வாழமுடியாத நகரமாகவும் மாறிவிட்டது.

பாம்பன் தீவு (இராமேஸ்வரம்) தனுஸ்கோடிக்குத் தெற்குப் பக்க தீவாக இருந்தபோதும் அதன் புவியியல் அமைப்பு காரணமாக பெரும் சேதத் தைச் சந்திக்கவில்லை. அப்புயல் இலங்கையையும் தாக்கியது. தனுஷ்கோடி யைப்போல கோரமான விளைவுகள் இல்லையாயினும் இலங்கையைத் தாக்கிய மோசமான புயல்களில் ஒன்றாகக் கணிக்கப்பட்டது. சூறைக்காற்றின் உந்துதலால் தலைமன்னாரில் நங்கூரமிடப்பட்டிருந்த 'இராமானுஜம்' என்னும் பயணிகள் நீரூர்தி கட்டறுந்து தரைமேல் ஏறிச் சரிந்து கிடந்தமை குறிப்பிடத்தக்கது.

அப்புயலால் யாழ் குடாநாட்டுப் பகுதிகளே பெரும்பாலும் பாதிக்கப்

பட்டன. அப்பகுதி கடற்றொழிலாளர்கள் பலர் உயிரிழக்கவும் தொழில் வளங்கள் அழியவும் இப்புயல் காரணமானது. பெரிதும் பாதிக்கப்பட்ட ஊர்களில் குருநகரும் ஒன்றாகும்.

இந்த விபரங்களை முன்னர் அறிந்திருந்தபோதும் இன்று தனுஸ்கோடி நகரின் காட்சிகளை தெளிவாகப் பார்க்கக்கூடியதாக இருந்தமை வேதனையிலும் மனநிறைவைத் தரக்கூடியதாகவே இருந்தது. சிந்தனையில் மூழ்கியிருந்த நான், நீரூர்தி இராமேஸ்வரக் கடற்கரையை வந்தடைந்ததும் சுதாரித்து எழுந்தேன்.

இராமநாதபுரம் மாவட்டம்

இராமேஸ்வரம்

இராமேஸ்வரம், தமிழ்நாடு மாநிலத்தில், இராமநாதபுரம் மாவட்டத்தில், பாம்பன் தீவில் இருக்கும் ஒரு நகராட்சி ஆகும். இப் பாம்பன் தீவைச் சுற்றி தீவுகள் பல உள்ளன.

வங்காளவிரிகுடாவில் பாக்குநீரிணையை உடறுத்து, இராமேஸ்வரத்திலிருந்து இந்திய பெருநிலப் பரப்புப் பகுதியான மண்டபம் வரை 2.3 கி.மீ. நீளங்கொண்ட 'பாம்பன் தொடருந்து தரைவழிப் பாலம்' 1914 இல் கட்டிமுடிக்கப்பட்டது. (தற்போது வாகனத் தரைவழிப் பாலம் தொடருந்து தரைவழிப் பாலத்திற்கு அருகாமை கட்டப்பட்டுள்ளது)

இந்தத் தொடருந்து தரைவழிப் பாலம், இராமேஸ்வரத்தையும் இந்தியாவின் ஏனைய பகுதிகளையும் இணைக்கும் ஒரேயொரு தரைவழிப் பாலமென்பதால் போக்குவரத்துக்காக தொடருந்து சேவை மட்டும்தான் இடம்பெறுகிறது. இந்திய பெருநிலப்பரப்பிலிருந்து உணவு மற்றும் பாவனைப் பொருட்களை ஏற்றி வருவதற்கும், இராமேஸ்வரத்திலுள்ள உற்பத்தி மற்றும் கடலுணவுகளை ஏற்றிச் செல்வதற்கும், மக்கள் பயணிப்பதற்கும் இதைவிட வேறு மார்க்கமில்லை

இங்கு கப்பல் துறைமுகம், சுங்க அலுவலகம், நகராட்சி அலுவலகம் போன்றவை இயங்குகின்றன. கணிசமான மக்கள் வசிக்கின்றார்கள். மீன்பிடித் தொழிலே பிரதான தொழிலாகும்.

அரச கரும பாவனைகளுக்கான சில வாகனங்களைத் தவிர வேறு தனியார் வாகனங்கள் இல்லை. பதிலாக பொதிகள் ஏற்றுவதற்கு மாட்டு வண்டில்களுடன் மனிதர்கள் இழுக்கும் சாதாரண ரிக்ஷா, சைக்கிள் ரிக்ஷா, குதிரை வண்டில்கள் போன்றவையே போக்குவரத்துக்குப் பயன்படுத்தப் படுகிறன. குதிரை வண்டிலில் சிறிய கூடாரம் அமைத்து உள்ளே பயணிகள் அமருமிடத்தில் பட்டுத்துணி விரிக்கப்பட்டிருந்ததுடன் பட்டுநூல் குஞ்சங்களும் தொடங்கவிடப்பட்டிருந்தன. குதிரைகளுக்கும் மாலைகள், மணிகள் கட்டப்பட்டிருந்தன.

இங்குள்ள இராமநாதர் கோயில் இந்து சமயத்தவரின் முக்கிய வழிபாட்டுத் தலங்களில் ஒன்றாகையால் பெருமளவிலான சுற்றுலாப் பயணிகள் வருகைதரும் இடமாக இராமேஸ்வரம் இருக்கிறது. சுற்றுலாப் பயணிகள் வருகை, நீரூர்திப் பயணிகளின் வருகை போன்றவற்றிற்காய் தனியார் விடுதிகள் பல இயங்குகின்றன.

இராமேஸ்வரக் கடற்பகுதியில் நீரூர்தி தரித்த இடத்திலிருந்து 100மீ. தூரத்தில் கடற்கரையுடன் கட்டடமும் தெரிந்தது. கப்பலிலிருந்து வள்ளத்தில் ஏற்றப்பட்டோம். கூடவே பொதிகளும் ஏற்றப்பட்டு அழைத்துச் செல்லப் பட்டோம். முன்னர் தனுஷ்கோடி வரை போக்குவரத்து நடைபெற்றபோது தனுஷ்கோடியில் இருந்த வசதி இங்கு இருக்கவில்லை. தலை மன்னாரைப் போன்று துறைமுக வசதி அங்கும் இருந்ததால் சிரமமின்றி பயணிகள் சென்று வரக்கூடியதாக இருந்ததாக அறிந்திருக்கிறேன்.

குடிவரவு குடியகல்வு மற்றும் சுங்கபிரிவுகள் உள்ள பெரிய கட்டடத்தில் வள்ளத்திலிருந்து இறக்கப்பட்டோம். அங்கு நான்கு கருமபீடங்கள் இருந்தன. பயணிகள் ஒவ்வொரு கருமபீடத்திற்கு நேராக வரிசையாக நின்றனர். நாங்களும் அவர்களுடன் இணைந்து கொண்டோம். ஒவ்வொரு வரிசையும் நீண்டதாக இருந்ததுடன் மெதுவாகவே நகர்ந்தது. கடவுச்சீட்டு பரிசோதனை முடித்தவர்களுக்கு சுங்கப் பிரிவில் பொருட்கள் பரிசோதனை நடைபெற்றது. பயணிகள் தங்கம் கடத்துவதில் ஈடுபடுவதாக சந்தேகப் பட்டதால் பொருள், உடற் சோதனை கடுமையாக இருந்தது.

நான் நின்ற வரிசைக்கு அடுத்த வரிசையில் நின்ற ஒருவரை சுங்கப் பிரிவினர் தங்கம் கடத்தியுள்ளதாக மறித்து வைத்திருந்தனர். அந்தப் பயணி அணிந்திருந்த 'சேட் பட்டன்கள்' தங்கத்தால் செய்யப்பட்டு வர்ணம் பூசப்பட்டு பொருத்தப்பட்டிருந்ததை அவர்கள் கண்டுபிடித்திருந்தார்கள். எனக்கும் பயம் தொற்றிக்கொண்டது. நூறு 'அமெரிக்கன் டொலரு'க்கு மேல் நானும் மறைத்து வைத்திருந்தேன். பயந்ததுபோல் இல்லாமல் வெளியேறியதில் மனத்திருப்தி.

வெளியே செல்வதற்கு கட்டடத்தினுள்ளே நீண்ட நடைபாதை இருந்தது. அதில் இடையிடையே காவல்துறையினர் நின்றனர். அவர்கள் தோற்றத்தைக் கண்டதும் எனக்குச் சிரிப்பு வந்தது. படங்களில் காண்பதைப் போல, காற்சட்டையின் கால்கள் அவரின் கால்களைவிட இருமங்கு பெரிதாக விரிந்து, ஒடுங்கி இருந்தது. முன்பக்கம் சுருக்கியதுபோன்ற மடிப்பும் இடுப்பில் கறுப்பு பெல்ற் கட்டப்பட்டும் இருந்தது. தலையில் வித்தியாசமாக உருண்டு உயரமான, நடுவில் குவிந்த தொப்பியில் நீலம் மற்றும் சிவப்பு நிறங்கள் வரிசையாகத் தெரிந்தன. இலங்கை காவல்துறையினரின் உடையை நினைத்துக்கொண்டேன். அது எவ்வளவோ மேலானது.

இறுதியில் நின்ற காவல்துறையினரில் ஒருவர் என்னை நெருங்கிவந்து, 'கனக்கச் சாமான் கொண்டு போறீங்களா?' என்று கேட்க நான் இல்லை

என்றேன். ஐந்து ரூபா தருமாறு கேட்டார். இல்லையென்றேன். ஐம்பது 'பைசா' வாவது தருமாறு கேட்டார் அதற்கும் இல்லையென்று கூறிவிட்டு வெளியேறினேன். அந்நேரம் எந்தவொரு இந்திய நாணயமும் என்னிடம் இருக்கவில்லை.

நாங்கள் மூவரும் ஒன்றிணைந்து வெளியேற இருளாகிவிட்டது. இரவு தங்குவதற்கென விடுதி தேடிச் சென்றபோது தற்செயலாகச் 'சேவியர்' என்பவரைச் சந்தித்தோம். எங்களை அடையாளம் கண்டுகொண்ட சேவியர், தனது வீட்டில் தங்குமாறு வற்புறுத்தியதற்கமைய மறுக்க முடியாமல் தங்க முடிவெடுத்தோம்.

1964 இல் செய்துகொள்ளப்பட்ட 'சிறிமா - சாஸ்திரி' ஒப்பந்தத்தின் பிரகாரம் இந்தியாவுக்கு திருப்பி அனுப்பப்பட்டவர்களில் ஒருவன்தான் சேவியர். நீண்டகாலமாக குருநகரில் வசித்து வந்தவன். இவன் மட்டுமல்ல இவனது சகோதரர்களும் பெற்றோரும் நன்கு அறிமுகமானவர்கள்.

இந்தியாவுக்கு வந்த சேவியர் திருமணம் செய்து இரண்டு பிள்ளைகளுடன் தனிக்குடித்தனம் நடத்துகின்றான். போதிய வசதிகளற்ற, ஓலையினால் வேயப்பட்ட சிறிய வீடாயினும் அவனின் மனம் பெரிது. சிறியதொரு கடை வைத்து வியாபாரம் செய்யும் அவனைச் சிரமப்படுத்தாமல், இலங்கையிலிருந்து மறைத்து எடுத்துவரப்பட்ட 'டொலரை' மாற்றி இரவு உணவை அருந்தினோம்.

ஆண்கள் காலைக்கடன் கழிப்பதற்கு அவரது வீட்டில் வசதியில்லை. அதனால், கடற்கரையோரத்தில்தான் கழிக்கவேண்டும். அந்நிய இடத்தில் எனக்கு சங்கடமாக இருந்தாலும் தலைமன்னார் ஞாபகம் அதைப் புறந் தள்ளியது. நிரையாக பலரும் அவ்வாறே கழித்ததால் தயக்கமின்றி காலைக் கடனை முடித்தேன். பாரிய அலைகள் கரைவந்து மோதிச் செல்வதால் சிறிது நேரத்தின் பின்னர் அப்பகுதியில் காலைக்கடன் கழித்த அடையாளமே இல்லாமல் போய்விட்டது.

குளிப்பதற்கு பெரிதான கிணறு வீட்டிலில்லை. மணலைத் தோண்டி 'தகர பரல்' வைக்கப்பட்ட சிறிய 'துரவு' ஒன்றே அங்கிருந்தது. ஒவ்வொரு தராக மாறிமாறி இடைவெளிவிட்டு ஒருவாறாக குளித்து முடித்தோம்.

காலை உணவாக சேவியர் வீட்டில் வழங்கப்பட்ட தோசையைச் சாப்பிட்ட பின்னர் நகரின் மையப்பகுதியிலுள்ள 'இராமநாதர்' கோயிலைத் (இராமர் கோயில்) தரிசிக்கப் புறப்பட்டோம். சேவியரின் வீட்டிலிருந்து 300 யார் தூரமளவில்தான் அக்கோயில் இருந்தது.


இராமநாதர் கோயில்

இராமேஸ்வரம் இராமநாதர் கோயில், ஜோதிலிங்கத் தலங்களில் ஒன்றாகும். அப்பர், சுந்தரர், திருஞானசம்பந்தர் ஆகியோரின் பாடல் பெற்ற தலமிதுவாகும். இராமேஸ்வர யாத்திரை தவத்திற்கு சமனாகக் கருதப்படுகிறது.

சீதையை மீட்க இராவணனைப் போர்புரிந்து கொன்ற பாவம் நீங்க, இராமர் மணலாலான லிங்கத்தை வைத்து பிரதிஷ்டை செய்தார் என்றும், இராமரே ஈஸ்வரரை வணங்கியதால் இந்நகருக்கு 'இராம ஈஸ்வரம்' எனப் பெயர் வந்தது என்றும் தொன்மையான நம்பிக்கையுண்டு. 12 ஆம் நூற்றாண்டில் பாண்டிய மன்னரால் விரிவாக்கப்பட்ட இத்தலத்தின் முக்கிய சன்னதி யாழ்ப்பாண இராச்சிய மன்னன் குணவீர சிங்கையாரியன் (Gunaveera Cinkaiariyan) என்பவரால் புதுப்பிக்கப்பட்டதெனக் கூறப்படுகிறது.

நான்கு பக்கமும் சுவரால் சூழப்பட்டுள்ள இதன் விஸ்தீரணம், கிழக்கிலிருந்து மேற்காக 865 அடி, வடக்கிலிருந்து கிழக்காக 657 அடியாகும். கிழக்கு மற்றும் மேற்காக இரண்டு கோபுரங்கள் உள்ளன. இராஜகோபுரம் 53 மீ. உயரம். பல சன்னதிகளும் பல்வேறு மண்டபங்களும் அமைந்துள்ளன.

இந்தக் கோயிலின் உட்புறமாக 14.5 அடியிலிருந்து 17 அடி வரை அகலமான நீண்ட நடைபாதைகள் பல உண்டு. வெளிப்பக்க நடைபாதையில் மட்டும் 1,212 தூண்கள் உள்ளன. மொத்த நடைபாதைகளின் நீளம் 3,850 அடியாகும். இது தென்னிந்தியாவில் எந்தக் கோயிலுக்கும் இல்லாத சிறப்பைப் பெறுவதாக அறியப்படுகிறது.



மேற்குக் கோபுரத்திலிருந்து நடைபாதையால் சென்றால் மூன்றாவது நடைபாதைச் சந்திப்பில் சிற்பங்கள் நிறைந்த 'சொக்கட்டான்' மண்டபம் அமைந்துள்ளது. அங்கே அடுக்கடுக்காக அலங்கரித்து வைக்கப்பட்டிருக்கும் பிரபலமான தெய்வங்களின் சிலைகள் ஒவ்வொன்றும் அற்புதமானவை.

64 தீர்த்தங்கள் உள்ளன. இவற்றில் 24 பிரதானமானவை. இவை 22 தொட்டிகளாகவும் ஏனையவை கிணறுகளாகவும் உள்ளன. தீர்த்தக் குளியல் இக்கோயிலின் முக்கிய அம்சமாகும். இங்குள்ள தீர்த்தத்தில் நீராடி இறைவனை வழிபட்டால் பாவங்கள் நீங்கும் என்று நம்புகின்றனர். பக்தர்களின் வசதிக்காக நடைபாதை ஒவ்வொரு தீர்த்தத்தையும் இணைத்துச் செல்கிறது.

கோயிலைச் சுற்றிக் காண்பிக்கும் 'வழிகாட்டி' கிணற்றில் தீர்த்தம் கோலுவதற்கு ஏற்றவாறு கயிறு கட்டப்பட்ட வாளியுடன் வந்தார். ஒவ்வொரு தீர்த்தம் பற்றிய விளக்கத்தையும் கூறியவாறு அதனைக் கோலி எமக்குத் தந்தார். தீர்த்தங்களில் நாங்கள் குளிக்கவில்லை. முகத்தை மட்டும் கழுவிக் கொண்டோம். நேரவிரயத்தைக் கருத்திற்கொண்டு பிரதானமான 24 தீர்த்தங்களில் மட்டும் அவ்வாறு செய்தோம். இவற்றில் 22 தீர்த்தங்கள் இராமரின் அம்புகளைக் குறிக்கிறது.

பூசை வேளை இல்லாதபடியால் கருவறை மூடப்பட்டிருந்தது.

பக்தர்கள் கருவறைக்கு எதிரே நின்று மனதுருக கும்பிட்டுச் சென்றார்கள். நாமும் அவ்வாறே செய்தோம்.

கோயிலில் காணப்பட்ட நூற்றுக்கணக்கான சிற்பங்களும் சாதாரண மனித அளவில செதுக்கப்பட்டு வர்ணம் பூசப்பட்டிருந்தன. ஒவ்வொன்றையும் பார்த்து நகர முடியாமல் பிரமிப்பில் நின்றேன். அந்த அளவிற்கு என் மனதை ஈர்ந்திருந்தது. என்னுடன் கூடவந்தவர்களால் அதிக நேரம் தரித்துநிற்க முடியவில்லை.

ஆலயத் தரிசனம் முடிந்துவர மதியத்துக்கு மேலாகிவிட்டது. சேவியர் வீட்டில் உணவருந்தி சிறிது ஓய்வெடுத்த பின்னர் 'அக்காமடம்', 'தங்கச்சி மடம்' போன்ற ஊர்களுக்கு சைக்கிள் ரிக்ஷாவில் சென்று பார்வையிடப் புறப்பட்டோம்.

முற்றிலும் கடற்றொழிலாளர் குடியிருப்புகளைக்கொண்ட அப்பகுதிகளின் கடற்கரையோரம் எம்மைக் கவர்ந்தது. சவுக்கு மரங்கள் வரிசையாக நின்றன. கலங்கலற்று கண்ணாடிபோல் காணப்பட்டது அந்தக் கடற்பகுதி. கரையோர மணலும் அவ்வாறே வெண்மையாக இருந்தது. சவுக்கு மரத்தின் நிழலில் சிறிது நேரம் அமர்ந்தும் மணலில் படுத்தும் கிடந்த நாம், அங்கிருந்து புறப்பட்டு திரைப்படம் பார்ப்பதற்காக சினிமாக் கொட்டகைக்குச் சென்றோம்.

ஒரு சினிமாக் கொட்டகை மட்டுமே அங்குள்ளது. அதில் சிவகுமார், தீபா நடித்த 'றோசாப்பூ ரவிக்கைக்காரி' திரைப்படம் காண்பிக்கப்பட்டது. எம்ஜிஆரின் படமாக இல்லாதபடியால் கூட்டம் குறைவாக இருந்தது.

தியேட்டரில் இரண்டு வகையான நுழைவுச் சீட்டுகளே இருந்தன. விலை கூடிய சீட்டைப்பெற்று உள் நுழைந்தோம். உள்ளே பின்பக்கமிருந்து பாதிவரை வாங்குகளும் முன் பக்கம் மணல் தரையாகவும் இருந்தது. நாங்கள் வாங்கில் அமர்ந்து கொண்டோம். பார்வையாளர் வாங்குகளில் குறைவாகவும் தரையில் அதிகமாகவும் அமர்ந்திருந்தனர். இடைவேளைக்கு அனைவரும் வெளியே சென்ற பின்னர் பார்க்கையில் தியேட்டரின் இருமருங்கும் வெற்றிலை எச்சிலால் சிவப்பாக மாறியிருந்தது.

மறுநாள் காலையில் இராமேஸ்வர கடற்றொழிலாளர்களின் தொழில் முறைகள், கடலுணவை சந்தைப்படுத்தும் முறைகளைப் பார்வையிட்டோம். நாம் இலங்கையர் என்று அறிந்து எம்முடன் அன்பாக பழகியதுடன் விளக்கமும் அளித்தார்கள். அவர்களின் உபசரிப்பும் பண்பான உரையாடலும் எம்மைக் கவர்ந்தது. அங்கிருந்து புறப்படவே மனமின்றி நின்றாலும், அன்று நாகை பட்டணம் 'வேளாங்கண்ணி அன்னை திருத்தலம்' நோக்கிப் பயணிக்கவுள்ளதால் விடைபெற்றுக்கொண்டோம்.

இராமேஸ்வரத்திலிருந்து நாகை பட்டணம் செல்வதாயின் தொடருந்தில் திருச்சி அல்லது மதுரைக்குச் சென்று, அங்கிருந்துதான் பேரூந்தில் வேளாங்கண்ணி செல்லவேண்டும்.

திருச்சி செல்லும் தொடருந்தில் பயணிக்கும் நோக்கில், பயணச் சிட்டையைப் பெற்றுக்கொண்டோம். நேரம் மதியத்தைத் தாண்டியதால் தொடருந்து நிலையத்துக்கு அண்மையில் ஓலைக் குடிலாக இருந்த உணவகத்தில் உணவருந்தச் சென்றோம்.

மரக்கறி, பொரித்த மீன் மற்றும் மீன் கறியுடன் தரப்பட்ட சாப்பாடு மிகவும் சுவையாக இருந்ததுடன் சோறு அதிகமாக போடப்பட்டிருந்தது. எம்மால் அவற்றை முழுமையாக சாப்பிட முடியவில்லை. சிலவேளை அங்குள்ளவர்களுக்கு ஏற்ற அளவாக இருக்கலாம். இத்தனை பெரியதுண்டு மீன் உணவகங்களில் பரிமாறியதை இங்குதான் முதன் முறையாகக் கண்டேன். ஒரு சாப்பாடு இரண்டு ரூபாவேதான்.

மதியம் சமைக்கவேண்டாமென ஏற்கெனவே சேவியர் வீட்டில் கூறியிருந்தபடியால் அவர்களுக்குச் சாப்பாட்டுப் பார்சல் எடுத்துச் சென்று ஒப்படைத்துவிட்டு, வெயிலின் அகோரம் காரணமாக சற்றுநேர ஓய்வெடுத்த பின்னர், பொதிகளுடன் தொடருந்து நிலையம் நோக்கிப்புறப் பட்டோம்.



பி.ப.2.00 மணிக்குப் புறப்படவுள்ள தொடருந்துப் பெட்டிகள் அதிகாலை முதலே தரிப்பிடத்தில் விடப்பட்டிருக்கும். அவற்றிலுள்ள இருக்கைகளை தரகர்கள் தமக்குள்ளே பங்குபோட்டு எடுத்து அடையாளப்படுத்தியிருப்பார்கள். பயணிகள் தொடருந்து நிலையத்தில் பயணச்சிட்டையைப் பெற்ற பின்னர் தரகர்களுக்குப் பணம்செலுத்தியே இருக்கைகளில் அமரமுடியும். அவ்வாறில்லையாயின் நடைபாதையில்தான் இருக்கவோ, நிற்கவோ வேண்டும். எவராலும் தட்டிக்கேட்கப்படாமல் நடைமுறையாய்த் தொடர்வதாகச் சேவியர் கூறினார்.

இராமேஸ்வரத்திலிருந்து இந்தியாவின் ஏனைய பகுதிகளுக்குச் செல்லக்கூடிய ஒரேயொரு தரைவழிப் பாலப் போக்குவரத்து, தொடருந்து சேவையென்பதால் தரகரின் கைகள் ஓங்கி நிற்கின்றன. சேவியர், தரகருக்குப் பணம் கொடுத்து திருச்சி செல்லும் தொடருந்தில் உறங்கலுக்கேற்ற இருக்கைகளை ஏற்பாடு செய்திருந்தமையால் சிரமமின்றி அதிலேறிக்கொண்டோம். வெயிலின் அகோரம் தொடருந்து பெட்டியுள்ளும் ஆக்கிரமித்திருந்தது.

தொடருந்து நிலையத்திலிருந்து புறப்பட்ட தொடருந்து, சில நிமிடங்களில் பாம்பன் பாலத்தின் மேலாக பயணிக்கத் தொடங்கியது. பாலத்தால் செல்லும்போது தொடருந்து கடல்மேலே பறப்பதைப் போன்ற

உணர்வு. பாலத்தில் பக்கத் தடுப்பணை இல்லாததும் பாலம் கண்களுக்குப் புலப்படாமல் இருப்பதாலும் அவ்வாறான உணர்வு ஏற்பட்டது. பயம் இல்லாமலில்லை மனதுக்குள் கடவுளை வேண்டிக்கொண்டேன்.

திடீரென தொடருந்தின் பயணம் தடைப்பட்டது. என்னென்று புரியாமல் நாம் ஒருவரையொருவர் நோக்கினோம். கடல் மட்டும்தான் தெரிந்தது தரிப்பிடம் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. சங்கடத்தால் அங்குமிங்கும் பார்த்தோம். இதைக் கண்ணுற்ற பயணி ஒருவர், "கப்பல் போறதுக்காக இது நிக்குது" என்றார்.

எமக்குப் புரியவில்லை. நீரூர்தி போவதற்கும் இதற்கும் என்ன சம்பந்தம்? மனதில் கேள்வியாய்த் தோன்றிட ஒருவர்மாறி ஒருவர் கேட்டுக்கொண்டோம். அதைப் புரிந்துகொண்ட பயணி எமக்கு விபரித்தார்.

ஆழமான இந்த பாக்குநீரிணையில் நீரூர்தி போக்குவரத்தும் நடைபெறுகின்றது. பாக்குநீரிணையை ஊடறுத்துக் கட்டப்பட்டுள்ள இப்பாலத்தின் கீழாகக் நீரூர்திகள் செல்வதற்கு ஏதுவாக, பாலத்தின் நடுப்பகுதியை உயர்த்தும் முறையில் வடிவமைத்துள்ளனர். இதனால் இதனை 'கொடுங்கைப் பாலம்' என்றும் 'இராட்டணப் பாலம்' என்றும் சொல்லுவார்களாம்.

நீரூர்தி அப்பாலத்தின் கீழாகக் கடப்பதற்கு வசதியாக, மையத்திலிருந்து இருபக்கத்தாலும் தொடருந்து பாதை குறுக்கே இரண்டாகப் பிளந்து உயர எழும். அப்போது கொடுங்கைப் பாலத்தின் தடையில்லாமையால் நீரூர்தி அப்பகுதியைக் கடந்து செல்லும். நீரூர்தி கடந்ததும் உயர எழுந்த கொடுங்கைப் பாலம் பதிந்து முன்னரைப்போல் சேர்ந்துகொள்ளும். அதன்பின்னரே தொடருந்து பயணிக்க அனுமதி கிடைக்கும்.

வாரத்தில் முன்று வரையான நீரூர்திகள் இப்பாலத்தால் சென்று வருவதாகவும், பாலத்தை நீரூர்தி கடக்கவுள்ள சந்தர்ப்பத்தில் குறித்த இடத்தில் தொடருந்து நிறுத்தப்படும் எனவும் பயணி விபரித்தார். அவர் குறிப்பிட்டதைப்போல சரக்கு நீரூர்தி ஒன்று பாலத்தை நெருங்கி வந்து பாலத்திற்குள் நுழைவதையும், மறுபக்கத்தால் வெளியேறுவதையும் எம்மால் பார்க்கக்கூடியதாக இருந்தது.

'கொடுங்கைப் பாலத்'திலிருந்து புறப்பட்ட தொடருந்து பெருநிலப்பரப்பிலுள்ள மண்டபத்தை நெருங்குகையில் யப்பான் நிறுவனத்தினால், கனரக இயந்திரங்களும் பாரிய மிதவைகளும் கொண்டு வாகனப் போக்குவரத்துக்கான தரைவழிப் பாலம் நிர்மாணிக்கப்படும் பணி நடைபெற்றுக் கொண்டிருந்ததைப் பார்க்கக்கூடியதாக இருந்தது.

உறங்கலுக்கேற்ற இருக்கைகளாக இருந்தாலும், பழக்கமற்ற தொடருந்து பயணம், மிகுதியான இரைச்சல், பூமியின் வறட்சியிலான அகோரம் காரணமாக எமது நீண்ட பயணம் சௌக்கியமானதாக அமையவில்லை.

ஒவ்வொரு தொடருந்து நிலையத்திலும் தொடருந்து தரிக்கும்போது மேடையில் ஆங்காங்கு பல பெண்கள் நின்று மூக்குப் பேணிகளில் இலவசமாக குடிநீர் வழங்கினர். அவற்றைப் பெற்று அருந்தும்போது ஓரளவு ஆறுதலைக் கொடுத்தது. பலர் நின்று குடிநீர் வழங்குவதால் விரைவாகவே பயணிகள் அருந்தி பயணிக்க ஏதுவாக இருந்தது. இந்த நற்செயலைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

திருச்சிராப்பள்ளி மாவட்டம்

திருச்சிராப்பள்ளி (திருச்சி)

'திருச்சிராப்பள்ளி' என்ற பெயர் வரக்காரணங்கள் பல கூறப் பட்டாலும் 16ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டு ஒன்றில் 'புனித பாறை ஊர்' என்றே குறிப்பிடப்பட்டுள்ளதாக பேசப்படுகின்றது. பொதுவாக 'திருச்சி' எனவும் அழைக்கப்படுகிறது.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 15 மண்டலங்களைக் கொண்ட 65 பகுதிகளாக ஆட்சி நிர்வாகம் நடைபெறுகின்றது. இங்கு இந்துக்கள் பெரும்பான்மையினராக இருப்பினும் கணிசமான அளவில் கிறிஸ்துவர்களும், முஸ்லிம்களும் வாழ்கிறார்கள். 'திருச்சிராப்பள்ளி' என்பது மாவட்டத்தின் பெயராக இருந்தபோதும் அதன் தலைநகரின் பெயரும் அதுவேயாகும். அதனால் தலைநகரை 'திருச்சி' என்று குறிப்பிடலாம்.

தமிழகத்திலுள்ள நான்கு முக்கிய நகரங்களில் ஒன்றான இந்நகர், காவிரி ஆற்றங்கரையில் அமைந்துள்ளது. தமிழ்நாட்டில் மக்கள் வாழ்ந்த மிகப் பழமையான நகரம் இதுவெனக் கூறப்படுகிறது. இந்த நகரத்தின் வரலாறு கி.மு.2000 ஆண்டுகளுக்கு முந்தியதாகக் கண்டறியப்பட்டுள்ளது. காவிரி ஆறும் அதன் கிளையான கொள்ளிடமும் இந்நகருக்கு உயரிய செழிப்பைக் கொடுக்கிறது.

திருச்சி நகரில் நெருக்கமான குடியிருப்புகள், நெருக்கடி நிறைந்த வீதிகளுடன் ஏராளமான சில்லறை மற்றும் மொத்த வணிகக் கூடங்கள், தொழிற்சாலைகள் போன்றவையும் அமைந்துள்ளன. 'மகாத்மா காந்தி சந்தை' எனப்படும் காய்கறி சந்தை பற்றி பலராலும் பெரிதாகப் பேசப்படுகிறது.

திருச்சி தொடருந்து நிலையத்தில் இறங்கும்போது இரவு எட்டு மணிக்கு மேலாகி விட்டது. கொழும்பு கோட்டை தொடருந்து நிலையத்தை நினைவூட்டியது அந்த தொடருந்து நிலையம். பழக் கலவைக்கடை, குளிர் பானக்கடை, பழக்கடை போன்ற பல விற்பனை நிலையங்கள் தொடருந்து நிலைய முன்பக்கம் காணப்பட்டன. நேரம் தாமதமானமையால் அங்கு தரித்து நிற்காமல் வாடகை வாகனத்தில் ஏறிக்கொண்டதும் அங்கிருந்து சற்றுத் தூரத்திலுள்ள விடுதிக்குச் சாரதி அழைத்துச் சென்றான். விடுதியில் இரண்டு

அறைகளெடுத்து தங்கி, பயணத்தால் ஏற்பட்ட உடல் உபாதை தீர நன்றாகக் குளித்து இரவைக் கழித்தோம்.

விடிந்ததும் இலங்கைப் பொருட்களைக் கொள்வனவு செய்யும் வியாபாரிகள் விடுதிக்கு தேடிவந்து பொருட்களை விலை பேசியதால், கைக்கடிகாரத்தைத் தவிர ஏனைய பொருட்களை விற்பனை செய்தோம்.

இடைத்தங்கலாக இன்று திருச்சியில் தங்க இருப்பதால் முடிந்தவரை இங்குள்ள பிரபலமான இடங்களைப் பார்த்துவிட வேண்டுமென்ற ஆவலை, கூட வந்தவர்களுக்கு எடுத்துக்கூறி ஊக்கப்படுத்திட, அவர்களும் சம்மதித்து கோயில்களைத் தரிசிக்கும் நோக்கில் புறப்பட்டு வந்தனர்.

விடுதிக்கு அண்மையில் நகரப் பேரூந்து நிலையம் இருந்தது. அந்தச் சுற்றாடலில் காலை உணவு அருந்துவதற்கு நாம் எதிர்பார்த்தது போன்ற உணவகம் காணப்படவில்லை. வீதியில் நின்ற ஒருவரிடம் வினாவியபோது மலைக் கோட்டைக்கு முன்னால் இருப்பதாகக் கூறினார்.

அவர் சுட்டிக்காட்டிய மலைக்கோட்டை அதிக தூரத்திலில்லை யாதலால் அவர் கூறிய பதை வழியாக நடந்து சென்று, இந்தியாவிலுள்ள பிரபலமான இந்து கோயில்களில் ஒன்றான 'மலைக்கோட்டை பிள்ளையார்' கோயிலின் தெப்பக்குளத்திற்கு முன்னாலிருந்த உணவகத்தில் காலை உணவை அருந்தச் சென்றோம். உணவகத்திலிருந்து கோயிலின் அழகை இரசிக்கக் கூடியதாக இருந்தது.

உணவகத்தில் இட்லி, பலவகைத் தோசைகள், பூரி, உழுந்து வடை போன்றவற்றுடன் பால் கோப்பியும் இருந்தது. 'பேப்பர் தோசையை' சம்பல், சட்னி, சாம்பாருடன் அருந்தினோம். தேங்காய்ச் சம்பல் சிறிதளவே தரப்பட்டது. 'பேப்பர் தோசை' என்ற பெயரிலுள்ள இவ்வளவு பெரிய தோசையை அன்றுதான் கண்டேன். பெரும்பாலும் இவைகளே காலை உணவாக எல்லாக் கடைகளிலும் இருக்கும் என்பதை நாம் தங்கிய விடுதியில் அறிந்துகொண்டோம். எம்மவர்போல் தண்ணீரில் கோப்பித்துளை அவித்துப் பின்னர் பால் சேர்த்து கோப்பி தயாரிப்பது போலில்லை இங்கு. தண்ணீர் சேர்க்காது பாலிலேயே கோப்பியை தயாரித்தார்கள். குடிப்பதற்கு வித்தியாச மான சுவையைத் தந்தது.

உணவருந்தியதும் தெப்பக்குளத்தைச் சூழவிருந்த வீதியால் குளத்தின் எதிர்ப்புறமுள்ள மலையடிவாரத்தை நோக்கி நடந்தோம். தெப்பக்குளத்தின் மையத்தில் 16 சிறிய தூண்களால் சூழப்பட்ட சிறிய மண்டபத்தில் விக்கிரகங் கள் இருந்தன. அதைப் பார்வையிட்டு மலையடிவாரத்தை அடைந்ததும் 'பாண்டி பஜார்' என அழைக்கப்பட்ட இடத்தில் சில வியாபாரிகள் நின்றனர். சில கடைகளும் இருந்தன. அவர்களிடம் பேரம்பேசி கைக்கடிகாரங்களை விற்பனை செய்து கொண்டோம். அவர்களிடையே ஒற்றுமையுள்ளதென் பதை புரிந்துகொள்ள அதிக நேரமெடுக்கவில்லை. ஆனாலும், விடுதியில் கேட் கப்பட்ட விலையைவிட கூடிய விலைக்கே விற்பனை செய்திருந்தோம்.

பின்னைய பயணங்களில் தெப்பக்குளத்தோடு சேர்ந்த மலையடிவார பாண்டிபஜார் பகுதி இடைவெளிகள் ஏதுமின்றி பெருந்தொகையான கடைகள், வாகன நெரிசல்கள், சன நெரிசல்களுடன் கேளிக்கை மிகுந்த இடமாக மாறியிருக்கக் காணப்பட்டது.

உச்சிப் பிள்ளையார் கோயில்

தமிழகத்தின் திருச்சி நகரத்தில் மூன்று பில்லியன் ஆண்டுகள் பழமை வாய்ந்த பாறையின் உச்சியில் இக்கோயில் அமைந்திருப்பதால் 'உச்சிப் பிள்ளையார்' எனப் பெயர் வந்தது. 'மலைக்கோட்டைப் பிள்ளையார்' எனவும் அழைக்கப்படுகிறது.

ஏழு நூற்றாண்டுகளுக்கு முன்னர் 273 அடி உயரமான மலைப் பாறையின் உச்சியில் விஜயநகரப் பேரரசின் காலத்தில் இக்கோயில் கட்டப்பட்டதாக அறியப்படுகிறது. உச்சிப் பிள்ளையார் சன்னதியைத் தரிசிக்கச் செல்வதற்கென 437 படிகள் அமைக்கப்பட்டுள்ளன.


தெப்பக்குளத்திற்கு முன்னாலிருந்த மலைக்கோட்டையின் படிக் கட்டுகளுக்குச் செல்லும் நுழைவாயிலின் வழியாக உள்ளே சென்றோம். காலில் போட்டிருந்த செருப்புக்களை கழற்றி ஐந்து பைசா செலுத்தி அதற்கென இருந்த கடையில் வைத்தோம். உள்ளே பூக்கள், பழம், பாக்கு, வெற்றிலை, சூடம், தேங்காய் போன்ற கோவிலுக்கு தேவையான சாமான்கள் விற்கும் கடைகள் நிறைய இருந்தன. சுவாமி விக்கிரகங்கள், கோயிற்படங்கள், விபூதி என்பனவும் விற்பனைக்கு இருந்தன.

மலையடிவாரத்தில் மற்றவர் செய்வதைப் பார்த்து நாமும் முகம், கை, கால் கழுவிக் கொண்டு படியில் ஏறத்தயாரானோம். 437 படிகள் கடப்பதை நினைத்தபோது நெஞ்சு படபடத்தது. பாறையைச் சுற்றியும் குடைந்தும் மலை உச்சிக்குச் செல்வதற்கு படிக்கட்டுப் பாதை அமைக்கப்பட்டு காவி நிறமும் வெள்ளை நிறமும் கலந்து வர்ணம் பூசப்பட்டு இருந்தது. அடிவாரத்தில் இருந்த மாணிக்கப் பிள்ளையாரை வழிபட்டு படியேறத் தொடங்கினோம். செங்குத்தான படிகளில் ஏறிச் செல்வது எமக்கு புதிய அனுபவமென்பதால் களைப்பாக இருந்தது. மெதுவாகவே எமது பயணம் தொடர்ந்தது.

திருப்பத்தில் சிறிய கடை ஒன்றில் கோயில் சார்ந்த படங்கள் விற்பனைக்கு இருந்தன. அவற்றைப் பார்ப்பதுபோல சிறிது ஓய்வெடுத்து களைப்பாறிப் பின் நடையைத் தொடர்ந்தோம். இடையில், ஒரு குகைக் கோயில் இருந்தது. அந்தக் கோயிலினுள்ளே நுழைந்தோம். அப்போது பூஜை இல்லாமையால் கோயிலினுள் ஒருவரும் தென்படவில்லை. பாறையைக் குடைந்து தூண்கள் எழுப்பி அதன் மீது சித்திரம் தீட்டியிருந்தார்கள், சிங்கங்கள், யாழிகள் போன்ற பல வகையான சிற்பங்கள் கல்லில் பொழியப் பட்டிருந்தன. கோயிலின் மேற்புறம் பளிங்குபோல சமப்படுத்தப்பட்டு அதன் மேல் வண்ணச் சித்திரம் தீட்டப்பட்டு இருந்தது. பார்க்கும் இடமெல்லாம் ஒரே

சித்திரமயம்தான். அன்றைய சிற்பிகளினதும் ஓவியர்களினதும் கை வண்ணம் எவ்வளவு மேம்பாடாய் இருந்திருக்க வேண்டும்? இதைவிட கருங்கல்லினால் செய்யப்பட்ட பிரமாண்டமான சங்கிலிகள் சரமாகத் தொங்கிக்கொண்டு இருந்தன. கோயிலின் உற்புறத்தில் இன்னோர் பக்கத்தில் அறுபத்து மூன்று நாயன்மார்களின் உருவச்சிலைகள் ஆடை அணிவித்தபடி இருந்தன.

முன்னோரு சமயம் தனகுப்தன் என்பவனது மனைவி சிவபக்தியிற் சிறந்து விளங்கி வரும் நாளில் கருத்தரித்தாள். அவளுக்குப் பிரசவ காலம் நெருங்கிய சமயத்தில் வெளியே போயிருந்த அவளது தாய், காவிரி பெருக் கெடுத்ததால் அக்கரையில் நின்றுவிட நேர்ந்தது. பிரவச வேதனையின் அதிகரிப்பினால் துடித்துக் கொண்டிருந்த தன் பக்தையின் நிலைகண்டு இரங்கிய பெருமான், அவளது தாயைப் போன்று வேடம் பூண்டு அவளுக்கு உதவினார். தாயாகி வந்து மருத்துவம் பார்த்ததினால் தாயுமானார். என்ற பெயருடன் ஈசனார் அக்கோயிலில் குடிகொண்டிருந்தார் என அறியமுடிந்தது.



கோயிலுக்கு வெளியே வந்தபோது அங்கே சிறிய காரியாலயம் காணப்பட்டது. அந்தக் காரி யாலயத்தில் அனுமதிச்சிட்டை வாங்கிக்கொண்ட பின்னரே மலையுச்சிக்குப் போக அனும திக்கப்பட்டோம். கோயிலைப் பார்வையிடுகையில் கிடைத்த ஓய்வினால் தொடர்ந்து படி யேற இலகுவாக இருந்தது.

கிட்டத்தட்ட மலை யின் பாதி உயரத்தை கடந்த நிலையில், மலையைக் குடைந்த அறைபோன்றுள்ள இடத்தில் நின்ற யானை, மலையேறும் பக்தர்களை வரவேற்றது. நாங்கள் ஏறவே சிரமப்படும் படிகள் வழியாக இவ்வளவு உயரத்திற்கு யானையை இங்கு எப்படி கொண்டு வந்தார்களென்ற ஆச்சரியம் ஏற்படாமலில்லை.

பலரையும்போல சில்லறைப் பணத்தை எனது கையில் வைத்து நீட்டியதும் அதை தனது தும்பிக்கையால் எடுத்துக்கொண்டு பின்னர் எனது தலைமீது தும்பிக்கையை வைத்து ஆசி வழங்கியது. அந்நேரம் எனது உடல் ஆட்டம் கண்டது.

நான் சாரணர் குழுவில் இருந்தபோது மாங்குளம், 'மணவாளன் பட்டை முறிப்பு' என்னும் இடத்திற்குச் சென்றிருந்தேன். அங்கு அடர்ந்த காட்டுக்குள் அடையாளப் பயிற்சிக்குச் சென்றபோது, ஓரிடத்தில் யானை மரத்தை முறித்து வீழ்த்துவதையும் அது திரும்பிச் செல்வதையும் நடுக்கத் துடன் பார்த்திருக்கிறேன். மீண்டுமொருமுறை தெகிவளை, மிருகக்காட்சி சாலையில் யானையை பாதுகாப்பான பகுதியில் நின்று பார்த்திருக்கிறேன்.

இதைத் தவிர, அதுவும் இவ்வளவு அருகருகாக நின்று பார்த்ததோ அதன் தும்பிக்கையைத் தொட்டதோ இல்லை.

மலையுச்சி நெருங்க, நெருங்க அங்கிருந்து ஒலிபரப்பாகிக்கொண்டிருந்த பக்திப் பாடல்களின் ஓசை காதில் தெளிவாக விழுந்தது. இதனால் படியேறும் பக்தர்களுக்கு இனிமையான அந்தப் பாடல்கள் உத்வேகத்தை ஏற்படுத்தத் தவறவில்லை. சிரமம் இல்லாமல் 437 படிகள் கடந்து வரலாற்றுப் புகழ்மிக்க பிள்ளையார் கோயிலை அடைந்தபோது மனதில் பெரு மகிழ்வு ஏற்படத்தான் செய்தது.

மகாபாரதக் காலத்தில் வாழ்ந்த விபீஷணன், விஷ்ணு பெருமானின் விக்கிரகத்தை வைத்து தான் பூஜிக்க விரும்பி எடுத்துச் செல்கையில், ஸ்நானம் செய்வதற்காக அங்கே நின்றுகொண்டிருந்த ஒரு சிறுவனிடம் "தம்பி, இந்த விக்கிரகத்தை வைத்துக்கொண்டிரு. கீழே வைத்துவிடாதே, அப்படி வைத்தாயேயானால் பின்னர் பெயர்க்க முடியாது போய்விடும். நான் இதோ வந்து விடுவேன்" எனக் கூறி அருகே இருந்த காவிரியை நோக்கி சென்றார்.

சற்று நேரம் பொறுத்துப் பார்த்த பையன் அவரைக் கூவி அழைத்தும் அவர் வராமல் போகவே அலுத்துப் போய் சிலையை அவ்விடத்திலேயே வைத்து விட்டான் சற்று நேரத்தில் அங்கு வந்து இச் செயலைக் கண்ணுற்று வெகுண்டெழுந்த விபீஷணன், பையனைக் கலைக்கவே அவன் ஓடிச் சென்று மலை உச்சியினை அடைந்தான். அத்தருணம் அவனை எட்டிப் பிடித்த விபீஷணன் அவன் தலையில் ஓங்கிக் குட்டவே, அவன் அப்படியே மலை மீது சிலையாக அமர்ந்து விட்டான். தன்னோடு ஓடிவிளையாடியது பிள்ளை யாரே எனக் கண்டு வியந்த விபீஷணன், அவரது தாழ் பணிந்து சேவித்து நின்றான். மலையில் சிலையாகிய அப் பெருமான்தான் மலைக் கோட்டை உச்சிப் பிள்ளையார் என்பதை அங்கு அறியக்கூடியதாக இருந்தது.

கோயில் மூலஸ்தானக் கதவுகள் இன்னும் திறக்கப்படவில்லை. இருந்தபோதும் மேலாடையைக் கழற்றி கையில் வைத்துக்கொண்டு பிள்ளையாரை மனதிருத்தி கும்பிட்டோம். பக்தர்கள் குறைவாகவே இருந்தனர். பூசை நேரங்களிலும் சாயந்தரமும் அதிக பக்தர்களைக் காணலாம் என்றார்கள் அங்கு நின்றவர்கள்.

சன்னிதானத்தைச் சுற்றிவர இருந்த வீதியைச் சுற்றி வந்தோம். முன்னரங்கப் பகுதி விசாலமான தளமாக இருந்தது. தளத்தைச் சுற்றிவர பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அத்தளத்தில் நின்றவாறு ஸ்ரீரங்கம், காவேரி ஆற்றுப் பகுதி, கொள்ளிடம் போன்றவற்றைத் தெளிவாகப் பார்க்கக்கூடியதாக இருந்தது. தெருக்களும், பாதைகளும், வீதிகளும் அதில் ஓடிக்கொண்டு இருந்த வாகனங்களும் சிறு உருவங்களாக தோன்றின. நெருக்கமாக நிறைய வீடுகள், பொம்மைகள் போல்த் தெரிந்தனர் ஆட்கள்!

அப்போது காவிரி ஆறு வற்றித் தரையாகக் காணப்பட்டது. சுகந்தமான காற்று வீசிய அத்தளத்தில் நின்றவாறு திருச்சி நகரின் அழகை

எட்டுத் திசையாலும் பார்த்து இரசித்த திருப்தியுடன் திரும்பினோம். ஏறும் போது இருந்ததைவிட இறங்கும்போது அவதானமாக இறங்க வேண்டி யிருந்தது.

மலையடிவாரத்தில் சோலையாகக் காணப்பட்ட மரங்களின் கீழ் சற்றுநேரம் ஓய்வெடுத்துக்கொண்டு புறப்பட்ட நாம், இந்தியாவில் முக்கிய யாத்திரைத் தலங்களில் ஒன்றான விஷ்ணு பெருமான் சயனிக்கும் வடிவிலமைந்த பெரிய கற்சிலையை உடைய திருச்சி 'ஸ்ரீ ரங்கநாத சுவாமி' (ஸ்ரீரங்கம்) கோயிலைத் தரிசிக்கச் சென்றோம்.

ஸ்ரீ ரங்கநாதசுவாமி கோயில்

சிறப்புமிக்க 108 வைணவத் திருத்தலங்களில் முதன்மையான திருத்தலமாக காவிரி ஆற்றினால் சூழப்பட்ட ஸ்ரீ ரங்கநாதசுவாமி கோயில் உள்ளது. இது 600 ஏக்கர் பரப்பளவைக்கொண்ட தீவு நகரமாகும்.

5ஆம் நூற்றாண்டு முதல் 9ஆம் நூற்றாண்டுவரை வாழ்ந்த ஆழ்வார்கள் பலர் திருவரங்கத்தானைப் பற்றிப் பாடியுள்ளமை அதன் பழமையை உணர்த்து கின்றது. இருப்பினும் கோயிலில் காணப்பட்ட கல்வெட்டுகள் 9ஆம் நூற்றாண்டுக்கு உரியவையாகவே அறியப்படுகின்றது. அவை சோழ மன்னர் களைப் பற்றியதாகவும் உள்ளன. இதன் அடிப்படையில் 9ஆம் நூற்றாண்டில் சோழ மன்னர்களால் இக்கோயில் கட்டப்பட்டதாக கூறப்பட்டபோதும் 17ஆம் நூற்றாண்டு வரை கோயிலுக்கான கோபுரங்கள் அமைக்கும் வேலை நடைபெற்றதாக அறிய முடிந்தது. திராவிடக் கட்டடக்கலை வடிவமைப்பில் இக்கோயில் காணப்படுகிறது.

ஏழு உலகங்களைக் குறிக்க ஏழு மதில் சுற்றுகளைக்கொண்ட 156 ஏக்கர் வளாகத்தில் கோயில் அமைந்துள்ளது. மாடங்களைச் சுற்றியுள்ள மதிலைத் தவிர ஏனைய மதில்கள் சோழ மன்னர்களின் பெயரால் குறிக்கப் பட்டுள்ளன. மையப்பகுதியில் ரங்கநாதசுவாமி கோயில் இருக்கின்றது. கோயிலிலிருந்து நான்கு திசையாலும் வெளிப்புறம் நோக்கிச் செல்லும் வகையில் கோபுர வாசல்கள் காணப்படுகின்றன. இராஜகோபுர பிரதான வாயில் தெற்குப் பக்கத்தில் அமைந்துள்ளது.

சுற்றுமதில்களின் வாயில்களாக 21 கோபுரங்கள் அமைக்கப் பட்டுள்ளன. இவற்றில் மிகப் பெரிதான கோபுரமாகக் கருதக்கூடிய தெற்குப் பக்கமுள்ள இராஜகோபுரம் 17ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக அறியப்பட்ட போதும் அது முற்றுப்பெறாத நிலையில் மொட்டையாக காணப்பட்டது. அதனை 236 அடி உயரத்தில் கட்டும் நோக்கில் கட்டுமானப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன.

கோயிலைச் சுற்றி உட்புறமாக அமைந்துள்ள நான்கு சுற்றுகளும் கோயில் சார்ந்த தேவைகளுக்கு உரியவை. வெளிப்புறமாக உள்ள மூன்று சுற்றுகளும் வீடுகள், வணிக நிலையங்கள், வீதிகள் என்பன கொண்ட நகரம்

போன்று உள்ளது. இங்குள்ள வீடுகளில் சில தொன்மையான இந்துசமய கோயில் வடிவமைப்புகளுக்கான சிற்ப சாத்திரங்களுக்குகேற்ப அமைக்கப் பட்டிருந்தன. கோயிலின் விமானம் பிரம்மாவின் தவத்தால் திருப்பாற் கடலிருந்து வெளிப்பட்டுத் தோன்றியதென கூறுகின்றனர். இதை சுயம்பு என்றனர்.

பாண்டியர்களின் ஆளுகையின் கீழிருந்த இந்நகரை, டில்லி சுல்தானின் தளபதி மாலிக்கபூர் படையெடுத்து பாண்டியர்களைத் தோல்வியுறச்செய்து 1311இல் கைப்பற்றிக்கொண்டான். கோயிலில் இருந்த விலைமதிக்க முடியாத பொருட்களைக் கைப்பற்றியதுடன் சிலைகளை அழித்து, ஸ்ரீ ரங்கநாதசுவாமி கோயிலைக் களங்கப்படுத்தினான். இதனால் அறுபது ஆண்டுகள் மூடப்பட்டிருந்த கோயில் மீண்டும் திறக்கப்பட்டதும் கருடாழ்வாரின் புதிய செப்புச்சிலை செய்யப்பட்டு வழிபடப்பட்டது. கி.பி. 1415, 1416ஆம் ஆண்டுகளில் பல தெய்வங்களின் சன்னதிகள் மீண்டும் புதுப்பித்து அமைக்கப்பட்டன. கோபுரங்கள் கட்டப்பட்டன. கோயில் விமானம் மீண்டும் கட்டப் பட்டு பொன் வேயப்பட் டுள்ளது போன்ற தகவலை அறியக்கூடியதாக இருந்தது. உயரத்தில் தெரிந்த தங்கக் கலசக் கோபுரம் வெயிலில் கண்ணைப் பறித்தது.


ஸ்ரீ ரங்க கோயில் முகப்பு 1979

39 அரங்குகள், 50 சன்னதிகள், 1,000 தூண்கள் உள்ள ஆயிரங்கால் மண்டபம் போன்றவை கோயில் வளாகத் தில் இருக்கின்றன. அவற்றைப் பார்வையிட்டோம். ஒவ்வொன்றிலும் அமைந்துள்ள சிற்பங்களும், அலங்காரத் தூண்களும் சிற்பியின் கைவண்ணத் திற்குச் சான்று பகர்கின்றன.

நண்பகல் 12 மணிக்கே தரிசிக்க முடியுமென்பதால், உரிய நேரம் வரும்வரை ஆயிரங்கால் மண்டபத்தில், ஏனையோரைப்போல நாங்களும் காத்திருந்தோம். காற்றோட்டமானதும், விசாலமானதுமான அந்த மண்டபத்தில் அமர்ந்திருக்க உடம்புக்கு ஆறுதலாக இருந்தது. கருங்கல்லில் பொழியப்பட்ட தூண்களில் செதுக்கப்பட்டிருந்த குதிரைச் சவாரிசெய்யும் சிற்பங்கள் அங்கு இருந்தவர்களின் கவனத்தை ஈர்க்கவே செய்தது.

12 மணிக்கு மேலாடையைக் கழற்றிய நிலையில் சிறுசிறு குழுவினராக உள்நுழைந்தோம். விஷ்ணு பெருமான் சயனித்திருக்கும் கருவறை தங்கத்தால் செய்யப்பட்டது போல இருந்தது. தீபாராதனையின் ஒளியில் விஷ்ணு பெருமானின் உருவம் மேலுமொளி வீசியது.

பாதுகாப்பில் அதிக கவனம் செலுத்துவதால் கருவறையைச் சுற்றி நெருக்கமாக மூன்று பக்கமும் கம்பிகள் வேலிபோல் அமைக்கப்பட்டிருந்தன. கருவறையின் வலது பக்கத்தால் பிரவேசித்த அனைவரும், தரிசித்த சிறிது நேரத்தால் இடது பக்கத்தால் வெளியேறினர். பக்தி மேலோங்கச்செய்யும் கருவறையின் அமைப்பு என்னைப் பிரமிப்பிலாழ்த்தியது. விஷ்ணு பெருமானைத் தரிசித்த மனநிறைவோடும், மகிழ்வோடும் வெளியேறினோம்.

கோயிலைச் சுற்றி உள்புறமாக அமைக்கப்பட்டுள்ள வீதிகளைப் பார்வையிட்டோம். வெளிப்புற வீதிகளில் இருந்த பூக்கடைவீதி, மாம்பழ வீதியிலுள்ள மாம்பழச் சந்தை பிரசித்தமானவையாகக் காணப்பட்டன. வீதியிலிருந்த விற்பனை நிலையங்களில் ஞாபகார்த்தப் பொருட்கள் சிலவற்றைக் கொள்வனவு செய்துகொண்டோம்.

கருவறையின் மேல் கோபுரத்திலிலுள்ள தங்கம் பூசப்பட்ட விமானம் மின்வேலியால் பாதுகாக்கப்படுவது அதன் சிறப்பைக் காட்டுவதாக எமக்குள்ளே பேசிக்கொண்டு கோயில் வளாகத்தைவிட்டு வெளியேறினோம்.


ஸ்ரீ ரங்கம் குதிரைச் சவாரி சிற்பங்கள்

ஸ்ரீரங்கத்திலிருந்து வெளியேறிய நாம், பசி மிகுதியால் மதிய உணவை அருந்த உணவகம் ஒன்றிற்குள் புகுந்தோம். தனித்தனியான மிகச் சிறிய சில்வர் கிண்ணங்களில் பலவகை கறிகளுடன் ஊறுகாயும் வைக்கப்பட்டது. வெள்ளிக் கோப்பையில் சோறு, பப்படம், மோர் மிளகாய் போன்றவையுடன் தயிரும், குளிரூட்டப்பட்ட நீரும் வைக்கப்பட்டன.

நேரம் தாமதமானாலும் நிறைவாக உணவருந்தினோம். சுவையான உணவாகவும் இருந்தது. இரண்டு ரூபாவே ஒரு சாப்பாட்டிற்கு அறவிடப் பட்டது. அதிகமாக இருக்குமென்பது எமது எதிர்பார்ப்பு.

உணவகத்திலிருந்து புறப்பட்டு திருச்சி நகரில் பேரூந்து தரிப்பிடச் சூழலில் இருந்த சில கட்டடங்களைப் பார்வையிட்டதுடன், சில்வர் விற்பனை நிலையத்தில் தேவையான சில்வர் பாத்திரங்களைக் கொள்வனவு செய்தோம். அங்கு சில்வர் பொருட்கள் தனித்தனி விலையாக இல்லாமல் மொத்த நிறைக்கே நிர்ணயிக்கப்பட்டது.

இருளாகிவிட்டதால் வேறு எந்த இடத்தையும் பார்வையிடச் செல்ல முடியவில்லை. 'மகாத்மா காந்தி சந்தை'யையாவது பார்த்துவிட விரும்பினேன். ஆனால், அதற்கான அவகாசம் கிடைக்கவில்லை. விடுதிக்கு வந்து களைப்புத்தீர நன்றாக நீராடி ஓய்வெடுத்த பின்னர் இரவுணவாக இட்லி சாப்பிட்டு, அண்மையிலிருந்த திரையரங்கில் இரவு இரண்டாவது காட்சித்

திரைப்படம் பார்க்கச் சென்றோம். சுதாகர், சரிதா நடித்த 'பொண்ணு ஊருக்குப் புதுசு' திரைப்படம் அத்திரையரங்கில் காண்பிக்கப்பட்டது. பெரிய திரையரங்கு அது. 2ஆம் வகுப்பு ரிக்கற் பெறக்கூடியதாக இருந்ததால் அதைப் பெற்று உள்நுழைந்தோம்.

அத்திரைப்படத்தில் இடம்பெற்ற "ஓரம்போ ஓரம்போ ருக்குமணி வண்டிவருது..." என்ற பாடல் பார்வையாளரை வெகுவாகக் கவர்ந்தது. இராமேஸ்வரத்தில் நின்றபோது வீதிகளில் 'சைக்கிள் ரிக்ஷா' ஓட்டிகளின் வாயிலும் இந்தப் பாடலைக் கேட்க முடிந்தமை நினைவுக்கு வந்தது. அரங்கிலிருந்து வெளியே வரும்போது எல்லோர் வாயிலும் அந்தப் பாடல்தான்.

உடல் சோர்வாக இருந்ததால் மறுநாள் சற்றுத் தாமதமாக எழுந்து புறப்படக்கூடியதாக இருந்தது. என்னோடு கூடவந்தவருக்கு கச்சத்தீவில் அறிமுகமான சேகர் என்ற நண்பரைச் சந்திக்க திருச்சி ஏழாம் கட்டைக்குச் செல்லவேண்டுமென்பதால் காலை 9.00 மணியளவில் தஞ்சாவூர் நோக்கிப் புறப்பட்ட பேரூந்தில் பயணத்தைத் தொடர்ந்தோம்.

ஏழாம் கட்டைச் சந்தியில் தனது கடையிருப்பதாக குறித்திருந்ததற்கமைய அந்தக் கடைக்குச் சற்று முன்னாலுள்ள தரிப்பிடத்தில் இறங்கிக் கொண்டோம். எம்மை அடையாளம் கண்ட சேகர் தேடிவந்து வரவேற்று, அங்கிருந்து 100 மீ. தூரத்திலுள்ள தமது வீட்டிற்கு அழைத்துச் சென்றார்.

எம்மைக் கண்டதும் சேகரின் தாயாரும் சகோதரியும் அன்புடன் வரவேற்றனர். விறாந்தையில் அமர்ந்து எங்களுடன் உரையாடினர். நல்ல காற்றோட்டமாக இருந்தது விறாந்தை. அங்கு வைக்கப்பட்டிருந்த சிறிய றேடியோவில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் பாடல்கள் ஒலித்தவாறிருந்தன. நாங்கள் அப்பாடல்களை இரசித்துக் கேட்பதைக் கண்ணுற்ற சேகர், "இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன நிகழ்ச்சிகள் இங்கு இழுக்கவில்லையென்றால் இங்குள்ள ஒருவரிடமும் றேடியோ இருக்காது" என்றார். யாழ்ப்பாணத்தில் கேட்பதைப்போல் தெளிவாக அங்கே கேட்கக் கூடியதாக இருந்தது.

சேகரைச் சந்தித்து சிறிது ஓய்வின் பின்னர் வேளாங்கண்ணி நோக்கிய பயணத்தைத் தொடரும் நோக்கிலேயே எமது பயண ஒழுங்கு இருந்தது. ஆனால், அவர்கள் தங்கிச் செல்லுமாறு வற்புறுத்தியதால் வேறு வழியின்றி அன்று அங்கேயே தங்கிட நேரிட்டது.

அது ஒரு பழைய வீடு. நீளமாக அமைந்திருந்த அந்த வீடு நான்கு குடும்பங்களுக்குப் பிரிக்கப்பட்டுள்ளது. விசாலமான அறையும் அறைக்கு முன்னால் நான்கு பிரிவுகளையும் இணைக்கும் தடுப்புகளற்ற நீண்ட விறாந்தையும் இருந்தது. விறாந்தையிலேயே சமையல் செய்யப்படுகிறது. விறாந்தைக்கும் வீதியோர சுவர் மறைப்புக்கும் இடையில் சரிவாகச் செல்லும் கற்கள் பதிக்கப்பட்ட தரை உள்ளது. அதில் ஒவ்வொரு பிரிவு வீட்டிற்கும் குழாய்க் கிணற்று நீரை வெளியேற்ற 'வேம்பா' பொருத்தப்பட்டிருந்தது.

குடிநீர் முதல் அனைத்துத் தேவைகளுக்கும் அந்த குழாய்க் கிணற்று நீரே பயன்படுத்தப்படுகின்றது.

தனது கடையைப் பார்த்துவரச் சென்ற சேகர் திரும்பியதும் மதிய உணவை அருந்தினோம். சுவையான மதிய உணவு வழங்கியதுடன் அருகிருந்து கவனித்துச் சிறப்பித்தார்கள். உண்ட களைதீர பி.ப. ஒலிபரப்பாகும் இனிமையான பாடல்களை கேட்டவாறு அங்கேயே ஓய்வெடுத்தோம்.

சாயந்தரம் சுற்றாடலைப் பார்வையிட்டோம். அமைதி நிரம்பியதாய் இருந்தது அப்பகுதி. குறுக்கு வீதியில் குளம் இருப்பதாகக் கூறியமையால் அதைப் பார்த்துவரச் சென்றோம். அக்குளத்தில் ஆண்கள் ஒரு பக்கமும் பெண்கள் ஒரு பக்கமுமாக நீராடுவதிலும் உடைமாற்றுவதிலும் உடைகளைக் கழுவுவதிலும் ஈடுபட்டிருந்தனர். அது பெரிதான குளமன்று. ஆனாலும், பலரது தேவையை அது நிறைவுசெய்கிறது. குளத்தின் சுற்றாடல் மரங்களும் பற்றைகளும் அதிகமாக உள்ள பகுதியாக இருந்தது. அங்கு பலரும் காலைக்கடன் கழிக்கச் செல்வார்களாம்.

அங்கிருந்து புறப்பட்டு சேகரின் கடைக்குச் சென்று, முன்னால் நின்ற மரத்தின் நிழலில் போடப்பட்டுக் கிடந்த வாங்கில் அமர்ந்து, றேடியோவில் பாடல்களையும் செய்தியையும் கேட்டவாறு நேரம் போவதே தெரியாமல் அங்கேயே இருந்த நாம், இரவு தாமதமாக சேகரின் வீட்டு விறாந்தையில் உறங்கினோம். காலையில் கண்விழித்தபோது சேகரின் சகோதரி வாளிகளில் நீர் நிரப்பி வைத்திருந்தார் நாம் குளிப்பதற்காக. எமக்கு சங்கடமாக இருந்தது. அந்த வேம்பாவை இயக்கி நீரை மேற்கொண்டுவருவது பெரும் சிரமமாக இருந்த நிலையிலும் அந்தப் பெண் அதிகாலை எமக்காக இந்த உதவியைச் செய்ததை எப்படி மறக்க முடியும்.

காலை உணவை வழங்கி எம்மை வழியனுப்பினர். போதிய வசதி களற்ற வீடாக இருந்தாலும் அவர்கள் மனம் பெரிதாக இருந்தது. எம்மிட மிருந்த இராணி சோப்புகள் சிலவற்றை அவர்களிடம் கொடுத்து விடை பெற்று, வீட்டிற்கு முன்னால் நின்று தஞ்சாவூர் செல்லும் பேருந்தை மறித்து அதிலேறி பயணத்தைத் தொடர்ந்தோம்.

தஞ்சாவூர் பேருந்து நிலையத்தில் வேளாங்கண்ணி செல்லும் பேருந்துக்காகக் காத்திருக்கையில், அங்கு கண்ணாடியால் மறைக்கப்பட்ட பரோட்டா (றொட்டி) உணவகம் இருந்தது. சுறுசுறுப்பாக இருந்த அந்த உணவகம், தமிழ் நாட்டிலேயே சுவையான பரோட்டாவான தஞ்சாவூர் பரோட்டாவுக்குப் பேர்போனது என்று அங்கு பேசிக்கொண்டார்கள்.

எமக்கும் வாய் ஊறியது. சுவைத்துப் பார்ப்பதற்காய் உணவகத்தில் நுழைந்தோம். வைரமற்று இருந்த பரோட்டாவுக்கென அவர்கள் தந்த கறி பொருத்தமானதாக இருந்ததால் விரும்பி உண்ண முடிந்தது. உணவகத்தி லிருந்து பார்க்கையில் தஞ்சைப் பெரிய கோயிலின் மேற்பகுதி தெளிவாகத் தெரிந்ததால் மேலும் மகிழ்வாக இருந்தது.

சற்று நேரத்தால் பேருந்தில் ஏறி 'வேளாங்கண்ணி' நோக்கிய பயணத்தைத் தொடர்ந்தோம். இடையிடையே குடியிருப்புகள் நிறைந்த கிராமங்களும் ஆங்காங்கு தென்பட்ட வயல் நிலங்களைத் தவிர மற்றவை வறட்சியான பிரதேசமாகவே காணப்பட்டது. அகோர வெயிலால் பேருந்து பயணம் எமக்கு மகிழ்ச்சியைத் தரவில்லை. பேருந்து தரிக்கும் நிலையங்களில் வெள்ளரிக்காய் பிஞ்சில் உப்பும், மிளகு தூளும் இட்டு விற்பனை செய்தார்கள். அந்த நேரத்திற்கு அது ஒரு தேவாமிர்தம். அதை வாங்கிச் சாப்பிடும்போது தாகம் தீர்ந்து, ஓரளவேனும் ஆறுதலாக இருந்தது.

அனலாகச் சுட்ட வெயிலின் மத்தியில் நாகப்பட்டணத்தின் கடற் கரையோரம் அமைந்துள்ள 'வேளாங்கண்ணி அன்னை' ஆலய வளாகத்தை வந்தடைந்தடைய பி.ப. 4.00 மணிக்கு மேலாகிவிட்டது. நாம் இறங்கிய அந்த இடத்தில் வீசிய கடற்காற்று உடலுக்கு ஆறுதலைக் கொடுத்தது.

நாகை மாவட்டம்

நாகப்பட்டணம்

தமிழ்நாட்டில் தஞ்சாவூர் மாவட்டத்தில் கிழக்கே வங்காள விரிகுடா கடலோரமாக அமைந்துள்ளது நாகப்பட்டணம். நாகை என்றும் அழைக்கப் படுகின்றது. தீபகற்ப கழிமுகப் பகுதியான இது, வரலாற்றுச் சிறப்புமிக்க நகராகும். பண்டைத் தமிழ்நாடுகளில் ஒன்றான சோழ நாட்டில் ஒரு பகுதியாகிய நாகப்பட்டணம், முற்காலச் சோழர் காலத்திலேயே முக்கிய துறைமுக நகராக விளங்கியது. அக்காலத்தில் சோழர்குலவல்லிப் பட்டணம், நாவல் பட்டணம், கப்பல்களின் நகரம் என்றும் அழைக்கப்பட்டதாகவும், கி.மு. மூன்றாம் நூற்றாண்டுக்கு முற்பட்டகால ஆதாரங்கள் உள்ளதாகவும் அறியப்படுகின்றது.

தூய ஆரோக்கிய அன்னையின் ஆலயம் (தூய அன்னை வேளாங் கண்ணி ஆலயம்) அமைந்த காரணத்தால் 16ஆம் நூற்றாண்டிலிருந்து மேலும் சிறப்புப் பெற்றது இந்நகர்.

நாகபட்டணத்தின் வங்கக் கடலோரம், தஞ்சாவூர் மறை மாவட்டத் திற்கு உட்பட்ட பகுதியாக தூய வேளாங்கண்ணி ஆலயம் அமைந்துள்ளது. நாம் புறப்பட்ட நோக்கத்திற்கமைய அன்னையின் ஆலயத்திற்குச் செல்லும் வழியில் சிலவற்றை பார்வையிட்டோம். நாகபட்டணத்திலிருந்து செல்லும் பாதை கடலும் கடல்சார்ந்து தாம்போதியுடன் கூடியவையாக இருந்தன. பெரும்பாலானோர் மீன்பிடித் தொழிலையே செய்துவருகிறார்கள் என்பது அங்கு காணப்பட்ட தொழில் உபகரணங்களும் பதனிடும் மற்றும் ஏற்றுமதி நிறுவனங்களும் அடையாளப்படுத்தின. ஆங்காங்கு நெருக்கமான குடியிருப்பு களைக் காணக்கூடியதாக இருந்தது.

வேளாங்கண்ணி அன்னை திருத்தலம்

தூய ஆரோக்கிய அன்னையின் பெயரால் கட்டப்பட்ட கத்தோலிக் கத் திருத்தலம் இதுவாகும். இதனால், தூய ஆரோக்கிய அன்னை ஆலயம் என்றும் அழைக்கப்படுகின்றது. உலகின் பல இடங்களில் தோன்றிய அன்னை மரியாள், இயேசுவின்மீது நம்பிக்கை கொள்ளுமாறு அழைப்பு விடுத்துள்ளார். அவர் மனிதர்களுக்கு தோன்றிய இடங்களில் லூர்து அன்னை, பாத்திமா அன்னை, குவாடலூப்பே அன்னை, கார்மேல் அன்னை போன்ற பெயர்களில் அழைக்கப்படுகிறார். அவ்வாறே அன்னை மரியாள், வேளாங்கண்ணியில் தோன்றி காட்சியளித்ததால் வேளாங்கண்ணி அன்னை என அழைக்கப் படுகிறாள். வேளாங்கண்ணி என்றால் 'விவசாய நிலம்' என்று அர்த்தம்.

ஆழ்கடலும், கடற்கரையிலிருந்து ஆலய முகப்புவரை மற்றும் ஆலயத்தைச் சூழவும் வெண்மணல் பரவியிருக்க, வேளாங்கண்ணி அன்னை ஆலயம் வெண்மை நிறத்தில் வானோக்கி உயர்ந்திருந்தது. எல்லாச் மதங்களைச் சேர்ந்த திருப்பயணிகளும் சென்று ஆரோக்கிய அன்னையை வேண்டுதல் செய்து வருகின்ற இவ்வாலயம் இந்தியாவில் தலைசிறந்த திருத்தலங்களில் ஒன்றாகும். நம்பிக்கையுடன் வேண்டுதல் செய்வோர் தமது கோரிக்கைகள் நிறைவெய்தியமை கண்டு காணிக்கைகள் வழங்கியுள்ளனர்.



16ஆம் நூற்றாண்டில் நடைபெற்றதாக அறியப்படும்; பண்ணையாருக்கு பால் கொண்டுசென்ற இந்து மதச் சிறுவனுக்கு, வேளாண்மைக் குளத்தின் அருகே, குழந்தை இயேசுவுடன் காட்சி கொடுத்த அன்னை மரியாள், குழந்தைக்கு குடிக்கக் கொடுப்பதற்கென பால் கேட்டுப் பெற்றது. 'நடுத்திட்டி' என்னும் இடத்தில் தயிர் விற்ற கால் ஊனமான சிறுவனுக்கு கால் நலமடையச் செய்தது போன்ற புதுமைகள் வெளியாகிட ஆரோக்கிய அன்னையின் பக்தி பரவியது. அதனால் அன்னையை வழிபட குடிலொன்று அமைக்கப்பட்டது.

பாய்க் கப்பலில் பயணித்த போர்த்துக்கேய மாலுமிகள் கோரப் புயலில் சிக்கித் தவித்த வேளையில் அன்னை மரியாளிடம் உதவி கேட்டனர். தாங்கள் கரைசேரும் இடத்தில் ஆலயம் கட்டுவோமென உறுதியளித்தனர். புயல் அடங்கி கடல் சீற்றம் ஓய்ந்தது. மாலுமிகள் பாதுகாப்பாக கரையேறினர். அவ்வாறு கரையேறிய இடமே வேளாங்கண்ணி. மாலுமிகள், தம்மைக் காப்பாற்றிய அன்னைக்கு நன்றியாக அங்கே குடிலாக இருந்த வழிபாட்டிடத்தைச் சிற்றாலயமாகக் கட்டினர்.

மாலுமிகள் கரையை அடைந்த புதுமை நடந்த நாளும், அன்னை மரியாளின் பிறந்தநாளும் செப்ரெம்பர் 8ஆம் நாளாகும். அத்தினத்திலே வேளாங்கண்ணி ஆலயத் திருவிழா கொண்டாடப்பட்டு வருகிறது. தொடர்ந்த காலங்களில் போர்த்துக்கேயர் மற்றும் உள்ளூர் வாசிகளின் முயற்சியால் 'கோதி கட்டடக்கலை' அமைப்பில் பிரமாண்டமான ஆலயம் 17ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது.

வங்கக் கடலில் அன்னையால் காப்பாற்றப்பட்ட கப்பலிலிருந்த பாய்மரத்தின் ஒரு பகுதி மரமும், கப்பலிலிருந்த வேதாகமத் தகவல்களைக் கூறும் சீன மண் 'பீங்கான்'களும் வரலாற்றுச் சான்றுகளாக அங்கு இருக்கின்றன. பாய்மரம் ஆலயத்தின் கொடிமரமாகப் பயன்படுத்தப்படுகிறது. பீங்கான்கள் அன்னையின் பீடத்தில் பதிக்கப்பட்டுள்ளன. பால்க்காரச் சிறுவனுக்கு அன்னை காட்சி கொடுத்த குளம், கால் ஊனமான இடைச் சிறுவனுக்கு அன்னை காட்சி கொடுத்த இடம் போன்றவை அடையாளப் படுத்தப்பட்டுள்ளன.

முன்னைய ஆலயம் பெரிய ஆலயமாக இல்லாமல் பழமையின் சான்றாக காணப்பட்டது. பின்னாளில், இதன் நீட்சியாக பின்னோக்கியவாறு கட்டப்பட்ட ஆலயம் மாடியுடன் கூடியதாக இருந்தது. முன்னைய ஆலயத்திலேயே தங்க முலாம் பூசப்பட்ட அன்னையின் திருவுருவம் வைக்கப் பட்டுள்ளது. கணிசமான பக்தர்கள் இருந்தபோதும் அமைதிக்குச் சான்றாக இருந்த ஆலயத்தில் நுழைந்து மனநிறைவாக வழிபட்டோம்.

ஆலய விற்பனை நிலையத்தில் கொள்வனவு செய்த நேர்த்திப் பொருட்கள், இலங்கையிலிருந்து தந்துவிட்டவர்களின் நேர்த்திகள் போன்றவற்றை அன்னையின் பாதத்தில் வைத்துவிட்டு, மெழுகுவர்த்தி ஏற்றி காணிக்கை செய்து வெளியேறினோம்.

ஆலயத்திற்குப் பக்கத்தில் காணப்பட்ட கொடிமரம், கப்பல் பாய்மரம் என்பதை உடனே அறியக் கூடியதாக இருந்தது. படிப்படியான மரங்களின் இணைப்புகள், குறுக்காக நீட்டப்பட்ட உதவிக்கான மரக்கோல்கள், அதனை இணைத்திருக்கும் கயிறுகள் போன்றவை ஐயமின்றி உணர்த்தி நின்றன.

ஆலயத்திலிருந்து புறப்பட்டு, 'கிடுகு'களினால் வேயப்பட்டிருந்த தொடர் குடிசைகளில் ஒன்றை வாடகைக்குப் பெற்றுக்கொண்டோம். குடிசையின் உள்ளே நிலம் மணலாகவும், கழிவறை, குளிப்பதற்கான வசதிகள் பொதுவாகவும் இருந்தன. ஆலயம் தவிர்ந்த ஏனைய இடங்களெல்லாம் மணலாக இருந்ததால் நடமாட எமக்குச் சிரமமாக இருந்தது.

ஆலய போசனசாலையில் சிற்றுண்டியும், தேநீரும் அருந்தி வெளியேற இருள் சூழத் தொடங்கியது. வேறு இடங்களுக்குச் செல்லும் உத்தேசம் இல்லாமையால் குடிசைக்குத் திரும்பிவிட்டோம். இரவு, குடிசையில் நான் உறங்காமல் பழைய ஆலயத்தின் முகப்பில் பரவிக்கிடந்த வெண் மணலிலேயே உறங்கினேன். இலகுவான குளிரும், காற்றும் உறங்கலுக்கு இதமாக இருந்தது.

மறுநாள் காலை, ஆலயத்தில் நடைபெற்ற திருப்பலியில் பங்கு கொண்டோம். ஆலயத் திருவிழா இல்லாதவிடத்தும் திரளான பக்தர்கள் தரிசிக்க வருகை தந்துள்ளதைக் காணக்கூடியதாக இருந்தது. அதற்காகவே எட்டு மொழிகளில் தினமும் வழிபாடுகள் நடை பெறுகின்றன. இது பலருக்கும் வசதியாக இருக்கின்றது.

தொடர்ந்து வேண்டுதல் நிறைவெய்தியவர்களால் வழங்கப் பட்ட நினைவுப் பொருட்களின் 'அருங்காட்சியகத்தை'ப் பார்வையிட்டோம். அங்கு வைக்கப்பட்டிருந்த தங்கத் தாலிகள், தங்கம் மற்றும் மஞ்சள் நூலிலான கொடிகள், தங்கம் - வெள்ளியிலான உடல் உறுப்புகளின் பாகங்கள், தத்தமது கைபட எழுதப்பட்ட நன்றிக் கடிதங்கள், வைத்திய சான்றிதழ்கள், பல விதமான அடையாள - நினைவுப் பொருட்கள் போன் றவை பக்தர் அடைந்த பயன்களின் பெறுபேறுகளுக்குச் சாட்சியங்களாக இருந்தன. அவற்றைக் கண்ணுற்றதும் எமது உடல் சிலிர்த்தது. கண்கள் என்னை அறியாமலே கலங்கின.

ஆலய முகப்பிலிருந்து வங்கக் கடற்கரையை நோக்கிய திசையில், நடுவிலே பாதைக்கான வெளிவிட்டு இருபக்கமும் கிடுகுகள் கொண்டு அமைக்கப்பட்ட கடைத்தொகுதி காணப்பட்டது. பாதையும் கடைகள் இருந்த இடமும் மணலாகவே இருந்தன.

அக்கடைத் தொகுதியில் நேர்த்திக்கு 'சிகை மொட்டை போடும்' சலூனில் பலரும் மொட்டைபோட்டு, சந்தனம் பூசி வெளியேறிய வாறிருந்தனர். தொடர்ந்து வரிசையாக பலவகைப்பட்ட கடைகள் இருந்தன. அவற்றில் அன்னையின் படங்கள், புத்தகங்கள், செபமாலை, வரவணிக்கம், நினைவுப் பொருட்கள், ஒலிநாடாக்கள் போன்றவை விற்கப்பட்டன. சில பொருட்களை கொள்வனவு செய்துகொண்டோம்.

ஆலய போசனசாலையில் காலை உணவை அருந்தியபின், கால் ஊனமான இடைச் சிறுவனுக்கு அன்னை காட்சிகொடுத்து நலமடையச் செய்த இடத்தைப் பார்வையிட்டோம். அங்கு அப்புதுமை பற்றிய குறிப்புகள் எழுதப்பட்டு காட்சி ஓவியமாய் வரையப்பட்டிருந்தது.

முன்னைய ஆலயத்தின் பின்பக்கம் இணைந்தால்போல் கட்டப் பட்டுள்ள ஆலய முகப்பிலிருந்து பால்காரச் சிறுவனுக்கு அன்னை காட்சி கொடுத்த குளம்வரை மணல் பாதை செல்கின்றது. பாதையின் இருமருங்கும் இயேசுவின் திருப்பாடுகளை விபரிக்கும் பன்னிரெண்டு நிலைகள், மனித அளவிலான உருவங்கள் கொண்டு அமைக்கப்பட்டிருந்தன.

பலரும், மணல் பாதை வழியாக திருப்பாடுகளின் முதலாவது நிலை தொடங்குமிடத்திலிருந்து வேளாங்கண்ணி அன்னை காட்சி கொடுத்த குளம் வரை முழந்தாழ்படியிட்டவாறே நடந்து செல்வதைக் காணக்கூடியதாக இருந்தது. தாம் முன்வைத்த நேர்த்திக்கடனை நிறைவேற்றுவதற்காகவே அவ்வாறு நடந்து செல்கிறார்கள். மணல்மேல் முழங்காலால் நடப்பது எமக்கு

கடினமாக இருக்குமென்பதால் நாங்கள் அவ்வாறு செய்யவில்லை. செபம் சொல்லியவாறு சிலுவைப் பாதைத் தியானிப்புடன் நடந்தோம்.

பால்காரச் சிறுவனுக்கு அன்னை காட்சிகொடுத்த குளச் சுற்றாடலில் ஆங்காங்கு பாரிய பழமையான மரங்கள் காணப்பட்டன . காட்சி கொடுத்த குளம் சிறிதாக இருந்தது. தேவையின் நிமித்தம் கேணிபோல் அணைகட்டி குளம் சிறிதாக்கப்பட்டுள்ளது என ஊகிக்கக்கூடியதாக இருந்தது. தாராளமான நீர் அக்குளத்தில் காணப்பட்டது. குளத்தைச் சுற்றி கட்டப்படிருந்த அணைக் கற்கள் சிதைவுற்ற நிலையில் கிடந்தன. குளக்கரையோடு இணைந்தாற் போல் ஒரு மரமும் காணப்பட்டது. அந்த மரத்தில் முதுமை தெரிந்தது.

அன்னையின் உருவத்தில் வடிவமைக்கப்பட்ட பிளாஸ்ரிக் போத்தல்கள் அருகாமை இருந்த கடையில் விற்பனை செய்யப்படுகின்றன. போத்தலைப் பெற்று, குளத்து நிரைக் கோலி அதற்குள் ஊற்றிக் கொண்டோம். தீராத நோயையும் தீர்க்கும் சக்தி இந்த நீருக்கு உண்டென பலரும் பேசிக் கொள்வார்கள்.

நாம் விரும்பிவந்த யாத்திரையின் நோக்கம் நிறைவேறிய திருப்தியில் மதிய உணவருந்தச் சென்றோம். ஆலயப் போசனசாலையைவிட பிறிதொரு உணவகமும் இருந்தது. அதனில் பலவகை கறிகளுடனான உணவுகள் இருந்தால் அங்கேயே உணவை அருந்திவிட்டு குடிசை சென்று ஓய்வெடுத்த பின்னர், சாயந்தரம் கடைத் தொகுதியூடாக, சீற்றங்கொண்டு எழுந்துவரும் அலைகளையுடைய வங்கக் கடலைப் பார்வையிடச் சென்றோம். கடல் அலைகள் பயத்தையே உண்டுபண்ணியது. கரையில் அலைமோதும் இடத்தில் கால் வைத்தால் இழுத்துவிடும் போலிருந்தது. சிறிது நேரம் கடலுடன் இணைந்து காணப்பட்ட கரைக் காட்சிகளை, கடலைக் கிழித்தவாறு செல்லும் மீன்பிடித் தொழிலாளரின் படகுகளை பார்த்த இரசனையுடன் குடிசை திரும்பினோம்.

மறுநாள் காலையில் திருப்பலி முடிந்ததும் காலை உணவை அருந்திவிட்டு பேருந்தில் ஏறி மதுரை நோக்கிப் புறப்பட்டோம். வெயில் காரணமாக வரும்போது இருந்த சிரமம் இருக்கவே செய்தது. ஒருவாறாகச் சகித்துக் கொண்டு அன்று பிற்பகல் மதுரையை வந்தடைந்தோம். மதுரை மீனாட்சி அம்மன் கோயிலின் தெற்குப்பக்க பிரதான வாசலுள்ள திசையில் 200 யார் தூரத்திலுள்ள விடுதி ஒன்றில் தங்கிட இடம் கிடைத்தது.

மதுரை மாவட்டம்

மதுரை

தமிழ்நாடு மாநிலத்தில், மதுரை மாவட்டத்தில் அமைந்துள்ள தொன்மையான நகரம் மதுரை. மாவட்டத்தின் தலைநகராக இருக்கும் இந்நகர் மக்கள் தொகை அடிப்படை மற்றும் நகர்ப்புற பரவல் அடிப்படையில்

மாநிலத்தில் மூன்றாவது பெரிய நகரமாகவும், சுற்றுலாப் பயணிகள் நிறைந்த நகராகவும், தொழில்துறை மற்றும் கல்வி மையமாகவும் திகழ்கின்றது.

2500 ஆண்டுகளுக்கு முற்பட்ட வரலாற்றைக் கொண்டிருப்ப துடன் பாண்டிய மன்னர்களின் காலத்தில் அவர்களது தலைமையிடமாக விளங்கியுள்ளது. கி.மு. 6ஆம் நூற்றாண்டு முதல் கி.பி.13ஆம் நூற்றாண்டு வரை சங்ககால, இடைக்கால பாண்டிய மன்னர்கள் ஆட்சி புரிந்ததாக தகவல்கள் கூறுகின்றன. தமிழ்மொழியுடன் பெரிதும் தொடர்புடைய காரணத்தால் சங்ககாலம் எனக் குறிக்கப்படும் கி.மு. 3ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 3ஆம் நூற்றாண்டு வரையிலான காலத்தில் தமிழ்மொழி அறிஞர்களைக் கொண்டு முன்றாம் தமிழ்ச்சங்கம் அமைத்த பெருமை இந்நகருக்குண்டு.

ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றான சிலப்பதிகாரத்தில் கண்ணகி யால் எரிக்கப்பட்டதாகக் குறிப்பிடப்படும் மதுரை நகரமும் இதுவேதான். அன்னை மீனாட்சி பிறந்து, வளர்ந்து, ஆட்சி செய்யும் தெய்வீக இடமாகக் கருதப்படும் மதுரை, இந்து சமயத்தைச் சேர்ந்தவர்களின் முக்கிய சக்தித் தலமாக விளங்குகிறது.

மருத மரங்கள் நிறைந்த வைகைநதிக் கரையில் மதுரை அமைந் துள்ளதால் இந்நகருக்கு செழிப்பைக் கொடுப்பது வைகைநதியே. வேகமாக பாய்வதால் வேகநதி என்றும், மதுரையில் இருப்பதால் மதுரை ஆறென்றும் சிறப்புப் பெயர் பெற்றது. ஒருகாலத்தில் இந்த வைகையாறு பெருக்கெடுத்த காரணத்தால்தான் சிவபெருமான். திருவாதவூரடிகளாகிய மாணிக்கவாசக சுவாமிகள் பொருட்டு செம்மனச்செல்வி என்னும் பிட்டு வாணிச்சிக்கு, கூலியாளாகி மண் சுமக்கவேண்டி நேர்ந்தது? அந்த ஆற்றுநீர் இப்போது வற்றியிருந்தது. பலரும் ஆற்று மணல் விளையாட்டில் மகிழ்வுடன் ஈடுபட்டுக் கொண்டிருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது.


மீனாட்சி அம்மன் கோயில்

மதுரை நகரத்தின் மையப் பகுதியில் அமைந்துள்ள தொன்மையான இந்துக்கோயில் 'மீனாட்சி அம்மன் கோயில்' அல்லது 'மீனாட்சி சுந்தரேஸ் வரர் திருக்கோயில்' ஆகும். இங்கு மீனாட்சி அம்மன் மற்றும் சுந்தரேஸ்வரர் வழிபாடு நிகழ்கின்றபோதும் மீனாட்சி அம்மன் சந்நிதியே முதன்மை பெற்றது. சித்திரைத் திருவிழா என்று பொதுவாக அழைக்கப்படும் மீனாட்சி அம்மன் திருக்கல்யாணம் ஆண்டுதோறும் பத்து நாட்கள் கொண்டாடப்படும் முக்கிய திருவிழாவாகும்.

15 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள இக்கோயிலில் கலையழகு மிக்க எட்டு கோபுரங்களும், இரண்டு தங்கம் பொறிக்கப்பட்ட விமானங்களுடன் எட்டு விமானங்களும் உள்ளன. இந்திர விமானம் என அழைக்கப்படும் கருவறை விமானங்களை 32 சிங்கங்கள், 64 சிவகணங்கள், 08 வெள்ளை யானைகள் தாங்குகின்றன. 33,000 சிற்பங்கள் உள்ளன.

இக்கோயில் கிழக்கு மேற்காக 847 அடியும் வடக்கு தெற்காக 792 அடியும் உடையது. கோயிலுக்குள் இருக்கும் வீதிகளுக்கு ஆடி வீதி, சித்திரை வீதி, ஆவணி வீதி, மாசி வீதி எனச் சில உற்சவகால மாதங்களின் பெயர்களில் அழைக்கப்படுகிறது. இவற்றில் ஆடி வீதியின் வாசல்களில் ஒன்பது நிலைகளை யுடைய நான்கு உயர்ந்த கோபுரங்கள் இருக்கின்றன. இவற்றுள் தெற்கு பிரதான வாசலிலுள்ள கோபுரம் மிக உயரமானதாகும். இதன் உயரம் 170 அடியாக (51.9 மீ.) இருக்கிறது. கிழக்கிலுள்ள கோபுரமே ஆரம்பத்தில் கட்டப் பட்ட கோபுரமாகும். இது கி.பி. 1216-1238 காலப் பகுதியைச் சேர்ந்தது என அறியப்படுகிறது.

பல பெயர்களில் வேறுபட்ட சிற்ப வேலைப்பாடுகளைக் கொண்ட கலையழகுமிக்க 08 மண்டபங்கள் இருக்கின்றன. ஆயிரங்கால் மண்டபம் மிகச் சிறப்புப் பெற்ற ஒன்றாகும். இம்மண்டபத்தில் சிங்கம், யானை உருவங்கள் செதுக்கப்பட்ட 985 சிறப்பான வியக்கவைக்கும் தூண்கள் அமைக்கப் பட்டுள்ளன. இதுதவிர கோயிலின் கிழக்கு கோபுரத்திற்கு எதிரே 124 சிற்பத் தூண்கள் அடங்கிய மண்டபம் உள்ளது. இம்மண்டபம் விற் பனை நிலையங்களால் நிறைந்துள்ளது.



மீனாட்சி அம்மன் சந்நிதியின் முன்பாக அஷ்ட சக்தி (எட்டு சக்தி) மண்டபம் அமைந்துள்ளது. வாயிலில் விநாயகர், முருகன் உருவங் களுக்கு இடையில் மீனாட்சி கலியாணம் காணப்படுகிறது. மண்டபத்தின் உள்ளே அமைந்துள்ள தூண்களில் எட்டு சக்தியின் வடிவங்கள் அழகுற அமைந்துள்ளன. அடுத்து உள்ள மீனாட்சி நாயக்கர் மண்டபத்தைத் தாண்டி உள்ளே சென்றால் மீனாட்சி அம்மனின் சந்நிதி இருக்கின்றது.

நேரம் போனதே தெரியாமல் கோயில் மற்றும் மண்டபங்களின் அழகையும் அமைப்பையும் இரசனையோடு பார்த்த பின்னர் மேலாடையைக் கழற்றிக்கொண்டு மீனாட்சி அம்மன் சன்னதிக்குள் நுழைந்தோம். அம்மன் சந்நிதி கருவறையில் கையில் கிளியை ஏந்தியவாறு காட்சிதரும் மரகதக் கல்லாலான மீனாட்சி அம்மன் உருவத்தைக் கண்டேன். அம்மனின் பேரழகையும், பேரொளியையும் சொல்லிட வார்த்தைகளில்லை. தீபங்களின் ஒளியால் ஜோதி வடிவாகத் தெரிந்தார்.

சுவாமி சந்நிதி கருவறையில் சிவலிங்க வடிவில் காட்சிதரும் சுந்தரேஸ்வரர் சுவாமியையும் தரிசித்த பின்னர் பேரும் புகழும் பெற்ற பொற்றாமரை வாவியைப் பார்வையிட்டோம். இதற்குப் பக்கத்திலுள்ள

மண்டபத்தின் சுவரில் வள்ளுவரின் குறள்கள் அனைத்தும் பகுதி பகுதியாக எழுதப்பட்டிருந்தன.

நான் கத்தோலிக்க சமயத்தைச் சார்ந்தவன் என்பதால் இந்து சமயத்துவரின் வழிபாட்டு முறைகள் பற்றி பெரிதும் அறிந்திருக்கவில்லை. இது கோயிலின் உள்ளே செல்வதற்கு சங்கடமாக இருந்ததால் ஒருமுறை மட்டுமே உளமுருக தரிசித்த பின்னர் மீண்டும் தரிசிக்க முயற்சிக்கவில்லை. அதே வேளை, விடுதியில் மூன்று நாட்கள் தங்கியிருந்ததாலும் கோயிலுக்கு அண்மையில் விடுதி இருந்தமையாலும் அடிக்கடி கோயில் பக்கம் சென்று பார்வையிட்டு வரக்கூடிய வாய்ப்புகள் நிறையவே இருந்தன. அதைப் பயன்படுத்தி கோயிலின் கோபுரங்களிலும் மண்டபங்களிலும் அமைக்கப் பட்டுள்ள பல்லாயிரக் கணக்கிலான சிற்பங்களை அடிக்கடி சென்று பார்த்து வியந்ததுண்டு. சலிப்போ ஏற்படாது.

நுழைவாயிலின் வெளி வீதியில் நிறையக் கடைகள் காணப்பட்டன. அங்கு விற்பனை செய்யப்படும் 'பழக்கலவை' எனக்கு மிகவும் பிடித்ததாக இருந்ததுடன் அகோர வெயிலுக்கு ஏற்றதாகவும் இருந்தது. கோயில் பக்கம் செல்லும் ஒவ்வொரு தடவையும் 'பழக்கலவை' சாப்பிடத் தவறுவதில்லை. புடவைக் கடைகள் மீனாட்சி அம்மன் கோயிலுக்கு வடக்குப் பக்கத்தாலும் வேறு தேவையான பொருட்களைக் கொள்வனவு செய்யக்கூடிய கடைகள் கோயிலுக்கு மேற்கு மற்றும் கிழக்குப் பக்கத்தாலும் நிறையவே இருந்தன.


இலங்கைக்குக் கொண்டு வருவதற்கான 'சாறி'களை இரண்டு நாட்களாக கொள்வனவு செய்தோம். புடவைக் கடைகளில் 'றோசாப்பு ரவிக்கைக்காரி' எனப் பெயர் பொறித்த சாறிகளே விற்பனையில் களைகட்டி யிருந்தன. சில சாறிகளை நாமும் கொள்வனவு செய்தோம். கடைகளைத் தவிர விசாலமான சில வீடுகளிலும் புடவை விற்பனை நடைபெறுவதை அறிந்து ஒரு வீட்டுக்குச் சென்றோம். அங்கு தரையில் கம்பளம் மற்றும் புற்பாய்கள் விரிக்கப் பட்டிருந்தன. நாம் அதில் உட்கார்ந்துகொண்டோம். எமக்கு முன்னால் பல ரகமான, மாறுபட்ட தரத்திலான சாறிகள் போடப்பட்டன. முதலாளி சாறிகள் பற்றிய விபரங்கள், விலைகளைக் கூற, ஒருவர் ஒவ்வொரு சாறியாகத் தனது உடலைச் சுற்றி எமக்குக் காண்பித்தார். நாம் குறிப்பிட்ட சாறிகள் அனைத் தையும் சலிப்பின்றி அவ்வாறே செய்தார். நாம் நிராகரித்த புடவைகளை வேறொருவர் மடித்துக்கொண்டிருந்தார். புடவைக் கடைகளோடு ஒப்பிடு கையில் விலை குறைவாகவே இருந்ததால் அங்கும் தேவையான சாறிகளைக் கொள்வனவு செய்தோம்.

தள்ளு வண்டிகளிலும் வீதிகள் தோறும் வியாபாரம் நடை பெறுகிறது. அவ்வண்டில்களில் பலதரப்பட்ட பொருட்கள் இருக்கும். ஒரு வண்டிலில் அவற்றில் எதை எடுத்தாலும் ஐந்து ரூபாவாகவும், பிறிதொரு வண்டிலில் வேறு பொருட்களாகவும், எதை எடுத்தாலும் பத்து ரூபாவாகவும் இருக்கும். எமக்குப் பயன்படக்கூடியவற்றை கொள்வனவு செய்தோம்.

காலை நேரத்தில் பால் வியாபாரம் புதிய பாணியில் நடை பெறுவ தைக் கண்டேன். பால் பெற்றுக்கொள்ளக்கூடிய பசுவை வைத்திருப்பவர், பசுவையும் அது ஈன்ற கன்றையும் கூட்டிக்கொண்டு, தம்மிடம் பால் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர் வீடுகளுக்குச் சென்று, வாசலில் நின்று குரல் கொடுத்ததும் வீட்டிலிருப்பவர் வெளியே வந்து நிற்பார். உடனே தாம் வைத்திருக்கும் அளவுப் பாத்திரத்தில் பசுவிலிருந்து பாலைக் கறந்து வீட்டுக் காரரிடம் ஒப்படைப்பார். இவ்வாறே ஒவ்வொரு வீடுகளுக்கும் சென்று தொடர்ந்தார்.

ஒரு தடவை, கன்று ஒன்றின் தோலுக்குள் வைக்கோல் அடைத்து அதனுடலை முழுமையாக்கி தடியொன்றில் பொருத்தி தூக்கிக்கொண்டு கூடவே பசுவுடன் வருவதைக் கண்டேன். வீட்டு வாசலில் வாடிக்கையாள ருக்குக் குரல்கொடுத்து வீட்டுக்காரர் வந்ததும் 'டம்மி' கன்றை வாசல் கதவில் சாத்திவிட்டு பசுவிலிருந்து பாலைக் கறந்து கொடுத்தார்.

நான்தான் ஆச்சரியமாகப் பார்த்தேனே தவிர வீதியில் சென்ற எவரும் அதுபற்றி அக்கறைப்படவில்லை. பொறுமையிழந்த நிலையில் வீதியால் வந்த



பெரியவர் ஒருவரிடம் கேட்டேன். 'பசு ஈன்ற கன்று இறந்துவிட்டதால், அப் பசுவிலிருந்து பாலை பெறுவதற்காக இவ்வாறு செய்கிறார்களெனச்' சுருக்கமாக விளக்கமளித்தார்.

தங்கியிருந்த நாட்களில் இருவேறு திரையரங்குகளில் திரைப்படம் பார்க்கச் சென்றிருந்தோம். நவீன திரையரங்குகளாக இருந்தன அவை. முதல்நாள் பார்த்த திரைப்படம் சிவாஜி, கே.ஆர்.விஜயா நடித்த சிவாஜி கணேசனின் 200ஆவது படமான 'திரிசூலம்'. மற்றையது கமல், றஜனி, ஸ்ரீதேவி நடித்த 'வருவான் வடிவேலன்'. இரண்டு படங்களுக்கும் பட மாளிகை பார்வையாளரால் நிறைந்திருந்ததாயினும் எமக்கு முதலாம் வகுப்புகான நுழைவுச்சிட்டை பெறக்கூடியதாக இருந்தது. சினிமாப் படங்கள் பார்ப்பது எமது நோக்கமில்லாது விட்டாலும் பொழுதுபோக்காகப் பார்த்துக் கொண்டோம்.

சற்றுத் தூரத்திலிருந்த வரலாற்று நினைவிடமும், புகழ் பெற்றதுமான திருமலை நாயக்கர் அரண்மனையைப் பார்வையிடச் சென்றோம். அவ்வேளை

அரண்மனை முற்றிலும் புனரமைப்பிற்கு உட்படுத்தப்படுவதால் மறைக்கப் பட்டிருந்தது. இதனால் எவரும் உள்செல்ல அனுமதிக்கப்படவில்லை. ஏமாற்றத்துடன் திரும்பினோம்.

வரும் வழியில் இருந்த முடக்கில் பலரும் வட்டமாக நின்று பார்வை யிட்டுக் கொண்டிருந்தனர். அருகே சென்று பார்த்தோம். பன்னிரெண்டு வயது மதிக்கத்தக்க சிறுவன் தார் வீதியில் பல வர்ண சோக்கட்டிகளினால் திரிசூலம் படத்தில் வருகின்ற சிவாஜி கணேசனின் தோற்றத்தை வரைந்துகொண்டி ருந்தான். அதனைப் பார்த்தவாறு அசந்துபோய் நின்றோம். இந்த வயதில் இவனுக்கிருக்கும் ஆற்றலை பாராட்டாமல் இருக்க முடியாது. சில்லறை நாணங்யகளை அவனுக்கு போட்டுவிட்டு அகன்றோம்.

தொடர்ந்து சுற்றாடலில் உள்ள இடங்களை நடையில் சென்று பார்வையிட்டு, களைப்புத்தீர ஓய்வெடுத்த பின்னர், தொடருந்தில் இராமேஸ்வரம் செல்வதற்காக மதுரைச் சந்தி தொடருந்து நிலையத்தை அடைந்தோம். அங்கு ஒரு கூட்டம் நின்றதைக் கண்டு, பொருட்களின் பாதுகாப்புக்கு ஏனையோர் நிற்க நானங்கு சென்றேன். ஒரு சிறுவன் ரி.எம்.சௌந்தராஜனின் பாடல்களை வாத்தியம் எதுவும் இல்லாமல், அசல் சௌந்தராஜனின் குரலில் பாடிக்கொண்டிருந்ததைக் கேட்டதும் மலைத்துப் போனேன். நின்றவர்கள் சில்லறை போட்டனர். என்னிடம் சில்லறை இல்லாதபடியால் வேதனையுடன், இவ்வளவு சிறு வயதிலும் இத்தனை திறமைகளா என்று வியந்தவாறு திரும்பினேன்.

பல மேடைகளைக் கொண்டதாய் அமைந்திருந்த மதுரை பிரதான தொடருந்து நிலையத்தின் மேடைகளில் 'குறவர்' களே திரளாக இருந்தனர். பல நாட்கள் அங்கிருப்பவர்கள்போல மேடைகளிலேயே சமைத்து உண்டும், படுத்தும் கிடந்தனர். புகையிரதப் பாதை எங்கும் வெற்றிலை எச்சில் படிந்த வாறே இருந்ததால் அருவருப்புடனே பார்க்க வேண்டியிருந்தது. அங்கு நிற்கவே வெறுப்பாயிருந்தது. நாம் செல்லவேண்டிய தொடருந்து வந்து தரிக்கவும் அதிலேறிக்கொண்டோம். இருக்கைகள் தாராளமாக இருந்ததால் விரும்பிய இருக்கையில் அமர்ந்துகொண்டோம். நன்றாக உறங்கி பாம்பன் பாலத்தில் பயணிக்கையிலேயே கண்விழித்து அதிகாலையில் இராமேஸ் வரத்தை வந்தடைந்தோம்.

இலங்கை திரும்புதல்

வாரத்தில் மூன்று நாட்களே நீரூர்தி சேவை நடைபெறுவதால் மறுநாள்தான் நாங்கள் பயணிக்க முடியுமென்பதால் சேவியரின் வீட்டிலேயே மீண்டும் தங்கியிருந்தோம். அதுதான் எமது பொருட்களுக்குப் பாதுகாப்பான இடமாக இருந்தது. அன்றைய இரவு எட்டு மணியளவில் உணவு வாங்கு வதற்காக முச்சந்தியிலிருந்த உணவகத்திற்குச் சென்றிருந்தவேளை, அங்கு நடந்த நிகழ்வு எம்மை ஒருகணம் கலங்கவே செய்தது.

"ஓரம்போ ஓரம்போ ருக்குமணி வண்டிவருது..." எனப் பாடியவாறு 'சைக்கிள் ரிக்சோ'வை செலுத்திவந்த ஒருவன் தனக்கு எதிர்ப்புறமாய் வந்த 'சைக்கிள் ரிக்சோ'வுடன் உரசிவிட்டதால் இருவருக்கும் இடையே சூடான வாய்த்தர்க்கம். சற்று நேரத்தால் இருவர் சார்பிலும் பலரங்கு கூடிவிட்டனர். வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாற, கூடநின்றவர்கள் ஓடிச் சென்று சுற்றாடலி லிருந்த கடைகளின் கூரைகளிலிருந்து கம்புகளை இழுத்தெடுத்துக்கொண்டு வந்ததும் கம்புச் சண்டை தொடங்கி விட்டது. நாங்கள் ஒதுங்கி நின்று கொண்டோம் சண்டையைப் பார்த்தவாறு. கணத்தினில் கம்புகளை இத்தனை பேரும் எவ்வாறு எடுத்தார்களோ, கொண்டு வந்தார்களோ தெரியவில்லை எம்ஜிஆர் நடித்த படங்களில் பார்த்த ஞாபகம் வந்தது.

அங்குவந்த பெரியவர்களின் தலையீட்டால் சண்டை நிறுத்தப் பட்டது. அனைவரும் கலைந்து சென்றனர். நாம் உணவகம் சென்று 'பறோட்டா'வும் கறியும் பொதிசெய்துகொண்டோம். அவ்வேளை நடந்த சண்டைபற்றி உணவகச் சிப்பந்தியிடம் கேட்டேன்.

"இது நெடுகத்தானுங்க நடக்கிறது" எனச் சாதாரணமாகப் பதிலளித்துவிட்டு தன் வேலையைக் கவனிக்கத் தொடங்கினான். ஆனால், எமக்குள் இருந்த பயம் விடுபட்டதாயில்லை. ஊரில் இவ்வாறான கம்புச் சண்டையை நாம் பார்த்ததில்லை என்பதால்.

என்னுடன் கூடவே வந்தவர்கள் வேளாங்கண்ணி ஆலய யாத்திரை யையே இலக்காகக்கொண்டு வந்திருந்தமையால் வேறு இடங்களுக்குச் சென்று பார்த்துவர விருப்பற்று இருந்தார்கள். இதனால் நாங்கள் சென்ற இடங் களில்கூட அவ்விடங்களை முழுமையாகச் சுற்றிப் பார்க்க முடியவில்லை. கால அவகாசம் இல்லாமையும் ஒரு காரணம். ஆனாலும், இந்த யாத்திரையால் பழமையானதும், பிரபல்யமானதும், இந்திய கட்டடக் கலையின் உன்னதங்களை எடுத்தோதுவதுமான கோவில்கள் பலவற்றைப் பார்த்துத் தரிசித்தமை மறக்கமுடியாத, எல்லோருக்கும் கிடைக்கமுடியாத கொடையாக அமைந்திருந்தது.

மீண்டுமொருமுறை இந்திய பயணத்தை மேற்கொள்ளும்போது வேறுபல இடங்களையும் சுற்றிப்பார்க்க இதுதூண்டுகோலாக இருக்கும் என்ற மனநிறைவில் இராமேஸ்வரம் சுங்கப்பகுதியில் காணப்பட்ட நீண்ட வரிசை யில் பொதிகளோடு இணைந்து நின்றேன். வரிசை மெதுவாகவே நகர்ந்தது. அங்கு நின்ற தரகர்கள் தாம் உதவி செய்வதாக பலதடவைகள் கேட்டதுடன் அதற்கான கூலியை பேரமும் பேசினார்கள். எம்மிடம் அதிக பொருட்கள் இல்லாமையால் நாம் அவர்களை நிராகரித்தோம். அவர்கள் விடவில்லை மாறிமாறி வந்து கேட்டுக்கொண்டேயிருந்தார்கள்.

வெளி வாசலை நெருங்கிவிட்டோம். தரகர் ஒருவர் வந்தார். "உள்ளே பெரிய ஐயா நிற்கிறார். அவரட்ட யாரும் தப்ப ஏலாது. அநியாயமாக காசு கட்டப் போறிங்க" என்று கூறியதற்கும் நாங்கள் மறுத்தோம். அவர் இறுதி

யாக, "நீங்க போயிடுவீங்களா?" என்றார். நாம் எதுவும் கூறாது உள்ளே சென்றோம். ஆனாலும், உள்ளத்தில் பயம் தொற்றிக்கொண்டது.

எனக்கு முன்னால் பதினைந்து பயணிகள் வரை நின்றனர். உள்ளே தரகரால் ஏற்பாடு செய்யப்பட்டவர்கள் பயணிகளை போட்டிபோட்டு அழைத்துக்கொண்டு பொருட்களைத் தூக்கிச் சென்றனர். நாம் வரிசையிலேயே சென்றோம். எமது முறை வந்ததும் தனித்தனியாக குடிவரவு குடியகல்வு பிரிவினரின் பரிசோதனை முடித்து சுங்க அலுவலகரிடம் சென்றோம். நான் சென்ற அலுவலகர், "உதவிக்கு யாரும் வரயில்லையா" என்று கேட்டார். நான், "காசில்லை" என்றேன். சிரித்துவிட்டு பொருட்களை பார்வையிட்டார்.

சிறுவர்களுக்கான 'ரீசேட்டு'கள் இரண்டை எடுத்து, "இதை நான் எடுக்கட்டா பசங்க கேட்டவங்க" என்று கூறினார். நான் தலையசைத்தேன். அதன் விலை சோடி ஐந்து ரூபா. ஆனால், எனது தெரிவை அவர் தனதாக்கிக் கொண்டதால் மனதிற்குச் சங்கடமாக இருந்தது. ரீசேட்டுகளை எடுத்து தனக்குப் பக்கத்தில் கீழே போட்டு விட்டு எனது பொருட்களை ஒழுங்கமைக்க உதவிசெய்து வழியனுப்பி வைத்தார்.

ஒருவாறாக முடித்து அங்கு நின்ற வள்ளங்களில் பொதிகளுடன் சென்று நீரூர்தியில் ஏறிப் பயணத்தைத் தொடர்ந்தோம். வரும்போது இருந்த பயம் நீங்கியவனாய் இலங்கைக்குத் திரும்புகிறோமென்ற சந்தோஷம் நிறைந்த பயணமாக அமைந்தது. களைப்புற்றிருந்ததால் முன்னர் பார்த்த காட்சிகள் இப்போது கவனத்தைப் பெறவில்லை.

நீரூர்தி தலைமன்னார்த் துறையை அடைய இரவு 8.00 மணியாகி விட்டது. குடிவரவு குடியகல்வு பரிசோதனை முடிந்ததும் சுங்கப் பிரிவுக்குச் சென்று வரிசையில் நின்றேன். இலங்கையிலிருந்து வருகைதந்து சேலை கொள்வனவு செய்பவர்களுக்கு மதுரையிலுள்ள விற்பனை நிலையங்களில், இரண்டு - மூன்று சேலைகளை ஒன்றாக சேர்த்து மடித்து ஒரு சேலை போன்ற தோற்றத்தில் அழுத்தம் செய்து கொடுப்பர். அவ்வாறே எமக்கும் செய்து தந்திருந்தார்கள். இராமேஸ்வரத்தில் நிகழ்ந்ததைப்போல சுங்கப் பிரிவு அலுவலகர் சேலையை எடுத்துக் கொண்டால் பெரும் பாதிப்பாக இருக்கு மென்பதால், எனது கடவுச்சீட்டினுள் ஐம்பது ரூபாவை வைத்து நடுக்கத் துடன் கொடுத்தேன். அலுவலகர் அதை எடுத்துக்கொண்டதும் எனக்கு உயிர் வந்ததுபோல இருந்தது. மேலோட்டமாகப் பொருட்களைப் பார்வை யிட்ட பின்னர் வெளியேற அனுமதித்தார்.

வெளியே வரும்போது இரவு 10.00 மணி ஆனதால் நாம் புறப்படும் போது ஒப்படைத்த தேங்காய் எண்ணெய்த் தகரத்தை மீளப்பெற முடிய வில்லை. மறுநாள்தான் பெறமுடியும். அதுவும் எவ்வளவு நேரத்தைச் செலவழிக்க வேண்டுமோ எனத் தெரியாததால் அதற்காகக் காத்திருப்பதை விடுத்து யாழ்ப்பாணம் செல்வோமெனத் தீர்மானித்தோம்.

நாங்கள் வெளியே வந்த நேரம் யாழ்ப்பாணம் செல்வதற்குரிய


பேரூந்தோ, தொடருந்தோ இருக்கவில்லை. மறுநாள் காலை 6.00 மணிக்குத் தான் பேரூந்து புறப்படுமென்பதால் தொடருந்து நிலையத்தில் தங்குவதற்கு முடிவெடுத்தோம்.

அந்நேரம் தற்செயலாக எமது ஊரைச்சேர்ந்த 'ஜெயபாலன்' என்ற நண்பனைச் சந்தித்தேன். அவனுடன் ஐந்து பேர் வாடி போட்டுத் தங்கி 'நைலோன் வலைத் தொழில்' செய்கிறார்கள். அன்று அவன் தொழிலுக்குப் போகாமையால் அவனைச் சந்திக்கக்கூடியதாக இருந்தது.

ஜெயபாலன் எங்களை வாடிக்கு அழைத்துச் சென்றான். நாங்கள் பசியுடன் இருப்பதை அவன் உணர்ந்திருக்கவேண்டும். ஏற்கெனவே தண்ணீர் ஊற்றி வைத்திருந்த சோறுடன் கருவாடும், வெங்காயமும் தந்தான். அந்நேரப் பசிக்கு அதனை விருந்தாக எண்ணி அருந்தினோம்.

களைப்பு மிகுதியால் உடனேயே உறங்கி ஓய்வெடுத்து மறுநாள் காலை 6.00 மணிக்கு புறப்பட்ட பேரூந்தில் யாழ்ப்பாணம் நோக்கிய பயணத்தைத் தொடர்ந்தோம்.

போதிய முன்னனுபவம் இல்லாத நிலை காரணமாக கடல் கடந்த நாட்கள் - 02 பயணத்தில் இந்தியாவில் பார்க்கவேண்டிய, அனுபவிக்க வேண்டியவற்றில் சிறு துளியையே அனுபவிக்க முடிந்தது. சில ஆண்டுகளின் பின்னர் தொடர்ந்த இந்தியப் பயணங்களில் பெற்ற அனுபவங்கள் மாறுபட்டவை. பார்வையிட்ட நகர்கள், இடங்கள் அதிகமானவை. அவற்றை கடல் கடந்த நாட்கள் - 07 இல் உங்களுடன் பகிர்ந்துகொள்கின்றேன். ■



தலைமன்னார் கடற்கரை விளக்கு

கடல் கடந்த நாட்கள் – 03

புகலிடம் தேடிய பயணங்கள்

நாட்டின் தழும்பல் நிலை


சுதந்திரம் வழங்கிய பிரித்தானியர் செய்யத் தவறிய விடயத்தில் அப்போதிருந்த தமிழ்த் தலைமைகள் உடன்பட்டுப்போன வரலாற்றுத் தவறே இலங்கையில் தொடராக உருவான பல பிரச்சினைக்குக் காரணமாக இருந்தது என பின்நாளில் உணரப்பட்டதும், தமிழ்த் தலைமைகளால் மாற்றுவழி காண எடுக்கப்பட்ட முயற்சிகள் பயனற்றும் முடக்கப்பட்டும் போனதுமே உரிமைப் போருக்கு தமிழர் தரப்பைத் தூண்டவும் அதனைக் கையிலெடுக்கவும் வழிவகுத்தது என்றே சொல்லலாம். இதனால் பொற்காலத்தில் நிலவிய அமைதியில் கல்லெறி விழவும் பனிக்கட்டியைப்போல் உருகிச் செல்லவும் தொடங்கியது.

ஏற்கெனவே, சிங்கள அரசியல் தலைமைகள் ஊன்றிவிட்ட விதையால் விழிப்புற்ற தமிழ் அரசியல் தலைமைகள் 1976இல் தொடக்கி வைத்த 'தமிழ் ஈழக் கோரிக்கை' இளையோரின் உணர்வுகளைத் தட்டி யெழுப்பியது. ஆனாலும், தலைமைகளின் ஸ்திரமற்ற மற்றும் நலன்தேடும் செயற்பாடுகளால் வெறுப்படைந்த இளையோரிடையே அவர்கள் ஏற்றிய தீச்சுடரை அணையாது காத்து வளர்த்தெடுக்கும் ஆர்வம் வெளிப்படத் தொடங்கியது.

இதற்கு நெய் வார்த்தாற்போல், அரச தலைமை, காடையர்கள் ஊடாக 1977 வன்செயலை நிகழ்த்தி தமிழ் மக்களுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்திய செயலானது மாறாத வடுவைத் தோற்றுவித்தது. வன்செயலால் விரக்தியும் பாதிப்புமுற்ற மக்கள், தமிழர் தலைமைகளின் சாத்வீகப் போராட்டத்தில் முற்றாக நம்பிக்கை இழந்த இளைஞர்கள், ஏற்கெனவே பல்கலைக்கழக அனுமதிக்காக அரசால் அமுல்படுத்தப்பட்ட தரப்படுத்தல் கொள்கையால் பெரும் பாதிப்பை எதிர்நோக்கியிருந்த மாணவர்கள் இறுதித் தெரிவாக ஆயுதப் போராட்டத்துக்கான பாதையைத் திறந்தனர்.

தமிழனாய்ப் பிறந்ததனால் தாம் அனுபவித்துக் கொண்டிருக்கும் இன்னல்களை ஜீரணிக்க முடியாத புத்திஜீவிகள் - சாதாரண மக்கள், புதிய பாதையைத் தேர்வு செய்த இளைஞர்களின் செயற்பாடுகளுக்கு ஊக்கம் கொடுத்தனர். மக்களின் வரவேற்பினால் எதிர்பாராத இடங்களிலெல்லாம் அரசுக்கெதிரான தாக்குதல்கள் இடம்பெற்றன... அதேவேளை இராணுவத்தின் பழிவாங்கலால் உயிர், பொருள் இழப்புகளையும் மக்கள் சந்தித்தனர்.

இதனை முளையிலேயே கிள்ளியெறிந்திட அரசாங்கம் பிரயத்தனம் செய்து, தமிழருக்கு பெரிதும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்றியது. இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்ட கையோடு ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் மருமகனான 'பிரிகேடியர் வீரதுங்க', "பயங்கரவாதத்தை முற்றாக ஒழித்து விடுங்கள்" என்ற பணிப்போடு 1979 பிற்பகுதியில் யாழ்ப்பாணம் அனுப்பப் பட்டார். இதன் பின்னர்தான் இராணுவம் தமிழ் பிரதேசங்களில் முழு மூச்சுடன் செயற்பட்டது. சந்தேகமான இளைஞர்கள் இரவோடிரவாகக் கைது செய்யப்பட்டனர்... அவர்களில் சிலர் சுவடே இல்லாமல் மறைக்கப்பட்டனர்... சிலரது உடலங்கள் வீதிகளில் கண்டெடுக்கப்பட்டன... இவற்றால் காட்டிக் கொடுப்புகள், களையெடுப்புகள், தனிநபர் கொலைகள், துரோகத்திற்குத் தண்டனைகள், குண்டு வெடிப்புகள், வாகனத் தகர்ப்புகள் எனப் போராட்ட வியூகங்கள் நீண்டு கொண்டே போயின...




இவற்றின் தொடராக, 31.05.1981 அன்று நாச்சிமார் கோயில் வீதியில், மாவட்ட அபிவிருத்திச் சபை தேர்தலுக் கான தமிழர் விடுதலைக் கூட்ட ணியின் பிரசாரக் கூட்டம் நடைபெற்றது. அந்தச் சுற்றா டலில் ஆயுதப் போராட்டக் குழு ஒன்றினால் மேற்கொள் ளப்பட்ட துப்பாக்கி பிரயோ கத்தில் காவல்துறை பரிசோ தகர் ஒருவர் கொல்லப்பட, இருவர் காயமடைந்தனர். அதன் நிமித்தம் கட்டவிழ்த்து விடப்பட்ட காவல் துறையினரின் தீத்தாண்டவம் நாச்சிமார் கோயில் வீதியில் ஆரம்பித்து யாழ். பிரதான வீதி வரை அரங்கேற்றம் கண்டது.

தென்பகுதியிலிருந்து தேர்தல் பிரசாரத்துக்காக யாழ்ப்பாணம் வருகை தந்திருந்த அமைச்சர் காமினி பொன்சேகா மற்றும் அரச சார்பு குழுவினரின் ஆசீர்வாதத்துடன், கூடவே வந்த காடையர்களின் முன்னெடுப்பினால் தீத்தாண்டவம் உக்கிரம் பெற்று, யாழ். மத்திய பேருந்து நிலையத்தை சூழவிருந்த கடைகள், 'ஈழநாடு' பத்திரிகை அலுவலகம், யாழ்ப்பாண பாராளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரனின் இல்லம், யாழ். பிரதான வீதியிலிருந்த தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியின் தலைமையகம், பல வர்த்தக நிலையங்கள், திராவிடச் சிற்பக் கலையில் கட்டப்பட்ட - ஆசியாவி லேயே இரண்டாவது நூலகமாகக் கருதப்பட்ட 'யாழ்ப்பாண பொதுசன நூலகம்' போன்றவை இரவோடிரவாக எரியூட்டப்பட்டன. 98,000 வரையான,

அரிதான, பெறுமதிமிக்க நூல்கள், ஆவணங்கள் நூலகத்தில் அணைப்பாரின்றி எரிந்து கொண்டியிருந்ததை, அதிகாலை 5.45 மணிக்கு உந்துருளியில் வேலைக்குச் சென்ற நான் பார்த்து வேதனையடைந்தேன். வேறு எவரும் அச்சமயம் இல்லாமையால் தரித்து நிற்கப் பயந்து கையாலாகாத நிலையையெண்ணி கண்கலங்கப் புறப்பட்டேன்.

'திருநெல்வேலி' தபால்பெட்டிச் சந்தியில், பலாலியில் இருந்துவந்த இராணுவ வாகனம் மீது 22.07.1983 அன்று 'விடுதலைப் புலிகள்' நடத்திய கண்ணிவெடி மற்றும் நேரடித் தாக்குதலில் முதற் தடவையாக 13 இராணுவத் தினர் கொல்லப்பட்டனர். இதற்குப் பழிவாங்கலாக அந்தச் சுற்றாடலில் 41 பொதுமக்கள் இராணுவத்தால் கொல்லப்பட்டதுடன் தென்னிலங்கையில் மீண்டுமொரு வன்செயல் பூதாரமாக வெடித்தது.



'கறுப்பு ஜூலை' என உலக வரலாற்றிலும் பலரின் மனங்களிலும் பதிவாகி, இலங்கை அரசாங்கத்திற்கு மாறாத வடுவாக நிலைத்த, 'இனக்கலவரம்' எனச் சாயம் பூசப்பட்ட வன்செயல், தமிழீழ விடுதலைப் புலிகள் 13 இலங்கைப் படையினரை திருநெல்வேலியில் படுகொலை செய்ததன் தூண்டுதல் விளைவு எனப்பட்டபோதும், இந்நிகழ்வின் ஒருங்கிணைப்புமுறை திட்டமிட்ட செயற்பாடெனவே நம்பப்பட்டது.

பல கட்டங்களாகத் தமிழருக்கு எதிராக நிகழ்ந்த வன்செயல்களிலும் மிக மோசமான வன்செயல் இதுவாகும். மேற் கூறியதுபோல இது தமிழருக்கெதிரான அரசின் திட்டமிட்ட கலவரமாகவே அமைந்தது. கலவரம் ஆரம்பமானபோது அமைச்சர்களும், இராணுவமும், பொலிசாரும் குண்டர்களுக்கு உதவியாக இருக்க, புறக்கோட்டையில் மட்டும் 442 கடைகள் எரியூட்டப்பட்டன.


பொலிசாரின் நடவடிக்கை எதுவும் இல்லாத நிலையில் தமிழர்களைக் கொலைசெய்தல், சாகும்வரை அடித்தல், உயிரோடு எரியூட்டல், சொத்துக்களை சூறையாடுதல் போன்றவற்றைச் சிங்களக் காடையர் சுதந்திரமாகச் செய்தனர். பல இடங்களில் வாகனங்களில் வந்த தமிழர்களை வாகனத்துடன் எரித்தும், வாகனங்களிலிருந்து இறக்கியும் கொலை செய்தனர்.

கொழும்பில் அதியுயர் பாதுகாப்பு சிறைச்சாலையான வெலிக்கடையில் 25.07.1983இல் 35 தமிழ்க் கைதிகளும் 28.07.1983இல் 18 தமிழ்க் கைதிகளும் சிங்களக் கைதிகளினால் கத்தி, வாள் மற்றும் பொல்லுகள் கொண்டு தாக்கப்பட்டு கொடூரமாகக் கொல்லப்பட்டனர். தப்பிப் பிழைத்தவர்களின்

வாக்குமூலத்தின்படி சிறைச்சாலை அதிகாரிகளே அறைக் கதவுகளின் திறப்புக்களை சிங்களக் கைதிகளுக்குக் கொடுத்ததாகத் தெரிவித்தனர்.

இரண்டு கிழமை வரை திட்டமிட்ட முறையில் சிங்கள இனவாதிகள் இலங்கைத் தமிழர்கள்மீது காட்டிய வெறித்தனத்தால் அப்பகுதிகளில் பாதிக்கப்படாத தமிழர்களே இல்லையென்ற நிலையில் கொலை செய்தும், கொடுமைப்படுத்தியும், கோடிக்கணக்கிலான சொத்துக்களை அழித்தும், கையகப்படுத்தியும், இளம் பெண்கள் வல்லுறவுக்கு உட்படுத்தியும் கோரத் தாண்டவமாடினர். தமிழர் வீடுகள் பெரும்பாலும் கொள்ளையிடப்பட்டு, எரியூட்டப்பட்டன. இதனால் 80,000 மக்கள் அகதிகளாக்கப்பட்டனர். உத்தியோகபூர்வமற்ற கணிப்பின்படி 3,000 தமிழர்கள் வரை கொல்லப் பட்டனர்.

அரங்கேறிய இந்த வன்செயலை இலங்கை அரசாங்கம் இதய சுத்தியுடன் தடுக்க முனைந்திருந்தால், அதனால் ஏற்பட்ட பேரழிவையும் சங்கிலித் தொடராய்த் தொடரவிருந்த அழிவுகளையும் தடுத்திருக்கலாம். 'உலகிலேயே நல்லொழுக்கமற்றது இலங்கை இராணுவம்' என 'அமெரிக்க சஞ்சிகை' ஒன்றில் முகப்புப் படங்களுடன் கட்டுரை வெளியாகாமல் காத்திருக்க லாம். கனடா போன்ற நாடுகள் மக்களை உயிராபத்திலிருந்து காப்பதற்காக தனது நாட்டுக்கு கூட்டிச் செல்லவிடாமல் நிறுத்தியிருக்கலாம் என்பதை பன்னாடுகளிலிருந்து வெளி யான கருத்துகள், கண்டனங்களின் பின்னர்தான் உணர்ந்துகொள்ள முடிந்தது அரசாங்கத்தால்.



20 பேரைக்கொண்ட 'மினி பஸ்' ஒன்று பயணிகளுடன் தீயிடப்பட் டதை ஒரு உல்லாசப்பயணி நேரடியாகக் கண்டு வெளிக்கொண்டு வந்ததால், பாதுகாப்பு படையினர் பார்த்திருக்க அநியாயங்கள் அரங்கேறியதை அரசாங்கம் கண்டிக்கத் தவறியதால் சர்வதேசத்தில் இலங்கை அரசாங்கத்தின் மதிப்பு குறைந்தது.

இந்த வன்செயல்தான், இளைஞர்கள் மேலும் கிளர்ந்தெழவும், ஒரே நோக்கத்துக்காகப் பல போராட்ட இயக்கங்கள் தோற்றம் பெறவும், பெருந் தொகையான இளைஞர்கள் விருப்புடன் அவற்றில் இணைந்து கொள்ளவும் தூண்டியதுடன், இயக்கங்களுக்கு ஆதரவு, ஆயுதங்கள், பயிற்சிகளுடன் வேறு வசதிகளை இந்தியா வழங்கவும் வழிவகுத்தது.

தனதும் குடும்பப் பாதிப்பின் எதிரொலி, போராட் டங்களின் ஈர்ப்பு, பிரசாரங்களின் நியாயத் தன்மைகள் போன்றவற்றால் இளைஞர்கள்

இயக்கங்களுடன் இணையத் தொடங்கினர்... இது பெற்றோருக்குப் பெரும் தலையிடியைக் கொடுத்தது. தமது பிள்ளைகள் இயக்கங்களுடன் இணைவதைத் தடுப்பதற்காக அவர்களைக் கண்டிக்கத் தயங்கினர். வாழையடி வாழையாக கடைப்பிடிக்கப்பட்டுவந்த வழிகாட்டல் முறைகளைக் கைவிட்டனர். இதனால் இளைஞர்களின் தான்தோன்றித்தனமான செயற்பாடுகள் மெல்ல மெல்ல வேரூன்றத் தொடங்கின...

பணவசதியுள்ளவர்கள் தமது பிள்ளைகளை மேலை நாடுகளுக்கு அனுப்புவதற்கான முயற்சிகளை மேற்கொண்டனர். பணம் செலவானாலும் தனது பிள்ளை உயிருடன் இருந்தால் போதுமென்ற நிலையிலேயே பலரும் இருந்தனர். அதற்காக கடன்பட்டோ சொத்துக்களை விற்றோ அனுப்பவும் துணிந்தனர்.

18 மாதங்களாக 'மேற்கு ஜேர்மனி'யில் உள்ள ஐந்து பிரதான நகரங்களில் மாறிமாறி நடைபெற்ற 'சர்வதேச கண்காட்சி'கள் காரணமாக அங்கு நுழைவதற்கான விசா முன்கூட்டியே பெற்றுக்கொள்ளுகின்ற நடைமுறை நீக்கப்பட்டிருந்தமை, சிரமமின்றி 'பெல்ஜியம்' நாட்டு விசா பெறமுடிந்தமை போன்றவை முகவரூடாகவும் சுயமாகவும் ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்ல வாய்ப்பாக அமைந்தது. அதைப் பயன்படுத்தி பலரும் செல்லத் தொடங்கினர்.

போராட்டம் சார்ந்த காரணத்திற்காக மட்டுமல்ல பொருளாதார நெருக்கடி காரணமாகவும் ஐரோப்பிய நாடுகளுக்குப் புலம்பெயர்ந்து செல்வதற்கு முனைப்புக் காட்டினர்.

பயண ஏற்பாடு

11 புரட்டாதி 1983

பி.ப.1.30 மணிக்குப் புறப்படவுள்ள 'இந்தியன் ஏயர் லைன்ஸ்' வானூர்தியில் பயணிப்பதற்காக 'பண்டாரநாயக்க சர்வதேச வானூர்தி நிலைய'த்தில் பரிசோதனைகள் முடிவுற்றுக் காத்திருக்கிறேன். எனது பயணம் வெறுமனே சுற்றுலா பயணமல்ல. பலரையும் போல் 'பிரான்ஸ்' நாட்டில் புகலிடம் கோருவதை இலக்காகக்கொண்ட பயணம். முற்றிலும் மாறுபட்ட இன, மொழி, கலாசாரம், காலநிலை, வாழ்வியற் சூழலுள்ள ஐரோப்பிய நாட்டுக்கான பயணம்.

இது இலகுவானதன்று. ஏற்கெனவே 'ஆட்கடத்தல் முகவர்'களால் அழைத்துச் செல்லப்பட்டவர்கள் அனுபவித்த இன்னல்கள், எதிர்கொண்ட இடையூறுகள் பற்றிய பல உண்மைக் கதைகள் வெளிவந்ததை அறிந்திருந்த நிலையிலும் இவ்வளவு துணிவு எனக்கு எங்கிருந்து வந்ததோ நானறியேன்.

அப்போது நான் யாழ்ப்பாண மாநகரசபையில் சுகாதார மேற்பார்வையாளராகக் கடமையாற்றிக் கொண்டிருந்தேன். எனது பயணம் பற்றி சக ஊழியரோடு உரையாடியபோது அவர்கள் அளித்த ஊக்கமும் ஆலோசனை

களுமே எனக்கு மனத்துணிவைக் கொடுத்திருக்கவேண்டும்.

ஆட்கடத்தல் முகவர்களால் பெருமளவில் ஆட்கள் அழைத்துச் செல்லப்படும் அந்நாளில், அவ்வாறில்லாமல் சுயமாக ஏற்பாடு செய்து புறப்பட்டவர்களில் நானும் ஒருவன். வெள்ளவத்தையில் இருந்த 'பயணச் சிட்டை விற்பனை செய்யும் முகவரி'டம் 'பனாம் ஏயர் லைன்ஸ்' வானூர்தியில், மேற்கு ஜேர்மன் வரை சென்று திரும்புவதற்கான பயணச் சீட்டை 9,000 ரூபாவிற்கு ஏற்பாடு செய்தேன். 'பனாம் ஏயர் லைன்ஸ்' வானூர்திப் பயணச்சிட்டை விற்பனை செய்யும் முகவராகப் பணியாற்றிய 'திரு' (திருச்செல்வம்) அவர்களை எனது நண்பரின் பெயரிலேயே அறிமுகமானேன்.

பெல்ஜியம் நாட்டுக்கான விசா தரகர் மூலம் 4,000 ரூபாவிற்குப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்தபோதும் 'திரு'வின் ஆலோசனை யின்பேரில் நானே நேரடியாக விசாரணைக்குச் சென்று 1,500 ரூபா செலவில் உடனேயே விசாவைப் பெற்றுக்கொண்டேன். 'திரு' கூறியதற்கிணங்க பயணத் தேவைக்காக அவரது நண்பனின் உதவியுடன் 600 டொலரை வங்கியில் கொள்வனவு செய்து கொண்டேன்.

'பனாம் ஏயர் லைன்ஸ்' வானூர்தி இலங்கை கட்டுநாயக்க சர்வதேச வானூர்தி நிலையத்தில் தரையிறங்க முடியாத பெரியதொரு வானூர்தியாகும். அதனால் 'இந்தியன் ஏயர் லைன்ஸ்' வானூர்தியில் சென்னை சென்று அங்கிருந்து பிறிதொரு வானூர்தியில் பம்பாய் சென்று அங்கிருந்தே 'பனாம் ஏயர் லைன்ஸ்' வானூர்தியில் பயணிக்க முடியும். அதுவும் ஜேர்மன் - பிறாங்போட் வானூர்திநிலையம் வரைதான். அங்கிருந்து பிறிதொரு வானூர்தியில் பெல்ஜியம் செல்லவேண்டும். இது ஒரு சிக்கலான அட்டவணையாகும்.

இந்தியா செல்வதற்கு அந்நாட்டு விசா எடுக்கவேண்டும். அப்போதைய தழும்பல் நிலையில் இந்திய உயர் ஸ்தானிகராலயத்தில் விசா பெறச் செல்வதும், பெறுவதும் சிரமமாக இருந்தது. அதனால், தரகர் மூலமே விண்ணப்பித்து விசா பெற்றுக்கொண்டேன்.

இதற்கு முன்னர் வானூர்தி நிலையங்களின் வானூர்திப் பயண நடைமுறைகளை அறிந்ததோ வானூர்தியில் பயணித்ததோ இல்லை. ஒரு தடவை பலாலி வானூர்தி நிலையத்தில் தரையிறங்கும் மற்றும் புறப்படும் வானூர்தியைப் பார்வையாளர் பகுதியில் நின்று பார்த்தது மட்டும்தான்.

எனது பயண ஏற்பாடு எனக்கே பெரும் ஆச்சரியம்தான். இருப்பி னும் கிடைக்கப்பெற்ற அறிவுறுத்தலின் பிரகாரம் கடவுச்சீட்டு, பிரயாணச்சிட்டை பரிசோதனை முடித்து, பம்பாய் செல்லும் வரையிலான 'போடிங்காட்'டைப் பெற்றுக்கொண்டேன். பின்னர் பொதி பரிசோதனையையும் முடித்துத் தயாரானேன். சங்கடமெதுவும் ஏற்படாதது மனதிற்கு மகிழ்வாக இருந்தது.

பயணச்சிட்டை முகவர் 'திரு' அவர்கள் எனது பயத்தைப் போக்க

அளித்த ஊக்கமும் ஆலோசனையும் எனக்கு உந்துசக்தியாக இருந்தது. வானூர்தி நிலையத்திற்கு வந்து, அங்கு எனது பரிசோதனைகள் முடிந்து உட்செல்லும்வரை காத்திருந்து, எனது நடவடிக்கைகளை கண்காணித்து உரிய வழிகாட்டல்களை சைகையால் வழங்கி இறுதியில் கைகாட்டிச் சென்றதை மறக்க முடியாது. காரணம் அவரை நான் முன்னர் அறிந்ததில்லை.

பண்டாரநாயக்க சர்வதேச வானூர்தி நிலையத்தில் உள்புறமுள்ள மாடியில் வழியனுப்ப வந்தவர்கள் நிற்கக்கூடிய வசதி செய்யப்பட்டிருந்தது. அதிலிருந்து பயணிகள் சோதனை நிறைவுபெறும் வரை அவர்கள் பார்வையிடக்கூடிய வாய்ப்பு இருந்தது. அது எனக்கும் பயனுள்ளதாகவும் அமைந்தது.

மனதிலுண்டான இயல்பான பயத்தின் மத்தியிலும் 'திரு' அவர்கள் தந்த ஊக்கத்தால் உறுதியைக் கைவிடாது வானூர்தி நிலைய நடைமுறைகளுக்கு இசைவாக, பயணிகளோடு பயணியாக தொடர்ந்தேன். 'போடிங் காட்'டின் பாதியை என்னிடம் ஒப்படைத்தனர். தொடர்ந்து வானூர்தி வரை பேரூந்தில் ஏற்றிச்செல்லப்பட்டு, வானூர்தியில் ஏறிக் கொண்டேன்.

வானூர்தி சேவை ஊழியர்களான இந்திய பெண்கள் இருவர் வாசலில் நின்று கரம் கூப்பி, வணக்கம் கூறி வரவேற்று, இரண்டு 'ரொபி'களைத் தந்தனர். அதைப் பெற்று உள்நுழைந்தேன். ஏற்கெனவே வானூர்தியில் கணிசமான பயணிகள் அமர்ந்திருந்தார்கள். வானூர்திப் பணியாளர் உதவியுடன் 'போடிங்காட்'டில் இருந்த எனது இருக்கைக்கான இலக்கத்தில் அமர்ந்து கொண்டேன். வானூர்தியின் இருக்கையில் அமர்ந்தபோது புது உலகத்தில் பிரவேசித்த மகிழ்ச்சி.

அங்கு இருந்த பயணிகள் எவரும் 'ரொபி' சாப்பிட்டதாகத் தெரியவில்லை. கையில் வைத்திருந்தார்கள். அதனால் நானும் சாப்பிடாது வைத்திருந்தேன். பயணிகளுக்கான அறிவுறுத்தல் முடிந்து 'இருக்கைப்பட்டி' அணிந்ததும் வானூர்தி நகரத் தொடங்கியது. அப்போதுதான் பயணிகள் 'ரொபி'யை வாயில் போடத் தொடங்கினர். நானும் அவ்வாறே செய்தேன். வானூர்தி வீதியில் நகர்ந்து பின்னர் மேலெழத் தொடங்கியதும் காதுகள் அடைக்கலாயின. வாயிலிட்ட 'ரொபி'யைச் சப்பியபோது அடைப்பு விலகிக் கொண்டது. 'ரொபி' தரப்பட்டதன் காரணம் அப்போதுதான் புரிந்தது.

வானூர்தி நேராகப் பயணிக்கத் தொடங்கியதும் சிறிய 'விஸ்கி'ப் போத்தல்கள் இரண்டு வைக்கப்பட்டிருந்த பொதி வழங்கப்பட்டது. பலரும் அதனை அருந்தினர். மது அருந்துதல் எனக்குப் புதிதல்லவாயினும் அனுபவ மற்ற பிரயாணம் காரணமாக அருந்த விரும்பவில்லை.

இருக்கைப்பட்டி அணிந்துகொள்ளுமாறு தரப்பட்ட அறிவித்தலின் பிரகாரம் அதனை அணிந்துகொண்டதும் தமிழ் நாடு, சென்னை 'மீனம்பாக்கம் வானூர்தி நிலைய'த்தில் தரையிறங்கியது. இறங்கிய பயணிகளின் பொதிகள் கடுமையாகச் சோதனையிடப்பட்டன. பின்னர் பம்பாய் செல்லும் வானூர்தியில் பயணிப்பதற்காக, அங்கு தரப்பட்ட அறிவித்தலுக்கமைய உரிய

தளத்திற்கு நடந்து சென்றேன். வானூர்தி புறப்பட ஒரு மணித்தியாலம் இருந்ததால் தளத்திலுள்ள இருக்கையில் அமர்ந்திருந்தேன். கோப்பி விற்பனை செய்யும் வியாபாரி என்னை நெருங்கி "கோப்பி குடிக்கிறீர்களா சார்?" எனக் கேட்டார். எனக்கு விருப்பமிருந்தும் இந்திய பணமோ, குறைந்த பெறுமதியில் 'டொலரோ' இல்லாதபடியால் வேண்டாமென்றேன்.

அவருக்கு என்நிலை புரிந்திருக்கவேண்டும். எத்தனை பயணிகளை அவர் இதுவரை கண்டிருப்பார், எத்தனை பேருக்கு கோப்பி வியாபாரம் செய்திருப்பார். "உங்களட்ட விஸ்கி இல்லையா சார்?" என்று கேட்டார். நான் "இரண்டு சின்னன் இருக்கு" என்றேன். "அதத்தாங்க நான் காசுதாறன் சார். இப்ப காப்பிய குடியுங்க. பிறகு பாத்ரூமுக்குப் பக்கத்தில கொண்டுவந்து தாங்க" என்று கூறி கோப்பியைத் தந்தார். அந்த நேரத்திற்கு கோப்பி குடிப்பது ஆறுதலாக இருந்தது.

குடித்து முடித்து பாத்ரூமுக்கு அருகாமை சென்றேன். அவர் விஸ்கியைப் பெற்றுக்கொண்டு மிகுதியாக பத்து ரூபாவும் தந்தார். நன்றி சொல்லி பிரிந்தேன்.

சிறிது நேரத்தால் புறப்பட்ட 'இந்தியன் ஏயர் லைன்ஸ்' வானூர்தியில் பம்பாய் பயணமானேன். இலங்கையிலிருந்து புறப்பட்டபோது இருந்த பயம் இப்போது எனக்கு இருக்கவில்லை. இந்த விமானத்தில் 'விஸ்கி' தரவில்லை. உணவும் கோப்பியும் தந்தார்கள்.

பனாம் ஏயர் லைன்ஸ்

இரவு 10.00 மணியளவில் பம்பாய் வானூர்தி நிலையத்தில் இறங்கிறேன். அங்கு சோதனை எதுவும் இருக்கவில்லை. அறிவித்தலின் பிரகாரம் பயணிகளோடு இணைந்து சர்வதேச வானூர்தி புறப்படும் தளத்திற்கு நடந்து சென்றேன். பிரமாண்டமான தளத்தைப் பார்த்ததும் ஆச்சரியமாக இருந்தது. அத்தளத்தில் பகுதி பகுதியாக இருந்த இருக்கைகளில் பலர் உறக்கத்திலிருந்தனர்.

தளமே உறங்குவதுபோலிருந்த நிலையில் எந்தத் தளத்தால், எத்தனை மணிக்கு வானூர்தி புறப்படுமென்பதில் தெளிவு இருக்கவில்லை. அதனை அறிந்துவிட வேண்டுமென்ற தவிப்பில் பயம் தோன்றத் தொடங்கியது. பலவாறாக யோசித்தேன். மேற்தளத்தில் விமான நிறுவனங்களின் பணிமனைகள் பல வரிசையாக இருப்பது தெரிந்தது. அதில் பனாம் நிறுவனத்தின் பணிமனையும் இருந்தது. தாமதியாது அங்கு சென்றேன். ஒரு அதிகாரி இருந்தார். என்னை அறிமுகம் செய்து எனது பயணச்சிட்டையை அவரிடம் கொடுத்தேன். 'நான் புதிது எனக்கு எதுவும் விளங்கவில்லை. நீங்கள்தான் உதவிசெய்ய வேண்டும்' என்றேன்.

புன்னகையுடன் சம்மதித்த அவர், என்னையும் அழைத்துக் கொண்டு அலுவலகத்திற்கு வெளியே வந்து ஒரு பகுதி இருக்கைகளைக் காண்பித்து,

அதுதான் போகவேண்டிய வழியென்றும், மு.ப.1.00 மணிக்குத்தான் திறப் பார்கள். அந்நேரம், தான் அங்கு வருவதாகவும் கூறி பயணச் சிட்டையை ஒப்படைத்தார். மிகவும் மகிழ்ச்சியாயிருந்தது. அந்தநேரம் அந்த வழியைக் காட்டியமைக்காக கடவுளுக்கு நன்றிகூறி இருக்கையில் அமர்ந்து கொண்டேன்.

நேரம் இரவு 11.00 மணி. உறக்கம் வர மறுத்தது. இருப்பினும் உடல் அசதி காரணமாக 'கோழித்தூக்கமா'க இருந்தது. இரவு 12.30 மணிக்கு 'பனாம் ஏயர் லைன்ஸ் பயணிகளை குடிவரவு குடியகல்வு பணிமனைக்கு வருமாறு' ஒலிபெருக்கியில் அழைப்பு விடப்பட்டது.

பணிமனை அண்மையில்தான் இருந்தது. பலரைப்போல் நானும் அங்கு சென்றேன். படிவங்கள் இருந்த மேசையைக் காண்பித்து அதனைப் பூரணப்படுத்தி தருமாறு கூறினார் அதிகாரி. அவர் கூறியபடி பூரணப்படுத்திய படிவத்தை கடவுச்சீட்டுடன் ஒப்படைத்தேன். அவர் அதைப் பரிசீலித்து பெல்ஜியம் செல்லும் வரையிலான 'போடிங்காட்'டை தந்தார். அதைப்



பெற்றதும் முன்னைய இடத்திலேயே அமர்ந்து கொண்டேன்.

அலுவலகர் குறிப்பிட்டதுபோல மு.ப. 1.00 மணிக்கு நாங்கள் புகவேண்டிய பாதைக்கான கதவுகள் திறக்கப்பட்டன. முன்னால் மூன்று கருமபீடங்களில் அதிகாரிகள் வந்து நின்றனர். மூன்று வரிசையில் பயணிகள் செல்ல ஒவ்வொருத்தராகப் பரிசீலித்து உள்ளே அனுப்பப்பட்டனர். நான் வரிசையில் செல்லும்போது, தான் வருவதாகக் கூறிய அதிகாரி வந்துள்ளாரா என நோட்டமிட்டேன். அவர் ஓரத்தில் நிற்பதைக் கண்டதும் உற்சாகம் பிறந்தது.

கருமபீடத்தை அடைந்ததும் அந்த அதிகாரியும் அங்கு வந்தார். கடவுச் சீட்டு, 'போடிங்காட்' போன்றவற்றைப் பரிசீலித்து முடிந்ததும் வானூர்தி நிலையக் கட்டணமாக 150 ரூபா செலுத்துமாறு கேட்டனர். என்னிடம் இந்தியப் பணம் இல்லை டொலர் இருக்கிறது என்றேன். பனாம் ஏயர் லைன்ஸ் அதிகாரி, அப்போதுதான் திறக்கப்பட்ட வங்கியைக் காண்பித்து அங்கே தேவையான அளவுக்கு மட்டும் டொலரை மாற்றி வருமாறு கூறினார்.

நானும் அவ்வாறே செய்து ஒப்படைத்ததும் எனது பொதியை பொறுப்பெடுத்து 'பெல்ஜியம் வானூர்தி நிலையத்தில் எடுக்கலாம்' எனக்கூறி 'போடிங்காட்'டின் பாதியை ஒப்படைத்து என்னை உள்ளே செல்ல அனுமதித்தனர். பனாம் அதிகாரிக்கு கை குலுக்கி நன்றிகூறி விமானத்திற்குள் நுழைந்தேன்.

இதுவரை பயணித்த இரண்டு வானூர்திகளோடு ஒப்பிடுகையில் பல மடங்கு பெரிதாகத் தெரிந்தது. வியப்புடன் இருக்கையில் அமர்ந்து கொண்டேன். அரைமணி நேரத்தால் ஜேர்மன் - பிறாங்போட் நோக்கிய பயணத்தை ஆரம்பித்தது நான் பயணம் செய்யும் 'பனாம் ஏயர் லைன்ஸ் வானூர்தி'.

வானூர்தி மேலெழுந்த சிறிது நேரத்தால் மென்பானம் முதல் மதுபானம் வரை வழங்கி, ஐரோப்பியர்களின் உணவு தரப்பட்டது. அந்த உணவு எனக்கு பிரச்சினை இருக்கவில்லை. சுவைத்துச் சாப்பிட்டேன். உணவு பரிமாற்றம் முடிந்து வெற்றுப் பொருட்களைச் சேகரித்த பின்னர் வானூர்தியின் மின்னொளிகள் அணைக்கப்பட்டன பயணிகள் உறங்குவதற்காக. குளிரைப் போக்கத் தரப்பட்ட போர்வை, சொகுசான இருக்கை, உடல் அசதி, நித்திரை விழிப்பு போன்றவற்றால் விரைவாகவே தூக்கம் அணைத்துக் கொண்டது.

வானூர்தியில் பயணிகள் பரபரப்புக் கேட்டு கண்விழித்தேன். எனக்குப் பக்கத்தில் ஜன்னல் ஓரம் இருந்த ஒருவர் சூரிய உதயத்தைப் பாருங்க, எல்லாருக்கும் இது கிடைக்காது என்றார். நானும் ஆவலுடன் பார்த்தேன் சந்தர்ப்பத்தைத் தவறவிடக்கூடாதென்பதற்காக.

கருமையுடன் செங்கதிர் கலந்து தெரிந்த அடிவானில், மூழ்கி எழும் அக்கினிப் பிளம்பாக, கவிஞரால் வருணிக்க முடியாத - கற்பனை செய்திட இயலாத அற்புதமாய், ஓவியரை ஒதுக்கிடும் ஒருவகை வர்ணஜாலத்துடன் துலங்கினான் செங்கதிரோன் பார்வையில். நிஷத்தை மறைத்த நிழலான வெண்மை நிறைந்த சாம்பல் நிறங்கொண்ட மேகங்கள் மேலும் அழகூட்டின.

அற்புதக் காட்சியைக் காண்பித்தமைக்காக அவருக்கு நன்றி கூறினேன். அவர் ஓர் இந்தியர். படிப்பிற்காக அமெரிக்கா செல்கிறார். அன்பாக என்னுடன் அளவளாவினார். சிறிது நேரத்தால் மீண்டும் உறக்கத்தை அணைத்துக்கொண்டேன்.

மணி ஒலித்ததைத் தொடர்ந்து மின்னொளி ஏற்றப்பட்டதும் முகம் துடைப்பதற்காக சூடான ஈரத்துணி ஒவ்வொருவருக்கும் தரப்பட்டது. சிறிய துண்டாயினும் முகத்தையும் கையையும் துடைக்க இதமாக இருந்தது. முன்பக்கம், பின்பக்கமென நான்கு கழிப்பறைகளே இருந்ததால் பலரும் அங்கு சென்றுவர விமானம் கலகலப்பாக இருந்தது. சற்று நேரத்தால் உணவாக பொரித்த முட்டை, அவித்த உருளைக்கிளங்கு, பணிஸ், ஜாம், பட்டருடன் கோப்பியும் வழங்கப்பட்டது. அது நிறைவான உணவாகவும் இருந்தது.

இன்னமும் ஒரு மணித்தியால பயணமிருப்பதாகக் கூறிய இந்தியர், "அந்த சீற்றில நடிகர் ஜெயசங்கர் இருக்கிறார் பார்த்தீங்களா?" எனக் கேட்டார். "இல்லை..." என்று கூறினாலும் ஒருமுறை பார்த்துவரவேண்டும்போல இருந்தது. நான் இருந்த இருக்கைக்கு ஐந்து வரிசைகளுக்கு முன்னால் அவர் இருந்தார். நான் அங்கு செல்லவேண்டிய தேவையிருக்கவில்லை.

உணவுண்ட வெற்றுப் பொருட்கள் எடுத்துச் செல்லப்பட்ட பின்னர்

விமானத்தின் நடைபாதை வெறிச்சோடி இருந்தது. இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி முன்பக்கமுள்ள மலசலகூடத்திற்கும் போய் வருவதைப்போல சென்று வருகையில் நடிகர் ஜெயசங்கரைக் கண்டதும், "வணக்கம் ஐயா..." என்றேன் கைகூப்பி. அவரும் அவ்வாறே "வணக்கம்" என்றார்.

"நான் இலங்கையில இருந்து வருகிறேன் உங்களைச் சந்தித்தது சந்தோஷம்" என்றேன். நான் கூறியதைக் கேட்டுப் புன்னகைத்தவர் அன்பாக இலங்கை விடயங்கள் பற்றி சில நிமிடங்கள் உரையாடினார். அவருக்குத் தொல்லை கொடுக்க விரும்பாமல் விடைபெற்றுக் கொண்டேன்.

விடுக்கப்பட்ட அறிவித்தலின் பிரகாரம் இருக்கைப்பட்டி அணிந்த கொண்ட சிறிது நேரத்தால் 'பிறாங்போட் வானூர்தி நிலைய'த்தில் தரையிறங்கத் தொடங்கியது வானூர்தி. ஒருதடவை உலுப்பியதும் நெஞ்சு திக்கென்றது. பின்னர் தரையில் வேகமாக ஓடத் தொடங்கியது. ஏற்கெனவே பயணித்த வானூர்திகள் போலல்லாமல் தாக்கமும் வேகமும் அதிகமாக இருந்தது.

சற்று நேரத்தால் வானூர்தி தரித்து நின்றது. சிறிது தாமதத்தின் பின்னர் பயணிகள் இறங்கத் தொடங்கினர். எனக்குப் பக்கத்திலிருந்த இந்தியர் இதே வானூர்தியில் அமெரிக்கா பயணிக்கவிருப்பதால் அவர் இறங்கவில்லை. நான் விடைபெற்றுக்கொண்டேன்.

மிகவும் பெரிதாக இருந்தது பிறாங்பேட் வானூர்தி நிலையம். கட்டுநாயக்க மற்றும் மீனம்பாக்கம் வானூர்தி நிலையங்கள் சிறியவையே. பம்பாய் செல்லும்போது இரவு ஆனதால் அந்த வானூர்தி நிலையத்தின் முழுமையான நிலையை என்னால் பார்க்க முடியவில்லை ஆனாலும், அதுவும் பெரிதே. தற்போது வெயிலாக இருப்பதால் பிறாங்போட் வானூர்தி நிலையத்தை நன்றாகப் பார்க்கக்கூடியதாக இருந்தது. சிறிதும், பெரிதுமான பலரக விமானங்கள் ஆங்காங்கு தரித்து நின்றன.

பிரமாண்டான வானூர்தி நிலையத்தில் முற்றிலும் வெள்ளை நிறத்தையுடைய மனிதர்கள். நான் மட்டும்தான் இளங்கறுப்பு நிறம். புரியாத மொழியில் உரையாடல்கள், புதிதான இடம் என்பதால் சங்கடமாக இருந்தது. இருப்பினும் பயணிகளோடு பயணியாய் நடந்து அகன்ற தளத்திற்கு வந்து விட்டேன். இப்போதுதான் தடுமாற்றம்.

பகுதி பகுதியாக பெரிய அறைபோன்ற கண்ணாடி அடைப்புகள் பலவற்றில் இருக்கைகள் நிறைய இருந்தன. மத்தியில் நடைபாதைக்குரிய அகன்ற வெளி இருந்தது. '*Exit*' என எழுதப்பட்டிருந்த பாதையால் வெளியேறும் பயணிகள் சென்றனர். சிலர் அங்கேயே நின்றனர். நானும் நின்றேன். சற்று நேரத்தால் நின்றவர்களும் அகன்ற வெளிப் பாதையால் செல்லத் தொடங்கினர். எனக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை.

நான் நின்ற இடத்திலிருந்து சற்றுத் தூரத்தில் ஒரு கருமபீடத்தில் '*Help*' என எழுதப்பட்டிருந்தது. சிலர் அங்குசென்று உரையாடிச் செல்வதைக்

கண்ணுற்று நானும் அங்கே சென்றேன். ஒரு அதிகாரிதான் இருந்தார். அவரிடம் எனது கடவுச்சீட்டு, வானூர்திப் பயணச் சிட்டை, 'போடிங்காட்'டின் பகுதியை ஒன்றாகக் கொடுத்தேன். அதைப் பார்வையிட்ட அதிகாரி, அங்கே வரிசையாய் இருந்த பெரிய அறைகளில் நான் போகவேண்டிய அறை இலக்கம் 18 எனக் குறிப்பிட்டு, அறையைச் சுட்டிக் காட்டினார்.

இந்த கருமபீடத்திற்கு அருகாமையில் குடிவரவு குடியகல்வு கருமபீடமும் இருந்தது. முதலில் அங்கு சென்று 'போடிங்காட்'டை பெற்றுக் கொள்ளுமாறும் கூறினார். நன்றி கூறி, தயக்கம் நீங்கியவனாக, குடிவரவு குடியகல்வு கருமபீடத்திற்குச் சென்று கடவுச்சீட்டு, விமானப் பயணச் சிட்டையைக் கொடுத்து 'போடிங்காட்'டை எடுத்துக்கொண்டு 18ஆம் இலக்க அறைக்குச் சென்றேன். அந்த அறையில் பதினைந்து பேரளவில் இருந்தார்கள். நானும் அமர்ந்துகொண்டேன்.

நேரம் 11.30 எனக் காட்டியது. பி.ப. 2.30 மணிவரை காத்திருக்க வேண்டும். முன்னர் வானூர்திப் பயண அனுபவமற்ற நான், இவ்வளவு தூரம் கடந்து வந்ததை, இடையில் எனது தயக்கத்தைப் போக்க கிடைத்த உதவிகள் போன்றவற்றை இரைமீட்டவாறு குட்டித் தூக்கத்தில் மூழ்கி விட்டேன்.

ஆட்களின் நடமாட்ட சத்தம்கேட்டு கண்விழித்தபோது அந்த அறையில் பாதிக்குமேல் பயணிகள் இருந்தனர். அதன்பின் நான் உறங்க முயற்சிக்கவில்லை. அரைமணி நேரத்தின் பின்னர் உணவுப் பொதியும் சிறிய தண்ணீர்ப் போத்தலும் தரப்பட்டது. மற்றவர்கள் உணவை அருந்திய போதும் எனக்குப் பசிக்காத காரணத்தால் சற்றுத் தாமதித்தே அருந்தினேன். வெதுப்பக உணவுடன் மீன் துண்டும், கொக்கோ மிட்டாஸும் இருந்தன.

இன்னமும் ஒரு மணித்தியாலத்தைப் போக்கவேண்டும் என்பதால் அறைக்கு வெளியே சென்று கழிப்பறையில் முகத்தைக் கழுவிக்கொண்டு சிறிது நேரம் விமானத் தளத்தை பார்வையிட்ட பின்னர் திரும்பவும் அமர்ந்து கொண்டேன்.

அறிவித்தலின் பின்னர் அறையில் வானூர்தித்தளப் பக்கம் இருந்த கதவு திறக்கப்பட்டது. வரிசையாகச் சென்று பேரூந்தில் ஏறிப் பயணித்து வானூர்தியில் ஏறிக்கொண்டேன். இந்திய ஏயர் லைன்ஸ் வானூர்தியின் அளவில் இருந்தது இந்த வானூர்தி. இதுவரை பெற்ற அனுபவம் காரணமாக எவரது உதவியுமின்றி 'போடிங்காட்'டில் குறித்திருந்த இலக்க இருக்கையில் அமர்ந்து கொண்டேன்.

சிறிது நேரத்தால் பெல்ஜியம் நோக்கிப் புறப்பட்ட வானூர்தி ஒன்றரை மணிநேர பயணத்தின் பின்னர் பெல்ஜியம் - 'பிறஸ்சல்ஸ் (*Brussels*) விமான நிலைய'த்தை அடைந்ததும், பேரூந்தில் ஏற்றப்பட்டு வானூர்தி நிலைய வாசலில் இறக்கப்பட்டோம்.

குடிவரவு குடியகல்வு கருமபீடத்தில் கடவுச்சீட்டு அதிகாரி பரிசீலனை செய்தார். எனது வானூர்திப் பயணச் சிட்டையில் மேற்கு ஜேர்மனி வரை

சென்று திரும்புவதற்கு ஏற்றவாறும், கடவுச்சீட்டில் பெல்ஜிய நாட்டு விசாவும் இருந்தது. இரண்டையும் மாறிமாறிப் பார்த்துவிட்டு "எவ்வளவு டொலர் வைத்திருக்கிறீர்கள்?" எனக்கேட்டார். நான் "ஐநூறு" என்றேன் மேற்கொண்டு எதுவும் கேட்காமல் கடவுச்சீட்டில் அரக்கு முத்திரையைக் குத்திவிட்டு தந்தார். நன்றிகூறி வெளியேவர பொதி எனக்காகக் காத்திருந்தது. அதை எடுத்துக் கொண்டு பயணிகள் மண்டபத்திற்கு வந்தேன்.

இலங்கை - 'பண்டாரநாயக்கா சர்வதேச வானூர்தி நிலைய'த்தி லிருந்து புறப்பட்டது முதல் பம்பாய், பிறாங்பேட், பிறஸ்சல்ஸ் வானூர்தி நிலையங்களில் நடந்த உரையாடல் தமிழில் தரப்பட்டிருந்தாலும் ஆங்கிலத்தி லேயே இடம்பெற்றது என்பதை வாசகர் கவனத்திற்குத் தருகின்றேன்.

என்னை பரிஸிற்கு அழைத்துச் செல்வதற்காக இரு ஆண்களும் இளம் பெண்ணும் பயணிகள் மண்டபத்தில் காத்திருந்தனர். அவர்களில் சுந்தரலிங்கம் என்பவரை எனக்கு நன்கு தெரியும். பரிஸில் இருக்கும் எனது மருமகனுடன் கூடவே இருக்கிறார். நான் பயண ஏற்பாட்டுக்கான ஆயத்தங்கள் செய்து கொண்டிருக்கும் வேளையில் யாழ்ப்பாணம் வந்திருந்த அவரைச் சந்தித் துள்ளேன். கூடவே இருந்த இளம் பெண் சற்றுமுன் தரையிறங்கிய வானூர்தி யில் வந்திறங்கி பரிஸ் செல்வதற்காக நிற்பவர்.

இப்போது நேரம் மாலை 5.00 மணி. 6.00 மணிக்குப் பின்னர்தான் புறப்படவேண்டுமெனக் கூறிய சுந்தரலிங்கம், விமானநிலைய மேல்மாடி யிலுள்ள உணவகத்திற்கு எம்மை அழைத்துச் சென்றார்.

வானூர்தி நிலையம் பிரமாண்டான கண்ணாடிகளால் அடைக் கப்பட்டிருந்தது. குளிர்காலத்தின் பாதுகாப்புக்காகவும், வானூர்தித்தளம் பார்வையாளருக்குத் தெரியவேண்டுமென்பதற்காகவும் அவ்வாறு செய்துள் ளார்கள். முன்னைய வானூர்தி நிலையங்களிலும் கண்ணாடி மறைப்பு இருந்தாலும் அவற்றைவிட இங்கு பெரிதாக இருந்தது.

ஆறு அடி அகலத்தில் 30 அடிக்கு மேற்பட்ட உயரத்தில், முனைப் பகுதி வளைந்துள்ள கண்ணாடிகளை நான் இங்குதான் பார்த்தேன். பெல்ஜியம் கண்ணாடி உற்பத்தியில் முதலிடம் வகிக்கிறது என்பதை அறிவேன். அதுதான் அவர்களால் இவ்வாறு செய்ய முடிந்ததோ என்று எண்ணத் தோன்றியது.

உணவகத்தில் சுடச்சுட உருளைக்கிழங்கு 'சிப்ஸ்'சும் சாப்பிட்டு 'கொக்கோகோலா'வும் அருந்தி, 6.00 மணியானதும் வானூர்தி நிலையத்தி லிருந்து தானுந்துவில் புறப்பட்டு பெல்ஜியத்தின் தலைநகரும் வானூர்தி நிலையம் உள்ளதுமான 'பிறஸ்சல்ஸ்' நகரின் மையப்பகுதியை சுற்றிப் பார்வையிட்டோம். முற்றிலும் மின்னொளியால் அலங்கரிக்கப்பட்டது போன்று காணப்பட்டது அந்நகர்.

வேகக் கட்டுப்பாட்டைக் குறைப்பதற்காக மைய நகர வீதிகளில் வீதிக்குக் குறுக்காக ஒடுங்கிய சிறிய பள்ளம் தோண்டி அடுக்கடுக்காக வேகத்

தடைகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. வாகனம் 'டக் டக்' என்ற சத்தத்துட னேயே பயணித்தது. இதனால் ஓட்டுனர் விரைவாகச் செலுத்த முடியாது. மைய நகரை விட்டு வெளியேறிய பின்னர் சத்தம் எதுவுமில்லை. குறித்த நேரத்தில் குறித்த இடத்தைக் கடக்கவேண்டும் என இருவரும் தமக்குள்ளே பேசிக் கொண்டனர். நாம் பயணம் செய்வது அனுமதியற்ற பயணமென்பதால் அவர்களது உரையாடல் முள்ளெனத் தைத்தது.

யாழ்ப்பாணத்து வீதிகளைப் போலல்லாமல் சீமேந்துத் தரைபோல இருந்த வீதிகளில் சிலவேளை வேகமாகவும் சிலவேளை சற்றுக் குறைவாகவும் சென்ற வாகனம், நகரைவிட்டு கிராமங்கள் வழியாகச் செல்வதை உணர்ந்தேன். அங்கு வீதிகளில் அதிக மின்னொளிகள் இருக்கவில்லை.

இடையில் மழை பெய்யத் தொடங்கியது. வாகனப் பயணத்திற்கு மழையால் இடையூறு இருக்கவில்லை. எரிபொருள் நிலையத்துக்குச் செல்லும் நோக்கில் அதற்குரிய பாதைக்குத் திருப்பி எரிபொருள் நிலையத்தை நெருங்கச் செல்கையில் காவல்துறை வாகனமொன்று நிற்பதைக் கண்டனர்.

'ரோச் லைற்' ஒளியைக் கண்டதும் வாகனத்தை நிறுத்தினான் சாரதி. மழையின் மத்தியிலும் மழை காப்பு உடையுடன் காவல் துறையினரில் ஒருவன் வாகனத்தைத் தேடி வருவதைக் கண்டு சுந்தரலிங்கம் வாகனத்துக் குரிய பத்திரங்களுடன் இறங்கி அவரைத் தேடிச் சென்று காண்பித்தார். அதைப் பெற்றுப் பார்வையிட்ட காவல்துறையினன் திரும்ப ஒப்படைத்து விலகிச் சென்றான். வாகனத்திற்கு எரிபொருளை நிரப்பியதும் பயணம் தொடர்ந்தது.

வாகனத்திற்கு காவல்துறையினன் வந்திருந்தால் உள்ளே இருக்கும் ஆட்களைப் பற்றி விசாரித்திருப்பாராம். அதனால், தான் இறங்கிச் சென்று அவருக்குச் சந்தர்ப்பம் கொடுக்கவில்லையாம். சரளமாக பிரெஞ் பேசக்கூடிய இவர்கள் கையாண்ட யுக்தி என்னைப் பிரமிப்பிலாழ்த்தியது.

எவ்வித இடையூறுமின்றி பிரான்ஸ் - பரீஸுக்குள் நுழைந்து ஒரு தேவாலயத்தின் முன்னால் வாகனத்தை நிறுத்தினார்கள். அப்போது சாமம் 12.00 மணியை நினைவூட்ட ஆலய மணி 12 தடவைகள் அடித்து ஓய்ந்ததது.

பிரான்ஸ் நாட்டில் காலடி வைத்தது எனது மூன்றாவது கடல் கடந்த நாள். இப்பயணத்தின் பெறுபேறாக வேறு பல நாடுகளுக்கும் சென்று வரக்கூடிய வாய்ப்புகள் கிட்டின.

1983 புரட்டாதி முதல் 1985 மாசி மாதம் வரை பிரான்ஸ் - லியோன் மாநிலத்தில் வசித்துவந்தேன். அந்நாட்களிலும், சுவிஸில் குடியேறிய பின்னர் 1992, 1994, 1998 ஆகிய ஆண்டுகளிலும், இலங்கைக்கு திரும்பிய பின்னர் 2014 ஆம் ஆண்டிலும் பிரான்ஸின் பல நகரங்களுக்கும் சென்றுவந்துள்ளேன். இவையனைத்தின் தொகுப்பாகவே பிரான்ஸ் பகுதி அமைகிறது...

பிரான்ஸ்

(1983 - 1985, 1992, 1994, 1998, 2014)



பிரான்ஸ் குடியரசு மேற்கு ஐரோப்பாவில் பெருநிலப்பரப்பையும் மற்றைய சில கண்டங்களில் ஆட்சிப் பகுதிகளையும், தீவுகளையும் கொண்ட நாடாகும். பூர்வீகப் பெயர் 'கோல்' *(Gaule)* என்பதாகும். மூதாதையர்களான 'கோலொய்ஸ்' இனத்தவர்கள் பெரும்பான்மையாக வாழ்ந்ததனால் இப்பெயரால் அழைக்கப்பட்டது. இதன் எல்லைகளாக பெல்ஜியம், ஜேர்மனி, சுவிற்சர்லாந்து, லக்ஸம்பேர்க், இத்தாலி, மொனாகோ, அன்டோரா மற்றும் ஸ்பெயின் என்பன காணப்படுகின்றன.

நிலப்பரப்பானது தெற்கே மத்திய தரைக் கடல் தொடக்கம் வடக்கே ஆங்கிலக் கால்வாய், வடகடல் வரை விரிந்து காணப்படுகிறது. இதன் பரப்பளவு 11,035,000 சதுர கிலோ மீட்டர். கிழக்கிலிருந்து மேற்கு வரைக்கும், வடக்கிலிருந்து கிழக்கு வரைக்கும் கிட்டத்தட்ட ஒரே அளவாக உள்ளது. இதன் எல்லைகளைத் தொடுத்தால் அறுகோணி வடிவமாகத் தோன்றும். இதனால் பிரான்ஸை 'கெக்ஸகோன்' *(Hexagone)* என்றும் சொல்வதுண்டு. இதன் தலைநகரம் பரிஸ்.

நிலப்பரப்பு 22 மாநிலங்களாகவும், 96 மாவட்டங்களாகவும் பிரிக்கப் பட்டுள்ளது. நாட்டின் வெளியே மத்திய, தென் அமெரிக்கக் கண்டத்தில் ஐந்து மாவட்டங்களும், கடல்கடந்த ஆட்சி நிலப்பரப்புகளும் உள்ளன. மேற்கு ஐரோப்பாவில் மிக உயரமான மலையான 'பிளான்க் மலை' *(Blank Mount - வெள்ளை மலை)* பிரான்ஸ் 'அல்ப்ஸ் மலை'ப் பகுதியில் அமைந்துள்ளது. நெருக்கமான ஆற்றுத்தொகுதியையும் கொண்டுள்ளது. பிரசித்தமான திருத் தலங்கள், வரலாற்றை நினைவூட்டும் பழமையான கட்டடங்கள், உலகோரை பிரமிப்பில் ஆழ்த்தும் ஈபெல் கோபுரம் போன்றவை பிரான்ஸின் சிறப்புக்கு எடுத்துக்காட்டுகளாகும்.

பிரான்ஸ் குடியரசு ஒற்றை ஆட்சி, அரை அதிபர் முறையைக் கொண்டது. இந்நாட்டின் முக்கியமான குறிக்கோள்களில், மனிதரினதும் குடிமக்களதும் உரிமைகள், சாற்றுரைகள் அடங்கியுள்ளன. அரசியலமைப்பு நாட்டைப்

பிரிக்கமுடியாத, மதசார்பற்ற, மக்களாட்சி சமூகவாதக் குடியரசு ஆகும்.

பிரான்ஸ், ஐக்கிய நாடுகள் சபை, G8 நாடுகள், ஐரோப்பிய ஒன்றியம் என்பவற்றின் ஆரம்ப அங்கத்துவ நாடாகும். ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் உறுப்பினரான பிரான்ஸ், வீற்ரோ அதிகாரம் கொண்டது. அங்கீகரிக்கப்பட்ட எட்டு அணுசக்தி நாடுகளில் ஒன்றாகும். உலகில் அதிகளவு சுற்றுலாப் பயணிகள் வந்துசெல்லும் முதன்மை நாடாகவும் விளங்குகிறது.

எம்மை பரிஸிற்கு ஏற்றிவந்த வாகனத்தை ஒரு வீட்டின் முன் நிறுத்தினான் சாரதி. என்னையும் சுந்தரலிங்கத்தையும் இறக்கிவிட்டு வாகனம் சென்றது. அந்த வீட்டின் அறையில் பலர் படுத்திருந்தார்கள். எனக்கு ஒதுக்கித் தந்த இடத்தில் படுத்ததும் உடல் அசதியால் உடனேயே உறங்கி விட்டேன். அவ்வேளை எனது மருமகன் சுகயீனம் காரணமாக வைத்திய சாலையில் தங்கியிருந்தார்.

அதிகாலை எழுத்த பின்னர்தான் சிறியதொரு அறையில், ஒரு இரட்டைத்தட்டுக் கட்டிலில் 'இத்தனை பேர் படுத்தோமே' என்ற ஆச்சரியம். பரிஸில் இப்படித்தானாம் என்றதுடன், இங்கு குறைவென்று அங்கு இருந்தவர்கள் சொன்னதைக் கேட்டதும் எனக்கு அதிர்ச்சியாக இருந்தது.

மதியம்வரை ஓய்வெடுத்துவிட்டு மருமகனைச் சந்திக்க வைத்திய சாலை செல்வதற்காக இருவருடன் இணைந்து புறப்பட்டேன். 'மெத்ரோ' விரைவுத் தொடருந்தில் செல்ல வேண்டுமாம். 'மெத்ரோ' என்றால் என்ன என்பதை அப்போதே அறிந்து கொண்டேன்.

'மெத்ரோ' விரைவுத் தொடருந்தில் ஏறுவதற்காக அவர்களின் வழிகாட்டலில் படிகளால் இறங்கி நிலத்துக்குக் கீழ் அமைக்கப்பட்டுள்ள மெத்ரோ தரிப்பிடத்திற்குச் சென்றேன். என்னுடன் கூடவே வந்தவரில் ஒருவர் தன்னிடமிருந்த மாதாந்த கட்டண ரிக்கற்றை என்னிடம் தந்தார்.

ரிக்கற்றை இயந்திரத்தில் செலுத்தியதும் கதவு திறபடும். அதேவேளை அதனை எடுத்துச் செல்வதற்காக றிக்கற் உள்பக்கத்தால் வெளியேறும். ஒருவர் மட்டும்தான் கதவைக் கடக்க முடியும். கடந்ததும் சட்டென மூடிக் கொள்ளும். போவதற்கு வேறாகவும் வருவதற்கு வேறாகவும் பல இயந்திரக் கதவுகள் வரிசையாக இருந்தன.

எனக்குக் கூறியதன்படி ரிக்கற்றை இயந்திரத்தில் செலுத்தி கதவு திறபட்டதும் அதைக்கடந்து உள்சென்று வெளியேறியிருந்த ரிக்கற்றை எடுத்துக்கொண்டேன். அவர்கள் இருவரில் ஒருவர் அவ்வாறே செய்ய மற்றவர் கதவு மூடுவதற்குள் நெருக்கமாய் இணைந்து உள்நுழைந்தார்.

நிலத்தடி மெத்ரோ தரிப்பிடத்தைப் பார்த்ததும் நானடைந்த வியப்பு சொல்லிட முடியாதது. நிலத்துக்குக் கீழ் இத்தனை பிரமாண்டமான தரிப்பிடமா? வாயைப் பிளந்தவாறு சுற்றிப் பார்த்தேன். துண்களே இல்லாது, போவதற்கும் வருவதற்குமான இரும்புப் பாதைகள், இருபக்கமும் பயணிகள் தரித்துநின்று மெத்ரோவில் ஏறுவதற்கான விசாலமான மேடைகள். 'வில்'

போன்ற வளைவு அமைப்பில் மேற்பகுதி இரண்டு பக்கத்தையும் இணைத்துள்ளது.

விரைந்து வந்த மெத்ரோ சட்டெனத் தரித்ததும் கதவுகள் திறந்து கொண்டன. அந்தத் தரிப்பிடத்தில் இறங்கவேண்டிய பயணிகள் இறங்க புதிய பயணிகள் ஏறிக்கொண்டனர். சற்று நேரத்தால் ஒலி எழுப்பிய பின்னர் கதவுகள் முடிக்கொண்டதும் மெத்ரோ புறப்பட்டு விரைந்து சென்றது. 'மெத்ரோ' பயணித்த நிலத்துக்குக் கீழான பாதை இருளாக இருந்தபோதும் மெத்ரோவின் உள்ளே இருந்த பிரகாசமான ஒளிச் சிதறல் பக்கங்களில் விழ பகுதிகளை இனங்காணக்கூடியதாக இருந்தது.

மெத்ரோவின் விரைவு எனக்குப் புதிதாக இருந்ததால் உடலில் சில மாற்றத்தை உணர்ந்தேன். அடுத்தடுத்து இருந்த தரிப்பிடங்களில் தரித்து பயணிகளை இறக்கியும் ஏற்றியும் சென்றது மெத்ரோ. தரிப்பிடங்கள் எல்லாம் ஒரே மாதிரியாகவே தெரிந்ததுடன், திரளான பயணிகள் நெருக்கமாகப் பயணம் செய்வதையும் காணக்கூடியதாக இருந்தது. நாம் இறங்கவேண்டிய மெத்ரோ தரிப்பிடத்தில் இறங்கினோம். எல்லா தரிப்பிடங்களும் ஒரே மாதிரியானவை என்ற எண்ணம் தற்போது நிற்கும் தரிப்பிடத்தை கூர்ந்து பார்த்ததில் உறுதியானது.

நுழையும்போது இருந்ததைப் போன்ற தரிப்பிடத்திலிருந்து வெளியேறும் பாதையில் ரிக்கற் இயந்திரங்கள் வரிசையாய் இருந்தன. முன்னர் செய்ததைப்போலவே இயந்திரத்தில் ரிக்கற்றைச் செலுத்தி வெளியேறினேன். மற்றவர்களும் முன்னரைப் போலவே செய்தனர். அந்நேரம் வேறொருவன் இயந்திரக் கதவின் மேலாக ஏறிக் கடந்து வெளியேறியதைப் பார்த்தேன். கதவு பாய்வதற்கு ஏற்ற அளவில்தான் இருந்தது. கள்வனுக்கு கதவுபோட முடியாதல்லவா? இதுதான் வழமைபோலுமென்று எண்ணத்தில் கூடவந்தவர்களிடம் எதுவும் கேட்கவில்லை.

படிகளில் ஏறி வீதிக்கு வந்தோம். அங்கிருந்து சிறிது தூரம் நடந்தே வைத்தியசாலைக்குச் செல்லவேண்டுமாம். நடந்து செல்கையில் எதிர்ப்பட்ட தமிழர்களில் சிலர் என்னோடு வந்தவர்களுக்கு 'பொன்சூ' என்று கூறிச் சென்றார்கள். வேறு சிலரும் அவ்வாறு கூறுவதைக் கேட்டதும் பிரெஞ்சு மொழியில் வணக்கம் சொல்கிறார்கள் என்று நினைத்துக் கொண்டேன்.

எனக்கு யாழ்ப்பாணத்தில் நன்கு அறிமுகமான ஒருவன் எதிரே வந்தான். அவன் யாழ்ப்பாணத்தில் கோழிப் பண்ணை வைத்திருந்து முட்டை வியாபாரம் செய்பவன். நான் அவனைப் பார்த்து சிரித்தேன். அவன் பார்த்தும் பார்க்காதவன் போலச் சென்று விட்டான். எனக்கு ஏமாற்றமாய் இருந்தது.

"இதில போறவன எனக்கு நன்றாத் தெரியும் தம்பி. இவன்ர பேர் செல்வராசா. தெரியாத மாதிரி போறானே பாத்தீங்களா?" சற்று உணர்ச்சி வசப்பட்டவனாகக் கூறினேன்.

"இது புதுசில்லயண்ணே! இண்டைக்கு வந்தபடியா உங்களுக்கு

புதுசாத் தெரியுது. அவங்களிலயும் பிழையில்ல அண்ணே. உங்களத் தெரியு மெண்டு காட்டினா, உங்கள வீட்டுக்குக் கூட்டிக்கொண்டு போக வேணும். அவனே படுக்கிற ஒரு இடம், சாப்பிடுற ஒரு இடம், குளிக்கிற ஒரு இடமாக இருப்பான் அவன் என்னண்ணே செய்யிறது. அதாலதான் தெரியாத மாதிரி போறான்..."

"அண்ணே! நான் வந்த புதுசில ஒரு வீட்டில இருந்தனான். அது மூன்றாவது மாடி வீடு. குசினியும், ரொயிலற்றும், ஒரு பெரிய அறையும்தான் அந்த வீட்டில். அதில முப்பது பேர் இருந்தநாங்கண்ணே. இரண்டு இளம் குடும்பமும் இருந்தது. அவர்களும் ஒரே அறையில ஒரமாகத்தான் படுத்தவங்க. நீங்களும் கலியாணம் முடிச்சநீங்க அவங்கட நிலைய எண்ணிப் பாருங் கண்ணே!..."

எனக்கு பரிஸ் வாழ் தமிழர்களின் இன்னல் நிலை புரிந்தது. ஆனால், யாழ்ப்பாணத்தில் கேள்விப்படுவதோ, நம்பப்படுவதோ வேறாக இருந்தது. இரவு தங்கிய வீட்டிலும் இவர்கள் சொன்ன நிலைதான் காணப்பட்டது. பலர் ஒன்றித்து நெருக்கமாக வாழக்கூடிய இடங்களில் ஏதாவது பிரச்சினைகள் எழாமல் இருக்க மாட்டாது. எனவே, இத்தகைய சூழலைத் தவிர்க்க வேண்டு மென்ற எண்ணம் உருவாகிட, இங்கு இருக்காமல் வேறு எங்காவது போக வேண்டுமென்று தோன்றினாலும், அது என்னிலில்லை என்பதை உணராம லில்லை.

வைத்தியசாலையில் மருமகனைச் சந்தித்தேன். அவன் நலமாக இருந்தான். என்னுடைய முடிவை எப்படி சொல்வதென்ற தயக்கத்தில் எதுவும் கூறாது நின்றேன். அவனாகவே கதையைத் துவக்கியதால் வேறு வழியின்றி எனது ஆதங்கத்தை வெளிப்படுத்தினேன்.

"கொஞ்ச நாளைக்கு இருங்க மாமா. இஞ்ச பதியாம வேறெங்கையும் பாத்து பதிவோம்."

ஒருவர் தான் இருக்குமிடத்தில் காவல்துறை தலைமையகத்தில் பதிந்து விசா எடுக்கவேண்டும் என்று அறையில் பேசிக்கொண்டார்கள். அதைத்தான் மருமகன் குறிப்பிட்டார். நானும் ஏற்றுக்கொண்டு அங்கிருந்து புறப்பட்டு முன்னரைப்போலவே நடையிலும், மெத்ரோவில் வீடுவந்து சேர்ந்தேன்.

மதிய உணவை அருந்திய பின்னர் உடல் அலுப்பாக இருந்ததால் படுத்துக்கொண்டேன். அங்கிருப்பவர்களில் நால்வர் மட்டும்தான் அப்போது இருந்தார்கள். ஏனையோர் வேலை தேடியும், வேறு அலுவலாகவும் வெளியே சென்றிருக்க வேண்டும். ஊரிலிருந்து என்னிடம் தந்துவிட்ட பத்திரங்களைப் பெற்றுக்கொள்வதற்காகவும், என்னைப் பார்த்துச் செல்வதற்காகவும் தூரத்து உறவினன் பி.ப.4.00 மணியளவில் வந்திருந்தான். வீட்டில் இருப்பவர்கள் ஏதேனும் குறை நினைப்பார்கள் என்பதை யோசிக்காமல் என்னுடைய ஆதங்கத்தை அவனிடம் சொன்னேன்.

"இஞ்ச எல்லா இடமும் அப்படித்தான் அங்கிள்! நாங்களும் காலையில வெளியால போனா இரவுதான் படுக்கைக்குப் போறம் வீட்டில இடவசதி இல்லாததால. ஒழுங்கான வேலையில்ல என்னண்டு வீடு எடுக்கிற. அன்ரனும் அப்படித்தான். பாவம் அவனும் இப்படியே இருக்கிறான். அப்பிடியெண்டா அங்கிள் 'அவுட்ட பரிஸ்'தான் போகவேணும். அங்கையும் ஆற்றையும் உதவியில்லாம எப்பிடிப் போவீங்க. (யோசித்துவிட்டு) அங்கிள் 'லியோனி'ல இருந்து ஒருவர் வந்திருக்கிறார். அவர் இண்டைக்கு எட்டு மணி றெயினில போறார் போலயிருக்கு. அவரட்ட கேட்டுப்பாக்கிறன் உங்களுக்கு விருப்ப மெண்டா அவரோட போறீங்களா? நான் தேவையான உதவியச் செய்யச் சொல்லிவிடுறன்."

"மருமகனட்ட கேக்காம நான் எப்பிடி சொல்லுறது."

"நான் முதலில வந்தவரட்ட கேட்டிட்டு அன்ரனோட கதைக்கி றன்" எனக் கூறியவர், ஆஸ்பத்திரியில் மருமகனோடு தொடர்பு கொள்ளக்கூடிய தொலைபேசி இலக்கத்தை அங்கிருந்தவர்களிடமிருந்து கேட்டறிந்துகொண்டு புறப்பட்டார். ஒரு மணித்தியாலத்தால் மருமகனிடமிருந்து தொலைபேசி அழைப்பு வந்தது.

"லியோன் நல்ல இடம் மாமா. அங்கயும் ஆட்கள் இருக்கிறாங்க. நீங்க போக விரும்பினா போங்க. உங்களுக்குத் தெரிஞ்சாக்களும் அங்க இருக்கலாம். நானும் விசாரிச்சு சொல்லுறன். நீங்க போனபிறகு இருக்கிற இடத்தச் சொல்லுங்க நான் வந்து சந்திக்கிறன். செலவுக்கு காசிருக்கா?"

"டொலர் இருக்கு" என்றேன்.

"இருக்கிற எல்லாத்தையும் மாத்தாம தேவைக்கு மட்டா மாத்துங்க."

கூறிவிட்டு வைத்துவிட்டார். எனக்கு மகிழ்ச்சியாயிருந்தாலும் மருமகன் வசிக்கின்ற காரணத்தாலேயே இங்கு வந்த நான், அவர் இல்லாத நேரம் வேறு இடத்துக்குச் செல்வது மனவுளைச்சலாகவும் இருந்தது. ஆனாலும், அவர் வேலையின்றி - வருவாயின்றி இருக்கும் நிலையில், பெல்ஜியத்திலிருந்து அழைத்து வந்த செலவை தற்சமயம் அவர் பொறுப் பெடுத்துள்ள நிலையில், அவருக்குப் பாரமாக இங்கு இல்லாமல் வெளி யேறுவதும் நல்லதே என்ற எண்ணமும் தோன்றியது. மனதைத் திடமாக்கிக் கொண்டேன்.

சற்று நேரத்தால் உறவினனிடமிருந்து தொலைபேசி அழைப்பு வந்தது. "நான் ஸ்ரேசனிலதான் நிக்கிறன். அவருக்கும் உங்களுக்கும் ஏழு மணி றெயினுக்கு புக் பண்ணியிருக்கிறன். நீங்க வெளிக்கிட்டு நில்லுங்க. நான் கூட்டிப்போக வாறன்..." தொலைபேசி இணைப்பு துண்டிக்கப் பட்டது.

நானும் அவசர அவசரமாக குளித்துவிட்டுப் புறப்பட்டேன். வீட்டிலி ருந்தவர்கள் மூலமாக மருமகனுக்கு தொலைபேசி எடுத்து, விபரத்தைச் சொல்லி விடைபெற்றுக்கொண்டேன். எனது உள்ளத்தில் ஏதோவொரு தாக்கம்.

உறவினன் அழைத்துச்செல்ல வந்திருந்தான். அங்கிருந்தவர்களுக்கு நன்றிகூறி, சுந்தரலிங்கத்திற்கும் சொல்லுமாறு கூறி, கொண்டுவந்த பொதியுடன் புறப்பட்டேன். போகும்போது மெத்ரோவில் சென்றோம். அவனும் என்னிடம் ரிக்கற்றைத் தந்துவிட்டு இயந்திரத்திற்கு மேலாக பாய்ந்து உள்நுழைந்தான்.

100 'டொலரை'க் கொடுத்து, மாற்றித் தொடருந்து ரிக்கற்றுக்குரிய பணத்தை எடுக்குமாறு கூறினேன். தொடருந்து நிலையத்தில் இறங்கியதும் அவனும் அவ்வாறே செய்தான். 'திரு' கூறிய ஆலோசனையில் டொலர் எடுத்துவரப்பட்டதால் பம்பாய், பெல்ஜிய விமான நிலையங்களிலும், இங்கும் பெரும் உதவியாக இருந்ததையெண்ணி அவரை மனமாரப் புகழ்ந்தேன். வேலையற்று, வருவாயற்று ஒரு வீட்டில் பலரிணைந்து, நெருக்கமாக இருப்பவர்களிடம் நாம் எவ்வாறு உதவியை எதிர்பார்க்க முடியும்?

நேரம் நெருங்கிவந்ததால் தொடருந்தில் ஏறிக் கொண்டேன். என்னை அழைத்துச் செல்பவரான 'அப்பாத்துரை' தொடருந்து வாசலில் நின்றார். பெறாமகனுக்கு விடைகூறி அதிவேக தொடருந்தில் 'லியோன்' நகர் நோக்கிய பயணத்தைத் தொடர்ந்தேன்.

லியோன்

'**லி**யோன்னய்ஸ்' என்று தங்களைப் பெருமையாக அழைத்துக் கொள்ளும் பிரெஞ் மொழிபேசும் மக்கள் வாழும் 'லியோன்' நகர், பரிஸிலிருந்து 470 கி.மீ. தூரத்தில், பிரான்ஸின் மையப்பகுதியான 'றோன் அல்ப்ஸ்' (*Rhone-Alpes*) பகுதியில் அமைந்துள்ளது. பரப்பளவில் பிரான்ஸில் மூன்றாவது பெரிய நகரமாகும்.

இந்நகரம் உரோமரால் நிறுவப்பட்டதாகவும், கி.மு. நீண்ட காலங்களாக உரோமரின் ஆக்கிரமிப்பின் கீழ் இருந்ததாகவும் கருதப்படுகின்றது. உரோமக் கட்டக்கலையின் தடையங்கள் பல லியோன் - 'போவரி' மலைப் பகுதியில் நிறையவே காணப்படுகின்றன. பிரபல்யமான பல்கலைக்கழகங்கள், தொழிற்சாலைகள், பொருளாதார மையங்கள், பட்டு உற்பத்தி, நெசவுத் தொழில் போன்றவற்றில் முன்னிலை வகிப்பதுடன் பாரம்பரிய கலைத்துவமிக்க கட்டடக் கலையையும் கொண்டுள்ளது.

இரசாயனம், மருந்து மற்றும் உயிரியல் துறைகளில் முக்கிய வகிபாகமாகவும் பொருளாதார மையமாகவும் விளங்குகிறது. 'தீபங்களின் விழா' என்னும் பாரம்பரியத் திருவிழா, வருடம் தோறும் 8 டிசெம்பரை மையப்படுத்தி நான்கு நாட்கள் வெகு சிறப்பாக கொண்டாடப்படுகின்றது. வரலாறு காணாத சிறப்பை வருடம்தோறும் கொண்டிருக்கும் இவ்விழா பற்றி அறியவருவதாவது;

1643 இல் ஐரோப்பாவில் 'கொலரா' நோய் பரவி உயிரிழப்புகள் அதிகரித்துக் கொண்டிருந்த நிலையில், தங்களின் வேண்டுதலால் அந்

நோயிலிருந்து தம்மைக் காப்பாற்றிய 'பரிசுத்த கன்னி மரி'யை லியோன் நகரின் பாதுகாவலியாக ஏற்றுக்கொண்டனர் மக்கள். அதன் நினைவாக 'பரிசுத்த கன்னி மரி'யின் உருவங்கொண்ட தங்கச்சிலையை வடிவமைத்து, அதன் திறப்புவிழாவை 8 டிசெம்பர் 1643 அன்று ஏற்பாடு செய்தனர். அன்றைய தினம் நகர மக்கள் அனைவரும் தங்களது வீட்டு யன்னல்கள், மொட்டை மாடிகள், பொது இடங்கள் போன்றவற்றில் மெழுகுவர்த்தி ஏற்றிவைத்து பாதுகாவலிக்கு நன்றி தெரிவித்து மகிழ்வைக் கொண்டாடினர். அந்நிகழ்வை பாரம்பரிய நிகழ்வாகக் கருதிவந்த மக்கள், 1852 தொடக்கம் வருடந்தோறும் 'தீபங்களின் விழா' என்ற பெயரில், நான்கு நாட்கள் கொண்டாடி வருகின்றனர்.

சினிமாவில் முன்னணியாகத் திகழும் இந்நகர், சினிமாவின் பிறப்பிடமெனச் சொல்லப்படுகிறது. 'துடிப்பான கலாசார நகரம்' மற்றும் 'வரலாற்று நகரம்' என்றும் அழைக்கப்படுகின்றது.

லியோன் தொடருந்து நிலையத்தில் இறங்கி மெத்ரோவிலும் பேருந்திலும் பயணித்து அப்பாத்துரை குடும்பமாகத் தங்கியிருந்த 'போயர்' (*Foyer*) என அழைக்கப்படும் விடுதிக்குச் சென்றோம். ஐந்து மாடிகளைக் கொண்ட கட்டடத் தொகுதியில் ஒவ்வொரு மாடியிலும் தனித்தனி வசதியான 10 அறைகள் இருந்தன. சமையலறை, கழிப்பறை, குளியலறை போன்றவை பொதுவானவை.



அப்பாத்துரை குடும் பம் இளம்குடும்பம். இருவரில் எவரும் வேலை செய்யவில்லை. அரசாங்கத் தால் வழங்கப்படும் தாபரிப்புப் பணத்திலேயே வாழ்கிறார்கள். இரவு உணவை அவர்களுடன் அருந்தினேன்.

அப்பாத்துரையின் பொறுப்பில் வேறொருவரின் அறை இருந்தது. அவர் அங்கு இடையிடையேதான் வந்து தங்கிச் செல்வார். அன்று அவர் இல்லாமையால் அன்றைய இரவை அங்கே கழித்தேன். பரிஸில் இருப்போரது இருப்பிட நிலையை ஒருகணம் எண்ணிப் பார்க்கத் தவறவில்லை. அங்குள்ள வர்கள் மீது இரக்கம் பிறந்தது. அமைதியான உறக்கம் கலைந்து எழுந்து நீராடிவர காலை 7.30 மணியாகிவிட்டது.

காலை உணவு அருந்தும்நேரம் யாழ். மாநகர சபையில் என்னுடன் கூடவே வேலைசெய்த ஒருவர் கீழ் மாடியில் தங்கியிருப்பதாக தகவல் கிடைத்தது. பெயர் அறியாதபடியால் யாரென்று ஊகிக்க முடியவில்லை. பல கட்டடங்களைக் கொண்டிருந்த அந்தப் 'போயரில்'. பத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் வசிக்கிறார்கள்.

என்னுடன் யாழ்ப்பாணத்தில் வேலை செய்ததாகக் குறிப்பிட்ட அவர் இங்கு ஹொட்டல் ஒன்றில் வேலை செய்கிறார். அன்று விடுமுறையில் நிற்கிறாரா என்பதை அறிந்துவர சென்ற அப்பாத்துரை, அவருக்கு விடுமுறை யென்றும், அண்மையில் நடைபெறுகின்ற ஞாயிறு சந்தைக்குச் சென்றுள்ள தாகவும் கூறினார்.

காலை 10.00 மணியிருக்கும் சந்தையால் வந்து விட்டாரென அறிந்து அங்கு சென்றேன் யாரென்று அறிவதற்காக. சமையலறையில் நிற்பதாக அப்பாத்துரை கூறியிருந்ததால் நேரடியாகவே சமையலறைக்குச் சென்றேன். அங்கு இருவர் சமையல் செய்துகொண்டிருந்தனர். ஒருவர், என்னுடன் கூடவே வேலைசெய்த 'ஜெயராஜா' என இனங்கண்டேன். என்னைக் கண்டதும் அவரும் அடையாளம் கண்டுகொண்டார். ஜெயராஜா என்னுடன் வேலை செய்தவர் மட்டுமல்ல. திருமணம் செய்த பின்னர் யாழ்ப்பாணத்தில் எனது வீட்டுக்கு அண்மையில்தான் வசித்தவர்.

நாங்கள் இருவரும் சிறிதுநேரம் உரையாடினோம். இவரோடு நின்று சமையல் செய்பவர் அவரது நண்பர் 'நாகராஜா', இதே மாடியிலே குடியிருப் பவர், இலங்கையில் காரைநகரைச் சேர்ந்தவர் எனக்கூறி என்னையும் அறிமுகம் செய்துவைத்தார் ஜெயராஜா. இங்கு வந்த பின்னர்தான் இருவரும் நண்பர் களானார்களாம்.

அங்கே உணவருந்துமாறும் அங்கேயே தங்குமாறும் ஜெயராஜா என்னைக் கட்டாயப்படுத்தினார். அப்பாத்துரையுடன் வந்த நான் அவரது சம்மதமில்லாமல் வரமுடியாது என்றேன். உடனே என்னையும் அழைத்துச் சென்று அப்பாத்துரையிடம் விபரத்தைக் கூறினார். அவரும் சம்மதம் தெரிவித்தார். நான் நன்றிகூறி வெளியேறினேன்.

அறிமுகமோ - சம்பந்தமோயில்லாத ஒருவருக்கு சுமையாக இருக் காமல் விலகியதில் பெரும் ஆறுதல் எனக்கு. இலங்கையில் இருக்கும்போது அங்கிருப்பவர்களால் வாயாரப் புகழப்படும், பிரான்ஸ் நாட்டில் வாழும் எம்மவரின் வாழ்வியல் நிலை, இங்கு எதிர்மாறாக உள்ளமைகண்டு பெரும் ஏமாற்றம்தான். துடுப்பில்லா ஓடத்தின் நிலை. கால் வைத்தபின்னர் யோசித்து என்ன பலன். எல்லாவற்றையும் ஜீரணமாக்கித் தொடரவேண்டியதுதான். ஜெயராஜாவுடன் இணைந்து உணவருந்தி அன்றைய பொழுதைப் போக்கி னேன். அவரது விருப்பத்திற்கிணங்க அங்கேயே தங்கிக்கொண்டேன்.

மறுநாள் காலை ஜெயராஜா வேலைக்குச் சென்றுவிட்டார். காலை உணவாக பணிஸ்ும், மதியத்திற்கு, முதல்நாள் சமைத்த உணவும் இருந்ததால் அவற்றை அருந்தினேன். எல்லோரையும்போல களவாகவே பிரான்ஸ்ற்குள் நுழைந்த நான், மாவட்ட காவல்துறை தலைமையகத்தில், அகதிகளுக்கான பிரிவில், அரசியல் அகதியாகப் பதிவுசெய்யவேண்டும். அப்போதுதான் அரச மற்றும் சமூகசேவைத் துறையினரின் உதவிகளை பெறவும், இங்கு வசிக்கவும் முடியும். அதற்கு எனக்கு வதிவிட முகவரி தேவை.

பரிஸில் ஒரு வீட்டில் பலருக்கு முகவரி பதிந்து வைத்துள்ளார்கள். தனி வீடுகளென்றால் இங்கும் அவ்வாறு செய்யலாமாம், போயரி'ல் செய்வ தற்கு அனுமதி இல்லையாம், அவரவர் பெயர்களிலே அறைப் பதிவு இருக்க வேண்டுமாம். பி.ப.3.00 மணிக்கு வேலையால் வந்த ஜெயராஜா, எனது பெயரில் அறை யொன்றைப் பதிவதற்காக 'போயர்' பொறுப்பாளரிடம் அழைத்துச் சென்றார். அங்கு வெற்றிடம் இருக்கவில்லை. சற்றுத் துரத்தில் 'வில்லி பிரான்ஸ்' என்ற இடத்திலிருக்கும் 'போயரை'த் தேடிச் சென்றோம். அங்கு ஜெயராஜாவுக்கு அறிமுகமானவர்கள் இருக்கின்றார்கள். போதியளவு இடமும் இருந்தது.

நால்வர் வீதம் ஒரு பெரிய அறையில் தங்குதற்கு ஏற்ற வசதியே அந் தப் 'போயரில்' உள்ளது. சமையலறை, கழிப்பறை, குளியலறை பொது வானதாக இருந்தன. அங்கு 'அடையார்' என தமிழர்களால் அழைக்கப்படும் அல்ஜீரியா நாட்டைச் சேர்ந்த பலர் அறைகளெடுத்து தங்கியிருக்கிறார்கள். 15 வரையிலான யாழ்ப்பாணத்தவர்களும் தங்கியிருக்கிறார்கள். அங்கு பெண்கள் தங்க முடியாது.

இரண்டாவது மாடியில் 3ஆம் இலக்க அறையில் தங்கிக் கொண்டேன். அந்த அறையில் மேலும் இருவர் இருந்தனர். ஒருவர் அப்பாத்துரையின் சகோதரர். மற்றவர் யாழ்ப்பாணம் கொழும்புத் துறையில் வசித்தவர். பெயர் 'ராஜன்'. யாழ்ப்பாணத்தில் வசித்தபோது அவரது தகப்பன், சகோதரர்களை நன்கு அறிவேன். அப்போது இவன் சிறுவனாக இருந்தான். இருவரும் அறிமுகமாகிக் கொண்டோம். இதுவரை 'ராஜன்' தனித்தே சமைத்து வந்தபடியால் மேற்கொண்டு இருவரும் ஒன்றாகக் சமைப்பதற்கு இணங்கிக் கொண்டோம்.

புதன்கிழமை தனது வேலை நேரத்தை மதியத்திற்குப் பின்னர் மாற்றம் செய்துவிட்டு, காவல்துறை தலைமையகத்திற்கு அதிகாலையே என்னை அழைத்துச் சென்றார் ஜெயராஜா. அந்நேரம் சென்றபடியால்தான் அலுவலகம் திறக்கப்பட்ட ஒருமணி நேரத்துக்குள் உள்ளே செல்லக்கூடியதாக இருந்தது. உள்ளே சென்றதும் நான் பிரான்ஸ் வந்ததன் நோக்கத்தைத் தெரியப்படுத்தி படிவத்தைப் பூரணப்படுத்தி ஒப்படைத்தேன்.

சிறிது நேரத்தால் நான் இங்கு தங்குவதற்கான விசா வழங்கினார் அதிகாரி. அவ்விசாவில் அகதியாக பதிவுசெய்ததற்கான குறிப்பு இருக்கவில்லை. அதைக் கண்ணுற்ற ஜெயராஜா, தனது விசாவையும் எடுத்துக் காண்பித்து என்னுடையதில் அக்குறிப்பு இல்லாமையைச் சுட்டிக்காட்டினார்.

தற்காலிகமாக அப்பதிவு நிறுத்தப்பட்டுள்ளதாகவும். இந்த விசா வோடு இங்கு வசிக்கலாம் என்றும், 'ஒவ்பிரா'வில் இருந்து பதில் வந்தபின்னர் பதிந்து தருவதாகவும் கூறினார். அதற்கு நாம் ஏதும் கூறுவதற்கில்லை என்பதால் அங்கிருந்து புறப்பட்டு வந்தோம்.

'ஒவ்பிரா' (OFPRA) என்பது 'நாடற்ற அகதிகளின் பாதுகாப்புக்கான

பிரான்ஸ் அலுவலகம்'. பரிஸ் நகரில் அமைந்துள்ளது. பிரான்ஸிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் அகதி அந்தஸ்து கோருபவர்களின் பத்திரங்கள் இங்கேயே பாதுகாக்கப்படுகின்றது. அகதி அந்தஸ்து வழங்கல் அல்லது நிராகரித்தல் போன்றவை இந்த அலுவலகத்தில் தகுதிவாய்ந்த குழுவினரால் தீர்மானிக்கப்படுகிறது.

மறுநாள் காலையில் சமூகசேவை மற்றும் உதவி வழங்கல் நிறுவனத்தின் அலுவலகத்திற்கு அப்பாத்துரையின் துணையுடன் சென்றேன். அன்பாக வரவேற்று, என்னைப் பற்றிய விபரங்களை கேட்டு பதிவுசெய்து கொண்டார் ஒரு அலுவலகர்.

எனது விசாவில் அகதிக்கான பதிவு இல்லாதபடியால் அவரால் ஏற்புடைய வசதிகள் எதனையும் செய்துதர முடியவில்லை. இதுபற்றிய விபரங்களை எடுத்துக்கூறிய அவர், 'ஒவ்பிரா'வுக்கு கடிதம் மூலம் அறிவித்து மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பதாகக் கூறினார்.

அகதி அந்தஸ்து கோரிய ஒருவருக்கு மூன்று மாதங்களுக்கு சமூக சேவை நிறுவனத்தினால் தாபரிப்புப் பணமாக 1,000 பிறாங் வீதம் வழங்கப் படுவது வழமை. இப்பணமானது, 'A.N.P.' எனச் சொல்லப்படும் அரசினால் ஒரு வருடத்திற்கு வழங்கப்படவுள்ள மாதாந்த உதவித் தொகையான 1,500 பிறாங், கிடைப்பதற்கு ஓரிரு மாதம் தாமதமாகலாம் என்ற காரணத்துக்காகவே வழங்கப்படுகின்றது. ஆனால், எனது விசாவில் அகதிக்கான குறிப்பு பதியப்படும் வரை இவை எதுவும் கிடைக்கப்போவதில்லை.

எதுவும் செய்துதர முடியாத நிலையிலிருந்த அலுவலகர் தனது முயற்சியால் பிரான்ஸ் மொழி படிப்பதற்கு பாடசாலை ஒன்றை ஏற்பாடு செய்து தந்ததுடன் ஒரு மாதத்திற்கு தேவையான பிரயாண ரிக்கற்றுகளையும், 'ரின்'களில் அடைக்கப்பட்ட உணவுப் பொருட்களையும் வழங்கினார். தன்னால் முடிந்தவரை உதவியைச் செய்த அலுவலகருக்கு நன்றிகூறிப் புறப்பட்டோம்.

நிறைவற்ற வருவாய்

'ஒவ்பிரா'விலிருந்து எந்தத் தகவலும் இல்லை. கையிலிருந்த டொலரும் செலவாகக் கரைந்து சென்றது. எனது விசாவில் அகதிக்கான பதிவு இல்லையென்பதால் வேலை செய்வதற்கு அனுமதியில்லாத நிலை. இந்நாளில் அப்பாத்துரை, குடும்பத்துடன் ஜேர்மனியில் அகதி அந்தஸ்து கோரிச்சென்று அங்கேயே தங்கிவிட்டார். அவர் விட்டுச் சென்ற விசாவிலுள்ள அவரது படத்தில் என்னுடைய சாயல் இருப்பதால் அதனைக்கொண்டு வேலை தேடியலைந்தேன். அதுவும் சாத்தியப்படவில்லை.

ஜெயராஜா வேலைசெய்யும் ஹொட்டலில் பீங்கான், கோப்பை கழுவும் வேலைக்கென ஒரு நாளைக்கு ஆள் தேவைப்பட்டதால், ஜெயராஜா என்னை அழைத்துச் சென்றார். 41 மாடிகளைக் கொண்ட, பிரான்ஸின்

இரண்டாவது உயரமான கட்டடத்தின் மேல் மாடியிலேயே ஹொட்டல் அமைந்துள்ளது. அதில் நின்றவாறு லியோன் நகரத்தின் செழிப்பைத் தெளிவாகப் பார்க்க முடிந்தது.

அந்த ஹொட்டலில் முன்னூறு பேர் பங்குகொள்ளும் நிகழ்வு பி.ப. 4.00 மணியிலிருந்து இரவு 11.00 மணிவரை இடம் பெறவிருந்தது. வருகை தருபவர்களுக்கு மதுவகை, கோப்பி, சிற்றுண்டி, இரவு உணவு, உணவின் பின்னரான மென்னுணவு போன்றவை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. அதனாலேயே அன்று ஆள் தேவைப்பட்டது.

குறித்த நேரத்தில் நிகழ்வு ஆரம்பமானது. பி.ப. 5.00 மணிவரை வேலை எதுவுமிருக்கவில்லை. அதன்பின் மாபிள் கோப்பைகள், மாபிள் பீங்கான்கள், வேறு பல மாபிள் பொருட்கள், கிளாஸுகள் போன்றவை கொண்டுவரப்பட்டன. தொடராக தேநீர் மற்றும் மேசைக் கரண்டிகள், முள்ளுக் கரண்டிகள், கத்திகள் போன்ற சில்வர் பொருட்களையும் கொண்டு வந்து வைக்கத் தொடங்கினர் பரிமாறும் பணியாளர்கள். இதைப் பார்த்ததும் எனக்கு நடுக்கம் ஏற்பட்டது.

இவற்றை பிரத்தியேக, வெவ்வேறு 'ட்றே'களிலிட்டு பாரிய கழுவும் இயந்திரத்தினுள் ஒரு பக்கத்தால் வைத்து இயக்கியதும் அவை, கழுவப்பட்டு மறுபக்கத்தால் வெளியேறும். வெளியேறியவற்றை ஒதுக்கப்பட்ட நீண்ட மேசையின்மேல் வைக்கவேண்டும். வேறு சிலர் அவற்றை சேலையால் துடைத்து உரிய இடங்களுக்கு எடுத்துச் சென்றதும் 'ட்றே' வெறுமையாகும். இப்படியே தொடரும்.

முன்னனுபவமற்ற எனக்கு ஜெயராஜா தெளிவுபடுத்தினார். ட்றேயில் பொருட்களை வைக்கும் ஒழுங்கு, ட்றேயை இயந்திரத்திலிடும் முறை, இயந்திரத்தை இயக்குதல் மற்றும் நிறுத்துதல் போன்றவற்றை செயல் முறையில் செய்துகாட்டினார்.

அவர் செய்துகாட்டிய பக்கம் நான் நின்றவாறு 'ட்றே'யில் பொருட்களை அடுக்கி இயந்திரத்தினுள் வைத்துக்கொண்டிருக்க, மறு பக்கத்தால் கழுவப்பட்டு வெளியேறியவற்றை இடம்மாற்றிக் கொண்டிருந்தார் ஜெயராஜா. இதற்கு முன்னனுபவம் வேண்டும். தாமதமானால் ட்றே நெருக்குப்பட்டு சேதாரத்தை ஏற்படுத்தும் என்பதால் ஜெயராஜாவே அதில் நின்று கொண்டார். ஒவ்வொரு வகைப் பொருட்களை வைப்பதற்கும் வேறுபட்ட 'ட்றே'கள் உள்ளன. அதுவே பொருட்களுக்குப் பாதுகாப்பானது.

இரவு 11.30 மணிவரை ஓய்வற்ற வேலை. எனக்கு புது அனுபவம். ஆனால், ஓராண்டுக்கு மேலாக வேலைசெய்யும் ஜெயராஜா, கூடவே நின்று இணைந்து வேலை செய்தபடியால் பெரும் கஷ்ரமாகத் தெரியவில்லை. முன்னூறு பேர் கலந்துகொண்டார்களா? மூவாயிரம் பேர் கலந்து கொண்டார்களா? என்ற மலைப்பு எனக்கு. அவ்வளவு பொருட்கள் கழுவுவதற்கு வந்து சேர்ந்தன.

வேலைகள் யாவும் முடித்து, உணவருந்தி போயருக்கு வர இரவு 1.00 மணியாகிவிட்டது. இதுஒன்றே நான் நிரந்தரமாக இலங்கை திரும்பும் வரையுள்ள காலப்பகுதியில் செய்த பாத்திரங்கள் கழுவும் வேலையாகும். மறுநாள் வேலைக்குச் சென்ற ஜெயராஜா, எனது சம்பளப் பணமாக 150 பிறாங் தந்தார். முதல் தடவையாக பெற்ற சம்பளமென்பதால் உள்ளூர மகிழ்வு.

போயரில் இருப்பவர்களில் அநேகர் அதிகாலை 5.00 மணிக்கு 'பூபல்' (குப்பை) அகற்றும் வேலைக்குச் செல்வபவர்கள். அவர்களின் வற்புறுத்தலுக்கு இணங்க ஒருநாள் அதிகாலை அவர்களுடன் இணைந்து அலுவலகம் சென் றேன். போகும் எல்லோருக்கும் வேலை கிடைக்குமென்றில்லை. நிரந்தர ஊழியர்கள் வராத வெற்றிடங்கள் மற்றும் விசேட வேலைகள் இருந்தால் மட்டும் வேலை கிடைக்கும். போயரில் இருப்பவர்களில் சிலர் ஓராண்டுக்கு மேலாக தொடர்ச்சியாக வேலைசெய்கிறார்கள். ஆனால், அவர்கள் பதிவு செய்யப்பட்ட நிரந்தர ஊழியர்களல்லர்.

புதியவர்களை வேலைக்கு அழைப்பது கடினமாக இருந்த போதும் அன்று வேலையாட்கள் மிகக் குறைவாக இருந்தபடியால் என்னையும் சங்கானையைச் சேர்ந்த ஒருவரையும் வேலைக்கு வருமாறு அழைத்தார் பொறுப்பாளர்.

என்ன வேலையென்று அறியாமலே செல்லத் தயாராகிய நாம், 'ஹன்டர்' ரக வாகனம் வந்து தரித்ததும் அதில் ஏறிக்கொண்டோம். வீடு ஒன்றின் உள்பக்க அடைப்புச் சுவர்களை உடைத்து அவற்றை ஹன்டரில் ஏற்றுவது தான் நாம் செய்யவுள்ள வேலை என, வாகனச் சாரதியிடமிருந்து அறிந்து கொண்டோம். அந்த வீடு தூரத்திலிருந்ததால் அங்கு செல்லும்போது காலை 8.00 மணியாகிவிட்டது.

உடைக்கப்படவுள்ள வீட்டிற்கு அருகாமையிலேயே வீட்டின் உரிமையாளர் குடும்பம் இருந்தது. அவர்களுடன் அமர்ந்து காலை உணவை அருந்திவிட்டு, உடைக்கவேண்டிய வீட்டில் நுழைந்தோம். அது விசாலமற்ற பழைய மாடி வீடு. மாடித்தரை மற்றும் படிகள் பலகையால் அமைக்கப் பட்டிருந்தன. வீட்டின் உள்ளே குறுக்கு மறைப்புகளாக இருக்கும் சுவர் களையே உடைக்கவேண்டும். முதலில் மேல் தளத்தில் ஆரம்பித்தோம். வேலை கடினமானதாக இருக்கவில்லை. குறுக்குச் சுவர்கள் மூன்று அங்குல கனத்திலேயே இருந்தன. மூவரும் சேர்ந்து இலகுவாக அவற்றை உடைத்தோம்.

உடைத்தவற்றை கூடையிலிட்டு படிகளாலிறங்கி வீட்டுக்கு முன்னால் நிறுத்திய ஹன்டரில் ஏற்றவேண்டும். ஒடுங்கிய படிகளாக இருந்ததால் சிரமத்தைக் கொடுத்தது. இருப்பினும் மூவரும் இருவர் இருவராக மாறிமாறி ஏற்றினோம். இடையிடையே உரிமையாளரால் பழச்சாறு மற்றும் குளிர்பானம் தரப் பட்டது. அவர்களது உபசரிப்பு பிரமாதம்.

12.00 மணியானதும் சாப்பிட வருமாறு அழைத்தார்கள். அருகாமை யிலிருந்த 'றெஸ்ற்ரோறன்ற்'ரில் 'வைன்' உடன் உணவாக ஸ்பைக்கற்றிவ்

(நூடில்ஸ்) அருந்தினோம். பி.ப. 1.00 மணிவரை அங்கேயே இருந்துவிட்டு வேலையை ஆரம்பித்தோம்.

மாடியில் கிடந்த உடைவுகளை சேகரித்து வாகனத்தில் ஏற்றிய பின்னர். கீழ் தளத்தில் வேலையைத் தொடங்கினோம். அங்கு மேல் மாடியை விட அடைப்புகள் குறைவாக இருந்தது.

பி.ப. 4.00 மணிக்கு சிற்றுண்டியும் கோப்பியும் தரப்பட்டது. வேலை செய்யுமிடத்தில் நின்றவாறு அவர்களும் எம்முடன் சேர்ந்து அருந்தினார்கள். பி.ப. 6.00 மணிக்கு வேலை முடிவுற்றதால் புறப்பட்டோம். உரிமையாளருக்கு பூரண திருப்தி. மூவருக்கும் ஐம்பது பிறாங் வீதம் அன்பளிப்புச் செய்து தனது சந்தோஷத்தைப் பகிர்ந்துகொண்டார்.

இந்த வேலைக்கான எங்களுக்குரிய சம்பளத்தை வார இறுதியில் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள வேண்டும். மதியம் 12.00 மணிக்குப் பின்னர் மேலதிக வேலைநேரமாகக் கொள்ளப்படும். வாகனத்தை அலுவலகத்திற்குக் கொண்டுவந்து நிறுத்தும் நேரமே வேலை முடிவு நேரமாகும். அதற்கேற்றாற் போல் மேலதிக சம்பளம் கிடைக்கும் என்பதையும் சாரதி மூலமாக அறிந்துகொண்டோம். நிறைவான வருவாய் கிடைக்கவுள்ள மகிழ்வில் போயரை அடைந்தோம்.

முதல்நாளைப்போல் அதிகாலை அலுவலகம் சென்றிருந்தேன். சங்கானையையைச் சேர்ந்தவர் வரவில்லை. நேற்று எமது அதிஷ்டம் என்றே சொல்லலாம். இன்று என்னவோ தெரியாதென்ற சிந்தனை எனக்கு. வேலைக்கு தேவையானவர்களை அனுப்பி முடிந்ததும் நானும் வேறு நாட்டைச் சேர்ந்த ஐவரும் மீதமாக நின்றோம். நேற்று எனக்கு தாமதமாய் வேலை முடிந்த காரணத்தாலோ என்னவோ, என்னை மட்டும் அழைத்தார் பொறுப்பாளர்.

ஐம்பது அடி நீளத்திற்கு சரிந்து கிடந்த முள்ளுக்கம்பி வேலியைக் கழற்றும் வேலை. ஒன்பது மணிக்கு முன்னர் முடிக்கக்கூடிய வேலை. பொறுப்பாளர் மதியம் மட்டும் வேலை செய்யுமாறு கூறிச் சென்றுவிட்டார். நேற்று நான் செய்த வேலை புதிதும் கடினமானதும். அதனால் உடல் அலுப்பாக இருந்தது. அந்த நிலையில் இந்த வேலை கிடைத்தது ஆறுதலாக இருந்தது.

பத்து மணியளவில் பொறுப்பாளர் அங்கே வந்தார். வேலை செய்த இடத்தில் ஒருவருக்கு விபத்தாம் அந்த இடத்திற்கு போவேண்டும். வாகனத்தில் ஏறுமாறு கூறினார். நானும் ஏறிக்கொண்டேன். என்ன வேலை என்று அறிவதற்கு உள்ளூரத் தவிப்பு.

வண்டி நிறுத்தப்பட்டது. பக்கத்தில் கழிவகற்றும் இயந்திர வண்டி நின்றது. அங்கு நின்ற ஒருவரைக் காட்டி, இவருடன் இணைந்து வேலை செய்யுமாறு கூறிச் சென்றார். எனக்கு நெஞ்சு திக்கென்றது. கையில் அணிவதற்கு கையுறை தந்தார். அணிந்து கொண்டேன். மறுக்கவோ, விருப்ப மில்லையென்று சொல்லவோ முடியாத நிலை. இங்கு வேலையைக் கொண்டு எவரும் ஏற்ற இறக்கம் பார்ப்பதில்லை என்பதை அறிவேன்.

கூடவே வேலை செய்யும் பிரான்ஸ் நாட்டவர் சொல்லிய முறையில் அவருடன் இணைந்து செய்தேன். வீதியோரம் மற்றும் மாடி வீட்டுத் தொகுதி களுக்கு வெளியே நிறுத்தப்பட்டுள்ள சிறிய, பெரிய சில்லுகள் பூட்டிய பெட்டிகளை தள்ளிவந்து இயந்திரத்தில் பொருத்திவிட்டால், இயந்திரம் பெட்டியை மேலெழுப்பி, அதிலுள்ள கழிவுகளை உள்ளே எடுத்து, வெறுமை யாக கீழே தரும். அதனை எடுத்த இடத்தில் விட்டுவிட்டு அடுத்த இடத்திற்குச் செல்ல வேண்டும். இதுவே எமது வேலை.

11.30 மணிக்கு வேலை முடிவுற்று புறப்பட்ட வாகனம் கோப்பி அருந்தகம் ஒன்றில் தரித்தது. மூவருமாக கோப்பி அருந்தினோம். நாம் அங்கேயே இருக்க சாரதி வாகனத்தை எடுத்துச் சென்று அரை மணி நேரத்தால் திரும்பி வந்தார். கோப்பிக்குரிய பணத்தை என்னுடன் கூட இருந்தவர் செலுத்தினார். பின்னர் அலுவலகம் நோக்கிப் புறப்பட்டோம்.

நான் யாழ்ப்பாணத்தில் இத்தகைய வேலைகளில் எதனையும் செய்த தில்லை. அன்னிய நாட்டில் அடைக்கலமாய் வந்துள்ள நாம், இங்கு வாழ வேண்டுமானால், இலங்கையில் எங்களை நம்பியிருக்கின்ற குடும்பத்தினரைக் காப்பாற்ற வேண்டுமானால் குறித்த வேலையென்றல்ல, என்ன வேலை யென்றாலும் விருப்புடன் செய்யவேண்டும். அதற்காக எம்மைத் தயார் செய்ய வேண்டும் இதுதான் காலத்தின் நியதி என்ற எண்ணம். புதிதாக என்னுள் துளிர்விட்டது. பெரும் சுமையை இறக்கி வைத்த மனநிறைவில் அலுவலகத்தை அடைந்தோம்.

அன்று சாயந்தரம் சம்பளம் வழங்கும் நாளாகையால் அலுவலகம் சென்று சம்பளத்தைப் பெற்றுக்கொண்டேன். முதல்நாள் சம்பளமாக 280 பிறாங்கும் இன்றைய சம்பளமாக 150 பிறாங்கும் கிடைத்ததில் மகிழ்ச்சி. தொடர்ந்து சில நாட்கள் அதிகாலை அலுவலகத்திற்குச் சென்றபோதும் வெற்றிடம் இன்மையால் வேலை கிடைக்கவில்லை. அதனால் அங்கு செல்வதை நிறுத்திக்கொண்டேன். வேறு வேலைகளும் வசதியாக அமைய வில்லை.

இந்நிலை தொடர்ந்ததால் போயருக்கு செலுத்தவேண்டிய பணம், உணவு மற்றும் அத்தியாவசிய செலவுகள் போன்றவற்றிற்குப் பணத் தட்டுப்பாடு ஏற்பட்டது. கடனாகப் பெறவும் விருப்பற்ற நிலை. அவ்வாறு பெறும் பணத்தை குறித்த தவணையில் மீளளிக்க முடியாத நிலை ஏற்பட்டால் என்ன செய்வதென்ற தயக்கம். அத்துடன் நான் பழகும் பலர் என்நிலையி லேயே இருந்தார்கள். ஜெயராஜாவிடமும் கேட்க மனம் துணியவில்லை. இதனால் அமைதியற்ற நிலை.

இந்நேரத்தில் சவூதி அரேபியாவில் வேலை செய்யும் எனது மருமகனின் முகவரி கிடைத்தது. உடனேயே என்நிலையை விளக்கி கடிதம் எழுதியிருந்தேன். ஒரு வாரத்தால் எனது பெயருக்கு 300 டொலர் அனுப்பியிருந்தார். இக்கட்டான அந்த நேரத்தில் அப்பணம் கிடைத்ததால்

கோடி பெற்ற மகிழ்வு. கண்கள் கலங்கின. உடனேயே டொலரை மாற்றி தேவையை நிறைவுசெய்து கொண்டேன்.

என் நிலை, இங்குள்ள வாழ்வு எனக்கு வெறுப்பாக இருந்தது. ஏனிங்கு வந்தேனென்ற கேள்விக்கே பதிலின்றித் தவித்தேன். தவிப்பு உறக்கமாகி, உறங்கி எழுந்தபோது காலையில் காத்திருந்தது எனது தாய் மரணமான செய்தி.

செய்தி கிடைத்த நேரம் முதல் என் கண்கள் நீரைச் சொரிந்தவாறே இருந்தன. நண்பர்களின் ஆறுதல் என் மன அழுத்தத்தைக் குறைத்தாலும் துயரைப் பகிர்ந்துகொள்ள உறவுகள் இல்லாமை வேதனை அளித்தது. தனிமை... வருவாயில்லை... பொருத்தமான விசா இல்லை... இங்கு வந்ததற்காக என்னையே நொந்துகொண்டேன். வராமலிருந்திருந்தால் எவ்வளவோ மேலாயிருக்கும். அன்னைக்கு பணிவிடை செய்யவோ, உயிர் பிரியும் நேரத்தில் உடனிருக்கவோ, இறுதிச் சடங்கில் பங்குகொள்ளவோ முடியாத துர்ப்பாக்கிய நிலையை எண்ணிக் கலங்கினேன்..

நாட்கள் செல்லச் செல்ல வேதனை ஜீரணமாகி இயல்பு நிலையை எட்ட முடிந்தது. காலத்தின், சூழலின் கட்டாயமது. ஆனாலும், உறுதியைக் கைவிடவில்லை. லியோனில் வசிக்கத் தொடங்கியதிலிருந்து மனச் சஞ்சலம் ஏற்படுகிற வேளைகள் மற்றும் ஞாயிற்றுக்கிழமை காலையில், 'வேண்டிக் கொள்ளும் மலை' என்று அழைக்கப்படும் 'போர்(f)வையர்' மலையில் இருக்கும் 'போர்(f)வையர் அன்னை திருத்தலத்'திற்கு சென்று வருவதுண்டு. அங்கு செல்லும் தடவைகளில் அனைத்தையும் மறந்து என்னால் மன அமைதியைப் பெற முடிகிறது.

போ(f)வையர் அன்னை திருத்தலம்

ரோமானியரின் ஆட்சிக்கால அடையாளங்கள் நிறைந்த இடம் போர்(f)வையர் மலைப்பகுதியாகும். லியோனிலிருந்து பேருந்தில் பயணித்தால் போர்(f)வையர் மலையடிவாரத்தில் இறங்க முடியும். மெத்ரோவில் பயணித்தால் அதன் இறுதி தரிப்பிடமான 'பெல்கூர்' என்ற இடத்தில் இறங்கி 300 மீ. நடந்து மலையடிவாரத்தை அடைய முடியும்.

போவையர் நகரும் போவையர் அன்னை திருத்தலமும் அமைந் திருக்கும் மலையின் அடிவாரத்திலிருந்து 100 மீற்றர் தொலைவில் இருபக்கமும் கட்டப்பட்ட அணையிடையே 'சோன்' (Saon) நதி ஓடுகிறது. பிரசித்தி பெற்ற நகரான பெல்கூர் நகரையும் போர்(f)வையர் மலைப்பகுதியையும் இந்நதியே பிரிக்கின்றது. நதிக்கும் மலையடிவாரத்துக்கும் இடைப்பட்ட பகுதியில் இடைக்கால நகரம் காணப்படுகின்றது. இந்நகரத்திற்கான பலதரப்பட்ட தேவைகளுக்கும் சோன் நதியே பயன்பட்டுள்ளதாக ஊகிக்க முடிகிறது.

'கேபிள்' மூலம் இயக்கப்படும் 'பிர்(f)னிக்குளோர்' (இழுவை ஊர்தி) மலையடிவாரத்திலிருந்து சரிவாக போவையர் நகருக்குச் செல்கின்றது. இது தவிர, மலையடிவாரத்திலிருந்து மலையைச் சுற்றிச் செல்லும் தார்வீதியும்,

சேர்ந்தாற்போல் நடைபாதையும் மற்றும், படிகளாலமைந்த பாதையும் உள்ளன. திருத்தலத்திற்குச் செல்கையில் இந்த நடைபாதையால் சென்று அதனாலே திரும்பி வருவதும், இழுவை ஊர்தியில் சென்று நடை பாதையால் திரும்பி வருவதுமுண்டு. இழுவை ஊர்தியில் செல்வதானால் ஊர்தியின் தளமும் நடைபாதையும் சந்திக்குமிடத்திலிருந்து படிகளில் ஏறியே திருத்தலத்திற்குச் செல்ல முடியும்.

நடைபாதையால் செல்லும் சந்தர்ப்பங்களில் இடைக்கால குடியிருப்புகளினதும் பழமைவாய்ந்த ரோமானிய கட்டடக்கலையினதும் எச்சங்களை பல கோணங்களில் பார்த்து அப்பகுதியின் முன்னைய சிறப்பை வியந்தவாறே செல்வது வழக்கம்.

1872 - 1884 இடைப்பட்ட காலத்தில் கட்டப்பட்டதாக அறியப்படும் 'போ(ர்)வையர் அன்னை திருத்தலம்', கோதிக் கட்டடக்கலை அமைப்பில் அழுகுற காட்சியளித்தது. திருத்தல நுழைவாசல், திருத்தல வளாக சமதரையிலிருந்து முப்பது படிகள் வரை உயர்ந்து இரண்டு தூபிமாடங்களுக்கு (கோபுரங்கள்) இடையில் அழகிய முகப்பாகக் காணப்பட்டது.



அதிலேறி உள்ளே சென்றால் ஆலயத்தின் உட்புறக் கூரையில் வரையப்பட்டுள்ள ஓவியங்களின் அழகை விபரிப்பதற்கு வார்த்தைகளே இல்லை. பார்ப்போரை மெய்மறக்கச் செய்யும் அற்புதமான வர்ண வரைபுகள் உயிரோட்டமாகக் காணப்பட்டன. ஆலயத்தின் வலதுபக்கம் இணைந்தாற்போல் 'போ(ர்)வையர் அன்னை' வழிபாட்டிற்கென சிற்றாலயமும் இருக்கின்றது. அங்கு அமைதியையே காணமுடிந்தது. சாந்தமே உருவாக காட்சிதரும் அன்னையைப் பார்ப்பவர்கள் நெக்குருகி வேண்டிக் கொள்வர்.

திருத்தல வளாகம் விசாலமானது. அத்தளம் சுற்றிவர மூன்று அடி உயரத்தில் தடுப்புச் சுவர் கட்டப்பட்டுள்ளது. சுவரோரங்களில் நிரையாக 'ஒலிவ்' மரங்கள் வளர்ந்துள்ளன. இலங்கையில் பாஸ்கு கால குருத்தோலை ஞாயிறு திருப்பலியில் தென்னைமரக் குருத்தோலை பாவிப்பதைப்போல இங்கு ஆலய வளாகத்திலுள்ள 'ஒலிவ்' மரங்களின் கொப்புகளே பாவிக்கப் படுகின்றன. வளாகத் தளத்தில் நின்று லியோன் நகரின் அழகை பூரணமாக இரசிக்கலாம். 'சோன்' நதியில் பயணிக்கும் கப்பல்கள், நகரும் வாகனங்கள் தத்ரூபமாகத் தெரிந்தன.

அங்கிருந்து பார்க்கும்போது பண்டைய ரோமானிய நகரின் எஞ்சியுள்ள அடையாளங்களையும் தெளிவாகப் பார்க்க முடிந்தது. நகரின்

மையத்தில் கி.மு. 15ஆம் நூற்றாண்டில் ரோமானியர்களால் கட்டப்பட்டதாக அறியப்படும் 90 மீ. விட்டமுள்ள அரங்கு, கி.பி. 2ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் 108 மீ. விட்டத்தில் 10,000 பார்வையாளர் அமரும் வகையில் விரிவாக்கம் செய்யப்பட்டு காணப்படுகின்றது. இது முக்கியமான ஒரு சுற்றுலாத்தலம் என்பதுடன் கலாசாரமையமாகவும் பயன்படுகிறது.

ரோமானிய அரங்கில், வருடந்தோறும் ஜூன் முதல் ஓகஸ்ட் வரையான காலப்பகுதியில் 'போ(f)வையர் இரவு' என்னும் பல் கலாசார விழா சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. ரோமானிய திரையரங்குகளில் நடை பெறும் நிகழ்வுகள் போன்று பிரபல இசையான 'ஜாஸ்', மரபு நடனம், நாடகம், 'ஒபேரா' (ஐரோப்பியரின் பண்டைய நாட்டுக்கூத்து. இதனில் நாடுகளுக்கு நாடு சிறிய வேறுபாடுகளைக் காணமுடியும்), சினிமா போன்ற பல்வேறு நிகழ்வுகள் இடம் பெறுகின்றன.

இவ்வரங்கம் போன்று ரோமானிய கட்டட எச்சங்கள் பல அந்தப் பகுதி பூராவும் காணப்படுகின்றன. சில பராமரிக்கப்படுவதுடன் சில கைவிடப் பட்டுமுள்ளன.


ரோமானிய அரங்கு

போ(f)வையர் மலை யடிவாரத்தில் 'மெத்ரோ' தரிப்பிடம் தோண்டும் பணி நடைபெற்றுக்கொண்டிருந்தது. இந்த மெத்ரோ தரிப்பிடம் போ(f)வையர் மலைப் பகு தியை இணைப்பதற்காக சோன் ஆற்றின் கீழாகத் தோண்டப் படும் புதிய மெத்ரோ சேவைக் கானதாகும்.

கனரக இயந்திரங்கள் மூலம் மூன்று மாடி உயரமளவிலான ஆழம் வரை தோண்டப்பட்டது. அவ்வேளை, அங்கே பண்டைய செங்கல் கட்ட டத்தின் எச்சங்களை கண்டனர் பணியாளர். அவர்கள் வழங்கிய தகவலால் உடனே தோண்டும் பணி நிறுத்தப்பட்டு அகழ்வாராய்வாளர் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டது.

பல மாதங்களாக அகழ்வாய்வார்கள் எடுத்த முயற்சியால் பண்டைய ரோமானிய காலத்து குடிமனை ஒன்றின் கீழ்ப்பக்கப் பாதிக் கட்டடமும், அக்காலப் பாவனைப் பொருட்கள் பலவும் கண்டெடுக்கப்பட்டன. இது போன்று ரோமானியர் காலத்துக்குரிய கட்டடங்கள் அப்பகுதியில் மேலும் புதைந்து இருக்கலாமெனக் கருதப்பட்டபோதும் தற்போது பல கட்டடங்கள் மேற்பரப்பில் தொடராகக் கட்டப்பட்டுள்ளதால் அப்பகுதியைத் தோண்டிப் பார்ப்பது இலகுவானதல்ல என்ற கருத்தை முன்வைத்தார்கள் அகழ்வாய் வாளர்கள். அதனால் தொடர முயற்சிக்கவில்லை.

மெத்ரோ தரிப்பிடம் தோண்டத் தொடங்கியதிலிருந்து இடம் பெற்ற பணிகள், அகழ்வாராய்வு வேலைகள், அதற்கெனப் பயன்படுத்திய கனரக இயந்திரங்கள் போன்றவற்றை போ(ரி)வையர் செல்லும் நாட்களில் சிறிது நேரம் தரித்துநின்று பார்ப்பதில் உளமார்ந்த மகிழ்வு எனக்கு.

சிற்றி அடித்தல்

அகதி விசாவுக்காக நாளும் பொழுதும் காத்திருந்து, வாழ்வுக்காக வேலை தேடி களைப்புற்று சோர்ந்திருந்த நாளில், பரிஸில் பலராலும் செய்யப்படுகின்ற, அதனால் அனுகூலமடைகின்ற 'சிற்றி அடித்தல்' முறை லியோனிலும் தொற்றிக்கொள்ள ஆரம்பித்தது. சிற்றி அடித்தல் பற்றிய விளக்கத்தை, நடந்து கொள்ளும் முறையை, செய்யவேண்டிய முன்னேற்பாடுகள், கிடைக்கும் வருவாய், செய்தவர் சிலரது விபரம் போன்றவற்றை போயரில் உள்ளவர்கள் கதைகதையாய்க் கூறினர்.

ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட நகரங்களில் வெவ்வேறு பெயரில் அகதி அந்தஸ்து கோரி விண்ணப்பிக்கும் முறையையே 'சிற்றி அடித்தல்' அல்லது 'லொஸ்ற்' என்று அழைத்தனர். விசா நிராகரிக்கப்பட்டவர்கள், குறித்த காலம் வரை பதில் கிடைக்காமையால் விசாவைப் புதுப்பிக்க முடியாதவர்கள், உரிய விசா இல்லாமையால் வேலை செய்ய முடியாதவர்கள், வேலையின்றி அலைபவர்கள் போன்றவர்களின் கண்டுபிடிப்பே இது.

பரிஸில் நிரந்தர இருப்பிடமாகக் கொண்டிருக்கும் ஒருவர், வேறொரு நகரிலுள்ள காவல்துறை தலைமையகத்தில், தன்னால் தயாரிக்கப்பட்ட பத்திரங்களை ஒப்படைத்து அகதி அந்தஸ்து கோருவர். முதல் நடவடிக்கையாகத் தலைமையகம் அதை ஏற்றுக் கொண்டு விசா வழங்கும்.

அகதி அந்தஸ்து கோருவோர் இலங்கையர் மட்டுமல்ல, பல்வேறு நாடுகளைச் சேர்ந்தவர்களும் அடங்குவர். முன்னணி நகரங்களில் அகதி அந்தஸ்து கோரி விண்ணப்பிப்போர் தொகை அதிகமாக இருப்பதால் வரம்பை மீறிய நிலை அங்கு. முன்னணி நகரங்களைப் போன்று எல்லா நகரங்களிலும் இருக்காத காரணத்தால் நடைமுறையில் மாற்றங்கள் உண்டு. அகதி அந்தஸ்து கோரியோர் தொகை குறைவாக இருப்பதால் இலகுவாக விசா பெற்றுக் கொள்ள முடிகிறது. ஹொட்டலில் தங்கிவிட்டு அந்த முகவரியை வசிப்பிட முகவரியாகக் கொடுத்தாலே அதை ஏற்றுக்கொள்வர். இதையே பலரும் செய்கிறார்கள்.

போயரில் இருப்பவர்களில் இருவர் சிற்றி அடிப்பதற்கென முன் ஆயத்தங்களைச் செய்தனர். அவர்களும் என்நிலையை ஒத்தவர்கள்தான். தம்மோடு வருமாறு என்னையும் அழைத்தனர். 'ஏதாவது பிரச்சினை ஏற்பட்டால்...?' நினைத்தபோது உடல் சிலிர்த்தது. அதனால் அவர்களுடன் செல்வதற்கு மறுத்துவிட்டேன்.

ஜெயராஜாவுக்கு விடுமுறை என்பதால் அவரைத் தேடி போயருக்குச்

சென்றபோது அவரின் உறவினர் ஒருவர் அங்கு வந்திருந்தார். அவரும் நானும் எதிரெதிரே நோக்கியபோது ஒருவரையொருவர் அடையாளம் கண்டு கொண்டோம். ஏற்கெனவே அவரை எனக்கு யாழ்ப்பாணத்தில் தெரியும். அவரது பெயர் இராஜாதிராஜன். இருவரும் குசலம் விசாரித்துக் கொண்டோம்.

குடும்பமாக 'சலோன் சூ சோன்' என்ற நகரத்தில் வசிக்கின்றார். என் நிலையைக் கேட்டறிந்து, அனுதாபப்பட்டதுடன், அவரும் 'சிற்றி அடிப்பதற்' கான ஆலோசனையையே முன்வைத்து என்னை ஊக்கப்படுத்தினார். அவ்வளவுக்கு பலர் மத்தியிலும் பல இடங்களிலும் தொழிலாக ஊடுருவியிருந்தது சிற்றி அடித்தல்.

தான் வசிக்கும் நகரத்தில் பலர் இவ்வாறே செய்து போயிரில் தங்கியிருப்பதாகவும், அங்கு வந்தால் தன்னால் உதவிசெய்ய முடியுமெனவும் வலியுறுத்திக் கூறினார். எனக்கு பூரண விருப்பம் இல்லாதபோதும், எனது தற்போதைய நிலை, கிடைத்துள்ள ஆதரவு போன்றவற்றால் தட்டிக்கழிக்க முடியவில்லை. மறுநாள் இராஜாதிராஜன் செல்லும்போது என்னையும் கூடவே அழைத்துச் சென்றார்.

சலோன் சூ சோன் குறைந்த குடியிருப்புகளைக் கொண்ட சிறிய தொரு நகரம். அங்கே பரந்த வெளியில் அமைக்கப்பட்டுள்ள மாடிவீட்டுத் தொகுதியின் தளப் பகுதியில் சமூகசேவை நிறுவனத்தால் வழங்கப்பட்ட சிறிய வீட்டில் குடும்பத்துடன் வசிக்கிறார். நான் அங்கு சென்றநேரம் இராஜாதிராஜனின் சகோதரரும் அங்கே இருந்தார். அவர்பெயர் டோமினிக். அவர் அண்மையிலுள்ள போயரில் வசிக்கிறார். டோமினிக் என்னைக் கண்டதும் தனது குடும்பத்தாருடன் முன்னர் ஏற்பட்டிருந்த நட்பு பற்றி நினைவு கூர்ந்தார். இராஜாதிராஜனின் மனைவியை நான் அறிந்ததில்லை. இருப்பினும் அன்புடன் வரவேற்றார்.

இரண்டாம் நாள் அதிகாலை நானும் டோமினிக்கும் வேறு ஒருவருமாக, சிற்றி அடிப்பதற்காகத் தயார்செய்த பத்திரங்களுடன் 'அவிக்கியோன்' என்ற நகரத்தை நோக்கித் தொடருந்தில் புறப்பட்டோம். அந்நகரத்தில் எந்தப் பிரச்சினையுமில்லாமல் விசா எடுக்கக் கூடியதாய் இருப்பதாக அங்கு போய் வந்தவர்கள் கூறியதற்கிணங்கவே செயலில் இறங்கினோம்.

'அவிக்கியோன்' தொடருந்து நிலையத்தில் இறங்கி அங்கு விசாரித்த திலிருந்து காவல்துறைத் தலைமை அலுவலகம் அண்மையில் இருப்பதாக அறிந்ததால் நடந்தே அங்கு சென்றோம்.

அவிக்கியோன்

அழகான இடமாக அவிக்கியோன் நகரின் மையப்பகுதி இருந்தது. தூரத்தே தெரியும் மலைத்தொடர் மேலும் அழகூட்டியது. கூட்டித் துடைத்தது போல காணப்பட்டது தரை. நெருக்கமற்ற குடியிருப்புகள், அழகான வீதிகள், வீதியோடு இணைந்து காணப்பட்ட கற்கள் பதிக்கப்பட்ட அகன்ற தரை

பார்வையைக் கவர்ந்தது. நாம் இங்கு வந்த நோக்கம் வேறு என்பதால் இவற்றை இரசித்துப் பார்க்கக்கூடிய மனநிலை இல்லாமல் வந்த நோக்கத்தை செயற்படுத்த காவல்துறை தலைமை அலுவலகத்தை அடைந்தோம்.

எனது பெயர் 'அன்ரனி' எனப் பத்திரம் தயாரிக்கப்பட்டிருந்தது. வதிவிட முகவரிக்கான ஹொட்டல் ஒன்றின் 'விசிற்றிங் காட்' போயரில் இருந்தவர்களால் தரப்பட்டது. ஒவ்வொருத்தராக மூவரும் பத்திரங்களை ஒப்படைத்தோம். எதுவும் கூறாமலே விளங்கிக்கொண்டவராக ஆசனத்தில் இருக்குமாறு கூறினார் அலுவலகர். இதற்கு முன்னர் வந்தவர்களால் ஏற்பட்ட அனுபவமாக இருக்கவேண்டும்.

மூவரும் 20 நிமிடமாக அமர்ந்திருந்தோம். தவறு செய்வதாக உள்ளுணர்வு உணர்த்தியதால் உள்ளத்தில் பயம் எழாமலில்லை. சுற்றுமுற்றும் பார்த்தவாறே இருந்தோம். சிறிது நேரத்தால் ஒவ்வொருவராக மூவரையும் அழைத்த அலுவலகர் தனித்தனி பத்திரத்தில் ஒப்பம் பெற்றுக்கொண்டு ஒரு வருடத்திற்கான விசா சான்றிதழ் வழங்கினார்.

இவையெல்லாம் முடித்து வெளியே வர 11.30 மணியாகிவிட்டது. சமூகசேவை நிறுவனத்தின் அலுவலகம் சற்றுத் தூரத்திலிருப்பதால் இப்போது அங்கு செல்வதில் பயனில்லை என முடிவெடுத்து உணவகம் ஒன்றில் மதிய உணவை அருந்தினோம். சிறிது ஓய்வின் பின்னர் பேருந்தில் செல்லாது நடந்து சென்று பி.ப. 2.00 மணிக்கு சமூக சேவை நிறுவன அலுவலகத்தில் பதிவுசெய்து கொண்டோம்.

அங்கு சமூகசேவை அலுவலகரால் பூரணப்படுத்தப்பட்ட இரண்டு படிவங்களில் ஒப்பமிட்ட பின்னர், ஒவ்வொருதருக்கும் 1,000 பிறாங் தாபரிப் புப் பணமாகத் தந்தார். பெற்றுக்கொண்டு, நன்றி கூறிப் புறப்பட்டோம். எமது நோக்கம் நிறைவுபெற்ற மகிழ்வில் தொடருந்தில் ஏறி சலோன் சூ சோனுக்கு வர இரவு 8.00 மணியாகிவிட்டது.

அடுத்துவந்த திங்கட்கிழமை போயரில் அறை ஒன்றை வாடகைக்கு எடுத்துக்கொண்டு, காவல்துறை தலைமையகம் சென்று 'அவிக்கியோனி'ல் எடுத்த விசாவை 'சலோன் சூ சோன்' நகருக்கு மாற்றிக் கொண்டோம். பிரான் சின் எந்தப் பகுதியிலும் விசாவை மாற்றிக்கொண்டு அங்கு வசிக்க முடியும்.

பின்னர் சமூகசேவை நிறுவன அலுவலகம் சென்று, 'அவிக்கி யோனி'ல் 1,000 பிறாங் பெற்றுக்கொண்ட விபரத்தைக் கூறி பதிவுசெய்து கொண்டேன். அப்போதுதான் மேலும் இரண்டு மாதங்களுக்கான தாபரிப்புப் பணத்தைப் பெற முடியும்.

மறுநாள், வங்கியில் எனது பெயரில் கணக்கொன்றை ஆரம்பித்த பின்னர், 'A.N.P.' அலுவலகம் சென்று அரசால் வழங்கப்படும் உதவிப் பணத்தை பெறுவதற்காக வங்கிக் கணக்கு இலக்கத்தையும் கொடுத்துப் பதிவுசெய்து கொண்டேன். பணத்தை வங்கியிலிருந்து எடுத்துக் கொள்வதே அங்கு வழமையாக இருந்தது.

அகதியாய் வந்தவர்களுக்கு அரசாங்கம் உரிய ஒழுங்குகளைச் செய்துதரத் தவறியமையே தவறென்று தெரிந்தும் வேறு வழியின்றி சிற்றி அடிக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது. மற்றவர்கள் கூறும்போது பிழையாகத் தெரிந்த 'சிற்றி அடித்தல்' இப்போ தேவையான பாதையாக மாறி எனக்குக் கால்கோளானது. இதனால் பெற்ற பலாபலன் மேலும் இவ்வாறு செய்வதற்கு தூண்டுகோலாக அமைந்தது. அவ்வாறு செல்ல முற்பட்ட நகரம் 'மார்செல்'.

லியோனிலிருந்து ஞாயிற்றுக்கிழமை இரவு 10.00 மணியளவில் ஐந்துபேர் வாகனமொன்றில் புறப்பட்டுச் சென்றோம். காலையில் மார் செல்லை அடைந்து ஹொட்டல் ஒன்றில் இரண்டு அறைகளைப் பதிவுசெய்து கொண்டோம். அங்கு ஹொட்டல் வாடகை குறைவாக இருந்தது.

மார்செல் (Marseille)

பிரான்சிய மொழியில் 'மர்சேய்' என அழைக்கப்படும் 'மார்செல்' பிரான்ஸில் இரண்டாவது பெரிய நகரமும் துறைமுக நகரமுமாகும். பிரான்ஸின் தென் கிழக்குப் பகுதியில் மத்தியதரைக் கடற்கரையோரமாக இந்கரம் அமைந்துள்ளது. லியோனில் இருந்து 320 கி.மீ. தூரத்திலுள்ளது.

ஏற்கெனவே தயாரித்த படிவங்களுடன் பொலிஸ் தலைமையகம் சென்று பதிவுசெய்து கொண்டோம். இங்கு உடனே விசா வழங்கப்பட வில்லை. இரண்டு நாட்கள் கழித்தே கிடைக்குமென்பதால் அங்கு தங்கியிருக்க வேண்டிய தேவையேற்பட்டது.

ஆபிரிக்க நாடுகளைச் சேர்ந்தவர்களே பெருமளவில் காணப் பட்டனர். அந்நாட்டுப் பெண்கள் வீதி ஓரங்களில் 'சுளகு' போன்று ஒருவகைப் புல்லால் பின்னப்பட்ட தட்டுப் பெட்டியில் சிற்றுண்டிகள், இனிப்புகள், சிகரெற், தீப்பெட்டி போன்ற சிறிய பொருட்கள் விற்பனை செய்வதையும் அவர்களோடு சில பெண்கள் கூட இருந்து அரட்டை அடிப்பதையும் காணக் கூடியதாக இருந்தது. முன்னர் யாழ்ப்பாணத்தில் அநேக ஊர்களில் நடைபெற்ற வியாபாரத்தையும், திருவிழாக்கள் - பொது நிகழ்வுகளில் நடைபெறும் கச்சான் - கடலை வியாபாரத்தையும் நினைவூட்டியது.

தள்ளு வண்டில்களில் 'பொம் பிறித்' (உருளைக்கிழங்கு சிப்ஸ்), 'சான்விச்', 'சொசைஸ்சஸ்' மற்றும் வெதுப்பகப் பொருட்கள் போன்றவற்றின் விற்பனையும் ஆங்காங்கு நடைபெற்றன. ஹொட்டலில் தங்குவதற்கு மட்டு மல்ல அங்கு உணவு வகைகள், உடை வகைகள் போன்ற பலவகைப் பொருட்க ளினது விலைகளும் குறைவாகவே இருந்தன. வர்த்தக துறைமுகம் அங்கு இருப்பதுதான் காரணமோ தெரியாது. வீதிகளில் நடை வியாபாரிகள் அதிகமாகக் காணப்பட்டனர்.

30,000 ஆண்டுகளாக மக்கள் இந்நகரில் வாழ்ந்துள்ளார்கள் என அறியப்படுகிறது. கடலுக்கடியில் இருந்த குகையில் கண்டுபிடிக்கப்பட்ட கி.மு.

27000 - 19000ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்துக்குரிய பழைய கற்கால ஓவியங்கள், தொடருந்து நிலையத்திற்கு அண்மையில் நிலத்துக்குக் கீழ் கண்டுபிடிக்கப்பட்ட கி.மு. 6000 ஆண்டுகளுக்குரிய கற்கால செங்கல் வாசஸ்தலங்கள் மார்செல்லின் பழைமையின் இருப்பைச் சுட்டிநிற்கிறன.

கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பழைய மார்செல் துறைமுகத்தைப் பார்வையிட்டோம். இந்தத் துறைமுகத்தை அண்டிய பகுதிகளிலேயே அதிகமான குடியிருப்புகளும், வர்த்தக நிலையங்களும், பழமைவாய்ந்த கட்டடங்களும், புராதன கண்டுபிடிப்புகளும் காணப்படுவதால் பழமையான நகராக இருந்துள்ளதென்பதை உணரக்கூடியதாக இருந்தது.

வர்த்தகம் மற்றும் பல்தேவைகளுக்கான முக்கிய துறைமுகமாக விளங்கிய இத்துறைமுகம் புதிய துறைமுகம் கட்டப்பட்டதால் கைவிடப்பட்ட நிலையில் தற்போது உணவகங்கள், அலுவலகங்கள், மதுபானச்சாலைகள், விடுதிகளால் நிறைந்து தனது முன்னைய சிறப்பை இழந்து காணப்பட்ட போதும், இரண்டாவது உலகப் போரின் காலத்தில் இந்தத் துறைமுகம் முக்கிய வகிபாகத்தைக் கொண்டிருந்ததை அறியக்கூடியதாக இருந்தது.



இரண்டாம் உலக போரில் பிரான்ஸை, ஜேர்மன் படைகள் தனது கட்டுப் பாட்டுக்குள் கொண்டுவந்திருந்தன. இதை முறியடிக்கும் வகையில் நேசப்படைகள் போரில் குதித்து 06.06.1944 இல் 'நோர்மாண்டி தரையிறக்க'த்தை மேற்கொண்டு ஒரு பகுதியைக் கைப்பற்றியபோதும் பிரான்ஸிலுள்ள படைகளுக்குத் தேவையான தளபாடங்களை இறக்குமதி செய்ய போதுமான துறைமுக வசதிகள் அவர்களிடம் இருக்கவில்லை. இதனால், பிரான்ஸின் தென் பகுதியிலுள்ள 'மார்செல் துறைமுக'த்தை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரவேண்டிய தேவையேற்பட்டது.

15.08.1944 அன்று 'டிராகூன் நடவடிக்கை' (Operation Dragoon) என்ற பெயரில் மார்செல் துறைமுகத்தை சூழவிருந்த மூன்று நகரங்கள் ஊடாக பாரிய கப்பலிகளிலிருந்து நேசப் படைகள் தரையிறங்கத் தொடங்கின. ஒரே நேரத்தில் நேசப் படைகளால் நடத்தப்பட்ட ஆகாய, தரை, கடல் மார்க்கத் தாக்குதலால் தடுமாறின ஜேர்மனியப் படைகள். தனது படையணியில் சிலவற்றை ஏற்கெனவே வடமுனை போர்க்களத்திற்கு அனுப்பிவைத்திருந்த நிலையிலும் கடுமையாகப் போராடி, ஈற்றில் பின்வாங்கவே தொடங்கின ஜேர்மனியப் படையணிகள்.

இதனால் பத்து நாட்களில் (25.08.1944இல்) 'மார்செல் துறைமுக' மும் நகரும் விடுவிக்கப்பட்டது. மத்தியதரைக் கடற்பகுதி நாடுகளில் திறக்கப்பட்டிருந்த போர்க்களங்கள் காரணமாக தோல்விக்கு வழி வகுக்கலாமென்ற அச்சத்தின் மத்தியிலே ஆரம்பிக்கப்பட்ட, முக்கியத்துவம் வாய்ந்ததும் சிக்கலானதுமான இந்த நடவடிக்கை வெற்றியை அடைந்தபோதிலும் 'நோர்மாண்டி தரையிறக்கம்' போலப் பெரிதாய்ப் பேசப்படுவதில்லை என்பது பலரது குற்றச்சாட்டாக இருக்கின்றது.

மீன்பிடி பொருளாதாரம் இங்கு முக்கிய பங்காற்றுகின்றது. பழைய துறைமுகத்தின் ஒருபகுதி மீன்பிடித் துறைமுகமாகப் பயன்படுத்தப்படுகிறது. பெரிய மீன் சந்தையும் அங்கே காணப்பட்டது. ஆழ்கடல் மீன்பிடிப் படகுகள் துறைமுகத்தின் பாதிவரை அடுக்கடுக்காக நின்றன.

ஒரு படகின் ஓரம் இலங்கையரைப் போல உணரப்பட்ட இளைஞர் ஒருவரைக் கண்டோம். அவரை நெருங்கிச் சென்று கதைத்தபோது, யாழ்ப்பாணம் பருத்தித்துறையை சேர்ந்தவரென அறிந்துகொண்டோம். வாரத்தில் மூன்று தடவைகள் தொழிலுக்குச் சென்று வருவதாகவும், நிறைவான வருவாய் கிடைப்பதாகவும், வேறு எந்தத் தொழிலிலும் இத்தகைய வருவாயை எதிர்பார்க்க முடியாதென்றும் கூறினார். மேலும் அவர், இங்கு வேலையில்லாமல் யாழ்ப்பாணத்து இளைஞர் சிலர் இருப்பதாகவும், அவர்களை மீன்பிடித் தொழிலில் சேர்ந்துகொள்ளுமாறு கூறினால், பயத்தால் வர மறுக்கிறார்கள் என்றும் கூறினார்.

அவரிடமிருந்து விடைபெற்று மீன்பிடித் துறைமுகத்தைச் சுற்றிப் பார்வையிட்டோம். துறைமுகத்துடன் இணைந்த மலைப் பகுதியில் அழகானதும் பிரமாண்டமானதுமான ஆலயம் ஒன்று தெரிந்தது. அந்த ஆலயம் பற்றி விசாரித்போது 'கிராட் அன்னை திருத்தலம்' (Our Lady of Grad) என்று அறிந்தோம். அங்கு போய்வரக் கூடிய சந்தர்ப்பம் இல்லை என்பதால் துறைமுகத்தில் நின்றவாறே ஆலயத்தின் அழகை இரசித்ததுடன் மனதார வேண்டுதல் செய்தோம்.

துறைமுகத்தின் மறுபக்கத்தில் இலையுதிர் மரங்களால் சூழப்பட்ட உச்சியைக்கொண்ட 1,147 மீ. உயரமுள்ள மலை தெரிந்தது. அந்த மலையின் அடிவாரத்தை அண்டியுள்ள பகுதியில் காணப்பட்ட பலவகைப்பட்ட கட்டடங்கள் கண்ணுக்கு அழகூட்டின.

மூன்றாம் நாள் காலையில் விசா பெற்றுக்கொண்டதும் சமூக சேவை நிறுவன அலுவலகம் சென்று முதல் மாதத்திற்குரிய தாபரிப்புப் பணமான 1,000 பிறாங் பெற்றுக்கொண்ட பின்னர், 'A.N.P.' அலுவலகம் சென்று அரசால் வழங்கப்படும் உதவிப் பணத்தை பெறுவதற்காக வங்கிக் கணக்கு இலக்கத்தையும் கொடுத்துப் பதிவுசெய்து கொண்டோம். நாம் வந்த வேலை முடிந்ததால் மதிய உணவருந்தியதுடன் உடைகள் சிலவற்றையும் கொள்வனவு செய்துகொண்டு, அன்றே லியோனுக்குத் திரும்பினோம்.

இரண்டு வாரங்களின் பின் 'சலோன் சூ சோன்' நகருக்குப் செல்றி ருந்தேன். அங்கு தங்கியிருந்தபோது திராட்சைப் பழம் பறிக்கும் வேலைக்கு அழைத்தார்கள். பத்து நாட்கள் வேலை. சம்பளமாக ஒரு நாளைக்கு 140.00 பிறாங்குடன் மதிய உணவும் தருவார்கள். சம்மதித்து, மறுநாள் காலை நானும் மேலும் நால்வரும் வாகனத்தில் புறப்பட்டுச் சென்றோம்.

பரந்து விரிந்திருந்த தோட்டத்தில் வரிசையாகக் காணப்பட்டன திராட்சை செடிகள். செடிகள் நடப்பட்டுள்ள ஒவ்வொரு வரிசைக்கும் இடையில் நடைபாதைக்குரிய வெளி காணப்பட்டது. செடிகள் ஒவ்வொன் றிலும் கறுப்பு நிறத்தில் பழங்கள் கொத்துக் கொத்தாய் தொங்கின. இவை சிவப்பு 'வைன்' தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படும் திராட்சைப் பழம்.

ஐம்பதுக்கும் மேற்பட்டவர்கள் வேலைக்கு வந்திருந்தார்கள். ஒவ்வொருவர் கையிலும் பழங்களை வெட்டுவதற்குச் 'செக்கத்தோரு'ம் (கத்திரிக்கோல் போன்றது) பழங்களைப் போடுவதற்கு கைபிடியுள்ள பிளாஸ்ரிக் கூடையும் தரப்பட்டன. மேற்பார்வையாளர் பழங்கள் பறிக்கும் முறைபற்றி விளக்கமளித்தார்.

கடினமான வேலையன்று. ஒவ்வொருவரும் ஒவ்வொரு வரிசையில் விடப்பட்டனர். அந்தந்த வரிசையிலுள்ள திராட்சைச் செடிகளில் உள்ள கனிகளை வரிசைக்குரியவர் வெட்டியெடுத்து கூடையில் போட, பெரியதொரு பிரம்பினாலான கூடையைத் தோளில் தாங்கிய வேறொருவர் அடிக்கடி வந்து கூடையில் இருப்பவற்றை சேகரித்துச் செல்வார்.

செடியின் கீழ்ப்பக்கம் தொங்கும் பழங்களை ஆயும்போது குனிவது சற்றுக் கடினமாக இருந்தது. மற்றும்படி பிரச்சினை இல்லை. வெயிலின் தாக்கத்தைக் குறைப்பதற்குத் தலையில் தொப்பியும் அணிந்திருந்தோம். பழங்களைச் சாப்பிட்டவாறு வேலை தொடர்ந்தது.

தோட்டத்திற்கு அண்மையிலிருந்த மிகவும் பழமை வாய்ந்த கட்டடத்தில் முதலாளியின் தொழிற்சாலையும் வீடும் இருந்தது. அங்கே மதிய உணவருந்தத் தயாரானோம். காலையில் சேகரித்த திராட்சைப் பழங்களைக் கொண்டு உடனே தயாரிக்கப்பட்ட வைன் எமக்குப் பரிமாறப்பட்டது. அதனை அருந்தியவாறே மதிய உணவில் கலந்துகொண்டோம்.

பத்து நாட்கள் தொடராக நடந்த வேலையின் பின்னர், மறுநாள் மாலை நேரம் அனைவரும் அழைக்கப்பட்டிருந்தோம். அன்றை தினம் விசேட மாக வைன் பரிமாறப்பட்டு இரவு உணவு வழங்கப்பட்டது. சம்பளத்துக்கு மேலாக அன்பளிப்பாக தலா நூறு பிறாங் உரிமையாளரால் வழங்கப்பட்டது.

இவ்வாறு இடையிடையே கிடைக்கும் தற்காலிக வேலையின் வருவாய் மற்றும் இரண்டு சிற்றிகளிலிருந்தும் கிடைக்கும் பணம் போன்ற வற்றில் எனது செலவுபோக குறித்த தொகையை அவ்வப்போது யாழ்ப்பாணத் திலுள்ள எனது குடும்பத்திற்கு அனுப்பிக்கொண்டிருந்தேன்.

மனவுளைச்சல் எதுவுமின்றி எனது வாழ்வு போயிரில் தொடர்ந்தது. அங்கு உள்ளவர்கள் இணைந்து சனிக்கிழமைகளில் தொலைக்காட்சி பெட்டியும், 'வீடியோ றெக்கோட்'ரும் வாடகைக்குப் பெற்று முன்று படங்கள் பார்வையிடுவோம். தமிழ் 'வீடியோ திரைப் படங்களை' ஐந்து கி.மீ. தூரத்திலிருந்த இந்தியா - பாண்டிச்சேரியை சேர்ந்தவரிடம் வாடகைக்குப் பெற்றுக்கொள்வோம்.

பிரான்ஸில் குடியுரிமை பெற்ற அவர், எண்ணெய்க் கறுப்பானவர். அதனால் அவரை 'சொலிக்கணம்' என்று எமக்குள்ளே அழைத்துக் கொள்வோம். அவர் குடும்பமாகவே இங்கு வசிக்கிறார். இட்லி, சப்பாத்தி போன்றவற்றை தயாரித்துக் கொடுப்பவர். சிலவேளை அவரது வீட்டுக்கும் சென்று படம் பார்ப்போம். 'ஐந்து பிறாங்' ஒருவரிடம் அறவிடுவார். இடையிடையே அங்கே இட்லி சாப்பிட்டுக்கொள்வோம். அதற்கு வேறாகப் பணம் செலுத்தவேண்டும்.

மாதத்தில் முதல் ஞாயிறு 15 கி.மீ. தொலைவிலுள்ள ஆட்டுப் பண்ணைக்கு 'தானுந்து'வில் சென்று ஆடு கொள்வனவு செய்து அங்கேயே வெட்டிப் பங்கிட்டுக் கொண்டு வருவோம். வரும்போது இடையிலுள்ள தோட்டங்களில் 'கோவா'வை செடியுடன் பிடுங்கி வருவதுண்டு. 'சோளம்' காய்க்கும் காலங்களில் அதையும் பிடுங்குவதுண்டு. அது ஒரு விளையாட்டாக இருந்தது. இதனை உரிமையாளர் பெரிதுபடுத்துவதில்லை.

1984ஆம் ஆண்டு புதுப்பித்தலின்போது எனது விசாவில் அகதிக்கான பதிவு பதியப்பட்டதால் எனக்குக் கிடைக்கவேண்டிய கொடுப்பனவுகள் கிரமமாக வரத் தொடங்கின. நிரந்தர வேலை கிடைக்காமையால் பகுதிநேர வேலை செய்துகொண்டிருந்தேன். நிரந்தர வேலை செய்திருந்தால் 'A.N.P.' கொடுப்பனவு நிறுத்தப்பட்டுவிடும்.

இப்போது தேவைகளுக்கான பணம் பற்றிய பிரச்சினை இல்லை யென்பதால் பொது விடயங்களில் ஈடுபடுவதற்கும், லியோனில் பல இடங்களைச் சுற்றிப் பார்ப்பதற்கும், வேறு நகரங்களுக்குச் செல்வதற்கும் முனைப்புக் காட்டக்கூடியதாக இருந்தது. இதனால் தோற்றம் பெற்றதே 'லியோன் தமிழர் அமைப்பு'.

லியோன் தமிழர் அமைப்பு

ஒரு தடவை பரிஸ் நகருக்குச் சென்றபோது அங்கு தமிழர்கள் இணைந்து, தமிழர் ஒருங்கிணைப்புக் குழு என்ற அமைப்பை உருவாக்கி, தமிழர்களுக்கான பல வேலைத் திட்டங்களை செய்துவருவதை அறிந்தேன். அவர்களின் செயற்பாட்டில் ஈர்க்கப்பட்ட நான், அந்த அமைப்பைச் சார்ந்தவர்களுடன் உரையாடி அமைப்பு சார்பான விளக்கங்களைப் பெற்றுக் கொண்டேன். அவர்கள் அரசாங்கத்தில் அமைப்பை பதிவுசெய்து திறம்பட இயங்குகிறார்கள்.

லியோனில் 100 வரையான தமிழர்கள் வசித்து வருவதால் அங்கும் இப்படியான ஒரு அமைப்பை உருவாக்கி இங்குள்ளவர்களின் நலனில் கரிசனைகொண்டு ஏன் செயலாற்றக்கூடாது என்ற எண்ணம் துளிர் விடலானது. சில நாட்களாகச் சிந்தித்துச் செயலிலிறங்கி, போயரில் இருந்த 25 பேரை அழைத்து இதுபற்றி உரையாடினேன். அவர்கள் வரவேற்றனர். இதற்கு ஏற்படக்கூடிய ஆரம்ப செலவுகளை பொறுப்பேற்க சிலர் தாமாக முன்வந்தனர்.

முதல் அடி சரியாக அமைந்ததில் மகிழ்வாக இருந்தது. அதற்கான அடுத்த முயற்சியில் இறங்கினோம். இங்கிருந்து 2 கி.மீ. தொலைவில் 'டிசின்' என்னும் இடத்திலுள்ள போயரில் 30 வரையானோர் இருக்கிறார்கள். அவர்களுக்குத் தகவலைத் தெரிவித்து நானும் மேலும் இருவரும் அங்கு சென்று உரையாடினோம்.

அவர்கள் மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டதும், காலந் தாழ்த்தாது ஒருசில நாட்களில் அனைவரும் ஒன்றுகூடுவோம் என்ற முடிவுக்கு வந்தோம். அதற்கமைய எமது போயரில் மண்டப வசதி இருந்ததால் அங்கு கூட்டத்துக்கான ஏற்பாட்டைச் செய்தோம்.



லியோன் வாழ் தமிழர்களிடையே ஒற்றுமையையும் சகோதரத்துவத்தையும் வளர்த்தல், அவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்ய முன்வருதல், அவர்கள் எதிர் கொள்ளும் சிக்கல்களை விடுவிப்பதற்காக உரிய அதிகாரிகளைச் சந்தித்து ஆவன செய்தல், தாய்நாட்டில் துன்பப்படும் மக்களுக்கான உதவிகளை செய்ய முன்வருதல், பாதிக்கப்படுபவர்களுக்காக குரல் கொடுத்தல் போன்ற செயற்திட்டங்களை முன் மொழிந்து, 'லியோன் தமிழர் அமைப்பு' என்னும் பெயரில் மாதிரி யாப்பும் தயாரித்த பின்னர் பொதுக் கூட்டத்திற்கு அழைப்புக் கொடுத்தேன்.

ஆவணி 1984 முதல் வாரத்தில் நடைபெற்ற கூட்டத்திற்கு ஐம்பது பேர் வரை சமூகளித்திருந்தனர். என்னால் தயாரிக்கப்பட்ட முன்மொழிவுகளையும் யாப்பையும் வாசித்த பின்னர் கருத்துக்களை பலரும் வெளிப்படுத்தினர். ஈற்றில் திருத்தங்கள் மேலதிக சேர்க்கைகளின் முன்மொழிவுகளுடன் பதவி நிலையினர் தெரிவுசெய்யப்பட்டனர்.

என்னைச் செயலாளராகவும், அகதி அந்தஸ்து பெற்ற ஒருவரைத் தலைவராகவும் ஆர்வமுள்ள வேறு சிலர் ஏனைய பதவிகளுக்கும் தெரிவு செய்யப்பட்டு பொறுப்புகளை ஒப்படைத்தனர். வருகைதந்தவர்களுக்கு சிற்றுண்டியும் குளிர்பானமும் வழங்கப்பட்டது.

அமைப்பு உருவாக்கம் பற்றி அறிந்த லியோனின் புறநகர்ப் பகுதிகளில் வசிக்கும் தமிழர்கள், தம்மையும் இணைத்துக்கொள்ளுமாறு கேட்டதற் கிணங்க அங்கெல்லாம் சென்று கூட்டங்களை நடத்தி அவர்களை இணைத்து தொடர்புகளை, செயல்களை விரிவாக்கம் செய்துகொண்டோம்.

தொடர்ந்த நாட்களில் அமைப்பில் உள்ளவர்களது ஊக்கத்தால் பல நற்பணிகள் இடம்பெற்றன. பலரும் பயனடையும் வாய்ப்பை உருவாக்கியது இந்த அமைப்பு. நான் லியோன் நகரை விட்டு வெளியேறும்வரை பலரது ஒத்துழைப்புடன் சிறப்புடன் இயங்கியது.

கோல்டன் தலைமைப் பூங்கா

செடி - கொடி - மரங்கள் - பூக்கள் ஒருபுறமும், காட்டு விலங்குகளின் சரணாலயம் ஒருபுறமும், கோடைகால படகோட்டத்திற்கான ஏரி ஒருபுற முமாக அமைந்துள்ளதுடன் குதிரைச் சவாரி, சிறிய தொடருந்து பயணம் போன்றவையும் உள்ளடக்கப்பட்ட பிரமாண்டமான பூங்கா இதுவாகும். நுழைவுக் கட்டணம் எதுவு மில்லை.



வெவ்வேறு நாடுகளி லிருந்து தருவிக்கப்பட்டு வளர்க்கப்பட்ட பழமையான மரங்கள் பல பாதுகாக்கப் படுகின்றன. அம்மரங்கள் தருகின்ற பூக்கள், காய்கள் வானோக்கிய பகுதியை அழ கூட்டி நின்றன.

பூங்காவிற்குள் நுழைந்ததும் பூக்களில் இத் தனை வகை உண்டா என மலைக்கும் வகையில் பூச்செடிகள். பல வர்ணங்களில் ரோஜா செடிகளுடன் மணிவாழை போன்ற அமைப்பில் மஞ்சள், சிவப்பு நிறப் பூக்களையுடைய 'துலிப்' பாதை ஓரங்களை அலங்கரித்திருந்தன.

நான்கு அடி உயரத்திற்கு வளரக்கூடிய 'அதலியா' பூச்செடி பெரிய வட்டத் தரையை முற்றாக அலங்கரித்தன. ஒரு சாண் உயரத்திற்குள் வளரக் கூடியதும் பல வர்ணங்களைக் கொண்ட பூக்களை உடையதுமான 'தசற்' தரையில் வட்ட அமைப்பில் நடப்பட்டு அலங்கரிக்கப்பட்டிருந்தன. சில இடங் களில் கூம்பு அமைப்பிலும் காணப்பட்டன. மேலும் பலவகைப் பூஞ்செடிகள் ஆங்காங்கு காணப்பட்டன. அவற்றின் பெயர்கள் ஞாபகத்திலில்லை. கோடை காலத்தை வரவேற்று அழகூட்டி நிற்கும் இத்தனை பூஞ்செடிகளும் குளிர் காலத்தில் இறந்துவிடும் என்பது கவலைக்குரியதுதான்.

ஏரிப் பகுதி திரளானோரால் நிரம்பக் காணப்பட்டது. ஐம்பதுக்கு மேற்பட்ட சிறிய படகுகள் ஏரியில் செலுத்தப்படுகின்றன. குறித்த நேரத்திற்கு

ஒரு குழுவினர் என்ற வகையில் இருப்பதால் பலருக்கும் படகைச் செலுத்தச் சந்தர்ப்பம் கிடைக்கிறது.

படகு செலுத்துபவர்கள் மட்டுமன்றி அப்பகுதியில் குடும்பங்களாக அமர்ந்து உணவருந்துதல், சிறுவர்கள் இணைந்து விளையாடுதல் போன்ற வற்றாலும் பொழுதைப் போக்கினார்கள். நாமும் ஒரு தடவை படகைச் செலுத்திய பின்னர் காட்டு மிருகங்களின் சரணாலயத்திற்குச் சென்றோம்.


பெரிய வாய்க்கால் போன்று 200 மீற்றர் நீளம்வரையான பள்ளத்தில் சிறியதும் பெரியதுமான யானைகள் பல அலைந்தன. பயணிகள் போடும் உணவை எடுப்பதற்கு அவற்றுக்கிடையே போட்டியும் நிலவின. ஒட்டகச் சிவிங்கி இரண்டு பெரியதும் ஒரு குட்டியும் இணைந்து நின்றன. அதற்குப் பாதுகாப்புக்கென பெரியதொரு கூடு சீமேந்தால் கட்டப்பட்டுள்ளது. கூடு தவிர்த்து வெளியே வந்து நிற்பதற்கு பாதுகாப்பான அடைப்புமுள்ளது. அந்தப் பகுதியில் அவை சுதந்திரமாகத் திரிவதைக் காணக்கூடியதாக இருந்தது.

பலவகை பறவையினங்கள் (கிளிகளிலும் பலவகை) மற்றும் பலவகை குரங்கு இனங்கள் தனித்தனி இனமாக நிற்பதற்கு ஏதுவாக கம்பிவலைக் கூடுகளும் - சிங்கம், புலி, சிறுத்தை, நரி, ஓநாய் போன்ற காட்டு மிருகங் களுக்குத் தனித் தனியான விசாலமான கூடுகளும் அமைக்கப்பட்டிருந்தன.

பூங்காவில் காணப்படுகின்ற ஒவ்வொன்றும் பிரமிக்கத்தக்கவையாக இருந்தது. பிரமாண்டமான இந்தப் பூங்காவை பார்த்ததில் பெரும் மகிழ்ச்சி. மீண்டும் மீண்டும் வந்து பார்க்கத் தூண்டியது. இதனால் என்னைத் தேடி வரும் விருந்தினர்களை அழைத்துக்கொண்டு மேலும் பல தடவைகள் பூங்காவைப் பார்வையிடச் சென்றுள்ளேன்.

தூய லூர்து அன்னை திருத்தலம்

லியோன் நகரத்திலிருந்து 1000 கி.மீ. தூரத்திலுள்ளது 'லூர்து நகர்'. ஆண்டுதோறும் பல கோடி மக்கள் தரிசித்துச் செல்லுமிடமானான 'லூர்து அன்னை திருத்தல'த்திற்கு 1984ஆம் ஆண்டில் இரண்டு தடவைகள் சென்று வந்துள்ளேன்.



லூர்து நகரிலுள்ள 'மசபியேல்' குகையில் அன்னை கன்னிமரி 'பொற்ணடெத் சொறுபி' என்ற சிறுமிக்கு 18 தடவைகள் காட்சி கொடுத்து உரையாடிய நிகழ்வுகளின் பின்னணியே 'தூய லூர்து திருத்தலம்' தோன்றுதற்கு காரணமாய் அமைந்தது.

அச்சிறுமி பின்னர் கன்னியாஸ்திரி யாக தன்னை அர்ப்பணித்து 'நெவேர்' நகரில் பணியாற்றி அங்கேயே இறந்து அடக்கம்

செய்யப்பட்டாள். அவளது உடல் அழியாத நிலையில் இருக்கக் கண்டு பிடிக்கப்பட்டு, மக்களின் வழிபாட்டுக்காக ஆலயத்தில் வைக்கப்பட்டுள்ளது.

'தூய லூர்து திருத்தல'த்தைத் தரிசிக்க இவ்வாண்டைவிட மேலும் பல தடவைகள் சென்று வந்துள்ளேன். அதனால், இத்திருத்தலம் பற்றிய மேலதிக தகவல்களை 'பரிஸ் தவிர்ந்த புறநகர்கள்' பிரிவில் 'தூய லூர்து அன்னை திருத்தலம்' பற்றிய பதிவில் காணலாம்.

லூர்து அன்னை திருத்தலத்திற்குச் சென்ற நாள்முதல் 'நெவேர்' நகரிலிருக்கும் 'புனித பெர்ணடெத் சொறுபி'யின் அழியாத உடலைப் பார்வையிடவேண்டுமென்ற ஆவல் அணையாது தோன்றிக்கொண்டே இருந்தது. அதற்கான நாளும் எதிர்பாராத விதமாக அமைந்தது.

சிற்றி அடிப்பதற்காக சிலர் தானுந்தில் நெவேர் செல்வதற்கு ஆயத்தமானார்கள். அந்த வாகனத்தில் நானும் செல்லக்கூடிய வாய்ப்பு இருந்தபடியால் இணைந்து சென்றுவரத் தீர்மானித்தேன்.

நான் செல்ல ஆயத்தமானது புனித பெர்ணடெத் சொறுபியின் அழியாத உடலைத் தரிசிக்கும் நோக்குடனேயன்றி அவர்களுடன் சேர்ந்து சிற்றி அடிப்பதற்காக அல்ல.

நெவேர் நகர் (Nevers)

'**லி**யோன்' நகரிலிருந்து இருந்து 750 கி.மீ. துரத்திலுள்ளது 'நெவேர்' நகர். சுற்றுப்புறப் பகுதிகள் உயரமான மலைகள், குன்றுகள் நிறைந்த பகுதிகளாக உள்ளன. வாகனத்தில் நெவேருக்கு செல்பவர்கள் இவற்றில் சிலவற்றைக் கடந்தே செல்லவேண்டும். தொழில்வளம் மிக்க பொருளாதாரத்தில் மிளிரும் நகராகத் துலங்கும் 'நெவேர்' நகர், 'லுவார்' ஆற்றின் வலதுபக்கம் உள்ள மலையின் சாய்தளத்தில் அமைந்துள்ளது. இந்நகரின் முன்னைய பெயர் 'நொவியோதொனு' என்பதாகும். பின்னர் 'நெவிர்னு' என்றும், 'நெபிர்னு' என்றும் அழைக்கப்பட்டு பின்நாளில் 'நெவேர்' என மாற்றம் பெற்றதாக அறியப்படுகிறது.

இவ்விடத்திலுள்ள 'லுவார்' ஆற்றங்கரையின் முக்கியத்துவம் கருதிய 'யூலியஸ் சீசர்', கி.பி. 52களில் இந்நகரை தனது ஆளுகையின்கீழ் கொண்டு வந்தான். போரில் கைதுசெய்யப்பட்டவர்கள், தன்னுடையதும் படையினரதுமான பொருள்கள், கோதுமை, இத்தாலி மற்றும் ஸ்பெயினில் வாங்கப்பட்ட குதிரைகள், ஏனைய சொத்துக்கள் போன்றவற்றை அங்கு வைத்திருந்தான்.

பின்னாளில் 'ஜெகொவியா'வில் யூலியஸ் சீசர் அடைந்த தோல்வியை யடுத்து நொவியோதோனு நகரில் புகுந்த 'ஏடுய்' என அழைக்கப்படும் இனத்தவர், யூலியர் சீசரின் களஞ்சியங்களுக்குப் பொறுப்பாக இருந்தவர்கள் - இவர்களுக்கிடையே இணைப்பாளர்களாக இருந்தவர்கள் - இந்நகரின் ஊடாகப் பயணித்தவர்கள் எனப் பலரைக் கொன்று குவித்தனர். மேலும், அந்நகரைத் தம்மால் தக்கவைக்க முடியாததால் அவ்விடத்தில் சீசரால் சேர்த்து

வைக்கப்பட்ட சொத்துக்களைத் தமக்கிடையில் பகிர்ந்துகொண்டு, கோதுமை களையும் குதிரைகளையும் எடுத்துக்கொண்டு, மீதமான கோதுமையை 'லுவார்' ஆற்றில் எறிந்துவிட்டு நகரைத் தீக்கிரையாக்கிச் சென்றனர்.

ஐந்தாம் நூற்றாண்டில் இந்நகரானது ஓர் ஆயரின் மறை மாவட்டமாக விளங்கியது. கி.பி. 1234இல் இந்நகர மக்கள் தமக்கான அதிகாரங்களைப் பெற்றுக்கொண்டனர்.

லியோன் நகரிலிருந்து அதிகாலை நாலு மணியளவில் 'தானுந்து'வில் புறப்பட்ட நாம், நெவேர் நகரைநோக்கிய பயணித்தைத் தொடர்ந்தோம். உயரமான மூன்று மலைகளையும் இரண்டு குன்றுகளையும் கடந்தே செல்ல வேண்டுமென்பதை முன்னர் அங்கு சென்றுவந்தவர்கள் மூலம் அறிந்திருந்ததால் அவதானமிருந்தது. சமதரையில் நீண்டுசெல்லும் பாதையைக் கடக்கும்போது விடியும் நேரம்.

நாம் கடக்கவேண்டிய முதலாவது மலையில் பயணிக்கத் தொடங்கினோம். மலையைச் சுற்றிச் சுற்றி வளைந்து ஏறி இறங்கிச் செல்லும் வீதிகள், வீதியோரங்களில் நடப்பட்டுள்ள பூஞ் செடிகள், கண்ணுக் கெட்டிய தூரம்வரை காணப்பட்ட செழிப்பான ஊசியிலை மரங்கள் (காடுகள்), பக்கவாட் டில் தெரியும் மலையின் அடிவாரம், இடையிடையே காணப்படும் சிறிய கிராமங்கள், கிராமங்களில் அடுக்கடுக்காக உயர்ந்து செல்லும் வசிப்பிடங்கள், அவற்றை இணைக்கும் குறுக்கு வீதிகள் மனதைக் கொள்ளைகொண்டன.



நாம் ஏற்கெனவே அறிந்திருந்தவாறு மூன்று உயரமான மலைகளை, இரண்டு குன்றுகளைக் கடந்து நெவேர் எல்லைக்கு வர மு.ப. பத்து மணியாகி விட்டது. நாம் பயணித்து வந்த மலைப் பாதைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமான இரசனையைத் தந்தது.

நெவேர் தொடருந்து நிலையத் தரிப்பிடத்தில் 'தானுந்து'வை நிறுத்திவிட்டு என்னுடன் பயணித்த நால்வரும் உரிய பத்திரங்களுடன் தம்மை அகதியாகப் பதிவு செய்துகொள்வதற்கென காவல்துறை தலைமையகம் செல்ல, 500 மீ. தொலைவில் உள்ள புனித பெர்ணடெத்தின் அழியாத உடலம் வைக்கப்பட்டிருக்கும் ஆலயத்திற்கு நான் சென்றேன்.

லூர்து நகர்க் கிராமத்தில் வசித்துவந்த ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த பெர்ணடெத் சொறுபி என்னும் 14 வயதுச் சிறுமிக்கு 'மசபியேல்' குகையில் 11.02.1858 முதல் 16.07.1858 வரையான காலப்பகுதியில் 18 தடவைகள்

மரியன்னை காட்சியளித்துள்ளார். இச்சந்திப்புக்களில் இருவரும் உரையாடியுள்ளார்கள். 'நானே அமல உற்பவம்' எனத் தன்பெயரை வெளிப்படுத்தியுள்ளார் மரியன்னை. நிலத்திலிருந்து மேலெழுந்து வற்றாது சுரக்கும் நீரை தோன்றச் செய்து, தான் அளித்த காட்சியின் அடையாளமாக்கினார். இந்தக் காட்சியின் உண்மைத் தன்மையினால் லூர்து அன்னை ஆலயம் உருவாக்கப் பட்டது.

இத்தகைய சிறப்புமிக்க சிறுமி துறவற வாழ்வில் தன்னை அர்ப்பணிக்க விரும்பி தனது 22 ஆவது வயதில் நெவேர் நகருக்குச் சென்று அங்குள்ள இரக்கத்தின் சகோதரிகள் மடத்தில் இணைந்து கொண்டாள். தாதியாக பணியாற்றி யுத்தகளங்களிலும் சேவையாற்றிய இவள், சிறுவயது முதல் அஸ்மா நோயினால் பாதிக்கப்பட்டிருந்தாள். அந்த நோயின் காரணமாக 16.04.1879இல் பெர்ணடெத் மரணமடைந்தாள். நெவேர் நகரிலேயே அவளது உடல் அடக்கம் செய்யப்பட்டது.

அவளது கல்லறை 1909ஆம் ஆண்டு தோண்டப்பட்டபோதும் 1919 ஆம் ஆண்டு மருத்துவ நிபுணர்கள், திருச்சபையின் பணியாளர்கள், அரச



தலைவர்கள் முன்னிலையில் மீண்டும் தோண்டப்பட்ட போதும் பெர்ணடெத்தின் உடலம் அழியாது இருக்கக் காணப்பட்டதால் அது அகற்றப்பட்டு கண்ணாடிப் பெட்டகத்தில் வைக்கப்பட்டுள்ளது. (புனித பெர்ணடெத் பற்றிய மேலதிக தகவல்களை 'பரிஸ் தவிர்ந்த புறநகர்கள்' பிரிவில் 'தூய லூர்து அன்னை திருத்தலம்' பற்றிய பதிவில் அறியலாம்).

ஆலய வளாகத்தில் நுழைந்தேன். அங்கு லூர்து நகரில் இருப்பது போன்று அன்னை காட்சி கொடுத்த 'மசபியேல்' குகையின் மாதிரி அமைப்பும் காட்சி கொடுத்ததை விளக்கும் அன்னையினதும் பெர்ணடெத்தினதும் சுரூபங்கள் வைக்கப் பட்டிருந்தன.

ஆலயத்தின் பின்புறம் பெர்ணடெத்தால் உருவாக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வந்த பூங்கா அவளது நினைவாகப் பாதுகாக்கப்படுகின்றது. பலவர்ண மலர்கள், செடிகள், அரிய மரங்கள் அங்கு காணப்பட்டன. இவற்றைப் பார்வையிட்ட பின்னர் ஆலயத்தினுள் நுழைந்து வழிபட்டேன். நற்கருணை கிறாதிக்கு உள்பக்கமாக மக்கள் பார்வையிடுவதற்கு ஏதுவாக கண்ணாடி பொருத்தப்பட்ட பெட்டகத்தில் புனித பெர்ணடெத்தின் அழியாத உடலம் வைக்கப்பட்டிருந்தது.

உறங்குவதுபோல காணப்பட்ட, மறுவற்றுத் தெரிந்த, கருணை

நிறைந்த அவளது முகத்தைக் கண்டதும் தேகம் சிலிர்த்தது. 15 வயது மதிக்கத் தக்க உடல் வளர்ச்சியே அந்த உடலத்தில் காணப்பட்டது. அற்புதத்தின் அடையாளத்தை, ஒரு காலத்தின் வரலாற்றை தாங்கியுள்ள ஆலயத்தில் சிறிது நேரம் மனமுருக வழிபட்டு, நினைத்து வந்தது நிறைவேறிய திருப்தியில் வெளியேறினேன்.

ஆண்டுதோறும் பெர்ணடெத் இறந்த தினமன்று பொதுமக்கள் பார்வைக்காக உடலம் கண்ணாடிப் பெட்டகத்துக்கு வெளியே எடுத்து வைக்கப்படுவதாக அறியக்கூடியதாக இருந்தது. ஆலய வளாகத்திலிருந்து வெளியேறி அண்மையில் காணப்பட்ட புராதன கட்டடங்கள் சிலவற்றைப் பார்வையிட்டு வரவும் பொலிஸ் தலைமையகம் சென்றவர்கள் வரவும் சரியாக இருந்தது.

ஐவரும் பியர் அருந்துவதற்காக தொடருந்து நிலையத்துக்கு எதிர்ப்புறமிருந்த றெஸ்ரோறன்ற் ஒன்றில் நுழைந்தோம். அங்கிருந்த இருக்கையில் அமர்ந்ததும் சிப்பந்தியை அழைத்தோம். அங்கு அமர்ந்திருந்த ஐரோப்பியர்களின் அழைப்பை ஏற்று துரிதமாக செயற்பட்ட சிப்பந்தி, எம்மைக் கண்டு கொள்ளவேயில்லை.

அங்கிருந்த ஏனையோர் இதனைக் கவனிக்காது இருந்தாலும் எமக்குப் பெரும் அவமானமாக இருந்தது. நாம் இருந்த மேசையின் பக்கம் திரும்பிப் பார்க்கவேயில்லை. துவேசம் காட்டுகிறான் என்பது புரிந்தது. எமக்கு வேறு வழி தெரியாமல் கதிரைகளை மேசையின் மீது கவிழ்த்து அடுக்கிவிட்டு 'துவேசிகள்' என்றுமட்டும் பிரான்ஸிய மொழியில் உரத்துக் கூறியவாறு வெளியேறினோம். அப்போதுதான் எம்மீது காட்டப்பட்ட துவேஷம் அங்கிருந்தவர்களுக்குப் புரிந்திருக்கவேண்டும் என்பதை அவர்களது பார்வையும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்ட விதமும் உணர்த்தியது.

நெவேரிலிருந்து மனவுளைச்சலோடு புறப்பட்டு லியோன் நோக்கிய பயணத்தைத் தொடர்ந்தோம். செல்லும் வழியில் குறிக்கிட்ட மலைமீது ஏறிச் சென்று இறங்குகையில் தானுந்து இயந்திரத்தின் இயக்கத்தை நிறுத்தியிருந்தான் சாரதி. இப்போது இயந்திரத்தின் உந்தலின்றி தானுந்து சுயமாகவே இறங்கிச்செல்லலானது. இதே முறையில் இரண்டு மலைகளைக் கடந்து மூன்றாவது மலைமீது ஏறி இயந்திரத்தின் உந்தலின்றி இறங்கிச் சென்றது தானுந்து.

இடையில் வீதி புனரமைப்பு வேலை நடைபெறுவதையும், கம்பிகள் ஏற்றப்பட்ட பேருந்தையும், எதிர்ப்புறமாக ஒற்றை வழியால் வாகனங்கள் வருவதையும் மிக அண்மையில் அவதானித்த சாரதி, தானுந்து நகர்ந்து கொண்டிருந்த வேகத்தின் மத்தியில் இயந்திரத்தை இயங்கச்செய்து அதனை நிறுத்துவதற்கு முயற்சித்தான். பதட்டத்தால் அவனது எண்ணம் ஈடேறவில்லை. இயந்திரத்தின் உந்தலற்ற நிலையில் கட்டுபாடில்லாது நகர்ந்தது தானுந்து.

புதுமை நிகழ்ந்ததுபோல தானுந்தின் இயந்திரம் திடீரென இயங்கியது. உடனேயே வேகத்தைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்த சாரதி தானுந்துவை நிறுத்தியபோது, பேருந்தில் ஏற்றப்பட்டிருந்த கம்பிகளுக்கும் தானுந்துவின் முன் கண்ணாடிக்கும் இடையில் இரண்டு அடி வித்தியாசமே இருந்தது. சற்று முன்னோக்கிச் சென்றிருந்தால் கம்பிகள் கண்ணாடியைப் பிய்த்துக்கொண்டு உள் நுழைந்து விபரீதத்தை ஏற்படுத்தியிருக்கும். வீதி வேலைசெய்து கொண்டிருந்தவர்கள் மலைத்துப்போய் நின்றதை அவதானிக்க முடிந்தது. எமது இதயத்துடிப்பின் வேகம் நெடுநேரமாய் அடங்கவில்லை.

பிரான்ஸ் - லியோன் நகரில் நான் வசித்த காலத்தில், பிரான்ஸில் சில நகரங்களுக்கான பயணங்களின் தொடராகப் பரிஸிக்கு பல தடவைகள் பயணித்துள்ளேன். பிரான்ஸை விட்டு வெளியேறி சுவிஸில் வசித்தபோதும் நான்கு தடவைகள் பயணித்துள்ளேன். அந்நாட்களில், பரிஸ் நகரத்தில் பல இடங்களுக்கும், அதன் புறநகரங்களுக்கும் சென்றுவர சந்தர்ப்பம் கிடைத்தது.

இவ்வாறு பல தடவைகளாக அமைந்த பரிஸ் மற்றும் அதன் புறநகர்ப் பயணங்களில் பெற்ற அனுபவங்களை கால அடிப்படையில் என்னால் உறுதிப்படுத்த முடியாதிருப்பதால் அவற்றைத் தொகுப்பாகவே தருகிறேன். நான் இலங்கைக்குத் திரும்பிய பின்னர் பரிஸிற்குச் சென்று 14.04.2014 - 10.05.2014 வரையான நாட்கள் தங்கியிருந்துள்ளேன். அந்நாட்களில் மீண்டும் முன்னர் பயணித்த இடங்கள், புறநகர்கள் சிலவற்றிற்குச் சென்றுவந்துள்ளதால் அதன் ஆக்கிரமிப்பு அதிகமாவே இருக்கும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

பரிஸ் நகரம்

பரிஸ் பிரான்ஸ் நாட்டின் தலைநகரமாகும். பிரான்சிலுள்ள நகரங்களில் பெரியதும், நெருக்கமான குடியிருப்புகளைக் கொண்டதும், இரண்டு தீவுகளை உள்ளடக்கியதுமாக அமைந்துள்ளது 'பரிஸ் நகரம்'. உலகத்திலுள்ள நகரங்களில் அழகான நகரம் என்றும் பெயரெடுத்ததும் இந்த நகரமேதான்.

பரீஸ் நகரை ஊடறுத்துச் செல்கின்றது 'செயின்' (Seine) நதி. அதன் அமைப்பு தரையில் போடப்பட்ட சங்கிலியின் வடிவில் காணப்படுவதால்



'செயின்' நதி என அழைக்கப்படுவதாக கூறுகிறார்கள். வேறு காரணமும் இருக்கலாம். நதியின் இரு கரைகளுக்கும் அணை கட்டி, வரிசையாக நடப் பட்டிருக்கும் மரங்கள் மற்றும் இரு கரைகளையும் இணைக்கும் வரலாற்று முக்கியத்துவம்மிக்க பாலங்கள் செயின் நதியை அழகூட்டுகின்றன. சுற்றுலாப் பயணிகள் லோஞ்சிகளில் சென்று வருவதையும் காணலாம்.

கி.மு. 52ஆம் ஆண்டுப்பகுதியில் உரோமர் இப்பிரதேசத்தை ஆக்கிர மிக்கின்றபோது அங்கே வாழ்ந்துவந்த 'கலிக்' இனக்குழுவின் பெயரான 'பரீசிஸ்' என்ற சொல்லை ஒற்றிப் பிறந்ததே பரிஸ் என்பர். உரோமர் ஆக்கிர மிப்பதற்கு முன்னரும் இவர்களை 'பரீஸ்' என்றே அழைத்தனர்.

பிலிப் II அகஸ்தஸின் (1180 - 1223) ஆட்சிக் காலம் ஒரு பொற் காலமாகும். அக்காலத்தில்தான் பரிஸ் நகரம் பெரிதும் வளர்ச்சியடைந்தது. பாதைகளுக்குத் தளமிடப்பட்டதுடன் கோட்டை, ஆலயங்கள், கல்விக் கூடங்கள் எனப் பல தோற்றம் பெற்றன.


1852ஆம் ஆண்டு தொடக்கம் 'ஒஸ்மான் பிரபு'வின் நகராக்கும் திட்டத்தில் பழைய கட்டடங்கள் உடைக்கப்பட்டு பாதைகள் அகலமாக்கப் பட்டன. பாதையின் இருபக்கங்களிலும் கல்லாலான புதிய செந்நெறிப் பாணியிலான கட்டடங்கள் அமைக்கப்பட்டன. இக்கட்டிடங்களில் பெரும் பாலானவை இன்றுவரை நிலைத்திருக்கின்றன.

படிப்படியாக முன்னேற்றம் கண்டு வந்த பரிஸில் வணிக பகுதிகள், கேளிக்கை பூங்காக்கள், திருத்தலங்கள், சுற்றுலாத் தலங்கள் எனப்பல அமைக் கப்பட்டுள்ளதுடன் போக்குவரத்தில் அதீத வளர்ச்சி கண்டுள்ளது. நினைவுச் சின்னங்களைப் பாதுகாப்பதில் முன்னிலை வகிக்கின்றது. இந்நகரின் சிறப்பிற்கான எடுத்துக்காட்டுகளையெல்லாம் விபரிக்கும் ஆற்றல் எனக் கில்லை. இருப்பினும் அனுபவத்த சிலவற்றை வெளிக்கொண்டு வருகிறேன்.

போக்குவரத்து

பரிஸ் நகர போக்குவரத்தில் நிலத்துக்குக் கீழான 'மெத்ரோ' சேவை முக்கிய பங்கை வகிக்கின்றது. நான் லியோனில் வசித்தபோதும், சுவிஸில் வசித்த காலங்களிலும் பரிஸிற்குச் செல்லும் சந்தர்ப்பங்களில் மெத்ரோ சேவையைப் பார்த்து பிரமித்து நின்றதுண்டு. குறித்த இடங்களுக்குச் செல்வதற்காக, மாறிமாறி மெத்ரோவில் ஏறிப் பயணிக்கும்போது அதன் விரைவையும் தரிப்பிடங்களையும் பார்த்து ஆச்சரியமடைந்ததுண்டு.

இரும்பினால் செய்யப்பட்ட மெத்ரோவின் சக்கரங்களுக்கு வெளிப் புற பக்கவாட்டில் ரயரினாலான சக்கரங்கள் இணைக்கப்பட்டுள்ளன. வழமை யான இரும்புப் பாதையும் அதனுடன் இணைந்தாற்போல் ரயர் சக்கரங் களுக்கென ஒருசாண் அகலத்திற்கு கனமான இரும்பு தகரத்திலான பாதையும் அமைக்கப்பட்டுள்ளன. மெத்ரோவின் வேகத்திற்கும் அதன் குலுக் கலற்ற தன்மைக்கும் இதுவே காரணமாக இருக்கலாம்.



நிலத்துக்குக் கீழான மெத்ரோ தடங்கள்

1900 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது இந்த மெத்ரோ சேவை. நிலத்துக்குக் கீழுள்ள வழித் தடங்களுக்கு ஒன்று முதல் மூன்று அடுக்குத் தளங்களில் தரிப்பிடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. கிட்டத்தட்ட ஆறு மாடிகளைக்கொண்ட கட்டடத்தின் உயரத்தில் நிலத்துக்குக் கீழ் முன்றாவது தளம் உள்ளது. பரிஸின் உயிர்நாடியாக விளங்கும் இதற்கு 16 வழித் தடங்கல் களும், 298 தரிப்பிடங்களும் உள்ளன.

MP என அடையாளமிடப்பட்ட இரும்புச் சக்கரங்களில் கூடவே ரயர்களும் இணைத்து ஓடுகின்ற நான்கு வகையான மெத்ரோ தொடருந்து களும். MF என அடையாளமிடப்பட்ட இரும்புச் சக்கரங்களில் ஓடுகின்ற நான்கு வகையான மெத்ரோ தொடருந்துகளும் பாவனையில் உள்ளன. இவை நிலத்துக்குக் கீழ் அமைக்கப்பட்டுள்ள தடங்களில் ஓடுபவை. இவற்றுடன் இணைந்த சேவையாக பரிஸின் புறநகர்ப் பகுதிகளுக்குச் செல்வதற்கு RER என அடையாளமிடப்பட்ட ஐந்து வகையான விரைவு தொடருந்துகள் நிலத்தின் கீழுள்ள தரிப்பிடத்திலிருந்து புறப்பட்டு தரையின் கீழும், தரைமேலுமுள்ள தடங்களில் ஓடுபவை.

இவை தவிர பரிஸிலிருந்து வேறு மாவட்டங்களுக்கும், வேறு நாடுகளுக்கும் செல்வதற்கென, பரிஸின் பிரதான தொடருந்து நிலையங் களிலிருந்து விரைவு தொடருந்து சேவைகள் இடம் பெறுகின்றன. இவற்றில் TGV மற்றும் Eurostar போன்றவை பிரதான விரைவு சேவைகளாகும்.

1981இல் பரிஸிற்கும் லியோனுக்கும் இடையில் TGV சேவை ஆரம்பிக்கப்பட்டது. 470 கி.மீ. நீளமான தூரத்தை இரண்டு மணித்தி யாலத்தில் சென்றடையும். தோடம்பழ நிறத்தைக் கொண்டதும் விமானத்தின் முகப்பை ஒத்ததுமான இத்தொடருந்து சேவையில், லியோனில் வசித்தபோது சில தடவைகள் பிரயாணம் செய்துள்ளேன். கண்ணாடி மறைப்பின் விசேட தன்மை காரணமாக அதன் வேகத்தை கண்கள் உணர்ந்துகொள்ள முடியாத வகையில் உள்ளது. மெத்ரோவைப் போலவே இரண்டு வகையான சக்கரங்கள் இதற்கும் பொருத்தப்பட்டுள்ளன.

பரிஸ் நகரின் பிரதான போக்குவரத்து சாதனமாக மெத்ரோ தொடருந்து இருப்பதால் தினமும் பல்லாயிரம் மக்கள் அதனைப் பயன் படுத்துவர். பெரும்பாலும் ஒவ்வொரு சேவையும் மெத்ரோ நிரம்பிய மக்கள் கூட்டமாகவே இருக்கும். 10 - 15 நிமிட வித்தியாசத்தில் மெற்ரோ சேவை தொடராக நடைபெற்றுக்கொண்டிருக்கும். ஒரு முறையில் 600, 700 வரையா னோர் பயணிப்பர். 1, 4, 14 வழித் தடங்களில் மேலும் அதிகமானோர் பயணம் செய்வர். ஒரு தடத்திலிருந்து வேறு மார்க்கத் தடங்களுக்குச் செல்வதற்கு வெளியேறிச் செல்லாமல் நிலத்துக்குக் கீழே அமைக்கப்பட்டுள்ள பாதை களால் சென்று உரிய தரிப்பிடத்தை அடைய முடியும்.

பயணிகளின் பயணங்களை இலகுபடுத்தும் நோக்கில் பெரும் எண்ணிக்கையிலான மெத்ரோ சேவைகளை ஏற்படுத்தி பயணச் சீட்டுகளை பெற்றுக்கொள்ள இயந்திரம் உட்பட பல வழிமுறைகள் கையாளப்பட்டும், ஒவ்வொரு தரிப்பு நிலைய நுழைவாசலிலும் பயணச்சீட்டு விற்பனை செய்யப் பட்டும், பயணிகள் நுழைவதற்கு இறுக்கமான வாயிலை அமைத்திருந்தும், பயணச்சீட்டு பரிசோதகர்கள் கணிசமாகப் பணியாற்றியபோதும் சிலர் பயணச்சீட்டின்றி நுழைவாசலால் ஏறிப் பாய்ந்து அல்லது இருவர் நெருக்கமாக ஒன்றித்து ஒருவர் நுழையும் வாசலால் நுழைந்து தரிப்பிடத் தளத்திற்குச் சென்றுவிடுவது குறைபாடாக நோக்கப்படுகிறது.

ஒவ்வொரு தரிப்பிடத்தையும் மெத்ரோ விரைவாகச் சென்றடை வதாலும், தரிப்பிடங்களில் வெவ்வேறு வழித்தடங்களின் இணைந்த சேவை அடிக்கடி நடைபெறுவதாலும் பயணச்சீட்டின்றி பயணிப்பவர்கள் தப்பிக்க சந்தர்ப்பம் பலவுள்ளன.


ஈபெல் கோபுரம் (Eiffel Tower)

பிரான்ஸ் நாட்டின் குறியீடாகவும் உலகத் தொழிற் புரட்சியை நினைவுகூரும் வகையிலும் பரிஸ் நகரில் அமைக்கப்பட்டுள்ள 'ஈபெல் கோபுரத்தை' ஏற்கெனவே இரண்டு தடவைகள் பார்வையிடச் சென்றிருக் கின்றேன். ஆனால், அதனில் ஏறிப் பார்க்கவில்லை. இம்முறை பார்வையிடச் சென்றபோது ஏறிப் பார்வையிடச் சந்தர்ப்பம் கிடைத்தமை எனக்கு மனநிறைவைத் தந்தது.

இந்தக் கோபுரம், அவதானிப்பு மற்றும் வானொலி ஒலிபரப்புக்குப் பயன்படும் வகையில் மூன்று தளங்களைக் கொண்டதாக, 'குஸ்ட்டேவ் ஈபெல்' என்பவரின் வடிவமைப்பில் உருவாக்கப்பட்டது. இவரது பெயராலே 'ஈபெல்' என அழைக்கப்படும் இக்கோபுரம், 1887 இல் தொடங்கப்பட்டு 31.03.1889 இல் முடிவுற்று 06.05.1889 இல் பொதுமக்கள் பார்வையிட அனுமதிக்கப்பட்டது.

தரையிலிருந்து இரண்டாவது தளம்வரை தென்மேற்கு மற்றும் வடமேற்குப் பக்க மூலைகளிலிருந்து பாரிய இழுவை ஊர்திகள் பார்வையாளரை ஏற்றிச் செல்கின்றன. சுயமாக செல்வதற்கு 1,792 படிகளும் அமைக்கப்பட்டுள்ளன.

இரண்டாவது உலகப்போரில் பிரான்ஸை ஜேர்மன் படைகள் கைப்பற்றிய பின்னர், ஈபெல் கோபுரத்தை பார்வையிட வரும் 'ஹிட்லர்' படிமூலமே ஏறிச்செல்லட்டும் என்பதற்காக இழுவை ஊர்திகளைச் செயலிழக்கச் செய்திருந்தனர். போராட்ட காலத்தில் உதிரிப்பாகத்தை பெற்றுச் செப்பனிடுவது கடினமென்பதால் அங்கு வந்த ஹிட்லர் ஏறிப் பார்வையிடாமலே திரும்பிவிட்டதாக பேசப்படுகிறது.



எனது சகோதரன் அங்கு வேலைசெய்வதால் இலவசமாகவும் முன்னுரிமையிலும் கோபுரத்தில் ஏறிப் பார்வையிட எமக்கு அனுமதி வழங்கப்பட்டது. சாதாரணமாக 26 ஈரோ கட்டணம் செலுத்தி, நீண்ட வரிசையில் காத்திருந்தே கோபுரத்தில் ஏறமுடியும்.

காலை 9.30 மணி. பல நாடுகளைச் சேர்ந்த பல்லாயிரம் மக்கள் வரிசையாக நின்றனர். பிறிதொரு பாதையால் அழைத்துச் செல்லப்பட்ட நாம், தென்மேற்குப் பக்கமிருந்து புறப்பட்ட முதலாவது இழுவை ஊர்தியில் ஏறிக் கொண்டோம். அதனில் ஒரே தடவையில் ஐம்பது பேர்வரை செல்லக் கூடியதாக இருந்தது.

இழுவை ஊர்தி கோபுரத்தின் தென்மேற்கு பக்க மூலையிலிருந்து புறப்பட்டு, உட்புறமாக செங்குத்தாகச் செல்லாமல் கோபுரத்தின் அமைப்பிற்கேற்ப சற்றுச் சரிவாகச் சென்று 57 மீற்றர் உயரமுள்ள முதலாவது தளத்தில் தரித்தது. அது விசாலமான தளம். கடைகளும் றெஸ்ரோறன்ஸும் இருந்தன. சிலர் இறங்கிக்கொள்ள தொடர்ந்த இழுவை ஊர்தி முன்னரைப் போலவே சரிவாகச் சென்று 115 மீற்றர் உயரமுள்ள இரண்டாவது தளத்தில் தரித்தது. முதலாவது தளத்தை விட விசாலம் குறைவாக இருந்தது அத்தளம்.

அங்கும் சிறிய கடைகளும், கோப்பி அருந்தகமும் இருந்தன. அனைவரும் அங்கு இறக்கப்பட்டனர்.

தொடர்ந்து 276 மீற்றர் உயரத்திலுள்ள மூன்றாவது தளத்திற்கு செல்வதாயின் மேற்கொண்டு பிறிதொரு மின்தூக்கியில் செல்லவேண்டும். பார்வையாளர் சென்று பார்வையிடக்கூடிய உச்சத்தளம் அதுவாகும். மின்தூக்கி செல்கின்ற செங்குத்தான பாதை ஒடுங்கியது என்பதால் ஒரு தடவையில் 12 பேர் வரையிலேயே செல்லக்கூடிய மின்தூக்கியாக இருந்தது. ஒரு மின்தூக்கி மட்டுமே பயன்படுத்தப்படுவதால் பலரும் அத்தளத்தில் காத்திருந்தனர்.

அதனில் ஏறி மூன்றாவது தளத்தை அடைந்தோம். அத்தளத்தில் பொருத்தப்பட்டிருந்த தொலைநோக்கி மூலம் எட்டுத் திசையாலும் பரிஸின் வனப்பை 45 மைல் தொலைவுவரை பார்க்கமுடியுமென கூறப்பட்டபோதும் பரிஸ் நகரின் கணிசமான பகுதியை இத்தளத்திலிருந்து தொலைநோக்கி இல்லாமலே தெளிவாகப் பார்க்கக்கூடியதாக இருந்தது.



சாதாரண, உயர்ந்த மற்றும் பிரசித்தி பெற்ற கட்டடங்கள், பரிஸை சுற்றி ஓடும் செயின் நதி, அதில் பயணிக்கும் பயணிகள் லோஞ்சிகள், நெடுஞ்சாலைகள், ஊர்ந்து செல்லும் வாகனங்கள், தொடருந்துகள் எனப் பலவற்றை அங்கிருந்து இரசனையோடு பார்த்ததில் மனநிறைவு. பார்வையாளர் பரிஸ் நகரத்தின் பகுதிகளை சுற்றிச் சுற்றி ஒருவர் மாறி ஒருவர் செல்பி எடுப்பதிலேயே தமது கவனத்தைச் செலுத்தினர்.

அத் தளத்தில் 'ஈபெல்' லின் அலுவலகம் இருந்தது. அந்த அலுவலகத்தினுள் தனது மகளுடன் விருந்தினராக வருகைதந்த அமெரிக்கரான 'தோமஸ் எடிசன்' என்பவருடன் ஈபெல் உரையாடிக்கொண்டிருப்பதை உணர்த்தும் மெழுகுச் சிலைகள் வைக்கப்பட்டுள்ளன.

தளத்தின் மத்தியில் வானொலி ஒலிபரப்புக் கோபுரம் அமைக்கப்பட்டுள்ளது. அதன் உயரம் தரையிலிருந்து 324 மீற்றர். இதுவே கோபுரத்தின் உச்ச உயரமாகும். அங்கு பார்வையாளர் செல்ல முடியாது.

தொடர்ந்து மின்தூக்கி மற்றும் இழுவை ஊர்தி மூலமாக இறங்கி 2ஆம் 1ஆம் தளங்களிலும் நின்று சுற்றுபுறமும் பார்வையிட்ட பின்னர் வெளியேறினோம்.

உருக்குத் துண்டுகள், உருக்கு ஆணிகள்கொண்டு தொலைநோக்க சிந்தனை யோடு திட்டமிட்டு உருவாக்கப்பட்ட ஈபெல் கோபுரத்திற்கு ஐந்து

இலட்சம் ஆணிகள், 18,038 உருக்குத் துண்டுகள் பயன்படுத்தப்பட்டு உள்ளன. இக்கோபுரம் கட்டப்பட்டபோது உலகிலேயே மிக உயர்ந்ததாகவும், உலகில் மிகக் கவர்ச்சிகரமான கட்டடக் கலைகளுள் ஒன்றாகவும் கருதப்பட்டு உலக அதிசயங்களில் ஒன்றாக அறிவிக்கப்பட்டது.

கோபுரத்தை சூழவுள்ள பகுதி பார்வையாளரைக் கவரும் வகையில் அழகுபடுத்தப்பட்டுள்ளது. மேற்குப் பகுதியே முகப்பாகக் கொள்ளத்தக்க வகையில் மியூசியம், தங்க நிறத்திலான சிலைகள், கோபுரத்தை முழுமையாகப் பார்வையிடவும் படம்பிடிக்கவும் ஏற்றவகையில் உயரமான தளம், தடாகம் போன்றவை அமைக்கப்பட்டுள்ளன. எப்போதும் இப்பகுதியில் திரளான பார்வையாளரைக் காணலாம்.

பெரும் எண்ணிக்கையில் உல்லாசப் பயணிகள் வருகை தருவதால் கோபுரத்தை சூழவுள்ள பகுதிகளில் நடைவியாபாரிகள் அதிகம். நடை வியாபாரத்திற்குத் தடைவிதிக்கப்பட்டிருந்தும், பொலிசார் அடிக்கடி கண்காணிப்பில் ஈடுபட்டிருந்தும் வியாபாரத்திற்கும் வழிப்பறிக்கும் குறைவில்லை.



வருகைதரும் உல்லாசப் பயணிகளிடம் நிதி வசூலிப்பது தடை செய்யப்பட்டிருந்தும் பிரசுரங்கள், அச்சிடப்பட்ட படிவங்கள் மூலம் நிதி சேகரிப்பதற்கு பெரும்பாலும் இளம் பெண்களையும், பிச்சை கேட்பவர் களையும் காணலாம். இவை அழகில் விழுந்த கறைகளாக நோக்கப்படுகிறது.

தற்போது உலகில் ஈபெல் கோபுரத்தைவிட உயர்ந்த நெடுந் தொலைவு அலை பரப்பிக் கோபுரங்கள் பல உள்ளன. 2012 இல் யப்பானில் கட்டப்பட்ட 'ரோக்கியோ ஸ்கை ட்ரி' (Tokyo Sky tree) கோபுரமே தற்போதைய உயரமான கோபுரமாகும். அதன் உயரம் 634 மீற்றர். இருப்பினும், பல சிறப்புகளங்கிய ஈபெல் கோபுரத்தை நிறைவாகப் பார்வையிட்டதில் மிக மகிழ்ச்சி எனக்கு.

தூய வின்சென் டி போல் ஆலயம்

ஈபெல் கோபுரத்திலிருந்து மெத்ரோவில் வந்த நாம், 'றியூ டி செவ்ரெஸ், பரீஸி'லுள்ள 'தூய வின்சென் டி போல்' ஆலயத்திற்குச் சென்றிருந்தோம். அதிக வெளிச்சமில்லாது இருந்த ஆலயம், குண்டூசி விழுந்தாலும் கேட்குமளவிற்கு மிக அமைதியாக இருந்தது. அந்த அமைதி வழிபாட்டுக்கு உகந்ததாகவும் பக்தியை உண்டாக்குவதாகவும் இருந்தது.

ஏற்கெனவே வருகைதந்திருந்த இரண்டு தடவைகளும் எனக்கு இதே உணர்வு ஏற்பட்டதை மறப்பதற்கில்லை.

பிரான்ஸ் 'காஸ்கனி' நகரில் 24.04.1581 இல் பிறந்த வின்சென் டி போல், 1600ஆம் ஆண்டு கத்தோலிக்க குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார், 1605ஆம் ஆண்டு மார்செல் பகுதிக்குச் செல்லும் வழியில் துருக்கிய கடற் கொள்ளையரால் பிடித்துச் செல்லப்பட்டு, 'துனீசியா' நாட்டில் அடிமையாக விற்கப்பட்டார். அவரை வாங்கிய உரிமையாளரை கத்தோலிக்கராக மனம் திருப்பிய பிறகு 1607இல் அங்கிருந்து தப்பித்தார்.

1622இல் போர்க் கப்பலில் குருவாக நியமிக்கப்பட்டு, அங்கு போர்க் கைதிகளுக்கும் நற்செய்திப் பணியாற்றினார். 1625இல் 'வின்சென்ட் மறைபணி சபை'யையும், 1633இல் 'பிறரன்பு புதல்விகள்' என்ற பெண்களுக்கான துறவற சபையையும் நிறுவியதுடன் நோயாளர், வறியவர் நலனில் அக்கறைகொண்டு தன் வாழ்நாளை முழுமையாக அர்ப்பணித்துப் பணியாற்றினார். இவரது கருணை, பணிவு, தாராள குணம் ஆகியவை இவருக்குப் புகழைத் தேடித் தந்திருக்கின்றன.



27.09.1660 இல் இறந்த இவரது உடல், இறுதியாகப் பணியாற்றிய பரிஸ் நகரிலேயே கல்லறையில் நல்லடக்கம் செய்யப்பட்டது. அடக்கம் செய்யப்பட்ட 52 ஆண்டுகளின் பின்னர் (1712 இல்) இவரது கல்லறை தோண்டப்பட்ட போது உடல் முழுவதும் அழியாமல் இருந்தது. ஆனால், 16.06.1737 இல் புனிதர் பட்டத்திற்காக இவரது கல்லறை மீண்டும் தோண்டப் பட்ட போது முழுமையான எலும்புகளும், இருதயமும் மட்டுமே அழியாமலிருந்தன.


ஆலய பீடத்தின் பின் பக்கமாக உயரத்தில் இருக்கும் கண்ணாடிப் பெட்டகத்தில், காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள மெழுகு உருவத்துக்கு உள்ளே அவரது எலும்புகள் யாவும் வைக்கப்பட்டுள்ளன. கண்ணாடிப் பெட்டகம் ஆலயத்தில் உள்ளதைவிட வெளிச்சமாகத் தெரிந்தது. கீழிருந்தே உருவத்தை தெளிவாகப் பார்க்கக் கூடியதாகவும் இருந்தது. இவரது இருதயம், பரிஸில் உள்ள 'பிறரன்பு புதல்விகள்' தலை மையக இல்லத்தில் இருக்கும் திருப்பண்ட பேழையில் வைக்கப்பட் டுள்ளது.

உருவத்திற்கு அண்மையாய்ப் பார்வையிடச் செல்பவர்களுக்காக உருவம் உள்ள தளம் வரை படிகள் அமைக்கப்பட்டுள்ளன. ஒரு தடவையில் பத்துப் பேர் வரையிலேயே அந்தத் தளத்தில் நின்று பார்வையிடவும்,

வழிபடவும் முடியும். அங்கு கூட்டம் அதிகமில்லாததால் நாம் படியேறிச் சென்று உருவத்திற்கு ஒரு அடி இடைவெளியில் நின்று பார்வையிட்டதுடன் சிறிது நேரம் செபித்து வழிபட்டோம். உறங்குவதுபோல காணப்பட்ட தூய வின்சென் டி போலின் உருவத்தில் செயற்கைத்தனம் இல்லாமல் இயல்பாகவே தென்பட்டது.

திரு இருதயத் தேவாலயம் (Basilica of the Sacred Heart)

பரிஸ் 'மொன்பார்த்ரே' *(Montmartre)* மலை உச்சியில் அமைந்துள்ள 'திரு இருதயத்' தேவாலயத்தை தரிசிக்கச் சென்றிருந்தோம். இது வெண் கற்களால் கட்டப்பட்ட கண்களைக் கவரும் அதி அற்புதக் கலை நுட்பம் நிரம்பிய தேவாலயமாகும். 'றோமனோ பைசண்டைன்' *(Romano-Byzantine)* கட்டடக்கலை வடிவமைப்பில் கட்டப்பட்டுள்ளது.



வெண்மை நிறமாகத் தெரிவதால் 'வெண் ஆலயம்' *(White Church)* எனவும் அழைக்கப்படுகிறது. பெரும்பாலும் தமிழர்களே இவ்வாறு அழைக்கின்றார்கள். *1870*ஆம் ஆண்டு 'மொன் பார்த்ரே' மலைப் பகுதியில் இடம் பெற்ற பரிஸ் சோசலிஷ்டுகளின் மதசார் பற்ற எழுச்சியின்போது இடம் பெற்ற துன்பியல் சம்பவங்களுக்குப் பிராயச் சித்தமாகவும் மற்றும் *1871*ஆம் ஆண்டு 'பிராங்கோ - பிரஷ்யன்' *(Franco-Prussian)* போரில் தோல்வியுற்றதால் இழந்த *58,000* பேரின் நினைவாகவும் இத் தேவாலயம் கட்டப்பட்டதாகக் கூறப் படுகிறது.

1873 இல் எடுக்கப்பட்ட முடிவிற்கிணங்க *1876* இல் தேவாலயத் திற்கான கட்டுமானப்பணி ஆரம்பிக்கப்பட்டு *1919* இல் அங்குராப்பணம் செய்யப்பட்டது. ஆலயத்திற்குள்ளே புகைப்பட மற்றும் வீடியோ கருவிகள் கொண்டுசெல்லத் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

நான்கு சிறிய கூம்பக வடிவிலான தூபிமாடங்களையும் (கோபுரங்கள்) நடுப் பகுதியில் பெரிய தூபிமாடத்தை யும் கொண்டுள்ள இந்த ஆலயத்தின் பின்பகுதியில் *94* மீற்றர் உயரமான மணிக்கோபுரம் காணப்படுகிறது. அக் கோபுரத்தின் உள்ளே *19* தொன் நிறையையுடைய மணி பொருத்தப் பட்டுள்ளது. இது உலகில் மிகப் பெரிய மணிகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது.

முன்பக்கமாக பச்சை நிறத்தை முழுமையாய் வெளிப்படுத்தும் புற்தரையும் அதனை ஊடறுத்து இருபுறத்தாலும் சாய்வாக ஏறிச்செல்லும்

பலநூறு படிக்கட்டுகள் ஆலயத்தின் வெளித்தோற்றத்திற்கு மேலும் அழகூட்டின.

475 மீற்றர் உயரமுள்ள ஆலயத் தளத்திற்கு ஆர்வத்துடன் மக்கள் படிக்கட்டுகளில் ஏறிச் செல்வதைக் காணக்கூடியதாக இருந்தது. படிகளில் ஏறுபவர்களுக்காக இரு இடங்களில் இருக்கைகள் (சாய்வு வாங்குகள்) போடப்பட்டுள்ளன. படிகளில் ஏறமுடியாதவர்கள் தரையிலிருந்து இழுவை ஊர்தி மூலம் செல்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நாம் படிகளால் ஏறிச் சென்றோம்.

வெளியே பளிச்சிடும் வெண்மையாக ஆலயம் தெரிந்தாலும் உள்ளே வெளிச்சம் குறைவாகவே இருந்தது. வழிபாட்டு நேரமில்லாமையே அதற்குக் காரணம். நுழைவாயிலின் உள்ளே வலது பக்கமாக மெழுகுவர்த்திகள் ஏற்றப் பட்ட பீடத்தின் ஒளி ஆலயத்தின் உட்பகுதியின் அழகைக் காண்பித்தது.

நாம் சென்ற நேரம் ஆட்கள் கணிசமாக இருந்தபோதிலும் அங்கு காணப்பட்ட அமைதி வியக்கவைத்தது. இருதய ஆண்டவர் சுரூபத்திற்குப் பாய்ச்சப்படும் 'குறிஒளி' சுரூபத்தின் உயிர்த்துடிப்பை வெளிக்காட்டியது. பார்ப்பவர் மனதுருக செபிக்கும் எண்ணத்தை வலிந்து இழுத்தவாறிருந்த இருதய ஆண்டவர் சுரூபத்தின் முன்னிலையில் முழந்தாழ் பணிந்து நாமும் செபித்தோம்.

ஆலயத்தின் உள்ளே காணப்பட்ட சிற்பங்களும் சித்திரங்களும் ஒளி தெறிக்கும் கண்ணாடி வேலைப்பாடுகளும் வியப்பூட்டும் வகையில் அமைந்திருந்தன. தரையிலிருந்து ஆலயத்தின் அழகை இரசிப்பதுபோல ஆலய முன் தளத்தில் நின்று பரிஸ் நகரின் வனப்பை பல மைல் தூரத்திற்கு பார்த்து இரசிக்கக்கூடியதாக இருந்தது. அரை மணித்தியாலம் வரை அங்கே நின்று பரிசின் அழகைச் சுவைத்து படிகளாலேயே இறங்கி வந்தோம்.

வெற்றி வளைவு (Arch of Triumph)

பரிஸ் நகரிலுள்ள மிகவும் புகழ்பெற்ற நினைவுச் சின்னங்களில் ஒன்று இவ்'வெற்றி வளைவு'. தனது இராணுவ எழுச்சி வெற்றியினதும், பிரான்ஸ் புரட்சியின் வெற்றியினதும் நினைவுச் சின்னமாக நெப்போலியனால் அமைக்கப்பட்ட வெற்றி வளைவினைப் பார்வையிட்டோம்



1836 இல் கட்டி முடிக்கப்பட்ட இவ்வெற்றி வளைவு 'தீத்து றோமன் ஆர்க்'

(Roman Arch of Titus) கட்டடக்கலை வடிவமைப்பில் (பண்டைய ரோமானிய கட்டடக்கலையின் புதிய ரகம்), 50 மீற்றர் உயரம், 45 மீற்றர் அகலம், 22 மீற்றர் ஆழம் உடையதாக அமைக்கப்பட்டுள்ளது.

பரிஸில் 12 இற்கு மேற்பட்ட வீதிகள் சந்திக்கும் 'சார்ள்ஸ் டி கோல்' என்ற இடத்தில் இந் நினைவுச் சின்னம் அமைந்துள்ளது. உலகின் மிக அழகான வீதியென அழைக்கப்படும் 'அவெனியூ சாம்ஸ் எலிசே' *(Av. Champs Elysee)* வீதியை எதிர்நோக்கியதாக இவ்வெற்றிவளைவு அமைந்திருப்பதும் அதன் இன்னொரு சிறப்பு. நெப்போலியனின் இறுதிக் கிரியையின்போது பூதவுடல் இவ்வெற்றி வளைவினூடாகக் கொண்டு செல்லப்பட்டதாக கூறப்படுகிறது.

இவ்வெற்றி வளைவின் உள்ளே நாட்டுக்காகப் போராடி மடிந்த அறியப்படாத வீரர்களின் நினைவாக சமாதி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அதில் எப்போதும் அணையா விளக்கு ஒளிர்ந்து கொண்டிருக்கிறது. இச்சின்னத்தின் சரித்திரத்தை உள்ளடக்கும் சிறிய தொரு காட்சியகமும் இருக்கின்றது.

558 இராணுவ ஜெனரல்களின் பெயர்கள் வளைவில் பொறிக்கப் பட்டுள்ளன. யுத்த களங்களில் இறந்த ஜெனரல்களின் பெயர்கள் அடிக் கோடிடப்பட்டுள்ளன. முன்னைய அரசர்களின் போர் நடவடிக்கைகளை விபரிக்கும் சிற்பங்கள் பல செதுக்கப்பட்டுள்ளன. அவற்றில் 1810இனைக் குறிக்கும் சிற்பம் வெற்றியையும், 1815இனைக் குறிக்கும் சிற்பம் எதிர்ப்பு, அமைதியையும் குறிக்கிறது. 1815ஆம் ஆண்டே நெப்போலியனின் வீழ்ச்சி இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

பரிஸ் மாதா பேராலயம் (Our Lady of Paris)

'நோத்ர் டாம் டி பரிஸ்' *(Notre Dame de Paris)* என பிரான்ஸு மொழியில் அழைக்கப்படும் 'பரிஸ் மாதா' பேராலயத்திற்குச் சென்றிருந்தோம்.

பரிஸ் நகரில் வளைந்தோடும் 'செயின் நதி'யின் இரண்டு கிளைகளின் நடுவே, பரிஸ் நகரின் தீவு என அழைக்கப்படும் மத்திய பகுதியில் அமைந்துள்ளது இப்பேராலயம். மேற்கு நோக்கிய வாசலோடு கூடிய இப்பேராலயம் பிரான்ஸுன் கோதிக் கட்டடக் கலையின் சிறந்த எடுத்துக் காட்டாக கருதப்படுகிறது.


ரோமானிய கீழ்மாடக் கூடம்

இந்த ஆலயத்தின் அழகினை, ஹொலிவூட் நடிகர் 'அன்ரனி குயின்' 'கூனல்' பாத்திரமேற்று நடித்த, 'Hunch back of Notre dame' திரைப்படத்தில் அநேகர் பார்த்திருப்பார்கள். சிற்ப வேலைப்

பாடுகள் நிரம்பிய இப்பேரால யத்தின் கட்டட வேலைகள் 1163ஆம் ஆண்டு ஆரம்பிக்கப் பட்டபோதும் ஐரோப்பாவில் ஏற்பட்ட யுத்தங்களால் தாமத மாகி 1345ஆம் ஆண்டில்தான் முற்றாக முடிவுற்றது.



பிரான்ஸ்யப் புரட்சி யின் பின்னர் 1793இல் இப் பேராலயம் அழிபடக்கூடிய ஆபத்தை எதிர்நோக்கியிருந் தது. அவ்வாண்டே பிரான்ஸ் அரசர்களை வெறுத்த பரிஸ் மக்களால் பேராலயத்தில் வைக்கப்பட்டிருந்த 28 இஸ்ரேலிய - யூத அரசர்களின் சிலைகள் இழுத்து வீழ்த்தப்பட்டன எனத் தகவல்கள் கூறுகின்றன.

பேராலயத்தின் உள்ளே அதன் பிரமிக்கத்தக்க விசாலத்தைப் பார்க்கலாம். 9,000 பேர் வரை உள்ளடக்கக்கூடிய இப்பேராலயத்தின் நீளம் 128 மீ., அகலம் 69 மீ., உயரம் 35 மீ., முன்பக்க இரண்டு தூபிமாடங்களின் (கோபுரங்கள்) உயரம் 69 மீ., நடுவிலுள்ள தூபிமாடத் தின் உயரம் 90 மீற்றர் ஆகும்.

மேற்குப் பக்கம் இரண்டு தூபிமாடங்களையும் வடக்குப்பக்கம் பிரமாண்டமான ரோஜா சாளரத்தையும் காணலாம். இடது பக்கம் உள்ள தூபிமாடத்தில் உள்ளே மேற்பகுதியில் 261 செ.மீ. உயரமுடைய ஆலய மணி வைக்கப்பட்டுள்ளது. இம் மணிவரை செல்வதற்கு 1,345 ஒடுங்கிய படிகள் கோபுரத்தின் உட்பக்கத்தால் அமைக்கப்பட்டுள்ளன. முன்னர் இப்படிகளால் ஏறியே மணி அடிக்கப்பட்டதாக அறியப்படுகிறது.

ஆலயத்தின் உள்ளே இருபக்க சுவர்களிலும் அற்புதமான சிற்ப வேலைகளும், அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய கண்ணாடி யன்னல்களும் காணப்படுகின்றன. இருபக்க சுவர்களும், இவற்றுக்கு இடையில் இரு நிரையாக நிற்கும் தூண்களும் ஆலயத்தின் அலங்காரக் கூரையைத் தாங்கி நிற்கின்றன.

முகப்பிலிருந்து பீடத்தை நோக்கிய திசையில் நடுவில் ஒன்பது சிறிய மேடைகள் அமைக்கப்பட்டு அவை ஒவ்வொன்றிலும் மணிகள் வைக்கப் பட்டுள்ளன. வலது பக்கமாக பக்தர்களின் வழிபாட்டுக்காக பரிஸ் மாதா சுருபம் வைக்கப்பட்டுள்ளது. நாமும் வழிபட்டு வேண்டுதல் செய்தோம். ஆலயத்தின் கட்டுமானப்பணியின்போது கண்டுபிடிக்கப்பட்ட இடிபாடு களுடன் கூடிய ரோமானிய கீழ்மாடிக் கட்டடம் தொல்பொருள் அடையாள மாகப் பாதுகாக்கப்படுகின்றது. இக்கட்டடத்திலுள்ள சிறப்பு என்னவெனில்;


ரோமானியர் காலத்திலேயே அந்தக் கீழ் மாடியில் வெப்பமூட்டும் வசதி செய்யப்பட்டிருந்தமையே.

பேராலயம் கட்டப்பட்ட காலத்தின் பொறியியற் திறனையும், கட்டடக் கலையின் அழகையும், சிறப்பையும், சிற்பங்களையும் பார்த்து விபரிக்க வார்த்தைகளின்றி நின்றவர்களில் நானும் ஒருவன்.

லூவர் அருங்காட்சியகம் (Louvre Museum)

'லூவர் அருங்காட்சியகம்' உலகின் மிகப்பெரிய அருங்காட்சியகங்களில் ஒன்று. முக்கியமானதும், வரலாற்றுச் சிறப்பு மிகுந்ததும், நினைவுச் சின்னமுமான இது, உலகிலேயே அதிகமான பார்வையாளர் வருகை தருகின்ற அருங்காட்சியகமாகும். கலை அருங்காட்சியகம், டிசைன் / டெக்ஸ்டைல் அருங்காட்சியகம், வரலாற்றுத்தளம் என்ற வகைக்குள் அடங்குகின்றது.

பிரான்ஸின் முக்கிய கலைப்பொக்கிஷமான இதனில் உலகெங்கும் இருந்து கொண்டுவரப்பட்ட விலைமதிக்க முடியாத ஓவியங்கள், கலைப் பொருட்கள், ஞாபகச் சின்னங்கள் நிறையவே இருக்கின்றன. குறிப்பாக கிழக்கிந்திய, இஸ்லாமிய, கிரேக்க, ரோமானிய, எகிப்திய நாகரீகத் தொல் பொருள் சின்னங்கள் அருங்காட்சியகத்தை அலங்கரிக்கின்றன. உலகப் புகழ் பெற்ற 'மோனலீசா' ஓவியம், 'வீனஸ்' சிலை ஆகியவை இங்கு இருப்பதும் குறிப்பிடத்தக்கது.



12ஆம் நூற்றாண்டில் 'பிலிப் அகஸ்து' அரசனால் கலைப் பொருட்கள், அரச திரவியங்களைப் பாதுகாப்பதற்கென செயின் ஆற்றுப் பக்கமாய் அமைக்கப்பட்டது இந்த அருங்காட்சியகம். 13ஆம் லூயி, 14ஆம் லூயி மன்னர்களால் புனரமைப்புச் செய்யப்பட்ட இது, 1792இல் பிரான்ஸிய புரட்சியின் பின்னர் கலைப் பொருட்களும், திரவியங்களும் அரச உடமையென அறிவிக்கப்பட்டது. 1852இல் 3வது நெப்போலியனால் முற்றாகப் புனரமைப்புக்கு உள்ளானது.

66,600 சதுர மீற்றர் பரப்பளவைக்கொண்ட அருங்காட்சியகத்தில் வரலாற்றுக்கு முந்திய காலம்முதல் 19ஆம் நூற்றாண்டு வரையான காலப்பகுதியைச் சேர்ந்த ஏறத்தாள 35,000 அரும்பொருட்கள் வைக்கப்பட்டுள்ளன. 1885ஆம் ஆண்டு முடிவிற்குள் 5,000இற்கு மேற்பட்ட கலைப் பொருட்கள் சட்டரீதியாக உரிமையாளர்களிடம் திருப்பிக் கொடுக்கப் பட்டதாக அறியப்படுகிறது.

தானுந்துவிலிருந்து இறங்கி தூரத்தே நின்று லூவர் அருங் காட்சியகத்தை பார்க்கும்போதே பெரும் பேற்றைப் பெற்ற மகிழ்ச்சி எனக்கு. பண்டைய மன்னர்களின் மாளிகையின் தோற்றத்தில் அலங்கரிக்கப்பட்ட முன்பக்கத் தரையில் கம்பீரமாகக் காட்சியளித்தது.

சலுகையிலான நுழைவுச் சிட்டையைப் பெற்று லூவர் அருங்காட்சி யகத்தைப் பார்வையிடச் சென்றபோது திரளான மக்களைக் காணக்கூடியதாக இருந்தது. காட்சியக முன்றலில் சலவைக்கல் தரையின் மேல் கண்ணாடிகளா லான சிறிய, பெரிய பிரமிட்டுகள் காணப்பட்டன. இவற்றை 'டாவின்சி கோட்' திரைப்படத்தில் பார்த்த ஞாபகம்.

திரளான பார்வையாளர்களை அந்தப் பகுதியில் காணக்கூடியதாக இருந்தது. பிரமாண்டமான கட்டடத்தில் அற்புதமான ஓவிய வரைபுகளுடன் செதுக்கப்பட்டுக் காணப்பட்ட முன்பகுதியில் நுழைந்ததுமே அருங் காட்சியகத்தின் தரத்தை எடைபோடக்கூடியதாக இருந்தது. வளைவான மேற்கூரையில் வரலாறு பலவற்றைக் கூறும் ஓவியங்களை எவ்வாறு வரைந்தார்கள் என்ற சிந்தனையே என்னுள் வியாபித்திருந்தது. பண்டைய மன்னர்கள் உயிரோட்டமுள்ள சிலைகளாகக் காட்சியளித்தார்கள். பிரமாண்டமான இந்த அருங் காட்சியகத்தை முற்றிலும் பார்த்து முடிக்க என் உடல் நிலை இடம் கொடுக்குமா என்ற எண்ணமும் தோன்றாமலில்லை.



பார்வையாளர், காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள பொருட்களை - ஓவியங்களை நுட்பமாகப் பார்த்து வருவதுபோல என்னால் பார்த்துவர முடிய வில்லை. மேலோட்டமான பார்வையையே மேற்கொள்ள முடிந்தது. அதுவும் மூன்றிலொரு பகுதியைக்கூட இல்லை என்றே சொல்லலாம். வாகனத் தரிப்பிடத்திலிருந்து நடந்துவந்த களைப்பு ஏற்கெனவே பாதிப்புக்குள்ளான உடலின் தாக்கத்தால் ஏனங்கு வந்தேனென்ற எண்ணமே தோன்றியது. எதிர் பார்ப்போடு வந்த அளவுக்கு என்னால் இரசிக்க முடியவில்லை.

இஸ்லாமிய நாடுகளினது கலைப் பொக்கிஷங்களே பெருமளவில் இருந்தன. ஒவ்வொரு நாட்டுப் பொக்கிஷங்களுக்கும் பல அறைகளைக் கொண்ட தனித்தனி பிரிவு உள்ளது. உதாரணமாக; எகிப்து நாட்டுக்குரியதை எடுத்துக்கொண்டால் கி.மு. 4000 ஆண்டுக்கு முற்பட்ட தொல்பொருள்கள், நைல்நதி நாகரிகத்தின் எச்சங்கள், மம்மிகள், நகைகள், ஆடைகள், பாவனைக் கருவிகள், இசைக் கருவிகள், விளையாட்டுப் பொருட்களெனப் பலவகைப்


பொக்கிஷங்கள் இருபதுக்கு மேற்பட்ட அறைகளில் வைக்கப்பட்டுள்ளன.

இயன்றவரை பலவற்றைப் பார்த்தேன். உடல்நிலை இடங் கொடுக்காததால் பாதியிலேயே திரும்பவேண்டி நேரிட்டது. அரியதொரு அருங்காட்சியகத்தை முற்றிலும் பார்வையிட முடியாமை வேதனையளித்தபோதும் பார்த்தவை மனநிறைவைத் தந்தது.

தூய கத்தரீன் லபோரே ஆலயம் (St. Catherine Laboure Church)

தனது வாழ்நாள் முழுவதையும் கடவுளின் மேன்மைக்காகவும் மரியன்னையின் பக்தியைப் பரப்புவதற்காகவும் தன்னை அர்ப்பணித்தவரே 'தூய கத்தரீன் லபோரே'. இவரது அழியாத உடல் வைக்கப்பட்டுள்ள ஆலயத்தைத் தரிசிக்கச் சென்றோம். மாற்றமெதுவுமின்றி பழமையிலேயே காணப்பட்ட இந்த ஆலயத்துக்கு மூன்றாவது தடவையாக வந்துள்ளேன்.

ஆலயத்துள்ளே முற்பாதிவரை மக்கள் நிறைந்து இருந்தனர். அழியாத உடல் இருக்கும் கண்ணாடிப் பேழை, 'சற்பிரசாதக் கிறாதி'யிலிருந்து ஐந்து அடிக்கு உள்ளே இருந்தது. 'சற்பிரசாதக் கிறாதி'க்கு முன்னாலேயே மக்கள் மாறிமாறி முழந்தாழ் பணிந்து செபித்து எழுந்தனர். நாமும் அவ்வாறே வேண்டுதல் செய்தோம்.



இயேசுவின் அன்னையான மரியாள் கத்தரீனுக்கு காட்சி கொடுத்த இடம் கண்ணாடிப் பேழையின் வலது பக்கமாகும். அந்த இடத்திலுள்ள பீடத்தில் மரியன்னை காட்சி கொடுத்த மாதிரித் தோற்றத்தை வெளிப்படுத்தும் சுரூபமும், முன்னால் ஒரு கதிரையும் இருந்தன. இந்தக் கதிரை கத்தரின் பயன்படுத்திய கதிரையோ அன்றேல் காட்சியின்போது மரியன்னை அமர்ந்திருந்த மடத்தின் தலைவியின் கதிரையோ தெரியாது. மக்கள் தங்கள் விண்ணப்பங்களை எழுதி அக்கதிரையில் போடுவதைக் காணக்கூடியதாக இருந்தது.

அன்னை மரியாவைக் கண்ட திருக்காட்சியாளரான கத்தரீன் லபோரே 02.05.1806 இல் பிறந்தார். 08.07.1830 அன்று இரவு, சிற்றாலயத்தினுள் இருந்து குழந்தை அழைக்கும் குரல்கேட்டு அங்கு சென்றாள். சிற்றாலயம் பிரகாசமான ஒளியாக இருந்தது. ஒளியின் நடுவே மடத்தின் தலைவியினது கதிரையில் மரியன்னை அமர்ந்திருக்கக்கண்டு நெருங்கிச் சென்று முழந்தாள் பணிந்தாள். லபோரே அன்னையின் மடியில் கையை வைத்திருந்த நிலையில் அவளுடன் உரையாடிய அன்னை மரியா, சிறிது நேரத்தால் காட்சியிலிருந்து மறைந்தார்.

27.11.1830 மரியன்னை மீண்டும் இவருக்குக் காட்சியளித்தார். அப்போது மரியன்னை உலக உருண்டைமேல் நின்றுகொண்டிருந்தார். அவரது கரங்களிலிருந்து ஒளிக் கதிர்கள் வெளிவந்தன. மரியன்னையைச் சுற்றி முட்டை வடிவில் தோன்றிய ஒளி வட்டத்தில் "ஓ பாவமின்றி உற்பவித்த மரியே! உம்மை அண்டிவரும் எங்களுக்காக வேண்டிக் கொள்ளும்" என்ற வார்த்தைகள் காணப்பட்டன.

அன்னை ஒரு அடையாளத்தைக் காண்பித்து, அதே மாதிரி உருவத்தைச் செய்து பலரும் அணியச் செய்யும்படி கூறினார். அதில் மரியன்னையைக் குறிக்கும் 'M' எழுத்தும், அதன்மேலே திருச்சிலுவையும், கீழே இயேசுவின் திரு இருதமும், அதைச்சுற்றிலும் முட்களும், அதன் அருகில் வாள் ஊடுருவிய மரியாளின் இதயமும் இருந்தது.

அருள்தந்தை 'யோவான் மரியா அலடெல்' அடிகளார் கத்தரின் லபோரேயின் கூற்றை ஏற்று, அவள் கூறிய வடிவமைப்பை மாதிரியாகக் கொண்டு, மரியன்னை காட்சிகொடுத்த தோற்றத்தை ஒரு பக்கத்திலும், மேற்குறித்த அடையாளங்களை ஒரு பக்கத்திலுமாக அமையச்செய்து கழுத்தில் அணியும் உருவ வடிவத்தை செய்து கொடுத்தார்.

முதியோரைக் கவனித்து, நோயுற்றோருக்கு ஆறுதலாக இருந்த கத்தரீன் லபோரே, மரியன்னையைக் காட்சியில் கண்ட 46 ஆண்டுகளுக்குப் பிறகு அதாவது 31.12.1876இல் மரணமடைந்ததும் அந்தப் பகுதியிலேயே நல்லடக்கம் செய்யப்பட்டாள்.


கத்தன் லபோரே இறந்த 57வது ஆண்டு (1933) அவளை அடக்கம் செய்த கல்லறை தோண்டப்பட்ட வேளையில் உடல் அழியாத நிலையில் காணப்பட்டது. திருச்சபை மற்றும் அரச அதிகாரிகள் முன்னிலையில் அவளது உடல் கல்லறையிலிருந்து வெளியே எடுக்கப்பட்டு, விரிவாக்கம் செய்யப்பட்ட ஆலயத்தில், கண்ணாடிப் பெட்டகத்தில் வைக்கப்பட்டுள்ளது.

இவரது வெளிப்படுத்தலை திருச்சபை ஆய்வுசெய்து உண்மையென்று ஏற்றுக்கொண்டு, இறந்த அதே ஆண்டில் அருளாளர் பட்டமும், 27.07.1947இல் புனிதர் பட்டமும் வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

பாரிஸ் ஒபேரா (Paris Opera)

உலகிலே பெரிய நாடக, இசை, அரங்காகக் கருதப்படும் 'பாரிஸ் ஒபேரா' அரங்கு 48 மீற்றர் அகலத்தையும், 230 மீற்றர் நீளத்தையும், 60 மீற்றர் உயரத்தையும் உடையது. ஒரே நேரத்தில் 2,000 பார்வையாளர்களை உள்ளடக்கக்கூடியதும் 16 வழிகள் உள்ளதுமான இவ்வரங்கை சார்ள்ஸ் கார்னியே என்பவர் வடிவமைக்கப்பட்டது.

பிரான்ஸில் நடைபெற்ற அரசுக்கெதிரான மக்கள் புரட்சியால் தாமதமான இவ்வரங்கின் கட்டட வேலை நிறைவுபெற்றதும் 15.01.1875 இல் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. இந்நாடக அரங்கு 3வது நெப்போலிய னால்



அவருடைய காலத்தில் கட்டப் பட்ட அலங்கார வேலைப்பாடு கள், கலை நுட்பமும் செறிந்த முக்கியமான கட்டடமாக விளங்குகிறது. 3வது நெப்போ லியன் காலத்தை நினைவு படுத்தும் வகையில் ஒபேரா கட்டடத் தின் வெளிச்சுவர்கள் வடிவமைக்கப்பட்டு பொன் முலாம் பூசப்பட்டு அலங்க ரிக்கப்பட்டுள்ளன.

நாம் பார்வையிடச் சென்றபோது நிகழ்ச்சி எதுவுமில்லாமையால் மூடியிருந்தது. பராமரிப் பாளரைச் சந்தித்து, 'நான் இலங்கையிலிருந்து வந்ததாகவும், இரண்டு நாளில் திரும்பிச் செல்லவிருப்பதால் இந்த பிரபல்யமான அரங்கைப் பார்வையிட முடியாமல் போய்விடும் என்று கவலை யாயிருக்கிறது' எனப் பிரான்சிய மொழியில் கூறினேன். இலங்கையிலிருந்து வந்த எனக்கு பிரான்சிய மொழி பேசத் தெரியுதே என ஆச்சரியமாகப் பார்த்த துடன் கேட்டும் விட்டார். அதற்கான காரணம் எதனையும் நான் கூறவில்லை. தனது மகிழ்ச்சியை தெரியப்படுத்திய அவர், சில நிமிடங்கள் மட்டும் பார்வை யிட உள்ளே அழைத்துச் சென்றார். சில மின்விளக்குகளை ஒளிரவிட்டு ஒத்துழைப்பு வழங்கினார். அங்கு இரண்டு தமிழர்கள் வேலை செய்வதாக பராமரிப்பாளர் கூறினார். அதுதான் எமக்கிந்த சலுகையாக இருக்கவேண்டும்.

அரங்கின் உள்பகுதியில் பல வர்ண ஓவியங்கள் வரையப்பட்டும், மிக நுட்பமாகச் செதுக்கப்பட்ட சிலைகள் வைக்கப்பட்டும் அழகுபடுத்தப்பட்டு இருந்தன. வர்ணச் சலவைக்கற்கள் பதிக்கப்பட்ட இரண்டு பெரிய படிக்கட்டுகள் நாடக அரங்கின் மேல்மாடிக்குச் செல்கின்றன. 450 கலைஞர்கள் ஒரே நேரத்திற் பங்கேற்கக்கூடிய பிரமாண்டமான மேடையாக அமைக்கப் பட்டுள்ளதாக அறியமுடிந்தது.

இக்கட்டட அமைப்பு, அலங்காரங்கள், சிற்ப வேலைப்பாடுகளை நோக்கின் நாடக அரங்காகவும் அருங்காட்சியகமாகவும் பார்வையாளருக்குத் தென்படும் என்பதை மறுப்பதற்கில்லை.

போட்டிகள் மற்றும் கலை நிகழ்வுகள்

2014ஆம் ஆண்டு பிரான்ஸிக்கு என்னை வரவழைத்த சகோதரன் பீலிக்ஸ், இலங்கைத் தமிழர்களுக்கான விளையாட்டு பயிற்சியாளராகவும், நடுவராகவும், விளையாட்டுப் போட்டிகளை ஒழுங்கமைத்து நடத்துன ராகவும் இருப்பதால் அவரது அழைப்பின் பேரில் தமிழர்களின் போட்டிகள் நடைபெற்ற சில இடங் களுக்கு கூடவே சென்றிருந்தேன்.

விளையாட்டுகளில் குறிப்பாக உதைப்பந்தாட்டத்தில் சண்டைகள் ஏற்படுவது வழமைபோலாகிவிட்டது. இந்நிலையை யாழ்ப்பாணத்தில் கண்டுணர்ந்தது மட்டுமல்ல, தமிழ் மக்களுக்கிடையே சுவிஸில் நடந்த இரண்டு உதைப்பந்தாட்ட போட்டிகளிலும் நோர்வேயில் நடந்த ஒரு போட்டியிலும் சந்தித்து வெறுப்புற்ற நிலையில் உதைப்பந்தாட்டத்தைப் பார்ப்பதை தவிர்த்தே வந்துள்ளேன். இருந்தபோதும், நீண்ட இடைவெளியின் பின்னர் தமிழ் மக்கள் ஒன்றித்து விளையாட்டுகளை நடத்துவதைக் காணும் விருப்பினாலும், போட்டிகள் நடைபெறும் விதம், போட்டியாளர் மற்றும் பார்வையாளர் காட்டும் ஆர்வம் என்பவற்றுடன் அறிமுகமானவர்களைச் சந்திக்கவும் - உரையாடவும் சந்தர்ப்பம் ஏற்படும் என்பதற்காகவும் அங்கெல்லாம் செல்ல வேண்டுமென விரும்பினேன். அவ்வாறு செல்லக்கிடைத்த சந்தர்ப்பங்கள் எனக்கு மகிழ்ச்சியாகவும், வியப்பாகவும் இருந்தது.

போட்டி நிகழ்வு – 01 (உதைபந்தாட்டம்)

நான் லூர்து அன்னை திருத்தலத்திற்குச் சென்றிருந்ததால் 19.04.2014 சனிக்கிழமை நடைபெற்ற போட்டிகளைப் பார்வையிட வாய்ப்புக் கிடைக்கவில்லை. மறுநாள் ஞாயிறு அன்று அங்குள்ள தமிழர் கழகங்களுக் கிடையிலான ஏழு பேரைக் கொண்ட உதைப் பந்தாட்டப் போட்டிகள் நடைபெறவிருந்த பரிஸ் - 'ஸ்தான் மைதான'த்திற்குச் சென்றிருந்தேன். அன்றைய தினம், காலை 10.00 மணி முதல் சாயந்தரம் வரை 37 போட்டிகள் நடை பெறவிருந்தன.



வீரர்களும் பார்வையாளர்களுமென மைதானம் நிரம்பி இருந்தது. வெற்றியைத் தமதாக்கிக்கொள்ள வேண்டுமென்ற துடிப்பும் ஆர்வமும் போட்டியாளரிடமும் அவர்களைச் சார்ந்த ஆதரவாளர்களிடமும் காணப்பட்டதை அவதானிக்க முடிந்தது.

குறித்த நேரத்தில் போட்டிகள் ஆரம்பமாகின. அருகருகாக இருந்த மைதானங்களில் ஒரே நேரத்தில் மூன்று போட்டிகள் நடைபெற்றன. போட்டிகள் விறுவிறுப்பாக நடைபெற்றது. ஆதரவாளர்களின் கூச்சல் மைதானத்தையே அதிரவைத்தது.

அன்று இயேசு உயிர்த்த தின விடுமுறை நாள் என்பதால் என்னைச் சந்திக்க சிலர் வருவதாக முன்கூட்டியே அறிவித்திருந்தார்கள். அதனால் அதிக நேரத்தை அங்கு செலவிட முடியவில்லை. இருப்பினும் அங்கு நின்ற இரண்டு மணித்தியாலத்திற்குள் எதிர்பார்த்ததுபோல அறிமுகமானவர்களுடன்

உரையாடவும், நீண்ட காலமாகச் சந்திக்காத பலரைச் சந்தித்து மகிழ்வைப் பகிர்ந்து கொள்ளவும், நிகழ்ச்சியை நடத்துகின்ற அமைப்பு நிர்வாகிகளுடன் கருத்துக்களை பரிமாறிக்கொள்ளவும், எதிர்பார்க்காத விதமாக எழுத்தாளர் என்ற வகையில் எனது நூல்களைப் படித்த பலரது புதிய அறிமுகமும், நூல்கள் பற்றிய சிலரது கருத்துகளை அறிய வாய்ப்பும் கிடைத்தது. அவர்களுடனான உரையாடல் எனக்கு புதிய உந்துதலை தந்தது என்றே சொல்லலாம்.

போட்டி நிகழ்வு - 2 (கரப்பந்தாட்டம்)

குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழகம் ஆண்டுதோறும் நடத்தும் துடுப்பாட்டம் மற்றும் கரப்பந்தாட்டப் போட்டிகள் 21.04.2014 திங்கள் அன்று நடைபெற்றன. காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகிய போட்டிகளில், பரிஸிலும் அதன் புறநகர்ப் பகுதிகளிலும் வசிக்கும் விளையாட்டில் ஆர்வமுள்ள குருநகர் மக்கள், பச்சை - சிவப்பு - நீலம் என நிறங்களை அடையாளமாகக் கொண்டு ஏற்கெனவே மூன்று இல்லங்களாகப் பிரிக்கப்பட்டிருந்ததன் அடிப்படையில் போட்டிகள் நடைபெற்றன.

குருநகரே திரண்டு வந்ததுபோலக் காணப்பட்டது போட்டிகள் நடைபெற்ற 'ஸ்தான் மைதானம்'. உதைப்பந்தாட்டப் போட்டியில் சந்தித்திராத அறிமுகமானவர்கள், நண்பர்கள், உறவினர்களை நீண்ட இடை வெளியின் பின்னர் சந்திக்கக்கூடியதாக இருந்தது. போட்டிகள் தடங்கல் எதுவுமின்றி சிறப்பாக நடைபெற்றமை குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழகத்தின் முதிர்ச்சியைக் காட்டியது. மைதானத்தில் திரண்டிருந்த மக்களின் அக்களிப்பும் ஆரவாரமும் அவர்கள் கொண்டிருந்த ஆவலைப் புடமிட்டது.

உள்ளக விளையாட்டுப் போட்டிகளான டாம், கரம், சதுரங்கப் போட்டிகள் ஏற்கெனவே இல்லங்களுக்கிடையே நடைபெற்று முடிந்த தாகவும், இன்று நடைபெறும் போட்டிகளின் பின்னர் இறுதிப் போட்டியாக மெய்வல்லுனர் போட்டி, எதிர்வரும் 11.05.2014 இல் நடைபெறும் எனவும் தெரியப்படுத்தி, அதிதியாக கலந்துகொள்ளுமாறு அமைப்பாளரால் எனக்கு அழைப்பு விடுக்கப்பட்டபோதும், நான் சுவிஸ் செல்லவிருப்பதால் என்னால் கலந்துகொள்ள முடியாத நிலையை வேதனையுடன் வெளிப்படுத்தினேன்.

தங்களால் நடத்தப்படும் போட்டிகளில் கலந்து கொள்பவர்கள் பிரான்ஸில் நடைபெறும் பொதுப்போட்டிகள், பாடசாலைப் போட்டிகள் பலவற்றில் முன்னணியில் திகழ்ந்துள்ளார்களென அமைப்பினர் பெருமிதத் துடன் தெரிவித்தனர். போட்டிகள் நடைபெறும் நாட்களில் கணிசமானோர் போட்டியாளராகவும் பார்வையாளராகவும் கலந்துகொள்ள வாய்ப்பை ஏற்படுத்தியதுடன் சச்சரவுகளின்றி போட்டிகள் நடத்தி முடித்தமையையிட்டு குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழகத்தைப் பாராட்டவே வேண்டும். போட்டியாளர்களிடம் பாரபட்சம் காட்டாது கடைப்பிடித்த இறுக்கத்தனமே இந்த சிறப்புக்குக் காரணம்.

போட்டி நிகழ்வு – 3 (கலைத்திறன்)

27.04.2014 அன்று பரிஸ் 'து எப்பினே சூர் சென் 'இல் உள்ள மண்டபத்தில் 'குருநகர் சென் ஜேம்ஸ் பழைய மாணவர் சங்க'த்தினரால் வருடந்தோறும், குருநகர் மாணவ மாணவிகளுக்காக நடத்தப்படும் 'கலைத்திறன்' போட்டிகளைப் பார்வையிடச் சென்றிருந்தேன்.

மண்டபத்திற்குள் நுழைந்ததும் என் கண்களையே என்னால் நம்ப முடியவில்லை. போட்டியாளராலும் அவர்களுடன் கூடவே வந்த பெற்றோர் உறவினர்களாலும் மண்டபத்தின் இருக்கைகள் முற்றிலுமாக நிறைந்து காணப்பட்டது. நின்றும் பார்வையிட்டனர் பலர்.

எல்லோருமே குருநகரைச் சேர்ந்தவர்களென்பதால் எனக்கு அறிமுகம் தேவைப்படவில்லை. கடந்த வருடம் ஆனி மாதத்தில் எனக்கு ஏற்பட்ட நோயினால் 'கோமா' நிலையெய்திய செய்தியை அறிந்திருந்ததால், என்னைக் கண்டதும் அங்கு நின்ற பலரும், சுகம் விசாரிப்பதிலேயே குறியாக இருந்தனர்.



அன்றைய தினம் நடைபெற்ற முத்தமிழ் விழாவில் நான் கலந்து கொள்ள வேண்டியிருந்ததால், அங்கிருந்து வர தாமதமாகிவிட்டது. அதனால், நடந்து முடிந்த போட்டிகள் பற்றிய விபரங்களை சென் ஜேம்ஸ் பழைய மாணவர் சங்க நிர்வாகிகளுடனான உரையாடல் மூலமே அறிய முடிந்தது.

வருடந்தோறும் நடத்தப்படும் இப்போட்டிகளுக்கு குருநகரைச் சேந்தவர்கள், தமது உறவினர் எவரேனும் இறந்திருந்தால் அவர்களது ஞாபகார்த்தமாக ஆண்டொன்றுக்கு ஒருவர் நிதி வழங்குவதால் குறித்தவரின் ஞாபகார்த்த போட்டியாக இருக்கின்றது. போட்டிகள் யாவும் 5 வயதிற்குக் குறைந்தவர்கள், 6-8, 9-12, 13-15, 16+ ஆகிய வயதெல்லைகளைக்கொண்ட ஐந்து பிரிவுகளில் நடை பெற்றன.

5-16 வயதினருக்காக, உரிய பிரிவுகளில் பிரான்ஸ் பாடசாலைகளின் பாடத்திட்டத்திற்கமைய ஆங்கிலம், கணித பாடப் போட்டிகள், 16 வயதிற்கு மேற்பட்டவர்களுக்காக சிறுகதை, கவிதைப் போட்டிகள் கடந்த வாரம் நடைபெற்று முடிவுற்றதாகவும், ஏனைய போட்டிகளான ஓவியம், பேச்சு, பரதநாட்டியம், மேற்கத்தைய நடனம், தனிநடிப்பு, பாடல் ஆகியவை அனைத்துப் பிரிவினருக்குமாக அன்று நடைபெறுவதாகவும் அறிந்தேன்.

எல்லாப் பிரிவுகளிலும் தொத்தம் 75 பேர் பங்கு பற்றியுள்ளனர். ஓவியம் மற்றும் ஆங்கிலப் போட்டிகளில் அனைத்துப் போட்டி யாளர்களும்,

அடுத்து மேற்கத்தைய நடனம், பேச்சு, பாடல், தனி நடிப்பு, பரதநாட்டியம் போன்ற தரவரிசையில் போட்டிகளில் பங்குபற்றியுள்ளனர். போட்டிகள் எந்த இடையூறுமின்றி நடைபெற்று முடிந்து, போட்டியில் வெற்றியீட்டியவர் களுக்கான பரிசளிப்பும் இறுதியில் நடை பெற்றது.

நான் அங்கு சென்ற பின்னர் நடந்த போட்டிகள் என்னை வியப்பில் ஆழ்த்தின. குறிப்பாக ஐந்து வயதிற்கு உட்பட்டோரின் நடனமும், தனிநடிப்பும் பிரமிக்கவே செய்தது. ஏற்ற பாத்திரத்திற்கேற்ப உடை, ஒப்பனை கண்டு பலரையும்போல நானும் விழி மூட மறந்தவனாக இரசித்துப் பார்த்தேன். இந்திய தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை நினைவூட்டின.

போட்டியாளர்கள் தாம் வெற்றிபெற வேண்டுமென்ற காரணத் திற்காக தம்மைத் தாமே வளர்த்துக்கொண்டு வந்துள்ளதை உணரக்கூடியதாக இருப்பதாக நான் கூறியபோது, அனைத்துப் போட்டிகளும் இதனை உணர்ந்ததாக நிர்வாகிகள் தெரிவித்தனர்.

அந்தவகையில் இங்கு நடைபெற்ற போட்டிகளும், பங்குபற்றி



யோரின் ஆர்வமும் பிரான்ஸ் நாட்டில் தமிழ் சிறுவர்களின் வளர்ச்சியைப் புடமிட்டுக் காட்டியது. அவர்களின் முழுத் திறமையையும் வெளிப்படுத்த பெற்றோரின் பங்களிப்பு கணிசமாகவே இருந்துள்ளது. முயற்சி, வெளிப்பட்ட திறமை யைப் பாராட்டாமல் இருக் கவே முடியாது.

இப்போட்டிகளுக்காக தமது பிள்ளைகளை ஆயத்தம் செய்தல், போட்டிகளில் கலந்துகொள்ள ஊக்குவித்தல் போன்றவை, பிரான்ஸில் நடைபெறுகின்ற வெவ்வேறு பொதுப் போட்டிகளில் அவர்கள் வெற்றி பெறுவதற்கு வாய்ப்பாக அமைகின்றது என பெற்றோர் தமது கருத்தை முன் வைத்தனர்.

குருநகர் மக்களிடையே ஒற்றுமையை வளர்த்தல், உறவைப் பலப் படுத்துதல், கலாசாரத்தை பாதுகாத்தல், திறமைகளை வெளிக் கொண்டு வருவதை நோக்காகக் கொண்டு செயற்படுவதால் தாயகத்தில் அழிவுறும் நிலையிலுள்ள கலை, கலாசார, பண்பாடு இங்கு வளர்க்கப்படுகின்றது எனவும், கடந்தவாரம் நடைபெற்று முடிந்த போட்டிகளுக்கான பரிசளிப்பும், இன்றைய போட்டிகளில் ஒவ்வொரு பிரிவிலும் அதிகூடிய புள்ளி எடுத்த வர்கள் எதிர்வரும் மார்கழி மாதத்தில் நடைபெறும் 'முற்றத்து வாசல்' கலை நிகழ்ச்சியில் கௌரவிக்கப்பட உள்ளதாகவும் நிர்வாகிகள் தெரிவித்தனர்.

கடந்த வருடங்களில் நடைபெற்ற சென் ஜேம்ஸ் பழைய மாணவர்

சங்கத்தின் 'முற்றத்து வாசல்' கலை நிகழ்வுகளின் வீடியோக் காட்சிகளைப் பார்த்திருக்கின்றேன். ஆடல், பாடல், நடனம், நாடகம் என ஐம்பதுக்கு மேற்பட்ட இளவயதினர் கலந்துகொள்ளும் கலை நிகழ்வு சிறப்பாகவே இருந்துள்ளது. 'அலை ஓசை' என்னும் காலாண்டு சஞ்சிகை 10 வருடங்களுக்கு மேலாக இவர்களால் வெளியிடப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

முத்தமிழ் கலை மாலை

27.04.2014 அன்று பரிஸ் 'செவ்ரோன் சால்துபெத்' மண்டபத்தில், 'பாஷையூர் புனித அந்தோனியார் முத்தமிழ் கலாமன்றம்' நடத்திய 'முத்தமிழ் கலை மாலை' நிகழ்வில், மங்கல விளக்கேற்றுவதற்கும் சிற்றுரை ஆற்றுவதற்கும் அழைக்கப்பட்டிருந்தேன்.

மாலை 3.00 மணிக்கு ஆரம்பமாகுமென ஏற்பாட்டாளரால் அறிவிக்கப்பட்டிருந்ததால், 'ஜிம்னாஸ் லு மார்சோ வில்பிறே' உள்ளக விளையாட்டு மண்டபத்தில் நடைபெற்ற பற்மின்ரன் போட்டிகளை இரண்டு மணித்தியாலம்வரை பார்வையிட்ட பின்னர், 2.40 மணிக்கு மண்டபத்திற்கு வந்துவிட்டேன்.

3.30 மணிக்கு மங்கல தீபம் ஏற்றுதலுடன் நிகழ்ச்சி ஆரம்பமானது. தீபம் ஏற்றுதலில் நானும் பங்குகொண்டேன். யாழ்ப்பாணத்தில் சில இடங்களில் நடைபெறும் விழாக்களுக்கு வருகைதரும் பார்வையாளர் போலவே இங்கும் பார்வையாளர் மிகக் குறைவாகவே இருந்தனர். இங்கு இவ்வாறு நிகழ்வதற்கு, யாழ்ப்பாணத்தில் வசிப்பவர்கள் போலல்லாத வேலை நேரங்களையும், பாடசாலைகளின் கோடை விடுமுறை நாட்களிலேயே பலதரப்பட்ட நிகழ்வுகள் நடை பெறுவதையும் காரணமாகச் சொல்லலாம்.

அன்றையதினம்; நடத்தப்பட்ட 16 கழகங்களுக்கு இடையிலான உதைப்பந்தாட்டப் போட்டிகள் (இப்போட்டியில் இரு குழுக்களிடையான கைகலப்பினால் முடிவுறாமல் நிறுத்தப்பட்டதுடன் ஒரு வருடத்திற்கு மைதானத்தைப் பயன்படுத்தத் தடையும் விதிக்கப்பட்டது. இங்கும் இப்பணி (பனி) தொடர்கிறது),

காலைமுதல் நடத்தப்பட்ட 160 'பற்மின்ரன்' போட்டிகள்,

பி.ப.2.00 மணிக்கு 'குருநகர் சென் ஜேம்ஸ் பழைய மாணவர் சங்க'த்தினரால் நடத்தப்பட்ட 'கலைத்திறன்' போட்டிகள்,

'சலங்கை' என்ற பெயரில் பிரான்ஸிலுள்ள நடன ஆசிரியர்களால் பயிற்றுவிக்கப்பட்ட 28 குழுக்களின் நடனங்கள் போன்றவை நடை பெற்றமையும் முத்தமிழ் கலை மாலை நிகழ்வுக்குப் பார்வையாளரின் வரவு குறைவுக்குக் காரணமாக இருக்கலாம் என ஊகிக்க முடிந்தது.

'கடல் கடந்த தேசத்திலும், தேசத்து கலை வளர்ப்போம்' என்ற மகுடத்தில் பாஷையூர் புனித அந்தோனியார் முத்தமிழ் கலாமன்றம் நடத்திய முத்தமிழ் கலை மாலை நிகழ்ச்சியில் முத்தான கூத்துவடிவப் பாடல்களுடன்

யாழ்ப்பாணம் - தம்பாட்டி (காத்தவராயன்), மெலிஞ்சி முனை (மனமாற்றம்), குருநகர் (கூத்துக் கோலங்கள்), பாஷையூர் (வீரபாண்டிய கட்டப்பொம்மன்), கரவையூர் (தாயைக் காத்த தனையன்), மன்னார் - முருங்கன் (வீரனை வென்ற தீரன்) ஆகிய ஊர்களைச் சார்ந்த குழுவினரால் தென்மோடி, சிந்துநடை, மன்னார்ப் பாங்கு கூத்துக்கள் மேடையேற்றப்பட்டன.

நாட்டுக்கூத்து அழிவுற்றுச் செல்வதாக மேடையில் உரையாற்றிய பலரும் (நானும் உட்பட) குறிப்பிட்டிருந்தனர். அவ்வாறு இல்லை என்பது போல இருந்தது கலைமாலை நிகழ்வு. நாட்டுக்கூத்து இலங்கையில் அழிவுறு நிலைக்குச் சென்றுகொண்டிருப்பதாகக் கருதப்பட்டாலும் அந்நிய நாட்டில் அதுவும் இளைய தலைமுறையினரால் சிறப்பாக மேடையேற்றப்பட்டமை வரவேற்கத்தக்கது. அதற்காக பாஷையூர் புனித அந்தோனியார் முத்தமிழ் கலாமன்றத்தைப் பாராட்ட வேண்டும்.



நான் உரையாற்றி முடித்து இறங்கியதும் என்னை இனங்கண்டு கொண்ட இருவர் என்னை நெருங்கி, 2013ஆம் ஆண்டு நான்கு விருதுகளைப் பெற்றுக் கொண்ட எனது 'உப்புக்காற்று' நாவல் மற்றும் அடுத்து வெளிவந்த 'வேப்பமரம்' நாவல் பற்றிய, சிறப்புகளை எடுத்துக்கூறி பாராட்டி ஊக்கப்படுத்தினார்கள். அவர்களை நான் முன்னர் அறிந்ததில்லை.

நான் இலங்கையிலிருந்து புறப்படும் முன்னரும் பிரான்சிலுள்ள ஒரு வாசகன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு வேப்பமரம் நாவலின் உள்ளடக்கம் பற்றி 15 நிமிடங்கள் வரை உரையாடிப் பாராட்டியதுடன் பிரான்ஸிற்கு வந்த பின்னரும் தொலைபேசியில் தொடர்புகொண்டு விடுமுறையில் 'ஜேர்மனி' சென்றிருப்பதால் சந்திக்க முடியவில்லையென்ற வேதனையை வெளிப்படுத்தினார். என்னுடைய நாவல், ஐரோப்பா வாழ் தமிழ் மக்களும் வாசிக்கும் களத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதில் மகிழ்ச்சி. ஒரு எழுத்தாளனுக்கு இதை விட வேறென்ன தேவை?


இந்நிகழ்வில் 'கலைமாலை' நூல் வெளியீடு செய்யப்பட்டதுடன் நாட்டுக் கூத்தில் பங்குகொண்ட கலைஞர்கள் கௌரவிக்கப்பட்டு சான்றிதழ் வழங்கப்பட்டது. ஏற்பாட்டாளர்கள், கூத்துக்கள் மேடையேற்றத்துடன் மட்டும் நின்றுவிடாமல், ஒவ்வொரு கூத்துக்கும் இடையில் பல சிறுவர்கள் பங்குகொள்ளத்தக்க நடனங்களைச் சேர்த்திருந்தால் பார்வையாளர் வரவை பல மடங்காக அதிகரித்திருக்கலாம்.

சுவிற்சர்லாந்தில் வசித்தபோது என்னால் ஏற்பாடு செய்யப்பட்ட கலைவிழாக்களில் நான் கையாண்ட உத்தி இது. இதனை சம்பந்தப்பட்ட வர்களுக்கு தெரியப்படுத்தி தொடரும் விழாக்களில் முயற்சிக்குமாறு கூறி விடைபெற்றேன்.

பரிஸ் தவிர்ந்த புறநகர்கள்

தூய லூர்து அன்னை திருத்தலம்

உலகிலே பிரசித்தி பெற்ற திருத்தலங்களில் ஒன்றான 'தூய லூர்து அன்னை' திருத்தலத்திற்குச் சென்றிருந்தேன். இது பரிஸ் நகரிலிருந்து 800 கி.மீ. தொலைவிலுள்ள 'லூர்து' நகரில் இருக்கிறது. இத்திருத்தலத்தை 2014ஆம் ஆண்டுடன் ஐந்து தடவைகள் தரிசிக்கச் சென்றுள்ளேன்.



பிரான்ஸ் நாட்டின் தென் மேற்குப் பகுதியில் ஸ்பெயின் எல்லைக்கு அண்மையாக உள்ள இத்திருத்தலம், 'லூர்து அன்னை', 'பெர்ணடெத்' என்ற சிறுமிக்கு காட்சிகொடுத்த இடத்தை மையமாகக் கொண்டு அமைந்துள்ளது. அங்கு செல்லும் பயணிகள் தங்குவதற்கு ஹொட்டல்கள், விடுதிகள், சமைத்துச் சாப்பிடக்கூடிய வசதியைக்கொண்ட தனித்தனி வீடுகள், உணவு விடுதிகள், விற்பனை நிலையங்கள் போன்றவை தாராளமாக உள்ளன.


07.01.1844 பிறந்தவள் 'பெர்ணடெத் சொறுபி'. இவள், தனது 14வது வயதில் 11.02.1858 அன்று சகோதரி 'துவானெத்', நண்பி 'யோன் அபாதி' ஆகியோருடன் விறகு வெட்டுவதற்காக லூர்து நகரில் 'காவ் த போ அருவி' யைக் கடந்து அருகிலிருந்த 'மசபியெல்' என்ற கற்பாறை பகுதிக்குச் சென்றிருந்தாள். அச் சுற்றாடலில் வெட்டிய விறகை எடுத்துக் கொண்டு திரும்பிய இவர்களில், சகோதரி யும் நண்பியும் விரைவாக அருவியைக் கடந்து விட்டனர்.

'பெர்ணடெத்' ஆஸ்மா நோயால் அடிக்கடி துன்புறுவதால் குளிரைப் போக்க காலுறைகளை அணிந்து கொள்பவள். ஆற்றைக் கடப்பதற்காக காலுறைகளை கழற்றும் நேரம் திடீரென பாறையின் பக்கமாக பெருங் காற்றின் இரைச்சல் கேட்டிட திரும்பிப் பார்த்தாள். மலைப் பாறையிலுள்ள 'மசபியேல்' குகையில் ஒரு பெண் பெர்ணடெத் முன்னிலையில் தோன்றி

னாள். அப்பெண்ணை இதுவரை அவள் கண்டதில்லை. இக்காட்சியைப் பற்றி பெர்ணடெத் பின்வருமாறு கூறியுள்ளாள்:

"குகையின் உள்ளே பொன் நிறத்திலான மேக முட்டம் வெளிவந்தது. அதனைத் தொடர்ந்து அழகான, இளமையான ஒரு பெண் குகையின் உள்ளிருந்து வெளியே வந்து ரோஜா புதருக்கு மேல் நின்றுகொண்டிருந்தார். அவருக்கு 16 அல்லது 17 வயதாக இருக்கலாம். அவர் வெள்ளை நிற ஆடை அணிந்திருந்தார். இடுப்பில் நீலநிற இடைக் கச்சையுடன் இரு பாதங்களிலும் மஞ்சள் நிற ரோஜாப் பூக்களும், அதே நிறத்தில் செபமாலை மணிகள் கோர்க்கப்பட்ட கம்பிகளும் வெள்ளை நிறத்தில் செபமாலை மணிகளும் வைத்திருந்தாள்..."

இதன் தொடராக 16.07.1858 வரை அதே தோற்றத்தில் அதே இடத்தில் 18 தடவைகள் பெர்ணடெத்திற்கு காட்சியளித்துள்ளாள் அப்பெண். இச் சந்திப்புக்களில் இருவரும் உரையாடியுள்ளனர். உலக மக்களுக்கு ஏதுவான அரிய வார்த்தைகளை அவ்வப்போது கூறிய அப்பெண் 16வது தோன்றலில்



'நானே அமல உற்பவம்' எனத் தன்பெயரை வெளிப்படுத்தி 'தானே அன்னை மரியா' என் பதை தெரியப்படுத்தியுள் ளாள். நிலத்திலிருந்து மேலெ ழுந்து வற்றாது சுரக்கும் நீரை அதிசயமாகத் தோன்றச்செய்து, தான் அளித்த காட்சியின் அடையாள மாக்கினார்.

இ வை ய னை த் தும் மக்களைச் சென்றடைய, மக்கள் திரளாக 'கெபி'யைத் தரிசித்து நீரை அருந்தத் தொடங்கினர். இதனால் பலரும் பல நலன்களைப் பெற்றனர் என அறியப்படு கிறது. 'லூர்து நகரி'ல் அன்னை காட்சி கொடுத்தமையால் நகரின் பெயரால் 'லூர்து அன்னை' என்றும் மசபியேல் குகையை 'லூர்து கெபி' என்றும் அழைத்தனர்.

இந்தக் காட்சிகளை ஏற்றுக்கொள்ளத் தயங்கிய அரச அதிகாரிகளால், பொதுமக்கள் 'லூர்து கெபி'யைத் தரிசிப்பதற்கு தடை செய்யப்பட்டது. ஆயினும், அக் 'கெபி'யில் நடைபெற்றுக்கொண்டிருந்த குணமாக்கல் மற்றும் புதுமைகளால் உண்மையைக் கண்டறியும் குழு ஆயரால் நியமிக்கப்பட்டு அவர்கள் பணி ஆரம்பமானது.

மாமன்னன் 'மூன்றாம் நெப்போலியனி'ன் மகன் மருத்துவ சிகிச்சை பலனளிக்காத நிலையில், கடும் காய்ச்சலினால் துன்புற்ற வேளையில் 'லூர்து நீரூற்றை'க் குடித்ததனால் அற்புதமாக குணமடைந்தான். இதனால் பொதுமக்கள் தரிசிக்கக்கூடிய இடமாக 'கெபி' இருக்கும்படி உள்ளூர்

அதிகாரிகளுக்குக் கட்டளையிட, 04.12.1858இல் மக்கள் தரிசிக்க அனுமதிக்கப் பட்டனர். விசாரணைக் குழுவின் முடிவிற்கமைய 18.01.1862இல் 'ஆயர் லோறன்ஸ்' அவர்கள் பரிசுத்த கன்னி மரியா பெர்ணடெத்திற்கு உண்மை யாகவே காட்சியளித்தார்கள் எனப் பகிரங்க அறிக்கையிட்டார்.

'லூர்து கெபி' என அழைக்கப்படும் குகையின் உள்ளே வற்றாது சுரக்கும் அந்நீரூற்று காணப்படுகின்றது. பக்தர்கள் நீரைப் பெற்றுக்கொள்ளும் வசதிக்காகவும் அவ்விடத்தை தூய்மையாக வைத்திருப்பதற்காகவும் குளாய் மூலம் அந்நீர் வெளியேற்றப்பட்டு வழங்கப்படுகிறது. நோய் தீர்க்கும் மருந்தாக கருதி அந்நீரை மக்கள் தவறாது அருந்தி வருகின்றனர்.

லூர்து கெபியில், அதாவது அன்னை காட்சிகொடுத்த மசபியெல் குகையில் காட்சியளித்த வடிவில் லூர்து அன்னையின் உருவம் வைக்கப் பட்டுள்ளது. தினந்தினம் பிரான்ஸின் ஏனைய பகுதிகள் மற்றும் பல்வேறு நாடுகளிலிருந்தும் வருகைதரும் ஆயிரக்கணக்கானோர் தரித்துச் செல்வதால் ஒரு நிமிடம்கூட இடைவெளியற்று நிகழும் பக்திச் செயற்பாடுகளை அங்கு காணக்கூடியதாக இருந்தது. ஆண்டுதோறும் மாசி 11ஆம் நாள் லூர்து அன்னையின் திருவிழா வெகு சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. அத்துடன் உலகின் பல இடங் களிலும் மரியன்னை காட்சி கொடுத்த தினங்கள் மற்றும் மரியன்னையை சார்ந்த முக்கிய தினங்களில் திருவிழாக்கள் கொண்டாடப்படுகின்றன. ஆவணி 15ஆம் திகதிய திருநாளுக்கு பிரான்ஸ் மற்றும் ஐரோப்பிய நாடுகளிலிருந்து தமிழ் மக்கள் திரளாகச் செல்வார்கள்.



பரவசமூட்டும் நிலையில் அமைந்துள்ள கெபியில் லூர்து அன்னையை வழிபட்டுவிட்டு அற்புத நீரை கைகளில் ஏந்தி அருந்திக் கொண்டோம். கெபி உள்ள கற்பாறையின் மேலாகவும் கெபிக்கு வலது பக்கமாகவும் மூன்று ஆலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மூன்றும் நிலமட்டத்திலிருந்து பாறையின் அமைவுக்கேற்ப மேல்நோக்கி படிப்படியாக அமைக்கப்பட்டுள்ளன. இரண்டாயிரம் மக்கள்வரை ஒன்றாய் வழிபடக்கூடிய ஆலயம் கெபியிலிருந்து நூறு மீற்றர் தொலைவில் இருக்கின்றது.

குகையின் இடதுபக்கம் மாதா தடாகம் தொட்டியாக அமைக்கப் பட்டுள்ளது. ஒரு பக்கத்தால் தொட்டிக்குள் விழும் நீர் மறுபக்கத்தால் வெளியேறிக் கொண்டிருப்பதால் எப்போதும் தூய்மையாக இருக்கும். தண்ணீரின் குளிர்த்தன்மை காரணமாக அதிகநேரம் நிற்கமுடியாது. அதனால் மக்களை ஒவ்வொருதராகத் தோய்த்தெடுப்பதற்கென பணியாளர் நிற்பர்.

நீரில் தோய்வதற்காக காலை மாலை குறித்த நேரங்களில் நீண்ட வரிசையில் மக்கள் நிற்பதைக் காணலாம். ஆண்கள் பெண்களுக்கென வெவ்வேறு தடாகம் அமைக்கப்பட்டுள்ளது.

குகையிலிருந்து 300 மீற்றர் தூரத்திலுள்ள பெர்ணடெத் வசித்த வீடு உள்ளது. அதனைப் பார்வையிடச் சென்றோம். வீடுபோன்று காணப்படும் சிறிய அறையைக்கொண்ட அது, 1830 இற்கு முன்னர் சிறைக்கூடமாகப் பயன் படுத்தப்பட்டது. வாடகை வீட்டிலிருந்து துரத்தப்பட்ட பெர்ணடெத்தின் குடும்பம், வறுமை காரணமாக 'மனிதர் இருக்கமுடியாத இருள் நிறைந்த அறை' என வர்ணிக்கப்படும் கைவிடப்பட்ட சிறைக்கூடத்தை துப்பரவு செய்து 1857இல் குடிபுகுந்து கொண்டனர்.

பெர்ணடெத் பிறந்து வளர்ந்த வாடகை வீடான 'மூலான் பொலி' (Moulan Boly)யை ஞாபகச் சின்னமாகப் பராமரிக்கிறார்கள். பலகையால் அமைந்த தளத்தையுடைய மாடி வீடாக இருந்தது. வீட்டினுள்ளே அவர்கள் பயன்படுத்திய சமையலறைப் பொருட்கள், மூன்று சிறிய கட்டில்களுடன் வேறு சில பொருட்களும் காணப்படுகின்றன. மாடிக்குச் செல்லும் பலகையாலமைந்த படிகளில் அவதானமாக ஏறாது விட்டால் தவறிவிழ நேரிடும். ஒருவர் பின் ஒருவராகவே சென்று பார்வையிட முடியும் அவ்வளவு நெருக்கமான சிறிய அறைகளவை. அவை, மேலும் கீழுமாக உள்ளன. ஒரு அறை படுக்கை அறையாகவும் அதவே சமையலறையாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளதைக் காணமுடிந்தது.



ஆலயத்தின் வலது பக்கமாகவுள்ள மலையில், இயற்கை எழிலுடன் அமைந்துள்ள திருச்சிலுவைப் பாதைக்குச் சென்றோம். மலையைச் சுற்றி உச்சிவரை பாதை அமைத்து அப்பாதை நெடுகிலும் இடை வெளிவிட்டு 14 சிலுவைப் பாதை நிலைகள் உயரமாக அமைக்கப்பட்டுள்ளன. பாதை சமசீரற்று பரல் கற்களாக இருந்தது. பனிப்பொழிவு நாட்களைக் கருத்தில் கொண்டே பரல் கற்கள் பரவப்பட்டுள்ளன.

சிலுவைப்பாதை நிலைகளை விளக்கும் சிலைகள் யாவும் சாதாரண மனித அளவைவிடச் சற்றுப் பெரிதாகவும், அக்காலச் கலாசார உடைகளுடன் தத்துருவமான காட்சி வெளிப்பாடாகவும் காணப்படுகின்றன. ஒவ்வொரு நிலைத் தளங்களிலும் இயேசுவுடன் காட்சியைச் சித்தரிக்கும் வேறு சிலை களும் வைக்கப்பட்டுள்ளன. தங்கமுலாம் பூசப்பட்டது போன்ற வர்ணம் தீட்டப்பட்டுள்ளது.

சிலுவைப்பாதையின் முதலாவது நிலையை (இயேசு கைது செய்யப் படுதல்) புலப்படுத்தும் உயரமான தளம் வரை முப்பதுக்கும் மேற்பட்ட படிகள் அமைக்கப்பட்டுள்ளன. திருச்சிலுவைப் பாதையில் இணைந்து கொள்ளும் பக்தர்கள் முதலாம் நிலையிலுள்ள படிகளில் முளங்காலால் ஏறி தளத்தை அடைவர். இது தமது பரித்தியாகமாக மேற்கொள்வர். தொடர்ந்து ஒவ்வொரு நிலையையும் தரிசித்து ஈற்றில் உச்சியிலுள்ள 12வது நிலைத் தளத்திற்குச் செல்வர்.

அத்தளம் இயேசு இரண்டு கள்வரின் நடுவில் உயரமான சிலுவையில் அறையப்பட்டிருப்பதும், சூழ பலரும் நிற்பதுமான நிலையது. அற்புதமாகத் துன்பநிலையைப் புலப்படுத்தும் காட்சி. மனதுருக வழிபட்டுவிட்டு அடுத்த நிலைக்குச் சென்றோம். தொடரும் இரண்டு நிலைகளும் உச்சியிலிருந்து இறங்கிச் செல்லும் பாதையில் அமைக்கப்பட்டுள்ளன. நடப்பதற்கு கடினமாக இருந்தபோதும் நடந்து முடித்த பின்னர் ஆத்ம திருப்தி.

ஆலய வளாகத்திலுள்ள அருங்காட்சியகத்தைப் பார்வையிட்டோம். நீண்ட வரலாற்றுத் தடயங்களை - தகவல்களைக் கொண்டதாக அது காணப் பட்டது. மருத்துவச் சான்றிதழ்கள், நன்றிகூறல்கள், அன்பளிப்புப் பொருட்க ளென அருங்காட்சியகம் நிரம்பிக் காணப்பட்டது. பயனடைந்தவர்களால் எழுதப்பட்ட சுருக்கக் குறிப்புகள் அடங்கிய பதிவேடுகள் பல நீண்டகால தகவல்களை உள்ளடக்கியிருந்தன. மேல் தளத்திலுள்ள ஆலயத்தின் நுழை வாசலிலும் நன்றிதெரிவித்து சலவைக் கற்களில் எழுதப்பட்ட வரிகள் சுவரில் பதிக்கப்பட்டு ஏராளமாகக் காணப்படுகின்றன.

வைத்தியசாலை, நோயாளர் பராமரிப்பு நிலையம் போன்றவையும் உள்ளன. நோயாளருக்கான விசேட வழிபாடு நடைபெறும்போது அனைத்து நோயாளரையும் சக்கர நாற்காலியில் இருத்தி தாதிமார் அழைத்து வந்து செபம் செய்வார்கள்.

கால்வாய் சுரங்கம் (Channel Tunnel)

பிரான்ஸையும் ஐக்கிய இராச்சியத்தையும் இணைக்கும் 50.5 கி.மீ. நீளத்தையுடைய கடலடிச் சுரங்க தொடருந்துப் போக்குவரத்துப் பாதையே 'கால்வாய் சுரங்கமா'கும். இது ஆங்கிலக் கால்வாய் - 'டோவர் நீரிணை'யில் இங்கிலாந்தின் 'கென்ட் கவுண்டின் போல்ஸ்டோன்' என்ற நகரில் 'டோவர்' (Dover) துறைமுகத்திலிருந்து வட பிரான்ஸின் 'கோக்கெலெஸ்' என்ற நகரில் 'கலை' (Calais) துறைமுகத்தை அடைகிறது. இச்சுரங்கவழி, ஐப்பான் 'செய்க்கான்' சுரங்கத்திற்கு அடுத்தபடியாக உலகின் இரண்டாவது நீளமான சுரங்க வழியாகும். இதனை 'யூரோ சுரங்கம்' எனவும் அழைப்பர்.

06.05.1994 இல் மின்னிணைப்புடன் கூடியதாக திறக்கப்பட்ட இச் சுரங்கப்பாதை இரண்டு ஒருவழிச் சுரங்கங்களாகும். இவற்றால் 'யூரோ ஸ்டார்' என்னும் அதிவேக தொடருந்து சேவையே நடைபெறுகின்றது.


முன்னர் இங்கிலாந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகளுக்கும் இடையிலான பிரதான கடற்போக்குவரத்தாக இரண்டு கப்பல் போக்குவரத்து சேவைகள் இடம் பெற்றன.

இக்கப்பல்களில் ஒன்று, இங்கிலாந்து - டோவர் துறைமுகத்திலிருந்து பிரான்ஸ் - கலை துறைமுகத்திற்கும், இரண்டாவது, இங்கிலாந்து - டோவர் துறைமுகத்திலிருந்து பிரான்ஸ் - 'டுன்கிறிக்கு' *(Dunkerque)* துறைமுகத் துக்கும் இடையே நடைபெற்றது. பிரமாண்டமான அக் கப்பல்களில் பயணிகள் தமது வாகனங்களை மற்றும் பேருந்துகளை கூடவே ஏற்றிச்செல்ல முடியும். வாகனங்களை விட்டிறங்கி கப்பல் தளங்களிலும் பயணிகள் அமர முடியும். வரியற்ற விற்பனை நிலையங்கள் உணவுவிடுதிகள் போன்ற பல வசதிகள் கப்பல்களில் உண்டு. தற்போதும் இச்சேவைகள் தொடர்ந்து நடை பெறுகின்றன.


கடலடி நிலத்துக்குக்கீழ் சற்று இடைவெளிவிட்டு அமைக்கப்பட் டுள்ள இரண்டு சுரங்கப் பாதைகளையும் இடையிடையே சிறிய சுரங்கங்கள் குறுக்காக இணைக்கின்றன. இச்சிறு சுரங்கங்கள் ஒவ்வொன்றிலும் பாதுகாப் பான மண்டபம் உள்ளது. விபத்து மற்றும் ஆபத்தான சந்தர்ப்பங்களில், பயணி களின் பாதுகாப்புக் கருதி மின்சாரம், தண்ணீர், மலகூடம், காற்றோட்டம், தீ உட்புகாத வசதிகளுடன் இவை அமைக்கப்பட் டுள்ளன.

சுரங்கப் பாதையின் ஊடாகப் பயணிக்கும் 'ஈரோ ஸ்ரார்' அதிவேக போக்குவரத்து தொடருந்து மூன்று வகைப்பட்டது. ஒன்று, பிரான்ஸின் பரிஸ் நகரிலிருந்து இங்கிலாந்தின் லண்டன் நகர் வரையிலான அதிவேக சேவை. இது பயணிகளையும் அவர்களது பொதிகளையும் ஏற்றியவாறு தினமும் சில தடவைகள் சேவையில் ஈடுபடுகிறது.

மற்றையது, பிரான்ஸின் கலை துறைமுகத்திலிருந்து சாதாரண வாகனங்களுடன் பயணிகளையும் ஏற்றியவாறு, இங்கிலாந்தின் டோவர் துறைமுகம் வரையிலான சேவையில் ஈடுபடுகின்றது. இத்தொடருந்து இரண்டு தட்டுகளையுடையது. ஒரு தடவையில் இரு தட்டுகளிலும் இருநூறுக்கு மேற்பட்ட சாதாரண வாகனங்கள், பயணிகளுடன் பயணத்தை மேற்



கொள்ளாம். அதிவேக சேவையான இது, ஒவ்வொரு 20 நிமிட வித்தியாசத்தில் இரு துறைமுகங்களிலிருந்தும் புறப்படும்.



மூன்றாவது, கலை - டோவர் துறை முகங்களுக்கிடையே பயணிகள் பேருந்துகள் மற்றும் பாரவூர்திகளை ஏற்றியவாறு சேவையில் ஈடுபடுகின்றது. 2ஆம் 3ஆம் தொடருந்துகளில் பயணிகள் வாகனத்திலிருந்து இறங்கி அருகில் நிற்கவும் சிற்றுண்டி அருந்துவதற்கான வசதியும் உண்டு. சுரங்கப் பாதையிலான தொடருந்துகளின் பயண நேரம் 20 நிமிடங்களாகும்.

கால்வாய் சுரங்கம் திறக்கப்பட்ட நாள் முதலாக அப்பாதையால் பயணிக்கவேண்டுமென்ற ஆவல் என்னுள்ளத்தில். அதற்கான சந்தர்ப்பம் 1995இல் கிடைத்தது. நான் இலங்கை கடவுச்சீட்டை பயன்படுத்துவதனால் ஐக்கிய இராச்சியம் மற்றும் பிரான்ஸ் நாட்டுக்கான விசா பெற்றுக்கொள்ள வேண்டும். இரண்டு நாடுகளினதும் விசாவைப் பெற்றுக்கொண்டு ரி.ஜீ.வி. அதிவிரைவு தொடருந்தில் பிரான்ஸ்/ பரிஸுக்குச் சென்று அங்கு ஒருவாரம் தங்கிவிட்டு லண்டன் செல்வதற்காக சொகுசு பேருந்தில் பயணித்தை மேற்கொண்டேன்..

நான்கு மணித்தியால பிரயாணத்தின் பின்னர் கலை துறைமுகத்தை அடைந்தது பேருந்து. நுழைவிடத்தில் விசா பரிசோதனை முடிவுற்றதும் பேருந்தில் ஏறி பரந்த வெளியில் அமைக்கப்பட்டுள்ள பாதைத் தடங்களில் சென்று, நீண்ட வரிசையில் தொடர்ந்து நேரடியாக ஈரோ ஸ்ரார் அதிவேக தொடருந்தில் ஏறிக்கொண்டது பேருந்து.

விரைவாகவே தொடருந்தில் வாகனங்கள் நிரம்பின. குறித்த நேரத்தில் புறப்பட்டு 20 நிமிடப் பிரயாணத்தின் பின்னர் டோவர் துறை முகத்தை அடைந்தது. அங்கிருந்து வெளியேறி முன்று மணித்தியாலங்களின் பின்னர் லண்டன் பேருந்து நிலையத்தை அடைந்தது பேருந்து. சுரங்கப் பயணத்தின்போது இடையிடையே தெரிந்த குறைந்த வெளிச்சமுள்ள மின்னொளியைத்தவிர வேறெதுவும் தெரியவில்லை. ஆனாலும், முதல் தடவையாக கடலடி நிலத்தின் கீழ் பயணிக்கின்றோம் என்ற உணர்வும் அதனால் உண்டான மகிழ்வும் மறக்கமுடியாதவை.

2014ஆம் ஆண்டு லண்டனிலிருந்து பரிஸுக்கு செல்கையில், டோவர் துறையிலிருந்து தானுந்துவுடன் ஈரோ ஸ்ரார் தொடருந்தில் ஏறி பயணத்தைத் தொடர்ந்து, பிரான்ஸ் - கலை துறையிலிருந்து பரிஸுக்குச் சென்றோம். பரிஸ்

பயணத்தின்போது பரந்து காணப்பட்ட பசுந்தரையும், இடையிடையே தென்பட்ட சிற்றூர்களும், சிற்றூர்களுக்கு மின்சாரம் வழங்குவதற்கென இயங்கும் பலநூறு 'மின் ஆலை'களும் (*Wind Mill*), ஏக்கர் கணக்கில் காணப்பட்ட கொழுப்பற்ற சமையல் எண்ணெய் தயாரிக்கும் மஞ்சள் நிற 'றப்சீற் பூ'க்களும் (*Rapeseed Flower*) மனதை ஈர்க்கவே செய்தன.

நெடுஞ்சாலைகளின் அழகும், அவை அமைக்கப்பட்டுள்ள தன்மையும் ஐரோப்பிய நாடுகளில் ஒத்தனவாக இருந்தாலும், நடைமுறையில் மாறுபட்ட தன்மைகள் உள்ளன. பிரான்ஸில் ஒருசில நெடுஞ்சாலைகளைத் தவிர ஏனையவற்றிற்கு குறித்த இடங்களைக் கடக்கும்போது பணம் செலுத்தியே செல்லவேண்டும். பரிஸ் சென்றடைவதற்குள் நான்கு தடவைகள் பணம் செலுத்தியுள்ளோம்.

தூய சார்ட்டிஸ் மாதா திருத்தலம்

பிரான்ஸ் நாட்டின் பழைய கட்டுமான வேலைப்பாடுகளின் சிறப்பிற்கு முக்கிய நினைவுச் சின்னமாக விளங்குவதும், பரிஸிலிருந்து தென்மேற்காக 96 கி.மீ. தொலைவிலுள்ளதுமான 'சார்ட்டிஸ்' (பிரான்ஸ் மொழி உச்சரிப்பில் 'சாட்') நகரிலுள்ள, 'சார்ட்டிஸ் மாதா திருத்தல'த்தை தரிசிக்க இரண்டு தடவைகள் சென்று வந்துள்ளேன்.

இதன் அடியொற்றியதாகவே யாழ்ப்பாணம் தீவுப்பகுதியில் அமைந்துள்ள 'சாட்டி' என்னும் ஊரின் பெயரும், 'சாட்டி மாதா' அல்லது சாட்டி 'தூய சிந்தாத்திரை மாதா' ஆலயமும் உருவாகியுள்ளன என எண்ணத் தோன்றியது.

குருவானவர் 'புல்பேர்ட்' (*Fulbert*) என்பவரின் கோரிக்கைக்கிணங்க 1020ஆம் ஆண்டில் 'சார்ட்டிஸ் மாதா ஆலய'த்துக்கான கட்டுமான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு சில ஆண்டுகளில் கட்டி முடிக்கப்பட்டது. 1030 மற்றும் 1134 ஆண்டுகளில் பெரும் தீ விபத்துக்களைச் சந்தித்தது இந்த ஆலயம். இறுதியாக 1194ஆம் ஆண்டில் ஏற்பட்ட தீ விபத்து ஆலயத்தை முற்றாக அழித்தது.


சமயக் கலவரங்கள் இல்லாத அந்தக் காலப்பகுதியில் பெருமளவு நிதி வசதியைக் கொண்டிருந்த தேவாலயத்தினால், அந்நாளில் வட - மத்திய பிரான்ஸில் வளர்ச்சியடைந்த 'கோதிக்' கட்டடக்கலை வடிவமைப்பில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிறந்த 'கோதிக் கலை வல்லுனர்'களின் கைவண்ணத்திலான கட்டுமானப்பணி, 1220இல் முடிக்கப்பட்டது. அதன் பின்னரே 'சார்ட்டிஸ் மாதா திருத்தலம்' என்ற பெயரில் அழைக்கப்படலாயிற்று.

இந்த ஆலயம் கட்டப்படும் முன்னரும் சாட்டிஸ், சாதாரண யாத்திரை தலமாகவே இருந்துள்ளது. 'கரோலிஞ்சியன்' (*Carolingian*) காலத்தில் (848) ரோமானிய கட்டடக்கலை அமைப்பில் கட்டப்பட்டிருந்த ஆலயம் யுத்தத்தால் அழிக்கப்பட்டது. இதே காலத்தில் பல ஞானிகள் வாழ்ந்த 'துறவிகள் சன்னிதி' இருந்ததுடன் திரளான பக்தர்கள் தரிசிக்க வருகைதரும்

இடமாகவும் இருந்துள்ளது. மக்கள் இதனை 'ஞானிகளின் கோட்டை' என்று அழைத்தனர். இச்சன்னிதி தற்போதைய ஆலயத்திற்கு மறைவாக வலது பக்கம் உள்ளது. சன்னிதியில் நான்கு ஞானிகளின் உடலங்கள் இருந்துள்ளன போன்ற தகவல்களை அறியக்கூடியதாக இருந்தது.

பல நூற்றாண்டுகளாக மக்கள் நோயாளரை அழைத்துச்சென்று நம்பிக்கையுடன் நலம்பெறவேண்டி செபித்து வருகின்ற இத்திருத்தலத்தின் பிரமாண்டம், கட்டமைப்பு, வரலாற்றுச் சிறப்புகள், நிகழ்ந்த அற்புதங்களால் மதசார்பற்று திரளான மக்கள் எப்போதும் வருகை தந்தவண்ணமுள்ளனர். ஆண்டுதோறும் தமிழ் மக்களுக்கென சிறப்பு வழிபாடு செய்வதற்கு திருத்தல நிர்வாகத்தினரால் ஒருநாள் ஒதுக்கப்பட்டுள்ளது. திகதிகளில் மாற்றமிருக்கும். அந்நாளில் மத வேறுபாடின்றி பெருந்திரளாகத் தமிழ் மக்கள் பங்கு கொள்வார்கள்.

சிலுவை வடிவான ஆலயத்தின் முன்பக்க வாசல் முகப்பில் 377 அடி உயரமுடைய இரண்டு கோபுரங்கள், இவற்றைவிட உயரம் குறைவான ஆறு கோபுரங்கள் ஏனைய மூன்று வாசல் முகப்புகளிலும் உள்ளன. முகப்புகளில் முக்கிய இறையியல் கருப்பொருள்கள் மற்றும் விளக்க விபரங்கள் சிற்பங்களாகச் செதுக்கப் பட்டுள்ளன. புள்ளிவிபரங்கள் நூற்றுக்கணக்காக அலங்கரிக் கிறது.



அழகிய சித்திரங்கள் வரையப்பட்ட 1,136 கண்ணாடிகள் 176 யன்னல்களில் பொருத்தப்பட்டுள்ளன. 3,889 சிற்பங்களை உள்ளும் புறமும் கொண்டு அழகுற மிளிர்கின்றது. இயேசுவின் குழந்தைப் பருவம் மற்றும் மாதா பற்றிய தகவல்கள் அடங்கிய சித்திரங்கள், சிற்பங்களே பெரிதும் காணப்படுகின்றன.

இயேசு குழந்தையாய் இருந்தபோது அணிந்திருந்த 'கமிசை' (Camisa - நெய்யப் பட்ட உடை) முன்னர் இங்கு பாதுகாக்கப்பட்டு வந்ததாக தகவல் கூறுகிறது. அதனாலேதான் என்னவோ இயேசுவின் குழந்தைப் பருவத் தகவல்கள் காட்சிகளாக விபரிக்கப்பட்டுள்ளன என நினைக்கத் தோன்றுகிறது.

ஆலயப் புரட்சி, யுத்தங்களின்போது பாதிப்போ, சேதமோ ஏற்படாதது புதுமை என்றே மக்கள் நம்புகிறார்கள். இரண்டாம் உலக யுத்தத்தின் போது ஜேர்மன் இராணுவம் தேவாலயத்தை கைப்பற்றி அழகிய கண்ணாடிகளை அகற்றியதுடன் அதனை முற்றாக அழிக்க முற்பட்ட போது அமெரிக்கப் படைகளால் முறியடிக்கப்பட்டது.

முற்றிலும் செதுக்கப்பட்ட கருங்கற்களால் கட்டப்பட்டுள்ள திருத்தலத்தின் உட்புற ஒளி கண்ணாடி யன்னல்கள் வழியாகவே கிடைக் கின்றது. பூரண ஒளியற்ற திருத்தலத்தில் மெழுகுவர்த்திகளின் வெளிச்சம் முதன்மை பெறுகிறது. இதனால் திருத்தலத்தினுள் அமைதி நிலைப்பதுடன், மக்களின் பக்தியான செபித்தலுக்கும் பயனுள்ளதாக இருக்கின்றது.

அங்கு வைக்கப்பட்டுள்ள இயேசுவை மடியில் தாங்கியவாறுள்ள தூய சார்ட்டிஸ் மாதாவின் சுரூவம் உட்பட அனைத்து சுரூவங்களும் கருமையான உருவமாகவே இருக்கின்றன. நாமும் அமைதியாக வழிபட்டு வெளியேறி, ஆலயத்துடன் இணைந்த படிக்கட்டுகளில் விழுந்த ஆலய நிழலில் சிறிது நேரம் அமர்ந்து ஓய்வெடுத்த பின்னர் புறப்பட்டோம்.

நோர்மாண்டி சவக்காலை

பாரிஸில் தங்கியிருந்தபோது '*Saving Private Ryan*' என்னும் திரைப் படத்தை பார்க்க நேரிட்டது. அத்திரைப்படமானது உலக வரலாற்றில் பதிவானதும் பெரிதாகப் பேசப்பட்டதுமான 'நோர்மாண்டி தரையிறக்கம்' *(Normandy Landings)* பற்றியதாகும். தமிழீழ விடுதலைப் புலிகள் தமது போராட்ட காலத்தில் மேற்கொண்ட 'குடாரப்பு' தரையிறக்கத்தை நோர் மாண்டி தரையிறக்கத்துக்கு ஒப்பிட்டிருந்தமை பத்திரிகைகளில் வெளிவந்த விடயம்.

திரைப்படம் பார்த்தது முதல், நினைவாகப் பராமரிக்கப்படும் கல்லறைகளைப் பார்த்துவிட வேண்டுமென்ற ஆவலினால், முதலில், அமெரிக்காவின் தாக்குதல் இடம்பெற்ற ஒமாகா கடற்கரையை பார்வையிட 26.04.2014 அதிகாலை 4.00 மணிக்கு உறவினர்களுடன் புறப்பட்டுச் சென்றேன்.

இரண்டாவது உலகப் போரின்போது கிட்லரின் ஜேர்மன் நாஜிப் படைகளின் ஆக்கிரமிப்பிலிருந்த பிரான்ஸ் மீதான நேசநாடுகளின் கடல்வழி படையெடுப்பு இதுவாகும். நாஜிகளால் பிரித்தானியாவுக்கு ஏற்படவுள்ள ஆபத்தைத் தடுப்பதற்கும், அவர்களின் முன்னேற்றத்தைத் தொடரவிடாமல் தடுப்பதற்கும், நாஜிப்படைகள் வசமிருந்த பிரான்ஸை கைப்பற்ற வேண்டிய தேவை நேசநாடுகளுக்கிருந்தது. அதற்காக 'ஓவர்லார்ட் நடவடிக்கை' *(Operation Overlord)* எனப் பெயரிட்டு வான்வழித் தாக்குதலை ஆரம்பித்திருந்தனர்.


அதன் தொடராக, பிரான்ஸைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் நடவடிக்கைக்கு அவசியமும் முக்கியமும் எனக் கருதி, 'நோர்மாண்டி' மாநிலக் கரையோரம் மேற்கொள்ளப்பட்ட, பெருமெடுப்பு மற்றும் சிரத்தை மிக்க நடவடிக்கையே நோர்மாண்டி தரையிறக்கமாகும்.

06.06.1944இல், பிரான்ஸின் வட மேற்காக, ஆங்கிலக் கால்வாய் ஓரமாக பிரித்தானியாவுக்கும், பிரான்ஸின் பீர்க்காடி மாநிலத்துக்கும் இடையே அமைந்துள்ள 'நோர்மாண்டி' மாநிலத்தில் அருகருகாக இருக்கும் ஊதா *(Utah)*,

ஓமாகா (Omaha), கோல்ட் (Gold), யூனோ (Juno), சுவோட் (Szord) ஆகிய நகரங்களை உள்ளடக்கிய 80 கி.மீ. நீளமான கடற்கரையில் நிகழ்ந்தது இந்தத் தரையிறக்கம். குறைந்தது 12,000 பேர் வரையான இழப்புகளில் அன்றுமட்டும் 4,414 பேர் கொல்லப்பட்டதாக உறுதிசெய்யப்பட்ட அந்நாள் 'டி-டே' (D-Day) எனஅழைக்கப்படுகிறது.

ஓமாகா - ஊதா கடற்கரைகளில் அமெரிக்க இராணுவத்தின் பல படைப்பிரிவுகளும், யூனோ கடற்கரையில் கனடா இராணுவத்தின் பல படைப்பிரிவுகளும், கோல்ட் - சுவோட் கடற்கரைகளில் பிரித்தானிய இராணுவத்தின் பல படைப்பிரிவுகளும் (கோல்ட் கடற்கரையில் பிரித்தானிய படைப்பிரிவுடன் பிரான்ஸ் படைப்பிரிவும் இணைந்திருந்தது) தரையிறக் கத்தை மேற்கொண்டன.

ஐந்து கடற்கரைகளிலும் நேச நாடுகளின் காலாட் படை மற்றும் கனரக ஆயுதப் பிரிவுகள் உட்பட 1,53,000 துருப்புக்கள் தரையிறங்கின. இந் நடவடிக்கைக்காக 5,000 தரையிறக்கும் கலங்கள், 289 மெய்க்காப்பாளர் நீரூர்திகள், 277 கண்ணிவெடி அகற்றும் நீரூர்திகள் பயன் படுத்தப்பட்டன. அதிகாலை தரையிறக்கத்துக்கு ஏதுவாக, நள்ளிரவு முதல் சுற்றுப்புறங் களில் 24,000 பிரித்தானிய அமெரிக்க துருப்புகள் வான் வழியாக பரசூட்டில் இறக்கப் பட்டனர். 1,500 இற்கு மேற் பட்ட விமானக் குண்டுத் தாக்குதல்களும் இடம்பெற்றன.



அதிகாலை 6.30 மணிக்குத் தரையிறங்கத் தொடங்கியது முதல், நாஜிப்படைகளிட மிருந்து இடைவெளியின்றி சீறிவந்த இயந்திரத் துப்பாக்கிச் சன்னங்கள், பீரங்கிக் குண்டுகளை எதிர்கொண்டு, தொடர் இழப்புகளின் மத்தியில் முதலாவது தடுப்பு வேலியையும், கரையிலிருந்த இரண்டடுக்கு காப்பரண், காவலரண்களையும் உடைத்து முன்னேற அவர்களுக்கு மூன்று நாட்கள் எடுத்தது.

நோர்மாண்டி மாநிலக் கடற்கரை பிரதேசம் நேசப்படைகளின் தெரிவுக்கு உட்படலாம் என ஊகித்ததால், ஏற்கெனவே பாதுகாப்பை அதிகரித் திருந்தன நாஜிப் படைகள். கடலோரம் இரும்புக் கேடர்கள் கொண்டு தடுப்பு வேலியும், அடுத்தடுத்து அடுக்கு காப்பரண்களும், பல வலுவான காவலரண் களும், பீரங்கித் தளங்கள் பலவும் அமைத்திருந்தன .

தரையிறக்கம் வெற்றியளித்து அப்பகுதி நேசப்படைகளின் கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்டமையை, 'நெப்டியூன் நடவடிக்கை'

(Operation Neptune) அல்லது 'நோர்மாண்டி தரையிறக்கம்' என அழைப்பர். இதுவே போர் வரலாற்றில் நிகழ்ந்த மிகப்பெரும் நீர் - நிலப் படை எடுப்பாகும்.

தரையிறக்கத்தில் பங்குகொண்ட ஒவ்வொரு நாடுகளும் தாம் தாக்குதல் நடத்திய கடற்கரை நகரங்களில், இறந்தவர்களுக்கான கல்லறைகள், நினைவுத்தூபிகள் மற்றும் ஞாபகார்த்த கட்டடம், அருங்காட்சியகம் போன்றவற்றை அமைத்துள்ளன.

ஒமாகா கடற்கரையிலுள்ள நோர்மாண்டி அமெரிக்கன் சவக்காலைக்குச் சென்றபோது சற்றுத் தொலைவில் ஜேர்மனியரின் இரண்டு முழுமையான டாங்கிகள் வரவேற்றன. வாகனத் தரிப்பிடத்திலிருந்து 100 மீ. தூரத்திலிருந்த வளாகத்தில் நுழைந்ததும் அச்சுற்றாடல் அமைப்பும், பூஞ்செடிகள் மற்றும் கத்தரிக்கப்பட்ட மரங்களின் அழகும், துப்பரவும் கண்களை வலிந்து இழுத்தது.

தொடர்ந்து சென்றபோது முதலில் கண்ணிற்பட்டது அருங்காட்சியகம். அதைப் பார்வையிட நுழைந்தோம். உள்ளே உடல் சோதனை, பொருள் சோதனை இயந்திரம் மூலம் மேற்கொள்ளப்பட்டது. கைப்பை உள்ளே கொண்டுசெல்ல அனுமதிக்கப்படவில்லை.




அருங்காட்சியகத்தில் தரையிறக்கத்திற்குப் பயன்படுத்திய மற்றும் நாஜிப்படைகளிடமிருந்து கைப்பற்றிய சிறியரக ஆயுதங்களில் சில, தரையிறக்கம் சார்ந்த (மேற்குறித்த) தகவல்கள், தரையிறக்கம் பற்றிய வீடியோ காட்சிகள், வரைபடங்கள், கனரக ஆயுதங்கள் மற்றும் கடற்கரையில் நடைபெற்ற போராட்டக் காட்சிகளின் நிழல்படங்கள் எனப் பல காணப்பட்டன.

அங்கிருந்து ஒமாகா 'நோர்மாண்டி அமெரிக்கன் சவக்காலை' வளாகத்தைப் பார்வையிடச் சென்றோம். முன் பக்கம் அரைவட்ட வடிவில் உயரமான பல சதுரத் தூண்கள் அமைத்து மேற்பக்கதால் இணைக்கப்பட்டிருந்தது. முன்னிருந்து ஐந்து தூண்களின் பின்பக்கம் சுவரால் மறைக்கப்பட்டு அச்சுவர்களில் ஒமாகா தாக்குதலில் இறந்த படையினரின் பெயர்கள், சிலரது பதவிகள், யுத்தத்தின்போது படை நகர்வு பற்றிய வரைபடத் தகவல்கள் போன்றவை சலவைக் கல்லில் செதுக்கப்பட்டுள்ளன. இருபக்கமும் அவ்வாறே காணப்படுகின்றது. ஏனைய தூண்கள் அடைக்கப்படாமலுள்ளன.

இந்தத் தகவல் பகுதிக்கு முன்னால் குறுக்கான அகண்ட பாதை செல்கிறது. குறுக்குப் பாதையிலிருந்து முன்னோக்கிய திசையில் தகவல் பகுதிக்கு எதிர்ப்புறமாக இருபக்கமும் புற்தரைகள் மற்றும் இணைந்த பாதைகள் உள்ளன. இருபக்க பாதை, புற்தரைகளுக்கும் மத்தியில்

நீள்சதுரமான குளம் அமைக்கப்பட்டுள்ளது. குளத்தைத் தொடர்ந்து குறுக்குப் பாதையும் விரிந்த புற்தரையும் உள்ளன. இப்புற்தரையில் குளத்திற்கு இடது, வலது பக்கங்களில் உயரமான இரண்டு கொடிக் கம்பங்கள் நடப்பட்டுள்ளன. அவற்றின் உச்சியில் அமெரிக்க நாட்டுக் கொடிகள் பறந்தவாறு காட்சியளித்தன.

இவற்றைத் தொடர்ந்து பரந்த வெளியில், இறந்தவர்களைப் புதைத்த இடங்களில் பெயர் பொறிக்கப்பட்ட அடையாளச் சிலுவைகள் நடப்பட்டுள்ளன. பச்சை நிறம் தோய்ந்த அழகான புற்தரையில் முளைத்தெழுந்த வெண்மை நிறச் சிலுவைகள்போலக் காணப்பட்ட அவை நிரையாக ஒழுங்கமைக்கப்பட்டிருந்தன. பரந்த புற்தரையை ஊடறுத்து பாதை செல்கின்றது. பாதை மற்றும் புற்தரையின் இறுதியில் சிற்றாலயம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. அடக்கம் செய்யப்பட்டவர்களின் உறவினர் எவரேனும் வருகைதருகையில் சிற்றாலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுத்து நினைவு கூர்ந்து அஞ்சலி செலுத்துவர்.



சுற்றாடல் எங்கும் செப்பனிடப்பட்டதும் பச்சை வர்ணத்தை முழுமையாய்த் தருகின்றதுமான புற்தரைகள் மற்றும் மரங்களும், இளஞ் சிவப்பு நிறத்தில் அமைந்துள்ள வீதிகளும், வெண்மை நிறமான அடையாளச் சிலுவைகளும் அந்தப் பகுதியை கண்ணுக்கு விருந்தாக்கின.

கல்லறையின் இடது பக்கம் பிரதான வீதியும், வீதியிலிருந்து 50 மீ. தூரத்தில் கடற்கரையும் இருந்தது. கடல் மட்டம் கணிசமான ஆழமாகத் தெரிந்தது. வீதியோரத்திலிருந்து கடற்கரை வரை மணல் மற்றும் புற்தரை சரிவாய்க் காணப்பட்டது. கடற்கரைக்குச் சென்று பார்வையிடுவோருக்காக செங்குத்தாக அல்லாமல் மலைப்பாதைபோல சரிவான பாதை, வளைவுகளாக அமைக்கப்பட்டுள்ளது.

ஆழமான அந்தக் கடல் பிரதேசத்தை, வரலாற்றில் பதிவான அந்தப் பகுதியை இறங்கிப் பார்வையிட்டோம். கடல்நீரில் கால்களை நனைத்ததும் திரைப்படத்திலும் அருங்காட்சியகத்திலும் பார்த்த, கடலில் கிடந்த உயிரிழந்த படையினரின் சடலங்கள் நினைவுக்கு வந்ததால் நெஞ்சு திக்கென்றது.. இறங்கும்போது சுலபமாக இருந்தது. ஏறும்போது மிகவும் சிரமப்பட்டேன்.

வீதிக்கு அருகாமை சீமேந்தால் தளம் அமைத்து அதனில் நோர்மாண்டி கடற்கரைப் பகுதியும், அதனில் நேசப்படைகள் தரையிறங்கிய பகுதிகளும், அப்பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள கல்லறைகள், நினைவுச்

சின்னங்கள் போன்றவையும் செதுக்கப்பட்டு வர்ணம் பூசி சேதமுறாத வகையில் பாதுகாக்கப்படுகிறது. அதனைப் பார்த்து மேலும் பல தகவல்களை இலகுவாக அறிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது.

திரைப்படத்திலும், அருங்காட்சியகத்தில் நிழற்படங்களிலும் காணப் பட்ட இரும்புக் கேடர்களாலான தடுப்பு வேலிகள் கடலோரத்திலிருந்து அகற்றப்பட்டிருந்தன. நாசிகள் பயன்படுத்திய பங்கர்கள், தடுப்பரண்கள், காவலரண்கள் இருந்த தடயங்கள் எதுவுமே இல்லை. தரையிறக்கத்திற்குப் பயன்படுத்திய நீரூர்தி ஒன்று மட்டும் கடற்கரைக்கு நெருக்கமாக புதையுண்டு பல பகுதிகள் அகற்றப்பட்ட நிலையில் அடையாளமாகக் காணப்பட்டது.

சற்று நேரத்தால் மழை தூறத் தொடங்கியது. இதனால் மேற்கொண்டு அங்கு நிற்க முடியாமல் நனைந்தவாறே வாகனத்தைத் தேடிச் சென்றோம். தூறலைத் தொடர்ந்து கனமழை பெய்யத் தொடங்கியதால் ஏனைய இடங் களுக்குச் செல்லமுடியாத நிலையில், ஓமாகா கடற்கரையில் அமைத்துள்ள வற்றையேனும் பார்வையிட்ட மனநிறைவில் புறப்பட்டோம்.

தூய மைக்கேல் மலை

அமெரிக்கன் சமவக்காலையிலிருந்து நோர்மாண்டி மாநிலத்தில் எல்லையிலுள்ளதும், நாம் தரித்து நின்ற ஒகாமா நகரத்திலிருந்து 200 கி.மீ. தொலைவிலுள்ளதும், மலைப்பாறை என அழைக்கப்படுவதுமான 'தூய மைக்கேல் மலை'யை நோக்கிய பயணத்தைத் தொடர்ந்தோம். வழி நெடுகிலும் மழை பெய்து கொண்டிருந்ததால் தரித்து நின்று உணவருந்தக் கூட முடியவில்லை. 100 கி.மீ. கடந்த பின்னர்தான் மழை நின்று இளவெயில் தொடங்கியது. காற்று குளிராக இருந்தபோதும் இடையில் காணப்பட்ட தரிப்பிடத்தில் வாகனத்தை நிறுத்தி உணவருந்திய பின்னரே எமது பயணத் தைத் தொடர்ந்தோம்.


நாம் சென்ற பாதையில் 50 கி.மீ. தூரமிருக்கையில் மலைப்பாறை உச்சியிலிருந்த கோட்டை ஆலயம் தெளிவாகத் தெரிந்தது. அண்மையில் தெரிவதுபோல இருந்தாலும், வளைந்து செல்லும் பாதை என்பதால் தூரம் அதிகமாக இருந்தது. இருந்தபோதும் தொடராக மலையையும் ஆலயத்தையும் பார்க்கக்கூடியதாக இருந்தது. மலையை நெருங்கி வரவர அதன் அழகு மிகவும் துலங்கியது.

கி.பி. 1000 ஆண்டுக்கு முற்பட்ட ஆண்டுகளில், கரையிலிருந்து கிட்டத் தட்ட ஐந்து மைல் தொலைவில், கடலில் இருந்த பாறையின்மேல் 'ஸ்லேட்' மற்றும் 'கிரானைட்' கற்களின் கலவைகொண்டு அமைக்கப்பட்ட வனப் பகுதியே தூய மைக்கல் மலைப்பாறைாகும். இப்பாறை அந்நாள் 'கார்னிஷ்' மொழியில் 'காடுகளின் சாம்பல் பாறை' *(Grey Rock in the Woods)* என அழைக்கப்பட்டது. இதனாலேயே மலைப்பாறை என்ற பெயரும் வழங்கி வந்துள்ளது. பாறையைச்சுற்றி கடல் இருப்பதால் 'அலைத்தீவு' என்றும்

அழைக்கப்பட்டது. இதுபோன்ற சிறிய பாறைகள் பல அக்கடலில் ஆங்காங்கு காணப்பட்டன.

புயலின் தாக்கம், கடல் பெருக்கின் பாதிப்பு, எதிரிகளின் தாக்குதல் போன்றவற்றை அக்காலத்திலேயே கருத்திற்கொண்டு இந்த மலைப் பாறையை அமைத்திருந்தமை பலரையும் வியக்கவைக்கிறது. 1014இல் வீசிய புயல் மலைப்பாறையைச் சுற்றியுள்ள நிலத்தை அழித்ததுடன் பல மக்கள் கொல்லப்பட்டார்களெனத் தகவல் கூறுகிறது.

மலைப்பாறை தோற்றம் பெற்றது முதல் பின்பக்கமுள்ள ஆழமான பரந்த கடற்பகுதியால் இதற்கான கப்பல் போக்குவரத்து நடைபெற்றபோதும், 1099ஆம் ஆண்டளவில் பாறையின் முன்பக்கம் கரையிலிருந்து ஆறு மைல் தூரத்திற்கு தடித்த மரங்களால் பாதை அமைக்கப்பட்டு தரைப் போக்குவரத்தும் நடைபெற்றுள்ளது.




நாளடைவில் மலைப் பாறையின் முன்பக்க கடற்பகுதி மணல் கொண்டு மேவப்பட்டதும் ஒரு மைலுக்கு உட்பட்ட கடலாக மாறியது. பாறைக்குச் செல்லும் பயணிகளுக்காக வீதி அமைக்கப் பட்டிருந்தது. கடல் வற்றுகையில் தரையைப்போலத் தெரியும் அப்பகுதி கடல் பெருக்கின்போது உயரமற்ற அப்பாதையை மூடி விடும். இதனால் கடல் நீர் வற்றும் வரை காத்திருந்தே பயணிகள் திரும்புவர். தொங்கு பாலம் அமைக்கப்பட்டிருப்பினும் அதனைப் பயன்படுத்துவோர் குறைவாக இருந்தது.

தற்போது பல மாறுதல்கள் செய்யப்படுகின்றன. இரண்டு மைலுக்கு மேற்பட்ட தொலைவில் வாகனத் தரிப்பிடம் அமைக்கப்பட்டுள்ளது. தரிப்பிடத்திற்கு அருகாமை பயணிகளின் பயன்பாட்டுக்கென உணவகம், கழிப்பிடம் மற்றும் இளைப்பாறும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன. அங்கு வாகனத்தை நிறுத்திய பயணிகள், மலைப்பாறைக்குச் செல்வதற்கு இலவச பேருந்து சேவை நடைபெறுகின்றது. பேருந்து தரிப்பிடத்திலிருந்து மலைப் பாறை வரை செல்வதற்கான பாதையும் உயரமான பாலமும் அமைக்கும் வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருந்தன.

தரிப்பிடத்தில் வாகனத்தை நிறுத்திவிட்டு பேருந்தில் பயணித்து மலைப்பாறையை நெருங்கிச் சென்றோம். பாலம் அமைக்கும்வேலை நடை பெறுவதால் அங்கிருந்து தற்காலிகப் பாலம் வழியாக மலைப் பாறையை அடைந்தோம். பாறை வெளித்தெரியாமல் கோட்டை போன்று கனமான சுவர்கள் அமைக்கப்பட்டிருந்தது. அது ஒரு கடற்கோட்டை என்றே சொல் லலாம். நுழைவாசலில் பாரிய, கனமான கதவு இருந்தது. கூம்பு வடிவம் கொண்ட கூர்மையுமான இரும்புகள், கதவு பூராவும் மிகச் சிறிய இடைவெளி விட்டுப் பொருத்தப்பட்டிருந்தன.

உள் நுழைந்தால் முன்தளம். கோட்டை சுவருக்கும் அரை வட்ட வடிவில் உள்ள பாறைக்கும் இடையிலான சிறிய தளமது. பாறையோரம் பழமையான பீரங்கி ஒன்று வரவேற்றது. கோட்டையிலிருந்து எதிரியைத் தாக்கும் வீரர்களுக்கான காப்பரண்கள் பல இருந்தன. இதற்கு அப்பால் மலைப்பாறை தொடர்கிறது.




முன் தளத்திற்கும் பாறையில் குடைந்துள்ள நுழைவு வாசலுக்கும் இடையில் குறுக்காகப் பத்து அடிக்கு மேற்பட்ட அகலமா னதும் அதே அளவு ஆழமான துமான பாரிய குழி அமைக்கப் பட்டிருந்தது. குடைந்த பாதையை மூடி இரும்புப் பாளங்களாலான கதவு பொருத்தப்பட்டுள்ளது. அக்கதவு இருபக்கமும் இணைக் கப்பட்டுள்ள கனமான சங்கிலி களைக் கொண்ட சக்கரத்தால் இயக்கப்படுகிறது. கதவின் அடிப்பகுதி அப்படியே இருக்க மேற்பகுதி முன்னோக்கிச் சரிந்து குழியை மூடி பாதை விடும். அவ்வாறு மூடப்பட்ட பின்னரே எவரும் நுழையமுடியும். எதிரிகள் நுழைவதைத் தடுக்கும் உபாயமிது. தற்போது மக்கள் பாவனைக்காக கதவு திறக்கபட்டுக் கிடப்பதால் நாம் அதன்மீது நடந்து சென்றோம்.

கற்கள் அடுக்கப்பட்ட சீரற்ற உள்பக்க பாதை சரிவாக மேல் நோக்கிச் செல்கின்றது. முன்னர் குடியிருப்புகள் மற்றும் அலுவலகங்களாக பயன் படுத்தப்பட்ட தொடரான கட்டடங்களில் விற்பனை நிலையங்களும் உணவு விடுதிகளும் பாதையின் இருபக்கமும் காணப்பட்டன.

நீண்ட வரலாற்றைக்கூறும் அருங்காட்சியகம் முன்னைய சிறைச் சாலையில் அமைக்கப்பட்டுள்ளது. ஒடுக்கமான படிகளால் ஏறியே அங்கு செல்லவேண்டும். அந்தச் சிறைச்சாலையில் கைதிகள் மிக மோசமாக நடத்தப்பட்டார்கள் என்றும், கொடுமை தாங்க முடியாத சிறைக் கைதிகள் தலையால் சுவரை முட்டி தம்மைத்தாமே அழித்துக்கொண்டதாகவும்

பேசப்படுகிறது. மலைப்பாறையில் ஆட்சி நடத்திய மன்னர்கள், பிரதானிகள் பயன்படுத்திய பொருட்கள், ஆயுதங்கள், மாதிரி பாய் நீரூர்தி, பலவகை உடைகள் போன்றவை காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

பாதை தொடர்ந்து செங்குத்தான படிகளாகச் செல்கிறது. இடையில் ஒரு தளம். அத்தளத்தில் நின்றவாறு கணிசமான தூரம் நகரின் எழிலைப் பார்க்க முடியும். 'தூய கன்னிமரியா சிற்றாலயம்' அத்தளத்திலிருந்தது. யாழ்ப்பாணம் - சில்லாலை 'தூய கதிரைமலை மாதா' வின் உருவ அமைப்பைக் கொண்டிருந்தது கன்னிமரியாவின் சுரூபம். இம் மலைப் பாறை சுரூபத்தின் பிரதியாக கதிரமலை மாதாவின் உருவம் இருக்கலாமென எண்ணத் தோன்றியது. 'டாவின்சி கோட்' திரைப்படத்தில் மலைப்பாறை மாதா சிற்றாலயத்தைப் பார்த்த ஞாபகம். சிற்றாலயத்தில் 'தூய மைக்கேல்' உருவம் உள்ள பீடமும் இருந்தது. போர் வீரனின் உடையில் காணப்படும் தூய மைக்கேல், மலைப்பாறையின் காவலராக வணங்கப்படுகிறார். இதுவே தூய மைக்கேல் மலை எனப் பெயர் வரக் காரணமாயிற்று.




இத்தளத்துடன் இது வரை நாம் பயணித்த பாதை முடிகிறது. அதிலிருந்து 120 படிகள் ஏறினால் மேற்தளம். கட்டடம் தவிர்ந்த வெளிப் பகுதியில் நின்று கடற்பகுதியை நெடுந்தூரம் பார்த்து மகிழ்ந்தோம். தளத்தை சுற்றி நான்கு அடி உயரத்தில் பாதுகாப்பு அரண் அமைக்கப்பட்டுள்ளது. அத்தளத்தில் கப்பல்களுக்கு வழிகாட்ட அமைக்கப்பட்ட கோபுரம், இராணுவக் கோபுரம், படையினர் காவல் புரிவதற்கேற்ற தளம் போன்றவற்றுடன் 1264ஆம் ஆண்டு எனப் பொறிக்கப்பட்ட பீரங்கிகள் சில, கடலை நோக்கியவாறு வைக்கப்பட்டிருந்தன.

பல கட்டடங்கள் அந்தத் தளத்தில் இருந்தன. பெரியதொரு மண்டபத்தினுள் நுழைந்தோம். அது அரண்மனையாகப் பயன்படுத்தியிருக்கலாமென்பதைப் பார்த்த வுடனேயே புரிந்துகொள்ளக்கூடியதாக இருந்தது. மெய் மறக்கச் செய்யும் சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்ததாக அம்மண்டபம் காணப்பட்டது.

அம்மண்டபத்திலிருந்து தொடராய் வெவ்வேறு கட்டடங்களுக்குச் செல்லமுடியும். அடுத்ததும் ஒரு மண்டபம். அங்கே பலர் ஒன்றாய் அமர்ந்து உணவருந்துவதற்குப் பயன்படுத்தியிருக்கவேண்டும். அதைக் கடந்து சென்றதும் தெரிந்த கட்டடம் சில உத்தியோகபூர்வ குடியிருப்புகளாக இருந்திருக்கவேண்டும்.

அக்கட்டடத்தில் குடியிருப்பு பகுதிக்கும் மலைக்கோட்டையின் கனமான வெளிச் சுவருக்கும் இடையில் விறாந்தை போன்ற வெளி இருந்தது. கனமான அச்சுவரில் அமைக்கப்பட்டுள்ள கண்காணிப்பு அரண்கள், ஏனைய பாதுகாப்பு ஏற்பாடுகள், தீபங்களில் ஒளியேற்றி வைப்பதற்கான சிறுசிறு தளங்கள் போன்றவை இருந்தன. முற்றிலும் சுவரால் மறைக்கப்பட்டு - மலையைக் குடைந்ததைப் போன்ற கூரையுள்ள அந்தப் பகுதியில் காற்றை, சூரிய ஒளியை, மழைநீரை உள்ளெடுக்கும் தொழில்நுட்பம் மலைப்பை ஏற்படுத்தியது. எவையும் மாற்றம் செய்யப்படாமல் அப்படியே இருந்தன. பொதுவாக அங்கு காணப்பட்ட விசாலமான கட்டடங்கள் யாவும் பாரிய சிற்ப வேலைப்பாடுகளுடனான தூண்களுடன் கூடிய அரண்மனைத் தன்மையை உணர்த்துபவையாகவே இருந்தன.

அங்கிருந்து படிகளால் கீழ் இறங்கினால், மலைக்கோட்டைக் கடலில் தரித்து நிற்கும் கப்பலிலிருந்து பொருட்களை ஏற்றி இறக்குவதற்குரிய மற்றும் களஞ்சியப் பகுதிக்கான தளத்துக்குச் செல்லலாம். அந்தத்தளம் மலைக் கோட்டை முன் சுவரை ஒரு பக்கமாகக் கொண்டுள்ளது. கனமான அந்த வெளிச்சுவரில் பெரியதொரு சாளரம் போன்ற வெளி. அச்சாளர வெளியின் மேற்பக்கத்தில் பிரமாண்டமான கப்பி இணைக்கப்பட்டுள்ளது. கப்பியூடாக மூன்று அங்குல விட்டமுள்ள கம்பான் கயிறு செல்கின்றது.



பொருட்கள் வைத்து ஏற்றி இறக்கக்கூடியதாக, நான்கு மூலையிலும் கனமான இரும்புச் சங்கிலிகள் பொருத்தப்பட்ட, இரும்புப் பட்டத்துடனான வைரமான பலகை கம்பான் கயிற்றுடன் இணைக்கப்பட்டிருந்தது. கயிற்றின் மூலம் பலகையை உயர்த்தவும் இறக்கவும் பத்து அடி விட்டமுள்ள பாரிய சக்கரம் இருந்தது. சக்கரத்தில் கம்பான் கயிற்றின் முனை இணைக்கப்பட்டுள்ளது. சக்கரத்தைச் சுழற்றி பொருட்களை மேற்கொண்டு வருவதற்கும் இறக்குவதற்கும் மனிதவலு தேவைப்படுவதால் பலர் அங்கு நின்று சக்கரத்தை சுழற்றுவதற்கு ஏற்ற வசதியுடன் சக்கரத்துடன் சேர்ந்த கைபிடியும் காணப்பட்டது. இவை யாவும் பொருத்தப்பட்ட நிலையிலேயே இருந்தன. இத்தளத்திலேயே விசாலமான களஞ்சிய அறையும் இருந்தது.

இங்கிருந்து வளைந்து வளைந்து இறங்கிச் செல்லும் படிகளால் வெளியேறி மந்திரி மனைக்குச் சென்று பார்வையிட்டோம். குளிர் காற்றின் மத்தியிலும் பலவற்றைப் பார்த்த மனைநிறைவில் அங்கிருந்து வெளியேறி முன்னர் ஏறிவந்த பாதையால் இறங்கி கீழத்தளத்தை வந்தடைந்தோம்.

மலைக்கு வெளியே வரும்போது வீதி ஓரம் தற்காலிக குடில் அமைத்து, அங்கே பகிரங்கமாக 'வொட்கா' என்னும் மதுபானம் வடித்து விற்பனை நடைபெறுதைப் பார்க்கக்கூடியதாக இருந்தது. ஒரு பக்கத்தால் மூடப்பட்ட பெரிய பாத்திரம் நெருப்பில் வைக்கப்பட்டிருந்தது. அதில் கொதிக்கும் கலவையிலிருந்து சிறிய குளாய் வழியாக வெளியேறும் நீராவிக்கு குளிரூட்டிட, மறுபக்கத்தால் பிறிதொரு பாத்திரத்தில் 'வொட்கா' மதுபானமாக விழுகின்றது. அதனை மேலும் குளிர்ச்சியடையவைத்து போத்தலிலிட்டு 'லேபல்' ஒட்டி உடனேயே விற்பனை நடைபெற்றது. பலரும் பெற்றுச் சென்றனர். அங்கு செல்பவர்கள் அருந்தி சுவை பார்க்கலாம். நானும் அதனை சுவைத்துப் பார்த்தேன். நன்றாகவே இருந்தது.

நாம் மலைக்கு வரும்போது பெரிதாக கடல்நீர் இருக்கவில்லை. இப்போது கணிசமான அளவு உயர்ந்திருந்தது. அங்கு போடப்பட்டிருந்த தற்காலிகப் பாலம் வழியாகச் சென்று பேருந்தில் பயணித்து வாகனத் தரிப்பிடத்தை அடைந்தோம்.

பரிஸில் பார்வையிடக்கூடிய இடங்கள் பலவிருந்தும் 2014ஆம் ஆண்டு கால அவகாசமின்மை, சீரற்ற காலநிலை, உடல்நிலை பாதிப்பு போன்ற வற்றால் ஏற்கெனவே பார்வையிட்டதைவிட மேலும் சிலவற்றையேனும் பார்வையிடக்கூடிய சந்தர்ப்பம் அமையவில்லை. இருப்பினும் வேறு எவருக்கேனும் உதவியாக இருக்கலாமென்ற காரணத்தால் வாகனத்தில் பயணிக்கையில் சந்தித்த சில பற்றிய சிறு குறிப்புகளை இங்கு தருகிறேன்.

பிரான்ஸ்ன் பெருமைக்குரிய சரித்திரத்திற்கும் கலாசாரத்திற்கும் சான்றாக நிலைத்து நிற்கும் **வெர்சாய் மாளிகை;** கண்ணைக் கவரும் வகையில் இயற்கையை அடிப்படையாகக்கொண்டதும், உயிரியற் தொகுதி களைப் பாதுகாப்பதும், 4500 விதமான மரங்கள் ஆராய்ச்சிக்காக நடப்பட்டுள்ளதுமான **தாவரவியற் பூங்கா;** நவீனத்துவ கலைக்கான உலகின் மிகப்பெரிய அறிவியற் களஞ்சியங்களில் ஒன்றும், நகரின் இயந்திரமென அழைக்கப்படும் கவர்ச்சிமிகு கட்டடத்தைக் கொண்டதுமான **பொம்பிடே அறிவியற் களஞ்சியம்;** மனித வாழ்வின் அனைத்து சமூகக் கூறுகளையும் மனிதன் தோன்றி வளர்ச்சியுற்ற பரிணாமத்தின் பல்வேறு காலகட்டத்தினை உள்ளடக்கியதுமான **மனித பரிணாம அருங்காட்சியகம்;** 21ஆம் நூற்றாண்டின் நவீனத்துவ அறிவியற் பூங்காவாக மிளிரும் **லா விலெத் அறிவியற் பூங்கா;** 14.07.1789இல் சிறை உடைக்கப்பட்டு, கைதிகள் விடுவிக்கப்பட்டு, மன்னர் ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவந்ததன் சாட்சியாகவுள்ள **பஸ்ரில் பெருஞ்சிறை;** நான்காம் ஹென்றி மன்னனது மனைவியின் மாளிகையுடன் கூடிய, இளைஞர் மாணவர்களால் பெரிதும் விரும்பப்படும் அழகான பூங்காவான **லக்சம்போர்க் பூங்கா** போன்றவை அவசியம் பார்க்கவேண்டிய இடங்களில் சிலவாகும். ■

கடல் கடந்த நாட்கள் –04

புகலிடக் கோரிக்கைப் பயணம்

மீண்டும் ஒரு பயணம்

*1985*ஆம் ஆண்டின் ஆரம்பத்திலிருந்து சுவிஸ் அலை பிரான்ஸ் லியோன் நகரில் வீசியது என்றே சொல்லலாம். பிரான்ஸின் பல நகரங்களிலிருந்து வருகை தருவோர் அங்கு நண்பர்கள் தெரிந்தவர்களுடன் தங்கியிருந்து இரவில் எல்லை கடந்து சுவிஸ் செல்வதும், சுவிஸில் இருப்பவர்கள் சில தேவைகளுக்காக எல்லை கடந்து வந்து தங்கிச் செல்வதும் தொடர்ந்து கொண்டேயிருந்தது.

சுவிஸிலிருந்து இருவரை எல்லை கடந்து அழைத்துவந்த அகிலன் என்பவர் போயரில் எம்மோடு கூட இருக்கும் நண்பனின் ஊரவர். இரண்டு நாட்கள் அகிலன் அங்கு தங்கியிருந்தபோது அவருடன் பழகுவதற்கு சந்தர்ப்பம் கிடைத்தது. அதனால் சுவிஸில் வசிக்கும் தமிழர்கள், அவர்களுக்கு கிடைக்கும் சலுகைகள், அங்குள்ள வேலை வாய்ப்புகள், நடைமுறைகள் போன்ற தகவல்களை அறியக்கூடியதாக இருந்தது.

மறுநாள் புறப்படுவதாக இருந்த அவரை, அன்று காலையில் சந்தித்த போது, அங்கு வந்தால் நல்ல வேலை செய்யலாம் எனக்கூறி எங்களையும் சுவிஸிற்கு வருமாறு அழைத்தார். முதல்நாள் உரையாடலின்போதே ஒழுங்கற்ற, நிறைவற்ற வேலை செய்துகொண்டிருந்த எங்களில் மூவருக்கு உள்ளூர விருப்பம் இருந்தபோதும், இரவில் காவல்துறையினரின் கண்களில் படாமல் எல்லை கடப்பதை நினைத்தபோது தேகம் சிலிர்த்தது. அதைத் தெரியப்படுத்தினோம்.

தனக்கு இது முதல்முறையல்ல, தான் எந்த சங்கடமும் இல்லாமல் அழைத்துச் செல்வதாகக் கூறியதுடன் புறப்பட்டு வருமாறு வற்புறுத்தினார். அவரது ஊரவரான எனது நண்பன் தொழிற்சாலையில் ஒரு வருடத்திற்கு மேலாக வேலை செய்வதால் அவர் வருவதற்கு விரும்பவில்லை. ஒருவாறாக நாங்கள் மூவர் புறப்படச் சம்மதித்தோம்.

1985 வைகாசி *18* அன்று மதியம் ஒன்றாக இருந்து உணவருந்திய பின்னர், எமது அறைகளிலிருந்த உடைகள், முக்கியமான பொருட்கள், அறைத் திறப்பு, நிகழ் மாதத்திற்கான போயர் வாடகை போன்றவற்றை நண்பனிடம் ஒப்படைத்துவிட்டு, பிறிதொரு நண்பனின் தானுந்தில் அண்மையிலிருந்த தொடருந்து நிலையத்தை அடைந்தோம். எமது பயணம்

பற்றி இருவரைத் தவிர வேறெவரும் அறிந்திருக்கவில்லை. தொடருந்து நிலையத்திலிருந்து சுவிஸ் செல்லும் கடுகதி தொடருந்தில் புறப்பட்ட நாம், ஒரு மணித்தியாலப் பயணத்தின் பின்னர் பிரான்ஸின் எல்லையில் உள்ள தொடருந்து நிலையத்தில் இறங்கினோம்.

காவல்துறையினரின் கண்காணிப்பு அங்கு இருந்தாலும் பல பயணிகளோடு சேர்ந்து இறங்கியமையால் எம்மீது சந்தேகம் உண்டாக வாய்ப்பிருக்கவில்லை. இருள் சூழ இன்னமும் நேரமிருந்தது. எப்படியும் ஒரு மணித்தியாலத்தைப் போக்கவேண்டுமென அகிலன் கூறினார். தொடருந்து நிலையத்தில் நீண்ட நேரம் நிற்பது ஆபத்து என்பதால் சந்தேகம் ஏற்படாத வகையில் பலரையும்போல் நாமும் அருகிலிருந்த றெஸ்ரோறன்ஸில் நுழைந்தோம். நெவேர் நகரிலிருந்த றெஸ்ரோறன்ஸில் நுழைந்தபோது காட்டப்பட்ட துவேஷம் இங்கு இருக்குமோ என்ற எண்ணம் தோன்றாம லில்லை. இங்கு அவ்வாறு இல்லாமையால் பியர் அருந்தி நேரத்தைப் போக்கினோம்.

இருளானதும் றெஸ்ரோறன்ஸ்ஸை விட்டு வெளியேறி, சுவிஸிக்குச் செல்லுகின்ற தொடருந்துப் பாதை வழியாக நடந்து சென்றோம். அப்பாதை யில் மின்னொளி எதுவுமிருக்கவில்லை. இருபது நிமிடங்கள் வரை நடந்து சுவிஸின் எல்லையை நெருங்கிவிட்டோம். குறுக்காக வாகனங்கள் பயணிப்பது தெரிந்தது. அது வீதி என்று ஊகிப்பதில் சிரமமிருக்கவில்லை. அந்த வீதிதான் இரு நாடுகளுக்குமான எல்லை. அதைக் கடந்தால் ஜெனீவா நகருக்குள் காலடி வைக்கலாம்.

வீதியை நோக்கிச் செல்லாமல் வீதிக்கு அருகாமை இருந்த கட்டடத்து டனான காணியை நெருங்கினோம். அந்தக் காணியில் முள்ளுக் கம்பி அடைப்பு இருந்தது. அதனை தாவரங்களின் கொடிகள் மூடியிருந்தன. அதில் ஒரு பக்கத்து அடைப்பு பதிந்து இருந்தது. முன்னர் பலர் இதனால் கடந்துள் ளார்கள் என்று உணர முடிந்தது. அந்தப் பதிவால் நாமும் கடந்து காணியினுள் சென்றோம். அது ஒரு அலுவலகக் கட்டடம். அதனால், இரவில் எவரும் அங்கிருக்கவில்லை.

கட்டட வளவின் மறுபக்கம் திறந்திருந்த கதவால் வீதியின் ஓரத்திற்கு வந்தோம். வீதியால் வாகனங்கள் வராமை கண்டு அவ்வீதியைக் கடந்து எதிர்ப்பக்கம் மாடிக் கட்டடத் தொகுதிகள் இருந்த காணிக்குள் நுழைந்தோம். அத்தொகுதியிலிருந்த வாகனத் தரிப்பிடத்தில் வாகன மறைப்பில் மூவரும் அமர்ந்துகொள்ள, அகிலன் வாடகை வாகனத்தை அழைத்துவரச் சென்றார்.

பெரும் எதிர்பார்ப்பைச் சுமந்துகொண்டு, ஏற்கெனவே நிகழ்ந்த பல நிகழ்வுகளை அறிந்திருந்ததால் அச்சத்தின் மத்தியில் சுவிற்சர்லாந்திற்குள் நுழைய முனைந்தபோதும் இடையூறு ஏற்படாமல் ஜெனீவா நகரை வந்தடைந்ததில் அளவிடமுடியாத மகிழ்ச்சி...

சுவிற்சர்லாந்து

(1985 - 2001, 2014)



நிலப்பகுதிகள், மலைகளால் சூழப்பட்ட மத்திய ஐரோப்பிய நாடு சுவிற்சர்லாந்து. இதன் எல்லைகளாக ஜேர்மன், பிரான்ஸ், இத்தாலி, ஒஸ்ரியா, லெய்கெஸ்டீன் ஆகிய நாடுகள் உள்ளன. கிட்டத்தட்ட இலங்கையின் பாதி நிலப்பரப்புக்குச் சமனான 41,285 சதுர கிலோ மீற்றர் பரப்பளவையும் ஒழுங் கற்ற நாற்சதுரத்தையுமுடைய சுவிற்சர்லாந்து அதிகமான மலைநிலப் பகுதிகளைக் கொண்டது. அல்ப்ஸ் மலை, நாட்டின் மத்தியில் காணப்படும் உயர்ந்த மலைப் பகுதியாகும். அதிலுள்ள 'டூஃபோர்ஸ் பைட்ஸ்' சிகரத்தின் உயரம் 4,634 மீற்றர். மத்திய பகுதியில் 72 அருவிகளையும், பனிப்பாளங் களையும் கொண்ட அநேக பள்ளத்தாக்குகள் காணப்படுகின்றன. இந்த அருவிகள் ஜெனீவா ஏரி அல்லது லக் லெமன், சூறிச் ஏரி, நியூ சாடெல் ஏரி, கான்ஸ்டன்ஸ் ஏரி போன்றவற்றைச் சென்றடைகின்றன.

26 மாநிலங்களைக் கொண்ட சமஷ்டி கூட்டாட்சி குடியரசு அரசியலமைப்பில் சிறப்புற விளங்குகிறது சுவிஸ். கூட்டாட்சிக் குடியரசில் எடுக்கப்படும் எந்தவொரு தீர்மானமென்றாலும் மாநிலங்கள் ரீதியில் பொதுசன வாக்கெடுப்புக்கு விடப்பட்டு மக்கள் வழங்கும் தீர்ப்பின் பிரகாரமே நிறைவேற்றப்படும். எல்லாத் தீர்மானங்களும் வெற்றி பெறுமென்று சொல்வதற்கில்லை.

கூட்டமைப்பு குடியரசின் அதிகார தலைமையிடமாக பேர்ண் நகரம் உள்ளது. முன்னர் சூறிச் நகரமே தலைநகரமாக இருந்தது. அந்நகர் சுவிற்சர்லாந்தின் ஓரமாக இருப்பதாகக் கருதியதால் மக்களின் தீர்ப்புக்கமைய மையப்பகுதியில் உள்ள பேர்ண் நகருக்கு மாற்றப்பட்டது. சுவிஸின் பொருளாதார மையங்களாக ஜெனீவா, சூறிச் மாநிலங்களும் சுற்றுலாப் பயணிகளைக் கவருவனவாக லுசேண், இன்ரலாகன், பிறிக் போன்ற மாநிலங்களும் திகழ்கின்றன.

நடுநிலைத் தன்மையுடைய வரலாற்றைக்கொண்ட சுவிற்சர்லாந்து 1815 ஆம் ஆண்டிலிருந்து சர்வதேச அளவில் எந்தப் போரிலும் பங்கு

பெறவில்லை. உலகில் மிகத் தொன்மையான மக்கள் ஆட்சியைக் கொண்ட நாடாக விளங்குகிறது. 01.08.1291 விடுதலையடைந்த தேசிய தினமாக அனுசரிக்கும் இந்நாட்டில் ஜேர்மனி, பிரான்ஸு, இத்தாலியம், ரோமானிச்சு முதலிய நான்கு தேசிய மொழிகள் பாவனையிலுள்ளன. இவற்றில் ரோமானிச்சு ஆதி மொழியாகும்.

உலகத்தின் சொர்க்கபுரி எனவும் எழில்மிகு, தூய்மையான நாடு எனவும் புகழ்பெற்ற சுவிற்சர்லாந்தில் உலகத்தின் மையப் புள்ளியாக அடையாளப்படுத்தப்பட்ட இடம் 'வோ' மாநிலத்திலும், சுவிஸின் மையப் புள்ளியாக அடையாளப்படுத்தப்பட்ட இடம் 'இன்ரலாகன்' நகரிலும் உள்ளன. இவற்றுக்கான அடையாளக் கோபுரங்களை அவ்வவ்விடங்களில் காணலாம்.

பாலாடைக்கட்டி (Chees) மற்றும் பலரக கொக்கோ மிட்டாஸ் (Chocolate) உற்பத்தியிலும் தரத்திலும் முதன்மையாக விளங்குகிறது. றடோ, றொளைக்ஸ் போன்ற உலகப் புகழ்பெற்ற கைக்கடிகாரங்கள் இங்கு உற்பத்தி செய்யப்படுகின்றன. அதிக வருவாயைத் தருவனவாக வங்கிகள் இயங்குகின்றன. உலகிலுள்ள பண முதளைகள் பலரினது பணம் பிறர் அறிய முடியாதவாறு இங்கு இயங்கும் கறுப்பு வங்கிக் கணக்கில் வைப்பிலிடப் படுகின்றது. இடையிடையே உலகப் பனிச்சறுக்கல் போட்டிகள் நடை பெறுகின்ற சுவிஸில், குளிர்காலத்தில் திரளான மக்கள் மலைப்பகுதிகளை நோக்கி உற்சாகமாக பனிச்சறுக்கலுக்குச் செல்வதை காணலாம்.

0000

சுவிற்சர்லாந்து நுழைந்து ஜெனிவா நகர் எல்லைப்பகுதியில் அரை மணி நேரக் காத்திருப்பின் பின்னர், நாங்கள் பதுங்கியிருந்த வாகனத் தரிப்பிடத்தை நோக்கித் திரும்பியது வாகனமொன்று. எமக்குப் பயம் உண்டாக ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டோம். வாகனம் நெருங்கியதும் வாகனத்தின் முன்பக்க மேற்பகுதியில் மஞ்சள் நிற ஒளியில் காணப்பட்ட TAXI என்னும் கறுப்பு நிற எழுத்து வாடகை தானுந்துவென அடையாளம் காட்டியதால் ஆறுதல். அகிலன் தானுந்துவிலிருந்து இறங்கியதைக் கண்டதும் மறைவிலிருந்து வெளிப்பட்டு தானுந்துவை நோக்கி விரைந்து நாம் ஏறிக் கொண்டதும் புறப்பட்ட தானுந்து சிறிது நேரத்தால் ஜெனிவா தொடருந்து நிலையத்தில் தரித்தது.

நாம் போகவேண்டிய இடம் போர்ண் நகர் என்று அகிலன் கூறினார். நாம் தொடருந்து நிலையத்தை அடைந்தபோது போர்ண் நகருக்கான தொடருந்து புறப்பட்டுவிட்டது. அடுத்து லவுசான் தொடருந்து மட்டும்தான் புறப்படவிருந்தது. அங்கு தரித்து நிற்பது ஆபத்து என்பதால் பிரயாணச் சிட்டையை இயந்திரத்தில் எடுத்துக் கொண்டு லவுசானுக்கான தொடருந்தில் ஏறிக்கொண்டோம் பயத்தின் மத்தியில்.

நேரம் தாமதமானபடியால் லவுசான் தொடருந்து நிலையத்திலும்

போர்ணுக்கான தொடருந்து சேவை எதுவும் இருக்கவில்லை. வேறு வழியில்லாத நிலையில் வாடகை தானுந்துவில் பேர்ண் செல்ல முடிவெடுத்தோம். 1,000 பிறாங் கூலி கேட்டார் சாரதி. எம்மிடமிருந்த பிரான்ஸிய பிறாங் இனை தொடருந்து நிலையத்தில் பணமாற்றம் செய்துகொண்டு வாடகை தானுந்துவில் புறப்பட்டோம் பேர்ண் நகர் நோக்கி.

வாடகை தானுந்து சாரதிகளில் சிலர் பொலிசாருக்குத் தகவல் கொடுத்து புதிதாக நுழைபவர்களைக் காட்டிக்கொடுத்துள்ளதாக ஏற்கெனவே அறிந்திருந்தோம். அதனால் உள்ளூர பயமிருந்தது. அகிலன் கூடவே இருந்த படியால் வெளியே காட்டிக்கொள்ளாமல் இருந்தோம்.

பேர்ண் நகரத்தை அடைய அதிகாலை 1.00 மணியாகிவிட்டது. நாம் தங்குவதற்கு செல்லவுள்ள இடத்துக்கு சற்று துரத்தில் தானுந்துவை நிறுத்தி பணத்தை செலுத்தி அதனை அனுப்பிய பின்னர் எம்மை நடையில் அழைத்துச் சென்றார் அகிலன் சாரதி அறியாதிருப்பதற்காக.

எம்மை அழைத்துச் சென்று, சற்றுமுன் இருந்த கட்டடத்தின் சாளரங்களில் ஒன்றைத் தட்டினார். சட்டென சாளரக் கதவு திறபட, சிலர் சட்டங்களைக் கையில் வைத்தவாறு நின்றனர். எமக்குப் பயம் தொற்றிக் கொண்டது. இதயம் வேகமாக அடித்தது. அகிலனை அவர்கள் அடையாளம் கண்டதால் உள்ளே அழைத்தனர். குறுக்கு கம்பிகள் இல்லாத சாளரத்தால் நுழைந்த அகிலன் வாசல் கதவைத் திறந்ததும் நடுக்கத்துடன் நுழைந்தோம்.

அன்று யாழ்ப்பாணத்து ஆட்களுக்கும் புங்குடுதீவு ஆட்களுக்கு மிடையே சண்டை நடைபெற்றதாம். புங்குடுதீவு ஆட்கள் தேடிவந்தால் தடுப் பதற்கான பாதுகாப்பு ஏற்பாட்டுடன்தான் அங்கு அனைவரும் தங்கியி ருந்தார்களாம். அதனால் ஏற்பட்டதே இந்த நிலை. பேர்ண் நகரில் இவ்வாறு மாறிமாறி அடிக்கடி சண்டை நடைபெறுவதை பிரான்ஸில் இருக்கும்போது அறிந்திருக்கிறோம். இங்கு, ஆடு ஒன்றைத் திருடி வெட்டியதால் காவல் துறையிரனரால் கைது செய்யப்பட்ட நிகழ்வையும் அறிந்துள்ளோம்.

பெரியதொரு மண்டபத்தை அறைகளாக பிரித்து தடுத்து அடைக் கப்பட்டதுபோல பல அறைகள் அங்கு இருந்தன. அவற்றில் ஒரு அறையில் நாம் தங்கவிடப்பட்டோம். சற்றுமுன் சட்டங்களுடன் சிலரைக் கண்ட காட்சி நினைவில் பூதாகரமாக விரிந்திருந்தது. சண்டை காரணமாக காவல்துறை பார்வையிட வந்தால்...! நினைக்கவே நடுங்கியது. அதனால் உடல் அசதியிலும் உறக்கம் வர மறுத்தது.

அதிகாலை சற்றுத் தாமதமாகவே எழுந்தோம். அது ஒரு அகதி முகாம். பல தமிழர்கள் அங்கு இருந்தார்கள். குளியலறைகள், மலகூடங்கள், சமையலறையில் பல அடுப்புகள் பொதுவாக இருந்தன. ஒவ்வொரு அறைகளிலும் மூன்று பேர் தங்கக்கூடிய வசதி செய்யப்பட்டிருந்தது. எல்லோரும் சரளமாகப் பழகினார்கள். ஆனாலும் எமக்கு அங்கிருக்கப் பயமாகவே இருந்தது. அன்று ஞாயிற்றுக்கிழமை அரச அலுவல்கள் எதுவும்

செய்யமுடியாத நிலை. சண்டை எதுவும் ஏற்படக் கூடாதென்று கடவுளை வேண்டிக்கொண்டு நீராடி உடை மாற்றிக் கொண்டோம்.

புங்குடுதீவைச் சேர்ந்தவர்கள் அதிகமாக வாழும் பேர்ண் நகரில் நிலவிய பதட்டம், ஏற்கெனவே அறிந்திருந்த சில பிரச்சினைகள் காரணமாக எமது வரவை அந்நகரில் பதிவுசெய்து கொள்வதற்கு நாம் விரும்பவில்லை. அச்சுவேலியைச் சேர்ந்தவர்கள் அதிகமாக வாழும் பாசல் நகரில் பதிவு செய்துகொள்ள அகிலன் விரும்பவில்லை. அங்கும் இடையிடையே பிரச்சினைகள் ஏற்படுகிறதாம். அதனால் லவுசான் நகரில் பதிவதற்கு முடிவெடுத்து திங்கட்கிழமை காலை தொடருந்தில் உரிய ஆவணங்களுடன் புறப்பட்டோம்.

லவுசான் தொடருந்து நிலையத்தில் இறங்கி எதிர்ப்புறமாக இருந்த 'மைக்டோனாஸ்' உணவகத்தில் மதிய உணவை அருந்திய பின்னர் வாடகை தானுந்துவில் பொலிஸ் தலைமை அலுவலகத்திற்கு சென்றோம். அங்கு உரிய ஆவணங்களை ஒப்படைத்து அகதி அந்தஸ்து கோரி பதிவுசெய்து கொண்டதும் சமூகசேவை அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டோம்.

சமூகசேவை அலுவலகத்தில் 30 பேர் வரையில் தமிழர்கள் நின்றனர். ஒழுங்கின்படி உரிய பதிவுகளை மேற்கொண்டதும் செலவுக்கென 350 சுவிஸ் பிராங் வழங்கி 30 கி.மீ. தூரத்திலுள்ள மொன்றெக்ஸ் (Montreux) என்ற இடத்திலுள்ள 'பென்சன் வில்லியம்' என்னும் ஹொட்டலுக்கு அனுப்பப்பட்டோம்.

மொன்றெக்ஸ்

பிரான்ஸிய மொழியில் 'மொன்திறோ' என அழைக்கப்படும் மொன்றெக்ஸ், சுவிற்சர்லாந்தில் பிரான்ஸிய மொழியை ஆட்சி மொழியாகக் கொண்ட 'வோ' மாநிலத்தில் உள்ள ஒரு நகரமாகும். 'வோதுவா' என பிரான்ஸிய மொழியில் அழைக்கப்படும் வோ மாநிலத்தின் தலைநகரம் 'லுசான்' என்னும் லவுசான்.


மொன்றெக்ஸ், சுவிற்சர்லாந்தின் மத்திய பகுதியிலுள்ள அல்ப்ஸ் மலைத்தொடரின் சரிவில் அமைந்துள்ளது. மலைத்தொடர் மற்றும் உயர்ந்த குன்றுகளிலிருந்து சாய்வாக தெற்கு, தென்கிழக்குப் பக்கமாக உள்ள 'லெமன் ஏரி' வரை செல்கிறது தரையமைப்பு.

'லெமன் ஏரி' ஆனது மொன்றெக்ஸின் கிழக்குப் பக்கமுள்ள 'வில்நொவ்' என்ற நகரிலிருந்து ஜெனீவா நகர்வரை நீண்டு காணப்படுகிறது. இதனை 'ஜெனீவா ஏரி' என்றும் அழைப்பர். மொன்றெக்ஸிற்கு எதிர்ப்புறமாக அதாவது லெமன் ஏரியின் மறுபக்கம் பிரான்ஸ் மற்றும் சுவிஸ் நகரங்களைக் கொண்ட மலைப்பகுதியான 'மிடி' (Midi) மலைச்சாரல் உள்ளது. அல்ப்ஸ் மலைச்சாரலும் மிடி மலைச்சாரலும் சாய்வாக லெமன் ஏரியில் ஒன்றை யொன்று சந்திப்பதால் லெமன் ஏரி மிகவும் ஆழமானதாகவும் கணிசமான நீரைத் தேக்கி வைக்கக்கூடிய தன்மையிலும் உள்ளது.

33.4 ச.கி.மீ பரப்பளவைக்கொண்ட இந்நகரில் 50% காட்டுப் பகுதிகளாகும். இதில் 25% விவசாயத் தேவைகளுக்குப் பயன்படுத்தப்படுகிறது. 12ஆம் நூற்றாண்டில் சரிவு நிலங்களில் வைன் திராட்சை வளர்ப்பில் முக்கியமான பிராந்தியமாக இருந்துள்ளது இந்நகர். பின்னாளிலும் திரளான திராட்சைத் தோட்டங்களைக் காணக்கூடியதாக இருந்தது. 19ஆம் நூற்றாண்டில் சுற்றுலாத்துறையின் வளர்ச்சியால் பல ஹொட்டல்கள் தோன்றிட ஐரோப்பிய, அமெரிக்க பணக்காரர்களை மிகவும் ஈர்ந்தது இந்நகர்.

வில்நொவ்விலிருந்து ஜெனீவா வரை உள்ள லெமன் ஏரியின் இரு பக்கங்களிலும் உள்ள நகரங்களுக்கு (பிரான்ஸ் நகரங்கள் உட்பட) பல அடுக்குகளைக் கொண்ட பயணிகள் நீரூர்தி, லோஞ்சி போக்குவரத்துகள் இடம் பெறுகின்றன. சிறிய படகு பயணங்களுடன் கடல்சார் போட்டிகளும் அடிக்கடி நடைபெறுவதையும் காணலாம்.

லெமன் ஏரியோரம் பழமைவாய்ந்த கோட்டை ஒன்று உள்ளது. இக்கோட்டைக்கு தரைப்பாதை மற்றும் நீரூர்திகள் - படகுகள் மூலம் ஏரியால்



செல்லவும் முடியும். ஒரு தடவை நீரூர்தியில் பயணித்த போது கோட்டைக்குள் நுழைந்து பார்க்கக்கூடியதாக இருந்தது. ஏரி நீர் உட்புகாத வாறு பாதுகாப்பாகக் கட்டப் பட்டுள்ள கோட்டையின் உட்புறம் அமைந்துள்ள பண்டைய வாசஸ்தலங்கள் வியப்பில் ஆழ்த்தின. திறந்த மண்டபம் போன்ற இடத்தில் இருந்த அருங்காட்சியகத்தில் புராதன பொருட்கள் பல பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன. பெரும்பாலானவை காலத்துக்குக் காலம் போர்களில் பயன்படுத்தப்பட்ட ஆயுதங்களாகவே இருந்தன.

லெமன் ஏரியை இலக்காக கொண்டு, பிரதான வீதியான அல்ப்ஸ் வீதியின் இருபுறமும் பல றெஸ்ற்ரோறன்ஸ்கள், பழமையைப் பறை சாற்றும் கட்டடங்கள் பல காணப்படுகின்றன. மலைச்சரிவில் அமைந்துள்ள குடியிருப்புகள், ஹொட்டல்கள், மண்டபங்கள் நெடிதுயர்ந்த மரங்களுடன் இணைந்து அவை அழகைக் கொடுத்தது.

பல வசதிகளுடன் கூடிய பிரமாண்டமான கட்டடமாக கஸ்னோ (Casino) சூதாட்ட நிலையம் உள்ளது. இது சுவிஸிலேயே பிரபல்யமானது மட்டுமல்ல, தினம் தினம் பலநூறு பேர் ஒரே நேரத்தில் சூதாட்டத்தில் பங்கு கொள்ளும் இடமாகவும் உள்ளது. 'ஹொட்டல் மொன்றெக்ஸ் பலஸ்' (Hotel Montreux Palace) அரண்மனை போன்று காணப்படுகிறது. 'ஹொட்டல்

அல்ப்ஸ்' (Hotel des Alpes) முன்னைய சிறப்பைப் பறைசாற்றி நிற்கிறது. இது 'Grand Hotel' எனவும் அழைக்கப்படுகிறது.

'மொன்றெக்ஸ் இசை, மகாநாட்டு மண்டப'த்தில் ஒவ்வொரு ஜூலை மாதமும் நடைபெறும் 'மொன்றெக்ஸ் ஜாஸ் விழா' உலகப் பிரசித்தி பெற்ற ஒன்றாகும். 1967ஆம் ஆண்டிலிருந்து நடைபெறும் இவ்விழாவிற்கு பன்னாடு களிலிருந்து நிகழ்ச்சியாளர்களும் பார்வையாளர்களும் வருகைதருவர். 'மொன்றெக்ஸ் இசை விழா' நிகழ்ச்சி 1946 ஆம் ஆண்டிலிருந்து வருடத்தில் செப்ரெம்பர் மாதத்தில் இடம் பெறுகின்றது. ஒரு வாரம் தொடராக நடை பெறும் இவ்விரண்டு விழாக்களின்போதும் கஸ்னோ நிரம்பி வழியும்.

புகலிட வதிவிடம்

மொன்றெக்ஸில் மூன்று மாடிகளைக்கொண்ட 'பென்சன் வில்லயம் ஹொட்டலில்' ஒரு அறையில் இருவர் வீதம் மூன்று மாடிகளிலுமிருந்த அறைகளில் தங்க வைக்கப்பட்டோம். தனித்தனி கட்டில்கள் இருந்தன. குளியலறை, மலசலகூடம் பொதுவாக இருந்தது. அங்கு மொத்தமாக 18 தமிழர்கள், இரண்டு ஆப்பிரிக்க நாட்டவர் களுடன் யூகோசெலாவாக்கி யாவைச் சேர்ந்த ஐந்துபேர் அடங்கிய குடும்பமும் இருந்தது.




காலை 7.30 மணிக்கு கோப்பியுடன் காலை உணவும் இரவு 7.30 மணிக்கு இரவு உணவும் ஹெட்டலில் வழங்கப்பட்டன. இரவு உணவாக வாரத்தில் நான்கு வகையான உணவுகள் தரப்படும். மதிய உணவுக்காக இரண்டு வாரங்களுக்கு 350 சுவிஸ் பிறாங் வழங்கப்பட்டது. அங்கு எம்மவரின் உணவைச் சமைக்க சமையலறை இல்லாமையால் அந்நாட் டவரின் உணவே சாப்பிட வேண்டியதாயிருந்தது.

புரட்டஸ்தாந்து மதபோதகர் 'லொயின் பேர்ஹர்', நாம் தங்கியுள் ஹொட்டலின் அருகாமையில் வசிப்பதால் எமக்குப் பலவகையிலும் ஒத்தாசையாய் இருந்தார். எந்த உதவியையும் மறுப்பின்றி செய்துவந்தார். சில நாட்களால் அவரால் ஏற்பாடு செய்து தரப்பட்ட பாலர் பாடசாலை சமையலறையில் மதிய உணவை சமைத்தோம். அந்த பாடசாலை இயங்கும் கட்டடம் முன்னர் வழிபாட்டுத் தலமாக இருந்துள்ளது. அங்கு நடைபெறும் பாலர் பாடசாலை காலை 11.00 மணிக்கு முடிந்துவிடும் அதன் பின்னர் நாம் பயன்படுத்தினோம். இதுதவிர, எம்மவருக்கு இலவசமாகப் பிரான்சிய மொழி கற்பிக்க தனது மருமகளை ஏற்பாடு செய்தார். லவுசானில் வசிக்கும் அவர் ஒரு

ஆசிரியையாகும். வாரத்தில் மூன்று நாட்கள் பிற்பகல் வருகைதந்து எமக்கு கற்றுத்தந்தார்.

தமிழர்கள் பலர் ஒரே இடத்தில் இருப்பதால் உள்ளக விளையாட்டுகள் மற்றும் சுற்றாடலிலுள்ள இடங்களை இணைந்து சுற்றிப் பார்ப்பதால் பொழுது இலகுவாகக் கழிந்துவிடும். ஹொட்டலிலிருந்து வடக்கு நோக்கிச் செல்வதானால் உயரமாக ஏறியே செல்லவேண்டும். தெற்கு நோக்கிச் செல்வதானால் சரிவாக இறங்கிச் செல்லவேண்டும். நடந்து செல்வதற்கு வசதியாக கற்கள் பதித்த பாதைகள் பல அங்கு உண்டு.

தொடருந்து நிலையத்தின் மேடை பென்சன் வில்லயம்ஹொட்டல் வரை நீண்டு உள்ளது. 150 மீ. துரத்தில் பல விற்பனை நிலையங்களும் அடுத்து 'கசினோ'வும் கசினோவின் பின்புறம் லெமன் ஏரியும் உள்ளன. சாயந்தரமானால் லெமன் ஏரியுடனான வீதி மக்களால் களைகட்டியிருக்கும். விடுமுறை நாட்களில் மேலும் அதிகமான மக்களைக் காணலாம். ஏரியின் அணைக்கட்டு மற்றும் இருக்கைகளில் இருந்தாலே போதும் நேரம் சிரமமின்றி கழிந்துவிடும்.



ஏரியின் இருபுறமும் எதிரெதிரே இருக்கும் வானுயர்ந்த 'மிடி' (மத்திய) மலை மற்றும் அல்ப்ஸ் மலைகள், அவற்றில் நெடிதுயர்ந்து வளர்ந்துள்ள ஊசியிலை மரங்கள், இடையிடையே தெரியும் கட்டடங்கள், உச்சியிலிருந்து வழிந்து வரும் அருவிகள், உச்ச வெயில் காலங்களிலும் கரையாது இருக்கும் உறைபனி போன்ற வற்றை சலிப்பின்றி பார்த்து இரசிக்கலாம்.


ஏரியின் கரையை நெருங்கியதாக பவனிவரும் நீரூர்திகள், லோஞ்சிகள், ஆங்காங்கு படகோட்டப் போட்டிபோல வேகமாக ஓடித் திரியும் படகுகள், 'நீர்ச் சறுக்கு பலகை' *(Water ski)* இரண்டை படகு ஒன்றுடன் நீளமான கயிற்றால் இணைத்து, படகு வேகமாக இழுக்க பலகைமேல் நின்று மிதந்து சீறிப் பாய்ந்து இழுபட்டுச் செய்யும் சாகசங்கள், கட்டுமரத்தின் ஒற்றை மரம் போன்ற சிறிய மிதவையின் (ஓடத்தின்) மத்தியில் நின்று, விரித்தவாறு பொருத்தப்பட்ட பாயைக் கைகளால் பிடித்து காற்றின் உந்தலால் வேகமாகச் செலுத்தும் 'காற்றோடத்தின்' *(Windsurfing)* விளையாட்டு போன்றவை கண்ணுக்கு விருந்தாக இருக் கும்.

வாகனப் போக்கு வரத்துக்குத் தடைசெய்யப் பட்ட ஏரியுடன் மருவிய அகன்ற வீதியில் சிறுவர் முதல் வாலிபர் வரை இரண்டு கால் பாதங்களுக்கும் பூட்டப்பட்ட தனித்தனி 'உருளை'களுடன் *(Roller)* வளைந்து - நெழிந்து ஓடி

- பாய்ந்து காட்டும் வித்தைகள், சிறுவர்களின் 'நடைபாதை மிதிவண்டி'யில் (Scooter - பிரான்சிய மொழியில் Trottinette) ஒற்றைக்காலை வைத்து மறுகாலால் தரையில் ஊன்றிக் கைப்பிடியைப் பற்றியவாறு சுற்றிச் சுழன்று வரும் காட்சிகள் எனச் சுற்றாடல் கலகலப்பாக இருக்கும்.

மூன்று அடி நீளமுள்ள அன்னப் பறவை (Swam) முதல் பலவகை சிறிய மத்திய அளவிலான வாத்துக்கள் பல கூட்டம் கூட்டமாக உலாவரக் காணலாம். வாத்துக்கள் இடையிடையே உயர எழுந்து, வீழ்ந்து சாகசம் செய்வ துடன் தடுப்பு அணையோரம் நின்று பார்வையாளர் போடும் உணவை உண்பதற்கு போட்டி போடுவதைப் பார்க்க மகிழ்வாக இருக்கும். அன்னப் பறவை வானோக்கி கணிசமான உயரத்திற்கு எழுந்து வட்டமிட்டுப் பறந்து, பின்னர் ஏரியில் வீழ்ந்து மூழ்கி பார்வையாளரை மகிழ்விக்கும். இத்தனை பெரிய அன்னப் பறவைகள் இவ்வளவு உயரத்தில் பறந்ததை இங்குதான் பார்த்திருக்கிறேன்.

ஞாயிறு மற்றும் விடுமுறை நாட்களில் இரட்டிப்பு மகிழ்ச்சியாக இருக்கும் சிறிய இசை நிகழ்ச் சிகள், விளம்பர நிகழ்ச்சிகள், சிறுசிறு குழக்களின் விளை யாட்டுக்கள், புதிதாக முளைத்த தற்காலிக உணவகங் கள் மேலும் மகிழ்வூட்டு பவையாக இருக்கும். ஏரியின் அணையில் நின்று தூண்டில் மூலம் மீன் பிடிப்பதற்கும், ஆழமான ஏரியென்பதால் பாதுகாப்பு காரணங்களுக்காக நீராடவும் தடை. இருந்தபோதும் நாம் வாரத்தில் இரு நாட்கள் ஒரு இடத்தை தெரிவுசெய்து நீராடுவது வழமை. வருடத்தில் இரண்டு மாதங்கள்தான் அவ்வாறு நீராட முடியும். ஏனைய நாட்களில் நீர் கடுங் குளிராக இருக்கும்.


காற்றோடம்

போதகர் எமக்கு பலவகையிலும் உதவி ஆலோசனை வழங்கி வருவதால் நாம் அனைவரும் மத வேறுபாடு இன்றி அவர் வழிபாடு செய்யும் ஆலயம் சென்றுவர முடிவெடுத்தோம். ஒரு தடவையேனும் போதகர் எம்மை ஆலயம் வருமாறு அழைத்ததில்லை. அந்த ஆலயம் வடக்குப் பக்கமுள்ள மலைச் சாரரில் கிட்டத்தட்ட 400 மீ. உயரத்தில் இருக்கிறது. சரிவான நடை பாதையால் ஏறிச் செல்ல வேண்டும். பழமையைப் பறைசாற்றும் ஆலயம் அது.

எமக்கு ஆலயம் புதிது மட்டுமல்ல வழிபாட்டுக்கென ஆலயத்துக்கு வந்திருப்பவர்களுக்கு நாமும் புதிது. அனைவரும் எம்மை ஆச்சரியமாகப் பார்த்தனர். மறையுரையின்போது போதகர் எம்மைப் பற்றிய தகவலைத் தெரியப்படுத்த தவறவில்லை. வழிபாடு முடிந்த பின்னர் அங்கு வந்திருந்த

அனைவரும் கரந்தந்து தமது மகிழ்வை, அனுதாபத்தைத் தெரிவித்தனர். ஆலயத்துக்கு வெளியே மேசைகளில் சிற்றுண்டி, கோப்பி, வைன் போன்றவை வைக்கப்பட்டிருந்தன. நாமும் இணைந்து அருந்தி விடைபெற்றோம். ஒவ்வொரு ஞாயிறு வழிபாட்டுக்கும் ஒரு குடும்பத்தினர் இந்த ஏற்பாட்டைச் செய்வதாக பின்னர் அறிந்தோம்.

பல ஐரோப்பிய நாட்டவர்கள் வசிக்கும் இடமாக உள்ள மொன்றெக்ஸில் சில துவேஷிகளும் இருக்கவே செய்கின்றனர். குறிப்பாக முதியவர்களிடமே துவேஷம் காணப்படுகிறது. ஒருதடவை நாம் நால்வர் மிக்றோஸ் என்னும் வர்த்தக நிலையம் சென்று பொருள்களைக் கொள்வனது செய்து திரும்பும்போது எதிரே வந்த ஒரு வயோதிப மாது எம்மைப் பார்த்துவிட்டு காரணமில்லாது எச்சிலைத் தரையில் துப்பிச் சென்றார்.

இந்த நிகழ்வை போதகரிடம் கூறியதும் அவர் மிகவும் வேதனைப் பட்டார். அடுத்துவந்த ஞாயிறு வழிபாட்டில் எமக்கு நடந்த நிகழ்வு பற்றி பழைய ஏற்பாட்டில் மோயீசனுடன் இடம்பெயர்ந்த மக்களை ஒப்பிட்டு அரை மணித்தியாலம் வரை மறையுரையாற்றினார். உணர்ச்சி வசப்பட்டவராகக் காணப்பட்டார் அவர். வழிபாடு முடிந்து சிற்றுண்டி அருந்தும்போது அங்கு நின்ற அனைவருமே தமது வேதனையை வெளிப்படுத்தினர். இந்தச் சம்பவம் சுவிஸில் நடந்ததற்காக மன்னிப்புக் கேட்டனர்.

ஒன்றுகூடல்

சுவிஸ் வாழ் மக்களது அனுதாபத்தைப் பயன்படுத்தி, துவேஷ வெளிப்பாடு தொடராத வகையில் செய்யக்கூடிய முன்னெடுப்பாக ஒன்று கூடல் ஒன்றை ஏற்பாடு செய்வது பற்றி ஹொட்டலில் இருந்த தமிழர்கள் மத்தியில் தெளிவுபடுத்தினேன். எனது எண்ணப்படி மொன்றெக்ஸ் வாழ் மக்களுக்கும் தமிழ் மக்களுக்குமான ஒன்றுகூடல் நிகழ்வதை அனைவரும் ஏற்றுக் கொண்டனர். ஏற்படுகின்ற செலவை பகிர்ந்து கொள்வதாக இணங்கிக்கொண்டனர்.

எமது முடிவை போதகரிடம் தெரிவித்தபோது விருப்புடன் ஏற்றுக் கொண்ட அவர், தன்னால் வழங்கக்கூடிய ஒத்துழைப்பை வழங்குவதாக கூறியமைக் கமைய எமது முன்னெடுப்பை ஆரம்பித்தோம். என்னுடைய எண்ணத்திற்கே செயல்பட 18 நண்பர்களும் அனுமதியளித்ததால் இலகுவாக இருந்தது.


போதகர் லொயின் போர்ஹருடன்

மொன்றெக்ஸில் வசிக்கும் மக்களில் முக்கியஸ்

தர்கள், சமூக சேவை ஆர்வலர்கள் மற்றும் ஒத்துழைப்பு வழங்கக்கூடியவர்களை பரவலாகத் தெரிவுசெய்து அழைப்பு விடுக்கும் பொறுப்பை போதகரிடம் ஒப்படைத்து, அவர் மூலமே அழைப்பிதழைத் தயார்செய்து வழங்க ஏற்பாடு செய்தேன். ஒன்றுகூடலுக்கு சமூகமளிப்போருக்கு இரவு உணவு வழங்குவதற்கும், சிறிய நாடகம் ஒன்றை மேடையேற்றுவதற்கும், இலங்கைப் பிரச்சினை மற்றும் அங்கு நடந்துகொண்டிருக்கும் துன்பியல் நிகழ்வுகளை காட்சிப்படுத்தல் மூலம் வெளிக்கொண்டு வருவதற்குமான திட்டத்தை நண்பர்களுக்குத் தெரியப் படுத்தி சம்மதத்தைப் பெற்றுக்கொண்டு பணியைத் தொடர்ந்தேன்.



உணவு தயாரிப்பு, தேவையானவற்றைக் கொள்வனவு செய்தல் போன்ற வேலைகளை ஏனையோர் பொறுப்பேற்க, இலங்கையில் எமது மக்களின் துயரங்களுடன் இயேசுவின் பாடுகளை ஒப்பிட்டு அரை மணித்தியால நாடகத்தை எழுதி அதனை நெறிப்படுத்தும் பணியை நான் மேற்கொண்டேன். யாழ்ப்பாணத்தில் 40இற்கும் மேற்பட்ட நாடகங்களை எழுதி நெறிப்படுத்திய அனுபவம் இதற்குக் கைகொடுத்தது. ஒன்றுகூடலில் கலந்துகொள்பவர்கள் மத்தியில் அரசியல் நோக்கம் கொண்டது என்ற எண்ணம் தோன்றக்கூடாது என்பதற்காக, எமது மண்ணில் நிகழும் அவலங்களுக்குப் பொருத்தமான வேதாகம வாக்கியங்களைச் சேகரித்து, அதனை பிரெஞ்சு மொழியில் பெரிதாக எழுதி, அதற்கு ஒத்தனவான படங்களை இணைத்து காட்சிப்படுத்தலுக்கு ஏற்றவாறு அனைத்தையும் தயார்செய்து முடித்தேன்.

1985 ஐப்பசி 26 சனிக்கிழமை பி.ப. 5.00 மணிக்கு பாலர் பாடசாலை மண்டபத்தில் ஆரம்பமாகவுள்ள ஒன்றுகூடல் பற்றிய தகவலை, போதகரின் ஏற்பாட்டில் பத்திரிகைகள் முன்னுரிமை கொடுத்து வெளிப்படுத்தின. அழைப்பிதழ் மற்றும் பத்திரிகைத் தகவலால் நூறுக்கும் மேற்பட்ட மொன்றெக்ஸ் வாசிகள் கலந்து கொண்டனர். எம்மால் காட்சிப்படுத்தப்பட்ட தகவல்கள், படங்களை ஆர்வமாக பார்வையிட்டு தமக்குள்ளே பேசிக் கொண்டனர். சிலர் கண் கலங்கியதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

இலங்கையில் நடைபெறும் நிகழ்கால துன்பியல் நிகழ்வுகளைச் சுமந்த மாந்தர்களுடன், துன்பத்தில் மூழ்கிய கடந்தகால இயேசு தோன்றி துயரின் ஒன்றிப்பை உணர்த்திய நாடகம் பார்வையாளரை வெகுவாக கவர்ந்தது. நாடகம் முடிந்ததும் கலந்துகொண்டவர்களில் சிலர், நாடகம்

மற்றும் காட்சிப்படுத்தல் பற்றிய தமது உணர்வுகளை பிரான்சிய மொழியில் வெளிப்படுத்த, திரு. நமசிவாயம் என்பவர் தமிழில் மொழி பெயர்த்தார். அவர்தான் அன்று அளிக்கைசெய்த நாடகத்தில் இயேசுவின் பாத்திரம் ஏற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. பார்வையாளர்களின் கூற்று நாம் எடுத்த முயற்சிக்குக் கிடைத்த வெற்றியின் சான்றாகியது.

இரவு 7.30 மணிக்கு அனைவருக்கும் உணவு பரிமாறப்பட்டது. 'உப்புமா' கலவை பிரதான உணவாகவும் இறால், கத்தரிக்காய் பொரியலுடன் வெந்தயம் கலந்த பிரட்டலான கறியும், மரக்கறி, பப்படம் போன்றவையும் பரிமாறப்பட்டன. யாழ்ப்பாணத்தவரின் உணவு வகை அவர்களுக்குப் புதிதாக இருந்ததால் அனைவரும் விருப்புடன் அருந்தினர். ஒன்றுகூடல் பற்றி மறுநாள் பத்திரிகைகள் போட்டிபோட்டு வெளிக்கொண்டுவந்த தகவலால் பல விடயங்களை மக்கள் அறியவும், பலரைச் சிந்திக்கவும் செய்தது என்பதை பின்னாளில் ஏற்பட்ட பல மாற்றங்கள் எமக்கு உணர்த்தின.

உறவின் நெருக்கம்

ஒன்றுகூடலின் பின்னர் பலரும், எம்மைச் சந்திக்கும் சந்தர்ப்பங்களில் நாட்டு, குடும்ப நிலைமைகளை அனுதாபத்தோடு விசாரிக்கத் தொடங்கினர். வீடுகளுக்கு அழைத்து அளவளாவலாயினர். எமது தேவைகளைக் கேட்டறிந்து ஆவனசெய்ய முன்வந்தனர். இவற்றின் மூலம் தமிழ் மக்களுக்கும் மொன்றெக்ஸ் வாசிகளுக்குமான நெருக்கம் அதிகமானது.

மார்கழி மாதம் கிறிஸ்மஸ் தினத்தை முன்னிட்டு குடும்பங்கள் பல 20 முதல் 31 ஆம் திகதிகளுள் தமக்கு வசதியான நாளைக் குறித்து எம்மில் இருவர் தம்முடன் உணவருந்த வருமாறு தனித்தனி குடும்பமாக அழைப்பு விடுத்திருந்தனர். போதகர் அவற்றைப் பட்டியலிட்டு என்னிடம் ஒப்படைத்தார். மதியம் மற்றும் இரவு நேர உணவருந்தலுக்கு ஏற்றவகையில் பெயர்ப் பட்டியலைத் தயார் செய்தேன். பிரான்ஸிய மொழியறிவு போதாமை காரணமாக சிலர் செல்லத் தயங்கினர். அவர்களுக்கு சில விடயங்களைத் தெளிவுபடுத்தி சம்மதிக்கச் செய்து போதகரிடம் பட்டியலை ஒப்படைத்து ஒழுங்காக இடம்பெறும் வகையில் ஏற்பாடு செய்தேன்.

உணவருந்தச் சென்றவர்களுடன் தாமும் ஒரே குடும்பமாக அமர்ந்து விசேடமாகத் தயாரிக்கப்பட்ட உணவை அருந்தி மகிழ்ந்தனர். சிலர் ஹொட்டல்களுக்கும் அழைத்துச் சென்றனர். விடைபெறும்போது அன்பளிப்பாக பொருட்களும் சிலர் பணமும் வழங்கத் தவறியதில்லை. இந்த நடைமுறை முதலாவது கிறிஸ்மஸ்ஸுடன் மட்டும் நிற்கவில்லை பின்னரும் தொடர்ந்தது. சிலர் வேலை பெற்றுத் தருவதற்கு முன்வந்து உதவினர். அதனால் நாளடைவில் பலரும் வேலை செய்யத் தொடங்கினர்.

மொன்றெக்ஸ் குடியிருப்பாளருடன் எம்மவருக்கு ஏற்பட்ட நெருக்கமான உறவு காரணமாக, தொடர்ந்த காலங்களில் எமது உணவு

வகைளைப் பரிமாறிக்கொள்வதற்காக இரண்டு தடவைகள் அழைத்திருந் தோம். அந்த இந்த இரண்டு தடவைகளும் 'சால் டு பறோஸ்' என்னும் பெரிய மண்டபத்தில் இடம்பெற்றன. ஒவ்வொரு தடவையும் 200 பேர்வரை வருகை தந்திருந்தனர். பி.ப.5.00 மணிக்கு வடை, கேசரி, யாழ்ப்பாணத்துக் கோப்பி போன்றவற்றுடன் உணவும் வழங்கி மகிழ்வித்து எமது நன்றியைத் தெரிவித்தோம். ஒவ்வொரு தடவையும் பத்திரிகைகள் முன்னுரிமை கொடுத்துச் செய்திகளை படங்களுடன் வெளியிட்டன. சுவிஸ் வாழ் தமிழர்களுக்கு முன்மாதிரிகையாக அமைந்தன இவை.

பெரும்பாலானோர் வேலையில் சேர்ந்துகொண்ட தும் ஹொட்டலை விட்டு வெளியேறி வாடகைக்கு தனி வீடுகள் எடுத்தும் வேலை செய்யும் இடங்களில் தங்கியும் கொண்டனர். எனக்கு வேலை கிடைத்த இரண்டு மாதங் களின் பின்னர் 'அவெனியூ டி கஸ்னோ' வீதியில் குடியேறிக்கொண்டேன். எங்களின் வெற்றிடத்துக்குப் புதியவர்கள் ஹொட்டலில் சேர்க்கப்பட்டனர். எம்மால் மேற்கொள்ளப்பட்ட முன்னெடுப்புகளைச் செய்வதற்கு புதியவர் களுக்கு ஆர்வமிருக்கவில்லை. இருப்பினும் முன்னையோருக்கும், போதகருக்கும், அறிமுகமான மொன்றெக்ஸ் குடியிருப்பாளருக்கும் இடையிலான சந்திப்புகள் தொடர்வதிலிருந்த ஆர்வம் குறையவில்லை.

அல்ப்ஸ் மலைச்சாரலில் 'கிளியோன்' என்னும் நகரிலுள்ள 'ஹொட்டல் றிஹி வோதுவா'வில் வேலையைத் தொடர்ந்தேன். ஒன்றரை ஆண்டுகளின் பின்னர் சுகயீனம் காரணமாக வேலையிலிருந்து விலகி 'றினா' நகரில் (லவுசான் தொடருந்து நிலையத்துக்கு அடுத்துவரும் தொடருந்து நிலையம்) பிரமாண்டமான விற்பனை நிலையத்தில் வேலையில் இணைந்து கொண்டேன். சுவிஸிலிருந்து இலங்கைக்கு நிரந்தரமாகத் திரும்பும்வரை நான் அங்கேயே வேலை செய்து கொண்டிருந்தேன்.

'றினா' நகரில் வேலை செய்தபோதும் அங்கு வீடு கிடைக்காமையால் மூன்று ஆண்டுகள் மொன்றெக்ஸிலேயே வசித்து வந்தேன். அந்நாட்களில் வேலைக்கென மொன்றெக்ஸிலிருந்து அதிகாலை 6.10 மணி தொடருந்தில் புறப்பட்டுச் சென்று சாயந்தரமே வீடு திரும்ப முடியும். இதனால் வேலைக்குச் செல்லும்போது கூடவே காலை மற்றும் மதிய உணவை எடுத்துச் செல்வது வழமை. சிலவேளை விற்பனை நிலையத்திலும் வாங்கி அருந்துவதுண்டு.

தினமும் தொடருந்தில் சென்றுவருவதற்கு மாதாந்த பயணச் சிட்டையைக் கொள்வனவு செய்வதற்குப் பதிலாக வருடம் பூராவும் சுவிஸில் எந்த இடத்திற்கேனும் தொடருந்து, பேருந்து, இழுவை ஊர்தி, லோஞ்சிகள் மற்றும் பயணிகள் நீரூர்தி போன்றவற்றில் எத்தனை தடவையேனும் செற்று வரக்கூடிய பயணச் சிட்டையைக் கொள்வனவு செய்தேன். அது எனக்கு இலாபமாகவும் ஏற்புடையதாகவும் இருந்தது.

வாரத்தில் சனி மற்றும் ஞாயிறு விடுமுறை நாட்களில் வீட்டில் இருப்பதைவிட வேறு இடங்களுக்குச் சென்றுவருவதை விரும்பும் எனக்கு

இந்தப் பயணச் சிட்டை பேருதவியாக இருந்தது. எப்படியும் மாதத்தில் முன்று தடவைகளேனும் சென்றுவரக்கூடிய சந்தர்ப்பம் அமைந்துவிடும். இதனால் சுவிஸில் பத்துக்கும் மேற்பட்ட மாநிலங்களில் உள்ள பல நகர்களுக்குச் சென்று வரக்கூடியதாக இருந்தது. சில இடங்களுக்குப் பல தடவைகள் சென்றுள்ளேன். அவ்வாறு சென்றுவரக் கிடைத்த சந்தர்ப்பங்கள் மகிழ்ச்சிக்குரியவையாக இருந்திருப்பினும் நான் சென்ற நோக்கம், தேவை, சூழ்நிலை காரணமாக பதிவு செய்யக்கூடிய அனுபவத்தை உள்வாங்கியிருக்கவில்லை. அத்தகையதொரு எண்ணத்தைக் கொண்டிருக்கவுமில்லை

வார இறுதி நாட்களில் அமைந்த பெரும்பாலான பயணங்கள் இடங்களைப் பார்வையிடுவதற்கென திட்டமிட்ட பயணங்களாக அல்லாமல் நண்பர்களின் சந்திப்புகள், வைபவங்கள், விழாக்கள், பொது நிகழ்வுகளாக இருந்ததாலும், சில மாதங்கள் குளிர் மற்றும் உறைபனி காலமாக இருப் பதாலும் இடங்களைப் பார்வையிடும் சந்தர்ப்பம் - ஆர்வம் ஏற்படுவதில்லை. அவ்வாறு பார்வையிட்டிருந்தால்கூட பதிவுக்கு ஏற்புடையவையாக இருந்ததா என்பதை கிரகிக்க முடியவில்லை. அதனால், நான் சென்ற நகர்களில் அனுப வித்தவற்றில் பொருத்தமானவையை இங்கே பதிவு செய்கிறேன்.

கிளியோன் (Glion)

மொன்றெக்ஸிலிருந்து 1,000 மீ. உயரத்திலுள்ளது இந்நகரம். மொன்றெக்ஸ் தொடருந்து நிலையத்திலிருந்து '*MOB*' என்னும் பற்சக்கர *(Cogwheel)* தொடருந்திலும், மொன்றெக்ஸிக்கு அடுத்த நகரான தெறித்தே என்னுமிடத்தில் இருந்து இழுவை ஊர்தி மூலமும் செல்லலாம். '*MOB*' என்பது மொன்றெக்ஸ், ஒபர்லான்ட், பேர்ண் ஆகிய நகரங்களின் இணைப்பு சேவையாகும். மலைப்பாதையால் பேர்ண் நகர் வரை செல்கின்றது இத் தொடருந்து. இதனில் வழமையான தொடருந்து இரும்புச் சக்கரங்களுடன் தரையிலுள்ள இருபக்க இரும்புப் பாளத்துக்கு மத்தியில் பள்ளம், மேடாக வெட்டப்பட்ட இரும்புச் சட்டம் பொருத்தப்பட்டுள்ளது. தொடருந்து



இயந்திரப் பகுதியில் இரு சக்கரங்களுக்கும் இடையில் தரையிலுள்ள பள்ளம், மேட்டு இரும்புச் சட்ட வெட்டுகளில் பொருந்தகூடிய வகையில் வெட்டப்பட்ட பற்சக்கரம் உள்ளது. இயந்திர இயக்கத் தால் சுழரும் அச்சக்கரம், இரும்புச் சட்ட வெட்டுகளில் படிந்து சுமன்று உந்துவதால் உயரமான பகுதியில் முன்

னோக்கிச் செல்கின்றது தொடருந்து . தொடருந்தின் உள்ளே பயணிகள் ஒருவருடன் ஒருவர் பேசமுடியாதவாறு சத்தமாக இருக்கும். இந்த பாதை அமைப்பு யப்பானியர்களால் நிறுவப்பட்டதாக அறிந்தேன்..

கிளியோன் நகரில் 'ஹொட்டல் றிஹி வோதுவா' என்னும் பிரமாண்டமான, பழமையான ஹொட்டல் உள்ளது. அந்த ஹொட்டலுடன் இணைந்தாற்போல் பல ஏக்கரில் உள்ள தரையை அழகுபடுத்த பூஞ்செடிகள் நடப்படுகின்றன. அந்தப் பூக்கன்றுகளை விருத்தி செய்யும் கூடத்தில் உதவி பொறுப்பாளராகப் பணியாற்றினேன். பொறுப்பாளர் இத்தாலிய நாட்டைச் சேர்ந்தவர். அவரது விடுமுறை நாட்களில் நானே பொறுப்பாக இருப்பேன். எனக்குக் கீழே நான்கு ஐரோப்பிய நாட்டவர்கள் வேலை செய்தனர்.

சித்திரை மாதங்களில் நடப்படும் பூஞ்செடிகள் ஐப்பசி மாதமளவில் குளிரால் பழுதடைந்துவிடும். ஐம்பது வரையான வகைகளிலிலுள்ள பலநூறு ரோஜா செடிகள் மட்டும் இலைகள் உதிர்ந்து உறங்குநிலையில் உயிர்வாழும். அதன் வளர்காலம் குறைவாக இருப்பதாலும், வளர்பவை உதிர்ந்து கருகு வதாலும் வளர்ச்சியும் குறைவாகவே இருக்கும். ஆனால், கோடை காலத்தில் அச்செடிகளில் நிறையப் பூக்களைக் காணலாம்.

புற்கள், வளர்ந்த மரங்கள், ரோஜா செடிகளைத் தவிர ஏனைய பல்வகை பூஞ்செடிகள் யாவும் புதிதாக நடப்படவேண்டியவை. அதலியா, துலிப் போன்ற தாவரங்களின் கிழங்கு போன்ற விதைகள் குளிர் காலத்தில் தோண்டி எடுக்கப்பட்டு நிலக்கீழ் அறைகளில் வைக்கப்படும். குளிர் குறைந்ததும் நடப்படும். குளிர்காலம் தொடங்கிய பின்னர், ஏனையவை சூடேற்றப்பட்ட கூடத்தில், மணலிடப்பட்ட பிளாஸ்ரிக் ட்றேகளில் தனித் தனி இனப் பூஞ்செடிகளுக்கான விதைகளைத் தூவி, முளை வந்ததும் கூட்டாக நிற்பவற்றை பிரித்து வேறு ட்றேகளில் தனித்தனியாக நடவேண்டும். மாசி மாத இறுதியில் கடுங்குளிர் குறைந்து விடும். அவ்வேளை ட்றேகளில் நட்ட கன்றுகளும் சற்று பெரிதாகிவிடும்.

சீமேந்தால் நீள்சதுரமாக கட்டப்பட்டு மணலிடப்பட்ட, 'கூஸ்' என அழைக்கப்படும் தொட்டிகளில் சற்றுப் பெரிதான கன்றுகளை நட்டு, குளிர் தாக்காதவாறு துடித்த பிளாஸ்ரிக்கால் மூடிவிடவேண்டும். வெயில் நேரங்களில் இடையிடையே திறந்துவிட்டுப் பாதுகாக்க வேண்டும். சித்திரை மாதத்தில் பூஞ்செடிகள் பாதிப்புறாத காலநிலை தோன்றுகையில், பூஞ்செடிகள் அனைத் தும் அழகூட்டும் வடிவமைப்பில் நடப்படும். ஆடி, ஆவணி மாதங்களில் ஹொட்டலை பூக்கள் தாங்கி நிற்பதைப்போலத் தோன்றுவதால் ஹொட்ட லுக்கு வருகைதரும் விருந்தினரை வெகுவாகக் கவரும்.

பிரான்ஸில் வசித்தபோது உணராத குளிரை சுவிஸில் வேலைக்குச் செல்லும்போதுதான் உணர்ந்தேன். பொதுவாக இங்கு பிரான்ஸைவிட குளிர் கூடுதலாக இருப்பதும் வேலை செய்யுமிடம் மலைப்பகுதி என்பதாலும் அதிகமான தாக்கத்தை ஏற்படுத்துகிறது. உறைபனி காலங்களில் தரையில்

புற்களை, வீதிகளை, வீட்டின் கூரைகளை, மரக் கொப்புகளைக் காண முடியாது அவை பனிபொழிவின் படிவுகளால் வெண்மையாய்த தெரியும். வீதிகளில் கிடக்கும் பனிப்படிவுகள் உடனுக்குடனேயே இயந்திரங்கள் கொண்டு அகற்றப்படும். ஏனைய இடங்களில் படிப்படியாக வீழ்ந்த பனிப் பொழிவுகள் குவிந்து கிடக்கும். அப்படிவுகளின் மேலாக நடக்கும்போது, விளையாடும்போது குளிரையும் மறந்த சந்தோஷம் இருக்கும். காற்று தொடராக வீசினால் அவை இறுகிக் கல்போல மாறிவிடும். அதன் பின்னர் அதற்கு மேலாக நடக்கையில் அவதானம் தேவை, அன்றேல் வழுக்கி விழவேண்டியிருக்கும். மழை பெய்தால் மட்டுமே மெல்ல மெல்லக் கரைந்து செல்லும். குளிரின் தாக்கத்தால் கைகள், காதுகள், மூக்கு போன்றவை விறைத்துவிடும். இதழுக்கு உரிய கிறீம் பூசாதுவிடின் வெடித்துவிடும். தை மாதம் இரண்டாவது வாரம் கடுங்குளிரான வாரமாகும். அந்நாளில் எச்சிலைக் காறித் துப்பினால் விழும்போது பனிக் கட்டியாக விழும்.

தினமும் அதிகாலை 6.00 மணிக்கு புறப்படும் பற்சக்கர தொடருந்தில் வேலைக்குச் செல்லவேண்டும். குளிர்காலத்தில் உரிய குளிர்காப்பு உடை, 'மவுளர்', கையுறை அணிந்து வேலைக்குச் சென்றால்தான் குளிரின் தாக்கத்தி லிருந்து உடலைக் காப்பாற்றலாம். வேலைக்கென காலையில் எழுவதும் குளிரை எதிர்கொண்டு வேலைக்குச் செல்வதும் மிகவும் கடினமானதாகவே இருக்கும். வேறு வழியின்றி செல்லவே வேண்டும். ஆனாலும், வேலை செய்கின்றமையால் கிடைக்கும் கௌரவம், கடந்த காலத்திலிருந்து மீட்சி பெற்ற நிம்மதி, பயந்து பயந்து ஈடுபட்ட செயல்கள் விடுபட்டதில் உண்டான சந்தோஷம், அமைதியான வாழ்வு போன்றவைக்கு வழியானது வேலை கிடைத்தமையே.

ooo

சுவிஸ் நாட்டில் வேலை கிடைத்தது முதல் நான் கடந்து வந்த பாதையிலிருந்து விலகி நேரிய பாதையில் பயணத்தைத் தொடர்ந்தேன். அதனால், இந்நூலை வாசிக்கும் வாசகர்களில் புலம்பெயர்ந்து மேலை நாடு களுக்குச் செல்ல முனைபவர்கள், தவிர்க்க முடியாத காரணியின் நிமித்தம் அன்று என்னால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை சரியான பாதை யென்று தவறாகாகக் கருதாதிருப்பதற்காக இக்குறிப்பை முன்வைக்கின்றேன்.

இடையில் ஒரு குறிப்பு!

எனது மேலைநாட்டு வாழ்வியல் பயணத்தில் அனுபவித்த இன்னல் கள், எதிர்கொண்ட இடையூறுகள், தடம் புரண்ட எதிர்பார்ப்புகள், நிறை வேறாத எண்ணங்கள் பல, ஆனால், சாதித்தவையோ சில. அன்றைய வெளி நாட்டுப் பயணத்துக்கான காலகட்டம் அண்மைக்காலம் போலன்று. எனக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த முடிந்ததால் நான் பிரான்ஸில் நுழைய

முடிந்தது. ஆனால், எல்லோருக்கும் அவ்வாறு அமைவதில்லை. கல்லும் முள்ளும், சேறும் சகதியும், குளிரும் உறைபனியும், இடரும் துயரும் கடந்து செல்லவேண்டிய சூழ்நிலை. இத்தகைய தகவல் இலங்கையில் புகைந்தாலும் ஆதாரமற்றதாகக் கருதப்பட்டது. பிரான்ஸில் நுழைந்த பின்னர்தான் புகைந்தது புகையல்ல உண்மை என்பதை பாதிக்கப்பட்ட சிலரிடம் நேரடியாக அறிந்தபோது என் உள்ளம் அழுதது.

பயணத்தின் வலி

அதிக வருவாயைப் பெற முனைந்த முகவர்களில் சிலர், தாம் அழைத்துச் செல்லும் பயணிகளின், குறிப்பாக குழந்தைகளுடன் வரும் பெண்களின் பொதிகளில் போதைப் பொருட்களை அவர்களறியாது வைத்து அனுப்பி வைத்தனர். இதனால் இறங்கிய வானூர்தி நிலையத்தில் பிடிபட்டு, களங்கத்தைச் சுமந்து, வாழ்வை சீரழித்தது பயணிகளேயன்றி முகவர்களல்லர்.

முகவர்கள் சிலரின் செயற்பாட்டினால் இலகுவான நுழைவுப் பாதைகள் தடைப்பட, தொடர்ந்த மாற்றுக் கடத்தல் பாதைகளினால் பெரும் துன்பங்களை சுமந்தவர்கள், போதிய குளிர் தடுப்பு ஆடையின்றி கடுங் குளிரில் சிக்குண்டு உயிரிழந்தவர்கள், நோயாளியானவர்கள் பலர். அழைத்துச் செல்லப்பட்டவர்களில் திருமணம் நிச்சயிக்கப்பட்ட, திருமணமான பெண்கள் கடுங்குளிரில், காட்டுப் பாதையால் இரவு பகலாக மேற்கொண்ட நீண்ட நடை பயணத்தின் காரணத்தால் தடம் மாறவேண்டிய சூழ்நிலைக்குள் தள்ளப் பட்டார்கள்.

முகவர்கள் சிலரால் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டு தமது எதிர் காலம் சூனியமாகக் கண்ட பெண்கள், செல்லவேண்டிய இடம் சேரும் முன்னரே பாதி வழியில் விடப்பட்டவர்கள், கைவசம் பணம் இல்லாத காரணத்தால் வேறு வழியின்றி மலவாசலூடாக போதைப்பொருளை உட்செலுத்த சம்மதித்து சுமந்து சென்ற ஆண்கள் என நீண்ட பட்டியலை முன்வைக்கலாம். இவைதான் மேலைநாடுகளுக்குச் செல்பவர்களின் அன்றைய நிலை.

ஆழ்ந்த வெறுப்பு

பிரான்ஸில் நெவேர் நகரில் றெஸ்ரோறன்ஸில் நிகழ்ந்த வெறுப்புப் பற்றி அந்தப் பகுதியில் குறிப்பிட்டிருந்தேன். மீண்டும் ஒருநாள் அதிகாலை தொடருந்தில் பயணித்த நாமிருவர் பிரான்ஸில் 'டிஜோன்' நகரில் இறங்கி வேறு தடத்தில் செல்லும் தொடருந்தின் வரவுக்காகக் காத்திருந்தோம். நேரம் அதிகமாக இருந்ததால் அருகாமையில் சுறுசுறுப்பாக இயங்கிய அருந்தகத்தில் கோப்பி அருந்திடச் சென்றோம். தொடருந்து பயணிகள் கணிசமாக இருந்தனர். சிப்பந்தியை அழைத்தோம். திரும்பத் திரும்ப அழைத்தோம். அவன் வரவில்லை. நெவேர் நகரில் நடந்த அதே அவமரியாதை இங்கும் நிகழ்ந்தது. காத்திருந்து வேறு வழியின்றி புறப்பட்டோம்.

சுவிஸில் மொன்றெக்ஸ் நகரில் நிகழ்ந்த வயோதிப மாதுவின் வெறுப்புப் பற்றி அந்தப் பகுதியில் குறிப்பிட்டிருந்தேன். அதே மொன்றெக்ஸ் நகரில் நான் வேலையற்றிருந்தபோது போதகரின் ஏற்பாட்டில் தற்காலிகமாக அந்திய கால சேவையாளராக சேர்ந்தேன். முதல் தடவையாக ஒரு சவ அடக்கத்திற்கென ஆலயத்திற்குச் சென்றிருந்தேன். வழிபாடு முடிவுற்று வெளியே செல்லும் போது பூக்கொத்தை தூக்கிச் செல்வதே என்பணி. அவ்வாறே செய்தேன். மறுநாள் போதகர் சம்பளப் பணத்துடன் என்னைச் சந்தித்தார். 'அந்தியகால சேவை குழுவினரில் சிலர் வெறுப்பு காரணமாக என்னை வேலைக்கு வைத்திருக்க விருப்பமில்லையாம்' என வேதனையுடன் கூறினார்.

மீண்டுமொருமுறை போதகர் 'ஹொட்டல் மொன்றெக்ஸ் பலஸ்' முகாமையாளரோடு உரையாடி நேர ஒதுக்கீடு செய்து வேலை கேட்பதற்காக என்னை அழைத்துச் சென்றார். போதகருக்கு முகாமையாளர் நெருங்கிய நண்பர். மூவரும் கோப்பி அருந்தினோம். இறுதியில் என்னைப்பற்றி விசாரித்த முகாமையாளர், 'சிறீலங்கனை வேலைக்கு எடுப்பதில்லை' என வெறுப்புடன் கூறினார். போதகரின் முகம் கறுத்தது. வேதனையுடன் என்னை அழைத்துக் கொண்டு வெளியேறினார். இத்தகைய துவேஷங்களும் அரங்கேறின.

விசா அங்கீகாரம்

பிரான்ஸில் லியோன் நகரில் ஒரு வருடத்திற்கும் மேலாக 'அகதி அந்தஸ்து கோரல் விசா' இல்லாமல் வசித்துள்ளமை பற்றியும் அந்த விசா இல்லையேல் வேலை செய்ய முடியாது. அரச மற்றும் சமூகசேவை உதவிகளும் பெற முடியாது என்பதையும் குறிப்பிட்டிருந்தேன். அத்துடன் அந்நாளில் அகதியாக ஏற்றுக்கொண்டு அங்கீகரிப்பதும் மிகக் குறைவாகவே இருந்தது. இடை யிடையே சிலருக்கு அங்கீகாரம் கிடைத்தபோதும் நான் அகதி அந்தஸ்து கோரல் விசா இல்லாதவனாகவே இருந்தேன். இத்தகை நிலை எனது வாழ்க்கை யில் விழுந்த பேரிடியாகும்.

அகதி அந்தஸ்து கோரல் விசா வைத்திருப்பவர்களில் அனேகர் அகதிக்கான அங்கீகாரம் கிடைக்காமலே இருந்தார்கள். பலரது விசா விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டு பலவருடங்களாக மறைந்து வாழவேண்டிய நிலையிலும் இருந்தார்கள். இத்தகையோர் மிகக் குறைந்த சம்பளத்தில் களவாக வேலை செய்தும் சிற்றி அடிப்பதன் மூலமும் தமது வாழ்வை ஓட்டினார்கள். இவை பலரது வாழ்க்கையில் விழுந்த பேரிடியாகும். இத்தகை மனிதநேயத்துக்கு அப்பாற்பட்ட நிலையை இலங்கையில் இருப்பவர்கள் அறிவதில்லை.

அண்மைக்காலம்

ஆரம்பத்தில் அனுபவித்த இடர்கள் படிப்படியாகக் குறைந்தும் நீங்கியும் செல்வதுடன் பல அனுகூலங்களும் அமைந்திருக்கின்ற கால கட்டத்தில் தான் அண்மைக்கால புலம்பெயர் பயணங்கள் அமைகின்றன.

அவ்வாறு புலம்பெயர்ந்து செல்பவர்களுக்கு சட்டவிரோதமாக குறித்த நாட்டில் புகவேண்டிய ஆவசியம் அரிதாகவே இருக்கின்றது. வரவேற்கத்தக்க அனு கூலமாக அந்தந்த நாடுகளில் அரவணைக்க, ஆதரிக்க, உணவளிக்க எவரோ ஒரு உறவினர் இருப்பார். ஆனால், முன்னர் எமது நிலை நேர்மாறானது. அத்தகைய சூழ்நிலையில் என்னால் மேற்கொள்ளப் பட்டவைகள் சரியான பாதை என்றோ இதுதான் வழி என்றோ தவறான எண்ணத்தைக் கொள்ளவோ அவற்றை உதாரணமாகக் கொள்வோ வேண்டாமென பயணிக்க இருப்பவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அந்நாட்களில் வாழ்வியலுக்கான உதவிகளை எதிர்பார்த்து கிடைக் காமை, அவற்றை சுயமாக நிறைவுசெய்வதற்கு வழி ஏற்படாமை போன்ற வையால் உயிர் காக்க, உறவுகளை வாழவைக்க, பயணத்திற்காகப் பட்ட கடன் போக்க பிழையென்று தெரிந்திருந்தும் முறையற்ற செயலான 'சிற்றி அடிக்கும்' எண்ணத்தைக் கொள்ளநேரிட்டது. இவை என்னைப்போன்ற முன்னையோருடனேயே முடியட்டும். புதியவர்கள் தொடரவே கூடாது.

ஒரு நாட்டில் இருந்து வாழ்வில் ஏற்பட்ட சங்கடத்தாலேயே அயல் நாட்டுக்கு 'சட்டவிரோதமாக எல்லை கடக்க' நேரிட்டது. அது சரியானதென நியாயப்படுத்த முன்வரவில்லை. அப்போது அது ஒன்றேதான் வழியாகவும் தேவையாகவும் இருந்தது. சுவிஸில் அரச உதவி மற்றும் நிரந்தர வேலை கிடைத்ததும் வாழ்வியலில் இடையூறு இருக்கவில்லை. சாதாரண மனிதராக வாழ முடிந்ததால் நடந்தவை அனைத்தும் கனவாகக் கழிய புதுவாழ்வில் புகுந்தேன்.

நிறைவான விளைச்சலுக்காக நெல்லை விதைக்கும் முன்வர் வயலை உழுது பண்படுத்துவதில்லையா? அதேபோல உங்கள் எண்ணங்களைப் பண்படுத்தும் ஊக்குவிப்புக்கு எனது அனுபவங்கள் உதவியாக இருக்கும் என்ற நம்பிக்கையில், இடைமறித்த இடத்திற்குப் பயணிக்கிறேன்.


ooo

றோசே டி நயா (Roche de Naya)

மொன்றெக்லிலிருந்து 2,100 மீ. உயரத்தில் உள்ளது இந்நகரம். மொன்றெக்ஸ் தொடருந்து நிலையத்திலிருந்து '*MOB*' மலையேறும் தொடருந்தில் அங்கு செல்லலாம். உச்சமான உறைபனி காரணமாக கார்த்திகை நடுப்பகுதி முதல் தை நடுப்பகுதி வரை அங்குள்ள ஹொட்டல்கள் மூடப்பட் டிருப்பதால் பயணிகள் செல்வதில்லை. ஏனைய மாதங்களில் விடுமுறை நாட்களில் திரளாகவும் வார நாட்களில் சாதாரணமாகவும் பயணிகள் மற்றும் பனிச்சறுக்கல் விளையாட்டுகளில் ஈடுபடுவோரைக் காணலாம். இங்குள்ள பிரமாண்டமான ஹொட்டலில் நண்பன் வேலை செய்ததால் நான் அடிக்கடி சென்று வரக்கூடியதாக இருந்தது.

சாதாரண உறைபனி காலத்தில் பனிச்சறுக்கல் இங்கு நடைபெறும் பிரதான, பிரபலமான விளையாட்டாகும். உறைபனி மூடிய தரையின்மீது 'பனித்தரை வழுக்கி பலகை'யில் (Ski) நின்றவாறு, கரங்கள் ஏந்திய கோல்களைத் தரையில் ஊன்றி வழுக்கியோடுதலே பனிச்சறுக்கல் விளையாட்டாகும். ஐரோப்பிய நாடுகள் பலவற்றிலிருந்து பலரும் வருகைதந்து விளையாடுவர். ஒரு தடவை பல பிரபலங்களுடன் பிரித்தானிய முடிக்குரிய இளவரசரும் விளையாட வந்திருந்தார். அவரைப் பார்ப்பதற்கு மொன்றெக்ஸ் தொடருந்து நிலையம் மக்களால் நிரம்பியிருந்தது.

றோசே டி நயா மலை உச்சிவரை 'இழுவை சிற்றூர்தி'களில் (Cable car) சென்று, அங்கிருந்து 'பனித்தரை வழுக்கி பலகை'யில் வழுக்கிவரும் 'Tignes Ski' விளையாட்டிலும் திரளானோர் கலந்து கொள்கின்றனர். சிலர் விபத்தில் சிக்குண்டு முழங்கால் சில்லு சேதமடைவதுண்டு. படையெடுத்து வருவதைப் போல் தொடராகவரும் பனிச் சறுக்கல் வீரர்கள் செய்யும் சாகசங்களை நாள் பூராவும் பார்த்துக்கொண்டே இருக்கலாம்.


மிதந்து ஊர்தல்

அலுமினியச் சட்டங்கள் மற்றும் பிளாஸ்ரிக் துணிகொண்டு தயாரிக்கப் பட்ட பறவையின் இறக்கை போன்ற பெரிய பட்டத்தில் மனிதன் இணைந்த படி ஆகாயத்தில் 'மிதந்து ஊர்தல்' (Gliding)இனை இங்கே காணலாம். ஒரே நேரத்தில் ஐம்பதுக்கும் மேற்பட்ட ஊர்திகள் மலை உச்சியிலிருந்து சம தரையை நோக்கிப் பறந்து வருவதை தரையிலிருந்தோ மலையில் நின்றோ பார்க்கும்போது அழகாக இருக்கும். இந்த பறத்தலை கோடை காலங்களில் அடிக்கடி பார்த்து மகிழ்ந்ததுண்டு. சில இலக்குத் தவறி மரங்களில் சிக்குறுவதைப் பார்க்கையில் வேதனை ஏற்படவே செய்யும்.

தமிழர் கலை கலாசார ஒன்றியம் 'வோ' மாநிலம்

'கிளியோன்' நகரிலுள்ள 'ஹொட்டல் றிஹி வோதுவா'வில் வேலை செய்த பின்னர் 'றினா' நகரிலுள்ள பிரமாண்டமான வர்த்தக நிலைய மொன்றில் உதவிக் காசாளராக வேலையைத் தொடர்ந்தேன். அந்த விற்பனை நிலையத்தில் 14 தமிழர்கள் வேலை செய்தனர். அவர்களை இணைத்து தமிழ் மக்களுக்குப் பயன்படக்கூடிய செயல்களைச் செய்யவேண்டுமென்ற எண்ணம் என்னுள் தோன்றியது.

வேலைசெய்யுமிடத்தில் மதிய உணவுக்காக நாம் அனைவரும்

சந்திப்பது வழமை. ஒரு தடவை மதியம் உணவருந்தும்போது எனது எண்ணத்தை தெரியப்படுத்தினேன். அவர்கள் மனதார வரவேற்று ஒன்றித்துச் செயற்பட முன்வந்தனர். அடுத்தடுத்த நாட்களில் இதுபற்றி உரையாடி ஒரு அமைப்பை உருவாக்கி செயற்படும் முடிவுக்கு வந்தோம்.

பிரான்ஸ் - லியோனில் நான் வசித்தபோது உருவாக்கிய 'லியோன் தமிழர் அமைப்பினை' மாதிரியாகக்கொண்டு அதனில் பெற்ற அனுபவங்களை, எதிர்கொண்ட இடையூறுகள் - இனங்கண்ட செயற்திட்டங்களை உள்வாங்கி, நடைமுறைக்கு ஏதுவாக யாப்பைத் தயாரித்து அமைப்பினை உருவாக்க இணங்கிக் கொண்டோம்.

'வோ' மாநிலத்தின் சுவிஸ் சட்ட நடைமுறைக்கு அமைவாக 'லவுசான்' நகரத்தில் 'தமிழர் கலை கலாசார ஒன்றியம் 'வோ' மாநிலம்' என்ற பெயரில் ஒரு அமைப்பை உருவாக்கினோம். சட்டத்திற்கு உட்பட 14 பேரும் பதவிகளைப் பகிர்ந்து ஒன்றியத்தைப் பதிவுசெய்து கொண்டோம்.

நான் பிரான்ஸ் - லியோனில் வசிக்கையில் லியோன் தமிழர் அமைப்பு விடயமாக இந்தியாவிலிருந்து வருகைதந்திருந்த இந்தியா /திராவிடர் கழகத்தைச் சேர்ந்த திரு. வீரமணி அவர்களைச் சந்திக்க பரிஸ் சென்றிருந்தேன். அங்கு தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவினரால் நடத்தப்பட்ட ஒரு மணித்தியால தமிழ் வானொலி சேவையை கேட்க மிகவும் மகிழ்வாக இருந்தது. அன்று முதல் நான் வசிக்குமிடத்தில் தமிழ் மக்களுக்கென வானொலி சேவை நடத்த வேண்டுமென்ற ஆவல் உள்ளத்தில் உருவாகிக்கொண்டே இருந்தது. லியோனில் நடத்துவதற்கு சந்தர்ப்பம் அமையவில்லை. அதனால் இங்கு அத்தகையதொரு வானொலி சேவையை நடத்த முயற்சி எடுக்க வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்ததும் அனைவரும் செயலில் இறங்கினர்.

'தமிழொலி' வானொலி சேவை

சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்புகொண்டு நாம் எடுத்த முயற்சியின் பயனாக, அரசியல் செயற்பாடுகளுக்குப் பயன்படுத்தக்கூடாது என்ற நிபந்தனையின் கீழ், வாரத்தில் ஒரு மணித்தியாலம் தமிழில் 'எவ். எம். 102.8' அலைவரிசையில் ஒலிபரப்புச் செய்வதற்கு விரைவிலேயே அனுமதி கிடைத்தது. முற்றிலும் நிகழ்ச்சிகளைத் தயாரிக்கும் ஒழுங்கமைக்கும் பொறுப்பை நான் ஏற்றுக்கொண்டேன். எழுத்துத்துறை யில் எனக்கு இருந்த பரீச்சயத்தால் அது சாத்தியமாகிற்று.

எமக்கு போதிய முன்னனுபவம் இல்லாத நிலையிலும் 'தமிழொலி' எனப் பெயரிட்டு இயல்பான அனுபவத்தைக் கொண்டு திரைப்பட பாடல்கள், இலங்கை மற்றும் உலகச் செய்திகள், சுவிஸ் தகவல்கள், கவிதைகள் என ஒரு மணித்தியாலம் ஒலி பரப்புச் செய்யக்கூடிய வகையில் 'ஓடியோ கசெற்'றில் பதிவுசெய்து 11.10.1991 அன்று 'எவ். எம். 102.8' அலைவரிசையில் நாதஸ்வர ஓசை முழங்க "சங்கீத மொழி தவழும் 'வோ' மாநிலத்தில் சங்கத் தமிழ் மரபைச்

சாற்றிடும் தமிழொலி" என்ற ஆரம்ப உரையுடன் ஒலிபரப்பு ஆரம்பமானது.

ஆரம்பத்தில் ஒலிபரப்புச் செய்ய எமக்குக் கிடைத்த சந்தர்ப்பம் வேலை நாள் என்பதாலே அவ்வாறு செய்யவேண்டியேற்பட்டது. நாளடைவில் நேரங்கள் ஒன்றரை, இரண்டு, இரண்டரை மணித்தியாலங்கள் என அதிகரிக்கப்பட்டு ஞாயிறு தோறும் பி.ப. 2.30 மணியிலிருந்து ஒலிபரப்பு வதற்கு ஒழுங்கு செய்யப்பட்டதால் நேரடியாகவே கலையகம் சென்று ஒலிபரப்பு சேவையைச் செய்தோம்.

தமிழொலி வானொலி சேவை தமிழ் மக்களை பெரிதும் ஈர்ந்தது. உயரமான மலைப்பகுதியில் அன்ரனா பொருத்தப்பட்டுள்ளதால் பரந்த பகுதியை உள்ளடக்கியிருந்தது. அதனால் பல நகரங்களில் வசிக்கும் தமிழ் மக்கள் ஒலிபரப்பைக் கேட்கக்கூடியதாக இருந்தது. இந்த சேவையை ஜெனிவா மாநிலத்திற்கும் விரிவாக்கம் செய்யவேண்டுமென அம் மாநில தமிழ் மக்கள் கேட்டுக்கொண்டதால் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு,


தமிழர் கலை கலாச்சார ஒன்றியம்
'வோ' மாநிலம்.

தமிழொலி

- நீதியும் வானொலி சேவை -

F.M. 102.8 அலை வரிசையில்,
ஞாயிற்றுக் கிழமைகளில்
14.30 முதல் 16.00 மணி வரை.

F.M. 93.8 அலை வரிசையில்,
சனிக்கிழமை – 19.00 முதல் 20.00 மணி வரை,
24.00 முதல் 1.00 மணி வரை,
ஞாயிற்றுக்கிழமை – 5.00 முதல் 6.00 மணி வரை,
10.00 முதல் 11.00 மணி வரை.
மாதத்தில் வரும் முதல் விடுமுறைநாளைகளிலும்,
தமிழ் மக்களில் விடேட தினங்களிலும்.
19.00 முதல் 20.00 மணி வரை,
1.00 முதல் 2.00 மணி வரை,
7.00 முதல் 8.00 மணி வரை,
13.00 முதல் 14.00 மணி வரை.

கேட்டு மகிழ்வோம்.

K. RAJAPPU
Ch. du Rocher - 18,
1024 Ecublens,
Switzerland.
Tel & Fax 021/636 19 42.

அவர்களால் அனுமதியளிக்கப்பட்ட ஒரு மணித்தியால சேவையை மறு ஒலிபரப்பாக சனி, ஞாயிறு நாட்களில் இரண்டு தடவைகளும் விசேட தினங்களில் பல தடவைகளும் 'எவ். எம். 93.8' அலைவரிசையில் ஜெனிவா மாநிலத்திலிருந்து ஒலிபரப்புச் செய்தோம்.

தமிழொலி சேவையின் துரித வளர்ச்சியினால் பலரும் தமிழர் கலை கலாசார ஒன்றியத்துடன் இணைந்து பணியாற்ற முன்வந்தனர். இதனால் தமிழ் மக்களுக்குத் தேவையான வேறு பணிகளையும் செய்யக்கூடிய உத்வேகம் பிறந்தது. வானொலியைப் பயன்படுத்தி வானொலி சேவைக்கு அடுத்ததாக சிறுவர் தமிழ் பாடசாலை, தமிழ் நூலகம், நடனப் பயிற்சி பாடசாலை, கலைவிழாக்கள் போன்றவற்றை நடத்தி தமிழ் மக்கள், குறிப்பாக சிறார்கள் பயனடையும் வழிகளை ஏற்படுத்த முனைப்புக் காட்டினோம்.

சிறுவர் தமிழ் பாடசாலை

தமிழர் கலை கலாசார ஒன்றியத்தின் சிறப்பான ஏற்பாடாக உருவானதே 'சிறுவர் தமிழ் பாடசாலை'. வோ மாநிலப் பாடசாலைகளில் கல்வி கற்கும் சிறார்கள் பிரான்சிய மொழியை அங்கேயே கற்றுக்கொள் கிறார்கள். ஆனால், தமிழ் மொழியை வீட்டைத்தவிர வேறு இடங்களில் கற்பதற்கு மார்க்கமில்லை. இவற்றை நிவர்த்திசெய்யும் நோக்கில் சிறுவர்களின் எதிர்கால நலனைக் கருத்தில்கொண்டு சிறுவர் தமிழ் பாடசாலையை உருவாக் கினோம். இதனை உருவாக்க எம்மை ஊக்குவித்த விடயங்கள் இரண்டு;

1. "வீட்டில் எப்போதும் தாய்மொழியையே பேசுங்கள். உங்கள் பிள்ளைகளுக்கு வேண்டிய பிரான்ஸிய மொழி அறிவை இங்கே நாங்கள் கற்றுக்கொடுப்போம்" என, பாலர் பாடசாலையில் பிள்ளைகளை சேர்க்கும் போது பாடசாலை நிர்வாகத்தால் பெற்றோருக்கு அறிவுறுத்தப்படுகிறது. வீட்டிலே சிறார்கள் தமிழைப் பேச முடியும் ஆனால், முறையாகக் கற்பதற்கு ஒரு பாடசாலை வேண்டும்.

2. சுவிஸ் நான்கு மொழிகள் பேசப்படுகின்ற நாடாகும். இவற்றில் பிரான்ஸிய, ஜேர்மனிய, இத்தாலிய மொழி பேசுகின்ற மாநிலங்களில் தமிழ் மக்கள் செறிந்து வாழ்கிறார்கள். அங்கெல்லாம் அவ்வவ் மொழிகளில் கல்வி கற்கும், அம்மொழிகளையே பேசும் பிள்ளைகளுக்கு பிறிதொரு மொழி பேசும் மாநிலத்திலிருந்து வருகைதரும் தமது உறவினர், நண்பர் களுடன் பேசுவதற்கு தமிழ் மொழி ஒன்றுதான் பொது மொழியாக இருக்கின்றது. அதைக் கற்று, பேசிப் பழகினால்தானே அவர்களால் அளவளாவ முடியும். இலங்கைக்குச் செல்லும்போது கூட அங்குள்ளவர்களோடு சரளமாக உரையாட முடியும்.



இவற்றை மனத்திலிருத்தி வாரத்தில் சனிக்கிழமை தோறும் 'றினா' நகர நூலகத் துடன் இணைந்துள்ள பாலர் பாடசாலை கட்டடத்தில் 'சிறுவர் தமிழ் பாடசாலை'யை ஆரம்பித்தோம். அப் பாடசாலைக்குப் பெற் றோர் மத்தியில் வரவேற்பு இருந்ததால் தமது பிள்ளைகளை ஆர்வத்துடன் இணைத்தனர்.

நாளடைவில் மாணவர்களின் அதிக ரிப்பு காரணமாக லுசான் நகரிலுள்ள பாலர் பாடசாலை ஒன்றில் மூன்று வகுப்புகளை நடத்தும் நிலை உருவானது. தமிழ் பாடசாலை யின் வளர்ச்சியைப் பார்க்கும்போது மக்களின் எதிர்பார்ப்புக்கு எம்மால் போடப்பட்ட உணவாகவே நோக்கக்கூடியதாக இருந்தது. இம்மாணவர்களின் கல்வியை இலக்காகக் கொண்டு என்னால் தொகுக்கப்பட்ட, 'தமிழ்ச் சோலை' என்னும் ஐரோப்பா வாழ் தமிழ் சிறுவர்களுக்கான தமிழ் அறிவு நூல், 06.05.1994 அன்று லுசான் பிள்ளையார் கோயிலில் வெளியீடு செய்துவைக்கப்பட்டது.

நான் கடந்த ஆண்டு (2014) சுவிற்சர்லாந்து சென்றிருந்தபோது என்னைச் சந்தித்த பலரும் தமிழ்ப் பாடசாலையின் வளர்ச்சியை பெருமை யாகக் கூறினர். 1992 இல் ஆரம்பிக்கப்பட்ட சிறுவர் தமிழ்ப் பாடசாலை இப்போது தமிழ் வித்தியாலயம் என்ற பெயரில் பெரு விருட்சமாக வளர்ந்துள்ளது என்பதை அறிந்தபோது ஆனந்தமாக இருந்தது.

14.05.2014 அன்று வித்தியாலய நிர்வாகத்தின் அழைப்பின்பேரில்



பாடசாலைக்குச் சென்றிருந்தேன். மூன்று பாடசாலைகளில் ஆரம்ப பிரிவு 1-2 மற்றும் ஆண்டு 1 - 11 வரையான 13 வகுப்புகளுக்கான கற்பித்தல் 14 வகுப்பறைகளில் (ஒரு வகுப்பு மட்டும் இரண்டு வகுப் பறைகளில்) நடை பெறுகின்றன. சில வகுப்பறைகளை மாத்திரம் ஒவ்வொரு பாட சாலை நிர்வாகமும் வழங்க இணங்கியதாலேயே அவ்வாறு நடைபெறுவதாக அன்று தொட்டு பொறுப்பாளராகப் பணியாற்றிய திரு. ரெட்ணராஜா அவர்கள் கூறினார்.

ஒவ்வொரு வகுப்பறையையும் பார்வையிடச் சென்றேன். 13 வருடங்களின் பின்னர் அங்கு சென்றதால் சில ஆசிரியர்களையும், இலங்கையில் என்னைச் சந்திக்க வந்த மாணவர்களையும் தவிர ஏனையோரை நான் அறிந்திருக்கவில்லை. பாடசாலையின் பொறுப்பாளர் ரெட்ணராஜா அவர்கள் என்னைப் பற்றிக் கூறிய பின்னரே வகுப்பறைகளில் கரகோசம் செய்து வரவேற்றனர். அங்கு கற்பதில் மாணவர்களும் கற்பிப்பதில் ஆசிரியர்களும் காட்டும் ஆர்வத்தை வகுப்பறைகளில் கண்டும் கேட்டும் மகிழ்ந்தேன்.

11ஆம் ஆண்டு மாணவர்கள் தேநீர் விருந்தொன்றை ஏற்பாடு செய்திருந்தனர். அவர்கள் கேட்டதற்கிணங்க சிற்றுரை ஆற்றினேன். ஞாபகார்த்தப் பரிசு வழங்கினார்கள். ஏதோ நான் விதைத்த விதை மரமாகக் கண்டதில் உள்ளூர மகிழ்ச்சி.

தமிழ் நூலகம்

'றினா' நகர் நூலகக் கட்டடத்தில் நடைபெற்ற சிறுவர் தமிழ் பாடசாலைக்குத் தமது பிள்ளைகளை அழைத்துவரும் பெற்றோர் பாடசாலை முடியும்வரை அங்கேயே தங்கியிருக்கவேண்டிய சூழல். அதனால் அவர்களது நேரத்தை பயனுள்ளதாகப் போக்கும் நோக்கில் அந்த நூலகத்திலேயே தமிழ் நூல்களுக்கான பிரிவை ஏற்படுத்தத் தீர்மானித்து நூலக நிர்வாகத்துடன் கலந்துரையாடினோம். அவர்கள் மனப்பூர்வமாகச் சம்மதித்து இடத்தை ஒதுக்கித்தந்ததுடன் நூல்கள் வைப்பதற்கான அலுமாரி மற்றும் தளபாடங்களையும் வழங்கினார்கள்.

தமிழர் கலை கலாசார ஒன்றியத்தின் அயராத முயற்சியால் சுவிஸில் சேகரிக்கக்கூடிய நூல்களைச் சேகரித்து விரைவாகவே ஆரம்பித்து வைத்த நூலகம், சிலவாரங்களில் இந்தியா மற்றும் இலங்கையிலிருந்து தருவிக்கப் பட்ட நூல்களுடன் ஆயிரத்துக்கு மேற்பட்ட நூல்களைக் கொண்டதாக

இயங்கத் தொடங்கியது.

பாடசாலை வகுப்புகள் தவிர்ந்த வேறு நாட்களிலும் நூலகத்திற்கு பலரும் செல்லத் தொடங்கினார்கள். மக்கள் கேட்டதற்கு இணங்க இரவல் கொடுக்கும் முறையை ஆரம்பித்தோம். இது வீடுகளுக்கு நூல்களை எடுத்துச் சென்று வாசிப்பதற்கு ஏற்ற வசதியாக அமைந்தது. எழுத்தாளர் ரமணி சந்திரனின் நாவல்களுக்கே பெரும் வரவேற்பு இருந்தது. நாளடைவில் தமிழ் நூலகம் தமிழ் மக்களுக்கு பலவகையிலும் பயனுள்ளதாக அமைந்தது.

நடனப் பயிற்சி பாடசாலை

பாரம்பரிய நடனமான பரதநாட்டியத்தை எமது சிறுவர்கள் பழகுவதன் மூலம் சுவிஸ் பாடசாலைகளில் நடைபெறுகின்ற நிகழ்வுகள் மற்றும் தமிழ் மக்களால் நடத்தப்படுகின்ற நிகழ்வுகளில் மேலைத்தைய நடனங்களுக்குப் பதிலாக பரதநாட்டியத்தை மேடையேற்ற வழிவகுக்கலாம் என்ற எண்ணத்தின் வெளிப்பாடாய் தமிழர் கலை கலாசார ஒன்றியத்தினால் உருவாக்கப்பட்டதே 'நடன பயிற்சி பாடசாலை'.

சிறுவர் தமிழ் பாடசாலை நடைபெறும் பாலர் பாடசாலை கட்டடத்திலேயே ஞாயிற்றுக்கிழமைகளில் நடன பயிற்சிப் பாடசாலையை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. பாடசாலை ஆரம்பித்தது முதல் பெற்றோரும் பிள்ளைகளும் பெரிதும் ஆர்வம் காட்டியதால் வகுப்புகள் சிறப்பாக நடைபெற்றன.

குறைந்த சம்பளத்தில் பயிற்சி வழங்க ஆசிரியர் முன்வந்தார். அவருக்குரிய சம்பளம் பிள்ளைகளிடமே அறவிடப்பட்டது. பிள்ளைகளை ஊக்கப்படுத்தி ஆர்வத்தை ஏற்படுத்தும் நோக்கில் நடனப் பயிற்சி பாடசாலையில் பயிலும் பிள்ளைகளுக்கு கலைவிழாக்கள் மூலம் நிகழ்ச்சிகளை வழங்க களம் அமைத்துக் கொடுத்தது தமிழர் கலை கலாசார ஒன்றியம். அதனால் நடனப் பயிற்சி பாடசாலை மேலும் வளர்ச்சி கண்டது.

கடந்த ஆண்டு நான் சுவிஸ் சென்றிருந்தபோது தமிழ் வித்தியாலயம் நடைபெறும் பாடசாலைகளில் ஒன்றில் நடனப் பயிற்சி பாடசாலை நடைபெற்றது. அங்கு நடனப் பயிற்சியைப் பெற்ற சிலர் அரங்கேற்றம் செய்துள்ளதை அறிந்தபோது அளவிட முடியாத மகிழ்ச்சி. தற்போது நடனத்துடன் மட்டும் நின்றுவிடாமல் ஆண், பெண் இருபாலாருக்கும் வாத்தியக் கருவிகள் பயிற்சியும் நடைபெற்றது. அன்றைய எமது முயற்சி இன்று பல்துறையாக மிளிர்வதைப் பார்த்தபோது உணர்வால் தேகம் சிலிர்த்தது.

கலைவிழா

தமிழொலி ஆரம்பித்து ஓராண்டை நினைவுகூரும் முகமாக 27.02.1993இல் லுசான் 'சால் டி பரோஸ்' மண்டபத்தில் நடத்தப்பட்டது தமிழர் கலை கலாசார ஒன்றியத்தின் முதலாவது கலைவிழா. அம் மாநிலத்தில்

நடந்த தமிழ் மக்களின் முதலாவது கலைவிழாவாகவும் இது அமைந்தது. மண்டபம் கிடைக்காத காரணத்தால் காலந்தாழ்த்தி விழா நடத்தப்பட்டது. கலைவிழாவுக்கு முன்னோடியாக பேச்சுப்போட்டி, எழுத்துப்போட்டி, நடனப் போட்டி போன்றவை மூன்று பிரிவுகளாக நடைபெற்று தேர்வுகள் இடம் பெற்றிருந்தன. இப்போட்டிகளில் தமிழ் பாடசாலை, நடனப் பாடசாலை மாணவ மாணவிகளும் மாநிலத்தின் வேறு ஊர்களில் வசிக்கும் சிறுவர்களும் அக்கறையாய்ப் பங்குபற்றினர்.

கலைவிழா பி.ப. 4.00 மணிக்கு ஆரம்பமாகி இரவு 9.00 மணிக்கு நிறைவு பெறுவதற்கு ஏற்ப ஏற்பாடுகள் செய்யப்பட்டன. கலைவிழா மண்டபத்தில் வினோத உடைப் போட்டியையும், ஏற்கெனவே மூன்று பிரிவுகளில் இடம் பெற்ற போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பையும், பாடசாலை மாணவ, மாணவியர் உட்பட மாநிலத்தின் வேறு ஊர்களில் இருந்தும் முன்வந்த சிறுவர்களின் நடனங்கள் பலவற்றையும் நிகழ்ச்சியில் இணைத்துக் கொண்டேன். அப்போதுதான் ஓய்வற்ற இயந்திர வாழ்வியலில் வாழும் நிகழ்ச்சியாளர்களின் பெற்றோர், உறவினர், அறிமுகமானவர்களென பெருங்கூட்டத்தை கலைவிழா அரங்கில் எதிர்பார்க்க முடியும். அந்நிய மண்ணில் தனது பிள்ளையின் மேடை நிகழ்வை எந்தப் பெற்றோர்தான் நிராகரிப்பர்.



சிறுவர் நடனங்கள் பலவற்றுடன் நேரக் கட்டுப்பாட்டுடன் கவியரங்கம் - பட்டிமன்றம் - நகைச்சுவை நாடகம் போன்றவையும் பேச்சுப் போட்டிகளில் முதலிடம் பெற்றவர்களின் பேச்சுக்கள், வினோத உடைப் போட்டி என ஐந்து மணித்தியாலத்தை நிறைவுசெய்யத்தக்க வகையில் நிகழ்ச்சிகளை ஒழுங்கமைத்துக் கொண்டேன். குறித்த நேரத்தில் நிகழ்ச்சி ஆரம்பிப்பதற்கு ஏற்றதாக நிகழ்ச்சியாளர்களுக்கு கண்டிப்பான அறிவுறுத்தல் ஏற்கெனவே விடப்பட்டு கலைவிழா முன்னேற்பாடுகள் முடிவுற்றது.

கலைவிழாவில் அதிதிகளாக லூசான் மாநகர மேயரும், தமிழர் கலை கலாசார ஒன்றியத்துக்குப் பெரிதும் ஒத்துழைப்பு வழங்கும் இரு அதிகாரிகளும் அழைக்கப்பட்டிருந்தனர். பி.ப. 3.45 மணிக்கு இவர்கள் மூவரும் மண்டபத்தில் நுழைந்தனர். மண்டபம் தமிழ் மக்களால் நிறைந்து காணப்பட்டமையைக் கண்ட அவர்களுக்கு அளவிடமுடியாத மகிழ்ச்சி தமது ஆச்சரியத்தை தெரியப் படுத்தினர்.

அனைவரும் வியக்கும் வகையில் சரியாக 4.00 மணிக்கு திரைச் சீலை

விலக இறைவணக்கம் ஆரம்பமானது. தமிழர் கலை கலாசார ஒன்றிய உறுப்பினர்களும், நிகழ்ச்சியாளர்களும் சிரத்தையெடுத்து பொறுப்புடன் ஈடுபட்டதால் நிகழ்ச்சிகள் சிறிதேனும் இடைவெளியின்றி நிகழ வழி வகுத்தது. பல வேடங்களில் தம்மை வெளிப்படுத்திய வினோத உடைப் போட்டி மேடை நிகழ்வில் புதிதாக இருந்ததால் பார்வையாளரை பெரிதும் மகிழ்வித்துச் சிறப்பைப் பெற்றது.

ஒவ்வொரு நிகழ்விலும் சிறார்கள் தமது திறமையை வெளிப் படுத்தியதால் ஒன்றுக்கொன்று சளைத்ததாகக் காணப்படவில்லை. அதிதி களின் சுருக்கமான பேச்சில் தாம் கண்ட சிறப்புக்களைக் கூறத் தவறவில்லை. அவர்களுக்கு இருந்த பணியின் மத்தியிலும் நிகழ்ச்சியின் இறுதிவரை பார்வை யாளராக இருந்து சென்றமை தமிழ் மக்களை மகிழ்வித்தது.

தமிழொலி வானொலி ஒலிபரப்பலுக்கென என்னால் எழுதப்பட்ட கவிதைகள் அடங்கிய 'தடுமாறும் சாஸ்திரங்கள்' என்னும் நூலும் அங்கு வெளியீடு செய்யப்பட்டது.



விழா மண்டபத்தில் சிற்றுண்டிசாலை தமிழர் கலை கலாசார ஒன்றியத்தால் நடத்தப் பட்டது. இச்சிற்றுண்டிசாலைக்கென உழுந்து வடை, பருப்பு வடை, றோல், கேசரி, இடியப் பம், கறிவகைகள் போன்றவற்றை ஒன்றிய அங்கத்தவர் சிலரும் ஆதரவாளர்களும் தயா ரித்து இலவசமாக வழங்கினார்கள். அவற்றுடன் தேநீர், கோப்பி, குளிர்பானங்கள் போன்றன விற்பனை செய்யப்பட்டது. அதில் கிடைத்த வருவாய் கலைவிழா செலவின் ஒரு பகுதியை ஈடுசெய்ய உதவியது. பொதுவாக சுவிஸில் நடைபெறுகின்ற விழாக்கள் மற்றும் பொது நிகழ்வுகளுக்கு இவ்வாறு சிற்றுண்டி வழங்குவது வழமை.

தமிழொலி நடத்தும் தமிழர் கலை கலாசார ஒன்றியத்தின் கலைவிழா தொடர்ந்து மூன்று ஆண்டுகள் சிறப்பாக நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. இரண்டு கலைவிழாக்களில் நான் பங்குபற்றிய கவியரங்கக் கவிதைகளுடன் புலம்பெயர்ந்த பின்னர், முதற் தடவையாக 1994 இல் யாழ்ப்பாணம் சென்றபோது ஏற்பட்ட அனுபவங்கள் சிலவற்றை வெளிப்படுத்தும் கவிதைகள் அடங்கிய அவலத்தின் இராகங்கள் என்னும் கவிதைத் தொகுப்பு 22.04.1995 அன்று வெளியீடு செய்யப்பட்டது.


இவையனைத்தும் புலம்பெயர்ந்து வாழும் எம்மவர் பயனடையும் நோக்கில் மேற்கொள்ளப்பட்டவைகளாகும். இவற்றை முன்னின்று செயற்படுத்தியதில் ஆத்ம திருப்தி எனக்கு. இவற்றினிடையேயும் எனது பயணங்கள் தொடர்ந்தன.

மெற்றர்ஹார்ன் (Matterhorn)

சுவிஸின் 'வலெய்' மாநிலத்தில் அல்ப்ஸ் மலைப் பகுதியில் உள்ள 'ஜெர்மாட்' (Zermatt) நகரை வடகிழக்காகவும் இத்தாலியின் 'அவோண்டா' பள்ளத்தாக்கை தெற்காகவும் கொண்டு 'அல்ப்ஸ் - றோசா மலை'யில் பெரிய பிரமிட்டு போன்ற தோற்றத்தில் காணப்படுவதே மெற்றர்ஹார்ன் மலைச் சிகரம்.

ஆங்கில மொழியில் 'மெற்றர்ஹார்ன்' எனவும் ஜேர்மன் மொழியில் 'மெற்றர் ஹார்ன்' அல்லது 'மெற்றர்' எனவும் பிரான்ஸிய மொழியில் 'கர்வின்' மலை எனவும் இத்தாலிய மொழியில் 'கர்வினோ' மலை எனவும் அழைக்கப்படுகிறது. சுவிஸில் எந்த மாநிலத்தைச் சேர்ந்தவர்களுக்கும் 'ஜெர்மாட்' என்று கூறினால்தான் இலகுவாகப் புரிந்துகொள்ள முடியும்.

சுவிற்சர்லாந்தின் இரண்டாவது உயர்ந்த மலைச்சிகரமான மெற்றர் ஹார்ன், 4,478 மீ. (14,692 அடி.) உயரத்தையுடையது. நான்கு திசைகாட்டி புள்ளிகளை எதிர்கொள்ளும் செங்குத்தான நான்கு முகங்களுடன், பிரமிட் வடிவில் பனிப் பாறைகளால் மூடப்பட்டுக் காணப்படுகிறது. குளிர்ச்சியான இந்த மலையின் பிரதியை இலங்கையில் 'மெற்றர்ஹார்ன்' சிகரெட் பெட்டியில் நீண்ட காலமாகக் காணக்கூடிய தாக இருந்தது.



மலை ஏறுபவர்களை கவரத்தக்க மலைச் சிகரமாக மெற்றர்ஹார்ன் உள்ளது. 17.07.1865 அன்று ஜீன் அத்துவான் காரெல் மற்றும் ஜீன் பப்டிச்டே பிச் ஆகியோர் முதல் முறையாக சிகரத்தில் ஏறி சாதனை படைத்தனர். 1857 முதல் 1865 ஆண்டு வரை சிகரத்தில் ஏறமுற்பட்டு எட்ட முடியாமல் திரும்பியும் பேரழிவுகளைச் சந்தித்துமுள்ளனர். சிலரது உடல் கண்டுபிடிக்கப்பட வேயில்லை.

மெற்றர்ஹார்ன் சிகரத்தைப் பார்வையிட வருகைதரும் மக்களுக் காகவும் மலையேறுபவர்களின் வசதிக்காகவும் 1891இல் பற்சக்கர (Cogwheel) தொடருந்து சேவை விஸ்ப் நகரிலிருந்து ஜெர்மாட் நகர்வரை ஆரம்பிக்கப் பட்டது. அங்கிருந்து றோசா மலையை நோக்கி 3,900 மீ. உயரமுள்ள 'பிறித்தோன்' (Breithorn) பீடபூமி வரை இழுவைச் சிற்றூர்தியில் (Cable Car) செல்வதற்கு உருக்குக் கம்பிப் பாதை (Cableways) அமைக்கப்பட்டுள்ளது.

மெற்றர்ஹார்ன் மலைச்சிகரத்தைப் பார்வையிடும் நீண்டநாள் ஆவலை நிறைவேற்றும் நோக்கில் 18.04.1990 அன்று 'பிறிக்' நகருக்குச் செல்லும் தொடருந்தில் சுவிஸிலே நீளமான சுரங்கப்பாதையால் பயணித்து, விஸ்ப்

தொடருந்து நிலையத்தில் இறங்கி, அங்கிருந்து பற்சக்கர தொடருந்தில் ஜெர்மாட் வரை பயணித்தோம். பிறிக் நகர், சுவிஸுக்கும், கால் பாதம்போல அமைந்திருக்கும் இத்தாலிக்குமான தரைப்பாதை எல்லை நகராகும். இத்தாலிக்குச் செல்வதற்கு மலையைக் குடைந்த, தூரம் குறைந்த பாதையும் உள்ளது. அதில் வாகனங்கள் சுயமாகச் செல்ல முடியாது. ஐக்கிய இராச்சியத்துக்கும் பிரான்ஸுக்கும் இடையிலுள்ள கால்வாய்ச் சுரங்கப் பயணம்போல தொடருந்தில் வாகனங்களை ஏற்றியே பயணிக்க முடியும். அதற்கான கட்டணம் செலுத்த வேண்டும்.

ஜெர்மாட்

சுவிற்சர்லாந்தின் 'வலெய்' மாநிலத்தில் ஜேர்மன் மொழி பேசும் பகுதியான 'விஸ்ப்' மாவட்டத்தில் இத்தாலிக்கும் சுவிற்சர்லாந்துக்கும் இடையேயான எல்லையில் விரிந்திருக்கும் அல்ப்ஸ் மலைப்பகுதியில் 1,620 மீ. உயரத்தில் அமைந்துள்ளது 'ஜெர்மாட்' நகரம். 93.7 சதுர மைல் பரப்பளவைக் கொண்ட இந்நகரத்தில் 5,000 வரையிலான மக்களே வசிக்கிறார்கள். பசும்புல் அல்லது புல்வெளி எனப் பொருள்படும் 'சூர் மேட்' என வழக்கிலிருந்த பண்டைய பெயர் காலப்போக்கில் ஜெர்மாட் என மாற்றம் பெற்றுள்ளது.

இத்தாலியின் ஒருபக்க எல்லையிலிருந்து 10 கி.மீ தொலைவிலுள்ள இந்நகர், காதல் மொழியென்றும் சங்கீத மொழியென்றும் புகழப்படும் பிரான்ஸிய மொழி பேசும் மக்கள் வாழ்ந்த பகுதியாகவே இருந்தது. ஜேர்மனியரின் ஆளுகைக்கு உட்பட்டிருந்த காரணத்தால் ஜேர்மன் மொழி பேசும் பகுதியாக மாற்றம் பெற்றுள்ளது. பென்னின் அல்ப்ஸ் மலைகளால் சூழப்பட்ட நகராக ஜெர்மாட் உள்ளது. சூழவுள்ள மலைச் சிகரங்களிலிருந்து மற்றும் பனிப்பாறைகளிலிருந்து உருவாகி சூழவுள்ள பள்ளத்தாக்குகளைத் தேடி ஓடிவரும் பனி ஆறுகளை அங்கு காணக்கூடியதாக இருக்கின்றது. ஆங்காங்கு காணப்படும் ஆறுகள், பள்ளத்தாக்குகளை நோக்கி அமைந்துள்ள மலைச் சரிவுகள், தொலைவில் தெரியும் மலைச்சிகரங்கள் மற்றும் பனிப்பாறைகள் போன்றவற்றால் உல்லாசப் பயணிகளை வெகுவாகக் கவருகின்றது இந்நகர்.


நாம் பயணித்த பற்சக்கர தொடருந்தில் பனிச் சறுக்கலுக்குரிய உபகரணங்களுடன் வந்த பயணிகளே ஏராளம். மலை ஏறும் மற்றும் பனிச்



சறுக்கலுக்குப் புகழ்பெற்ற இந்நகர், 19ஆம் நூற்றாண்டின் மத்திவரை விவசாய சமூகம் வாழ்ந்த பகுதியாக இருந்தது. மலை ஏறல், பனிச் சறுக்கலுக்காகவும் சுற்றுலாப் பயணமாகவும் வருகைதரும் மக்கள் பெருக்கம் காரணமாக சுற்றுலா வசதிகள் மேம்படத் தொடங்கின.

சுற்றுலாத்துறையை இலக்காகக்கொண்டு குடியிருப்புக்கென அடுக்கு மாடி வீடுகள், ஹொட்டல்கள், றெஸ்ற்ரோறன்ஸ்கள், விடுதிகள், வீதிகள் எனப் பல தோன்றி உள்ளூர் பொருளாதாரத்தை மேம்படுத்தின. இதனால் மிகக் குறைந்த தொகையினரே விவசாயத்தில் ஈடுபடலாயினர். ஜெர்மாட் நகரில் வாழ்பவர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் மட்டுமே அங்கு பிறந்த வர்கள். ஏனையோர் சுவிஸின் ஏனைய பகுதிகளிலிருந்து வருகைதந்து குடியேறியவர்களாகும் என அறிய முடிந்தது.

பனி ஆறுகள் பல குறுக்கிட்டு ஓடுவதால் குக்கிராமங்கள் பல உருவாகி



யுள்ளன. பள்ளத்தாக்குச் சரிவுகளிலும் குக்கிராமங்கள் உள்ளன. உல்லாசப் பயணிகளை பெரிதும் கவருபவையாக இவை காணப்படுகின்றன. குக்கிராமங்களில் ஒன்றிலேயே பற்சக்கர தொடருந்து நிலை யம் உள்ளது. தொடருந்து நிலையத்தி லிருந்து வெளியேறும் பயணிகளை தேவாலயம் வரவேற்கிறது. நாமும் சென்று வழிபட்டோம்.

காற்று மாசுபடுவதைத் தடுக்க அங்கு எரிப்பு இயந்திர வாகனங்கள் பயன்படுத்தத் தடைசெய்யப்பட்டுள்ளது. பற்றியில் இயங்கும் வாகனங்களும் மின் பேருந்துகளுமே அனுமதிக்கப்படுகின்றன. ஹொட்டல்கள் மூலம் இயக்கப்படும் குதிரை வண்டில்களும் பயன்படுத்தப்படுவதைக் காணக் கூடியதாக இருந்தது. விதிவிலக்காக அவசரநிலை சந்தர்ப்பத்தில் மட்டும் தீயணைப்பு, அம்புலன்ஸ் வாகனங்களும் நகர சபையின் கழிவகற்றல் வாகனங்களும் அனுமதிக்கப் படுவதாக அறியக்கூடியதாக இருந்தது. பயணிகள் பயன்படுத்துவதற்கு பற்றியில் இயங்கும் வாடகை தானுந்துகள் தாராளமாக அங்கு உள்ளன.

சிறிய அந்த ஜெர்மாட் நகரைச் சுற்றிப்பார்க்க அதிக நேரம் எடுக்க வில்லை. மலைச் சரிவுகளில் பலர் பனிச்சறுக்கலில் ஈடுபடுவதைக் காண முடிந்தது. சுற்றுலாப் பயணிகள் ஆங்காங்கு குழுக்களாக நின்றனர். றெஸ்ரோறன்ஸ்கள் நிரம்பிக் காணப்பட்டன. குளிர் அதிகமாக இருந்ததால் குளிர் காப்பு அங்கி போடவேண்டியதாயிருந்தது.

அங்கிருந்து பாரந்தூக்கி மூலம் இழுவைச் சிற்றூர்தி நிலையம்

சென்றோம். கோடை காலமென்பதால் சீரான பனிச்சறுக்கலுக்கென உயரத் திற்குச் செல்வதற்கு பலரும் இழுவைச் சிற்றூர்தியில் பயணத்தை மேற்கொண் டனர். தொடராய் வந்துகொண்டிருந்த இழுவைச் சிற்றூர்தி ஒன்றில் ஏறி, பிறித்தோன் பிடபூமி நோக்கிய பயணத்தைத் தொடர்ந்தோம். சமாந்தரமாய் இல்லாமல் சற்று உயரமாக ஏறிச் செல்வதை உணரக் கூடியதாக இருந்தது. கண்ணுக்கெட்டிய தூரம் வரை பனிப் பொழிவுகளாகவும் இடையிடையே ஊசியிலை மரங்களின் தொகுப்பாகவும் காணப்பட்டது. பனியாறுகள், பள்ளத்தாக்குகள் கண்கொள்ளாக் காட்சியாக இருந்தன. பனிச்சறுக்கலில் ஈடுபடுவோர் சிறிய உருவங்களாகத் தெரிந்தனர்.

பயணத்தின்போது மனத்தில் பயம் இருந்தாலும் அதனை வெளிக் காட்டிக் கொள்ளாமல் பிறித்தோன் பீடபூமி இழுவைச் சிற்றூர்தி நிலையத்தை வந்தடைந்தோம். சிற்றூர்தி நிலையத்திலிருந்து வெளியேறியதும் குளிர் கடுமையாக இருந்தது. கைகள், செவிகள் விறைக்கத் தொடங்கின. இதனை எதிர்பார்த்து உரிய ஆயத்தங்களுடன் வந்திருந்தமையால் பிரச்சினை தாக்கம் இருக்கவில்லை.

அந்தப் பீடபூமியிலிருந்து பள்ளத்தாக்கை நோக்கி சரிந்து செல்லும் பரந்த தரையில் திரளானோர் பனிச்சறுக்கலில் ஈடுபட்டனர். பனிப்பொழிவின் மேலாக நடந்தவாறே மெற்றர்ஹோர்ன் சிகரத்தின் அழகை இரசித்தோம். வெயில் உச்சமாக இருந்ததால் உடையினுள்ளே உடல் வியர்த்தது. இருப்பினும் உடையை அகற்ற முடியாமல் குளிர் தடுத்தது.

நான்கு முகங்களைக்கொண்ட மெற்றர்ஹோர்ன் சிகரத்தின் இரண்டு முகங்களை அருகிருந்து பார்ப்பதைப்போல் தெளிவாகப் பார்க்க முடிந்தது. பள்ளத்தாக்குகள் பயத்தை உண்டாக்கின. அங்கு உயரத்தில் அமைக்கப் பட்டிருந்த றெஸ்ற்றோறன்றில் ஏறி சிற்றுண்டியும் கோப்பியும் அருந்திவிட்டு அங்கிருந்து மனநிறைவோடு திரும்பிச் சென்றோம்.

ஜெனீவா

ஜெனீவா, சுவிற்சர்லாந்திலுள்ள 26 மாநிலங்களில் ஒரு மாநிலத்தின் பெயரும் அதன் தலைநகரின் பெயருமாகும். ஏனைய மாநிலங்களின் பரப்பளவோடு ஒப்பிடுகையில் சிறியதே ஆனாலும், மக்கள் தொகையின்படி இரண்டாவது பெரிய நகரமாகும். அமெரிக்க 'நியூயோர்க்' நகரத்திற்கு அடுத்தபடியாக ஐ.நா. சபையின் பெரிய மையமாக விளங்குவது ஜெனீவா. உலக செஞ்சிலுவைச் சங்கம், உலக வர்த்தக அமைப்பு, உலக சுகாதார அமைப்பு, சர்வதேச தொலைத் தொடர்பு ஒன்றியம் போன்றவையுடன் இருநூறுக்கும் மேற்பட்ட சர்வதேச அமைப்புகள் இயங்குகின்றன.

ஜெனீவாவின் அதிகாரபூர்வ மொழி ரோமானிச்சு. பயன்படுத்தப் படும் மொழியாக பிரான்ஸிய மொழி உள்ளது. குடியேற்றத்தின் விளைவாக இத்தாலி, போர்த்துக்கல், ஸ்பானிய மற்றும் புலம்பெயர்ந்த நாட்டு மக்கள்

கணிசமாக வாழ்வதாலும் ஐக்கிய நாடுகள் சபையின் மையம் உட்பட பல சர்வதேச நிறுவனங்களின் தளமாக இருப்பதாலும் ஆங்கிலமும் அங்கு பேணப்படுகிறது.

14ஆம் நூற்றாண்டின் பிற்பகுதிவரை உரோமைப் பேரரசின் ஆளுகையின் கீழ் இருந்த ஜெனீவா, 373.6 மீ. உயரத்தில் இருக்கிறது. இதன் மேற்கு நகர மையத்தில் றோன் ஆறு ஓடுகிறது. அல்ப்ஸ் மற்றும் ஜூரா மலைகளால் சங்கிலிபோல் சூழப்பட்டுள்ளது. பிரான்சிலுள்ள உயரமான 'வெள்ளை மலை' ஜெனீவாவின் பின்புலத்தை அழகூட்டுகின்றது. பனிச் சறுக்கலுக்கு சாதகமான தன்மையைக் கொண்டனவாக இரண்டு மலைகள் அமைந்துள்ளமை ஜெனீவாவுக்குச் சிறப்பைத் தருகிறது.

பிரான்ஸ் நாட்டின் எல்லை நகரான ஜெனீவா, 18ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட முரண்பாடுகள் புரட்சிகள், காரணமாக புரட்சிகர பிரான்ஸின் கீழ் சேர்த்துக்கொள்ளப்பட்டு, நெப்போலியன் போர்களின் முடிவில் சுவிற்சர்லாந் தின் கூட்டமைப்புக்குள் கொண்டு வரப்பட்டது.

ஐரோப்பாவிலுள்ள சிறந்த பல்கலைக்கழகங்களில் ஒன்றான ஜெனீவா



பல்கலைக்கழகம் 1559ஆம் ஆண்டு நிறுவப்பட்டதாகும். சுமார் 13,000 மாணவர்கள் கற்கிறார்கள்.

விழாக்கள், நண்பர் களுடனான சந்திப்புகள், தேவைகள், ஐ. நா. சபை செயல கத்தின் முன்னால் நிகழ்கின்ற ஒன்றுகூடல்கள் மற்றும் பொறுப்பாளராகவும் நிகழ்ச்சித் தயாரிப்பாளராகவும் செயற்பட்டு நிகழ்த்தப் பட்ட 'தமிழொலி' வானொலி சேவையின் ஒலிபரப்பு காரணமாகவும் பல தடவைகள் ஜெனீவா சென்று வந்துள்ளேன்.

வருடந்தோறும் ஆவணி மாதத்தில் மூன்றாவது கிழமை ஜெனீவா திருவிழா நடைபெறுகிறது. ஜெனிவா ஆற்றின் ஓரமுள்ள அகன்ற வெளியில் பாடல் நிகழ்ச்சிகள், சிறுவர்களின் விளையாட்டுக்கள், இராட்டணங்கள் எனப் பல நிகழ்வுகள் நடைபெறும் ஞாயிறு மாலை வாண வேடிக்கை நடைபெறும் அதைப் பார்க்க இலட்சக் கணக்கில் மக்கள் கூடுவர். நானும் நாலைந்து தடவைகள் பார்வையிடச் சென்றுள்ளேன்.

ஜெனிவா ஏரியில் மூன்று பிரமாண்டமான நீரூற்றிகள் வெடி பொருட் கள் நிரப்பியபடி விடப்பட்டிருக்கும். தீயணைப்பு படையினரின் படகுகள் பல ஏரியிலும், வாகனங்கள் பல தரையிலும் நிறுத்தப்பட்டிருக்கும். இரவு எட்டு மணியளவில் தூரத்திலிருந்து றிமோட் மூலம் இயக்க நீரூற்றியிலிருந்து சீறியவாறு புறப்பட்டுச் செல்லும் வாண வெடிகள் வானிலே வெடித்து வர்ண

ஜாலங்களை அள்ளிவீசும். ஒவ்வொன்றும் மாறுபட்ட வடிவங்களை, வர்ணங்களை வெளிப்படுத்துவதால் பார்வையாளரை வெகுவாகக் கவரும். தொடராக மூன்று நீரூற்றுகளிலும் உள்ளவை நிறைவுபெற இரவு 9.00 மணி ஆகிவிடும். மறக்க முடியாத வாண வேடிக்கை அது.

ஐ.நா. சபையின் மையம்

ஜெனீவா நகரில் 1936இல் கட்டப்பட்ட உலக நாடுகள் சங்கத்தின் தலைமையகம் அந்நாளில் 'நாடுகளின் அரண்மனை' (Palace of Nations) என அழைக்கப்பட்டது. 1946ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் சுவிற்சர்லாந்து அரசுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் அக்கட்டடம் ஐக்கிய நாடுகள் சபையின் செயலகமாகச் செயற்படத் தொடங்கியது. இங்கு 1946 ஆம் ஆண்டு தொடக்கம் ஐக்கிய நாடுகள் சபையின் செயலகம் இயங்கினாலும் 2002ஆம் ஆண்டிலேயே ஐ. நா. சபையில் உறுப்பினராக சுவிற்சர்லாந்து இணைந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.



நாடுகளின் அரண்மனை கட்டடம் ஐ. நா. சபையின் கட்டுப்பாட்டில் வந்தபின்னர் 1950 மற்றும் 1973ஆம் ஆண்டுகளில் விரிவாக்கங்கள் பல நடந்துள்ளன. அதன்பின்னர் ஐ. நா. சபை வளாகம் 600 மீ. நீளத்தையும் 2,800 அலுவலகங்களையும் 34 மாநாட்டு அரங்குகளையும் கொண்டதாக உள்ளது.

இந்த பிரமாண்டமான கட்டடம் அமைந்துள்ள இடம் தனியாருக்குச் சொந்தமான 'ஆரியானா' பூங்காவாகும். 1890இல் இப் பூங்காவை ஜெனீவா நகர நிர்வாகத்திடம் கொடையளித்த 'குஸ்தவ் டெ ரெவிலியோடு டெ ரீவ்' என்பவர் மூன்று நிபந்தனைகளை விதித்திருந்தார். அவையாவன: பூங்கா எப்போதும் பொது மக்களுக்கு சந்தனமாக இருக்க வேண்டும், தான் இந்தப் பூங்காவிலேயே அடக்கம் செய்யப்பட வேண்டும், பூங்கா பகுதியில் மயில்கள் எந்நேரமும் சுந்திரமாக உலாவ வேண்டும் என்பதாகும். இவை இயன்றளவு கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. இப்பூங்காவில் கொடையளித்தவரின் கல்லறையும், 1668ஆம் ஆண்டுக்குரிய வீடு போன்ற குடிலும் அங்கே காணப்படுகின்றன.

இக்கட்டடத்தின் அடித்தளத்தில் முன்னைய உலக நாடுகள் சங்க உறுப்பு நாடுகளின் பட்டியல் அடங்கிய ஆவணம், சங்க அரசியலமைப்பு ஆவணம், பத்தாவது அவையில் பங்கேற்ற நாடுகளின் நாணயங்களின்



உட்பக்கமுள்ள ஓவியம்

மாதிரிகள் போன்றவை அடங்கிய 'காலப்பேழை' புதைக்கப்பட்டு அடையாளமிடப்பட்டுள்ளது.

1988 ஆவணி மாதத்தில் ஐ. நா. சபைக் கட்டடத்தை பார்வையிட வெளிவாசலில் நுழைவுக் கட்டணம் செலுத்தி உட்சென்றதும் வழிகாட்டியான ஒரு பெண் ஊழியர் வாசலில் காத்திருந்தார். 10 - 15 பேர் வரை அங்கே இணைந்ததும் அழைத்துச் செல்லப்பட்டோம். நுழைவு வாசல் மண்டபத்தில் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் சீனாவில் வாழ்ந்த இறக்கைகளுடன் கூடிய 'டிராகன்' (Dragon) மிருகத்தின் எலுப்புக்கூடு காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தது. அந்த மிருகத்தின் தன்மை பற்றிய விபரத்தை வழிகாட்டி தெரியப்படுத்தினார்.

அடுத்து, சேலையில் வரையப்பட்ட கோபுரத்துடன் கூடிய மாளிகையின் படம் சுவரில் பொருத்தப்பட்டிருந்தது. அந்தப் படத்தின் சிறப்பு, நாம் படத்தின் முன்னால் எங்கு நின்று பார்த்தாலும் மாளிகையின் வாசலும் அங்கிருந்து நீண்டுவரும் பாதையும் எம்மை நோக்கியதாகவே இருக்கும். நாங்களும் பல கோணங்களில் நின்று பார்த்தோம். அது எங்களை நோக்கத் தவறவில்லை.

அம்மண்டபத்தில் பார்வையாளரின் வசதியை முன்னிட்டு வளாகத்தின் வரைபடம் பெரிதாக வரையப்பட்டிருந்தது. அதில் ஒவ்வொரு பிரிவுகளும் மண்டபங்களும் அடையாளமிடப்பட்டிருந்தன. அவ்வளாகம் ஐ. நா. சபையின் செயற்திறன்மிக்க பன்னாட்டு அமைப்புகளின் அலுவலகங்களாலும் மாநாட்டு அரங்குகளாலும் நிறைந்திருப்பதை வரைபடம் உணர்த்தியது.

ஐ. நா. சபையின் பிரதான அவை கூடுகின்ற மண்டபத்திற்குள் நுழையத் தடைசெய்யப்பட்டுள்ளது. ஆனாலும், முதலாவது தளத்தில் பார்வையாளர் பகுதியில் நின்று பார்க்கக்கூடியதாக இருந்தது. அதற்கேற்றாற்போல் மண்டபம் வட்டமாக அமைக்கப்பட்டு மேற்பக்கம் திறந்ததாக கண்ணாடி மறைப்புடன் காணப்பட்டது. அரை வட்டமாக, நிரையாக அடுக்கப்பட்டுள்ள தொடரான மேசைகளும் இருக்கைகளும் பார்வைக்கு அழகாக இருந்தன. ஒவ்வொரு இருக்கைகளுக்கு முன்னால் இருந்த மேசையில் நாடுகளின் பெயர் எழுதப்பட்ட பலகை வைக்கப்பட்டிருந்தது.

மேலும் மாறுபட்ட வகையில் அமைந்துள்ள மாநாட்டரங்குகளுக் குச் சென்றோம். அவற்றை உள்சென்று பார்வையிடவும், இருக்கைகளில் அமர்ந்து கொள்ளவும், மேடையில் உரையாற்றும் இடத்தில் நின்று நிழற்படம் மற்றும் வீடியோ எடுத்துக்கொள்ள தடையிருக்கவில்லை. நாங்களும் மாறி மாறி


உரையாற்றுவதுபோல நின்று வீடியோவில் பதிவுசெய்து கொண்டோம்.

அனைத்துத் தேவைகளையும் நிறைவுசெய்யக்கூடிய வகையில் அழகாக அமைக்கப்பட்டுள்ள மாநாட்டரங்குகளைப் பார்த்து முடித்ததும் முதலாவது தளத்திலிருந்து பரந்த கண்ணாடியூடாக வளாகத்தின் முன்றலைப் பார்வையிட்டோம். மிகவும் அழகான காட்சியாக இருந்தது அந்தப் பகுதி. ஏரிவரை சரிந்து செல்லும் தரையும், பூங்காவுடன் ஆங்காங்கு தெரியும் உயர்ந்த மரங்களும், கட்டடங்களும் இணைந்து அற்புதமாக இருந்தது. அந்த தொலை நோக்கு ஐ. நா. சபை கட்டடத்திற்குச் சிறப்பைத் தருகிறது. அங்கு அவ்வப் போது வருகைதரும் பன்னாட்டுப் பேராளர்களை இந்தத் தொலைநோக்கக் காட்சி மகிழ்விக்கும் என்பது நிச்சயம்.

கவன ஈர்ப்பு ஊர்வலங்கள்

இலங்கையில் அசாதாரண சூழல் நிலவிய காலங்களில் மக்கள் படும் துன்பங்களை, அடையும் பாதிப்புகளை வெளிக்கொண்டுவரும் நோக்கில் கவன ஈர்ப்பு ஊர்வலங்களும், ஒன்றுகூடல்களும் நிகழ்வதுண்டு. இவை இரண்டு வகையானவை. ஒன்று ஐரோப்பா வாழ் தமிழர்கள் ஒன்றிணைந்து நடத்துவதற்கான அழைப்பாகவும், மற்றையது சுவிஸ் வாழ் தமிழர்கள் மற்றும் ஆர்வமுள்ள சுவிஸ் பிரசைகள் இணைந்து நடத்துவதற்கான அழைப்பாகவும் இருந்துள்ளது.

ஐரோப்பா வாழ் தமிழர்கள் இணைந்துகொள்ளும் கவன ஈர்ப்புகளில் ஐரோப்பிய நாடுகள் பலவற்றிலிருந்து பேருந்துகளில் வருகைதந்து ஜெனீவா தொடருந்து நிலையத்துடன் இணைந்துள்ள வர்த்தகத் தொகுதி மற்றும் பரந்த வெளிகளில் ஒன்றுகூடுவர். அங்கிருந்துதான் ஊர்வலம் ஆரம்பமாகும். சுவிஸிலிருந்து கலந்துகொள்ள வருபவர்களுக்காக சூறிச் நகரிலிருந்து விசேட தொடருந்து இலவச சேவை இடம்பெறும். மட்டுப்படுத்தப்பட்ட தொடருந்து நிலையங்களில் தரித்து ஆட்களை ஏற்றியவாறு ஜெனீவா தொடருந்து நிலையத்தில் வந்து தரிக்கும். பலர் தானுந்துகளிலும், பேருந்துகளிலும் ஊர்வலம் தொடங்குமிடத்திற்கு வருவர். வாகனத் தரிப்பிட நெருக்கடி காரணமாக ஆங்காங்கு உள்ள தரிப்பிடங்களில் நிறுத்திக் கொள்வர்.


ஐ.நா.ச. முன்றல்

பொதுவாக பி.ப. 2.00 மணிக்கே ஊர்வலம் ஆரம்பமாகும். ஐரோப்பா வாழ் தமிழர்களின் ஊர்வலத்தில் நாடுகளாகப் பிரிந்து பதாதைகளை ஏந்தியவாறு தொடராகவும், சுவிஸ் வாழ் மக்களின்

ஊர்வலத்துக்கு ஒன்றாக பதாதை ஏந்தியவாறும் மக்கள் செல்வார்கள். ஆண், பெண், சிறுவர்கள் என கோஷமிட்டவாறு நடந்து செல்லும் நீண்ட ஊர்வலத்தைக் காண வீதி ஓரங்களில் குவியலாக மக்களைக் காணலாம். பொலிசாரால் வீதித்தடை போடப்பட்டு ஊர்வலம் செல்ல அனுமதிப்பதால் வாகனங்கள் பல வரிசையாய் தரித்து நிற்கும். இவற்றின் மூலம் ஊர்வலம் பற்றிய தகவலை பலரும் அறிந்து கொள்ளக்கூடியதாக இருக்கும்.

அகன்ற சில வீதிகளில் ஒரு பக்கத்தால் ஊர்வலம் செல்ல மறு பக்கத்தால் வாகனங்கள் செல்லும். பொலிசாருடன் ஏற்பாட்டாளர்களும் இணைந்து எந்த இடையூறுமின்றி ஊர்வலம் செல்ல ஒத்துழைப்பு வழங்குவர். இறுதியாக ஐ. நா. சபை முன்னாலுள்ள பரந்த வெளியை ஊர்வலம் வந்தடையும். அங்கு ஒரு கால் ஒடிந்த பெரியதொரு நாற்காலி வைக்கப்பட்டுள்ள உயரமான பீடத்தின் முன்னால் அனைவரும் அமர்ந்துகொள்வர். ஊர்வலங்கள் சிலவற்றில் இலங்கையில் துன்பியல் நிகழ்வுகளை வெளிப்படுத்தும் சித்திரங்களும் மனிதர்களால் நடித்துக் காண்பிக்கப்படும் ஆற்றுகைகளும் காட்சிப்படுத்தப்படும். காலொடிந்த நாற்காலியின் முன்னால் பெரும்பாலும் தமிழீழ விடுதலைப் புலிகளின் கொடி ஏற்றப்பட்டிருக்கும்.




அங்கு அமர்ந்துள்ள மக்களின் மத்தியில் நடைபெறும் உரைகளில் கவன ஈர்ப்பு ஊர்வலத்துக்கான காரணங்கள், தேவைகள், வேண்டுகோள்கள் பற்றி தமிழிலும் ஆங்கிலத்திலும் விபரிக்கப்படும். பேச்சு முடிவில் கவன ஈர்ப்பு சார்ந்த அறிக்கை யுடன் மூவர் சென்று ஐ. நா. சபை அலுவலகத்தில் ஒப்படைப்பதுடன் ஒன்று கூடல் முடிவடைய அனைவருக்கும் குளிர்பானம் வழங்கப்படும்.

எல்லா ஊர்வலங்களி லும் என்னால் கலந்துகொள்ள முடிவதில்லை. வேலை நாட் களிலேயே ஊர்வலங்கள் ஏற்பாடு செய்யப்படுவதால் விடுமுறை பெறுவதிலுள்ள சிரமம் காரணமாக சில ஊர்வலங்களில் மட்டுமே பங்கு கொள்ளக் கூடியதாக இருந்தது. இதுபோன்ற ஊர்வலங்கள் சுவிஸ் தலைநகரான பேர்ண் நகரிலும் நடைபெறுவதுண்டு. அந்த ஊர்வலங்கள் எமது நாட்டை மையப்படுத்தியதாக இல்லாமல் சுவிஸ் வாழ் தமிழர்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகளை மையப்படுத்திய ஊர்வலங்களாக இருக்கும். இவற்றில் சுவிஸ் நாட்டு மக்கள் பலரும் கலந்து கொள்வார்கள். அங்கு நடைபெறும் மே தின ஊர்வலத்திலும் தமிழர்கள் தனித்துவமாய் பங்கெடுத்துக் கொள்ளத் தவறுவதில்லை.

லுகானோ (Lugano)

'**லு**கானோ', சுவிற்சர்லாந்தில் இத்தாலி மொழி பேசும் டிசினோ மாநிலத்தின் தலைநகரமாகும். ஜேர்மன் மொழியில் 'மாறிகள்' என பொருள் கொண்டதும் 'லுகானோ பிரியல்ப்ஸ்' *(Lugano Prealps)* மலைகளால் சூழப்பட்டதுமான லுகானோ, முதலாம் நூற்றாண்டு முற்பகுதியில் ரோமானியர்களால் ஆழப்பட்டது. இதற்கான கல்வெட்டு ஆதாரங்கள் மற்றும் கல்லறைகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

அண்மையிலுள்ள இத்தாலி மிலான் நகரையும் லுகானோவையும் 'லுகானோ பிரியல்ப்ஸ்' மலையே பிரிக்கின்றது. ரோமானியருக்குப் பின்னரான காலங்களில் மிலான் நகர் பிரபு மற்றும் கோமோ நகர் பிரபுவின் ஆளுமையின் கீழ் இருந்துள்ளது. 1433இல் மிலான் நகர் பிரபு லுகானோவுக்கென ஒரு நிலப்பிரபுவை நியமித்து லுகானோவில் ஆட்சி நடத்தினார். சில ஆண்டுகளின் பின்னர் தொடராக ஏற்பட்ட கிளர்ச்சிகள், எழுச்சிகள், கலவரங்கள் 1499 பிரான்ஸிய படையெடுப்பு வரை தொடர்ந்தன. 1800 வரை பிரான்சிய ஆக்கிரமிப்பு இருந்தது, 1802இல் ஏற்பட்ட எழுச்சியின் பின்னர் லுகானோவின் முதல் முதல்வர் பதவி ஏற்றார்.



இத்தாலி நாட்டை ஒரு பக்க எல்லையாகக் கொண்ட லுகானோ, 32 சதுர கி.மீ. பரப்பளவைக்கொண்டது. இத்தாலியையும் லுகானோவையும் இணைத்துள்ள மலைகளுக்கும் நகருக்குமிடையே 48.7 சதுர கி.மீ. பரப்பளவைக்கொண்ட ஏரி உள்ளது. இந்த ஏரியின் மூன்றிலொரு பகுதி இத்தாலியில் உள்ளது.

மொன்றெக்ஸிலிருந்து 'லுசேர்ன்' நகர் வரை தொடருந்தில் பயணித்து அங்கிருந்து பிறிதொரு தொடருந்தில் லுகானோவுக்கான பயணத்தை மேற்கொண்டோம். உயர்ந்த பல மலைகளில் ஏறி இறங்கி, மலையில் குடைந்த குகைகள் பலவற்றில் நுழைந்து பல மணி நேரத்தின் பின்னர் லுகானோவை அடைந்தோம். குவிந்து காணப்பட்ட மலைகளின் அழகு கண்ணைக் கவர்ந்தாலும் இடையிடையே மலைச்சரிவின் ஓரமாகச் செல்லும்போது தென்படும் பள்ளத்தால் பயமே ஏற்படும். அவ்வளவு ஆழமான மலைச்சரிவுப் பள்ளங்கள்.

தொடருந்து நிலையத்தில் வந்திறங்கிய எங்களை நண்பன் வரவேற்றுத் தனது வீட்டுக்கு அழைத்துச் சென்றான். அங்கு சிறிதுநேரம் ஓய்வெடுத்துக்

கொண்டு மீதமுள்ள குறுகிய பகல் நேரத்தில் லுகானோ நகரைப் பார்வையிடப் புறப்பட்டோம். லூகானோ ஏரிப் பகுதியே தினந்தினம் பல்லாயிரம் மக்களைக் கவர்ந்திழுக்கும் இடமென்பதால் அங்கு சென்றோம். மலைகள், மலைச்சரிவு குடியிருப்புகள், ஏரி, நகரம் இணைந்த காட்சி அற்புதமாக இருந்தது.

ஏரியை நெருங்கிய இடத்தில் தடுப்பு அணையிலிருந்து 50 மீ. தூரத்தில் ஏரியிலிருந்து மேல்நோக்கி பீச்சிட்டுப் பாய்கிறது நீர். பத்து அடி விட்டத்திற் குள்ளிருந்து பல பிரிவுகளாக நீர் பாய்ச்சப்படுவதால் பலவகை வடிவங்கள் உருவாகுகின்றன. அதனால் பார்வைக்கு அழகாக இருக்கின்றது.

மொன்றெக்ஸ் ஏரியை நினைவூட்டியது அந்த ஏரி. அதே போன்ற தடுப்பணை, இருக்கைகள், மரங்கள், நடைபாதையை மருவிச் செல்லும் வீதி போன்றவை காணப்பட்டன. நடைபாதை மொன்றெக்ஸில் இருப்பதைவிட அகலம் குறைவாகவே இருந்தது. ஏரியின் ஓரம் நடைபாதையில் நடந்து சென்றோம். ஏரியில் லோஞ்சிகள் பல போக்கு வரத்தில் ஈடுபடுவதை காணக்கூடியதாக இருந்தது. படகுகள் ஆங்காங்கு சுற்றித் திரிந்தன. சிறிய உணவகங்கள் பலவும் காணப்பட்டன.



பருத்த அன்னைப் பறவைகள் நாலைந்து எங்கிருந்தோ மிக உயரமாய்ப் பறந்துவந்து, விமானத்தைப்போல வட்ட மிட்டு ஏரியில் இறங்கின. இதனை அங்கு நின்ற அனைவர் கண்களும் நோக்கத் தவறவில்லை. வாத்துக்கள் பல கூட்டம் கூட்டமாக உலா வந்தன. அவற்றில் சில தடுப்பு அணையோரம் பார்வையாளர் போடும் உணவை உண்பதற்கு முண்டியடித்து எழுவதை பார்க்கக்கூடியதாக இருந்தது.

ஏரியின் ஓரமாக நெடுந்தூரம் நடந்தோம். இடையில் லோஞ்சி கட்டு மானத் தளம், 'நீர் ரக்சி' கள் (படகின் சாரதி பயணிகளை ஏற்றிச் சென்று சுற்றிக் காண்பிக்கும் இருக்கைகளுள்ள கூடாரப் படகு), படகு வாடகைக்கு விடப்படும் தளம் போன்றவை காணப்பட்டன. இருளாகும் நேரமென்பதால் வாடகைக்குப் பெறப்பட்ட படகுகளும், ரக்சிகளும் தரிப்பிடம் நோக்கித் திரும்பிக் கொண்டிருந்தன.

இருள் முற்றாகச் சூழ்ந்துகொண்டதும் நாம் திரும்பி வருகையில் மேல் நோக்கிப் பாய்ச்சப்பட்ட நீர்த்தொகுதி இப்போது பல வர்ண ஒளிகளால் மெரு கூட்டம் பெற்றிருந்தது. வட்டத்திற்குள்ளிருந்து வெளியேறும் ஒவ்வொரு பிரிவுக்கும் ஒவ்வொரு வர்ண ஒளி பாச்சப்படுவதால் கண்ணுக்கு விருந்தாக இருந்தது. பலரும் கூடிநின்று பார்த்து மகிழ்ந்தனர்.

லுகானோவைப் பொறுத்தவரை வணிகம், சுற்றுலாத்துறை மற்றும் வங்கிகள் உள்ளூர்ப் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக உள்ளன. பொருளாதார வளர்ச்சி காரணமாக எல்லை கடந்த பயணிகளால் ஆக்கிரமிக்கப்பட்டதாகவே லுகானோ உள்ளது. இத்தாலியிலிருந்து பெருமளவிலானோர் இங்கு வந்து வேலை செய்கின்றனர். சைக்கிள் ஓட்டப் போட்டி, மரதன் ஓட்டப் போட்டிகள், இசை நிகழ்ச்சிகள் அடிக்கடி நிகழ்கின்றன போன்ற தகவல்களை அறியக்கூடியதாக இருந்தது.


இரவு நண்பனின் இருப்பிடத்தில் ஓய்வெடுத்து, மறுநாள் காலை 9.00 மணியளவில் 'சிறிதான சுவிஸ்' இனைப் பார்வையிடச் செல்லும் நோக்கில் தொடருந்து நிலையம் நோக்கி நடந்து சென்றோம். வழியில் தரைக் கற்கள் பதித்த வெளியில் செல்கையில் திடீரென ஒரு குழுவினர் வாகனத்தில் வந்திறங்கினர். விரைவாகவே வாகனத்திலிருந்த பொருட்களை இறக்கி அந்த வெளியில் ஆங்காங்கு பொருத்தினர். பத்து நிமிடத்தில் சர்க்கஸ் போன்ற விளையாட் டுக்களைக் காண்பிக்கத் தொடங்கினர். சிலர் இசைக்கருவிகளை இசைத்தனர். எதிர்பார்த்ததைப் போல பார்வையாளர் பலர் அங்கு கூடிவிட்டனர். நாமும் சிறிது நேரம் பார்வையிட்டுப் புறப்பட்டோம். இது போன்ற பல நிகழ்வுகள் அடிக்கடி, ஆங்காங்கு நிகழ்த்தப்பட்டு பண சேகரிப்பு இடம் பெறுவதை அறியக்கூடியதாக இருந்தது.

அங்கிருந்து சிற்ப வேலைப்பாடுகளுடன் கூடிய புனித கார்லோ ஆலயத்திற்கு பேருந்தில் சென்றோம். அங்கு ஞாயிறு வழிபாடு நடைபெற்றுக் கொண்டிருந்தது. சிறிதான சுவிஸினைப் பார்க்கச் செல்லவேண்டியிருப்பதால் அங்கு நீண்ட நேரம் நிற்க முடியவில்லை உள் நுழைந்து சொற்பநேரம் வழி பட்டு நின்ற இடத்திலிருந்து ஆலயத்தின் உள்பக்க அழகைப் பார்வையிட்டு வெளியேறினோம். வெளிப்பக்க முகப்பு மிக அழகாக இருந்தது. ஆலயத்தின் வெளி அமைப்பு ஏனைய ஆலயங்களைவிட மாறுபட்டதாகவும் இருந்தது.

சிறிதான சுவிஸ் (Swiss Miniature)

நுழைவுச் சிட்டையைப் பெற்று நுழைந்தோம். நுழைவுப் பக்கம் சற்று உயரமாக இருந்ததால் அந்தப் பகுதியைத் தெளிவாகப் பார்க்கக் கூடியதாக இருந்தது. சிறிய அளவில் சுவிற்சர்லாந்தை வெளிக்கொண்டுவரும் வகையில் சிறிய மாதிரிக் கட்டடங்கள் பலவற்றால் நிறைந்திருந்து அந்தப் பகுதி. 1959ஆம் ஆண்டு பார்வைக்கு விடப்பட்ட இந்தச் சிறிதான





சுவிஸ், 14,000 ச.மீ. பரப்பளவில் அமைந்திருக்கின்றது.

பார்வையாளர் சிரமமின்றி பார்வையிடுவதற்கு வசதியாக அடையாளமிடப்பட்ட வீதியால் சென்று பார்வையைச் செலுத்தினோம். விரிவான மற்றும் உண்மையான மாதிரிகள் அதாவது ஆதாரபூர்வமான மறு உருவாக்கம் போன்று மாநிலங்களின் தரைத்தோற்றம், நகரங்களின் அமைப்பு, அங்குள்ள பிரபல்யமான கட்டங்கள் - ஆலயங்களின் மாதிரிகள், வீதிகள், நினைவுச் சின்னங்கள், தொடருந்து பாதைத் தடங்கள், ஏரிகள், மலைகள், நீர்வீழ்ச்சிகள், மலைக் குடைவுகள், பாலங்கள், விளையாட்டு மைதானங்கள், பூங்காக்கள், கோபுரங்கள் போன்றவை ஆச்சரியப்படும் வகையில் தத்ரூபமாக அமைக்கப்பட்டிருந்தன. நான் ஏற்கெனவே பல இடங்களுக்குச் சென்று வந்திருந்ததால் அங்கு பார்த்த கட்டங்கள் பலவற்றை எள்ளவும் மாற்றமின்றிச் சிறிதாகப் பார்த்தபோது அசந்தேவிட்டேன்.

உதாரணமாய்க் கூறுவதானால் மொன்றெக்ஸ் நகரில் நாங்கள் தினந்தினம் பார்த்து மகிழ்ந்த லெமன் ஏரி, அதில் பயணிக்கும் நீரூர்திகள், ஹொட்டல் மொன்றைக்ஸ் அரண்மனை, லுசான் நகரத்தில் பெரிய தேவாலயம், ஜெனீவா நகரில் ஐ.நா.சபை கட்டடம், பேர்ண் நகரில் பாராளுமன்றக் கட்டடம் போன்று 26 மாநிலங்களிலும் உள்ள நகரங்களில் நன்கு அறியப்பட்டவைகள் அசல் பிரதிகளாக இருந்தன.

18 மாதிரி தொடருந்து நிலையங்கள், தடங்கள், தொடருந்துகள் எனப் பல காணப்பட்டன. மலையிலிருந்து மலைக்கு பயணம் செய்யும் தொங்கு இழுவை சிற்றூர்திகள் (Cable Car) மற்றும் இழுவை ஊர்திகள், ஏரிகளில் பயணிக்கும் நீரூர்திகள், லோஞ்சிகள் போன்றவையும் உள்ளன. தொடருந்துகள், மற்றும் நீரூர்திகள் இயங்கு நிலையிலேயே இருந்தன. 1,500 மேற்பட்ட மரங்கள், 15,000 வரையிலான மலர் இனங்கள் நடப்பட்டிருந்தன.

மாதிரி அமைப்புகளுக்கு முன்னால் செல்லும் வீதியால் பயணிக்கும் போது அது குறிக்கும் நகரத்து வீதியால் நடக்கும் உணர்வே ஏற்பட்டது. அந்த அளவுக்கு இயற்கைத்தனம் மேலோக்கி இருந்தது. உலகில் சில நாடுகளில் ஊர் அல்லது நகரத்தின் மாதிரியையே சிறிய அளவாக அமைத்திருக்கையில் ஒரு நாட்டையே சிறிய அளவில் மாதியாகக் கொண்டுள்ளது சுவிஸில் மட்டும்தான் என்பதை அறியக் கூடியதாக இருந்தது.

சிறுவர் முதல் பெரியவர் வரை அனைவரையும் கவரக்கூடிய வகையில், கலைத்துவத்தை வெளிப்படுத்தும் வகையில் அமைந்துள்ளதால் சிறுவர்கள்

ஓடியோடி கட்டடங்களின் முன்னால் நின்று நிழற்படம் எடுத்துக்கொண்டனர். அவர்களது மகிழ்ச்சி எம்மையும் மகிழ்வித்தது. ஒரே நாளில் சுவிஸின் அனைத்து இடங்களையும் பார்வையிட்டு முடித்த மனநிறைவு எமக்கு. நெடுந்தூரப் பயணமாக அமைந்திருந்தாலும் இதனைப் பார்வையிடக் கிடைத்த சந்தர்ப்பம் மறக்கமுடியாத ஒன்றாக அமைந்துவிட்டது.

லூசெர்ன் (Lucerne)

லுசெர்ன், மத்திய சுவிற்சர்லாந்தின் ஜேர்மன் மொழியை ஆட்சி மொழியாகவும் பேச்சு மொழியாகவும்கொண்ட ஒரு மாநிலமும், அதே பெயரையுடைய தலைநகரத்தின் பெயருமாகும். 'அல்ப்ஸ்' மலையுடன் இணைந்ததாக உள்ள 'பிலாத்தூஸ்' மற்றும் 'றிகி' மலைகளும் 'லுசெர்ன் ஏரி'யும் ஒன்றித்து இருப்பதால் உல்லாசப் பயணிகளை தாராளமாக உள்வாங்கும் இடமாக அமைகிறது இந்நகரம்.

நகரத்தின் மையப் பகுதியில் லுசேர்ன் ஏரியின் கிளை பகுதியை ஊடறுத்து கூரையுடன் அமைந்த 'சிற்றாலயப் பாலம்' *(Chapel Bridge)* புகழ் பெற்ற அடையாளமாகவும் உல்லாசப் பயணிகளை ஈர்ப்பதாகவும் உள்ளது. 1333ஆம் ஆண்டில் மரங்கள்கொண்டு கட்டப்பட்ட 204 மீ. நீளமுள்ள இப் பாலம் சேதமுறாத வண்ணம் பாதுகாக்கப்படுகிறது.

கூம்புபோன்ற கூரையைக் கொண்ட உயரமான எண்கோண நீர்க் கோபுரம் ஏரியில் பாலத்துடன் மருவியதாக உள்ளது. பார்வைக்கு சிற்றாலயம் போல தோன்றினாலும் அங்கு றெஸ்ரோறன்ஸே இயங்குகின்றது. லுசெர்ன் வரலாற்று நிகழ்வுகளைச் சித்திரிக்கும் 17ஆம் நூற்றாண்டுக்குரிய ஓவியங்கள் பாலத்தின் இருபக்க உட்புறமும் வரையப்பட்டுள்ளன. இப்பண்டையப் பாலத்தைப் பார்வையிடவும் அதன் மேலால் நடப்பதற்கென வருகின்ற பார்வையாளரால் றெஸ்ரோறன்ஸ் எப்போதும் நிறைந்தே காணப்படும்.

பிலாத்தூஸ் மலையை ஒருபக்க பின்புலமாகக்கொண்ட அகன்ற நீளமான லுசெர்ன் ஏரி உல்லாசப்பயணிகளிடையே பெரு வரவேற்பைப் பெறுவதால் எந்நேரமும் நெருக்கடி நிலையே காணப்படும். பிரமாண்ட மான பல மாடிகளுடன் கூடிய பயணிகள் நீரூர்திகள் எப்போதும் நிறைந்த பயணிகளுடன் வலம் வருவதைக் காண மகிழ்வாக இருந்தது. ஏரியின் ஓரங்களில் ஆங்காங்கு நீரூர்தித் துறைகள் அழகுற அமைக்கப் பட்டுள்ளன.



ஆறாம் நூற்றாண்டு முதற்கொண்டு ஆட்சியிலிருந்த



ரோமனிய பேரரசின் வீழ்ச்சியின் பின்னர் 750ஆம் ஆண்டில் ஜேர்மனிய ஆல்மேனிக் மக்களின் செல்வாக்கு அதிகரித்தது. பின்னர் பல பகுதிகள் மடாலயத்தின் அதிகார வரம்புக்கு உட்பட்ட நிலையையும் ஆட்சி மாற்றங்கள் பலவற்றையும் உள்வாங்கி 07.11.1332 இல் நித்திய சுவிஸ் கூட்டமைப்பு உருவாக்கத்துடன் இறுதியான ஆஸ்திரியரின் ஆட்சி முடிவுக்கு வந்தது.

மொத்த நிலப்பரப்பில் கால் பகுதி காட்டுப் பகுதியாகும். இவை விவசாயம், பழத்தோட்டம் மற்றும் மேச்சலுக்குப் பயன்படுகிறது. நகரின் மத்திய பகுதி குடியிருப்புகளாலும் வர்த்தக நிலையங்களாலும் நிறைந்திருப்பதால் நெருக்கமான பகுதியாகக் காணப்படுகின்றது. பண்டைய கால நினைவூட்டல் சின்னங்கள் பல ஆங்காங்கு வைக்கப்பட்டுள்ளன.

ஆண்டுதோறும் பல்வேறு விழாக்கள் நடைபெறுவதால் அவற்றைப் பார்ப்பதற்கு சுவிஸின் பல பாகங்களிலிருந்தும் மக்கள் திரண்டு வருவர். கோடை ஆரம்பித்ததும் பாரம்பரிய லுசெர்ன் இசை விழா, பொப் இசை விழா, நீலப் பந்துகள் விழா, ஜாஸ் விழா போன்றவற்றுடன் குளிர்காலத்தின் இறுதியில் கார்னிவல் (களியாட்டம்) நடைபெறுகிறது. தெருக்கள் வெளிகளிலெல்லாம் மக்களைத் திரளாகக் காணலாம். வாத்தியக் கருவிகள் ஒலியெழுப்ப, அபத்தமான உடையுடன் முகமூடி அணிந்த மக்கள், பாடியவாறு குளிர் போக்க ஆடும் போது வித்தியாசமான பாத்திரங்களாகத் தெரிவர். ஒரு தடவை நான் பார்த்திருக்கின்றேன்.

பிலாத்துஸ் (பைலேட்) மலை (Mount Pilatus)

லுசெர்ன் நகரில் நான் தங்கியிருந்த நண்பனின் வீட்டிலிருந்து 300 மீ. தூரத்திலேயே 'பிலாத்தூஸ் மலை'க்குச் செல்வதற்கான 'பற்சக்கர' (cogwheel) தொடருந்து நிலையம் உள்ளது. அதிகாலை 6.00 மணியளவில் ஊர் விழித்துக் கொள்ளாத நேரம் நாம் ஐந்து பேர் வீதியில் நடந்துசென்று விரைவாகவே பற்சக்கர தொடருந்து நிலையத்தை அடைந்தோம். 'Pilatus' என எழுதப்பட்ட பின்புலக் காட்சிகளடங்கிய பெரியதொரு விளம்பரப் பதாதை எங்களை வரவேற்றது. பிலாத்துஸ் என்னும் சொல், லத்தீன் மற்றும் ஜேர்மன் மொழிகளுக்குரியதாகும். ஆங்கிலத்தில் 'பைலேட்' (Pilate) என்றும் தமிழில் 'பிலாத்து' என்றும் அழைக்கப்படுகிறது.

இம்மலைக்கு வருடத்தில் மே மாதம் முதல் நொவெம்பர் மாதம் வரையே உல்லாசப் பயணிகள் செல்வதற்கான வசதி செய்யப்பட்டுள்ளது.

இருப்பினும் நொவெம்பர் மாதம் பனிப்பொழிவு நிலைமைகளைப் பொறுத்தே தீர்மானிக்கப்படும்.

2,128 மீ. உயரத்தையுடைய இம் மலையில் ரோம ஆளுனர் 'பொந்தியு பிலாத்து' *(Pontius Pilate)* என்பவரது உடல் அடக்கம் செய்யப்பட்டதாகவும் அதன் காரணமாகவே இம்மலை பிலாத்துஸ் மலையெனப் பெயர் வந்ததாகவும் பாரம்பரியமாகப் பேசப்படுவதை நாம் ஏற்கெனவே அறிந்திருக்கின்றோம்.

காலை 6.30 மணியளவில் பற்சக்கர தொடருந்து புறப்பட்டது. அதி காலை நேரமென்பதால் உல்லாசப் பயணிகள் தொகை மிகக் குறைவாகவே இருந்தது. காலைக் கதிரவனின் ஒளி பனிப் படிவுகளில் பட்டுத் தெறிப்பதைப் பார்க்கக் கண்கள் கூசின. பரந்து தெரிந்த பனிப் படிவுகளையும், ஒளித் தெறிப்பையும், மலைச் சரிவையும் கண்ணுக்கெட்டிய தூரம்வரை பார்த்தவாறு எமது பயணம் தொடர்ந்தது.

இடையில் ஒரு தொடருந்து தரிப்பிடம். மேலிருந்து இறங்கிவந்த தொடருந்தும் நாம் பயணித்த உயர்ந்து செல்லும் தொடருந்தும் அந்தத் தரிப் பிடத்தின் இரு பக்கங்களிலும் தரித்து, பின் பயணத்தைத் தொடர்ந்தது. ஒரு தொடருந்து பயணிப்பதற்குரிய தடம் மட்டும் உள்ளதால் ஒன்றையொன்று விலகிச் செல்வதற்கு இந்தத் தரிப்பிடத்தில் வசதி செய்யப்பட்டுள்ளது. அத்தரிப்பிடத்தில் பயணிகள் எவரும் ஏறவோ, இறங்கவோ இல்லை.

உயரச் செல்லச்செல்ல மலைகள், மலை உச்சிகள், அவற்றை மறைத்து மீளும் புகார்கள், லுசெர்ன் ஏரி, குடியிருப்புகள், பயணிக்கும் நீரூர்திகள் என எமது கண்கள் அந்தக் காட்சிகளை உள்வாங்கத் தவறவில்லை. பற்சக்கர தொடருந்து 'கிறின்ஸ்' *(Kriens)* மலை உச்சியில் தரித்தது. பயணிகள் இறக்கப் பட்டனர். விசாலமான தொங்கு ஊர்தி நிலையம் அது. அங்கு றெஸ்ரோன்களும் சிறிய விற்பனை நிலையங்களும் இருந்தன. தொடருந்து நிலையத்துடன் இணைந்ததாக வான்வழிப் பயணத்துக்கான 'தொங்கு இழுவை சிற்றூர்தி' *(Cable Car)* நிலையம் இருந்தது.


அத்தரிப்பிடத்திலிருந்து 'உருக்கு கம்பிப் பாதை' *(Cableways)* 'தொம்லிஸ்கோர்ன்' *(Tomlishorn)* மலை உச்சிவரை செல்கிறது. உருக்குக் கம்பியில் தொடராய் வந்து கொண்டிருந்த தொங்கு இழுவை சிற்றூர்தி அந்த நிலையத்தில் தரித்ததும் கதவு திறபட்டது. பயணிகள் விரைந்து ஏறிக்கொள்ள அது பயணத்தைத் தொடர்ந்தது. நாங்களும் ஒரு தொங்கு இழுவை சிற்றூர்தியில் ஏறிக்கொண்டோம். முற்றிலும்



கண்ணாடியால் மறைக்கப்பட்ட, ஆறுபேர் அமரக்கூடிய சிற்றூர்தி அது.

இரண்டு மலைகளுக்கும் இடையிலுள்ள பரந்த ஆழமான வெளியின் மேலாக ஊர்தியில் பயணிப்பது மகிழ்வாக இருந்தது. நாம் பயணிக்கும் திசையில் முன் பின்னாக பல ஊர்திகளும், அடுத்தடுத்து எதிராக வந்து பக்கத்தால் கடந்து செல்லும் ஊர்திகளும் எனப் பல ஊர்திகள் வானிலே மிதப்பது போலக் காணப்பட்டன. இரும்புப் பாளக் கோபுரங்கள் தொடராக அமைக்கப்பட்டு உருக்குக் கம்பியைத் தாங்கியிருப்பதால் மனதில் பயம் எழவில்லை. தொலைநோக்காகப் பல காட்சிகளைப் பார்க்கக்கூடியதாக இருந்து. பற்சக்கர தொடருந்தில் வரும்போது தெரிந்த மலைகள், மலை உச்சிகள், அவற்றை மறைத்து மீளும் புகார்கள், லுசொர்ன் ஏரி, குடியிருப்புகள், பயணிக்கும் நீரூர்திகள் போன்றவற்றை வேறொரு கோணத்தில் தொலைவில் பார்க்கக்கூடியதாக இருந்தமை மேலும் மகிழ்வைத் தந்தது.

'தொம்லிஸ்கோர்ன்' மலை உச்சியில் ஒவ்வொன்றாய் சிற்றூர்தி தரிக்க பயணிகள் விரைவாக இறங்கிக்கொண்டனர். தொடர்ந்து வட்டமடித்து



புறப்படத் தயாராக நிற்கும் பயணிகளை ஏற்றியவாறு அதன் பயணம் தொடர்ந்தது. நாம் இறங்கிய தொங்கு இழுவை சிற்றூர்தி நிலையம் விசாலமானதாக இருந்தது. அந்தப் பகுதி ஹொட்டல்கள், றெஸ்ரோறன்ஸ்கள், பல்வகை விற்பனை நிலையங்கள் என நிரம்பி இருந்தன. நிலையத்துக்கு வெளியே பலர் பனிச்சறுக்கலில் ஈடுபடுவதைக் காணக்கூடியதாக இருந்தது. வெயில் இருந்தபோதும் வெளியே குளிராக இருந்தது. அந்த இடத்திலிருந்து பார்க்கையில் சுற்றுப்புறமுள்ள மலைச் சிகரங்களின் அழகு கண்ணை ஈர்ந்தது. தரையை முற்றாய் மூடிக் கிடந்த பனிப் பொழிவுகளில் பலரையும் போல் நாமும் சிறிதுநேரம் பனித் துகள்களை கோலியெடுத்து பந்தாக உருட்டி எறிந்து விளையாடினோம்.

இந்த சிற்றூர்தி நிலையத்துடன் இணைந்தாற்போல் பிறிதொரு தொங்கு இழுவை ஊர்தி நிலையம் இருந்தது. இங்கிருந்து 1,350 மீ. தூரத்திலுள்ள 'எஸ்சல்' (Esel) மலை உச்சிவரை உருக்குக் கம்பிப்பாதை செல்கிறது. அந்தக் கம்பிப் பாதையில் பயணிக்கும் 'தொங்கு இழுவை ஊர்தி' சிறியதன்று ஐம்பது பயணிகள் வரை அமர்ந்தும் நின்றும் பயணிக்கக்கூடிய பெரிய ஊர்தியது. இடையில் எந்த ஆதாரமும் இல்லாமல் இரண்டு மலை உச்சியையும் மொத்தமான உருக்குக் கம்பி இணைக்கிறது. அக் கம்பியில் ஊர்தி தொங்கியவாறிருக்க இருபக்க மலையுச்சியிலிருந்தும் இயந்திரத்தால்

இயக்கப்படும் கேபிள் சங்கரங்களின் உதவியுடன் இழுபட்டு செல்கிறது. இரண்டு மலையும் சந்திக்கும் அடிவாரம் ஆழமாய்த் தெரிந்ததால் தரையைப் பார்க்கும்போது இதயம் படபடத்தது. தொங்கு சிற்றுர்தியில் தோன்றாத பயம் இதனில் தோன்றவே செய்தது.

'எஸ்சல்' மலை உச்சியில் ஊர்தி தரித்து வெளியேறியதும் நிம்மதிப் பெருமூச்சும் வெளியேறியது. மலை உச்சியை முற்றிலும் அடக்கிய வட்டமாக அமைக்கப்பட்டிருந்தது தொங்கு இழுவை ஊர்தி நிலையம். நிலையத்தின் உள்ளே வட்டமாக அமைந்துள்ள பெரியதொரு றெஸ்ரோறன்ஸ் இருந்தது. றெஸ்ரோறன்ஸுக்கும் நிலையத்தின் புறச் சுவருக்குமிடையே உள்ள வட்டமான விறாந்தையில் பயணிகள் கணிசமாக நின்றனர்.


அங்கிருந்து படிகளால் இறங்கிச் சென்றால் விடுதியும் றெஸ்ரோறன்ஸும் உள்ள பழமையான கட்டடம் உள்ளது. இந்த மலை உச்சிக்கு சற்றுத் தள்ளி 'கோடைப் பாறை' என்னும் மலைப்பாறை உள்ளது. அப்பாறைக்குச் செல்வதற்கு நிலையத்திற்கு அண்மையிலிருந்து தொங்குபாலம் செல்கின்றது. அந்தப் பாறையில் குறித்த பகுதிகளில் மட்டும்தான் பயணிகள் செல்வதற்கான வசதி செய்யப்பட்டுள்ளது.

பல உச்சிகளைக்கொண்ட பிலாத்துஸ் மலைத் தொகுதியைப் பார்வையிட்ட மனநிறைவில் முன்னர் சென்ற முறைப்படி திரும்பி வந்தோம் களைப்புற்ற நிலையில். காலையில் புறப்பட்ட நாம் வீடு வந்து சேர இருளாகி விட்டது. ஆனாலும் அங்கு பார்த்த காட்சிகள் ஒளியாகவே பிரகாசித்தன நினைவுகளில்.

பாசல் (Basel)

சுவிற்சர்லாந்தில் ஜேர்மன் மொழி பேசுகின்ற மாநிலத்தின் பெயரும் அதன் தலைநகரின் பெயருமாகும். இதனை ஜேர்மன் மற்றும் ஆங்கில மொழிகளில் 'பாசல்' என்றும், பிரான்ஸிய மொழியில் 'பால்' என்றும், இத்தாலிய மொழியில் 'பாசலியா' என்றும் அழைப்பர். சூறிச் மற்றும் ஜெனீவா நகர்களுக்கு அடுத்துள்ள பெரிய நகரான பாசலில் ஜேர்மன் மொழி அலுவலக மொழியாகவும் பேச்சு மொழியாகவும் இருந்தபோதும் பேச்சு வழக்கில் அம்மொழியில் கலப்புநிலை காணப்படுகிறது. அதனால் இம்மொழியை





'அல்மானிக் சுயிஸ்' என்றே குறிப்பிடுவர். உதாரணமாக, அங்கு வழக்கிலுள்ள நன்றியைக் குறிக்கும் 'மெர்சி' என்ற சொல் பிரான்ஸிய மொழிக்கு உரியதாகும். ஜேர்மன் மொழியில் 'ட(d)தங்க' என்பதே நன்றிக்குரிய சொல்லாகும். ஜேர்மன் மொழி பேசும் வேறு சில நகர்களிலும் 'மெர்சி' என்ற சொல் பாவனையில் இருக்கிறது.

பிரான்சிலும் ஜேர்மனியிலும் புறநகர்களைக் கொண்டுள்ள பாசல், பிரான்ஸ் - ஜேர்மன் - சுவிஸ் நாடுகள் சந்திக்கும் எல்லை நகராக இருக்கின்றது. மூன்று நாடுகளுக்கும் தரைத் தொடர்பால் இணைப்பு இருந்தபோதும் ஐரோப்பிய நாடுகள் பலவற்றை ஊடறுத்து வடகடல் வரை செல்லும் அகன்ற ஆழமான ரைன் ஆறு பாசல் நகரைத் தொட்டுச் செல்கின்றது. அவ்வாறு தொடும் இடத்தில் அரைவட்ட அமைப்பில் அமைந்த துறைமுகத்தில் மூன்று நாடுகளுக்கும் இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. பிரான்ஸ், ஜேர்மன் மற்றும் சுவிஸ் நாட்டு பாரிய பயணிகள் லோஞ்சிகள் துறைமுகத்தில் தமக்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் தத்தமது நாட்டுக் கொடிகளோடு வந்து தரித்து புறப்படும் காட்சியைப் பார்வையிட தினந்தினம் திரளான மக்கள் கூடுவர். பார்வையிட வரும் மக்களுக்காக இருக்கைகள் பல போடப்பட்டுள்ளன. நானும் இரண்டு தடவைகள் பார்வையிடச் சென்றிருக்கின்றேன்.

09.06.1501இல் சுவிஸ் கூட்டமைப்பு பதினொராவது மாநிலமாக இணைத்துக்கொண்ட பாசல், சுவிற்சர்லாந்தின் கலாசார மையங்களில் ஒன்றாக விளங்குகின்றது. திரையரங்குகளில் நுண்கலைகள், உலகில் பழமையான கலை சேகரிப்பு அருங்காட்சியகம் உட்பட பல அருங்காட்சியகங்கள், சிறந்த கலை அரங்கம் போன்றவற்றுடன், ரோமானியர் - கிரேக்கர் பாசலை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்து ஆட்சி செய்த காலத்து தேவாலயங்கள், அரங்குகள், கோட்டை போன்றவையும் காணப்படுகின்றன.

பாசலின் வடமேற்கு பிராந்தியத்தில் இரசாயனம் மற்றும் மருந்துத்துறையில் முக்கிய தொழில் மையங்கள் இருக்கின்றன. அதிக சம்பளத்தை வழங்கும் தொழில் மையங்களாகவும் இவை உள்ளன. பல இலங்கைத் தமிழர் இத்தகை தொழிற்சாலைகளில் வேலை செய்கின்றனர். நீண்ட காலமாக வேலை செய்த சிலர் இரசாயனம் மற்றும் மருந்துகளின் தாக்கத்தால் பாதிக்கப்பட்டுமுள்ளனர்.

வருடந்தோறும் பரிசுத்த வாரத்தின் தொடக்க நாளான குருத்தோலை ஞாயிறு (சாம்பல் ஞாயிறு) அன்று பாசல் நகரமே திரண்டு

கொண்டாடும் 'கார்னிவல்' முக்கியமானதொரு கொண்டாட்டமாகும். பலவர்ண நிறப் பூச்சுகளால், உடைகளால் தம்மை அலங்கரித்த மக்கள் வீதியால் ஊர்வலமாகச் செல்லும் காட்சியைக்காண பிற நகரத்தவரும் கூடுவர். நானும் பல தடவைகள் பார்த்திருக்கிறேன்.


பாசலை ஊடறுத்து வளைந்து ஓடும் ரைன் ஆற்றின் கிளை ஆறு பாசலின் பிரதான சரக்குப் போக்குவரத்துப் பாதையாக உள்ளது. பாரிய சரக்கு நீரூர்திகளில் சரக்குப் போக்குவரத்துச் சேவை நடைபெறுகின்றது. கடலில் செல்லும் நீரூர்திகளை இணைக்க 'ரோட்டர்டாம்' துறைமுகம் இயங்கு கின்றது. இது சுவிற்சர்லாந்திலுள்ள ஒரேயோரு சரக்குத் துறைமுகமாகும்.

மக்கள் போக்குவரத்துக்கென அமைந்துள்ள 'டிராம்' நெற்வேக் சிறந்த அமைப்பாகும். சுவிஸிலேயே அதிகளவான சேவைகளை வழங்குவதாக இந்த நெற்வேக் அமைந்துள்ளது. இணைப்புப் பேருந்துகளும் பணியில் ஈடுபடு கின்றன. தரைத்தோற்றம் பெரும்பாலும் சமதரையாக இருப்பதுவே இதற்குக் காரணம்.

உயிரியல் பூங்கா

பாசல் நகரின் எல்லையில் ஸ்ட்ரீம் பள்ளத்தாக்கை உள்ளடக்கி அமைந்துள்ளது உயிரியல் பூங்கா. மீனினம், ஊர்வன, பறப்பன, நீர் - நிலம் வாழ்வன என அதிக எண்ணிக்கையிலான உயிரினங்களை தன்னகத்தே கொண்ட இப்பூங்கா 03.07.1874இல் ஆரம்பிக்கப்பட்டதாக அறியப்படுகிறது. 3,212 ஏக்கர் பரப்பளவில் செறிவான மரங்களை உள்ளடக்கியதாக உயிரியல் பூங்கா அமைந்துள்ளது.

உலகில் உள்ள சிறந்த 15 உயிரியல் பூங்காக்களில் ஒன்பதாவதாக விளங்கும் இவ்வுயிரியல் பூங்கா, பல நாடுகளில் வாழுகின்ற உயிரினங்கள் இங்கு ஒருசேர வளர்க்கப்படுகின்றன. உயிரினங்கள் பலவற்றை இனப்பெருக்கம் செய்வதில் வெற்றியடைந்துள்ளமையை அங்குள்ள தகவல்கள் கூறுகின்றன. 480 இனங்களைக்கொண்ட 6,000 இற்கும் மேற்பட்ட விலங்குகளையும், 5,000இற்கும் மேற்பட்ட மீன்களையும் உள்ளடக்கியதாக காணப்படுகின்றது உயிரியல் பூங்கா.



பூங்காவில் நுழை யும்போதே ஏதோவொரு புது உலகத்தில் நுழையும் எண்ணம் தோன்றியது. குரங்குகள் வீடு, பறவைகள் வீடு என ஒவ்வொரு உயிரினக் குழுமத்துக்கும் தனித்தனி வீடுகள் அமைக் கப்பட்டுள்ளன. குளிர்கால

தாக்கத்திலிருந்து உயிரினங்களை பாதுகாக்கும் வகையிலும் அவ்வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன. ஆபிரிக்கா வீடு, அவுஸ்திரேலியா வீடு என நாடுகளின் பெயரில் உள்ள வீடுகளில் கிடைப்பதற்கரிய மிருகங்கள் வளர்க்கப்படுகின்றன.

இந்தியாவின் சிறுத்தை, நீர் யானை, காண்டாமிருகம், ஆபிரிக் காவின் யானை, கெரில்லா குரங்கு, அரியவகை வெள்ளைமுகக் குரங்கு, நெருப்புக் கோழி, பெரிய வரிக் குதிரைகள், காட்டு நாய்கள், சிங்கம், சிறுத்தை, சோமாலியின் காட்டுக் கழுதை, ஆமை, வடதுருவத்தின் ஜென்டூ பெங்குவின், ராஜா பெங்குவின், அவுஸ்திரேலியாவின் கங்காரு, வான்கோழி, மலைப்பாம்பு என இதுபோன்ற பல நாட்டு உயிரினங்களைப் பார்ப்பதைப் பெரும் பேறாகவே கருத வேண்டியுள்ளது.

ஒவ்வொரு உயிரினமும் இடையூறின்றி வாழக்கூடிய வாழ்வியல் வசதிகளுடன் அமைக்கப்பட்டிருப்பதால் அவை மகிழ்வுடன் வாழ்கின்றன. அதனால் சிறப்பைப் தருகின்றது. காண்டாமிருகங்கள் நீர் சேர்ந்த மரங் களுடன் கூடிய நிலத்திலும், ஒட்டகச்சிவிங்கி பெரியதொரு வீட்டிலும், முதலைகள், பாம்புகள் பாதுகாப்பான முறையிலும், பனிச்சிறுத்தை குளிர்மை யிலும் என உயிரினங்களின் தன்மைக்கேற்ப வசதிகள் செய்யப்பட்டிருந்தன.

பறவைகள் வீட்டுக்குச் சென்றதும் ஆச்சரியமடைந்தோம். எத்தனை பறவை இனங்கள். கிளி வகைகளில் சிலவற்றைத்தான் நாம் அறிவோம். ஆனால் இங்கு கண்டு அறிந்திராத கிளி வகைகள் குதூகலமாய் இருந்தன. இப்படி பலவகை அறிந்த, அறிந்திராத பறவை இனங்கள்.

மீன்களின் வீடு செழிப்பாக வரவேற்றது கண்ணாடி மறைப்பின் பின்னால் ஏராளமான மீனினங்கள், ஆமைகள், கடல்வாழ் உயிரினங்கள் என சுற்றிச் சுழன்றுவந்து பார்வையாளரை மகிழ்வித்தன. பல மணி நேரத்தைச் செலவிட்டாலும் மனநிறைவுடன், அரிய வகை உயிரினங்களை பார்த்த திருப்தியில் வெளியேறினோம்.

இடம் மாறிய கட்டடம்

நகர்த்தக்கூடிய அல்லது அசையக்கூடியவற்றை இடம் மாற்றுவது வழமை. அசையா சொத்துக்களெனக் கூறப்படுபவற்றை இடம்மாற்றுவது என்பது புதுமை. பல்லாயிரம் பேர் நேரிலும் தொலைக்காட்சியிலும் பார்த்த வாறிருக்க அரங்கேறியது அந்தப் புதுமை.

பாசல் தொடருந்து நிலையத்திலிருந்து 100 மீ. தொலைவில் பிரான்ஸ் நாட்டு குடிவரவு, குடியகல்வு மற்றும் சுங்கப் பிரிவினரின் அலுவலகம் உள்ளது. சுவிஸ் தொடருந்து நிலையத்திலிருந்து பிரான்ஸ் நாட்டுக்குச் செல்லும் தொடருந்து அங்கு தரித்து பரிசோதகர்களை ஏற்றிக்கொண்டே புறப்படும். நான்கு மாடிகளையும் நிலத்தடி அறையையுமுடைய மிகவும் பழமைவாய்ந்த கட்டடம் அது. அந்தக் கட்டடம் அமைந்துள்ள இடத்துக்கு அருகாமையில் மேம்பால வீதியுள்ளது.

பாசலில் அநேகமாக மேம்பாலங்கள் ரைன் ஆற்றுக்கு மேலாக அமைக்கப்பட்டிருக்கையில் ஒருசில மேம்பாலங்கள் மட்டும் தாழ் நிலத்துக்கு மேலாக அமைக்கப்பட்டுள்ளது. அவற்றில் ஒன்றே இம்மேம்பாலம். பாலத்தின் மேற்கே உள்ள தாழ்நிலத்தில் குடியிருப்புகளும், கிழக்கே வெற்றுத் தரையான தாழ்நிலமும் அப்பால் கட்டடங்களும் உள்ளன. வடக்கே தொடருந்து பாதைகள் மேம்பாலத்தின் கீழாகச் செல்கின்றன. தொடருந்து பாதை ஓரம் மேம்பாலத்துக்குக் கிழக்கே பிரான்ஸ் குடிவரவு, குடியகல்வு மற்றும் சுங்கப் பிரிவினரின் அலுவலகம் இருக்கிறது. அந்த மேம்பால வழியாகவே எனது நண்பனின் வீட்டுக்குச் செல்லவேண்டும்.

1996 ஆவணி மாதம் (திகதி ஞாபகத்திலில்லை) காலை 11.00 மணியளவில் தொடருந்து நிலையத்திலிருந்து பேருந்தில் நண்பனின் வீட்டுக்குச் சென்றேன். மேம்பாலத்தின் கிழக்குப் பக்கத்து நடைபாதை நெடுகிலும் திரளான மக்கள் குவிந்து நின்றனர். மேம்பாலம் பாரத்தால் உடைந்துவிடுமோ என்ற எண்ணம் தோன்றாமலில்லை. மேம்பாலத்தின் வட மேற்கு முனையோரம் எனது நண்பனின் வீடு இருப்பதால் பேருந்தைவிட்டு இறங்கி விரைவாகவே அவனது வீட்டை அடைந்தேன்.

அங்கு சென்றதும் மேம்பாலத்தில் குவிந்து நிற்கும் மக்கள் கூட்டம் பற்றி விசாரித்தபோது, "கட்டடத்தை இடம் மாற்றுகிறார்கள்" என்றனர் அங்கிருந்தோர். 'கட்டடத்தை இடம் மாற்றுவதா?' யாழ்ப்பாணத்தில் கிணறு காவியதாக ஒரு ஊரவர் பற்றி பலராலும் கூறப்படும் கேலிக்கதை நினைவுக்கு வந்தது.

என் இதழில் துளிர்விட்ட புன்னகையை அவதானித்த அவர்கள், "நீங்க நம்பயில்லையா? இந்தா ரீவியப் பாருங்க" என்றனர். வெற்றுத் தரையில் கனரக வாகனங்கள் கொண்டு அகண்ட வாய்க்கால் போன்ற பள்ளம் வெட்டப்பட்டிருப்பது தொலைக்காட்சியில் தெரிந்தது. அந்தப் பள்ளம் பிரான்ஸ் நாட்டு நிர்வாகத்திலுள்ள குடிவரவு, குடியகல்வு மற்றும் சுங்கப் பிரிவினரின் அலுவலகக் கட்டடத்திலிருந்தே ஆரம்பித்துள்ளது. "அந்தா அந்தக் கட்டடத்தைத் தான் இடம் மாற்றப்போகிறார்கள்" என்றனர்.

கேலியாக யாழ்ப்பாணத்தில் பேசப்படும் விடயத்தை இன்று நிதர்சனமாகக் காண்பது ஆச்சரியமாக இருந்தது. மூன்றாவது மாடியிலுள்ள நண்பனின் வீட்டிலிருந்து கட்டடத்தை நகர்த்த எடுக்கும் முயற்சியை பார்க்கக் கூடியதாக இருந்தபோதும் தொலைக்காட்சியில் பல கோணங்களில் ஒளிபரப்பப்பட்டதால் மிகத் தெளிவாகவும் தத்ரூபமாகவும் இருந்தது. செய்தியைத் தவிர வேறு எந்த நிகழ்ச்சிகளும் இல்லாமல் கட்டடம் நகர்த்தப்படும் காட்சிகளே தொலைக்காட்சியில் மும்மொழி அலைவரிசைகளிலும் ஒளிபரப்பாகிக்கொண்டிருந்தன.

கட்டடத்தின் நிலத்தடி அறைத் தளத்திலும் ஆழமாக, கட்டடத்தின் அகலத்திலும் அதிகமாக, கட்டடம் மீள வைக்கப்பட வேண்டிய இடம்வரை

நேராக வெட்டப்பட்டிருந்த பள்ளத்தின் தரை, இறுக்கமான தரையாக இருப்பதாக தொலைக்காட்சி அறிவிப்பாளரால் கூறப்பட்டது. மேலும் கட்டடத்துக்குக் கீழாக நான்கு நிரைகளில் அதாவது கட்டடத்தின் இருபக்க கரைகளிலும் உள்பக்கம் இரண்டுமென மூன்று அடிக்கு மேற்பட்ட அகலத்தில் இரண்டு அடிவரையான ஆழத்தில் வாய்க்கால் போன்ற பள்ளம் வெட்டப் பட்டது. இவ்வாய்கால் ஏற்கெனவே வெட்டப்பட்ட பள்ளத்தின் எல்லைவரை சென்றது. கட்டடத்தின் கீழ்ப்பகுதி முதல் தொடராக உள்ள வாய்க்காலின் தரை இயந்திரத்தால் அழுத்தி அதன் உறுதி பரிசோதிக்கப்பட்டது.

வாய்க்காலுக்குள் இரண்டு அடி அகலம், இரண்டு அங்குலத்திற்கும் மேற்பட்ட மொத்தம், பதினைந்து அடி வரையில் நீளமுள்ள இரும்புப் பாளம் அடுத்தடுத்து வைக்கப்பட்டு அந்தம் வரை தொடராகப் பொருத்தப்பட்டது. அதற்கு மேலாக தொடருந்து பாதைக்குப் பயன்படுத்தப்படும் இரும்புச் சட்டம் வைக்கப்பட்டு பாளத்துடன் கனமான ஆணிகள்கொண்டு பொருத்தப்பட்டது. அப்படியே இரும்புப் பாளமும் இரும்புச் சட்டமும் குறித்த இடம்வரை நேராக இருந்தன.

இரும்புச் சட்டம் கட்டடத்தைத் தாங்கும்வகையில் கட்டடத்தின் அடித்தளத்திற்கும் இரும்புச் சட்டத்துக்குமிடையில் அடுக்கடுக்காக பல சில்லுகள் வைக்கப்பட்டன. சில்லுகள் இரும்புப் பாளத்திலிருந்து சறுகாது இருக்கும் வகையிலமைந்திருந்தது. சில்லுடன் பொருத்தப்பட்டிருந்த சதுரமான தாங்கி மேற்புறமாக அடித்தளத்துடன் மருவியதாக நின்றது. இவ் வாறே நான்கு வாய்க்கால்களிலும் இரும்புப் பாளங்கள், இரும்புச் சட்டங்கள், பல சில்லுகள், சில்லுடன் இணைந்த தாங்கிகள் வைக்கப்பட்டன.

நான்கு வாய்க்கால்களுக்கும் இடையில் இதுவரை கட்டடத்தைத் தாங்கியிருந்த இரண்டு வெளிகளிலும் உள்ள மண், கனரக இயந்திரங்கள் கொண்டு இரும்புச் சட்டம் வரை வெளியேற்றப்பட்டன. இப்போது கட்டடம் மண்ணின் தாங்குதலிலிருந்து விடுபட்டு சில்லுகளிள்ள தாங்கிகளில் அமர்ந்து கொண்டது. கட்டடத்தின் அடித்தளத்துடன் சில்லுத் தாங்கிகள் ஆணிகள் கொண்டு பொருத்தப்பட்டன. தாங்கிகளில் அமர்ந்த கட்டடம் இரும்புப் பாளத்தில் முழுமையாகத் தங்கிவிட்டது. தாம் செய்து முடித்ததை சரிபார்த்துக் கொண்டனர் பணியாளர்.

கட்டடம் புதிதாக அமரவுள்ள இடத்தைக் கடந்து நான்கு வாய்க்கால் களுக்கும் நேராக நான்கு இயந்திரங்களில் நான்கு சக்கரங்கள் பொருத்தி வைக்கப்பட்டிருந்தன. அவற்றுடன் இணைத்திருந்த நீண்ட உருக்குக் கம்பி களை நால்வர் இழுத்தவாறு கட்டத்திற்குக் கீழாகச் சென்று, கட்டடத்தின் பின்பக்கத்தில் இணைத்தனர். சற்று நேரத்தால் நான்கு சக்கரங்களும் சுழர ஆரம்பிக்க தொய்வாகக் கிடந்த உருக்குக்கம்பி நிமிர்ந்து பொறுப்பாகியது. மேற்கொண்டு சக்கரங் கள் சுழரச் சுழர கட்டடம், தேர்போல மெல்ல மெல்ல தொடருந்து பாதை மேலாக நகர்ந்தது குறித்த இடம் வரை. தனித்தனி நான்கு

இயந்திரங்களின் சமனான சுழற்சியினால் சக்கரங்கள் மூன்றும் ஒரே அளவாகச் சுழன்றன.

யப்பான் நாட்டு நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்ட இந்த கட்டட இடமாற்றம் மக்களின் பலத்த கரகோஷத்தின் மத்தியில் வெற்றிகரமாக அமைந்தது. இதற்கென செலவிடப்பட்ட தொகைக்குள் ஒருவேளை புதிய கட்டடத்தையே அமைத்திருக்கக்கூடும். ஆனால், பழமையைப் பேணும் நோக்கத்திற்காக இச்சாதனை நிகழ்த்தப்பட்டது.

ஐயன்சீல்டன் தேவாலயம்

சுவிற்சர்லாந்தில் ஜேர்மன் மொழி பேசுகின்ற சுவைற் மாநிலத்தின் ஒரு மாவட்டமே ஐயன்சீல்டன் (Einsiedeln). 12,000 வருடங்களுக்கு முன்னர் அடர்ந்த மரங்கள் மட்டுமே இருந்ததாகவும் வேட்டைக்காரர் மட்டுமே பயன்படுத்துதியதாக அறியப்பட்டபோதும் கற்காலத்துக்குரிய மற்றும் வெண்கலக் காலத்துக்குரிய நுணுக்கமான வேலைத்திறன்கள் தொல்பொருள் ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும், இத்திறன் மர வேலைகளிலும் காணப்பட்டதாகவும் அறியப் படுகிறது.



இடைக்கால முற் பகுதிவரை நிரந்தர குடியேற் றங்களை கொண்டிருந்த இப்பகுதியில், கான்ஸ்டன்ஸ் ஏரிப்பக்கமிருந்த மலைச்சரிவில் பெனடிக்ற் என்னும் துறவி ஆச்சிரமம் ஒன்றை நிறுவி தன்னிடமிருந்த கன்னிமரியின் சிலையை ஆச்சிரமத்தில் வைத்து வழிபட்டார். நாளடைவில் அவ்வாச்சிரமம் சிறிய யாத்திரைத் தலமாக மாறிவிட சிறிதொரு ஆலயத்தை நிறுவி கன்னிமரியின் சிலையை அங்கே வைத்து வழிபட ஏற்பாடு செய்தார். இது பெனடிக்ற் மடாலயம் என்ற பெயரைப் பெற்றது. மடாலயத்தில் கொள்ளையிடவந்த பிறநாட்டு கொள்ளையர்களின் கொள்ளையின்போது துறவி பெனடிக்ற் இறந்தார்.

உள்ளூர் வேட்டைக் காரர்கள், காட்டின் இடை யிடையே விவசாயம் செய்வோரின் உதவியுடன் வேல்ட்லியூற் என்னும் மடாதிபதியால், 1073இல் புதிய மடாலயத்துக்காக அடித்தளமிடப்பட்டது. அதுமுதல் மடாலயத்தை சுற்றியுள்ள கிராமங்களில் மக்கள் குடியேறவும் விவசாயம் செய்யவும் ஊக்குவித்தார். அதிக பள்ளத்தாக்குகள் இருந்ததால் கால்நடை வளர்ப்பும் அதிகரித்தது.

1746இல் புதிதாக கட்டிமுடிக்கப்பட்டதும் தற்போது வானுயர்ந்த கோபுரங்களைக் கொண்டதுமான மடாலயம் அன்னை மேரிக்கு அர்ப்பணம்

செய்யப்பட்டு, கறுப்பு நிறத்திலான உருவத்தைக்கொண்ட மரியாவின் உருவச்சிலை வழிபாட்டுக்கென வைக்கப்பட்டது. 1798இல் நெப்போலியனின் படையெடுப்பின்போது பெரிதும் பாதிப்படைந்த மடாலயம் பிந்திய தோல்விகளால் 1803இல் சுவிஸில் ஒரு மாநிலமாக மாறியதும் புனரமைப்புச் செய்யப்பட்டது.

சுவிற்சர்லாந்திலுள்ள பிரபல சுற்றுலாத் தலங்களில் ஒன்றான ஐயன்சீல்டன் திருத்தலம் 'பெனடிக்ற் மடாலயம்' என்றும் 'கறுப்பு மரியா' ஆலயம் என்றும் அழைக்கப்படுகிறது. இந்த ஆலயத்தில் ஆண்டுதோறும் ஆவணி மாதத்தில் தமிழர்களுக்கென ஒரு திருவிழா ஒதுக்கப்பட்டுள்ளது. அன்றைய தினத்தில் திரளான தமிழர்களைக் காணலாம். பலரும் இணைந்து பக்தர்களுக்கு விருந்தும் வழங்குவர்.




நான் இருக்குமிடத்திலிருந்து வெகுதூரத்தில் ஐயன்சீல்டன் திருத்தலம் இருப்பதாலும் அந்நாட்களில் சிலவேளை விடுமுறையில் செல்லவேண்டி ஏற்படுவதாலும் தொடராக செல்ல முடிவ தில்லை. 1989 ஆண்டிலும் பின்னர் 1995ஆம் ஆண்டிலும் திருவிழாவுக்குச் சென்றுவந் துள்ளேன். 1989ஆம் ஆண்டுதான் முதல் தடவையாக தமிழர்களுக்கென திருவிழா ஒதுக்கப்பட்டது. அவ்வாண்டு நாம் நாலுபேர் இணைந்து சூறிச் நகர் வரை கடுகதி தொட ருந்திலும் பின்னர் சாதாரண தொடருந் திலும் பயணித்து ஐயன்சீல்டன் திருத் தலத்தை அடைந்தோம்.

ஆலய வாசலில் அறுங்கோண வடிவி லமைந்த தூண்கள் தாங்கிய கிரீடத்தின் வடிவிலமைந்த கோபுரத்தின் மத்தியில் தங்க நிறம் பூசப்பட்ட மரியன்னையின் உருவச் சிலை வரவேற்றது. பலரும் அங்கு நின்று நிழற்படம் பிடித்துக் கொண்டனர். திருத்தல வளாகத்தில் ஆங்காங்கு கூட்டமாகத் தமிழ் மக்கள் நிற்பது வளாகமே நிறைந்து நிற்பது போலக் காணப்பட்டது. பெரும்பாலான பெண்கள் சேலை அணிந்தவாறு நின்றனர். யாழ்ப்பாணத்து ஆலயத் திருவிழாக்களை நினைவூட்டியது அந்தக் காட்சி.

நாம் சென்ற சமயம் வழிபாடு ஆரம்பமாகவில்லை. அதனால் ஆலயத்தின் சுற்றாடலைப் பார்வையிடச் சென்றோம். பள்ளத்தாக்கில் பெரியதொரு ஏரி காணப்பட்டது. அதில் படகோட்டத்துக்கான படகுகள் பல தென்பட்டன. சற்றுத் தூரத்தில் மலையிலிருந்து பனிச்சலுக்கலுக்கு ஏற்ற சிறிதும் பெரிதுமான மேடைகள் நான்கு இருந்தன. இப்போது பனிப்படிவுகள் இல்லாமையால் வெறுமையாகத் தென்பட்டன.

'T' வடிவில் அமைந்துள்ள ஆலயத்தின் கோபுரங்களுடன் உள்ள முகப்பால் நுழைந்தோம். உட்புறம் சாதாரண ஒளியாக இருந்தது. வழிபாடு ஆரம்பமாகாமையால் மக்களும் பெரிதாக இல்லை. கண்ணைப் பறித்திடும் அழகுடன் காட்சிதந்தது ஆலயத்தின் உட்பக்கம். சிற்பிகளினதும் ஓவியர் களினதும் திறமைக்குச் சான்றாக மிளிர்ந்தது இந்த ஆலயம். கோதிக் கட்டடக் கலையை எடுத்தோதுவதாக உள்பக்கம் அமைந்திருந்தாலும் வெளிப்பக்கம் முகப்பைத் தவிர ஏனையவற்றை அவ்வாறு உணர முடியவில்லை. அந்த கட்டடக் கலையின் நுட்பம் புரியவில்லை. ஏராளமான சாளரங்கள் அமைக்கப் பட்டுள்ளதால் எனக்கு அவ்வாறு தோன்றுகின்றதோ தெரியவில்லை.

துளிர் சாம்பல் நிறம் பிரதான வர்ணமாகவும் தங்க நிறத்தை அடுத்ததாகவும் கொண்டு பலவர்ணங்களில் புடைப்பு சிற்பங்களும் வரை புகளும் காணப்படுகின்றன. கலைத்துவத்தை வெளிப்படுத்தும் சிற்பத் தூண் களும் சிற்பம் நிறைந்த வளைவுகளும், வர்ணங்களால் துலங்கும்போது அரசர்களின் அரண்மனையை நினைவூட்டியது. உருவச் சிலைகள் வைப்பதற் கென ஆங்காங்கு சுவர்களில் அமைக்கப்பட்டுள்ள பீடங் களின் சிற்ப அலங்கரிப்பும் இணைந்து மேலும் அழகைக் கொடுத்தது.



கறுப்பு மரியாவின் உருவத்தைத் தாங்கிய பீடம் மையத்திலிருந்தது. தங்க நிறம் பூசப்பட்ட சிற்பங்கள் பீடத் திற்கு உயிரோட்டத்தைக் கொடுத்தன. அமைதியாக மரியன்னையை வழிபட்டு ஆலயத்தின் உட்பகு தியை சிறிது நேரம் கலை இரசனையோடு பார்வையிட்டு வெளியேறினோம்.

சற்று நேரத்தால் திருவிழா திருப்பலி ஆரம்பமாகியது. தமிழிலும் ஜேர்மன் மொழியிலும் கூட்டுத் திருப்பலியாக இடம்பெற்றது. மறையுரையும் இரு மொழிகளிலும் நிகழ்த்தப்பட்டது. அந்நாட்டவர் பலரும் திருப்பலியில் பங்கெடுத்துக் கொண்டதுடன் தொடர்ந்த ஊர்வலத்திலும் இணைந்தி ருந்தனர். திருப்பலி முடிவுற்றதும் மக்கள் ஊர்வலமாக வெளியேறி ஆலய முகப்பிலிருந்து இடது பக்கத்தால் புறப்பட்டு ஆலயத்தைச் சுற்றி வலது பக்கத் தால் முகப்பை அடைந்ததும் ஆலயத்துள் நுழைந்தனர். தொடராக ஊர்வலத் தின் இறுதியில் தூக்கிவரப்பட்ட மரியன்னையின் உருவச்சிலையும் உள்ளே கொண்டுசெல்லப்பட்டு, ஆராதனை நிகழ்த்தப்பட்டு அன்னையின் ஆசீர் வாதம் வழங்கப்பட்டதும் திருவிழா வழிபாடு முடிவுற்றது. பொதி செய்யப்பட்ட உணவும் குடிநீரும் பக்கதர்களுக்கு வழங்கப் பட்டது. அதனைப் பெற்று அருந்தி, பி.ப. இரண்டுமணிக்கு எமது பயணத்தைத் தொடர்ந்தோம்.

மீண்டுமொரு பயணம்

13 வருட இடைவெளியின் பின்னர் 09.05.2014 இல் மீண்டும் சுவிற்சர்லாந்தில் 16 வருடங்கள் வசித்த வோ (வோதுவா) மாநிலத்தில் நண்பனின் வீட்டுக்குச் சென்றிருந்தேன். என்னுடன் பழகிய, அறிமுகமான தமிழர்கள் சிலர் தொடருந்து நிலையத்தில் என்னை இனங்கண்டு வரவேற்று உரையாடினர். நண்பனின் தானுந்துவில் அவரது இல்லம் சென்றேன்.

14 வருடங்களாக நான் காசாளராகப் பணியாற்றிய 'அலிக்குறோ' என்னும் பிரமாண்டமான விற்பனை நிலையத்திற்குச் சென்றிருந்தேன். வேலை செய்பவர்கள் அறிமுகமற்ற முகங்களாகவே தெரிந்தனர். முன்னர் கூடவே வேலைசெய்த சுவிஸ், பிரான்ஸ், இத்தாலி, போர்த்துக்கல், ஸ்பெயின், துனிஸ், துருக்கி மற்றும் இலங்கையைச் சேர்ந்த நூற்றுக்கு மேற்பட்டவர்களில் 05 தமிழர்களும் 14 ஏனைய நாட்டவர்களுமே எனக்கு அறிமுகமானவர்களாக இருந்தனர். அவர்கள் இனங்கண்டு என்னைப் பெயர் சுட்டி அழைத்தமை மகிழ்வைத் தந்தது.

மாடி வீடுகள், பிரமாண்டமான விற்பனை நிலையங்கள் பல புதிதாக முளைத்துள்ளன. புகலிடத் தமிழ் மக்கள் மத்தியிலும் பற்பல மாறுதல்கள். முன்னர் நிரந்தர வதிவிட விசா மற்றும் அகதிகளுக்கான விசாவில் இருந்தவர்கள் குடியுரிமை பெற்றுள்ளார்கள். வாடகை வீடுகளில் குடியிருந்த பலர் நெருக்கமான குடியிருப்புப் பகுதிகளைத் தவிர்த்து தமக்கெனத் தனியாக வீடு கொள்வனவு செய்து அங்கே குடியேறியுள்ளனர். முன்னரைவிட கணவன், மனைவி, பிள்ளைகள் எனக் குடும்பத்தினர் வேலை செய்கின்றனர். வாகன வசதிகளுக்கும் ஒருவருக்கு ஒருவர் சளைத்தவர்களல்லர் என்பதை நிரூபித்தது. சுற்றாடலில் 06 தமிழ் விற்பனை நிலையங்களே இருந்தன. அவை இப்போது ஐந்து மடங்காக அதிகரித்துக் காணப்படுகிறது.

அதேவேளை, கணவனின் தவறான நடத்தையால் மனைவியும், மனைவியின் தவறான நடத்தையால் கணவனும் பிரிந்து வாழும் நிலையையும் காணக்கூடியதாக இருந்தது. மனைவியைக் கொலைசெய்து சிறையிலிருக்கும் கணவன்மார் என விரும்பத்தகாத நிகழ்வுகளும் நடந்தேறியிருக்கின்றன. வோ மாநிலத்தில் வசிக்கும் தமிழ்ப் பிள்ளைகள் கூடவே கல்வி கற்கும் மாணவர்களைவிட பரீட்சைப் புள்ளிகளில் முன்னிலையில் நிற்கிறார்கள். நான் அறிந்தவரை அங்கு 15 பேர் வைத்தியர்களாக பணியாற்றுகிறார்கள். வேறு பலரும் வைத்தியக் கல்வியைத் தொடர்கிறார்கள்.

வைத்தியம் கற்க விரும்பும் மாணவர்களுக்கு 12ஆவது ஆண்டு தேர்வு மிகவும் நெருக்கடியானதாகும். 600 பேர்வரை பங்குபெறும் தேர்வில் 200 பேருக்கு உட்படவே தெரிவுசெய்யப்படுவர்கள். இதுதான் அவர்கள் இதுவரை கற்ற கல்வியின் விளைவு. அதனால், யாழ்ப்பாணத்தில் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசிலில் மாணவர்கள் காட்டும் ஆர்வம்போல இங்கும் இவர்கள் அதீத அக்கறை காட்டுகிறார்கள். இந்தத் தேர்வில் விடுபட்டவர்கள் எவ்வித தாழ்வு

மனநிலையுமில்லாமல் பொறியலாளர், கணக்காளர், வழக்கறிஞர், தாதி போன்ற விரும்பிய துறைகளை தேர்வுசெய்து தொடர்கிறார்கள். வரவேற்கத் தக்க, பெருமை கொள்ளக்கூடிய மாற்றம். இந்த மாற்றத்தை நான் பயணித்த சில ஐரோப்பிய நகரங்களில் அறிந்ததும் அளவிடமுடியாத மகிழ்ச்சி எனக்கு.

சுவிஸின் ஏனைய மாநிலங்களில் வசிக்கும் நண்பர்கள் என்னை வரும்படி அழைப்பு விடுத்தார்கள். பொருத்தமற்ற காலநிலையாலும் போதிய அவகாசமின்மையாலும் உடல்நிலை இடங்கொடுக்காததாலும் அவற்றைத் தவிர்த்துக்கொண்டேன். இருப்பினும் சிலர் வருகைதந்து சந்தித்தார்கள். பலருக்கு மனத்தாங்கல்தான்.

சுவிஸில் நான் 16 வருடங்கள் வசித்திருந்தமையால் முன்னர் குறிப்பிட்டமை போல பல தடவைகள் பல காரணங்களுக்காக சுவிஸின் பல பகுதிகளுக்கும் சென்றுவந்துள்ளேன். அங்கெல்லாம் அனுபவத்தை உள்வாங்கச் சந்தர்ப்பம் கிடைத்தும் கிடைக்காமலும் இருந்துள்ளன. அனுபவித்தவை பற்றி முழுமையாக எழுதுவதானால் சுவிஸிற்கென்ற தனிப் புத்தகமாக அமைந்து விடும். அதனால் சிலவற்றை வேண்டுமென்றே தவிர்த்துள்ளேன். உதாரணமாக;

மலைப் பயணங்கள் பற்றி வேறு இடங்களில் வெளிக்கொண்டுவந்துள்ளதால் இன்ரலாஹன் என்னும் நகரைத் தவிர்த்துள்ளேன். ஜிம்ரோன் என்னும் பாரிய மலைத்தொடரை கொண்டமைந்துள்ளதும் இந்திய திரைப் படத் துறையினர் படையெடுக்கும் நகரமும் இதுவாகும். பல படங்களில் இன்ரலாஹன் நகர்க் காட்சிகள் வெளிவந்திருக்கின்றன. அலங்கரிக்கப்பட்ட குதிரை வண்டில் பயணம் அங்குதான் உள்ளது. பல படப்பிடிப்புகளைப் பார்த்திருக்கின்றேன். பல நடிகர்களைக் கண்டிருக்கின்றேன். ஒரு தடவை நடிகர் அர்ஜுனுடன் இணைந்து உணவருந்தியுமுள்ளேன்.

இது தவிர, சில ஆலயங்கள், சௌஹாசன் நீர்வீழ்ச்சி, போன்ற பல இடங்களை அதிகரித்த பக்கங்களால் தவிர்த்துள்ளேன். பிறிதொரு சந்தர்ப்பத்தில் வாசகர்களுடன் பகிர்ந்துகொள்ளத் தவறமாட்டேன். ■


நடிகர்கள் தங்கும் ஹோட்டல்

கடல் கடந்த நாட்கள் – 05

சுற்றுலா – வர்த்தக –ஒய்வுக்கான பயணங்கள்

பயண ஆயத்தம்

*1985*ஆம் ஆண்டிலிருந்து அகதி அந்தஸ்து கோரல் விசாவிலேயே (A விசா) சுவிற்சர்லாந்தில் வசித்து வந்துள்ளேன். அகதிகளாக நுழையும் அனைவருக்கும் இந்த விசாவே வழங்கப்படுகிறது. இந்த விசா சுவிற்சர்லாந்தின் எந்த இடங்களுக்கும் சென்றுவர அனுமதிக்கின்றது. சுவிஸை விட்டு வேறு நாடுகளுக்குச் சென்றவர அனுமதியில்லை.

அகதி அந்தஸ்து ஏற்றுக்கொள்ளப்பட்டால் (C விசா) இலங்கை மற்றும் பிரச்சினைக்குரிய நாடுகளைத் தவிர வேறு நாடுகளுக்குச் சென்றுவர அனுமதிக்கிறது. சில நாடுகளுக்கு அந்நாட்டுக்குரிய நுழைவு விசா பெற்றுக் கொள்ளவேண்டும். நிரந்தர வதிவிட விசா (B விசா) பெற்றால் இலங்கை உட்பட வேறு நாடுகளுக்கும் சென்றுவரலாம். இலங்கை கடவுச்சீட்டு வைத்திருப்பதால் செல்லும் நாடுகளுக்கு அந்நாட்டு நுழைவு விசா பெற்றுக் கொள்ள வேண்டும்.

*1991*ஆம் ஆண்டு நடுப்பகுதியில் நிரந்தர வதிவிட விசா கிடைத்ததால் உடனேயே ஜெனீவாவில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் பத்திரங்களை ஒப்படைத்து கடவுச்சீட்டுக்கு விண்ணப்பித்திருந்தேன். நான் வேலை செய்யுமிடத்திலும் மார்கழி மாதம் 28 முதல் தை மாதம் 30 வரை விடுமுறைக்கு விண்ணப்பித்து அனுமதியைப் பெற்றுக் கொண்டதுடன் சிங்கப்பூர் சென்றுவர விரும்பி வானூர்தி பயணச் சிட்டைக்கும் பதிவுசெய்து கொண்டேன். ஆனால், இரண்டு மாதங்களாகியும் கடவுச்சீட்டு கிடைக்கவில்லை.

சிங்கப்பூரில் தங்க நகைகள் மற்றும் உடைகளைக் கொள்வனவு செய்துவந்தால் செலவைச் சமாளிக்கலாம், மனைவி மக்களை அங்கு இலகுவாக அழைக்கலாம், சிங்கப்பூர் வானூர்தி நிலையத்திலே நுழைவு விசாவைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதாலே சிங்கப்பூரை தெரிவுசெய்தேன்.

மார்கழி முதல் வாரத்தில் கடவுச்சீட்டு கிடைத்ததும் திட்டமிட்டபடி பயணத்தைத் தொடர்ந்தேன். நான் சுவிஸில் வாழ்ந்த காலப்பகுதியில் சிங்கப்பூர், பிரான்ஸ், மலேசியா, நோர்வே, இத்தாலி, ஐக்கிய இராச்சியம் போன்ற நாடுகளுக்குச் சென்று வந்துள்ளேன். இவற்றில் பிரான்ஸ் நாட்டில் பெற்ற பயண அனுபவங்களை கடல்கடந்த நாட்கள் - *03* இல் வாசித்திருப்பீர்கள். ஏனைய நாடுகளின் பயண அனுபவத் தொகுப்பாக இந்த கடல்கடந்த நாட்கள் - *05* அமைகின்றது.

சிங்கப்பூர்

(1991, 1992, 1993, 1994, 1996, 1997, 1999, 2000, 2001)



தெற்கு ஆசியாவில் மலேசிய தீபகற்பத்தின் தென்முனையில் அமைந்துள்ளது சிங்கப்பூர் குடியரசு. மலேசியாவிலிருந்து ஜொகூர் நீர்சந்தி இதனைப் பிரிக்கிறது. தெற்கில் இந்தோனேசியாவின் ரியாவு தீவுகளை சிங்கப்பூர் நீர்சந்தி பிரிக்கின்றது. பெரிதும் நகரமயமாக்கப்பட்டுள்ள சிங்கப்பூரில் மிகக் குறைந்த அளவிலேயே காடுகள் உள்ளன.

கி.பி. 14ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் கடாரம் கொண்ட சோழ மண்டலத்தின் ஆட்சிக்கு உட்பட்டிருந்ததாக அறியப்படும் இத்தீவு, பின்னர் சுமாத்திராவில் இயங்கிய ஸ்ரீ விஜயப் பேரரசின் ஆட்சிக்கு உட்பட்டு பல ஆட்சி மாற்றங்களின் பின்னர் ஜொகூர் சுல்தானகத்தின் ஆட்சிக்கு உட்பட்டது.

06.02.1819 ஆம் ஆண்டில் ஜொகூர் சுல்தான் ஹுசேன் ஷாவின் அனுமதியுடன் பிரித்தானிய கிழக்கிந்திய நிறுவனம் சிங்கப்பூரைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தது. தொடர்ந்து 1824இல் பிரித்தானியாவின் நேரடி ஆட்சியினுள் கொண்டு வரப்பட்டு, 1826இல் தென்கிழக்காசியாவின் ஒரு பிரித்தானிய குடியேற்ற நாடாக ஆக்கப்பட்டது.

இரண்டாம் உலகப் போரின்போது யப்பானிய படைகள் சிங்கப்பூரைத் தாக்கியபோது, பெரும்பாலான தமது படைகளை ஐரோப்பாவுக்கு அனுப்பிவிட்டு குறைந்த படைப்பலத்துடன் இருந்த பிரித்தானியர், ஆறு நாட்களில் தோல்வியுற்று, கோட்டையையும் ஒப்படைத்து சரணடைந்தனர். இந்தத் தோல்வியை "பெரும் இழப்பு" என்றும், "பிரித்தானிய வரலாற்றில் மிகப்பெரிய சரணாகதி" என்றும் அப்போதைய பிரித்தானிய பிரதமர் 'வின்ஸ்டன் சேர்ச்சில்' குறிப்பிட்டிருந்தார்.

யப்பானியர்களால் சிறிது காலம் ஆக்கிரமிக்கப்பட்ட சிங்கப்பூர், 1945இல் திரும்பவும் ஆங்கிலேயர் ஆட்சியின் கீழ் வந்தது. யப்பானியரின் ஆளுகையில் சிங்கப்பூர் மற்றும் மலேசியா நாடுகளின் நாணயங்களான 'வெள்ளி' செல்லாமையாக்கப்பட்டு மாற்றாக புதிய நாயணம் அச்சிடப்பட்டு விநியோகிக்கப்பட்டது. அங்கிருந்த பலரும் வெள்ளி நாணயத்தை தம்வசமே

வைத்திருந்தனர். வங்கிகளிலிருந்து வீசப்பட்ட பணங்களையும் சிலர் சேகரித்து வைத்திருந்தனர். மீண்டும் ஆங்கிலேயர் கைப்பற்றியபோது வெள்ளி நாணயம் செல்லுபடி ஆக்கப்பட்டதும் பலரும் பணம் படைத்தவர்களானார்கள் என எட்டாம் வகுப்பில் ஆசிரியர் கூறக் கேட்டமை ஞாபகத்திற்கு வருகிறது.

1963இல் மலேசியாவுடன் இணைக்கப்பட்டு விடுதலை பெற்ற சிங்கப்பூர், 09.08.1965இல் மலேசியாவிலிருந்து பிரிந்து தனிக் குடியரசு ஆன போதும் மலேசிய ஜொகூர் நகரத்துடன் வடக்கு மேற்காக இரண்டு பாலங்களால் தரைத்தொடர்பை ஏற்படுத்திக் கொண்டது.

பிரித்தானிய வெஸ்ட்மின்ஸ்டர் மக்களாட்சி முறையில் ஓரங்க நாடாளுமன்ற குடியரசு ஆட்சியை சிங்கப்பூர் கொண்டுள்ளது. சீன மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட இந்நாட்டில் ஆங்கிலம், சீனம் (மாண்டரின்), மலாய், தமிழ் ஆகியவை அதிகாரபூர்வ மொழிகளாகும். பல மதங்களைக் கொண்ட நாடாகவும் திகழுகின்றது. கலப்புப் பண்பாட்டைக்கொண்ட சிங்கப்பூரின் வெற்றிக்கும் அதன் தனித்துவத்திற்கும் காரணமான சமய, இன நல்லுறவுக் கொள்கை அரசாங்கத்தில் முக்கிய பங்கு வகிக்கிறது.



716.1 ச.கி.மீ. மொத்த பரப்பளவைக்கொண்ட சிறிய நாட்டில் 63 தீவுகள் உள்ளன. அவற்றுள் சிங்கப்பூர் முதன்மைத் தீவாகும். சந்தோசா அழகிய தீவாகும். கடலில் இருந்து நிலத்தை மீட்கும் திட்டம் செயலில் உள்ளது. இதற்கமைய மணல்கொண்டு கடலை மேவித் தரையாக்குதல், அண்மையாக உள்ள சிறிய தீவுகள் ஒன்றிணைக்கப்பட்டு பெரிய தீவாக உருவாக்குதல் போன்ற வேலைகள் நடைபெறுவதைக் காணக்கூடியதாக இருந்தது.

பிரித்தானியாவின் முதன்மை கடற்படைத்தளம், உலகிலே பெரிதான உலர் கப்பல் பராமரிக்கும் தளம் (Dockyard) அங்கே உள்ளன. சுயஸ் கால்வாய் திறக்கப்பட்டதன் பின்னர் உலக வணிகத்தில் ஏற்பட்ட மாற்றம் காரணமாக வணிகத்தில் முதன்மையாக விளங்கியதால், சிங்கப்பூர் துறைமுகம் உலகில் முதன்மையான பெரிய வர்த்தகத் துறைமுகங்களில் ஒன்றாக மாறியது.

பன்முகத்தன்மை வாய்ந்த பொருளாதாரத்தை தனக்குரியதாகக் கொண்டுள்ளது. இந்த உத்தியால் ஏதாவது ஒரு துறையில் பாதிப்பு ஏற்பட்டாலும் அது நாட்டின் வளர்ச்சியையும், நிலைத்தன்மையையும் பாதிக்காது என அரசாங்கம் கருதுகிறது. 7,000 இற்கும் மேற்பட்ட பன்னாட்டு நிறுவனங்களின் கிளைகள் இங்கு உள்ளன. உலகில் நான்காவது முன்னணி நிதி மையமாகவும், சூதாட்டத்திற்கான இரண்டாவது பெரிய சந்தையாகவும் இது திகழ

கின்றது. அதிக பொருட்களைக் கையாளும் உலகின் முன்னணி துறை முகங்களில் இதுவும் ஒன்றாகும். வணிகம் செய்வதற்கு கட்டுப்பாடுகள் மிகக் குறைந்த இடமாக உலகவங்கி சிங்கப்பூரை தெரிவு செய்துள்ளது.

இத்தகை சிறப்பு மிக்க சிக்கப்பூருக்கு 28.12.1991இல் சுவிற்சர்லாந்தி லிருந்து 'சுவிஸ் எயார்' வானூர்தியில் முதலாவது பயணத்தை மேற்கொண்டி ருந்தேன். 1983ஆம் ஆண்டு இலங்கையிலிருந்து புறப்பட்டுவந்த பின்னரான முதலாவது கடல் கடந்த பயணமாகவும் இது அமைந்திருந்தது.

சுவிற்சர்லாந்திலிருந்து புறப்பட்ட வானூர்தி 'பாங்கொக்' வரை தனது நீண்ட பயணத்தைத் தொடர்ந்தது. இடையில் பனியால் மூடப்பட்டு வெண் மையாய்க் காணப்பட்டது இமையமலை. மலையிலிருந்து கிளம்பும் பனிப் புகார் தெளிவாகத் தெரிந்ததால் கண்ணுக்கு விருந்தாக இருந்தது.

பாங்கொக்கில் அரைமணி நேரம் தரித்துப் புறப்பட்ட வானூர்தி, மு.ப. 10.00 மணியளவில் சிங்கப்பூர் வானூர்தி நிலையத்தில் தரையிறங்கியது. வானூர்தி நிலையத்தில் நீண்ட தூரம் நடைபாதையால் நடந்து குடிவரவு குடியகல்வு கருமபீடத்தை அடைந்தேன். கடவுச் சீட்டில் 15 நாட்கள் சிங்கப்பூரில் தங்கு வதற்குரிய விசாவைப் பதிந்து, பிறிதொரு அட்டையும் தரப் பட்டது. அந்த அட்டையைத் திரும்பிச் செல்லும்போது குடிவரவு குடியகல்வு கரும பீடத்தில் ஒப்படைக்க வேண் டும். அதனைப் பெற்று வெளி யேறினேன்.



வானூர் நிலையத்திலிருந்த வங்கியில் தற்போதைய தேவைக்கேற்ற பணத்தை மாற்றிக்கொண்டு, வானூர்தி நிலையத்துக்கு வெளியே வரிசையாய் நின்று தொடராக வந்துகொண்டிருந்த வாடகை தானுந்துவில் ஏறிக்கொண் டேன். இந்த ஒழுங்கை ஒருவர் நின்று நெறிப்படுத்தினார். இதனால் எவரிடமும் போட்டிகள், சச்சரவுகள் இல்லை. அந்த வாடகைத் தானுந்துவில் சாரதியின் பெயர், நிறுவனத் தின் பெயர், தானுந்து இலக்கம், மானியின் பண விபரம், அவசர அலைபேசி இலக்கம் போன்றவற்றை பயணிப்போர் பார்வையிடக் கூடியதாக இருந்தது. என்னிடமிருந்த முகவரியை சாரதியி டம் கொடுத்ததும் பார்த்துவிட்டுத் திருப்பித் தந்தார்.

வானோக்கி உயர்ந்து நிறைந்து காணப்பட்ட கட்டடங்களையும் - தூய்மையான சுற்றாடல் தரைகளையும் பார்த்து பிரமிப்பிலிருக்க, அழகு படுத்தப்பட்ட வீதிகளால் ஜூரோங் நகர் நோக்கிய பயணத்தைத் தொடர்ந் தது வாடகை தானுந்து.

சிங்கப்பூருக்கு ஒன்பது தடவைகள் பயணம் செய்யக்கூடிய சந்தர்ப்பம் கிடைத்தன. இவற்றில் 1991, 2000ஆம் ஆண்டுகளில் சுவிற்சர்லாந்திலிருந்து நேரடியாகச் சிங்கப்பூருக்கு சென்று வந்துள்ளேன். ஏனைய தடவைகளில் இலங்கைக்கான பயணத்தை மேற்கொண்டு அங்கிருந்து திரும்புகையில் சிங்கப்பூர் சென்று சிலநாள் தங்கி சுவிஸுக்குத் திரும்பியுள்ளேன். இப் பயணங்களில் 1991, 1993ஆம் ஆண்டுகளுக்கான பயணங்கள் சுற்றுலா பயணங்களாகவும் ஏனைய பயணங்கள் வர்த்தகப் பயணங்களாகவும் உள்ளன. இவற்றின் தொகுப்பாகவே பயண அனுபவங்கள் அமைகின்றது.

ஜூரோங் நகர்

சிங்கப்பூரில் பல மாடிவீட்டு திட்டக் குடியேற்றங்களையும் தொழிற் சாலைகளையும் கொண்டுள்ள நகரம் ஜூரோங். மலாய் மொழியில் 'சுறா' மீன் எனப் பொருள்படும் இது, இந்தோனேஷிய மொழியில் பாரம்பரிய வீட்டின் உயர்ந்த மண்டபத்தைக் குறிக்கிறது. இந்தப் பகுதி சதுப்பு நிலத்தையும் சிறிய மலைகளைக்கொண்ட உயர்நிலத்தையுமுடைய பிரதேசமாகும். ஜூரோங் கடலோரப் பகுதியில் உள்ள ஏழு தீவுகளில் சில பெற்றோலியம் மற்றும் இரசாயனக் களஞ்சியங்களின் தளமாக இருக்கின்றது. இதனால் பயங்கரவாதத் தாக்குதல்களுக்கு எதிராக பாதுகாப்பு பலப்படுத்தப் பட்டுள்ளது.

சுய ஆட்சிப் பிரதேசமாக இருந்துவந்த ஜூரோங் 1963 வரை முன்னேற்ற மற்று உறக்க நிலையிலே இருந்தது எனலாம். 1963இற்குப் பின்னர் தொழில் மயமாக்கல் திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட தொழிற் பேட்டைகள், வீதிகள், தொழில்துறை நடவடிக்கைகள் முனைப்புப் பெற்றன. பல மாடி வீட்டுக் குடியிருப்புகளும் தோற்றம் பெற்றன. மருத்துவமனை, வங்கிகள், சந்தைகள், கூவி விற்பவர் மையங்கள், குழந்தைகள் காப்பகங்கள் எனப்பல அமைக்கப்பட்டன. நாளடைவில் பிரதான குடியிருப்பு வர்த்தக மாவட்டமாக மாறியது.


நான் சென்ற இடம் நீண்ட மாடி வீடுளைக்கொண்ட தொகுதியாகும். அங்கிருந்த கட்டங்கள் யாவும் ஐந்து மாடிகளைக் கொண்டவையாகக் காணப் பட்டன. கட்டடத்தின் தரைத்தளம் திறந்த வெளியாக உள்ளது. அது குடியிருப்பாளரின் வாகனத் தரிப்பிடமாகவும், இளைப்பாறும் இடமாகவும், தேவையின்போது விழாக்கள் - வைபவங்களுக்குப் பயன்படுத்தப்படும் இடமாகவும் உள்ளது.

பல மாடிவீடுகள் இணைந்த கிராமங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு கிராமத்தியிலும் சந்தை, வங்கி, வைத்திய நிலையங்கள், பாலர் மற்றும் ஆரம்பப் பாடசாலைகள், பொழுதுபோக்கு மையங்கள், உடை மற்றும் பல்பொருள் விற்பனை நிலையங்கள் என வாழ்வியலுக்குத் தேவையான அனைத்தும் உள்ளடக்கப்பட்டுள்ளன. எவரும் தமது தேவைக்கென அடுத்த

கிராமத்துக்குச் செல்லவேண்டிய அவசியமில்லை. நன்கு திட்டமிட்டு அமைக்கப்பட்டிருந்தது.

எமது ஊரவர் ஒருவருக்குச் சொந்தமான ஐந்தாவது மாடியிலிருந்த வீட்டிலேயே நான் தங்கியிருந்தேன். தற்சமயம் அவர் பணி அலுவலாக அவுஸ்ரேலியா சென்றிருப்பதால் இந்திய மாணவர்கள் மூவர் தங்கியிருந்து கல்வி கற்கிறார்கள். அந்த மாடியில் இந்த வீட்டைத்தவிர ஏனைய வீடுகளில் சீனர்களே பெரிதும் குடியிருப்பதைக் காணக்கூடியதாக இருந்தது. தரைத் தளத்திலிருந்து மாடிக்குச் செல்வதற்கு மின்தூக்கிகள் இரண்டு இயங்குவதால் சிரமமின்றி சென்றுவர முடிந்தது.

சுவிஸிலிருந்து புறப்பட்டபோது உறைநிலை பனிக் குளிராகவும் இங்கு வந்த பின்னர் கடும் வெப்பமாகவும் இருந்ததால் உடலில் தாக்கம் தெரிந்தது. 18 மணித்தியாலம் வரையான பிரயாணக் களைப்பும் சேர்ந்து உடல் அசதியாக இருந்ததால் ஓய்வு தேவைப்பட்டது. குளித்துவிட்டு ஓய்வெடுக்க எண்ணி குளிக்கச் சென்றேன். குளாய் நீர் குளிராக இருந்தது. சுவிஸில் சுடுநீரில் குளித்துவந்த எனக்கு இப்போது குளிக்க முடியவில்லை.



பி.ப. 4.00 மணியளவில் கிராமத்தைச் சுற்றிப் பார்க்கப் புறப்பட்டேன். உணவகங்கள்தான் அதிகமாகக் கண்ணிற் பட்டன. அங்கெல்லாம் திரளான சீனர்கள் உணவருந்துவதைக் காணக்கூடியதாக இருந்தது. அவர்கள் உணவருந்தும் முறை எம்மவரைவிட மாறுபட்டது. இரண்டு குச்சிகளால் உணவைக் கோலி அருந்துகிறார்கள். தொலைக்காட்சியில் பாத்திருந்தாலும் அவர்கள் விரைவாக உணவருந்துவதை நேடியாகப் பார்க்கும்போது வியப்பாக இருந்தது. வேலை முடிந்து வரும் நேரமென்பதால் உணவகங்கள் நிரம்பி இருந்தன. வீட்டில் சமைப்பதில்லைப் போலும்.

பலரது மாடி வீட்டுச் சுவரில் உயர்ந்த கரும்புகள் சாத்தி வைக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு இடத்திலும் ஒரு சிறியரக பாரவூர்தியில் ஏற்றக்கூடிய அளவே காணப்பட்டது. அண்மையில் உள்ள கரும்புத் தோட்டங்களில் வெட்டப்பட்டவையே இவை. அதிகாலை அவற்றை ஏற்றி விற்பனைக்குக் கொண்டு செல்வார்களென அறியக்கூடியதாக இருந்தது. சிறிய இயந்திரத்தில் கரும்புச் சாறு பிளிந்து விற்பனை செய்யும் தள்ளு வண்டில் வியாபாரத்திற்கும் அந்தச் சுற்றாடலில் குறைவிருக்கவில்லை.

வானூர்தி நிலையம் ஜூரோங்கில் இருந்து கணிசமான தூரத்தி லுள்ளது. வாடகை தானுந்து அல்லது தொடருந்தில் அங்கு செல்வதே

இலகுவானது. மறுநாள் காலை இலங்கையிலிருந்து வருகை தரவுள்ள மனைவி யையும் பிள்ளைகளையும் அழைத்து வருவதற்கு ஏற்ற வகையில் முன்னேற் பாடாக வீட்டிலிருந்து 500 மீ. தொலைவிலுள்ள தொடருந்து நிலையத்தில் முற்பணம் செலுத்தி மூன்று பயண அட்டைகளைப் பெற்றுக் கொண்டேன்.

முதற்தடவை செலுத்திய முற்பணத்தில் அட்டைக்குரிய விலையை விட ஏனைய பணம் அதனில் சேமிக்கப்பட்டிருக்கும். தேவையேற்படின் மென்மேலும் பணத்தைச் செலுத்தி அந்த அட்டையில் சேமித்துக் கொள்ள லாம். தொடருந்தில் பயணிக்கையில் நுழைவுக் கதவிலுள்ள இயந்திரத்தில் அட்டையைச் செலுத்தினால் பரிஸ் மெத்ரோ நிலையக் கதவுகள்போல கதவு திறந்து கொண்டு மறுபக்கத்தால் அட்டை வெளியேறும். தொடருந்தில் பயணித்து உரிய நிலையத்தில் இறங்கி வெளியேறுகையில் முன்னரைப் போலவே கதவிலுள்ள இயந்திரத்தில் அட்டையைச் செலுத்தினால் கதவு திறக்கப்பட்டு அட்டை வெளியேறுவதுடன் அட்டையில் பயணத்துக்கான கூலி கழிக்கப்பட்டு மிகுதி சேமிப்பிலிருக்கும்.

தொடருந்து நிலையம் அழகும் கூட்டித் துடைத்தது போல தூய்மை யாகவும் காணப்பட்டது. தொடருந்து நிலைய மேடையில் நின்று உணவு மற்றும் பானம் அருந்தினால் தண்டமாக 500 சிங்கப்பூர் டொலர் செலுத்த வேண்டுமென்ற அறிவித்தல்கள் ஆங்காங்கு காணப்பட்டன. இதனால் மேடையில் எவரது கைகளிலும் உணவைக் காணமுடியவில்லை. சிற்றுண்டி விற்பனை நிலையங்களும் இருக்கவில்லை.

ஒன்பது வருடங்களின் பின்னர் மனைவி பிள்ளைகளை வானூர்தி நிலையத்தில் சந்தித்தித்துக் கொண்டமை மறக்க முடியாத நிகழ்வாகப் பதி வானது. சந்தோஷத்தின் மத்தியில் ஜூரோங் நோக்கிய பயணத்தைத் தொடர்ந்தோம். பயணித்த இடங்களின் கண்கொள்ளாக் காட்சிகள் அவர் களுக்கு மகிழ்வை ஏற்படுத்தத் தவறவில்லை.

கொழும்பில் விடுதியில் தங்கி, மூன்று வேளையும் கடை உணவை அருந்தி, சலிப்புற்று வந்தவர்களுக்கு தங்குவதற்குக் கிடைத்த வீடும், சமையல் செய்வதற்கேற்ற வசதிகளும் மிகவும் கவர்ந்தது. தாங்கள் இலங்கையில் பயன் படுத்திய உணவுப் பொருட்கள் யாவற்றையும் இங்குள்ள விற்பனை நிலையங் களில் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்தமை மேலும் வரவேற்பைப் பெற்றது. தமிழில் உரையாடலைக் கேட்பதுதான் குறைவாக இருந்தது.

சந்தையில் இந்தியப் பொருட்களும் கறிச்சரக்கு வகைகளும் விற்பனை செய்யும் கடை ஒன்று இருந்தது. அதனை நடத்துநர் ஒரு தமிழர். சரளமாக எம்முடன் உரையாடுவார். அவரது கடைக்கு வரும் வாடிக்கை யாளர்கள், ஒரு கிலோ கோழி அல்லது ஒரு கிலோ மீன் என கறிகளையும் அவற்றின் அளவையும் கூறியவுடன் அதற்கேற்ற அளவில் மிளகாய் மற்றும் கறிச் சரக்குகளை தண்ணீர் சேர்த்து அரைத்து உருண்டையாய்க் கொடுப்பார். காலையில் அவருக்கு ஓய்வில்லாத வேலையாக இருக்கும்.

அவரது கடையின் ஓரமாக மலேசியா இனத்தவன் ஒருவன் தேங்காய் குவியல் மற்றும் தேங்காய் துருவும் இயந்திரத்துடன் இருந்தான். கறிக்குத் தேவையான தேங்காய் துருவல் அளவை இந்தியரான கடைக்காரன் கூறியதும் உடனே தேங்காயை உடைத்துத் துருவிக் கொடுப்பார். பெரிதும் முதலற்ற வியாபாரங்கள். வாடிக்கையாளரின் சமையல் தேவையை இலகுபடுத்துகிறது.

ஜூரோங்கில் நாங்கள் தங்கும் வீடுள்ள கிராமத்தையும் அயல் கிராமத்தையும் சுற்றிப் பார்ப்பதில் இரண்டு நாட்கள் கடந்தன. இதன் மூலம் அவர்கள் தமக்குத் தேவையான பொருட்களை சுயமாகச் சென்று பெற்றுவரக் கூடியதாக இருந்தது. மறுநாள் மூன்று கி.மீ. துரத்திலிருந்த பறவைகள் பூங்காவைப் பார்வையிடச் சென்றோம்.

ஜூரோங் பறவை பூங்கா

இயல்பான ஓய்வினைப் பெற முடியாத நிலையிலுள்ள ஜூரோங் நகர் வாழ் மக்கள், நகர்ப்புற வாழ்க்கையிலிருந்து விலகிட, தொழில்துறை மண்டலத்தின் சூழலிலிருந்து விடுபட பறவைப் பூங்கா பயன்படும் என்ற நோக்கில், 50 ஏக்கர் பரப்பளவில் ஜூரோங் நகரில் அமைக்கப்பட்ட இயற்கை காட்சிகளுடனான பூங்காவே ஜூரோங் பறவைப் பூங்கா. இது 03.01.1971இல் பொதுமக்கள் பார்வைக்கு விடப்பட்டது.

ஜூரோங்கிலிருந்து பூங்கா அமைந்துள்ள இடத்துக்கு தொடருந்தில் பயணித்தோம். தொடருந்து சென்ற பகுதி எங்கும் தரவை நிலமாகவே காணப்பட்டது. பூங்காவுக்கான தொடருந்து நிலையத்தில் இறங்கி, அடையாளம் காட்டிய இடம் நோக்கி நடந்தோம். நேராக இருந்த பாதையில் 200 மீ. அளவிலான தூரத்தில் பறவைப் பூங்காவு நுழைவாசல் வளைவு வர வேற்றது. நுழைவுச் சிட்டை பெறுமிடத்தில் தகவல்களடங்கிய கையேடு தரப்பட்டது.

உலகிலுள்ள நாடுகள் பலவற்றிலிருந்து கொண்டு வரப்பட்ட அற்புதமான பறவைகளின் வாழ்க்கை மாதிரிகளை கொண்டமைந்துள்ளதால் உலகப் புகழ்பெற்ற பறவைப் பூங்காவாக உள்ளது. 400 இனங்களையுடைய 5,000 பறவைகள் இப் பூங்காவில் வாழ்கின்றன. பறவை இனங்கள் மற்றும் விஸ்தீரணத்தால் உலகில் மிகப்பெரிய பூங்காவாக இது திகழ்கின்றது.



மேலதிகமாக சீனர்களின் கட்டடக்கலை அமைப்பிலுள்ள கட்டங்கள், அபூர்வ



மான சிறியரக மரங்கள் மற்றும் பூஞ்செடிகளும் காணப்படுகின்றன. பார்வையாளர் நடந்து சென்று சிரமமின்றி அனைத்தையும் பார்வையிடுவதற்கு ஏதுவாக மருவிச் செல்லும் வீதிகள் உள்ளன. அங்குள்ள ஜூரோங் அருவி பூங்காவிற்கு செழிப்பையும் அழகையும் கொடுக்கின்றது. அருவி ஓடிவரும் ஒடுங்கிய பாதையின் மேலாக அமைக்கப்பட்டுள்ள சிறிய பாலங்கள், வேகமற்ற நீரோட்டம் அதனில் நீந்தித் திரியும் மீனினங்கள் பலரையும் கவர்கின்றன.

ஒவ்வொரு பறவை இனமும் பகுதி பகுதியாக உரிய வாழ்க்கை வசதிகளுடன் காணப்பட்டன. பறக்க முடியாத பறவைகள், பிராந்திய பறவைகள், பல்வகை புறா இனங்கள், ஐந்து வகையான பெங்குயினின்கள், மீன் இனங்கள் போன்றவை ஆங்காங்கு காணப்படுகின்றன. ஆந்தைகள் - பனி ஆந்தைகள் 17 இனங்களில் 60 பறவைகள் உள்ளன. அருகிவரும் நாரை உட்பட கூழைக்கடா, நீருக்கடியில் வாழும் கூழைக்கடா போன்றவையும் காணப்படுகின்றன. சாதாரண கூழைக்கடா பறவைகளை யாழ்ப்பாண, மன்னார் கடலோரிகளில் சில மாதங்கள் காணக்கூடியதாக இருப்பதால் முன்னர் அவற்றைப் பார்த்திருக்கிறேன்.

இதைப்போன்ற பல வகை, பல இன, அறிந்திராத பெயர்களையுடைய பறவையினங்கள் பூங்கா நிரம்பக் காணப்பட்டன. இவற்றைப் பார்வையிடச் சந்தர்ப்பம் கிடைத்தமை மறக்கமுடியாத ஒன்றாகும். ஆட்களைக் கண்டதும் நெருங்கிவரும் பறவை இனங்களுக்கு உணவுகளைப் போட, அவை போட்டிபோட்டு உண்ண பிள்ளைகளுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. அங்குள்ள சிற்றுண்டி விற்பனை நிலையங்களில் உணவைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்ததால் அவர்களுக்கு வாய்ப்பாக இருந்தது.

ஜூரோங்கில் தங்கியிருந்த நாட்கள் சந்தோஷமான நாட்களாக இருந்தாலும், எமக்குத் தேவையான நகைகள், உடைகள் போன்றவற்றை சில்லறையாகவும் மொத்தமாகவும் மற்றும் விரும்பிய தெரிவிலும் கொள்வனவு செய்வதற்கு சிறங்கூன் நகரமே சிறந்தது என்பதை ஏற்கெனவே இங்கு வந்து சென்ற நண்பர்கள் மூலம் அறிந்திருக்கிறேன். அதனால், சுவிற்சர்லாந்துக்கு நான் எடுத்துச் செல்லக்கூடிய நகைகளை தெரிவு செய்வதற்கும் மனைவி, பிள்ளைகளுக்கு தேவையான நகைகளை கொள்வனவு செய்வதற்கும் சுவிஸ் மற்றும் இலங்கைக்கு எடுத்துச் செல்லக் கூடிய உடைகளை தெரிவு செய்வதற்குமாக தொடருந்திலும் பேருந்திலும் பயணித்து சிறங்கூன் நகருக்குச் சென்றோம்.

சிறங்கூன்

எந்நேரமும் சுறுசுறுப்பாக இயங்கும் முதன்மை நகராக சிறங்கூன் உள்ளது. வர்த்தக நிலையங்கள் நிரம்பிய நகராகவும், பல இடங்களுக்கும் சென்று வரக்கூடிய வசதியான மத்திய பகுதியாகவும் இருந்ததால், ஜூரோங் கில் தங்கியிருந்த நாட்களில் பல தடவைகள் சிறங்கூனுக்கு வந்துசெல்ல வேண்டிய தேவையேற்பட்டது. எமது கொள்வனவுத் தேவையின் சிரமத்தைத் தவிர்ப்பதற்காக இரண்டு வாரங்களால் மலேசிய சென்று திரும்பியதும் சிறங்கூன் நகரில் விடுதி எடுத்து தங்கிக் கொண்டோம். எனது ஏனைய சிங்கப்பூர் பயணங்களின்போதும் இந்நகரிலேயே தங்கியிருந்தமை குறிப்பிடத் தக்கது. இங்கு தேவைக்கேற்ப விடுதிகள் தாராளமாக உள்ளன.

விற்பனைத் துறையில் முன்னிலை வகிக்கும் நெரிசல் மிக்க நகராக சிறங்கூன் நகர் உள்ளது. நகருக்குச் செல்வதற்கு கட்டணம் செலுத்தும் வீதியும் கட்டணமற்ற வீதியும் உள் ளன. கட்டணம் செலுத்தும் வீதியால் விரைவாகச் செல்ல முடியும். நகரில் நுழை கையில் பிரதான பாதையின் இரு மருங்கும் இலத்திரன் பொருட்கள் விற்பனை செய் யப்படும் பிரமாண்டமான பல மாடிகளுடன் கூடிய விற்பனை நிலையங்கள் வரவேற்றன.



பல அடுக்கு மாடி களைக் கொண்ட சிம் லிம் ரவர் *(Sim Lim Tower)* என்ற கட்ட டத்திற்குச் சென்றால் அன்றை யப் பொழுது அங்கேயே கழிந்துவிடும். அத்தகைய பிரமாண்டமான விற்பனை நிலையம் அது. நான் சென்ற பயணங்கள் பலவற்றில் பொழுதைப் போக்கு வதற்கு அங்கு சென்றதுண்டு. ஒரு தடவை புதிதாக அறிமுகம் செய்யப்பட்ட 'நெக்கற்றிவ்' இனை படப்பிரதியாக்கும் 'ஸ்கேனரும்' அதற்குத் தேவையான அச்சு இயந்திரமும், பிறிதொரு தடவை கணிப்பொறியும் வேறு பல உதிரிப் பாகங்களும் அங்கு கொள்வனவு செய்துள்ளேன். அங்கு விற்பனையாகும் பொருட்கள் அனைத்தும் உத்தரவாதத்துடன் கூடியவை.

சிறங்கூன் வீதிச் சந்திப்பில் முன்றடுக்கு மாடியையுடைய பிரமாண்டமான 'தேக்கா சந்தை'யும் அதே பாதையின் இறுதியில் 'சிறங்கூன் பிளாசா' என்னும் பல மாடிகளுடன் கூடிய பல்பொருள் விற்பனை நிலை யமும் உள்ளன. தேக்கா சந்தைக்கும் சிறங்கூன் பிளாசாவுக்கும் இடையில் 500இற்கும் மேற்பட்ட விற்பனை நிலையங்கள் உள்ளன. பெரும்பாலானவை தங்நகை விற்பனை நிலையங்கள். இவற்றில் இரண்டொன்று இந்தியர் களுடையதும் ஏனையவை சீனர்களுடையவை.

அவ்வீதியில் இந்து மதத்தவரின் வழிபாட்டுத்த தலமான பிள்ளையார் கோயில், முஸ்லிம் மதத்தவரின் பள்ளிவாசல் போன்றவற்றுடன் சைவ உணவிற்கு பிரசித்தமான மாடியுடன் கூடிய 'கோமளா விலாஸ்' மற்றும் சைவ - அசைவ உணவகங்கள், பல்பொருள் விற்பனை நிலையங்கள் எனத் தொடராக இருந்தன. பிரதான வீதியைத் தவிர குறுக்கு வீதிகள், இணை வீதிகளில் சிறியதும் பெரியதுமானதுமான பல விற்பனை நிலையங்களும் தங்கு விடுதிகளும் நெருக்கமாக இருக்கின்றன. இந்திய உடைகளின் தனித்துவமான விற்பனை நிலையங்கள் சிலவும் காணப்பட்டன. உணவகங்கள் காலை 7.00 மணி முதல் இரவு 12.00 மணிவரையும் ஏனைய விற்பனை நிலையங்கள் காலை 10.00 மணிமுதல் இரவு 10.00 மணிவரை திறந்திருக்கும்.

தேக்கா சந்தைக்கு அண்மையில் இந்தியருக்குச் சொந்தமான சைவ உணவகத்துடன் கூடிய விடுதியில் இரண்டு அறைகளெடுத்து தங்கியிருந்தோம். அங்கு தங்கியிருந்த நாட்களில் பொருட்களை கொள்வனவு செய்வதற்கும் ஆலயத்துக்கு சென்றுவருவதற்கும் சில இடங்களைப் பார்வையிடுவதற்கும் செல்லக்கூடியதாக இருந்தது.



சிறங்கூனில் உள்ள பிரமாண்டமான விற்பனை நிலையங்களில் நுழைந்தாலே வெளியேற மனம் இடங் கொடுக்காது. விசாலமான தேக்கா சந்தைக்குள் நுழைந்தோம். தரைத் தளத்தில் சிறிய உணவகங்கள், சுடுபானம்-குளிர்பானம், பியர் விற்பனை செய்யும் கடைகள் ஏராளமாக இருந்தன. உணவகங்கள், கடைகளுக்கு முன்னால் இருக்கும் விசாலமான வெளியில் ஏராளமான மேசைகள், இருக்கைகள் பொருத்தப்பட்டு உள்ளன. அவை பொதுவானவை. எந்த உணவகத்திலோ, கடையிலோ வாங்கிக் கொள்பவற்றை எந்த இருக்கையிலும் அமர்ந்து அருந்தலாம். இதே தளத்தில் ஒரு பகுதியில் மரக்கறி, பழ வகை வியாபாரமும் நடைபெறுகின்றது.

மேல் தளங்களில் பாவனைப் பொருட்கள், உடைகள் விற்பனை செய்யப்படும் பலநூறு கடைகள் நிறைந்துள்ளன. இந்தோனேஷியாவில் உற்பத்தி செய்யப்படும் உடைகளே பெரும்பாலும் இந்தச் சந்தையில் விற்பனைக் குள்ளன. அப்பொருட்களை மலிவாகவும் தொகையாவும் பெற்றுக் கொள்ளலாம்.

தங்க நிறத்தையுடைய சிற்றிஷன் மணிக்கூடுகள் மிக மலிவானது. உத்தரவாதம் இல்லாவையாயினும் தரத்தில், பாவனையில் குறைந்ததல்ல. ஐரோப்பாவில் தயாராகும் 'றொலைக்ஸ்', 'ஒமேக்கா' போன்ற பல இனங்

களின் போலி கைக்கடிகாரங்களும் விற்பனைக்குள்ளன. அவை சிற்றிஷன் கைக்கடிகாரத்தைவிட பாதியிலும் குறைந்த விலையில் வாங்கலாம். பார்வைக்கு வித்தியாசம் காணமுடியாவிட்டாலும் தரமற்றவை. ஐரோப்பிய நாடுகளுக்குப் பறவாயில்லை. இலங்கைக்கு கொண்டுவந்தால் சில மாதங்களில் நிறம் மங்கிவிடும். ஐரோப்பாவில் தயாரிக்கப்படும் ஆண், பெண்களுக்கான சாளி, யஸ்மின் போன்ற பலவகை வாசனைத் தண்ணீர் (Eau de Parfum)களை மிக மலிவாகப் பெற்றுக்கொள்ளலாம் ஆனால், அவை போலியானவை. அவற்றில், மணத்தில் வித்தியாசம் கண்டுபிடிக்க முடியாது.

சந்தையின் வெளிப்புற கடைகளில் பெரும்பாலானவை நகைக் கடைகளே. மொத்தத்தில் இந்த சந்தையில் தேவையான பொருட்களில் பெரும்பாலானவற்றைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் இருப்பதால் எப்போதும் மக்களால் நிறைந்தே காணப்படும்.

சனிக்கிழமைகளில் மதியத்துக்குப் பின்னர் சிறங்கூன் வீதிகள், உணவகங்கள், கடைகளில் கால் வைக்கவே முடியாத சனக்கூட்டமாக இருக்கும். பல உணவகங்களில் பியர் விற்பனை செய்யப்படுவதால் அங்கெல்லாம் கூட்டம் அதிகமாக இருக்கும். ஞாயிற்றுக் கிழமை வேலையாட்களுக்கு விடுமுறை நாளாகையால் பொருட்கள் கொள்வனவு செய்வதற்கும் சந்தோஷமாகப் பொழுதைப் போக்குவதற்கும் நண்பர்கள் அறிமுகமானவர்களைச் சந்திப்பதற்கும் என சனி மாலை அங்கு கூடுகிறார்கள். அவர்களில் திரளானோர் இந்தியர்களே.




அன்றைய தினம் பிள்ளையார் கோயிலுக்கு அருகாமையுள்ள பரந்த வெளி அவர்களால் நிறைந்து காணப்படும். பொலிசாரின் கண்காணிப்பு அதிகமாக இருந்தும் வியாபாரிகள் உசாராக இருந்தும் கடைகளில் களவுகள் இடம்பெறாமலில்லை. சிலர் பிடிபடுவர், பலர் தப்பித்துக்கொள்வர். அந்த நேரத்தில் விடுதியை விட்டு வெளியே செல்வதைத் தவிர்த்துக்கொள்வோம்.

ஞாயிற்றுக்கிழமை காலை வழிபாட்டுக்காக ஆலயம் செல்வதுண்டு. செல்லும் வழியில் சில வீதிகள் அடைக்கப்பட்டு அங்கே வீதியோர வியாபாரம் நடைபெறும். நூறு வரையான சிறிய தற்காலிக கொட்டகைகளில் வியாபாரம் செய்யப்படுவதால் அந்தப் பகுதி கடைகளால் நிறைந்திருக்கும். இலத்திரன் பொருட்கள் உட்பட பலவகைப் பொருட்கள், புதிய -பழைய உதிரிப் பாகங்கள் என விற்பனை களைகட்டும். கொள்வனவு செய்வதற்கென கூடும் திரளான மக்களைக் காணலாம். மதியம் வரை நேரம் அங்கேயே கழிந்துவிடும்.

63 தீவுகளை உள்ளடக்கிய சிங்கப்பூரில் பிரபலமாகப் பேசப்படும் சந்தோசா தீவுக்கு சென்றுவரத் தீர்மானித்தோம். அதிகாலை வீதிகள் விற்பனை நிலையங்கள் எல்லாம் உறங்கிக்கொண்டிருக்கும் நிலையில் நாம் மட்டும் பேருந்து தரிப்பிடம் நோக்கி நடந்து கொண்டிருந்தோம். ஒரு உணவகம் மட்டும் திறந்திருந்ததால் தேநீர் அருந்தி சிற்றுண்டி மற்றும் பானங்களைக் கொள்வனவு செய்துகொண்டோம்.

சிங்கப்பூரின் கிழக்கு பக்க எல்லையிலுள்ள பயணிகள் கப்பல் துறை முகப் பகுதிக்கு பேருந்தில் செல்லவேண்டும். கைவசம் இருந்த வழிகாட்டி நூலின் உதவியுடன் சிங்கப்பூரில் எந்நகருக்கும் உரிய இலக்க பேருந்துகளில் இலகுவாகப் பயணத்தை மேற்கொள்ள முடியும். அதற்கேற்ற வகையில் அந்நூலில் சிங்கப்பூரிலுள்ள நகர்களின் விபரங்கள் இலக்கமிடப்பட்ட வரை படங்கள், இலகுவான பயணத்துக்கேற்ற விளக்கத்துடன் பேருந்து இலக் கங்கள், இடையிலுள்ள தரிப்பிடங்கள், அங்கு இணைப்பாகும் ஏனைய இலக்க பேருந்துகள், விரைவுப் பேருந்துகளின் தரிப்பிடங்கள் போன்ற விபரங்கள் எவரும் விளங்கிக் கொள்ளும் வகையில் குறிக்கப்பட்டு உள்ளன.



நாம் செல்லவேண்டிய துறைமுகத்துக்கான பேருந்து தரிப்பிடம் பிரதான வீதியில் 300 மீ. தூரத்தில் இருந்தது. தொடராக வந்துகொண்டி ருந்த பேருந்துகளில் குறித்த இலக்க விரைவுப் பேருந்து வந்து தரிக்க அதில் ஏறிக்கொண்டோம். பேருந்தின் உள்ளே புனல்போல இருந்த பிரயாணச் சிட்டை இயந்திரத்தில் சில்லறைப் பணத்தைப் போட்டு பயணிக்கும் இடத்து இலக்கத்தை அழுத்தியதும் பிரயாணச் சிட்டையும் மிகுதிப் பணமும் வெளியேறியது.

பேருந்துப் பயணத்தில் கண்ணுக்கு விருந்தான காட்சிகளையும் கட்டடங்களையும் பார்த்தவாறு பயணித்து துறைமுக தரிப்பிடத்தில் இறங்கினோம். பல்லாயிரம் பயணிகளின் வருகையை சமாளிப்பதற்கு ஏதுவாக தரிப்பிடத்தில் பல வரிசைகளில் நீண்ட நிழற் குடைகள் அமைக்கப்பட்டி ருந்தன. அங்கிருந்து வெளியேறி முன்பக்கமிருந்த பிரமாண்டமான கட்ட டத்தில் நுழைந்தோம். அக்கட்டடம், சந்தோசாவுக்கு பயணிகளை ஏற்றிச் செல்லும் மேம்பால தொடருந்து நிலையம். அங்கு பயணிகள் கணிசமாகக் காணப்பட்டனர்.

அலுவலகத்தில் சந்தோசா சென்று வருவதற்கான பயணச் சிட்டையைக் கொள்வனவு செய்துகொண்டோம். மேம்பால தொடருந்தின்

இருக்கைகளுக்கு ஏற்ப ஒரு தடவையில் குறிப்பிட்ட தொகையினரே பயணிக்க முடியும் என்பதால் பயணச்சிட்டை கொள்வனவு செய்கின்ற ஒழுங்கில் குழுவினராகப் பிரித்து, ஒவ்வொருவரினது உடையிலும் பார்வைக்குத் தெரியக் கூடியதாக மாறுபட்ட (எமக்கு வட்டமான) ஸ்ரிக்கர் ஒட்டப்பட்டு தொட ருந்து புறப்படும் நேரமும் தரப்பட்டது. சுற்றுலாப் பயணத்துக்கான ஒழுங்கில் இடையில் சில இடங்களிலும் இறங்கி பார்வையிடுவதற்கு ஏதுவான திட்ட மிடலாக காணப்பட்டது.

தொடருந்து பயணத்திற்கு ஒரு மணித்தியாலம் காத்திருக்க வேண்டு மென்பதால் அருகிலிருந்த பயணிகள் நீரூர்தி துறைமுகத்துக்குச் சென்றோம். அழகாக அமைக்கப்பட்டிருந்தது துறைமுகம். சிங்கப்பூர் தீவுகளில் சந்தோசா உட்பட சிலவற்றிற்கான நீரூர்தி மற்றும் லோஞ்சி சேவை இங்கு நடைபெறு கின்றது. பயணிகள் அமரத்தக்க பல அடுக்குகளைக் கொண்ட நீரூர்திகள் சில தரித்து நின்றன. அரை மணித்தியாலம் வரை அந்தப் பகுதியைப் பார்வை யிட்டு வெளியேறி எமது பயணத்துக்குரிய தொடருந்தில் ஏறிக்கொண்டோம் சந்தோசா செல்வதற்காக.

சந்தோசா தீவு

சிங்கப்பூரின் பிரபலமான உல்லாசப் போக்கிடம் 'சந்தோசா தீவு'. முன்னர் சீன மொழியில் 'மரணத் தீவு' என்று பொருள்பட அழைக்கப்பட்ட இத்தீவு, 1972ஆம் ஆண்டு சமஸ்கிருதத்திலிருந்து பெறப்பட்டு 'சந்தோசா' என்று பெயர்மாற்றம் செய்யப்பட்டது. இது, மலாய் மொழியில் 'அமைதி' எனப் பொருள்படும். இரண்டு கி.மீ. சுற்றளவைக்கொண்ட இத்தீவில், பாதுகாப்பான கடற்கரை, 14 ஹொட்டல்கள், கோல்ப் மைதானம், யூனிவர்சல் ஸ்ரூடியோ, கோட்டை, பூங்கா எனப் பல அமைந்துள்ள.

அந்தரத்தில் பறப்பதுபோல இருந்தது மேம்பாலத் தொடருந்து பயணம். கடல், அதில் பயணிக்கும் நீரூர்திகள், சிறு படகுகள் கண்களை ஈர்ந் திடத் தவறவில்லை. தொடருந்தின் இரு பக்கங்களிலுமுள்ள பெரிய கண்ணாடி களால் அனைத்தையும் தெளிவாகப் பார்வையிடக் கூடியதாக இருந்தது.

சந்தோசா தீவின் கரையோரமாக தொடருந்து செல்கையில் கடற்கரை நெடுகிலும் தென்னை மரங் களைக் காணக் கூடியதாக இருந்தது. பாரிய ஹொட்டல் கள், அழகான கட்டடங்கள், உல்லாசப் பயணிகள் அமர்ந் திருக்கும் குடில்கள், கடற் குளிப்பு- சூரியக் குளிப்பில் ஈடுபடும் உல்லாசப் பயணி களால் புதிதொரு உலகத்தில்



நுழைவதுபோன்ற பிரமை ஏற்பட்டது. சந்தோசாவை சுற்றி வருவதுபோல வந்த தொடருந்து தரிப்பிடத்தில் தரித்தது.

புதிய பாணியில் அமைக்கப்பட்டிருந்த தரிப்பிடத்தில் பயணிகள் முற்றிலும் இறங்கியதும் வெறுமையாகப் புறப்பட்டது தொடருந்து. உயரமாக இருந்த தொடருந்து தரிப்பிடத்தில் சிறிது நேரம் நின்று தீவின் அழகைப் பார்த்த பின்னர் இறங்கினோம். சந்தோசாவில் பார்வையிடக்கூடிய இடங்கள் பற்றிய வரைபடமும் விளக்கக் குறிப்புகளும் அடங்கிய கையேடு ஏற்கெனவே தரப்பட்டிருந்ததால் பெரும் உதவியாக இருந்தது.

அங்கு காணப்பட்ட வானுயர்ந்த கட்டடம் ஒவ்வொன்றும் கட்டடக் கலையின் நுட்பத்தை, நவீனத்தை எடுத்தோதத் தவறவில்லை. யூனிவர்சல் கலையகத் தொகுதியின் அமைப்பு பிரமிக்கவே செய்தது. பிரித்தானியர் ஆட்சியின்போது கட்டப்பட்ட கோட்டையின் ஒரு பகுதி தொல்பொருள் காட்சிச்சாலையாக உள்ளது. அங்கு கட்டணம் செலுத்தி உள் நுழைந்தோம்.


யூனிவர்சல் கலையகத் தொகுதி

பிரித்தானியர் பயன்படுத்திய பீரங்கித் தளம் பண்டைய தோற்றத்திலேயே இருந்தது. பிரித்தானிய ஆட்சியாளரின் ஆயுதங்கள், பயன்படுத்திய பொருட்கள் பல தொகுதி தொகுதியாக காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. 1942இல் யப்பானியரின் தாக்குதலிலிருந்து சிங்கப்பூரைப் பாதுகாக்க மலேசியாவை இணைக்கும் பாலத்தை பிரித்தானியர் தகர்த்துவிட்டனர். இதனால் சந்தோசா தீவு வழியாக நுழைந்த யப்பானியர், சிங்கப்பூரை இலகுவாகக் கைப்பற்றினர். சிங்கப்பூரை குறுகிய காலம் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்த யப்பானிய இராணுவத்தின் ஆயுத எச்சங்கள் பல பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன. ஆயுத தளபாடங்கள் மட்டுமல்ல பல பறவை இனங்கள், மிருகங்கள், பண்டைய வரலாற்றுத் தடங்கள் போன்றவற்றைப் பார்வையிடக்கூடியதாக இருந்தது.

வரைபடத்தில் உள்ளவாறு கோட்டையிலிருந்து சற்றுத் தூரத்தில் கடற்கரையோரம் இருந்த பிரமாண்டமான கட்டடத்திற்குச் சென்றோம். விசாலமான, கடைகளுடன் கூடிய கட்டடம் அது. பலநூறு பயணிகள் தங்கக் கூடிய இடமாகத் தெரிந்தது. அக் கட்டடத்தின் அந்தத்தில் 'நீர்க்கடியில் உலகம்' என்ற பகுதிக்குச் செல்லும் நுழைவாசல் இணைந்திருந்தது.

நீர்க்கடியில் நின்று உலகத்தைப் பார்க்கும் நோக்கில், நுழைவாசலால் நுழைந்தோம். அது ஒரு விசாலமான தனிக் கட்டடமாக இருந்தது. கட்டடத்தின் தளத்திலிருந்து கடலினடித் தளத்திற்கு மின்தூக்கியில்

இறங்கினோம். அத்தளத்திலிருந்து செல்லும் எட்டு அடி வரை அகலமான பாதையின் இருபக்கங்கள் நேராகவும், மேற்பக்கம் அரைவட்ட வடிவிலும் (குகை போன்று) கண்ணாடி மறைப்பால் கடல் நீர் தடுத்துப் பிரிக்கப் பட்டுள்ளது. 'Ten Commandments' (பத்துக் கட்டளைகள்) திரைப்படத்தில் செங்கடல் குறுக்காகப் பிரிந்து மோயீசனும் குடிமக்களும் பயணித்த பாதை நினைவிற்பட்டது.

கணிசமான தூரம் வளைந்தும் நேராகவும் செல்லும் பாதையில் விரிக்கப்பட்டுள்ள றப்பர் விரிக்கையின்மேல் நாங்கள் நின்று மூன்று பக்கங்களாலும் தெரியும் மீன்களைப் பார்வையிட, மின்தூக்கி எங்களை நகர்த்திச் சென்றது. பல வகை - பல நிறங்கள் - பல அளவுகளையுடைய மீன் வகைகள், சுறா வகைகள், திருக்கை வகைகள், நண்டு வகைகள், நீர்ப் பாம்புகள் மற்றும் கடல் வாழ உயிரினங்கள் என பல ஆங்காங்கு சுதந்திரமாய் உலா வருவதை கண்ணாடிகளால் தெளிவாகப் பார்க்கக்கூடியதாக இருந்தது. பாரை வகை மீனினங்கள் ஒன்றித்து கூட்டாகவும் வலம் வந்தன.



கடலடியின் இயற்கைத்தனம் மறுவின்றித் தெரிந்தது. மீன்கள் தங்கி வாழும் கற்பாறைகள், கடற் பாசிகள், கடலடி செடிகள் போன்றவை கலங்கலின்றி கணிசமான தூரத்துக்குத் தெரிந்தன. சூரிய ஒளி முழுமையாக கடலை ஆக்கிரமித்திருப்பதால் இடையிடையே தெரிந்த கடலடி வெண்மணலில் மீன்களின் நிழல் விழுகை பார்வைக்கு இரசனையாக இருந்தது. பார்வை யாளரை உற்சாகப்படுத்த கறுப்பு உடையணிந்த சுழியோடிகள் மீன்களோடு கூடவே உலாவருவதைக் காணும்போது அடைந்த மகிழ்ச்சி அளவிட முடியாதது.

நீருக்கடியில் 100 மீ. வரை சென்று நினைவைவிட்டு அகலாத, உலகத்தின் கடலடி இயற்கைக் காட்சியைப் பார்த்த மனநிறைவில், விடுபடாத சிந்தனைகளை உரையாடி மீட்டவாறு பயணிகள் தங்கியிருக்கும் கட்டடத்துக்கு வந்தோம். எம் நினைவெல்லாம் நீர்க்கடியில் உலகத்துடனே ஒன்றித்து விட்டன. சிறிது நேரத்தால் மேம்பால தொடருந்து வந்து தரித்ததும் அதில் ஏறிக் கொண்டோம். வரும்போது கண்காணிக்கப் பட்ட ஸ்ரிக்கர் அடையாளம் இப்போது கவனிக்கப்படவில்லை. எவரும் எந்த தொடருந்திலும் இடமிருந்தால் பயணிக்கலாம் என அறிவித்தல் தரப்பட்டது.

அடுத்து இருந்த பிறான் (Brani) தீவில் பெரியதொரு பூங்காவின் மத்தியில் இறக்கப்பட்டோம். தீவு முழுவதுமே பூங்கா போலவே காணப்

பட்டது அந்தப் பகுதி. குறைவான கட்டடங்களும் நிகழ்ச்சிகள் நிகழ்த்தக் கூடிய வகையில் வட்டமாக அமைக்கப்பட்டுள்ள பெரிய தளமும் இருந்தன. ஆங்காங்கு மரங்களின் கீழ் பலரும் உணவருந்தியதால் நாமும் எடுத்துவந்த சிற்றுண்டியை மரமொன்றின் கீழ் அமர்ந்து அருந்தினோம்.

சற்று நேர ஓய்வின் பின்னர் பூங்காவைச் சுற்றிப்பார்க்கப் புறப்பட்ட போதும் அதிக தூரம் நடக்க முடியவில்லை. எல்லோரும் களைப்புற்றிருந்ததால் தொடருந்து தரிப்பிடத்தில் வந்தமர்ந்து கொண்டோம். சிறிது நேரத்தின் பின்னர் வந்து தரித்த தொடருந்தில் ஏறி சிங்கப்பூர் தீவின் பயணிகள் நீருர்தி துறைமுக மேம்பால தொடருந்து நிலையத்தை அடைந்தோம். அங்கிருந்து பேருந்தில் விடுதி வந்து சேர பி.ப. 5.00 மணியாகிவிட்டது.

டிறாஹன் பூங்கா (Dragon Park)

சிங்கப்பூருக்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகளை பெரிதும் கவர்ந்த இடம் 'டிறாஹன் பூங்கா'. முன்னர் 'புலி பூங்கா' *(Tiger Park)* என்ற பெயரில் சிறப்புற்றிருந்த இப்பூங்கா, பின்நாளில் 'டிறாஹன் பூங்கா' என பெயர் மாற்றம் செய்யப் பட்டு புதிய மாற்றங்களை உள்வாங்கி உல்லாசப் பயணி களை வலிந்து ஈர்க்கும் இட மாக மாறியுள்ளது.



நாங்கள் பத்துப்பேர் என்பதால் காலை எட்டு மணிய ளவில் வாடகை வான் ஒன்றில் புறப்பட்டு அரை மணித்தி யாலத்தால் டிறாஹன் பூங்காவுக்கு முன்னால் இறங்கினோம். வாகனங்கள் தரித்து விடப்படுவதற்கு ஏற்ற வசதியாக முன்பக்கத் தரை இருந்தது. மறு பக்கமிருந்து வருகை தருகின்ற பயணிகளுக்காக வீதியின் குறுக்காக மேம்பாலம் அமைக்கப்பட்டுள்ளது.

வாசலில் நுழைவுச் சிட்டையைப் பெற்று நுழைந்தோம். சீமேந்தால் கட்டப்பட்டு வர்ணம் பூசப்பட்ட பெரியதொரு டிறாஹன் வரவேற்றது. பார்வைக்கு வித்தியாசமான பூங்காவாக உள்ளே தெரிந்தது. கோவணம் கட்டியதுபோன்ற உடையுடன் மல்யுத்த வீரர்கள் போன்ற தோற்றத்தில் பல உருவங்களும், தேசிய உடையணிந்த நிலையில் கையில் விசிறி ஏந்திய சீனப் பெண்களின் சிலைகளும் அங்கு காணப் பட்டன.

பிரமாண்டமான அந்தப் பூங்காவின் ஒரு பக்கத்தால் செல்கையில், பெரியதொரு டிறாஹன் உருவமும் அதனோடு இணைந்தாற்போல் குளமும் தெரிந்தது. அந்தக் குளத்தில் சாதாரண அளவிலுள்ள படகொன்றும் கிடந்தது.

அப்படகில் பயணிகள் இருந்தனர். அங்கு போடப்பட்டிருந்த விளம்பரத்தைப் பார்த்து நாமும் கட்டணம் செலுத்தி படகில் ஏறிக்கொண்டோம். முப்பது பயணிகள் வரை அமர்ந்ததும் சற்று நேரத்தால் புறப்பட்ட படகு, வாயை அகலத் திறந்தவாறிருந்த பிரமாண்டமான அந்த டிறாஹன் உருவத்துக்குள் நுழைந்தது. ஒரு டிறாஹனின் திறந்த வாயின் உள்ளே எப்படி இருக்குமோ அந்த நிலையில் மேற்பக்கம் தெரிய கீழ்ப்பக்கம் பாதி உயரத்துக்கு நீர் நிறைந்திருந்தது. அந்த நீரிலேயே படகு பயணித்தது.

வளைந்து காணப்பட்ட டிறாஹனது உடலின் உட்பகுதியால் படகும் வளைந்து மெதுவாகச் சென்றுகொண்டிருந்தது. உள்ளே வெளிச்சம் குறைவாக இருந்தது. டிறாஹனின் உள்பகுதியில் இரு பக்கங்கள் மற்றும் மேற் பகுதியில் டிறாஹன் சார்ந்த ஓவியங்கள் தொடராக வரையப்பட்டிந்தன. நீல வர்ணம் மேலோங்க வரையப்பட்ட ஓவியமும் பாய்ச்சப்பட்ட துளிர் நீல ஒளியும் டிறாஹனின் உட்பகுதியை அழகூட்டின. ஓவியங்களில் பார்த்து அதனில் ஒன்றித்து இருந்தவர்களை டிறாஹனின் வால் இணைந்த பகுதியால் வெளியேற்றியது படகு. வெளியேறிய பின்னர் பார்க்கையில் குளத்தில் நாம் புறப்பட்ட இடத்துக்கு எதிர்ப்பக்கமாக நிற்பது புரிந்தது. படகுப் பயணம் எமக்கு மன நிறைவைத் தந்தது.



அழகிய பூஞ்செடிகள் தொகுதி தொகுதியாக நடப்பட்டிருந்தன. முன்னொரு காலத்தில் சீனாவில் பல்கிப் பெருகி ஆதிக்கம் செலுத்தி, பின்னர் அழிவுற்றுப்போன டிறாஹன்களின் தோற்றங்கள் ஆங்காங்கு காணப்பட்டன. புற்றுக்குள் நுழையும் பெரியதொரு பாம்பினை (மலைப் பாம்பு போன்றது) பிடிப்பதற்காக அதன்மீது பாயும் புலியின் உருவம் பலரையும் கவர்ந்தது.

சற்றுத் தள்ளி விசாலமான இடத்தின் நடுவில் இருந்த புற்தரையில் அரிய வகைச் செடிகளும் அதன் விபரமும் காணப்பட்டன. பயணிகள் அமர்வதற்கேற்ற இருக்கைகளும் அங்கு இருந்தன. அதன் இரு பக்கங்களிலும் சீனாவின் பண்டைய வரலாற்றுச் சிறப்புகளைக் கூறும் முக்கிய நிகழ்வுகள், சிற்பங்கள் இணைந்த ஓவியங்களாகக் காணப்பட்டன. ஒவ்வொன்றினதும் விளக்கம் ஆங்கிலம் மற்றும் சீன மொழிகளில் எழுதப்பட்டிருந்தன. கல்லூரி மாணவர்களுக்கு இவை பெரிதும் உதவியாக இருக்கும் என்பதாலேயே இதை அமைத்துள்ளார்கள் என நினைத்தேன்.

அவற்றைப் பார்வையிட்டுச் சென்றதும் முப்பது அடி வரையில்

உயரமான மேல் முனையைக்கொண்ட நீர்ச் சறுக்கல் மேடை இரண்டு காணப்பட்டன. நீச்சல் தடாகம்போல அமைக்கப்பட்டுள்ள பெரியதொரு தடாகத்தில் வலம், இடமாக இவை இரண்டும் அமைக்கப்பட்டிருந்தன. தடாகத்தின் தளம், நான்கு பக்க மறிப்புகள் மற்றும் இரண்டு நீர்ச் சறுக்கல் மேடைகள் முற்றிலும் நீல நிறத்தில் வர்ணம் தீட்டப்பட்டிருப்பதால் தடாகத்தில் நிறைந்திருக்கும், சறுக்கல் மேடைகளில் வழிந்தோடிக் கொண்டிருக்கும் கலங்கலற்ற நீரின் அசைவுகளில் வெயில் பட்டுத் தெறித்து கண்ணைக் கவர்ந்தது.

சறுக்கல் மேடையின் பின்பக்கமுள்ள உயர்ந்த முனைவரை பொருத்தப்பட்டுள்ள ஏணி மூலம் சிறுவர் முதல் வளர்ந்தவர் வரை சென்று அங்குள்ள சிறிய தளத்தில் கால்களை நீட்டி அமர்ந்த பின்னர் சறுக்கத் தொடங்கினர். வழிந்து கொண்டிருக்கும் நீருடன் இணைந்து வழுகிச் செல்வதால் வேகம் அதிகமாக இருக்கும். சிலர் துணைக்கு சறுக்கல் மேடையின் கரையோரமுள்ள தடுப்பை அழுத்தியவாறும் வழுக்கினர். சிலர் இடையில் வாய்விட்டு அலறவும் செய்தனர். சந்தோஷத்திலா, பயத்திலா அல்லது வேடிக்கைக்காகவா என்பது புரியவில்லை. சறுக்கல் மேடையில் சறுக்கி வந்தவர்கள் இறுதியாக தடாகத்தில் வீழ்ந்து எழுந்தனர்.

அங்கிருந்து மீள விருப்பற்றுப் பார்த்தவாறே நின்றோம். இவற்றைப் பார்த்துக் கொண்டிருக்கையில் சறுக்கவேண்டும் போல ஆவல் இருந்தது. ஆனால், எங்களில் எவரேனும் அதற்கான ஆயத்தமாக உடை எடுத்து வரவில்லை என்பதால் வழுக்கச் செல்ல முடியவில்லை. விரும்பியதை செய்ய முடியாத வேதனை இருந்தாலும் கண்ணுக்கு விருந்தாக இருந்தது.

பூங்காவை சுற்றிப் பார்வையிடுவதற்கு மூன்று மணித்தியாலம் வரை செலவிட்டோம். பார்வையிட்டு களைப்புற்று வருபவர்களை மகிழ்விக்க திறந்தவெளி அரங்கம் ஒன்று இருந்தது. பாரிய மரங்கள் நிழல் கொடுக்க நூறுக்கும் மேற்பட்டவர்கள் அமரத்தக்க வாங்குகள் சீமேந்தால் கட்டப் பட்டிருந்தன. அங்கே அமர்ந்து சிற்றுண்டியும், பானமும் அருந்தினோம்.

நிகழ்ச்சி தொடங்கியது. ஆண்கள் ஒரு குழுவாகவும் பெண்கள் ஒரு குழுவாகவும் இணைந்து தமது உடற்பயிற்சிகளை தனித்தனியே காட்சிப்படுத்தினர். பின்னும் முன்னும் பக்கவாட்டிலும் சரிந்து நிமிர்கையில் இவர்களுக்கு எலும்பே இல்லை என்பதைப்போல் யோசிக்கத் தோன்றயது.

நடனங்களும் இடம்பெற்றன. அதில் டிறாஹன் நடனம் பலரையும் கவர்ந்தது. பத்துக்கும் மேற்பட்டோர் ஒன்றாக டிறாஹனின் தோற்றத்தைப் போர்வையாகக்கொண்டு அசைந்து நெளிந்து நடனமாடினர். முகப்பக்கம் நின்றவர்கள் வாயைத் திறந்து மூடியும், வால் பக்கம் நின்றவர்கள் அதனை அசைத்து வளைத்தும் பார்வையாளரைப் பிரமிக்கச் செய்தனர். எந்தத் தடங்கலுமின்றி உயிரான டிறாஹனின் நடமாட்டத்தை தத்ரூபமாக வெளிப்படுத்தினர். ஒரு மணித்தியாலம் வரை நிகழ்ந்த அந்த பொழுதுபோக்கு

நிகழ்ச்சி மனதை வெகுவாகக் கவர்ந்தது. தொடர்ந்து சில வாத்தியங்கள் கொண்டு இசை வழங்கினர்.

வாகனச் சாரதி ஏற்கெனவே அறிவித்துச் சென்ற நேரம் நெருங்கி யதால், சிறிதுநேரம் மட்டும் பார்வையிட்ட பின்னர் நாம் வெளியேறி, பூங்காவின் முகப்பிலிருந்து அகன்ற வீதியைக் கடப்பதற்கு மேம்பாலம் மீதேறி சிறிதுநேரம் அதனில் நின்று, விரைந்து பயணிக்கும் வாகனங்களைப் பார்த்து விட்டு மறுபக்கம் சென்றோம். நாம் அங்கு சென்ற சிறிது நேரத்தால் வாகனமும் வந்து சேர்ந்தது. அங்கிருந்து மனநிறைவோடு வாகனத்திலேறிப் புறப் பட்டோம்.

முதியோரின் உழைப்பு

சிறங்கூனின் நின்ற நாட்களில் மறக்கமுடியாத காட்சி, முதியோரின் சைக்கிள் ரிக்சோ பவனி. முதியவர்கள் தமது வாழ்வுக்கெனப் பிறரை நம்பியிராமல் தமது சுய வருவாய்க்கென சைக்கிள் ரிக்சோ செலுத்துகிறார்கள். அவர்கள் செலுத்தும் ரிக்சோ இந்தியாவில் நாம் பார்த்தவை போன்றதல்லாமல் சற்று மாறுபட்டது.தேக்கா சந்தைக்கு அண்மையில்தான் அவர்களது ரிக்சோ தரிப்பிடம் உள்ளது.

ரிக்சோக்களில் உல்லாசப் பயணிகள், கூடுதலாக மேலைநாட்டினர் குழுக்களாக இணைந்து ரிக்சோக்களில் விரும்பிப் பயணிப்பர். அல்லது பலரும் சேரும்வரை காத்திருந்து புறப்படுவர். வாகனங்களில் செல்கையில் அதன் வேகம் காரணமாக ஏதனையும் தெளிவுறப் பார்க்க முடியாத நிலையும், பலர் இதனில் பயணிக்க நாட்டம் கொள்வதற்கு ஒரு காரணமாக இருக்கலாம்.

ஒரு ரிக்ஷாவில் மூவர் மட்டுமே பயணிக்க முடியும். அனேகமாக இருவரையே காணக்கூடியதாக இருந்தது. தனித்து ஒரு ரிக்ஷோ செல்வது மிகவும் அரிது. எந்நேரம் பார்த்தாலும் பத்துக்கும் மேற்பட்ட ரிக்சோக்கள் தொடராக வருவதையே காணக்கூடியதாக இருக்கும். ஓரமாக, தொடராக, மெல்லிசையுடன் பவனிவரும் அவர்களது ரிக்சோ பயணம் கண்ணுக்கு விருந்தாகவே இருக்கும்.

அவர்கள் செலுத்துவது பார்வைக்கு சாதாரண வேகம் என்றாலும் ரிக்சோவின் முன் சக்கரத்துடன் இணைந்துள்ள பெடலை பிதித்து வியர்வை சிந்தக் களைப்புடன் அதனைச் செலுத்துவதைப் பார்க்கையில் அவர்கள்மீது இரக்கமே பிறக்கும். முதுமையிலும் உழைப்பிலுள்ள நாட்டத்தைப் பாராட் டாமல் இருக்கவே முடியாது. ■

மலேசியா

(1992)



தென் கிழக்கு ஆசியாவிலுள்ள முடியாட்சி நாடு இதுவாகும். கிழக்கு மலேசியா (தீபகற்ப மலேசியா), மேற்கு மலேசியா (மலேசிய போர்னியோ) என இரண்டு பிராந்தியங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதனை தென் சீனக் கடல் பிரிக்கின்றது. மலேசியாவில் 13 மாநிலங்களும் மூன்று கூட்டரசு மாநிலங்களும் இணைந்த மொத்தப் பரப்பளவு 329,847 ச.கி.மீ. ஆகும். கடல்சார் எல்லைகளாக வியட்நாம், பிலிப்பைன்ஸ் உள்ளன. நில எல்லைகளாக தாய்லாந்து, இந்தோனேசியா, புரூணை என்பவற்றுடன் சிங்கப்பூர் குறுகிய தரைப் பாலத்தால் இணைக்கப்பட்டுள்ளது.

31.08.1957இல் விடுதலை அடைந்த பின்னர் கூட்டரசாக உருவானது. கிழக்கு மலேசியாவில் உள்ள 11 மாநிலங்களில் ஒன்பது மாநிலங்கள் அவற்றின் பரம்பரை ஆட்சியாளர்களால் ஆழப்படுகிறது. பல்வேறு பண்பாட்டுக் கூறுகளைக் கொண்ட பல்வேறு மொழிகளைப் பேசும் மக்கள் வசிக்கிறார்கள். மன்னர் ஆட்சி நடைபெறும் புரூணை மலேசியாவில் முழுவதும் சூழப்பட்ட தனிநாடாகும். மலாய்த் தீவுக் கூட்டங்களில் ஆட்சிப் பகுதியைக் கொண்டுள்ள ஒரேயொரு நாடு இதுவாகும்.

சிங்கப்பூரில் நுழைகையில் 15 நாட்களுக்குரிய நுழைவு விசா வழங்கப்படுவதே வழமை. மேலதிகமாக நாட்கள் தேவையாயின் விசா நிறைவு திகதியில் மலேசியாவுக்குச் சென்று திரும்பி வந்தால் திரும்பவும் 15 நாள் நுழைவு விசா வழங்குவார்கள். அன்றேல், சிங்கப்பூர் குடியுரிமைக்காரர் நேரடியாக குடிவரவு குடியகல்வு அலுவலகம் சென்று அனுசரணையாளராக ஒப்பமிட்டு விசா நாட்களை நீடிக்கலாம். நீடிக்கும் நாட்களுக்குரிய பணம் செலுத்தவேண்டும். நாங்கள் நான்கு வாரங்கள் சிங்கப்பூரில் தங்கியிருக்கும் திட்டத்தில் வந்திருந்ததால், விசாவை நீடிக்கும் நோக்கில் சிங்கப்பூரிலுள்ள மலேசிய உயர்ஸ்தானிகர் காரியாலயத்தில் விசாவுக்கு விண்ணப்பித்து மறுநாள் சிரம மின்றிப் பெற்றுக் கொண்டோம்.


13.01.1992 அன்று காலை ஜூரோங் நகரிலிருந்து பேருந்தில் புறப்பட்டு மலேசியா ஜொகூர் - சிங்கப்பூரை இணைக்கும் தரைப்பால எல்லை வரை பயணித்தோம். அந்த இடத்தில் சிங்கப்பூர் குடிவரவு குடியகல்வு பிரிவும்,

சுங்கப்பிரிவும் இருந்தன. அங்கு சோதனைகள் முடிவுற்றதும் பிறிதொரு பேருந்தில் ஏறி அழகிய ஜொகூர் ஜலசந்தியைப் பிரித்து நிற்கும் தரைப் பாலத்தின் வழியாக ஜொகூர் குடிவரவு குடியகல்வு அலுவலகத்தை அடைந்தோம்.

ஜொகூர்

சிங்கப்பூருக்கு அண்மையில் தமிழர்கள் அதிகமாக வசிக்கும் நகரமாக மலேசியா / ஜொகூர் நகரம் உள்ளது. சிங்கப்பூரின் எல்லையாக இந்த நகர் இருப்பதால் பயணிகள் வருகை அதிகரித்துக் காணப்படுவதுடன் சிறப்பையும் பெறுகின்றது.

ஜொகூர் குடிவரவு குடியகல்வு அலுவலகத்தில் சோதனை முடிவுற்றதும் திரும்பவும் பேருந்தில் ஏற்றப்பட்டு ஜொகூர் பேருந்து தரிப்பிடத்தில் இறக்கப்பட்டோம். பேருந்து தரிப்பிடத்திற்கு அண்மையிலிருந்த மலாய் மொழி பேசுபவரின் அருந்தகத்தில் கோப்பி அருந்தினோம். மலேசியாவுக்கு முதல் தடவையாக வந்துள்ள தால் இங்குள்ள இடங்கள் பற்றிய தெளிவில்லை. சிங்கப்பூர் சென்றபோது தங்குமிட முகவரி இருந்தது. அங்கு தமிழ் மாணவர்களும் இருந்தனர். இங்கு அவ்வாறில்லை என்பதால் கோப்பி அருந்திக் கொண்டிருந்த ஒருவரை நெருங்கி தங்குவதற்கு ஏற்ற ஹொட்டல் அண்மையில் இருக்குமா என விசாரித்தேன்.



ஒரு சிலர் ஏமாற்றக் கூடும் என்ற பயம் உள்ளத்திலிருந்தாலும் அவர் கூறிய இடம் நோக்கி சுட்டிக் காட்டிய வீதியின் நடைபாதையால் சென்றோம். கணிசமான தூரம் சென்றும் குறிப்பிட்டவாறு ஹொட்டல் எதனையும் காணவில்லை. இடையிடையே வீடுகளும் வயல் தரைகளுமே தென்பட்டன. ஏமாந்தோமோ என்ற எண்ணம் தோன்றவே செய்தது. தற்செயலாக இந்தியர் ஒருவர் எதிர்ப்பட்டார். அவரிடம் கேட்டபோது இன்னமும் கொஞ்சத் தூரம் போகும்படி கூறி, ஹொட்டல் இருக்குமிடக் குறிப்பையும், அதன் பெயரையும் கூறிச் சென்றார். அந்த இடத்தில் அவருடன் தமிழில் உரையாடியமை மகிழ்ச்சியாக இருந்தது.

இந்தியத் தமிழர் கூறியதைப்போல பரந்து விரிந்த திறந்த வாகனத் தரிப்பிடம் இருந்தது. விற்பனைக்கு விடப்பட்டவைபோல வாகனங்கள் நிறைந்து காணப்பட்டன. சற்று அப்பால் பிள்ளையார் கோயிலைக் கண்டதும் மனதிற்கு ஆறுதல். கோயிலிலிருந்து 100 மீ. தொலைவில் பல ஹொட்டல்கள் இருந்தன. அவர் கூறிய பெயரையுடைய ஹொட்டலை அடையாளங்கண்டு, குளிரூட்டி வசதியுடன் கூடிய இரண்டு அறைகளைப் பெற்றுத் தங்கிய பின்னர்

தான் மனதுக்கு ஆறுதலாக இருந்தது.

ஹொட்டலுக்கு அருகாமை இருந்த உணவகத்தில் மதிய உணவைப் பொதிசெய்து எடுத்துவந்து சாப்பிட்டு, சிறிதுநேரம் ஓய்வெடுத்து, நீராடிப் புறப்பட்டோம் அந்த சுற்றாடலைப் பார்ப்பதற்காக.

பிள்ளையார் கோயிலை முதலில் தரிசித்து பின்னர் அந்தப் பகுதியிலிருந்த கடைகளுக்குச் சென்றோம். முற்றிலும் தமிழர்களின் கடைகளாகவே இருந்தன. தமிழர்களின் உணவு வகைகள், தமிழ் சஞ்சிகைகள், தமிழ் பத்திரிகைகள் போன்றவற்றைக் காணக்கூடியதாக இருந்தமை மகிழ்வைத் தந்தது. அங்கிருந்த அருந்தகத்தில் சிற்றுண்டியும் தேநீரும் அருந்தினோம். இனிப்புப் பண்டங்கள் சுவையாகவும், சிங்கப்பூர் விலையுடன் ஒப்பிடுகையில் குறைவாகவும் இருந்தது. இதுவரை சிங்கப்பூரில் பொருள்கள் மலிவாக இருக்கும் என்ற எண்ணமே என்னிடம் இருந்தது. சிங்கப்பூர் டொலர் ஒன்று, 1.25 மலேசியன் வெள்ளிக்கு மாற்றக்கூடியதாக இருந்தமை அந்த மலிவுக்குக் காரணமாய் இருக்கலாமென சமாதானம் செய்து கொண்டேன்.

சிங்கப்பூரிலிருந்து வந்திறங்கிய ஜொகூர் குடிவரவு குடியகல்வு அலுவலகம் நாம் தங்கியிருந்த ஹொட்டலிலிருந்து 150 மீற்றர் தூரம் வரையிலேயே இருந்தது. அதிலிருந்து ஐந்து நிமிடத்தில் வந்திருக்க வேண்டிய இடத்திற்கு பேருந்து தரிப்பிடம் சென்று, அங்கிருந்து அரைமணி நேரத்திற்கு மேலாக நடந்து வந்ததை நினைத்தபோது சிரிப்புத்தான் வந்தது.


ஜொகூர் குடிவரவு குடியகல்வு அலுவலகம்

அருந்தகத்திலிருந்து ஜொகூர் குடிவரவு குடியகல்வு அலுவலகம் செல்லும் வழியில் காணப்பட்ட வானுயர்ந்த பிரமாண்டமான கட்டடங்கள் சிங்கப்பூருக்கு எந்தவகையிலும் குறைவில்லை என்பதை உணர்த்தியது. குடிவரவு குடியகல்வு அலுவலகத்திலிருந்து பிரதான வீதி ஜொகூர் ஜலசந்தியை மருவியதாகச் செல்கிறது. வீதியில் நின்று பார்க்கையில் ஜலசந்தியின் அழகு கண்ணைப் பறித்தது. வீதி அணையுடன் மோதி எழும் கடலலைகள், ஆங்காங்கு பயணிக்கும் படகுகள், சிங்கப்பூரை இணைக்கும் பாலத்தால் பவனி வரும் வாகனங்கள் மீண்டும் மீண்டும் பார்க்கத்தூண்டின. அந்த இடத்திலிருந்து சிங்கப்பூரைப் பார்க்கையில் தேவலோகம் போலத் தோன்றியது.

நாம் வரும்போது அவதானித்த பிரமாண்டமான கடைத் தொகுதிக்குச் சென்றோம். ஆறு மாடிகளைக் கொண்டதும் முற்றிலும் கண்ணாடி மறைப்புகளிலாலான பலதரப்பட்ட வர்த்தக நிலையங்களைக் கொண்டதுமான பிரமாண்டமான கடைத்தொகுதி அது. மத்தியில் வட்டமாக அமைந்த

கணிசமான வெளியையும் சுற்றிவர ஒவ்வொரு மாடியிலும் பலவகை விற்பனை நிலையங்களையும் கொண்டதாக அமைந்திருந்தது.

மத்தியிலுள்ள வெளியில் வாடிக்கையாளரைக் கவருவதற்காக பல்வகை நிகழ்வுகள் நடைபெறும். நான்கு மாடிகளிலும் விற்பனை நிலையங்களின் முன்னாலுள்ள நடைபாதைக்குரிய வெளியில் நின்று அந்த நிகழ்ச்சியை பார்த்து இரசிக்கலாம். நாங்கள் சென்றபோது சிவப்பு உடை அணிந்து, சீனர்களைப் போல இருந்தவர்களால் சர்க்கஸுக்கு ஒத்ததான நிகழ்வு நடைபெற்றது. தளத்தில் நின்ற பார்வையாளருக்கு குளிர்பானம் வழங்கப்பட்டது.

அவற்றைச் சிறிது நேரம் பார்த்துவிட்டு மாடிகள் தோறும் உள்ள விற்பனை நிலையங்களைப் பார்வையிட்டுச் சென்றோம் எமக்கு தேவையான எவையேனும் கிடைக்கலாமென்று. நான்காவது மாடியில் இருந்த விற்பனை நிலையங்களில் ஐந்து சிறிய வானொலிகளையும், உடைகளின் மாறுபட்ட வடிவமைப்பைக்கொண்ட இரண்டு புத்தகங்களையும் கொள்வனவுசெய்து கொண்டு, கீழே இறங்கி சுற்றாடலில் தெரிந்த கட்டடங்களின் அமைப்பை இரசித்தவாறு திரும்பினோம். நாம் மதியம் வரும்போது வாகனங்களால் நிரம்பியிருந்த தரிப்பிடம் இப்போது பாதிக்குமேல் வெறுமையாகி இருந்தது.

ஹொட்டலை அண்மித்த வடக்குப் பக்க வீதியில் சிறியதும் பெரியதுமான கடைகள் இருந்தது கண்டு, உலர் சிற்றுண்டிகள் சிலவற்றை கொள்வனவு செய்தோம். பால் போன்ற வெண்மையில் கண்ணைக் குத்தியது குவியலாய்க் கிடந்த கசுக்கொட்டை. விலை குறைவாக இருந்ததால் அதனில் 2 கிலோவும், சில பானங்களையும் கொள்வனவு செய்தோம்.

எடுத்த பொருட்களின் மொத்தப் பெறுமதியை விற்பனையாளர் கணக்கிட்டதைப் பார்க்கையில் ஆச்சரியமாக இருந்தது. சிறுவர்கள் எண்ணிக்கை கற்பதற்கு மற்றும் விளையாடுவதற்கு வீடுகளில் பயன்படுத்தப்படும் பொருளைக்கொண்டு கணக்குப் பார்த்தான் விற்பனையாளன். அதாவது சிறிய பலகைச் சட்டத்தை சதுரப் பிறேமாக இணைத்து அதனுள்ளே பத்து நிரையில் சற்று கனமான கம்பிகள் பொருத்தி, உருண்டையான சிறிய விதை அல்லது மரம் மற்றும் பிளாஸ்ரிக்கில் உருண்டையாய்ச் செய்யப்பட்டவற்றின் மத்தியில் துளையிட்டு ஒவ்வொரு கம்பியிலும் பத்து உருண்டைகள் வீதம் கோர்த்து விடப்பட்டிருக்கும். ஒவ்வொரு கம்பியிலுள்ள விதைகளுக்கும் வெவ்வேறு வர்ணம் தீட்டியிருப்பார்கள். சிறுவர்கள் விதைகளை நகர்த்தி எண்ணிக்கையைக் கற்றுக்கொள்வார்கள்.

அதுபோன்ற வர்ணம் தீட்டப்படாத ஒன்றைப் பயன்படுத்தி வித்தை காட்டுவதுபோல் நாம் எடுத்த பொருட்களின் மொத்த விலையைக் கணக்கிடுவதற்காக கை விரல்களை விரைவாக அசைத்து காய்களை மாறிமாறி நகர்த்தி இறுதியில் மொத்தப் பெறுமதியைக் கூறினான். எடுத்ததற்கெல்லாம் கணக்கிடும் இயந்திரத்தை பயன்படுத்தும் இந்நாளில் இந்த பழமையான முறை பயன்படுத்தப்படுவதை வியப்புடன் பார்த்து வெளியேறினோம். இருள்மங்கும்

நேரமென்பதால் வேறு இடம் செல்ல விரும்பாமல் வெறுமையாகிவிட்ட வாகனத் தரிப்பிடத்தை நோக்கியபடி ஹொட்டலுக்குச் சென்றோம்.

வாகனத் தரிப்பிடம்

இரவு 8.00 மணியளவில் உணவு அருந்துவதற்காக வெளியே வந்தோம். 6.00 மணியளவில் வெறுமையாய்த் தெரிந்த பிரமாண்டமான வாகனத் தரிப்பிடம் முற்றிலும் தீபங்களின் ஒளியால் நிறைந்து காணப்பட்டது. அழகாய்த் தெரிந்த தீபங்களின் ஒளியில் ஆட்கள் நடமாட்டம் தெரிந்ததால் அதனைப் பார்வையிடும் நோக்குடன் அங்கு சென்றோம்.

உந்துருளி சக்கரங்கள் நான்கு பூட்டப்பட்ட திறந்த வண்டில்கள், ஆட்கள் சென்றுவரக்கூடிய சிறிய நடைபாதைகள் விட்டு நிரையாக விடப் பட்டிருந்தன. ஒவ்வொரு வண்டிலும் ஒவ்வொரு தீபத்தை ஏந்தியவாறு நூற்றுக்கும் மேற்பட வண்டில்கள் காணப்பட்டன. அவ்வண்டில்களில் உணவு வகைகள் சுடச்சுட விற்பனை செய்யப்பட்டன. ஆட்களும் குறைவில்லை.

ஒவ்வொரு வண்டிலையும் சூழ நின்று பலர் உணவு பெற்றுக் கொள்வ தைக் காணக்கூடியதாக இருந்தது. அனைத்து வண்டில்களிலுமிருந்து எழும் உணவுகளின் வாசனை, எரியும் தீபத்தின் புகை மணம் இணைந்து புதுவகை மணத்தைக் கொடுத்ததால் எமக்கு ஏற்புடையதாக இருக்கவில்லை. அதனால் அங்கிருந்து விலகிச் சென்றோம். மிகக் குறுகிய நேரத்தில் இத்தனை வண்டில் களும் எங்கிருந்து வந்து ஒன்றிணைந்தன என்பதை அறிய முடியாமல் குழம்பியவாறே சென்றோம்.

மறுநாள் மதியம்வரை ஹொட்டலிலே தங்கியிருந்து மீண்டும் அவ்விடங்களைச் சுற்றிப் பார்த்து உணவு அருந்திய பின்னர் சிங்கப்பூர் செல்வதற்காக ஜெகூர் குடிவரவு குடியகல்வு காரியாலயம் சென்றோம். அங்கு நுழைவுப் பாதை பூட்டப்பட்டிருந்தது. பேருந்தில் வருபவர்கள் குடிவரவு குடியகல்வு காரியாலயத்தினுள் இறக்கப்பட்டனர். அங்கு நின்றவர்களிடம் விசாரித்தபோது பேருந்து தரிப்பிடத்திலிருந்து பேருந்தில் வருபவர்கள் மட்டுமே நுழையமுடியும் என அறிந்துகொண்டோம். உடனே அலுவல கத்திலிருந்து வெளியேறிய பேருந்தில் ஏறி தரிப்பிடம் வரை சென்று, அங்கி ருந்து திரும்பிவந்து அலுவலகத்தில் பதிவுகளை மேற்கொண்டோம்.

அந்தத் துறையிலிருந்து பிறிதொரு பேருந்தில் ஏற்றப்பட்டு சிங்கப்பூர் குடிவரவு குடியகல்வு மற்றும் சுங்கக் காரியாலயத்தில் இறக்கப்பட்டோம். அங்கு பதிவுகளை மேற்கொண்டு 15 நாட்கள் விசா வழங்கினார்கள். அதனைப் பெற்றுக்கொண்டு ஜூரோங் செல்லும் பேருந்தில் எமது பயணத்தைத் தொடர்ந்தோம். ■

நோர்வே

(1995, 2014)



ஐரோப்பாவில் 'ஸ்கன்டிநேவிய தீபகற்ப'த்தின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ளது நோர்வே. 'ஆர்க்டிக் பெருங்கடல்', 'நோர்வே கடல்', 'வடகடல்' என்பவற்றுடன் சுவீடன், பின்லாந்து, இரசியா ஆகிய நாடு களுடன் நில எல்லைகளையும் கொண்டுள்ளது. அகலம் குறைந்த நீளமான வடித்தையுடைய இந்நாட்டின் நீளமான கரையோரப் பகுதிகள் வட அட்லாண்டிக் பெருங்கடலை நோக்கியதாக இருக்கிறது.

உலகிலேயே மிக நீண்ட கடற்கரையைக்கொண்ட நோர்வேயின் மொத்தப் பரப்பளவு 385,199 சதுர கி.மீ. ஆகும். இதனுள் 'சுவால்பாத்' 61,020 ச.கி.மீ), 'சான்மேயின்' (377 ச.கி.மீ) ஆகிய தீவுகளும் அடங்கும். அதிகளவு கடல்நீரேரிகளை கொண்டுள்ள இந்நாட்டில் 3/5 பங்கு மலைகளும், 1/4 பங்கு காடுகளும் உள்ளன. கிட்டத்தட்ட 25,000 கி.மீ. நீளமான கடற்கரையானது பல தீவுகளையும், கடல்நீரேரிகளையும் உள்ளடக்கியிருக்கிறது. தீவுகளின் கடற்கரையானது கிட்டத்தட்ட 5,800 கி.மீ. நீளமாக உள்ளது.

இயற்கைவாயு, உருக்கு, செம்பு, துத்தநாகம், நிலக்கரி, பெற்றோ லியம், மீனினம் என்பவற்றை வளங்களாகக் கொண்டுள்ளது. மொத்த வருமானத்தில் 33% பெற்றோலியம், 24% பெற்றோலிய வாயுக்களைக் கொண் டுள்ளது. அடுத்தது மின்பிடியாகும். பாவனைக்குப் பயன்படும் நீர் பனிப்பறை களிலிருந்து பெறப்படும் நீராகையால் மிகவும் சுவையாக உள்ளது. நாட்டின் தேவைக்கு மீறிய மின்சாரம் உற்பத்தியாகிறது. அனைத்து வளங்களிலிருந்தும் பெறப்படும் பயன்கள் தனது அன்றாடத் தேவைக்கும், நீண்டகாலத் தேவைக் குமான சேமிப்புகள் தவிர்த்தே ஏற்றுமதி செய்யப்படுகிறது.

நோர்வேயில் 19 மாவட்டங்கள் உள்ளன. முடியாட்சி நாடான இங்கு 'நோர்வே', 'பூக்மோல்', 'நீநொர்ஸ்க்' ஆகியவை ஆட்சி மொழிகளாக உள்ளன. மேலும் ஆறு நகரங்களில் 'சாமி' மொழியும், ஒரு நகரில் 'பின்லாந்து' மொழியும் இணையாட்சி மொழிகளாகும். மன்னரை முதன்மையானவராகக் கொண்ட நாடாளுமன்றம் இயங்குகின்றது.

நள்ளிரவில் சூரியன் உதிக்கும் நாடாகவும், வடமுனையில் ஒளியின்

அழகைக் காணக்கூடிய நாடுகளில் ஒன்றாகவும் விளங்கும் நோர்வேயில், பல்வேறு நாடுகளைச் சேர்ந்தவர்கள் புலம்பெயர்ந்து வாழ்கிறார்கள். இவர்கள் மொத்த மக்கள் தொகையில் 11.5% ஆகும். உலக நாடுகளுடன் ஒப்பிடுகையில் குறைந்த மக்களே வசிக்கிறார்கள்.

சமாதான செயற்பாடுகளில் அக்கறைகொண்ட இந்நாடு, இலங்கையில் 2002 - 2006 காலகட்டத்தில் விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை இராணுவத்துக்கும் போர் நிறுத்தம் ஏற்பட்டு அமைதிப் பேச்சுவார்த்தைகள் நடந்தபோது அதில் நடுவராகப் பணியாற்றியமை குறிப்பிடத்தக்கது.

இத்தகை சிறப்புமிக்க நோர்வேக்கு 1995 மற்றும் 2014 ஆம் ஆண்டு களில் பயணித்துள்ளேன். எனது மைத்துனர் ஸ்ரனிஸ்லோஸ் என்பவரின் மகனது திருமுழுக்கு விழாவில் பங்குகொள்வதற்காக 1995இல் பயணித் திருந்தேன். அப்போது அவர் ஒஸ்லோ நகரத்தில் வசித்துவந்தார். 2014இல் ஓய்வுக்கான பயணத்தில் சென்றபோது அவர் புறநகர்ப் பகுதியில் வசித்து வந்தார். நான் அவருடனே தங்கியிருந்த காரணத்தால் தேவையின் நிமித்தம் முன்னர் பார்வையிட்ட இடங்களையும் பார்வையிடக்கூடியதாக இருந்தது. இவற்றின் தொகுப்பாகவே நோர்வே பயண அனுபவம் அமைகின்றது.

ஒஸ்லோ

ஸ்கன்டிநேவிய தொகுதியிலுள்ள நோர்வே நாட்டின் தலைநகர் இதுவாகும். முன்னாளில் கிறிஸ்தானியா என்ற பெயரால் அழைக்கப் பட்டதும் நெருக்கமான குடியிருப்புகளைக் கொண்டதுமான ஒஸ்லோ, நோர்வேயில் மிகப்பெரிய நகரமும் ஸ்கன்டிநேவிய நாடுகளிலுள்ள நகரங்களில் மூன்றாவது பெரிய நகரமுமாகும்.

கடல் வளத்தையும் தீவுகள் பலவற்றையும் தன்னகே கொண்ட இந்நகரம், புதிய யுகத்தை நோக்கிய வளர்ச்சியை இலக்காகக்கொண்டு ஆக்பூர்வமான செயற்பாடுகளில் ஈடுபடுகிறது. எப்போதும் சுறுசுறுப்பாகவே காணப்படும் நகரின மத்திய பகுதிக்குள் நுழையும் வாகனங்கள் வரி செலுத்தியே செல்லவேண்டும்.

முக்கிய மையங்களை தன்னுள் கொண்டிருந்தபோதும், முன்னர் ஒஸ்லோவில் இருந்த வானூர்தி நிலையம் சர்வதேச வானூர்தி நிலையமாக தரமுயர்த்தப்பட்டு புறநகரில் இயங்குகின்றது. இருப்பினும் ஒஸ்லோ வானூர்தி நிலையம் என்றே அது அழைக்கப்படுகிறது.

ஒஸ்லோ அரச மாளிகை

தனது சொந்த நாடான நோர்வேயில் மூன்றாம் சார்லஸ் ஜோண் என்பவன் 1814ஆம் ஆண்டில் மன்னனாக மகுடம் சூட்டிக்கொண்டான். அவனது ஆட்சிக் காலத்தில் 1825ஆம் ஆண்டு அடித்தளமிட ப்பட்டுக் கட்டப்பட்டதே ஒஸ்லோ அரச மாளிகையாகும். நிதித் தட்டுப்பாடு

காரணமாக இடையில் தடைப்பட்டு சில ஆண்டுகளின் பின்னர் மீண்டும் கட்டுமானப்பணி தொடங்கியது. 1844இல் மூன்றாம் சார்லஸ் ஜோண் மன்னன் இறந்தான். 173 அறைகளைக் கொண்ட தனது மாளிகையில் நான்கு வருடங் கள் மட்டும் வசிக்கும் மகிழ்ச்சியே அவனுக்கு இருந்தது.

தற்போது மக்களாட்சி நடைபெறுகின்றபோதும் முடியாட்சி கால மன்னரின் வாரிசான ஐந்தாம் ஹரால்ட் மன்னரின் செல்வாக்கும் பிரசன்னமும் நோர்வே அரசின் செயற்பாடுகளில் முதன்மையாக உள்ளன. ஐக்கிய இராச் சியத்தின் ஆட்சிமுறையே இங்கும் நடைமுறையிலுள்ளது. இவரது உத்தி யோகபூர்வ அலுவலகம் இதுவாகும். வசிப்பிடம் பிறிதொரு இடத்தில் இருக்கிறது.

வீதியிலிருந்து கணிசமான தூரம் உள்ள சமதரையில் இந்த அரண் மனை அமைந்திருக்கின்றது. மூன்று அடுக்குகளைக்கொண்ட தனித்துவம்மிக்க பிரமாண்டமான மாளிகையாகும். அரண்மனையின் முன் ஆடாமல், அசை யாமல், கண் இமைக்காமல் நிற்கும் காவலரைக் காணக் கூடியதாக இருந்தது. இவர்களை நெருங்கிச்சென்று பார்க்க பலரும் கூடுவர். அவர் களின் பணி முடிந்து மற்றவர் பொறுப்பேற்கும் நேரத்து மரபார்ந்த நிகழ்ச்சி நடைபெறு கையில் அதனைப் பார்ப்பதற் கென்றே பலர் காத்திருப்பர்.



இந்த அரண்மனை யிலிருந்து அழைத்துச் செல்லப் படும் மன்னர், வருட ஆரம்பத் தின் முதல் நாடாளுமன்ற நிகழ்வை ஆரம்பித்து வைப்பார். ஆண்டுதோறும் சுதந்திர தினமன்று (வைகாசி 17) மாளிகையில் ஆறு தூண்கள் தாங்கி நிற்கும் முன் முகப்பில் தோன்றி நாட்டு மக்களுக்கு வாழ்த்துத் தெரிவிப்பார். பொது மக்கள், ஊழியர்கள், பாடசாலை மாணவர்கள் எனப் பலரும் வரிசையாகச் சென்று கையசைத்துக் காண்பித்து மரியாதை செலுத்துவர். பான்ட் வாத்தியங்கள் முழங்க நடைபெறும் இந்நிகழ்வு சிறப்பாக இருக்குமாம். மாதத்தில் ஒரு தடவை அரண்மனையின் சில பகுதிகளைப் பார்வையிட பொதுமக்கள் அனுமதிக்கப்படுவார்களாம். நான் சென்ற சமயம் அனுமதிக்கப் படவில்லை.

ஒபேரா இல்லம்


ஒஸ்லோவின் மத்திய பகுதி 2017-2018களில் அமெரிக்க நகரங்களில் ஒன்றாகக் காட்சியளிக்க வேண்டுமென்ற திட்டத்திற்கு ஏற்ப புதிய மாடிக் குடியிருப்புகள், வர்த்தக நிலையங்கள், ஹொட்டல்கள் அமைக்கப்பட்டு

வருகின்றன. அந்தத் திட்டத்திற்கு அமைவாக கடற்கரையோரம் அமைக்கப் பட்டுள்ளதே 'ஒபேரா அரங்கு'.

நோர்வேயில் பிரசித்தி பெற்ற, பழமையாய்ந்த கூத்து வடிவம்தான் 'ஒபேரா'. ஒபேரா மேடையேற்றத்திற்காக முன்னர் சிறியதொரு அரங்கம் கட்டப்பட்டிருந்தது. அதற்கு மாற்றீடாகவே புதிய இடத்தில் கலைத் தொகுதியாக இவ்வரங்கம் கட்டப்பட்டது. சாய்வான வெள்ளைக் கோடுகளைக்கொண்ட தட்டையான பனிப்பாறை வடிவமாக இது காட்சி யளிக்கிறது. 38,500 ச.மீ. அளவையுடையது.

பார்வைக்கு இரண்டு கோணங்களாகத் தோன்றும் அரங்கின் வெளிப்புறம், வெண்மையான பளிங்கு மற்றும் கிரனைட் கற்கள் பதிக்கப் பட்டுள்ளன. உயரமான கண்ணாடி யன்னல்களால் கட்டடம் சூழப்பட்டி ருக்கிறது. 1300ஆம் ஆண்டுக்குரிய நோர்வே கலாசாரக் கட்டடமாக இது வடிவமைக்கப்பட்டுள்ளது என அறியக்கூடியதாக இருந்தது.

12.04.2008 அன்று மன்னரால் திறந்து வைக்கப் பட்ட இக்கட்டடம் பார்சிலோனாவில் உலக கட்ட டக் கலை விழாவில் கலாசாரப் பரிசை 2008இலும், ஐரோப்பிய ஒன்றியத்தின் நவீன கட்டடக் கலை விருதை 2009இலும் பெற்றுக்கொண்டமை குறிப் பிடத்தக்கது.



நாம் அங்கு சென்றது திங்கட்கிழமை என்பதால் பார்வையாளர் குறைவாக இருந்தனர். 'ஆக்கர் பிறிக்கே' துறைமுகக் கடல் நீர் மோதித் திரும்பும் பளிங்குத் தரையில் கால்வைக்க மகிழ்ச்சியாக இருந்து. தண்ணீர் அதற்கு அதிகபட்ச அழகைக் கொடுத்தது. கடல் நீரிலிருந்து மேற்தளம் வரை அரங்கின் இருபக்க வெளிகளிலும் பளிங்குக் கற்கள் பதிக்கப்பட்ட தரை சாய்வாக உயர்ந்து செல்கிறது. இடது பக்கத் தரையால் கூரையின் சமஅளவு உயரமான மேற்தளத்திற்கு நடந்துசென்றோம்.

தரையிலிருந்து மேல்நோக்கி அமைத்துள்ள 'கோணங்களில் கோணங் களாலான' தரையமைப்பின் தன்மையானது, நடந்து செல்பவர்கள் கடலோடு சேர்ந்த நீவுகளை, அதன் கரையோரம் மற்றும் கட்டடங்களைப் படிப்படி யாகப் பார்த்து இரசிக்கக்கூடியதாக இருந்தது. விசாலமான மேற்தளத்தில் நின்றவாறு நாலாபுறமும் ஒஸ்லோவின் அழகான காட்சிகளை அனுபவிக்கக் கூடியதாகவும் இருந்தது.

வலது பக்கம் சாய்வாக இறங்கிச் செல்லும் பழிங்குத் தரையில் நடப்பதற்குச் சிரமப்படுபவர்களுக்காக ஓரமாக படிக்கட்டுகளும் அமைத்துள்

ளார்கள். இறங்கிச் செல்லும்போது சூரிய ஒளியால் தெறிக்கும் பளிங்குக் கற்களின் ஒளி கண்களைக் கூசவே செய்தது. புதிதாக அமைக்கப்பட்டுள்ள உயர்ந்த கட்டடங்களால் அந்தப் பகுதி மேலும் அழகாக காட்சியளித்தது.

சாய்வு நிலங்கள் தவிர்ந்த அரங்கப் பகுதி சுவர்களால் மறைக்கப் பட்டுள்ளது. நுழைவாசலால் உள்ளே சென்றோம். அரைவட்ட வடிவில் காணப்பட்ட அரங்கிற்கு வெளியே பின்பக்கத்திற்கும் சுவருக்கும் இடையில் 'றெஸ்ரோறன்ற்', பல மலசலகூடங்கள், பார்வையாளர் அணிந்துவரும் மேலுறை உடைகள் (Jaket) தொங்க விடுவதற்கு ஏதுவாக பெருந்தொகையான கொக்கிகள் (Hanger) நிரையாகவும் பல பிரிவுகளாகவும் இருந்தன.

அரங்க வெளிச் சுவரை மறைத்து பலகைச் சட்டங்கள் பொருத்தப் பட்டிருந்தன. நாம் அங்கு சென்றபோது நிகழ்ச்சி இல்லாமையால் பணியாள னின் உதவியுடன் அரங்கினுள் நுழைந்து பார்வையிட்டோம். எமக்குக் காண்பிப்பதற்காக ஒளியேற்றினான் அந்தப் பணியாளன். முட்டை வடிவி லான பல மின்குமிழ்கள் அடங்கிய ஒரு சரவிளக்கு மையக் கூரையிலிருந்து ஒளியைப் பாச்சியது. இந்த ஒளியில் அரங்கின் உள்பகுதியை முற்றிலும் பார்க்கக்கூடியதாக இருந்து.

அரங்கின் பின்பக்கம் அரைவட்ட வடிவிலமைந்து நான்கு மாடங் களில் இருக்கைகளைக் கொண்டுள்ளது. பின்பக்க அரைவட்ட வடிவில் தொடங்கி பாரிய மேடையின் இரு கரையோரமும் நோக்கியதாக வளைந்து செல்கின்றது. இந்த மாடங்களிலும் பல சிறிய மின்குமிழ்கள் இருப்பதாக அந்தப் பணியாளன் குறிப்பிட்டான்.

அரங்க உள்பக்க மறைப்பு சுருக்கிவிடப்பட்ட திரைச்சீலை போன்ற அமைப்பில் அலுமினியத்தால் செய்யப்பட்டுள்ளது. குவிந்து தொங்குவது போன்ற கூரையின் அமைப்பு மிகவும் அழகாயிருந்தது. அரங்கத் தொகுதியில் 1,100 அறைகள் இரண்டு செயல்திறன் வெளிகள் தவிர 1,964 இருக்கைகள் உள்ளன.

அற்புதமானது மட்டுமல்ல அவசியம் பார்க்கவேண்டியதுமான இந்த கலைத் தொகுதியைப் பார்வையிட்டதால் அன்றைய பொழுது மகிழ்வாக இருந்தது.

அமைதிக்கான நோபல் மையம்


ஓஸ்லோவின் மையப் பகுதியில் ஆக்கர் பிறிக்கே மீன்பிடி மற்றும் பயணிகள் துறைமுகத்திற்கு முன்பாக உள்ள பெரியதொரு கட்டடத்தில் 'அமைதிக்கான நோபல் மையம்' இருக்கின்றது. 2005ஆம் ஆண்டின் பின்னர் தான் இந்தக் கட்டடத்தில் இயங்குகின்றது இம்மையம். நுழைவுக்கான கட்டணத்தைச் செலுத்தி நுழைந்தோம்.

உலக உருண்டைபோன்ற பாரிய கண்ணாடி உருண்டை வருவோரை வரவேற்றது. முன் மண்டபம் நிறையவே தகவல்கள், வரைபடங்கள், நிழற்

படங்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. கணிசமான பார்வையாளர் வழிகாட்டியின் உதவியுடன் பார்வையிட்டுச் சென்றனர். நாம் சுயமாகவே சென்றோம்.

இப்பகுதி தவிர்ந்த ஏனைய இடங்களெல்லாம் நோபல் பரிசு சார்ந்த தகவல்கள் மற்றும் பரிசு பெற்றவர் படங்களும் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. ஒரு தளத்தில் 50இற்கும் மேற்பட்ட சிறியரக தொலைக்காட்சிகளில் 1901 முதல் நோபல் பரிசு பெற்றவர் பற்றிய விபரங்களும், பரிசு வழங்கிய தற்கான காரணங்களும் தொடராக ஒளிபரப்பிக் கொண்டேயிருந்தன. பார்வையாளர் தனித்தனியாகப் பார்வையிடலாம்.

சுவீடனின் இரசாயனவியலாளரும், டைனமற்றினைக் கண்டுபிடித்தவரும், தொழிலதிபருமான அல்பிரட் நோபல் (Alfred Nobel) அவர்களால் நிறுவப்பட்டதே நோபல் பரிசு ஆகும். இப்பரிசு பௌதிகவியல், இரசாயனவியல், மருத்துவம், இலக்கியம், அமைதி ஆகிய துறைகளில் சிறப்புநிலை அடைவோருக்கு வழங்கப்படுகிறது. இவற்றில் அமைதிப் பரிசுக்கான அவரது உயிலில் பின்வரும் குறிப்புக் காணப்படுகிறது:



"யாரொருவர் நாடுகளிடையே சகோதரத்துவத்தை வளர்க்க சிறந்த முயற்சி எடுப்பவரோ, நிலவும் இராணுவத்தினை நீக்கவோ அல்லது குறைக்கவோ முயற்சி எடுத்தவரோ, அமைதி மாநாடுகள் நிகழ காரணமாய் இருக்கிறாரோ அவருக்குக் கொடுக்கப்பட வேண்டும்".

இந்த உயிலின்படி இப்பரிசை நோர்வே நாடாளுமன்றம் தேர்ந்தெடுத்த ஐவர் குழு தீர்மானிக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் நோபலின் நினைவு நாளான டிசெம்பர் 10 அன்று நோர்வே தலைநகர் ஒஸ்லோவில், நோர்வே நாட்டு மன்னர் முன்னிலையில் இப்பரிசு வழங்கப்படுகிறது. ஏனைய நான்கு பரிசுகளும் சுவீடனில் வழங்கப்படுகிறது.

நோபல் பரிசு பெறுபவருக்கு நோர்வே பாராளுமன்றக் குழுவின் தலைவரிடமிருந்து ஒரு பட்டயமும், ஒரு அடையாளப் பதக்கமும், பரிசுப் பணத்தை உறுதிசெய்யும் ஆவணமும் வழங்கப்படுகிறது. அமைதிப் பரிசு பெற்ற சிலரது தெரிவுகள் பற்றிய விமர்சனங்கள் எழுந்துள்ளதை அறியக்கூடியதாகவும் இருந்தது.

ஃபிறடிறிக் பெசீ (Frederic Passy) மற்றும் ஜீன் ஹென்றி டெனாட் (Jean Henri Dunant) ஆகிய இருவருமே 1901ஆம் ஆண்டு முதலாவது அமைதிக்கான நோபல்பரிசு பெற்றவர்களாவர். யுத்தங்கள் மற்றும் வேறு

காரணிகளால் இடையிடையே 19 ஆண்டுகள் நோபல் பரிசு வழங்கப்பட வில்லை. 1901-2013 வரை நோபல் பரிசு பெற்றவர்கள் 126 பேர். சில ஆண்டு களில் இருவரும் பெற்றுள்ளனர்.


வெடிமருந்து உற்பத்தி செய்யும் தொழிலக உரிமையாளரான சுவீடன் நாட்டைச் சேர்ந்த நோபல் என்பவர் விபத்தில் இறந்துவிட்டதாக வெளியான தகவலை அறிந்த மக்கள் அவரது இறப்பை வீதிகளெல்லாம் வெடி கொழுத்தி கொண்டாடினர். சந்தர்ப்பவசத்தால் அவர் உயிராபத்திலிருந்து தப்பிவிட்டார். சுகமடைந்த பின்னர் அத்தொழிற்சாலையின் முக்கிய இயந்திரங்களை அழித்துவிட்டு, அந்த இடத்தையும் கட்டடத்தையும் விற்பனைசெய்து பெற்ற பணத்தையே நோபல் பரிசுக்கென ஒப்படைத்தார் என அறியப்பட்டபோதும்;

தான் இறந்துவிட்டதை மக்கள் வெடிகொழுத்திக் கொண்டாடியதை அறிந்த அவர், தான் செய்யும் வெடிமருந்து உற்பத்தி தொழிலால் மக்கள் பாதிக் கப்படுவதால்தான் அவர்கள் அதை விரும்பவில்லையென உணர்ந்தே இவ்வாறு செய்ததாகச் சிலரும், நோபல் இறந்த தகவல் வெளியானதும் அவரது தொழிலை விமாசித்து 'கொடியோனின் இறப்பு' என்னும் பொருளில் இத்தாலிய நாட்டுப் பத்திரிகை ஒன்றில் வெளியான கட்டுரைப் படித்தே இந்த முடிவுக்கு வந்ததாகச் சிலரும் கூறுகிறார்கள்.

விக்லாண்ட் பூங்கா (Vigeland Park)

ஓஸ்லோவில் பிறக்னர் (Frogner) நகரில் பாலங்கள், நீரூற்றுகள், நீச்சல் தடாகம், சிறுவர் விளையாட்டு மைதான ஸ்ரேடியம் போன்றவற்றுடன் அமைந்துள்ள பிரமாண்டமான பூங்காவாக 'பிறக்னர் பூங்கா' அமைந்துள்ளது. இதன் ஒரு பகுதியில் பின்நாளில் அமைக்கப்பட்டதே சிற்பங்கள் நிறைந்த 'விக்லாண்ட் பூங்கா'.

குவாட்டவ் என்னும் கலைஞன் மூலம் உருவாக்கப்பட்ட உலகில் மிகப்பெரிய சிற்பப் பூங்காவாக விக்லான்ட் பூங்கா உள்ளது. கலாசாரச் சின்னமாக அறிவிக்கப்பட்ட இது, பிரபலமான சுற்றுலாத் தலங்களில் ஒன்று. தமிழ் மக்களால் 'உரிஞ்சான்குண்டி பாக்' என அழைக்கப்படும் இப்பூங்காவை தினந்தினம் பல்லாயிரம் மக்கள் தரிசித்து செல்வர்.



1939 - 1949 இடையில் அமைக்கப்பட்ட இப்பூங்கா வில், வெண்கலம் மற்றும் கிரைனட் கற்களால் செய்யப் பட்ட ஆண், பெண், சிறுவர் களின் நிர்வாணச் சிற்பங்கள் தனித்தும் தொகுதியாகவும் மூன்று பிரிவுகளாக உள்ளன.



முதலாவது பிரிவாக 100 மீ. தூரமும், 15 மீ. அகலமுமான பாலத்தின் இருபக்கமும் 212 சிற்பங்கள் வைக்கப்பட்டுள்ளன.

மல்யுத்தம், நடனம், கட்டியணைத்தல், கைகளை இணைத்தல், குழந்தைகள் கும்பலாக ஒரு ஆணுடன் சண்டையிடல் போன்ற பல்வேறு மனித துரத்தியில் (Human pursuits) ஈடுபடும் மக்களைச் சித்தரிக்கிறது. இவை மனிதர்களுடைய வாழ்க்கை தொட்டிலிலிருந்து கல்லறைவரை சந்தோஷத்தின் மூலமும் கவலை, கனவு, கற்பனை, நம்பிக்கையின் முடிவில்லாத அனுபவத்தின் மூலமும் நிகழ்கின்ற மனித பயணத்தைக் குறிப்பதுடன் நான்குபேரை ஒரு மாலையாகச் சித்தரிக்கும் சிற்பம் நல்லிணக்கத்தையும் குறிக்கிறது. இவற்றில் மிகப் பிரபலமான சிற்பங்களில் ஒன்றாக கோபங்கொண்ட சிறுவனின் சிற்பம் உள்ளது. அதைச் சுற்றி இடைவெளியின்றி பார்வையாளர் நிற்பதைக் காணலாம். ஏற்கெனவே இச்சிலை இரண்டு தடவைகள் திருடப்பட்டு பின்னர் கண்டுபிடித்து வைக்கப்பட்டு தகுந்த பாதுகாப்பு அளிக்கப் பட்டுள்ளது.

இரண்டாவது பிரிவாக, சுற்றிவர 60 சிற்பங்களால் அலங்கரிக்கப் பட்ட வட்டமான பல மரங்களில் தொங்கும் குழந்தைகள், மரத்தை சுற்றி அணைக்கும் மனிதர்கள் மற்றும் எலும்புக்கூடுகள் மரணத்தைக் குறிக்கிறது. நடுவில் ஆறு மனிதர்கள் தாங்கிய பெரியதொரு பேழையிலிருந்து வடிந்து வரும் நீரூற்று புதிய வாழ்க்கை வருகின்றது எனக் கூறுகிறது.

மூன்றாவது பிரிவாக, 14 மீ. உயரத்தில் வானோங்கி நிற்கும் கோபுரத்தில் 121 மனித புள்ளி விபரங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இது கிரைனட் பாறையில் செதுக்கப்பட்டுள்ளது. ஆன்மீகம், தெய்வீகம், நெருக்கமான மனித



ஆசை இரட்சிப்பை நோக்கிக் கொண்டுவரப்படுகிறது என்பதை உணர்த்துகின்றது. ஒருவரையொருவர் தழுவிய வாறு அமைக்கப்பட்டுள்ள மனித புள்ளி விபரங்கள் ஒற்றுமையின் உண்மையை வெளிப்படுத்தின.


கோபுரம் அமைக்கப் பட்டிருக்கும் மேடையை

நோக்கிச் செல்லும் படிக்கட்டுகளில் மூலைக்கு மூன்று சிற்பத் தொகுதிகளாக எட்டு மூலைகளிலும் அமைக்கப்பட்டிருக்கும் சிற்பத் தொகுதிகள் மனித வாழ்வின் தடங்களை உணர்த்துகின்றன. பொதுவாக பூங்காவின் ஒட்டு மொத்த சிற்ப அமைப்புகளையும் நோக்கின் நித்தியத்தைக் குறிப்பதாக உணர முடிகிறது.

நினைவு சின்னம்

22.07.2011 அன்று, அமைதியை விரும்பும் நோர்வே நாட்டை உலுப்பிய குண்டு வெடிப்பு நிகழ்ந்த இடத்தைப் பார்வையிட்டேன். அவ்விடத்திலிருந்து 10 மீ. தொலைவில் பிரதமரின் அலுவலகம் உள்ளது. வலது பக்கம் அதேயளவு தூரத்தில் பிரமாண்டமான பொது நூலகம் இருக்கின்றது.

இரண்டு கட்டடங்களுக்கும் இடையிலிருந்த வாகனத் தரிப்பிடத்தில் நின்ற வாகனமொன்றில் வைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்ததில் 20இற்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர். சுற்றாடல் ஹொட்டல்கள் மற்றும் குடியிருப்புக் கட்டடங்கள் பலவும் சேதமடைந்தன.



இந்தக் குண்டுத் தாக்குதல் எதையும், எவரையும் இலக்கு வைத்துத் தாக்கப்பட்டதல்ல. காவல்துறையை திசை திருப்பும் நோக்கத்திலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதை ஒருமணி நேரத்தின் பின்னரே காவல்துறையும், நாடும் அறிந்தது.

குண்டுத் தாக்குதல் நடந்த இடத்திற்குச் சற்றுத் தொலைவில் ஆக்கர் பிறிக்கே துறைமுகத்திலிருந்து ஒரு கி.மீ. தூரத்திலுள்ள 'யுக்டோயா' தீவில் இளையோருக்கான கோடைகால முகாம் நடைபெற்றது. நோர்வேயில் வசிக்கும் பன்னாட்டைச் சேர்ந்தவர்களும் அதில் பங்கு கொண்டிருந்தனர். குண்டு வெடிப்பு பற்றிய தகவலை அறிந்ததால் அச்சத்தில் அங்கு நின்ற இளையோர். அவ்வேளை, படகில் வந்திறங்கிய ஆயுதம் ஏந்திய இராணுவச் சிப்பாய் இளையோரை நோக்கி, "குண்டு வெடித்ததால் உங்களைப் பாதுகாக்க வந்திருக்கிறேன் வாருங்கள்" என அழைத்தான்.

அச்சத்தில் மூழ்கியிருந்த இளையோர், அவன் கூறியதை ஏற்று அவனை நெருங்கிச் சென்றனர். அடுத்த கணம், அவனது கையிலிருந்த தானியங்கித் துப்பாக்கி இயங்கத் தொடங்கியது. தேடிச்சென்ற இளையோரை நோக்கி துப்பாக்கிச் சன்னங்கள் சீறிவந்தன. அடுக்கடுக்காய் பலர் சுருண்டு விழுந்தனர். தப்பிக்க ஓடியவர்களும் சுடப்பட்டனர். தம்மைக் காப்பாற்ற

குளிரான அந்தக் கடலிலும் சிலர் குதித்தனர். காயமடைந்தவர்களும் இறுதித் தெரிவாகக் கடலில் குதித்தனர். இதைக் கண்ணுற்றுத் தம்மைச் சுதாரித்துக் கொண்ட படகோட்டிகளும் படகுகளில் இருந்தவர்களும் தமது உயிரையும் பொருட்படுத்தாது விரைந்து வந்து கடலில் குதித்து வீழ்ந்தவர்களை காப்பாற்றும் பணியில் ஈடுபட்டனர்.

துப்பாக்கிதாரியின் எண்ணம் நிறைவேறியதுபோல துப்பாக்கிச் சத்தம் ஓய்ந்தது. ஆனால், அப்பகுதி யுத்தகளமாகவே காணப்பட்டது. நினைத்ததை வென்றெடுத்த பூரிப்பில் கம்பீரமாக நின்றான் அந்த இராணுவ உடையில் நின்ற துப்பாக்கிதாரி 'அன்டன் பிக்ரிங் பிரீவிக்'.

குண்டு வெடிப்பு நிகழ்ந்த பிரதமரின் அலுவலகப் பகுதியில் கண் காணிப்பில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் தீவில் நிகழ்ந்த கொடுமையை அறிந்ததும் விரைந்து வந்ததால் துப்பாக்கிதாரி சுற்றிவளைக்கப்பட்டு கைது செய்யப்பட்டான்.

60 இளையோர் அவ்விடத்திலேயே கொல்லப்பட்டனர். காய மடைந்த பலர் காப்பாற்றப்பட்டனர். கடலில் வீழ்ந்தவர்களும் காப்பாற்றப் பட்டனர். இவர்களுள் இலங்கைத் தமிழ் யுவதியான ஹம்சாஜினி கடலி லிருந்து மீட்கப்பட்டு நலமுடன் இருக்கிறாள். இவ்வாண்டு இவள் ஒஸ்லோ வின் உதவி மேயராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கொல்மன்கொலன் பனிச்சறுக்கல் (Holmenkollen Ski Jump)

நோர்வே, கொல்மன்கொலன் பேக்கன் மலையில் உள்ளது கொல்மன்கொலன் பனிச்சறுக்கல். 1830ஆம் ஆண்டு அம்மலையில் இயற்கையாக அமைந்திருந்த மேடையில் பனிச்சறுக்கல் நடைபெற்றது. அப்போது 21.5 மீ. நீளமான பனிச்சறுக்கு மேடையையே கொண்டிருந்தது. அன்று முதல் அங்கு பனிச்சறுக்கு விளையாட்டுகள் நடைபெற்று வருகிறன. 1914 முதல் மலையோடு இணைந்தாற்போல் செயற்கையான பனிச்சறுக்கு மேடை அமைக்கப்பட்டது. இம்மேடை படிப்படியாக மாற்றம் செய்யப்பட்டு தற்போது 141 மீ. பனிச்சறுக்கு மேடையைக் கொண்டு உலகில் மிக நவீன பனிச்சறுக்கு மேடையுள்ள மலையாக விளங்குகிறது.



இம்மலையில் 1879 முதல் நோர்வே நாட்டின் பனிச்சறுக்கல் விழா நடந்துள் ளது. 1930ஆம் ஆண்டு குளிர் கால ஒலிம்பிக் பனிச்சறுக்கல் போட்டி நடைபெற்றுள்ளது. இதன்போது பனிச்சறுக்கு மேடை 35 மீற்றர் நீளமுள்ள

தாகவே இருந்துள்ளது. பின்னர் நான்கு தடவைகள் குளிர்கால ஒலிம்பிக் பனிச்சறுக்கல் போட்டிகள் நடைபெற்றதுடன் 1980 முதல் உலகக்கோப்பை மற்றும் நோர்டிக் ஒருங்கிணைந்த உலகக்கோப்பை பனிச்சறுக்கல் போட்டிகளுக்கான பகுதியாக விளங்குகின்றது போன்ற தகவல்களை அறியக்கூடியதாக இருந்தது.

நாம் அங்கு சென்றபோது வெயில் காலமென்பதால் பனிப்படிவுகளற்ற மேடையையும் மேடையின் அடியில் 30,000 இற்கு மேற்பட்ட பார்வையாளர் அமர்ந்து பார்வையிடக்கூடிய இருக்கைகளுக்கான படிக்கட்டுதளங்களையுமே பார்க்க முடிந்தது.

குளிர்காலம் தொடங்கியதும் பனிப் பொழிவுகளால் அப்பகுதி நிரம்பிவிடும். பார்வையாளர் பகுதியில் கிடக்கும் பனிப்பொழிவுகள் அகற்றப்படும். மேடை நெடுகிலும் மேலும் பனித்துகள்கள் கொட்டப்பட்டு இயந்திரங்கள் மூலம் ஒரே சீராக்கி உறுதியான பனிக்கட்டியாக ஆக்கப்படும். அதன் பின்னரே போட்டியாளர்கள் பங்குபற்றலாம்.

மேடையின் உச்சிவரை போட்டியாளர் செல்வதற்கு பாரந்தூக்கி பொருத்தப்பட்டுள்ளது. போட்டியாளர் தவிர்ந்த ஏனையோர் உச்சிவரை செல்ல முடியாது. அவர்களுக்கான பிறிதொரு பாரந்தூக்கியில் அல்லது படிகளால் சென்று நடுவிலுள்ள தளத்தில் இறங்கவேண்டும். அங்கே றெஸ்ரோறன்ஸ் வசதி உண்டு.

141 மீ. நீளமான மேடையின் உச்சியிலிருந்து, கால் பாதத்தில் பொருத்தப்பட்ட பனிச்சறுக்கல் தகட்டின் உதவியுடன் சறுக்கி வரும் போட்டியாளர் குறித்த பகுதிக்கு வந்ததும், வரும் வேகத்தால் உயர எழுந்து கணிசமான தூரம் சென்று விழுவர். ஒருவர் எவ்வளவு தூரம் சென்று விழுகிறார் என்பதிலேயே போட்டியின் வெற்றி தங்கியுள்ளது. எவ்வளவுக்கு உயர எழுகிறேரோ அவ்வளவுக்கு தூரமாய்ப் பாயமுடியும். கரணம் தப்பினால் மரணம் என்ற நிலைதான் இப்போட்டியிலும்.

ஆக்கர் பிறிக்கே துறைமுகம்


நான் பயணித்த இரண்டு தடவைகளும் மீண்டும் மீண்டும் பார்க்கத் தூண்டிய இடம் பழமையை வெளிப்படுத்துகின்ற பாய் நீரூர்திகள் தரித்து நிற்கும் ஆக்கர் பிறிக்கே துறைமுகமாகும். வாகன நெரிசல் காரணமாக ஒரு கி.மீ. தூரத்திற்கும் அப்பால் வாகனத்தை நிறுத்திவிட்டு குறுக்கு வீதியால் துறைமுகத்தின் மத்திய பகுதியை அடைந்தோம்.

துறைமுகம் நிரம்பியதுபோல் பாய் நீரூர்திகள், மீன்பிடி நீரூர்திகள், பாரிய மீன்படி படகுகள், பயணிகள் லோஞ்சிகள், சாதாரண படகுகள், றெஸ்ற்ரோறன்ஸ் படகுகள், அம்புலன்ஸ் படகுகள் எனப் பல காணப்பட்டன. சில போவதும் வருவதுமாக இருந்தன. நாங்கள் நின்ற இடத்திலிருந்து கடற் கலங்கள் பயணிக்கும் இடத்தை நோக்கியதும் கண்கள் அகல விரிந்தன.

கடலிலே முளைத்த சோலைத் திட்டிகளாக கண்ணுக்கெட்டிய தூரம்வரை ஆங்காங்கு தீவுகள். இவற்றுள் ஒன்றிலேதான் 22.07.2011இல் குண்டுத் தாக்குதல் இடம்பெற்றது.

குவிந்தும் பரந்தும் காணப்படும் மரம் - செடி - கொடிகள், அவற்றுக் குள்ளிருந்து எட்டிப் பார்க்கும் கட்டடங்கள், தீவுடன் இணைந்திருக்கும் படகுத் தரிப்பிடப் பாலங்கள், தீவுகளை ஒன்றுடனொன்று இணைய விடாது பிரித்து நிற்கும் கடல் நீரோடைகள், அவற்றில் பவனிவரும் சிறிய படகு முதல் பாரிய மீன்பிடி நீரூர்திகள் வரையான கடற்கலங்கள் அனைத்தும் அடி வானத்துடன் இணைந்து அழகோ அழகெனக் காட்சியளித்தது. அங்கிருந்து நகரவிடாமல் கண்களை வலிந்து இழுத்தது.

ஒருவாறாக விடுபட்டு திரும்பினால் பின்பக்கம் வீதிக்கு அப்பால் வானோக்கி உயர்ந்து, நீண்டு, அகன்ற சுவர்களை அரணாகக்கொண்ட பெரிய தொரு கோட்டை. அதன் மேற்தளத்தில் தீவுகளுடன் கடலை நோக்கியவாறு பல காவலரண்கள். பாதுகாப்பு, கடற்போக்குவரத்து, நீரூர்தித்துறை போன்ற வற்றை உள்ளடக்கிய கோட்டையாக, எதிரிகள் இலகுவில் நெருங்க முடியாத கோட்டையாக திட்டமிட்டு அமைக்கப் பட்டிருந்தது. கோட்டையினுள்ளே சிற்றாலயம் ஒன்று இருப்பதை அதன் முகப்பு உணர்த்தியது. இப்போது எவரது நடமாட்டமுமின்றி அமைதி பேணுகிறது இந்த மாபெரும் கோட்டை.



அரச குடும்பத்தினரின் கல்லறைகள் அங்கு உள்ளன. இறந்த அரசர் குடும்பத்தினரை அடக்கம் செய்யும் வேளையிலும், அடக்கம் செய்யப்பட்ட வர்களை நினைவுகூரும் நாள்களிலும் மட்டுமே கோட்டைக் கதவுகள் திறக்கப் பட்டு சம்பந்தப்பட்டவர்கள் நுழைய அனுமதிக்கப்படுவார்களாம்.

நான் விருப்புடன் பார்க்கவந்த பாய் நீரூர்திகள் மூன்று அந்தத் துறையில் தரித்து நின்றன. நெடுநேரமாக அவற்றை அங்கமங்கமாகப் பார்த்து மகிழ்ந்தேன். காற்றின் தன்மைக்கேற்ப பல சிறிய மற்றும் பெரிய பாய்களை ஏற்றியவாறு பயணிப்பதற்கு ஏதுவாக பாய்மரங்கள், சிறிய பாய்களைத் தாங்கும் குறுக்குக் கம்பங்கள் காணப்பட்டன. பிரதான உயர்ந்த பாய்மரத்தின் முனையிலிருந்தும் குறுக்குக் கம்பங்களின் முனையிலிருந்தும் கயிறுகள் விரிந்து நீரூர்தியின் தளத்திலும், தளத்துக்கு வெளியே நீண்ட வாறிருக்கும் கனமான கம்பங்களிலும் பொருத்தியிருப்பது பார்வைக்கு அழகாக இருந்தது. பழைமை யையைப் புதுமையாகச் செய்துள்ளார்கள். பார்ப்பதற்கு அழகாக இருந்தது.

நீண்ட கடல் எல்லையைக் கொண்ட நோர்வே நாட்டின் மரபுச் சின்னமாக பாய் நீரூர்தி காணப்படுகின்றது.



துறைமுகத்தில் தரித்து நிற்கும் பாரிய மீன்பிடி படகுகளில் விற்பனை செய்யப்படும் அவித்த இறால்களை வாங்கி, துறைமுகத்திற்கு முன்னாலிருந்த வெற்றுத் தரையில் அமர்ந்து சாப்பிடும்போது மகிழ்வாக இருந்ததுடன், மிகவும் சுவையாகவும் இருந்தது அவை.

ஆழ்கடல் மீன்பிடிப் படகுகள் ஒரு வாரத்திற்கு மேலாக கடலில் தங்கித் தொழில் செய்வதால், தினமும் பிடிபடும் இறால்களை 'ஸ்ரீமரில்' அவித்து, குளிரூட்டியில் வைத்து பாதுகாப்பார்கள். (படகில் இவற்றுக்குரிய வசதியுண்டு) அவித்த பின்னர் சிவப்பு நிறமாகக் மாறிவிடும் அவற்றை, நிறுவனங்கள் மொத்தமாக எடுத்துச் சென்றாலும் ஒரு பகுதியை படகில் வைத்திருந்து சில்லறையாக விற்பதில் அவர்கள் ஆனந்தமடைகிறார்கள். பலரும் குடும்பமாக, குழுக்களாக அமர்ந்திருந்து நம்மவர்கள் கச்சான் கடலை சாப்பிடுவதைப்போலச் சாப்பிட்டனர். சிலர் கொள்வனவு செய்து வீடுகளுக்கு எடுத்துச் சென்றனர்.

அங்கு தங்கியிருந்த நாட்களில் ஒஸ்லோ பல்கலைக்கழகம், ஒஸ்லோவின் மையப் பகுதியிலிருந்த விற்பனை நிலையங்கள், இலங்கைப் பொருட்களின் விற்பனை நிலையம், நோர்வே நாடாளுமன்றம் மற்றும் பல கட்டடங்கள் (பெயர் ஞாபகமில்லை) போன்றவற்றைப் பார்வையிட்டமை மனநிறைவைத் தந்தது.

நாடாளுமன்றத்தைப் பார்வையிட அண்மையாகச் சென்றபோது நாடாளுமன்ற அவை முடிந்து வெளியேறிய பிரதமரும் மேலும் நால்வரும் அரை கி.மீ. மேற்பட்ட துரத்திலிருந்த பாதாள தொடருந்து நிலையத்துக்கு மக்களோடு மக்களாக நடந்து செல்வதைக் காண்பித்தார் மைத்துனர். பெரும் ஆச்சரியத்தில் அவர்களைப் பார்த்த நான், இலங்கையை நினைத்துக் கொண்டேன்.

முற்கூட்டிய வீதி மறிப்பு, ஒலியெழுப்பியவாறு செல்லும் காவல்துறை வாகனங்கள், தொடராக கறுப்புக் கண்ணாடி மறைப்புகளை உடைய பல வாகனங்கள், வேறு பல வாகனங்களின் பவனியிலேயே மக்களவை பிரதானிகள் செல்வர். இந்த முன்மாதிரிகையை ஒவ்வொரு நாடும் பின்பற்றினால் தேவையற்று பணம் விரயமாவதைத் தவிர்க்க முடியும். ■

இத்தாலி

(1997)



தெற்கு ஐரோப்பாவிலுள்ள கால் பாதம் போன்ற தீபகற்பப் பகுதியைக் கொண்ட குடியரசு நாடே இத்தாலி. இத்தீபகற்பமானது மத்திய தரைக்கடல் பகுதிகளான சிசிலி, சர்ச்சைக்குரிய சார்டினியா, கோர்சிகா தீவுகளையும் கொண்டது. வடக்கே அல்ப்ஸ் மலைப்பகுதியில் பிரான்ஸ், சுவிற்சர்லாந்து, ஒஸ்ரியா, சிலவேனியா ஆகிய நாடுகள் எல்லைகளாக அமைந்துள்ளன.

தரைப்பகுதி 294,020 ச.கி.மீ. ஆகவும் தீவுகள் 7,210 ச.கி.மீ. ஆகவும் உள்ளன. 'வால்கமோனிகா பள்ளத்தாக்கு' இத்தாலியை நெடுங்கோடாக ஊடறுத்துச் செல்கிறது. 'வெண்மலை' (*Mont Blanc*) 4,810 மீ. உயரமுள்ள மலைப்பகுதியாகும். இது ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் உயரமான மலையாகும்.

சென் மரினோ, வத்திக்கான் நகர்கள் இத்தாலிய நிலப் பகுதிக்குள் தன்னாட்சியுடைய சுதந்திர இராச்சிய நிர்வாகப் பிரிவுகளாக அமைந்துள்ளன. இத்தாலிய தலைநகரான ரோம் நகரம் மேற்கத்தைய கலாசாரத்தின் வளர்ச்சியில் முக்கிய பங்காற்றியுள்ளது. 'பரோச்' என்றழைக்கப்படும் மேற்குலக கலாசாரம் 17ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் உரோம் நகரிலே ஆரம்பமானது.

நாடு முழுவதும் பல வட்டார வழக்குகள் உள்ளன. சிறுபான்மை யினரின் மொழிகள் அவர்கள் வசிக்கும் பகுதிகளில் ஆட்சி மொழிகளாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இத்தாலிய மொழியுடன் சிறுபான்மையினரின் மொழிகளிலும் கல்வி பயில வாய்ப்பு உள்ளது. இத்தாலி இருபது பிராந்தியங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இவற்றில் ஐந்து பிராந்தியங்களுக்குச் சிறப்பு அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளது.

வெனிஸ் (*Venice*), 117 சிறிய தீவுகளை உள்ளடக்கி இரும்புப் பாளங்கள் கொண்டு கடலில் அமைக்கப்பட்டதும் உலக அதிசயங்களில் ஒன்றாக இருந்ததுமான மிதக்கும் நகராகும். ஆலயம் உட்பட ஒரு நகருக்குத் தேவையான அனைத்து வசதிகளும் அங்கே இருக்கின்றன. வரலாற்றில் புகழ்

பெற்றதும் திரளான உல்லாசப் பயணிகளைக் கவரும் இடமாகவும் இந்நகரம் இருக்கின்றது. சிறிய வள்ளங்களில் பயணிகள் சுற்றிவரும் காட்சி மிக அழகானது.

இத்தாலியிலுள்ள புராதன பேராலயங்களில் பெரியதும் செங்கற் களாலான தூபிமாடத்தைக் கொண்டதுமான 'புளோறன்ஸ்' பேராலயம், உலக அதிசயங்களில் ஒன்றாக இருந்த பைசா நகரத்துச் சாய்ந்தகோபுரம், வத்திக்கான் நகரிலுள்ள புனித பேதுரு பேராலயம் போன்ற பல புராதன கட்டடங்களும், வரலாற்றுச் சான்றுகளும் நிறையவே அங்கு உள்ளன.

சிசிலி பிராந்தியத்தின் தலைநகரான பலெர்மோ நகருக்குச் செல்வதற் காக 1998 ஆவணி மாதம் தயாரானேன். விமானம் ரோமில் தரித்துச் செல்லு மென்பதால் ஒருநாள் அங்கு தங்கிச் செல்லும் ஏற்பாட்டுடன் புறப்பட்ட போதும் ரோமில் பகல் நேரம் 12 மணித்தியாலங்கள் மட்டுமே சென்று பார்வையிடக்கூடியதாக இருந்தது. எனது நண்பனுக்கு அறிமுகமான ஒருவரின் துணையுடன் பார்வையிடக்கூடிய சில இடங்களை மட்டும் விரைவாகவே பார்வையிட்டு வர முடிந்தது. அதனால் அவை பற்றிய சிறப்புகளை என்னால் சேகரிக்க முடியவில்லை.

ரோம் நகரில் கி.மு. 70-80 ஆண்டுகளில் கட்டப்பட்ட மாவட்ட அரங்கு (Colosseum), தற்போது பாதியளவு சேதமடைந்த நிலையில் காணப் படுகிறது. இக்கட்டடத்தை 'பென்ஹர்' படத்தில் பார்த்த ஞாபகம்.

ரோம் பிராந்தியத்திலுள்ள வத்திக்கான் நகரம் 44 கெக்ரர் (0.44 ச.கி.மீ.) நிலப்பரப்பையுடைய உலகின் மிகச் சிறிய நாடாகும். கத்தோலிக்க கிறிஸ்த வத்தின் தலைமை மையமான இதன் அரசியல் தலைவர் திருத்தந்தையாவர். அவரது அதிகாரபூர்வ உறைவிடமான திருத்தூதரக அரண்மனை மற்றும் புனித பேதுரு பேராலயம் போன்றவை அழகுற காட்சிதந்தன.

ரோமில் இருந்து புறப்பட்டு ரொறின்ரோ விமான நிலையத்தில் இறங்கி அங்கிருந்து சிறியரக விமானத்தில் சிசிலித் தீவுக்குப் பயணித்தேன்.

சிசிலித் தீவு

இது, கணிசமான குடியிருப்புகளைக் கொண்டதும், பிரபலமாகப் பேசப்பட்டதுமான தீவுமாகும். மத்தியதரைக் கடலிலுள்ள தீவுகளில் பெரியதும், சிறப்பு அதிகாரமுள்ள பிராந்தியங்களில் ஒன்றுமாகும். 25,708 கி.மீ. பரப்பளவைக் கொண்டது. இன்றைய நிலையில் இத்தாலியின் ஒரு பகுதியாக இருந்தாலும், முன்னர் முழுமையான விடுதலை பெற்ற நாடாக, சிசிலிப் பேரரசு என்ற பெயரில் இருந்துள்ளது. சிலகாலம் தெற்கு இத்தாலி, மோல்டா ஆகியவற்றின் பகுதியாக இருந்து, பின்னர் போர்பன்களின் ஆட்சியில் நேப்பில்ஸ் நகரில் இருந்து ஆளப்பட்டது. அதிலிருந்து இத்தாலியின் முழுமையான கட்டுப்பாட்டுக்குள் வந்தது சிசிலி. முன்னர்தொட்டு பலெர்மு நகரமே சிசிலித் தீவின் தலைநகரமாகும். சிசிலி -இத்தாலி தரைப் பயணத்திற்கு

தொங்குபாலமும், கடற் பயணத்திற்கு லோஞ்சி சேவைகளும் இடம் பெறுகின்றன.

அங்கு வாழும் மக்கள் தம்மைத் தனித்துவம் கொண்டவர்களாக கருதுகின்றார்கள். இத்தாலியன் என்று சொல்வதைவிட சிசிலியன் என்று சொல்வதில் பெருமையடைகிறார்கள். அவர்கள் தம்மைத்தாமே சிசிலியன் என்று சொல்லிக் கொள்வதில் பெருமிதம் கொள்ளுகின்றபோதும் ஏனைய பிராந்திய மக்கள் மத்தியில் மதிப்புக் குறைந்தவர்களாக கருதப்படுவதாக அறியக்கூடியதாக இருந்தது. மேலும், யாழ்ப்பாணத்தவரின் திருமணப் பேச்சு முறை முன்னர் அங்கு வழக்கிலிருந்துள்ளது. ஊரவர், உறவினர், நண்பர்கள் தமது பிள்ளைகளுக்கு ஒருவர் மாறி ஒருவர் திருமணத்தை பேசி நிச்சயித்துக் கொள்வார்களாம். மூத்த பிள்ளை ஆணாக பிறந்தால் அவருக்குத் தோடு போட்டுக்கொள்ளும் நடைமுறையும் அங்கு இருந்துள்ளது. என்னுடன் சுவிஸில் வேலை செய்த இத்தாலி நாட்டவர்களுடனான உரையாடலின்போது இவற்றை அறியக்கூடியதாக இருந்தது. யாழ்ப்பாணத்தில் எமது முன்னோரும் மூத்த பிள்ளை ஆணாக இருந்தால் தோடு போடுவதை வழமையாகக் கொண்டிருந்தார்கள். இப்போது ஆண்கள் தோடு போடுவது அழகியலாக மாறிவிட்டது. சுவிஸில் இதற்கு வெவ்வேறு காரணங்கள் கூறுவார்கள்.

சிசிலித் தீவை தனிநாடாக்கும் திட்டத்தில் உருவான மாபியா தீவிரவாதக் குழுவின் நடவடிக்கைகளால் சிசிலி பிராந்திய நிர்வாகமும், இத்தாலிய அரசும் பெரும் பாதிப்புகளை எதிர்கொண்டபோதும், அக்குழுவினரின் செயற்பாடுகள் முற்றாக முடக்கப்பட்ட பின்னர் ஓரளவு நிம்மதி அடைந்துள்ளன.

பலெர்மோ

இத்தாலியில் அதிக மக்கள் தொகையைக்கொண்ட நகரங்களில் ஒன்றான இது, சிசிலித் தீவில் நெருக்கமாக மக்கள் வசிக்குமிடமாகவும் அதன் தலைநகரமாகவும் விளங்குகின்றது. பலெர்மோ வானூர்தி நிலையத்தைவிட்டு வெளியேறியதும் எனது மருமகன் தானுந்துவில் காத்திருந்தான். அங்கிருந்து புறப்பட்டு பெறாமகனைச் சந்திப்பதற்காக பலெர்மோ / சென் (Zen) என்னும் சிற்றூருக்கு வந்த நான், அங்கு அமைந்துள்ள குவாட்டா குடியிருப்புத் திட்டம் வசதியாக இருந்ததால் அங்கேயே தங்கிக் கொண்டேன்.

பலர்மோ நகர் காவல்துறையினர் குடியிருப்புக்காகக் கட்டப்பட்ட இத்திட்டத்தில் 500இற்கும் மேற்பட்ட வீடுகள் உள்ளன. வழிபாட்டுக்காக ஆலயம் ஒன்றும் உள்ளது. நன்கு திட்டமிடப்பட்டு கட்டப்பட்டுள்ள அந்த குடியிருப்புத் திட்டத்தில் காவல்துறையினரின் குடும்பம் எவருமில்லை.

மாபியா தீவிரவாதக் குழுவின் அதிகரித்த தாக்குதல்களால் திண்டாடிய இத்தாலிய அரசாங்கம், அதனை முற்றாக ஒழித்துவிட முயன்றது. மாபியா தீவிரவாதிகள் தங்கியிருக்கும், ஒன்றுகூடும் இடத்தைத் துல்லியமாக

அறிந்துகொண்டு, அந்தக் கட்டடத் தொகுதியை முற்றுகையிட்டுப் பலரைக் கொன்றும், கைதுசெய்தும் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.

அக்கட்டடத் தொகுதியில் மீண்டும் அவர்கள் குடியேறாமலும் ஒன்று கூடாமலும் தடுப்பதற்காக அதற்கு அண்மையில் பொலிஸ், இராணுவ நிலையங்களையும் அவர்களுக்கான குடியிருப்பு வசதிகளையும் உருவாக்கினர். இதனால் பொலிசாரின் குடியிருப்புக்காகக் கட்டப்பட்ட குவாட்டா குடியிருப்புத் திட்டம் கைவிடப்பட்டது.

சில ஆண்டுகள் பாவனையின்றிக் கிடந்த அக்கட்டடங்களில் வருவாய் குறைந்த மக்கள், வெளிநாட்டார் (இலங்கையர்) உட்பட பலரும் குடியேறத் தொடங்கினர். அந்நேரத்திலிருந்த மாநகரசபை முதல்வர் வறியவர் மீது கொண்ட கரிசனையால் கண்டும் காணாமலும் விட்டிருந்ததால் மக்களின் வாழ்வு அங்கே தொடர்ந்தது.

அவ்வாறான வீட்டிலேயே எனது பெறாமகனும் இருந்தான். மின்சாரம், தண்ணீர் போன்ற வசதிகளுடன், காற்றோட்டமான வீடாக இருந்தது. இங்கு மக்கள் குடியேறத் தொடங்கிய பின்னர், எஞ்சியிருந்து சிதறி வாழ்ந்த மாபியா தீவிரவாதிகளால் மேற் கொள்ளப்பட்ட களவுகளால், குடியேற்ற மக்கள் தமது பாதுகாப்புக்காக யன்னல், கதவுகளுக்கு வெளிப்பக்கத் தால் இரும்புத் தகரங்கள் மற்றும் இரும்பு வலைகளை பொருத்திக்கொண்டனர்.



அந்தக் குடியிருப்பில் எனது ஊரவர்கள் பலர் தனித்தும் குடும்ப மாகவும் தங்கியிருந்ததால் ஊரில் இருக்கும் உணர்வே எனக்கு ஏற்பட்டது. குவாட்டா குடியிருப்புத் திட்ட வீட்டு நிரைகளிடையே வெளிகள் இருந்த தால் பொழுதைப் போக்க வசதியாகவும் இருந்தது. அதிகாலையில் வீதிகளில் மரக்கறி, மீன், பாண் போன்றவற்றை விற்பனை செய்வோர் ஒலியெழுப்பி, உரத்துக் குரல் கொடுப்பதால் நித்திரை குழம்பவே செய்தது. நான் ஐரோப்பிய நாட்டில்தான் இருக்கிறேனா? என்றுகூட எண்ணத் தோன்றியது. இந்தியாவில் இது போன்ற சத்தங்களை அதிகாலையில் தாராளமாய்க் கேட்கலாம்.

பீட்ஷா, ஈரல் பணிஸ் போன்றவை தள்ளுவண்டில்கள் மூலம் சுடச்சுட விற்பனை செய்யப்படுகின்றன. அவற்றில், உடனேயே தயார் பண்ணித் தரப்படும் ஈரல் பணிஸ் புதிதாகவும் எனக்கு மிகப் பிடித்து மிருந்ததால் விரும்பிச் சாப்பிடுவேன். பகலில் ஏதேனும் இடத்தைப் பார்க்கச் செல்வதும், மாலையில் அறிமுகமானவர் வீடுகளுக்குச் சந்திக்கச் செல்வதாலும் விடுமுறை சந்தோஷமாக இருந்தது.

ஆலயங்கள் தரிசிப்பு

சென் குடியிருப்புக்கு அண்மையில் உள்ள மலையில் புனித சாந்த றோசலியா என்னும் ஆலயம் இருக்கிறது. ஞாயிறுதோறும் அவ்வாலயத்திற்கு வேண்டுதலுக்காக, வேண்டுதல் நிறைவேறியதற்காகப் பலரும் நடந்து செல்வர். அதற்கேற்றவாறு வீதி அமைக்கப்பட்டிருந்தது. வேறு பாதையால் வாகனத்திலும் ஆலயத்திற்குச் செல்லலாமென்பதால் நான் வாகனத்தில் சென்றேன். கற்பாறையைக் குடைந்த சிற்றாலயமாகக் காணப்பட்டது அவ்வாலயம். வழிபாட்டுக்கு ஏற்ற போதிய இடமும் இருந்தது.

அந்நாட்டு அரசன், தன்னைத் திருமணம் செய்துகொள்ளும்படி சாந்த றோசலியா என்னும் பெயரையுடைய பெண்ணை வற்புறுத்தியதாகவும், அப்பெண் இணங்க மறுத்த காரணத்தால் அரசனின் கட்டளைப்படி நங்கூரத்துடன் இணைக்கப்பட்டு ஆழ்கடலில் எறியப்பட்டதாகவும், பின்னர் நங்கூரத்துடன் இணைத்தபடியே அப்பெண் கடற்கரையில் கண்டெடுக்கப் பட்டதாகவும் அறியப்படுகிறது.

புனிதை பட்டம் அளிக்கப்பட்ட அப்பெண்ணின் கற்சிலை ஆலயத் தில் வைக்கப்பட்டிருந்தது. நாள்தோறும் அநேகர் தரிசித்துச் செல்லும் ஆலய மாகக் காணப்பட்டது. அவளுடன் இணைக்கப்பட்டிருந்த நங்கூரம் சிற்றால யத்தின் உள்ளே கண்ணாடி அடைப்பிற்குள் இருந்தது. நாம் சென்ற நேரம் ஆட்கள் குறைவாக இருந்ததால் அமைதியாக வழிபட்டு வெளி யேறினோம்.

அம்மலையில் நின்று பலெர்மோவின் பல பகுதிகளைப் பார்வை யிடக்கூடியதாக இருந்தது. குடாவாக அமைந்திருக்கும் கடற்கரைச் சூழலில் நிறைந்துள்ள கட்டடங்கள் கண்ணுக்கு விருந்தாக இருந்தது. முற்றிலும் மஞ்சள் வர்ணம் பூசப்பட்ட குவாட்டா குடியேற்ற வீடுகள் தெளிவாகத் தெரிந்தன. பெரியதொரு நகரம்போல காணப் பட்டது அந்த இடம்.

மெசினா என்னும் நகரில் சாதாரண உயரமுள்ள மலையில் பிரசித்தமான ஆலயம் இருப்பதாக அறிந்திருந்ததால் அங்கு சென்றோம். சிறிய பழமையான, வர்ணம் தீட்டப்படாத ஆலயமாக இருந்தது. ஆலயத்தினுள்ளே கறுப்பு நிறத்தில் மாதாவின் சுரூபமும் காணப்பட்டது. இந்த மாதா சுரூபம் ஆழ்கடலில் கண்டெடுக்கப்பட்டு வைக்கப்பட்டுள்ளதாக அங்கு எழுதப்பட் டுள்ள தகவல் கூறுகின்றது. மெழுகுதிரி ஏற்றி வழிபாடு செய்தோம்.

அன்று விடுமுறை நாளானபடியால் திரளான மக்கள் அந்த ஆலயத்தைத் தரிசித்துச் சென்றனர். ஆலயத்துக்கு வெளியே வீதி ஓரம் பல விற்பனை நிலையங்கள் இருந்தன. ஆலயம் தரிசிக்க வந்தவர்களால் விற்பனை நிலையங்கள் நிரம்பிக் காணப்பட்டன. நாமும் சில அன்பளிப்பு பொருட் களைக் கொள்வனவுசெய்துகொண்டு வெளியேறினோம். அங்கு திரும்புகிற திசையெல்லாம் ஆலயங்கள்தான் இருந்தன. ஒரு ஊருக்கு பல ஆலயங்கள் இருப்பதுபோலத் தோன்றியது.

தமிழ் மக்கள் பலர் வழிபடச்செல்லும் ஆலயம் சற்றுத் தூரத்தில் இருப்பதாகவும், அங்கு சென்றால் அறிமுகமானவர்களைச் சந்திக்கலாம் எனக்கூறிய மருமகன், ஞாயிறு வழிபாட்டுக்கு அந்த ஆலயத்துக்கு அழைத்துச் சென்றான். தமிழர்களுக்கு மட்டுமான வழிபாடுபோலத் தென்பட்டது அங்கு நிறைந்திருந்த தமிழ் மக்களால்.

வழிபாடு முடிந்த பின்னர், அறிமுகமான சிலரோடு உரையாடி மகிழக்கூடியதாகவும் இருந்தது. அங்கிருந்து அச்சிற்றூர்ப் பகுதியைச் சுற்றிப் பார்த்துவரச் சென்றோம். அந்த இடம் திரளான சுற்றுலாப் பயணிகள் வருகை தருகின்ற இடமென்பதை அங்கிருந்த விற்பனை நிலையங்கள் உணர்த்தின. விதம் விதமான படத் தபாலட்டைகள், இத்தாலியின் சிறப்புகள் குறித்த படங்கள், அலங்கார - கைவினைப் பொருட்கள் என விற்பனை நிலையங்களில் நிரம்பவே காணப்பட்டன.

விற்பனை நிலையங்களுக்கு அருகே பெரிய கட்டத்தில் இயங்கிய வங்கி, அன்று விடுமுறையென் பதால் மூடப்பட்டிருந்தது. தற் செயலாக அந்த வங்கியின் வாசல் கதவைப் பார்த்தபோது என் கண்களை என்னால் நம்பவே முடியவில்லை. இத்தாலிய, ஆங்கில மொழிகளுடன் தமிழிலும் வங்கி யின் பெயர் இரண்டு அங்குல உயரமுள்ள எழுத்துக்களில் எழுதப் பட்டிருந்தது. வாசித்ததும் தேகம் சிலிர்த்தது. மேலைநாட்டில், பிரபல்யமான வங்கியில் தமிழில் பெயர் பொறிக்கப்பட்டிருந்ததால், நான் அடைந்த மகிழ்வை அங்கு நின்ற மற்றவர்களுடன் பகிர்ந்து கொண்டேன்.



தூரத்திலிருந்த நண்பனின் வீட்டிற்குச் சென்றிருந்தேன். அவரது வீட்டிற்கு அருகாமையிலிருந்த மாதா ஆலயத்தில் அன்று திருவிழா. சாயந்தரம் மாதாவின் நகர்வலத்திற்காக அலங்கரிக்கப்பட்டிருந்த வீதிகளின் தன்மை யாழ்ப்பாணத்தை நினைவூட்டியது. பி.ப. 4.00 மணியளவில் ஊர்வலம் தொடங்கியது. ஊர்வத்தின் முற்பகுதியில் வந்த சிலர் மூங்கிலால் பின்னப் பட்ட சிறிய கூடையை ஏந்தியவாறு வீதி நெடுகிலும் உள்ள வீடுகளில் நிதி சேகரித்துச் சென்றனர். மக்களும் விருப்புடன் நிதி வளங்கினர். இவர்களைத் தொடர்ந்து நிரையாக மக்கள் செல்ல மாதா பவனியாக எடுத்துச் செல்லப் பட்டார். இவ்வாறு பணம் சேகரிப்பது இலங்கையிலோ வேறு எங்குமோ நான் கண்டிராத நிகழ்வாக இருந்தது.

திருவிழா முடிந்த மறுநாள் அந்த ஆலயத்திற்குச் சென்றபோது ஆலய வாசலில் ஒன்பது வயது மதிக்கத்தக்க அழகான சிறுமிகள் சிலர் வருவோர் போவோரிடம் பணத்துக்காகக் கையேந்தி நின்றனர். அவர்கள் ருமேனியா நாட்டைச் சேர்ந்த சிறுமிகள். மொழி தெரியாமல் செய்கையாலே உதவி கோரினர் ஆலயத்துக்குச் சென்ற பலரும் சிறுசிறு பண உதவிகளை வழங்கினர்.

ருமேனியா நாட்டில் ஏற்பட்ட போராட்டம் காரணமாக தமது உயிரைக் காத்திட அங்கிருந்து புறப்பட்டு படகுகளில் இத்தாலி வந்து சேர்ந்த வர்களை அகதிகளாக ஏற்றுக்கொள்ள இத்தாலி அரசாங்கம் மறுத்ததால், கடற்கரை ஓரங்களில் கூடாரம் அமைத்துத் தங்கவிடப்பட்டனர். பகல் நேர வெயிலையும் இரவின் இயல்பான குளிரையும் தாங்கியவாறு குழந்தைகள் முதல் வயோதிபர் வரை அங்கேயே இருந்தனர். அவ்வாறு கூடாரங்களில் இருக்கும் சிறுமிகளே இவ்வாறு ஆலயங்களில் உதவிகோரி நிற்கின்றனர். என அறிந்தேன். அவர்களைப் பார்த்தபோது உள்ளம் கசிந்தது. எனது பங்களிப்பை அவர்களுக்குச் செலுத்தினேன்.

நண்பனின் வீட்டிலிருந்து பத்து கி.மீ. தூரத்தில் தமிழ் மக்கள் சனிக்கிழமைகளில் கணிசமாக செல்லும் கடற்கரை ஆலயத்துக்குச் சென்றி ருந்தேன். எனக்கு அறிமுகமான எவரையேனும் சந்திக்கலாமென்ற அவாவில் தமிழர்கள் கூடுமிடங்களுக்குச் செல்வதை நான் பெரிதும் விரும்பினேன். கற்பாறைகள் நிறைந்த இடமாக இருந்தது அந்தப் பகுதி. கற்பாறை எங்கும் மக்கள் அமர்ந்திருந்தனர். நாமும் அங்கு ஒரு மணித்தியாலம் வரை அமர்ந்திருந்தோம். ஊரவர் சிலரைச் சந்திக்கக்கூடியதாக இருந்தது. இருள் மங்கியநேரம் கற்பாறையிலிருந்து பார்க்கும் போது கடலும், கடற்கரையும் மிக அழகாகத் தெரிந்தது. கற்பாறையில் செதுக்கிய சிலைகளாக மனிதர்கள் காணப்பட்டனர். இருளானதால் கடற்கரை அருகே இருந்த ஆலயத்தில் வழிபட்டுவிட்டு அங்கிருந்து புறப்பட்டோம்.

சில காட்சிகள்

நண்பர் ஒருவர் தனக்கு நேரம் கிடைக்கின்றபோது உந்துருளியில் அழைத்துச்சென்று பலெர்மோவில் சில இடங்களைக் காண்பிப்பார். நான்கு நாட்களாக அவ்வாறு சென்று பல புதிய ஆலயங்களை தரிசிக்கவும் பல இடங்களைப் பார்வையிடவும் கூடியதாக இருந்தது.

உந்துருளிகளில் கெல்மட் இல்லாமலே பெரும்பாலானோர் பயணிக் கின்றனர். காவல்துறையினர் தடுப்பதில்லை. இதுபற்றி விசாரித்தபோது கெல்மட் போடாமல் சென்று விபத்தில் சிக்குண்டு இழப்பைச் சந்தித்தால் அவர்களுக்கு எந்த உதவியும் கிடைக்காதாம். மற்றும்படி ஹெல்மட் அணிய வேண்டிய கட்டாயமில்லையாம். நல்லதொரு உயிர் காப்புச் சட்டம்!

படகு அகதிகளான ருமேனிய மக்களின் கடற்கரையோரக் கூடாரங் களைப் பார்த்தேன். சிறிய நூறு கூடாரங்கள் வரை காணப்பட்டது. நான்

சென்ற அன்று வானம் இருண்டு மழைத்தூறல் இடையிடையே வந்து போனதால் குளிராக இருந்தது. அந்நேரம் அவர்களின் இருப்பைப் பார்த்து வேதனையடைந்தேன். இலங்கையில் அவ்வப்போது ஏற்படும் துன்பியல் நிகழ்வுகளால் அகதிகளாக வெளியேறி கூடாரங்களில் குடிபுகும் தமிழ் மக்களை நினைவூட்டத் தவறவில்லை.

கடற்கரையிலிருந்து 500 மீ. தூரத்தில் மீன் சந்தை உள்ளது. அங்கு தமிழ்மக்கள் கணிசமாக வருவார்களென்பதால் அங்கும் சென்றேன். திறந்த வெளிச்சந்தை அது. அடுத்தடுத்து இருந்த கடைகளில் பல இன மீன்கள் குவியல்களாகக் கிடந்தன. தமிழ் மக்கள் மாத்திரமல்ல அந்நாட்டவர்களும் மீன் கொள்வனவில் மும்முரமாக ஈடுபட்டனர். நகரிலுள்ள வேறு விற்பனை நிலையங்களைவிட இச்சந்தையில் மலிவாக இருப்பதால் பலரும் ஆர்வம் காட்டினர். தமிழர்கள் பலர் வந்திருந்தபோதும் எனக்கு அறிமுகமானவர் களைக் காணவில்லை. ஏமாற்றத்துடன் மூன்று நாட்களுக்குத் தேவையான மீன்களைக் கொள்வனவு செய்துகொண்டு திரும்பினோம்.

சமிக்ஞை விளக்கு பகுதிகளில் அனுமதி ஒளிக்காகக் காத்திருக்கும் வாகனங்களில் உள்ளவர்களிடம் பழங்கள் விற்பனை செய்வதில் பல இளைஞர் போட்டிபோட்டு ஈடுபடுவதை சென்ற இடமெல்லாம் காணக்கூடியதாக இருந்தது. அது அவர்களது தொழிலாக உள்ளதுபோலத் தோன்றியது. ஐம்பது வரையான வாகனங்கள் தரித்து நிற்கும் அந்த இடத்தில் தேவையுள்ளவர்கள் வாங்கிக் கொள்வர்.

ரகர் பந்தைப்போன்ற வடிவிலான மஞ்சள் நிற மெலோன் பழங்களுக்கு உரிய காலம் என்பதால் வீதி ஓரங்களில் அவை குவியலாய்ப் போடப்பட்டு விற்பனை செய்யப்படுவதையும் அவதானிக்கூடியதாக இருந்தது. பல்வகை பழங்களின் உற்பத்தியில் முன்னிலை வகிக்கும் நாடுகளில் இத்தாலி சிறப்புற்று இருக்கின்றது.

மாபியா தீவிரவாதிகள் அழிக்கப்பட்டதாக அறிந்திருந்தபோதும் அவர்கள் பற்றிய பயம் நீங்காத மக்களையே அங்கு காணக்கூடியதாக இருந்தது. அவ்வளவுக்குத் துன்பத்தை அனுபவித்திருந்தார்கள். தனிநபர் கொலைகள், கூலிக்கொலைகள், கொள்ளைகளால் பலரும் அச்சத்தில் உறைந்தி ருந்தனர். உயரதிகாரிகளின் ஆதரவு அவர்களுக்கு இருப்பதாகப் பேசிக் கொள்கின்றனர். இவர்களால் தமிழர்கள் சிலரும் கொல்லப்பட்டதை ஏற்கெனவே அறிந்திருக்கிறேன். ■

ஐக்கிய இராச்சியம்

(1994, 1995, 1998, 1999, 2014)



வடகடல், அட்லாண்டிக் பெருங்கடல் போன்றவற்றில் அமைந்துள்ள தீவுக்கூட்டமான இவை 'பிரித்தானிய தீவுகள்' என்று அழைக்கப்படுகிறது. இவற்றில் பெரிய தீவான பிரித்தானியா, பெரிய பிரித்தானியா அல்லது ஐக்கிய இராச்சியம் என்று அழைக்கப்படுகிறது. இது இங்கிலாந்து, வேல்ஸ், ஸ்கொட்லாந்து மற்றும் அயர்லாந்தின் வடக்குப் பகுதி தவிர்ந்த ஏனைய பகுதிகளின் கூட்டுப் பெயராகும். 1,098 தீவுகளைத் தன்னகத்தே கொண்டது. இவற்றில் சில பண்டைய நாளில் செயற்கையாகக் கட்டப்பட்டு பின்னர் இயற்கைப் படிமானங்களால் படிப்படியாக விரிவாக்கமடைந்த தீவுகளாகும்.

பல விஞ்ஞானிகளையும் பொறியியலாளர்களையும் உருவாக்கிய, உலகிலேயே மிகவும் புகழ் வாய்ந்தவையாக 'ஒக்ஸ்போர்ட்' மற்றும் 'கேம்பிரிட்ஜ்' பல்கலைக்கழகங்கள் உள்ள இங்கிலாந்தின் பெரும்பாகம், சிறு குன்றுகளாகவும் சமவெளிகளாகவுமே உள்ளன. வடக்கு மற்றும் தெற்கில் உயரமான மலைப்பகுதிகளைக் காணலாம். ஐரோப்பிய நாடுகளுடன் ஒப்பிடுகையில் அதிக உயரத்தைக்கொண்ட சிகரம் இங்கில்லை. பல முக்கிய மான முகத்துவாரங்களும் ஆறுகளும் உள்ளன. 'டோவரு'க்கு அருகிருந்து ஆங்கிலக் கால்வாயை ஊடறுத்து கடல்கீழ் அமைக்கப்பட்டுள்ள 'கால்வாய் சுரங்கம்' ஐக்கிய இராச் சியத்தை பிரான்ஸுடன் இணைக்கிறது.

ஒன்பது மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டு நான்கு நிர்வாக நிலைகளைக் கொண்டுள்ளது. 'வேல்ஸ்' பெரும்பாலும் மலைப்பாங்கான நிலப்பரப்பை உடையது. அங்குள்ள உயரமான மலைச்சிகரம் 1,085 மீ. உயரமுள்ள 'ஸ்நோடொளன்' ஆகும். வேல்ஸிலிருந்து இங்கிலாந்தின் பெரும் பகுதிவரை ஓடும் ஐக்கிய இராச்சியத்தில் மிகவும் நீளமான ஆறு 'செவர்ன் ஆறு' *(River Severn)*. இதன் நீளம் 354 கி.மீற்றர்.

18ஆம் நூற்றாண்டின் தொழிற் புரட்சியால் உலகில் முதல் தொழில் மயமான நாடாக இங்கிலாந்து விளங்குகிறது. அயர்லாந்து தீவின் வடகிழக்கு, வடக்கு பெரும்பாலும் மலைப்பகுதிகளே.

'ஸ்கொட்லாந்து' தெற்கிலும் கிழக்கிலும் சமவெளிகளாகவும், வடக்கிலும் மேற்கிலும் மலைப்பகுதிகளாகவும் உள்ள நிலப்பரப்பைக் கொண்டது. 1,343 மீ. உயரமுள்ள 'பென் நெவிஸ்' (Ben Nevis) மலைச்சிகரமே ஐக்கிய இராச்சியத்தின் மிக உயர்ந்த மலைச் சிகரமாகும். நீளமான முகத்து வாரங்கள், ஏரிகள் பலவற்றைக் கொண்டுள்ளது.

தொழிற்துறையிலும், நீரூர்தி துறையிலும் 19ஆம் நூற்றாண்டின் ஆதிக்க சக்தியாக திகழ்ந்த ஐக்கிய இராச்சியம், மேற்கத்தய சிந்தனைகளான உடைமை, சுதந்திரம், முதலாளித்துவம், பாராளுமன்ற மக்களாட்சி ஆகிய வற்றின் வளர்ச்சியிலும் உலக இலக்கியம் மற்றும் அறிவியல் துறையிலும் பெரும்பங்காற்றியுள்ளது.

அதன் உச்ச நிலையில் பிரித்தானிய ஏகாதிபத்தியம் உலகின் நிலப் பரப்பில் நான்கில் ஒரு பங்கை உள்ளடக்கியிருந்தது. இதன் ஆதிக்கம் இரு உலகப் போர்களாலும் வெகுவாகக் குறைந்தது. இருபதாம் நூற்றாண்டின் பிற் பகுதியில் பிரித்தானிய ஏகாதிபத்தியம் கலைக்கப்பட்டபோதும் தன்னை ஒரு நவீன மயமான, வழமையான நாடாக வளர்த்துக்கொண்டது.

ஐக்கிய இராச்சியம் ஒரு அரசியல் சட்ட முடியாட்சியாகும். மன்னர் நாட்டின் தலைவராக விளங்குகிறார். பிரித்தானிய மக்களால் தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகளைக்கொண்ட மக்களவையும், அவர்களிலிருந்து பிரதமரும், அமைச்சரவைக்கான அமைச்சர்களும் நியமிக்கப்படுகிறார்கள். இந்த மக்களவைக்குக் கட்டுப்பட்டே மன்னர் செயற்பட முடியும். இருப்பினும் அமைச்சரவையின் எல்லா ஆவணங்களையும் பார்வையிட அனுமதியுண்டு.

கலந்தாலோசிக்கும் உரிமை, அறிவுரை கூறும் உரிமை, எச்சரிக்கும் உரிமை மன்னருக்கு இருக்கின்றது. இவ்வுரிமைகள் அரிய சந்தர்ப்பங்களிலே உபயோகிக்கப்பட்டாலும் தக்க தருணங்களில் இன்றியமையாததாகவும் இருந்துள்ளன எனவும், சட்ட வரைவு மன்னர் ஒப்பமிடும்வரை அங்கீகாரம் பெறாது என்றும் அறிக்கூடியதாக இருக்கின்றது.

1994, 1995, 1998, 1999 ஆண்டுகளிலில் சுவிற்சர்லாந்தில் விசா எடுத்தும், 2014ஆம் ஆண்டு இலங்கையில் விசா எடுத்தும் லண்டனுக்கு சென்று வந்துள் ளேன். அவற்றின் தொகுப்பாகவே பெரிய பிரித்தானியாவில் லண்டன் பயண அனுபவம் அமைகிறது. இலங்கையில் பிரித்தானிய உயர்ஸ்தானிகர் காரியால யம் இல்லை என்பதால் கொழும்பிலுள்ள முகவரிடம் மனுக்கள் ஒப்படைக்கப் பட்டதும் அவை, இந்தியா சென்னையிலுள்ள பிரித்தானிய உயர்ஸ்தானிகர் காரியாலயத்திற்கு அனுப்பப்பட்டு அங்கிருந்தே விசா வழங்கப்பட்டது. விண்ணப்பப்படிவம் 'ஒன் லைன்' மூலம் பூரணப்படுத்தப்பட்டு விசா கட்டணம் 'விசா காட்' மூலம் செலுத்தப்பட்டது. விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்டதும் ஆறு மாதங்களுக்கு பல தடவைகள் நுழைவதற்கான விசா வழங்கப்படுகிறது.

லண்டன்

ஐக்கிய இராச்சியத்தினதும் இங்கிலாந்தினதும் தலைநகரம் இதுவாகும். ஐரோப்பாவில் இரண்டாவது அதிகமான குடித்தொகை கொண்ட நகரான லண்டன், ஐரோப்பாவின் மிகப் பெரிய 500 நிறுவனங்களில் 100 நிறுவனங்களின் தலைமையகங்களைக் கொண்டுள்ளது. அரசியல், நிதி, கல்வி, பொழுதுபோக்கு, ஊடகம், கலைகள் பண்பாடு போன்ற துறைகளில், உலகில் செல்வாக்கு மிக்க நகராகத் திகழுகின்றது.

உலகில் பல நாடுகள் நதிக்கரைகளில் தோன்றியதைப்போல லண்டன் நாகரிகம் 'தேம்ஸ் நதி' யில் தொடங்கியதாக அறியப்படுகிறது. தேம்ஸ் நதி, லண்டன் நகரின் மையப்பகுதியை ஊடறுத்து, முழுமையாய் இங்கிலாந்தின் உள்ளே ஓடும் 346 கி.மீ. நீளமான நதியாகும்.

கி.மு. 43ஆம் ஆண்டு தேம்ஸ் நதிக்கரையை வந்தடைந்த ரோமானியர்கள், அந்தப் பகுதியின் அழகும் பாதுகாப்பான சூழலும் கடல் போக்கு வரத்தும் ஏற்புடையதாக இருந்ததால் அங்கு குடியேறத் தொடங்கினர். நதியின் கரையோரமாக வீடுகள், கட்டடங்கள், பாலங்கள், வீதிகள் அடங்கிய நகரினை அமைத்தனர். அந்நகருக்கு 'லண்டூனியம்' என்று பெயருமிட்டனர். இதுவே பின்னாளில் லண்டன் எனத் திரிபடைந்துள்ளதாம். இப்பகுதிக் கடலில் பயணிக்கும் கப்பல்கள் தேம்ஸ்நதி கழிமுகத்தால் நகருக்கு வரத் தொடங்கியதும் நகரின் வளர்ச்சியும் அதிகரித்தது.

கி.பி.61இல் 'போடிக்கா' என்னும் அரசியின் தலைமையிலான 'ஐசெனி' என்னும் பழங்குடியினர் இக் குடியேற்ற நகரத்தைத் தாக்கி எரியூட்டி அழித்துவிட்டனர். பின்னர், கி.பி. 100ஆம் ஆண்டளவில் பெரிய அளவில் திட்டமிடப்பட்ட குடியேற்றத்தை இப்பகுதியில் நிறுவியதுடன் லண்டூனியத்தை தலைநகராக்கிக் கொண்டனர். இரண்டாம் நூற்றாண்டில் இதன் உச்ச நிலையில் 60,000 பேர்வரை வாழ்ந்திருக்கலாமென அறியப்படுகிறது.

ஏழாம் நூற்றாண்டில் உரோமப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பின்னர் இந்நகரம் கைவிடப்பட்டு, மேற்குத் திசையில் சில மைல்களுக்கு அப்பால் 'பிளீட் நதி' யின் கழிமுகமான 'அல்ட்விச்' பகுதியில் 'லுண்டென்விக்' என்னும் பெயரில் 'சக்சன்' இனத்தவரால் நகரமொன்று நிறுவப்பட்டது. அங்கு மீன்பிடி, வணிக நடவடிக்கை சிறப்புற இருந்தது. 'வைக்கிங்கு' இனத்தவரின் தாக்குதல்களிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்காக மீன்பிடி, வணிக நடவடிக்கையை லண்டூனியம் இருந்த இடத்துக்கு மாற்றிக்கொண்டனர்.

கி.பி. 866ஆண்டு பேரரசர் அல்பிரட் என்பவரால் லண்டன் முற்றாகக் கைப்பற்றப்பட்டு புனரமைப்புச் செய்யப்பட்ட பின்னர் மாறிமாறி பல அரசர்கள் கைப்பற்றி அரசாண்டு லண்டனில் படிப்படியாக வளர்ச்சியை ஏற்படுத்தியபோதும், 14ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட 'கறுப்புச் சாவு' எனப்படும் தொற்றுநோயால் லண்டன் சனத்தொகையில் 1/3 பகுதியினரும், 1665இல் ஏற்பட்ட தொற்று நோயால் 100,000 பேர் அதாவது லண்டன் சனத்

தொகையில் ஐந்திலொரு பகுதியினரும் பலியானார்கள்.

02.09.1666இல் ஏற்பட்ட பெரும் தீ விபத்து லண்டனின் முக்கால் பகுதியை சாம்பராகியது. நான்கு நாட்களில் 13,000 வீடுகளும் 80 தேவாலயங்களும் அந்தத் தீ விபத்தில் சாம்பராகின. மீள் கட்டுமாணப் பணிகள் முடிவுற பத்தாண்டுகளுக்கு மேலானது என அறியப்படுகிறது.

லண்டனின் பிரதான போக்குவரத்துச் சாதனமாக 'பாதாள தொடருந்து வலையமைப்பு' விளங்குகிறது. உலகில் மிகப் பழமையான பாதாள தொடருந்து வலையமைப்பு இதுவாகும். எந்நேரமும் மக்கள் நெருக்கமாக பயணிப்பதைக் காணலாம்.

'ஹீத்ரோ' வானூர்தி நிலையம்

ஐக்கிய இராச்சியத்தின் முதன்மையான மிகவும் நெருக்கம் மிக்க வானூர்தி நிலையம் லண்டன ஹீத்ரோ வானூர்தி நிலையமாகும். ஐரோப்பாவில் மிகவும் பயணியர் போக்குவரத்து மிக்க வானூர்தி நிலையம் மட்டுமல்ல, உலகில் வேறெந்த வானூர்தி நிலையத்தைவிடவும் கூடுதலான பன்னாட்டு பயணியர் போக்குவரத்து நிலையமாக விளங்குகிறது.

முதற்தடவையாக சுவிற்சர்லாந்திலிருந்து 1994இல் பயணித்தபோது வானூர்தி நிலையத்தைப் பார்த்து அதிர்ந்தேவிட்டேன். அவ்வளவு பிரமாண்டமாக இருந்தது அவ்வானூர்தி நிலையம். ஏறுவதற்கு ஒன்றும் இறங்குவதற்கு ஒன்றுமென இரண்டு ஓடுபாதைகள் சமாந்தரமாக அமைக்கப்பட்டுள்ளன. நான்கு நிமிடங்களுக்கு ஒரு தடவை விமானப் போக்குவரத்து நடப்பதாக ஏற்கெனவே அறிந்துள்ளேன் அதனை நேரிலே பார்த்தபோது பிரமிப்பாகவே இருந்தது.

வானூர்தி மூலம் அகதிகள் வருகையைக் கட்டுப்படுத்தும் நோக்கில் வானூர்தியைவிட்டு வெளியேறி வானூர்தி தளத்திற்கு நுழையும் வாசலில் காவல்துறையினரின் கண்காணிப்பு இருந்தது. ஐரோப்பிய நாட்டவர்கள் தவிர்ந்த ஏனைய நாட்டவர்களின் கடவுச்சீட்டுப் பரிசோதனை இடம் பெற்றது. எனது கடவுச்சீட்டும் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது. நிறத்தின் அடிப்படையில் வேறு நாட்டவரை அடையாளம் காணும் நடவடிக்கையில் பிரச்சினை எழுந்ததால், செயல்களைக் கண்காணித்து புதிதாக வருகை தரும் பயணிகளை அடையாளம் காணும் முயற்சியில் ஈடுபட்டனர்.



நித்தமும் இப்படி நடைபெறுவதில்லையென்று

நினைக்கிறேன். ஏனென்றால்; வானூர்திமுலம் வருகைதரும் அகதிகள் ஹீத்ரோ வானூர்தி நிலையத்தை அடையும் முன்னரே தமது கடவுச்சீட்டு, போடிங் காட் போன்றவற்றை கிழித்து மலகூடத்தில் எறிந்து விடுகிறார்கள். எனது பயணத்தின்போது இருவர் இவ்வாறு நடந்துகொண்டதை ஒரு தடவை அவதானித்திருக்கிறேன். வானூர்தி, தளத்தை அடைந்ததும் பயணிகளோடு வெளியேறி அத்தளத்தில் அரை மணித்தியாலத்திற்கும் மேல் தங்கியிருந்து வெளியேறும் இடத்திற்குச் சென்று தம்மை அகதி என்று அறிமுகம் செய்ததும், மேல் நடவடிக்கைக்காக காவல்துறையினரால் அழைத்துச் செல்லப்படுவர். பிரமாண்டமான வானூர்தி தளமாகவும், நான்கு நிமிடத்திற்கு ஒருமுறை சேவை நடைபெறுவதாலும் இவர்கள் வந்த நேரத்தை பயணித்த வானூர் தியை சேவையினை அடையாளப்படுத்த முடியாமல் போய்விடும்.

2014இல் பயணித்தபோது பல மாறுதலுக்கு உள்ளாகியிருந்தது. ஐந்து வானூர்தி நிலைய முனையங்கள் *(Terminal)* உள்ளன. மூன்றாவது ஓடு பாதைக்கான பணிகள் நடைபெறுகின்றது. முன்னரைவிட விஸ்தீரண மாக்கப்பட்டுள்ளது. பயணிகள் தாமதியாது வெளியேற குடிவரவு - குடியகல்வு அதிகாரிகளின் கருமபீடங்கள் பல அமைக்கப்பட்டு சேவைகள் நடை பெறுகின்றன.

வானூர்தி தரித்த இடத்து வாசலிலிருந்து குடிவரவு - குடியகல்வு அதிகாரிகளின் கருமபீடம் வரை நடந்துசெல்ல போதும் போதும் என்றாகி விடும். அவ்வளவு நீளமானது அந்த முனையம். பிரித்தானிய கடவுச்சீட்டு உள்ளவர்களுக்கு தனியாகவும்ஏனைய நாட்டவருக்கு பல கரும பீடங்களும் இருந்தன. பகுதி பகுதியாக கருமபீடங்களுக்கேற்ப துண்டாடப்பட்ட ஒழுங்கில் வரிசையாகச்சென்று தாமதியாமல் வெளியேற முடிந்தது.

வெம்பிலி விளையாட்டரங்கம் *(Wembley Stadium)*

உலகப் புகழ்பெற்ற நிகழ்ச்சியான 'வெம்பிலி கோப்பை' என்னும் சர்வதேச டென்னிஸ் போட்டி வருடாவருடம் நடைபெறும் வெம்பிலி விளையாட்டரங்கிற்கு மிக அண்மையிலிருந்த பொதுச் சந்தைக்கு, லண்டன்



சென்ற ஒவ்வொரு தடவையும் நான் செல்லத் தவறியதில்லை. ஞாயிற்றுக்கிழமை மட்டுமே நடைபெறும் இச்சந்தையில் லண்டனிலுள்ள கடைகளில் பெறக்கூடிய உடைகளை பாதி விலைக்கும் குறைவாகக் கொள் வனவு செய்யலாம். அதே உடைகள், அதே தரம். அங்கு செல்லும் தடவைகளில்

வெம்பிலி விளையாட்டரங்கைக் கடந்தே செல்வேண்டும். 2014இல் சென்ற போது முன்னர் காணாத அழகை விளையாட்டரங்கிலும் சுற்றாடலிலும் காணமுடிந்தது. 1923இல் கட்டப்பட்ட இவ் விளையாட்டரங்கு 2008ஆம் ஆண்டு புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது. இதற்கு ஏற்றாற்போல் சுற்றாடலில் புதிய குடியிருப்புகள், விற்பனை நிலையங்கள், ஹொட்டல்கள் எனப் பல காணப்பட்டன.

நான் பார்வையிடச் சென்றபோது விளையாட்டுகள் நிகழவில்லை. அதனால் உள்ளே நுழைந்து அரங்கின் அழகையும் அமைப்பையும் பார்க்கக் கூடியதாக இருந்தது. அப்போது மழை இல்லாமையால் மழை பெய்யும்போது அரங்கை மூடிக்கொள்ளும் 'ஆதரவற்ற கூரை' மூடப்படாமல் இருந்தது. உட்புகுந்த சூரிய வெளிச்சத்தில் பார்த்து மகிழ்ந்தேன்.

நான் இலங்கையிலிருந்து வந்ததாகக் கூறியதும் அரங்கப் பொறுப் பாளர் அங்கு நடந்த, நடக்கின்ற விளையாட்டுகள் பற்றிய விளக்கத்தைக் கூறினார். 2012ஆம் ஆண்டு நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிக்கான சில விளையாட்டுகள் முன்னைய அரங்கில் நடைபெற்றதாகவும் கூறினார். நன்றிகூறி விடைபெற்றோம்.

ஐரோப்பாவில் இரண்டாவது பெரியதும் இங்கிலாந்தின் தேசிய விளையாட்டு அரங்காகவுமுள்ள வெம்பிலி விளையாட்டரங்கில், உலகில் மிக நீளமான 'ஆதரவற்ற கூரை' அமைப்புடன் 90,000 இருக்கைகள் அமரவும், 15,000 பேர் நின்று பார்வையிடவும், 72,000 பேர் உடற்பயிற்சி செய்யவும் கூடிய வசதிகள் உண்டு. 'கொக்' (Hok) விளையாட்டுக்கு ஏற்ற வகையிலும் வடிவமைக்கப்பட்டுள்ளது. தடகள அரங்க அமைப்பாக மாற்றியும் பயன் படுத்த முடியும். அவ்வாறாயின் 60,000 இருக்கைகளிலேயே அமர முடியும்.

வெம்பிலி அரினா அரங்கு

இசை, நகைச்சுவை, கண்காட்சி, விருது வழங்கல், குடும்ப பொழுது போக்கு நிகழ்ச்சிகள் மற்றும் உள்ளக விளையாட்டுகளுக்குப் பயன்படுத்து வதற்கென 02.04.2006இல் திறந்துவிடப்பட்டது 'வெம்பிலி அரினா அரங்கு'. 12,500 பார்வையாளருக்கான இருக்கைகள் உள்ளன.



வெம்பிலி விளையாட் டரங்கிற்கு மிக அண்மை யிலிருந்த வெம்பிலி அரினா அரங்கிற்குச் சென்றபோது அது நிகழ்ச்சிகள் இல்லாமையால் பூட்டப்பட்டிந்தது. வெளியே அரங்கக் கண்டியைத் துப்பரவு செய்யும் பணியில் ஈடுபட்டி

ருந்த அரங்கப் பணியாளருடன் உரையாடிவிட்டுத் திரும்பினோம்.

முன்னர் இந்த இடத்தில் 'பிரித்தானிய பூல்' என்ற பெயரில் உள்ளக விளையாட்டு அரங்கு அமைக்கப்பட்டிருந்தது. 1948இல் கோடைகால ஒலிம்பிக் போட்டிகளுக்காக இவ்வரங்கு பயன்படுத்தப்பட்டது. பின்னர் புனரமைப்புச் செய்யப்பட்டு இப்போது நவீன அரங்காக மிளிர்கின்றது.

லண்டனில் இது இரண்டாவது பெரிய அரங்காகும். நிகழ்வுகளின் தேவைக்கேற்றவாறு அரங்கின் மையப்பகுதியையும் இருக்கைகளையும் மாற்றம் செய்யக்கூடிய வகையில் அமைக்கப்பட்டுள்ளது. அரினா என்னும் பெயரில் வேறு இடங்களில் அரங்கம் இருப்பதனால் 'வெம்பிலி அரினா' என்று அழைக்கப்படுகிறது. இந்திய கலைஞர்களின் இசை நிகழ்ச்சிகள், உலகின் பிரபல பாடகர்களின் இசை நிகழ்ச்சிகள் உட்பட பல அரிய கலை நிகழ்ச்சிகளும் உள்ளக விளையாட்டுகள் பலவும் இங்கு நடந்தேறியுள்ளன.

மேடம் துஷாட்ஸ் அருங்காட்சியகம்

மத்திய லண்டனிலுள்ள மேடம் துஷாட்ஸ் (*Madame Tussauds*) காட்சியகத்திற்குச் சென்றிருந்தோம். நீண்ட வரிசையில் தொடர்ந்த நாம், படிகள் மீதேறி மேல் தளத்தை அடைந்தோம். இடையில் ஆங்கிலேயர் காலத்து தபால் பெட்டி காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தது. இந்த வகைத் தபால் பெட்டி இப்போதும் யாழ்ப்பாணத்தில் சில இடங்களில் காணப்படுகின்றது. காட்சியகத்தின் மேல்தளத்தில் நுழைவுச்சீட்டுப் பெற்றுக்கொண்டு நுழைந்தோம்.

ஏதோ ஒரு புதிய உலகத்தில் சஞ்சரிப்பதுபோன்ற உணர்வு. வாழ்ந்த, வாழ்ந்து கொண்டிருக்கின்ற பிரபலங்களின் உயிரோட்டமுள்ள மெழுகு உருவங்கள் எம்மை உற்றுப் பார்த்தவாறு இருந்தன. தொட்டுப் பார்த்துதான் உணர்ந்துகொள்ளுமளவுக்கு உயிருள்ளது போன்று காட்சியளித்தன. ஒளிரும் கண்கள், இதழ்களின் புன்னகை, பிரபலங்களின் தோலின் நிறம், புடைத்திருக்கும் நரம்புகள், அணிந்திருக்கும் உடை போன்றவற்றின் தத்ரூபம் மெழுகு வார்ப்புக் கலையின் அற்புதத்தை எடுத்தோதின.



மெழுகு உருவங்கள் வடிப்பதில் நிபுணத்துவம் வாய்ந்தவரான பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த துஷாத் அம்மணி என்பவரால் 1884இல் உருவாக்கப்பட்டது இந்த மேடம் துஷாட்ஸ் அருங்காட்சியகம். வெறுமனே சிலைகளைக் காட்சிக்கு வைப்பது போன்றல்லாமல் ஆங்காங்கு

பொருத்தமான இடங்களில் பொருத்தமானவற்றை பிரிவுகளாகக் காட்சிப் படுத்தியுள்ளார்கள். உருவங்கள் ஒவ்வொன்றும் தத்ரூபமான உணர்வுகளை வெளிப்படுத்துகின்றது.

நான் வாழ்க்கையில் சந்தித்திருக்காத, பத்திரிகை பிரசுரங்களில் மட்டும் பார்த்து அறிந்த பிரபலங்களை உரிய கம்பீரத்துடன், மனப்பதிவின் படிமமாக, உயிரோட்டத்துடன் பார்க்கவும், தொடவும், நிழற்படம் பிடித்துக் கொள்ளவும் முடிந்ததால் அளவிட முடியாத மகிழ்ச்சி எனக்கு.

எலிசபேத் மகாராணி போன்ற இங்கிலாந்தின் வரலாற்று மன்னர்கள், சேக்ஷ்பியர் போன்ற உலக மேதைகள், சார்ளி சாப்பிளின் போன்ற ஹொலிவூட் நடிகர்கள், அமிதாப்பச்சன் போன்ற பாலிவூட் நடிகர்கள், மைக்கல் ஜக்சன் போன்ற பாடகர்கள், டெண்டுல்க்கர் போன்ற விளையாட்டு வீரர்கள், மகாத்மா காந்தி போன்ற உலகத் தலைவர்கள், பாப்பாண்டவர் போன்ற மதத்தலைவர்கள் என உலகம் முழுவதுமுள்ள பிரபலங்களின் மெழுகுச் சிலைகள் நீண்டுகொண்டே சென்றன.



சிலைகளைப் பார்வையிட்டு முடித்து அடுத்த தளத்திற்குச் சென்றோம். முன்னர் கொலைத் தண்டனை நிறைவேற்றிய முறையை விளக்கும் சிலைகளின் செயன்முறைக் காட்சிகள் காணப்பட்டன. சில சிலைகளாகவும் வைக்கப் பட்டிருந்தன. கழுவேற்றுதல், முள்ளுச் சக்கரத்திலிடுதல், கத்தியால் தலையை துண்டித்தல் போன்றன இதற்குள் அடங்கும். இவற்றின் பின்னால் கையில் விளக்கு ஏந்திய படி தாயொருத்தி பிணக் குவியல்களுக்குள் யாரையோ தேடிக் கொண்டிருந்தாள். இதுவரை பிரபலங்களைப் பார்த்துவந்த எமக்கு மனதிற்கு வேதனையைக் கொடுத்தன இவை.

தொடர்ந்து சென்ற இடம் இருளான பகுதியாக இருந்தது. பன்னிரெண்டு வயதுக்குக் குறைந்தவர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள், இரத்த அழுத்தம் உள்ளவர்கள் அந்தப் பகுதிக்குச் செல்லவேண்டாம். என்ற அறிவிப்பு அங்கு காணப்பட்டது. விபரம் அறியாதவர்களாக அங்கிருந்த சுரங்கத்திற்குள் நுழைந்தோம். முற்றிலும் இருள் மூடியிருந்தது. ஒருவர் பின் ஒருவர் செல்வதால் பாதையில் சங்கடம் இருக்கவில்லை. பாதை திருப்பங்களில் துளிர் ஒளி இருந்தது.

சுரங்கத்தில் நுழைந்ததும் சட்டெனத் தோன்றி காதோரம் உரத்துக் கூக்குரலிட்டும், பயங்கர ஒலி எழுப்பியும், கட்டடம் உடைந்து நொருங்குவது போன்ற ஒலியை உண்டாக்கியும் பயத்தை ஏற்படுத்தினர். இருளிலிருந்து

கோரமான உருவம் ஒன்று வீரிட்டுக் கத்தியபடி எங்கள் முன் பாய்ந்தது. அந்த இடத்தால் சென்ற பலரும் பயத்தினால் அலறினார்கள். சிதைவடைந்த முகத்தோடு ஒருவன் தவழ்ந்து வந்து காலடியில் பயமுறுத்திட துள்ளிப் பாய்ந்தோம். அதைத் தாண்டிச் செல்ல ஆடைகளில் இருந்து இரத்தம் சொட்டச் சொட்ட ஒருவன் எங்களை நோக்கி கைகளை நீட்டியபடி ஓடி வந்தான். பலரும் அலறியடித்தபடி ஓடினர். இதயத்துடிப்பு அதிகரிக்காத எவரும் அங்கு இருக்கமுடியாது. உண்மையில் இருதய பலவீனமானவர்கள் செல்லவே கூடாதுதான்.

இதயத் துடிப்பு சீராகி பயம் நீங்க சற்று நேரமெடுத்தது. பின்னர் 'பிளனட்டோறியம்' என்று குறிக்கப்பட்டுள்ள கட்டடத்துக்குச் சென்றோம். அங்கு டிஜிட்டல் தொழிநுட்பம் மூலம் ஆகாயத்தை, பிரபஞ்சத்தை வட்ட வடிவிலான திரையில் தோற்றுவித்து அதிலே கோள்கள் சுழல்வது காண்பிக்கப் பட்டது. அத்துடன் கோள்களுக்கு இடையிலான துவாரங்கள், கோள்களின் உருவ வேறுபாடுகள், இரவு பகல்களின் தோற்றங்கள் அத்தனையும் தத்ரூபமாக அமைந்திருந்தன.



கீழ்த்தளத்தில் பிறி தொரு சுரங்கம். அதனுள், இரும்பு ஓடுதளத்தில் பிணைத் தவாறு இரண்டு இருக்கை களைக் கொண்டதும், 'Taxi' என எழுதப்பட்டதும், பழமை யின் மாதிரி தானுந்து போல அமைக்கப்பட்டதும், மேற் பகுதி திறந்ததுமான ரக்ஸிகள் தொடராக, மெதுவாக வந்து கொண்டிருந்தன. தரிக்காமல் தொடர்ந்த ரக்ஸிகளில் ஆட்கள் ஏறிக்கொண்டே இருந்தனர். நாமும் ஒன்றில் ஏறிக் கொண்டோம்.

10 மீற்றர் பயணித்ததும் முன்னால் குறுக்காக இரும்புச் சட்டம் எம்மை நெருங்கி வந்து, ரக்ஸியிலிருந்து இறங்கவிடாமல் தடுத்து நின்றது. இருளான சுரங்கத்தினுள்ளே தொடருந்துபோல இருந்த பயணத்தில், அதிசய உலகினில் பயணிப்பதுபோன்ற உணர்வு. பாதையின் இருபக்கமும் 1600ஆம் ஆண்டு முதலான பிரித்தானிய அரசர்களின் வரலாற்றைச் சித்திரிப்பவையாக மேடைகள் இருந்தன. அவற்றில் பண்டைய அரசர்கள், மகாராணிகள், பிரபுக் கள், வாளேந்திய வீரர்கள், சேக்ஸ்பியர் போன்ற அறிஞர்கள், பிச்சைகக்காரர், கோமாளிகள் எனப் பலரும் நின்று பயணிகளுக்கு கையசைத்தார்கள். சிலர் தலை அசைத்துப் புன்னகைத்தார்கள். ஒவ்வொரு மேடையையும் நெருங்கும் போது அதற்கு நேராக நாம் பயணித்த ரக்ஸியும் திரும்பி எமது முழுமையான பார்வைக்கு வழிவகுத்தது.

ஒவ்வொரு காட்சியும் அற்புதமும் உயிரோட்டமுள்ள நிகழ்வாக இருந்தது. 1883ஆம் ஆண்டு முதல் யாழ்ப்பாணத்தில், 'உடக்கு' என அழைக்கப் பட்ட மரத்தில் செதுக்கப்பட்ட மனித உருவங்களைக் கொண்டு நிகழ்த்தப் பட்ட 'உடக்குப்பாஸ்' இனை நினைவூட்டத் தவறவில்லை.

சுரங்கத்திலிருந்து மேற்தளத்திற்குச் சென்றோம். அது ஒரு நான்கு பரிமாண (4D) திரைப்பட அரங்கு. அரங்க வாசலில் மக்கள் கூட்டமாக நுழையக் காத்திருந்தனர். ஏற்கெனவே முப்பரிமாண (3D) திரைப்படங்களைப் பார்த்திருக்கிறேன். நீளம் - அகலம் ஆகிய இரு பரிமாணங்களைக்கொண்ட திரையில், நீண்ட காலமாகப் சினிமாப் படங்களைப் பார்த்த பலரும் நீளம் - அகலம் - உயரம் ஆகிய முப்பரிமாணங்களைக் கொண்ட திரையில் துல்லிய மாகத் தெரியும் முப்பரிமாணக் காட்சிகளை, அதற்கென வழங்கப்படும் கறுப்புநிற மூக்குக் கண்ணாடியை அணிந்துகொண்டு பார்த்திருப்பீர்கள்.

படத்தில் ஒருவர் கத்தியை எடுத்து வீசும்போது அந்தக் கத்தி எம்மை நோக்கி வருவதைப் போன்று நாம் சடுதியாக தலையை குனிந்து கொள்வோம்.



தூரத்திலிருந்து பறந்துவரும் பறவைகள் எம்மை நோக்கி வந்து தலைக்கு மேலாகப் பறந்து செல்லும். இதுபோன்ற தன்மையுள்ள காட்சிகளையே முப்பரிமாணத் தன்மை கொண்ட திரைப்படங்களில் பார்த்திருக்கின்றோம். நான்கு பரிமாணம் புதிது என்பதால் எவ்வளவு நேரம் தாமதித் தாலும் பார்த்துச் செல்லவேண்டுமென்ற ஆவலில் காத்திருந்தோம்.

நாம் எதிர்பார்த்ததுபோல இல்லாமல் விரைவாகவே உள் செல்ல சந்தர்ப்பம் கிடைத்தது. அனைவருக்கும் கறுப்பு நிறமான மூக்குக் கண்ணாடி வழங்கப்பட்டது. குறைந்த ஒளியாகவிருந்த திரையரங்கினுள் நுழைந்து, சொகுசான இருக்கையில் அமர்ந்து, கண்ணாடியை அணிந்து கொண்டோம். மின்னொளி அணைக்கப்பட்டதும் செவிகள் அதிரும் ஒலியுடன் காட்சி ஆரம்ப மானது. அது ஒரு 'ஸ்பைடர்மான்' (Spiderman) படம்.

ஒவ்வொரு கணமும் சம்பவ இடத்தில் நின்று பார்ப்பது போன்ற உணர்வு. தத்ரூபமான இசை, பயத்தினால் பல திசையாலும் பறந்து எமது தலையைக் கடந்து செல்லும் பறவைகள், எமது தலைக்கு மேலாக - எம்மைத் தேடி மற்றும் பக்கமாகப் சீறிப் பாய்ந்து வரும் துப்பாக்கிச் சன்னங்கள், மோதலில் விழும் ஒவ்வொரு அடியின்போதும் எம்மைத் தேடிவரும் கைகள், வெடி வைத்துப் பாறை சிதறும் போது எம்மைத் தேடி வரும் கற்துண்டங்கள் - காலுக்கடியில் நிலத்தின் தாக்கம், தண்ணீர் பீறிட்டுப் பாயும்போது - நீர்

வீழ்ச்சியின்போது தெறித்து எம்மை நனைக்கும் நீர்த்துளிகள், சுழன்று காற்று வீசுகின்றபோது எம்மை சூழத் தாக்கி வேகத்தை உணரச் செய்யும் காற்று, அதிர்வுகளின்போது எமது உடலை தாக்கும் அழுத்தம் போன்றவை எந்த வொரு செயற்கைத்தனமும் இல்லாது இருந்தது.

தண்ணீர்த்துளிகள் உடலை முழுமையாகவே நனைத்தது. தடவிப் பார்த்தேன் உடல் சிறிது ஈரமாக இருந்தது. காற்று இயற்கையாகவே உரிய வேகத்தில் வீசி எம்மை நிமிரச் செய்தது. அதிர்வுகளின் தாக்கங்கள் இருக்கை களிலிருந்து உடலைத் தாக்கி நெழிய வைத்தது. இவைபோன்ற பல இயற்கைத் தனங்கள் நான்கு பரிமாணத்தின் சிறப்புகளாக இருந்தன.

1995ஆம் ஆண்டு லண்டன் வந்திருந்தபோது மேடம் துஷாட்ஸ் காட்சியகத்திற்குச் சென்றிருக்கிறேன். அப்போது பயங்கர ஒலி எழுப்பும் சுரங்கம் மற்றும் நான்கு பரிமாண திரையரங்கு இருக்கவில்லை. முன்னையவிட புதிய பல உருவச்சிலைகள் சேர்க்கப்பட்டுள்ளன. இவை இரட்டிப்பு மன நிறைவைத் தந்தது.

தேம்ஸ் நதி

லண்டன் மத்திய பகுதியில் 'வெஸ்ட்மின்ஸ்டர்' குடியிருப்பு பகுதியின் அருகாமையில் ஓடுகின்றது 'தேம்ஸ் நதி'. நெடுந்தொடராக பல இடங்களை தொட்டு ஓடுகின்ற இந்த ஆறு, 'தேம்ஸ் கழிமுக'த்தில் கடலுடன் கலக்கின்றது. என்றுமே வற்றாது ஓடிக்கொண்டிருக்கும் நதியின் இரு பக்க கரைகளிலும் சுவர் அணைகள் கட்டப்பட்டுள்ளன.

ஒவ்வொரு வருடமும் ஜனவரி முதலாம் திகதி புதுவருடம் பிறக்கும் போது இங்கு நடைபெறும் வாணவேடிக்கையைப் பார்த்து மகிழ லண்டன் மாநகரமே கூடிவிடும். 1998ஆம் ஆண்டு புதுவருடத்தை அண்டிய இரண்டு வாரங்கள் லண்டனில் தங்கியிருந்ததால் அதனைப் பார்வையிட முடிந்தது. தானுந்துவில் சென்றால் கணிசமான தூரத்தில் நின்றே பார்க்க முடியு மென்பதால் பேருந்தில் சென்று பார்வையிட்டோம். தேம்ஸ் நதியில் மிதக்கும் நீரூர்திகளில் வாணவெடிகள் வைக்கப்பட்டு தொடராகப் 10 நிமிடங்களுக்கு மேலாக அற்புதமான வாண வேடிக்கை நடைபெற்றது.


'பெல்பாஸ்ற்' போர் நீரூர்தி

தேம்ஸ் நதியில் பய ணஞ்செய்து இடங்களைப் பார்வையிடும் நோக்கில் வெஸ்ட்மின்ஸ்டர் பகுதியி லுள்ள தேம்ஸ் நதி துறைமு கத்துக்குச் சென்றோம். பத்து நிமிட இடைவெளியில் தொட ராகப் புறப்பட்ட லோஞ்சி


களில் திரளான மக்கள் பயணிப்பதைக் காணக்கூடியதாக இருந்தது. இவர்களில் சிலராக நாமும் நானூறு வரையான இருக்கைகளை உடைய நீரூர்திக்கு ஒத்ததான 'சிற்றி குருஸ்' என்னும் இருதட்டு லோஞ்சியில் ஏறி எமது பயணத்தைத் தொடர்ந்தோம். கண்ணுக்கெட்டிய தூரம்வரை பல அளவுகளிலான லோஞ்சிகள் போவதும் வருவதுமாக இருந்தன. விசை படகுகளிலும் பயணிகள் உயிர்காப்பு அங்கி அணிந்தவாறு பயணித்தனர்.

லோஞ்சியில் மலகூடம், சிற்றுண்டிச்சாலை போன்ற வசதிகள் இருந்தன. இரண்டு தட்டுகளிலும் சுதந்திரமாகச் சென்று வரக்கூடியதாக நடைபாதை இருந்தது. லோஞ்சி சென்ற பாதையின் இரு மருங்கும் உள்ள இடங்கள், குடியிருப்புகள், நெடிதுயர்ந்த கட்டடங்கள், விசேட சிறப்புக்கள் பற்றிய விளக்கத்தை ஒலிபெருக்கி வாயிலாகக் கேட்கக்கூடியதாக இருந்தது. 'வெஸ்ட்மின்ஸ்டர் தேவாலயம்', 'வெஸ்ட்மின்ஸ்டர் அரண்மனை', 'பிக்பென் கடிகாரக் கோபுரம்', 'வெஸ்ட்மின்ஸ்டர் பாலம்', 'லண்டன் கண்', 'மிலேனியம் பாலம்', 'லண்டன் பாலம்' போன்றவைக்கு நேராக லோஞ்சி வருகையில் அவை பற்றிய தகவல்கள் கூறப்பட்டன.

லண்டன் பாலத்தை நெருங்கியபோது அது பற்றிய சிறப்புக்கள் கூறப்பட்டது. இப்பாலத்தால் கொண்டுவரப்பட்ட 'பெல்பாஸ்ற்' (Belfast) பெயரையுடைய பிரமாண்டமான போர் நீரூர்தி அங்கே தரித்து நின்றது. இந்நீரூர்தியானது 06.06.1944 அன்று பிரான்ஸ் / 'நோர்மாண்டி' யுத்தகள தரையிறக்கத்திற்குப் பயன்படுத்தப்பட்ட நீரூர்திகளில் ஒன்றாகும். இப்போது அதற்கு ஓய்வு கொடுக்கப்பட்டுள்ளது. பயணத்தின் இறுதி இடமான பழைய றோயல் கடற்படைக் கல்லூரி பற்றிய தகவலும் அறிவிக்கப்பட்டது.

லண்டன் பாலம்

லண்டன் பாலம் என உலகப் பிரசித்தி பெற்ற இந்தப் பாலத்தின் இன்னொரு பெயர் 'கோபுரப் பாலம்' (Trower Bridge). தேம்ஸ் ஆற்றை ஊடறுத்து அமைந்துள்ள தாம்போதியில் கட்டப்பட்டுள்ளது இக் கொடுங்கைப் பாலம். முன் பொரு காலத்தில் பெரிய துறை முகமாக விளங்கிய அந்த இடத் திலேயே 1894இல் இந்தப் பாலத்தை அமைத்துள்ளனர். லண்டனின் முக்கிய அடை யாளமாகத் திகழும் இந்தப் பாலம் 43 மீ. உயரமும் 69 மீ. நீளமும் கொண்டது. இரண்டு கோபுரங்கள் தாங்கும் வகை யில் கோதிக் கட்டடப்





பாணியில் கட்டப்பட்டுள்ளது இந்தப் பாலம்.

இப்பாலத் தாம்போதியின் ஆரம்ப மற்றும் முடிவுக் கரைகளில் அரச அலுவலகங்கள், ஹொட்டல்கள், றெஸ்ற் ரோறன்ஸ்கள், வீடுகள், மியூசியம் என பிரமாண்டமான கட்டடங்கள் பல காணப்படுகின்றன. பாலத்தின் ஊடாகத் தாம்போதியில் பேருந்துகள், தானுந்துகள் என பல வாகனங்கள் எதிராவும் சார்பாவும் ஓடிய வண்ணமேயுள்ளன. தாம்போதியின் இருமருங்கிலும் பாதசாரிகளுக்கான பாதைகள் அமைக்கப்பட்டு இடையிடையே இருக்கைகள் போடப்பட்டுள்ளன.

கழிமுகத்திலிருந்து தேம்ஸ் நதி வழியாக வரும் உயரமான நீரூர்திகள் நுழைவதற்கு வசதியாக பாலம் நடுவில் இரண்டாகப் பிரிந்து மேலெழுந்து வழிவிடும் கொடுங்கைப் பொறிமுறையுடன் 'லண்டன் பாலம்' அமைக்கப் பட்டுள்ளது. நீரூர்திகள் பாலத்தை நெருங்கி கடக்க முற்படும்போது மற்றும் பாலம் மேலெழுந்து நீரூர்திகள் நுழைந்து வெறியேறும்போது அதனைப் பார்க்க மிக அழகாக இருக்கும். இதனை எந்நேரமும் பார்க்க முடியாது. எனக்கு ஒரு தடவை மட்டும் சந்தர்ப்பம் கிடைத்தது.

பழைய றோயல் கடற்படைக் கல்லூரி

லண்டன் பாலம் கடந்து சற்றுத் தூரம் ஓடிய லோஞ்சி 'கிறீன்விச்' *(Greenwich)* எல்லைப் பகுதியில் தரித்ததும் அனைவரும் இறக்கப்பட்டனர். கிறீன்விச் எல்லை தேம்ஸ் ஆற்றில் பெரிய மிதவை மூலம் அடையாளமிடப் பட்டிருந்ததை காணமுடிந்தது. அந்தப் பகுதியில் காணப்பட்ட பெரியதொரு கட்டடத் தொகுதி பழைய றோயல் கடற்படைக் கல்லூரி வளாகமாகும். 1427



ஆம் ஆண்டு குளோஸ்டர் பிரபுவால் இந்தப் பகுதியில் கட்டப்பட்ட பெல்லா நீதிமன்றம் வரலாற்றுச் சிறப்பைப் பெற்றது. ஆறாவது ஹென்றி மன்னனால் அக்கட்டடம் தனது மனைவி மாகிறெற்றிற்கு இருப்பிடமாக ஒப்படைக்கப்பட்ட பின்னர் அரச குடும்பத்தினரின் இருப்பிடமாக மாறியது.



1491இல் எட்டாம் ஹென்றி மன்னன், 1516இல் முதலாம் மேரி அரசி, 1533இல் முதலாம் எலிசபேத் அரசி போன்றோர் பிறந்த இடமாகவும் இருந்துள்ளது. இந்த அரச இருப்பிடத்தின் மையத்தை தேம்ஸ் ஆற்றை நோக்கி குறுக்காக ஊடறுத்தாக 'கிறீன்விச் எல்லை' உள்ளமை சுறிப்பிடத் தக்கது. இக்கட்டடத்திற்கு முன்னால் வெளிவிட்டு இருபக்கமும் ஒரே அளவில், ஒரே அமைப்பில் புதிய அரச இருப்பிடமும் சிற்றாலயமும் 1664இல் கட்டப்பட்டன.

இவற்றுக்கு முன்னால் 1669-1672 இடைப்பட்ட ஆண்டுகளில் இருபக்கமும் ஒரே அளவில் ஒரே வடிவமைப்பில் அமைப்பில் கடற்படையினருக்கென 'றோயல் மருத்துவமனை'க் கட்டடங்கள் இரண்டு கட்டப்பட்டன. தேம்ஸ் நதியிலிருந்து நுழைவதற்கான வாசலும் நதியோரம் அமைக்கப்பட்டுள்ளது. இவை இரண்டு கட்டடங்களும் 1869 முதல் 'றோயல் கடற்படைக் கல்லூரி'யாக மாற்றப்பட்டது.

1998 முதல் 'கிறீன்விச் அறக்கட்டளை' இவற்றைப் பொறுப்பேற்ற பின்னர் 'கடல் கிறீன்விச் கட்டடக்கலை மையமாக' மாறியுள்ளது. இக்கட்டடங்கள் யாவும் கிறீன்விச் புள்ளியை மையமாகக் கொண்டு இரு பக்கங்களிலும் கட்டப்பட்டவை. இதுபோன்ற வேறுபல கட்டடங்கள் அச் சுற்றாடலில் வரலாற்றைக் கூறுவனவாகவும் உள்ளன.

கடல் கிறீன்விச் கட்டடக்கலை மையத்துக்கு மேற்குப் பக்கத்தால் 'கிறீன்விச் அருங்காட்சியகம்' உள்ளது. அந்த அருங்காட்சியகத்தில் வரலாற்றுச் சான்றுகள் பல காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. ஒரு மணித்தியாலம் வரை பார்வையிட்டோம். பல தகவல்களை அறியக்கூடியதாக இருந்தது.

அருங்காட்சியகத்திற்கு மேற்குப் பக்கம் கடற்படையினரின் பயன்பாட்டிலிருந்த உலர் நீரூர்த்தித் துறையில் 'குட்டி சார்க்' (Cutty Sark) என்னும் பெயரையுடைய பெரியதொரு பாய் நீரூர்தியும் அதனுள் அருங்காட் சியகமும் இருந்தது. கடற்படையினரின் உலர் நீரூர்த்தித் துறை தேம்ஸ் ஆற்றிலிருந்து பிரிக்கப்பட்டு நீர் புகாதவாறு தடுக்கப்பட்டு குட்டி சார்க் வைக்கக்கூடிய வகையில் செம்மைப்படுத்தப்பட்டுள்ளது.

அந்நீரூர்தியானது வலுவான காற்றுக்கேற்ப வடிவமைக்கப்பட்ட பிரித்தானிய 'நறுக்கிகள்' (Clippers) கப்பலாகும். 'யோண் வில்லிஸ்' என்பவரால் 22.11.1869 முதல் 1895 வரை சீனா, இந்தியா போன்ற நாடுகளுக்கு வர்த்தகத்திற்கு பயன்படுத்தப்பட்டது இக்கப்பல். மேலும் இருவர்


'குட்டி சார்க்' பாய் நீரூர்தி

அடுத்தடுத்து பயன்படுத்திய பின்னர் 1938 முதல் 'குட்டி சார்க்' பாதுகாப்புச் சங்கத்தின் பராமரிப்பின் கீழ் கொண்டு வரப்பட்டது.

மூன்று மணித்தியாலங்கள் வரை பலவற்றையும் பார்வையிட்டுப் பின்னர் லோஞ்சியிலேறி பயணித்த ஆற்றுப் பாதையாலே திரும்பி வந்தோம். மீண்டும் ஆற்றோரப் பகுதிகளை பார்வையிட்டவாறு வந்த நாம் லண்டன் கண் ஓரம் இருந்த துறையில் இறங்கிக்கொண்டோம்.

லண்டனின் கண்


வெஸ்ட்மின்ஸ்டர் பகுதியில் தேம்ஸ் நதியின் தெற்குப் பக்கம் இரும்புச் சட்டங்களால் அமைக்கப்பட்டுள்ள புதுமைக்குச் சான்றாக விளங்கும் பிரமாண்டமான சக்கரமே 'லண்டனின் கண்' (*London Eye*). இது ஐரோப்பாவில் பிரபலமான சுற்றுலா மையமாக விளங்குகின்றது. உயரமாகக் காணப்படும் 'லண்டனின் கண்' சக்கரத்தின் விட்டம் 120 மீற்றர். மேல்மட்ட உயரம் 135 மீற்றராகும். இதற்கு 1,700 தொன் இரும்பு பயன்படுத்தப்பட்டு, பலமான கொங்கிறீற் அடித்தளத்தில் இடப்பட்டதாக அறியப்பட்டது.

பலநூறு திருமண விழாக்கள், காதலர் தினக் கொண்டாட்டங்கள் பலவற்றைக் கண்ட இந்த லண்டனின் கண்ணில் ஏறிப் பார்க்கச் செல்பவர்களுக்கு அதனில் ஏறுவதற்கு முன்னர், நான் ஏற்கெனவே மேடம் துஷாட்ஸ் காட்சியகத்தில் பார்வையிட்டதைப் போன்ற நான்கு பரிமாணங்கள் கொண்ட திரைப்படத்தை காண்பிக்கின்றார்கள். நாமும் அரங்கில் நுழைந்தோம்.

அந்தப் படத்தில் சிறுமி ஒருத்தி தனது தந்தையாருடன் 'லண்டனின் கண்' கண்ணாடிக் கூண்டுக்குள் இருந்து லண்டன் மாநகரைப் பார்க்கிறாள். அவள் காணும் காட்சிகளை நாமும் பார்த்து உணர்ந்து கொள்கிறோம். படத்திலே தேம்ஸ் நதி, பாராளுமன்றம், பிக்பென் கடிகாரக் கோபுரம், தேம்ஸ் நதியின் மேலுள்ள பாலங்கள் எல்லாம் கைக்கெட்டிய தூரத்தில் எம்மை நோக்கி வந்து போவதுபோல் உள்ளன. எமது கைகள் எம்மை அறியாமலே தொட்டிட நீளுகின்றது.

தேம்ஸ் நதியில் இடம்பெறும் வாணவேடிக்கையின்போது வெடித்துச் சொரியும் நெருப்புப் பொறிகள் எம்மைத் தாக்குமோ? என்ற பயத்தால் சுதாரித்துக் கொள்ளுகிறோம். இலண்டன் நகரத்தில் கொட்டும் பனிப் பொழிவில் நாமும் நனைகின்றோம். திரையரங்கினுள் உணர்ந்த செயற்கையான பனிப்பொழிவு உட்பட பல புதிய பரிமாண யுக்திகளை அதிநவீன

தொழிநுட்பம் மூலம் ஏற் படுத்தி எம்மைச் மெய் சிலிர்க் கச் செய்கிறார்கள். இயற்கை அழகைச் சித்திரிக்கும் காட்சி கள் அவற்றிற்கேற்ற நவீன பாணியிலான இசை மனதிற்கு இதமாக இருந்தது.



திரையரங்கிலிருந்து புறப்பட்டு லண்டனின் கண் சக்கரத்தில் சுழன்று லண்டன் மாநகரைப் பார்வையிடப் புறப்பட்டோம். அந்தப் பிரமாண்டமான சக்கரத்தில் முட்டை வடிவிலான 32 கண்ணாடிக் கூண்டுகள் பொருத்தப் பட்டுள்ளன. ஒவ்வொரு கண்ணாடிக் கூண்டிலும் ஒரே நேரத்தில் 25 பேர் பயணம் செய்யலாம். கூண்டின் மத்தியில் மேசை ஒன்று இருந்தது. நாங்கள் கூண்டில் ஏறி அமர்ந்ததும் மெல்லச் சுற்றத் தொடங்கியது சக்கரம்.


சக்கரத்தின் சுழற்சியால் நாம் மேல்நோக்கி உயர்ந்தவாறே இருந் தோம். கூண்டின் உள்ளே இருந்தவாறு எந்தத் தடையுமின்றி லண்டன் நகரக் காட்சிகளைப் பார்க்கக்கூடியதாக இருந்தது. சக்கரம் மெதுவாகச் சுழருவதால் பயமற்ற நிலையும் இருந்தது. சக்கரம் சுழன்று சுழன்று இருக்கைப் பெட்டிகள் மேலே உயர உயர இருபக்கத்தாலும் லண்டன் நகரின் அழகு படிப்படியாகத் தெரிந்தது.

தேம்ஸ் நதியின் அழகு, அதில் பயணிக்கும் பயணிகள் லோஞ்சிகள், படகுகள், நதியின் மேலுள்ள பாலங்கள், பிக்பென் கடிகாரக் கோபுரம், பாராளுமன்றம், தேவாலயங்கள், பிரதான வீதியில் நெருக்கமாகப் பயணிக்கும் மக்கள் போன்றவை தெட்டத் தெளிவாகத் தெரிந்ததால் கண்ணுக்கு விருந்தாக இருந்தது.

மெல்ல மெல்ல உயர்ந்த கூண்டுகள் உச்சத்துக்குச் சென்றதும் உள்ளமும் உச்சத்துக்குச் சென்றது. கண்ணுக்கு எட்டிய தூரம்வரை கண் கொள்ளாக் காட்சியாகவே இருந்தது. சக்கரம் சுழர ஆரம்பித்த நேரம் முதல் உயர்ந்து செல்கையில் படிப்படியாகத் தெரிந்த, இறங்கிச் செல்கையில் படிப்படியாக மறைந்த தொலைவுக் காட்சிகள் மறக்கமுடியாதவை.

வெஸ்ட்மின்ஸ்டர்

லண்டன் மையப் பகுதியான தேம்ஸ் நதியின் வட கரையில் அமைந்துள்ள ஒரு பண்டைய குடியிருப்புப் பகுதியே வெஸ்ட்மின்ஸ்டர் *(Westminster)*. லண்டனுக்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகளை பெரிதும் கவரும் இடமாக இந்த நகரப் பகுதி விளங்குகின்றது. ஏழாம் நூற்றாண்டுக்கு முன்னரே குடியிருப்புகளுடன் சிறப்புற்றிருந்த இந்நகரம், பல அழிவுகளையும்


தூய மார்கிரெட் தேவாலயம்

மீட்சியையும் பெற்று இப்போதும் சிறப்பு குன்றாது மிளிர்கின்றது.

வரலாற்றின்படி, மத்தியதர வர்க்க மற்றும் மேற்குப் பகுதியான இந்தப் பகுதியில் 'மேற்கு மாதா ஆலயம்' *(West minster)* அமைந் திருந்ததாலே அப்பெயர் தோன்றியது. இந்தக் குடியிருப்பு பிரதேசம்தான் இங்கிலாந்து அரசின் இருப்பிடமா கவும் பின்னர் பிரித்தானிய அரசின் இருப்பிடமாகவும் ஆயிரம் ஆண்டு களாக இருந்து வந்திருக்கிறது.

லண்டனின் வரலாற்றுச் சிறப்புமிக்க, பெருமைமிக்க பல இடங் கள் இங்குதான் உள்ளன. உலக பாரம்பரிய களங்களில் ஒன்றான வெஸ்ட் மின்ஸ்டர் அரண்மனை (ஐக்கிய இராச்சியத்தின் நாடாளுமன்றம்), பக்கிங்காம் அரண்மனை, மேற்கு மாதா தேவாலயம் என அழைக்கப்பட்ட தூய மார்கிரெட் தேவாலயம், இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் கத்தோலிக்க மக்களின் தாய் ஆலயமாகவும் வெஸ்ட்மின்ஸ்டர் பேராயரின் மறைமாவட்ட ஆலயமாகவும் மற்றும் மண்டலப் பெருங்கோயிலாகவும் உள்ள இயேசுக் கிறிஸ்துவின் தூய இரத்தத்துக்கு நேர்ந்தளிக்கப்பட்ட புனித ஸ்டீபன் தேவாலயம் என்னும் வெஸ்ட்மின்ஸ்டர் பேராலயம், புனித பெனடிற் துறவியர் இல்லம், இங்கிலாந்து திருச்சபைக்குரிய புனித பீற்றர் தேவாலயம் என்னும் வெஸ்ட்மின்ஸ்டர் அபி போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

பிக்பென் கடிகாரக் கோபுரம் (எலிசபேத் கோபுரம்)

உலகப் புகழ் பெற்ற 'பிக்பென்' கடிகாரக் கோபுரம் வெஸ்ட் மின்ஸ்டர் அரண்மனையின் வடக்கு முனையில் அமைந்திருக்கிறது. 'சென் ஸ்டீபன் டவர்' மற்றும் 'குளொக் டவர்' என்று அழைக்கப்பட்டதும் பரவலாக 'பிக்பென்' என அழைக்கப்படுவதுமான இந்தக் கடிகாரக் கோபுரம், 2012இல் இங்கிலாந்து அரசி எலிசபேத் அவர்கள் அரியணை ஏறிய 60 வருடங்கள் பூர்த்தியைக் கொண்டாடியபோது 'எலிசபேத் கோபுரம்' என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

*16.10.1834*இல் வெஸ்ட்மின்ஸ்டர் அரண்மனை தீ விபத்தின் பின்னர் புனரமைப்புச் செய்யப்பட்டவேளையிலே பிக்பென் கடிகாரக் கோபுரக் கட்டுமானப்பணி ஆரம்பமாகியது. *10.04.1858* இல் கோதிக் கட்டடக்கலையின் புத்தாக்கப் பாணியில் கட்டி முடிக்கப்பட்ட இந்த கடிகாரக் கோபுரத்தின் உயரம் *316* அடி. *(96* மீ.*). 200* அடிவரை செங்கற்களால் கட்டப்பட்டுள்ளது.

மணல் நிறத்திலான சுண்ணாம்புக் கலவை மேற்புறப் பூச்சுடன் கூடியது.

நான்கு பக்கங்களைக் கொண்ட கடிகாரக் கோபுரங்களில் இதுவே உலகின் மிகப்பெரியதாகும். கோபுரத்தின் உயரத்தை பொறுத்தவரை வெஸ்ட்மின்ஸ்டர் அரண்மனையிலுள்ள விக்டோரியா கோபுரத்தைவிட 2.5 மீ. குறைவாகவே உள்ளது. கோபுரத்தின் உச்சியின் கூர்மையான முகப்பில் மின் விளக்குப் பொருத்தப்பட்டுள்ளது. வெஸ்ட்மின்ஸ்டர் பாராளுமன்றத்தில் நிகழ்வுகள் நடைபெற்றுக்கொண்டிருப்பதைத் தெரிவிப்பதற்கு மின் விளக்கில் சிவப்பு ஒளி ஏற்றப்படுமாம். இவ்விளக்கு 1885ஆம் ஆண்டு அரசி விக்டோறியாவின் வேண்டுகோள்படி நிறுவப்பட்டது.

கடிகாரத்தில் இலக்கம் பொறிக்கப்பட்ட பகுதியானது, மஞ்சள் படிந்த கண்ணாடிபோன்ற ஒருவகை மாணிக்கக் கண்ணாடிக் கல் 23 அடி விட்டத்தில் பதிக்கப்பட்டுள்ளது. கடிகாரத்தின் பெரிய முள்ளின் நீளம் 14 அடி. சிறிய முள்ளின் நீளம் 8 அடி 10 அங்குலம். கடிகாரத்தினுள்ளே ஒவ்வொரு கால் மணித்தியாலத்தில் ஒலிப்பதற்கு நான்கு மணிகளும், மணித்தியாலத்தில் ஒலிப்பதற்கு பெரிய மணியுமாக ஐந்து மணிகள் வைக்கப்பட்டுள்ளன. பெரிய மணியின் நிறை 13.8 தொன்.



மணிக்கூண்டிலிருந்து மணித்தியாலம் தோறும் எழும் இனிமையான மணியோசை லண்டனில் பல கி.மீ. வரை கேட்கிறது. மதியம் 12.00 மணி அடிக்கும் போது எழும் ஓசையைக் கேட்பதற்குப் பலரும் ஆர்வம் காட்டுவர். இங்கிலாந்தில் பிரித்தானிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஒலி, ஒளிபரப்பாகும் அனைத்து நிகழ்ச்சிகளுக்கும் சரியான கால அளவு பிக்பென் மணி ஓசைதான்.


இரண்டாம் உலகப் போர்க் காலத்தில் 10.05.1941 அன்று ஜேர்மனியர்கள் குண்டுத் தாக்குதலில் கடிகார முகப்புகள், கூர்மையான உச்சி கோபுரம் தவிர்ந்த இரண்டு கூரைப் பிரிவுகள் சேதமடைந்து பின்னர் புனரமைக்கப்பட்டதாக அறியப்படுகிறது.

வெஸ்ட் மின்ஸ்டர் அரண்மனை

தேம்ஸ் ஆற்றின் வடக்குக் கரையை எல்லையாகக் கொண்டு, வெஸ்ட்மின்ஸ்டர் குடியிருப்புப் பகுதியில், வரலாற்றுச் சிறப்புமிக்க வெஸ்ட்மின்ஸ்டர் மடத்திற்கு அண்மையில், பிரமாண்டமான கட்டடத் தொகுதியாக அமைந்துள்ளது ஐக்கிய இராச்சியத்தின் நாடாளுமன்றக்

கட்டடம். இது வெஸ்ட்மின்ஸ்டர் அரண்மனை என்றே பெரும்பாலா னோரால் அழைக்கப்படுகிறது. ஐக்கிய இராச்சிய நாடாளுமன்றத்தின் மக்களவை, பிரபுக்களவை போன்றவற்றின் அமர்வுகளுக்குரிய இடமாகவும் உள்ளது. தொகுதி வாரியாக மக்களால் தெரிவுசெய்யப்பட்ட 646 உறுப்பினர் களைக் கொண்டதாக மக்களவையும், வம்சாவளியாகவோ அல்லது கௌரவிக்கப்பட்டோ உயர்குடியான 706 உறுப்பினர்களைக் கொண்டதாக பிரபுக்களவையும் உள்ளன. பிரபுக்களவையில் 92 உறுப்பினர்கள் பிறப்புரிமை யால் உள்வாங்கப்பட்டவர்கள்.

பதினொராம் நூற்றாண்டில் கட்டப்பட்ட அரண்மனை 1512ஆம் ஆண்டு ஏற்பட்ட தீ விபத்தில் அழிவுற்றதனால் புனரமைப்புச் செய்யப்பட்டு இங்கிலாந்து அரசர்களின் முதன்மைக் குடியிருப்பாகவும் மக்கள் பிரதிநிதிகள் ஒன்றுகூடி நாடாளுமன்றச் செயற்பாடுகளை நடத்தும் இடமாகவும் இருந்தது. 16.10.1834ஆம் ஆண்டு சமையலறை அடுப்பிலிருந்து மூண்ட தீயினால் மீண்டும் ஏற்பட்ட தீ விபத்தில் அரண்மனை தீக்கிரையானது. இந்த விபத்தில்



புனித ஸ்டீபன் தேவாலயம், தூய மார்கிடெட் தேவாலயம் மற்றும் வெஸ்ட் மின்ஸ்டர் மண்டபம் போன்றவையே எஞ்சியிருந்தன. அதனைத் தொடர்ந்து புனித ஸ்டீபன் தேவாலயத்தின் கீழ்ப் பகுதி யொன்றில் நாடாளுமன்றச் செயற்பாடுகளனைத்தும் இடம் பெற்றன.

ஆங்கில செங்குத்து கோதிக் கட்டடக்கலையின் புத்தாக்கப் பாணியில் புதிய அரண்மனை கட்டும் பணி 1840இல் தொடக்கப்பட்டு 1870இல் முடிக்கப்பட்டது. பழைய அரண்மனையின் எஞ்சியிருந்த முற்றங்கள் இரண்டுடன் இணைத்து எட்டு ஏக்கர் பரப்பளவில் 1,100 அறைகள், 100 படிக்கட்டுகளுடன் 266 மீ. நீளத்தில், மூன்று முக்கிய கோபுரங்களைக் கொண்டுள்ளது. இவற்றில் அரண்மனையின் தென் மேற்கு மூலையில் உள்ள எண்கோண வடிவிலான விக்ரோறியா கோபுரத்தின் உயரம் 98.5 மீற்றர். தீ விபத்து நடந்தபோது 'கிங் வில்லியம் IV' ஆட்சிக்காலமென்பதால் ஆரம்பத்தில் உயர்ந்த கோபுரம் 'கிங் ரவர்' என்றே அழைக்கப்பட்டது. குறுகிய கோபுரத்தின் உயரம் 91 மீ. ஆகும்.

அரசாங்கச் சடங்குகளுக்கு அரசியின் வசிப்பிடமாக தனது தகுதியையும் கம்பீரத்தையும் தக்கவைத்திருந்ததனால் வெஸ்ட்மின்ஸ்டர் அரண்மனை என மக்களால் அழைக்கப்பட்ட இந்த அரண்மனை, இரண்டாம் உலகப் போர் காலத்தில் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் 14 தடவைகள் குண்டுத்

தாக்குதலுக்கு இலக்காகியிருந்தது. 26.09.1940 அன்று ஜேர்மனியர்கள் குண்டுத் தாக்குதலில் அரண்மனையின் ஒரு பகுதியைச் சேதப்படுத்தியதுடன் 'றிச்சாட்' மன்னனின் சிலையின் கையிலிருந்த வாள் வளைந்து சிலை உடையாதிருந்தது. இதன் காரணத்தால் ஜனநாயகத்தின் வலிமைச் சின்னமாக அந்தச் சிலை பாதுகாக்கப்படுகிறது.


10.05.1941 அன்று நிகழ்ந்த ஜேர்மனியர்கள் குண்டுத் தாக்குதலை அடுத்து 1950இல் கட்டப்பட்டதே தற்போதைய அரண்மனையாகும். அரண்மனையின் தரைத் தளத்தை அலுவலகங்கள், உணவு அறைகள், றெஸ்ரோறன்ஸ்கள் ஆக்கிரமித்துள்ளன. முக்கிய தளமான முதலாவது மாடியில் விவாத அறைகள், நூலகங்கள், அரண்மனை முக்கியஸ்தர் அறைகள் போன்றவையும், இரண்டு மாடிகளில் குழு அறைகளும் உள்ளன.

வெஸ்ட்மின்ஸ்டர் தேவாலயம் (வெஸ்ட் மின்ஸ்டர் அபி)

ஐக்கிய இராச்சியத்தின் குறிப்பிடத்தக்க மதக் கட்டடங்களில் மற்றும் முக்கியமான இருண்ட கட்டடங்களில் ஒன்றாக உள்ளது வெஸ்ட்மின்ஸ்டர் தேவாலயம். இது லண்டன் வெஸ்ட்மின்ஸ்டர் குடியிருப்புப் பகுதியில் வெஸ்ட்மின்ஸ்டர் அரண்மனைக்கு மேற்கே அமைந்துள்ளது.

இத்தேவாலயத்தை 'வெஸ்ட் மின்ஸ்டர் அபி' என்று அழைத்தனர். ('அபி' (Abbey): மடம் அல்லது மடாலயம் எனப் பொருள்படும்.) ஆலயங்களின் பயன்பாட்டைக் கருத்திற் கொண்டு மடாலயம் என அழைக்கும் பழக்கம் அங்கு நெடுங்காலமாக இருந்துள்ளதால் இவ்வாறு அழைக்கப்பட்டிருக்கலாம் எனக் கருதக்கூடியதாக உள்ளது. மேற்கு மாதா ஆலயத்தையும் வெஸ்ட்மின்ஸ்டர் அபி என்றே அழைத்தனர்.

ஐந்தாம் எற்வேட் அரசன் பாவமன்னிப்பு கேட்பதற்கும், தன்னை மற்றும் பாவ மன்னிப்பு கேட்கும் ஏனைய அரசர்களை அடக்கம் செய்வதற்கு மென ஓர் ஆலயம் கட்டத் தீர்மானித்து, 10ஆம் நூற்றாண்டின் மத்தியில் பெனடிக்ற் துறவிகளால் தினசரி வழிபாட்டிற்காக உருவாக்கப்பட்டிருந்த கட்டடத்தை அரசவுடமை யாக்கி, கோதிக் கட்டடக்கலை வடிவமைப்பில் புனித பீற்றர் ஆலயத்தை நிர்மாணித்து 28.10.1065இல் திறந்து வைத் தான். இது பேராயரின் கட்டுப் பாடில்லாது மன்னரின் நேரடிக் கண்காணிப்பில் மறைவழி களின்படி (நியதி) வழிபாடு களை நடத்தும் 'அரசரடி விதிபயில்' ஆலயமாகும்.



'கல்லூரி ஆலயம்' என்றும் அழைப்பர். இது அங்கலோ சக்ஸன் என்னும் துறவியின் இதயமாக இருப்பதாகப் பேசிக்கொள்வார்கள்.

05.01.1066 அன்று ஐந்தாம் எற்வேட் மன்னன் மரணமடைய அவனுடல் ஒரு வாரத்தின் பின்னர் புனித பீற்றர் ஆலய வளாகத்தில் அடக்கம் செய்யப்பட்டது. ஒன்பது ஆண்டுகளின் பின்னர் அவனது மனைவி 'எடித்' மரணமடைய அவளுடலும் அங்கு அடக்கம் செய்யப்பட்டது. தொடர்ந்து இவர்களின் வாரிசான 'இரண்டாம் ஹரோல்ட்' இந்த ஆலயத்தில் முடிசூட்டப் பட்டான். அன்றுமுதல் பிரித்தானிய மன்னர்களின் முடிசூட்டல்கள், அவர்களின் திருமணங்கள், ஆங்கில பிரபலங்கள் - பிரித்தானிய மற்றும் பொதுநலவாய மன்னர்களின் அடக்கங்கள், தேசிய அளவில் பெரு நிகழ்வுகள், கொண்டாட்டங்கள் போன்றவை இங்கே நிகழ்கின்றன.

தற்போது உள்ள பிரமாண்டமான ஆலயத்தின் கட்டட வேலை மூன்றாம் ஹென்றி மன்னனால் 1245ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. நீண்டு சென்ற கட்டுமானப் பணி 1517ஆம் ஆண்டு இரண்டாம் றிச்சாட் அரசனின் காலத்தில் முடிக்கப் பட்டது. எட்டாம் ஹென்றி மன்னனின் ஆட்சியின்போது 1540 முதல் 1556 ஆம் ஆண்டு வரை மறைமாவட்ட பேராயர் வழிநடத்தும் ஆலயமாக இருந்த இவ்வாலயம், 1560 ஆம் ஆண்டு முதல் அரச விசித்திரமான நேரடி இறையாண்மைப் பொறுப்பிற்கு மாற்றப்பட்டது.

'குருசு' வடிவத் தன்மையைக் கொண்டாதாக சற்று மாறுபட்ட அமைப்பில் அமைந்துள்ள பழமையை எடுத்தோதும் இந்த அபி அல்லது தேவாலயம், மஞ்சள் வர்ணத்தால் மெருகூட்டம் பெறுகிறது. கோதிக் புத்துயிராக்க வடிவமைப்பில் கட்டப்பட்டுள்ள தேவாலயத்தின் மேற்குப் பக்கத்தில் இருபுறமும் சதுரமாக வானோக்கி உயர்ந்து நிற்கும் கோபுரங்களும், அவற்றின் மேல் முனைகளில் காணப்படும் கூம்பு வடிவ அமைப்புகளும், தேவாலயத்தை சுற்றிவர மேற்புறமாகவுள்ள அதே கூம்பு வடிவ அமைப்பு களும், சுற்றிவர உள்ள ஓவியங்கள் படிந்த மற்றும் வர்ணக் கண்ணாடிகளும் தேவாலத்தை அழகூட்டி நிற்கின்றன.



தேவாலயத்தில் பழை மையைப் பறைசாற்றி நிற்கும் எண்கோண மண்டபம் காலத் துக்குக் காலம் திருத்தம் செய்யப்பட்ட போதிலும் அதன் நிலப்பரப்பில் பதிக்கப் பட்ட பளிங்குக் கற்கள் இன்றும் அதே நிலையில் அழியாமல் காப்பாற்றப்பட்டு வருகின்றன. பலரும் அதனை வியப்புடனே பார்ப்பர்.

தேவாலயத்தையும் அதனைச் சூழவுள்ள பகுதிகளையும் தமது பாரம்பரிய கலாசார மையமாகக் கருதுவதுடன் உரிய கௌரவத்தையும் கொடுக்கிறார்கள். தேவாலய வளாகத்தில் பளிங்குக் கல் பதிக்கப்பட்ட பல கல்லறைகள் உள்ளன. அரசர்கள், பிரதமர்களுடன் பிரபலமான வைத்தியர்கள், கவிஞர்கள், ஓவியர்கள், நடிகர்கள், மாலுமிகள், அரசியல்வாதிகள் எனப் பலரது உடல் அடக்கம்செய்யப்பட்ட கல்லறைகளே அவையாகும். முதலாம் உலகப்போரின் போது இறந்த போர்வீரர்களின் நினைவாக போர் வீரனின் கல்லறை ஒன்றும் காணப்படுகிறது.


படுத்தவாக்கில் மன்னர்களின் சிலைகள் காணப்படுகின்றன. கவிஞர் களின் மூலை என்ற பகுதியில் ஷேக்ஸ்பியர், ஷெல்லி கீட்ஸ் போன்ற கவிஞர்கள் சிலைகளாக நின்றிருந்தனர். இவர்கள் பற்றிய தகவல்கள் தரையில் பதிக்கப்பட்டுள்ளன.

பக்கிங்காம் அரண்மனை

இங்கிலாந்து அரசரின் அதிகாரபூர்வமான இல்லமும் பணியிடமுமே பக்கிங்காம் அரண்மனையாகும். வெஸ்ட்மின்ஸ்டர் குடியிருப்பு பகுதியில் அமைந்திருக்கும் இந்த அரண்மனை மாநில நிகழ்ச்சிகளுக்கும் முக்கிய விருந்தோம்பலுக்குமான அமைப்பைக் கொண்டுள்ளது. நான் லண்டனுக்கு வந்த காலங்களில் மூன்று தடவைகள் பார்வையிடச் சென்றிருக்கிறேன். எப்போதும் உள்நுழையச் சந்தர்ப்பம் கிடைத்ததில்லை.

பக்கிங்காம் இல்லம் என அறிப்பட்ட இந்த அரண்மனை 1703இல் பக்கிங்காம் பிரபு ஷெவ்வீல்ட்டுக்காகக் கட்டப்பட்டது. 1761இல் மூன்றாம் ஜோர்ஜ் அரசி ஷார்லட்டுக்கான தனிப்பட்ட இல்லமாகப் பெறப்பட்டு அரசியின் இல்லம் என அழைக்கப்பட்டது. 1820இல் நான்காம் ஜோர்ஜ் அரியணை ஏறியவுடன் அதனை சிறிய அரண்மனைக்கேற்ப மாற்றங்களைச் செய்தார். அவரது மறைவுக்குப் பின்னர் 1830இல் சகோதரன் நான்காம் வில்லியம் எற்வேட் என்பவரால் மேலும் விரிவாக்கம் செய்யப்பட்டது.

1837இல் அரசி விக்ரோறியா பொறுப்பேற்ற பின்னர் அரச குடும்பத் தின் மாளிகையானது. 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் முக்கிய கட்டமைப் புகள் கட்டப்பட்டன. 2ஆம் உலகப் போரின்போது ஜேர்மனியர்களின் குண்டு வீச்சால் அழிந்துபோன அரண்மனைத் தேவாலயம் இருந்த இடத்தில் அரசியின் இராஜரீகமான ஓவியச் சேகரிப்புகளுக்கான கலைக் காட்சிக்கூடம் நிறுவப்பட்டு 1962இல் மக்கள் பார்வைக்குத் திறக்கப்பட்டது. விக்ரோறியா அரசியின் சிலை





யொன்று முதன்மை வாயிற் கதவுக்கு வெளியே நிறுவப்பட்டுள்ளது.

இந்த அரண்மனையில் 52 படுக்கை அறைகள், 188 பணியாளர் அறைகள், 92 அலுவலகங்கள், 19 பெரிய அறைகள், 78 கழிப்பறைகள் உள்ளன. அரண்மனையின் பின்புறம் பக்கிங்காம் அரண் மனைப் பூங்காவும், அரச குதிரை லாயங்களும் உள்ளன. முன்னர் இப்பகுதி பண்ணை நிலமாக இருந்தபோது நீர் பெறப்பட்ட ஏரி அரண்மனை முற்றத்தின் கிழக்குப் பக்கத்தில் உள்ளது.

கண்ணைக் கவரும் பூக்கள் அரண்மனைக்குச் செல்லும் வீதியை அலங்கரிக்கின்றன. அவற்றைப் பார்வையிடவும் நிழற்படம் பிடிப்பதற்குமென கூடும் திரளானோரை அங்கு காணலாம். அரண்மனைக்கு முன்னால் உள்ள விக்ரோரியா அரசியின் அழகுச்சிலையை ஒட்டிய படிக்கட்டுகளில் எந்நேரமும் சுற்றுலாப் பயணிகள் நிறைந்தே காணப்படுவர்.

தினமும் அரண்மனையைப் பார்வையிட வரும் பார்வையாளர் அரண்மனையின் முன் ஆடாமல், அசையாமல், கண் இமைக்காமல் நிற்கும் காவலரைப் பார்க்கத் தவறுவதில்லை. பெருங் கூட்டமே அங்கு காணப்படும். பகல் 11.00 மணிக்கு அவர்களின் முறை மாறும் மரபார்ந்த நிகழ்ச்சி நடை பெறும்வேளை அக்காட்சியைக் பார்ப்பதற்கென்றே திரளானோர் காத்திருப்பர். நானும் ஒருதடவை வெகு நேரமாகக் காத்திருந்து பார்வை யிட்டேன். காத்திருந்ததன் பயனை கண்டு மகிழ்ந்தேன்.

வோல்சிங்கம் மாதா ஆலயம்

லண்டன் நகரிலிருந்து 150 கி.மீ. தூரத்திலுள்ள பழமை வாய்ந்த ஆலயமே 'வோல்சிங்கம் மாதா ஆலயம்' *(Our Lady of Walsingham)*. யாழ்ப்பாணம் சில்லாலையில் அமைந்துள்ள கதிரை மாதா ஆலயத்தில் உள்ள மாதா சுரூபத்தை ஒத்ததாக வோல்சிங்கம் மாதா சுரூபம் காணப்பட்டது. அழிவுகள் பலவற்றிலிருந்து மீண்டெழுந்தும் அமைதிக்கு எடுத்துக்காட்டாக இருக்கும் அந்த ஆலயத்திற்கு 1998 ஆம் ஆண்டில் ஒருதடவை சென்றிருக் கின்றேன். பரந்த தரவை நிலங்களையும், வயல் நிலங்களையும் இடை யிடையே சிறியதும் சாதாரணமுமான கிராமியக் குடியிருப்புகளையும் கடந்தே அங்கு செல்லவேண்டும். அன்று ஞாயிற்றுக்கிழமை என்பதால் வீதிகள் ஓய்ந்திருந்தன.

அன்று விசேட வழிபாடு எதுவும் இல்லாமையால் தூர இடங்களி

லிருந்து வருகை தருவோர் தொகை குறைவாக இருந்தது. சுற்றாடலில் வசிக்கும் மக்களே ஞாயிறு திருப்பலியில் அதிகமாகக் காணப்பட்டனர். திருப்பலி முடிந்ததும் அங்கிருந்த மர நிழலில் இரண்டு மணித்தியாலம் வரை ஓய்வெடுத்து, கூடவே எடுத்துவந்த உணவை அருந்தி, திரும்பும் வழியில் பரந்த வெளியின் ஓரமாக இருந்த மர நிழலின் கீழ் அமர்ந்திருந்து, சிற்றுண்டி அருந்தியதுடன் சுற்றாடலில் காணப்பட்ட மரம், செடி, கொடிகளின் அழகை உள்வாங்கித் திரும்பினோம்.

வோல்சிங்கம் ஆலயத்தின் வெளிநாட்டு குடியேற்றவாசிகளுக்கான வழிபாட்டுப் பட்டியலில் ஆடி மாதம் 02ஆம் திகதியிலுள்ள திருவிழா இலங்கையருக்கென ஒதுக்கப்பட்டுள்ளது. லண்டனிலுள்ள கத்தோலிக்க ஆன்மீகப் பணியகம் இதனைப் பொறுப்பேற்றுச் செய்கின்ற போதிலும் சில்லாலை ஆலயத்திலுள்ள கதிரை மாதாவை ஒத்ததாக இருப்பதால் சில்லாலையைச் சேர்ந்தவர்கள் முனைப்பாகவும் தொகையாகவும் பங்கு கொள்வர். இன, மத வேறுபாடின்றி சிங்கள இனத்தவரும் இந்து மதத்தவரும் வழிபாட்டில் பங்குகொள்வதற்கெனத் திரளாக வருகை தருவார்கள் என அறிந்தபோதும் திருவிழாவுக்குச் செல்லும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைக்கவே இல்லை.

13.04.2014 திகதியன்று (இயேசுவின் திருப்பாடுகளின் பாஸ்கா காலத்தில் ஆறாவது ஞாயிறு) மீண்டும் சென்றுவர சந்தர்ப்பம் கிடைத்தது. முன்னர் சென்றபோது பாதை நெடுகிலும் தரவையாய் தெரிந்த நிலங்களிலெல்லாம் 'மின் ஆலை'களும் (*Wind Mill*), கொழுப்பற்ற சமையல் எண்ணெய் தயாரிக்கும் 'கடுகுவிதை பூ'க்களும் (*Rapeseed Flower*) நிறைந்து காணப்பட்டன.

ஆங்காங்கு உள்ள கிராம குடியிருப்புகளுக்கு 'மின் ஆலை' மின்சாரமே வழங்கப்படுகின்றது. சூரிய ஒளியிலிருந்து மின்சாரத்தை சேகரித்து வழங்கும் 'சோலர் பனல்' (*Solar Panel*) மூலமும் சில கிராமத்து மக்கள் மின்சாரத்தைப் பெறுகிறார்கள். சோலர் பனல் வீடுகள்தோறும் மானிய அடிப்படையில் பொருத்தப்படுகிறது. அவ்வாறு பொருத்தும்வேளை வீட்டின் தேவைக்கும் மேலாக சில சோலர் பனல்களைக் கூடவே பொருத்தி, அவற்றிலிருந்து பெறப்படும் மின்சாரத்தைப் பிரித்தெடுத்து பொதுத் தேவைகளுக்குப் பயன்படுத்துகிறார்கள். பொதுத் தேவைக்கெனப் பெறப்படும் மின்சாரத்துக்குரிய பணத்தை மாதாந்தம் வீடுகளுக்குச் செலுத்துகின்ற



நடைமுறையும் உள்ளது.

தரவையாய்க் கிடந்த இடங்கள் வயல் நிலங்களிலெல்லாம் தரையே தெரியாது செடித்து வளர்ந்து - பூத்துக் குலுங்கும் கடுகுவிதை பூக்களையும், மின் ஆலைகளையும், இடையிடையே இருந்த கிராமத்துக் குடியிருப்பு களையும், கிராமம்தோறும் காணப்பட்ட ஆலயங்களையும் பார்த்தவாறு எமது பயணத்தைத் தொடர்ந்தோம்.

1998இல் சென்றிருந்தபோது மர நிழலில் இருந்து அழகை இரசித்த பரந்தவெளி கடுகுவிதை பூக்களாய்க் காணப்பட்டன. இடையிடையே வெட்டி யெடுக்கப்பட்டு பாதைபோல் தெரியும் செடிகளின் அடிக்கட்டை கரும் பச்சை நிறமாகத் தெரிய, பூக்களுடன் இணைந்து கண்ணுக்குக் குளிர்மையாக இருந்தது. மகிழ்வுடன் வோல்சிங்கம் மாதா ஆலயத்தை அடைந்தோம்.

அந்நகரில் வசிப்பவர்கள் தமது வீட்டுத் தோட்டங்களில் விளைகின்ற வற்றில் தமது தேவைக்கு மேலதிகமான மரக்கறிகள், சோளம், பழவகைகள் போன்றவற்றுடன் கோழி வளர்ப்பில் பெறப்படும் முட்டைகளையும் சந்தைக்கு எடுத்துச் சென்று விற்பதில்லை. ஆலயத்தை தரிசிக்க வருபவர்கள் கொள்வனவு செய்துகொள்வதற்கு ஏதுவாக தமது வீட்டுக்கு வெளியே வீதி யோரம் மேசை அல்லது தடிகள் - பலகை கொண்டு தயாரிக்கப்பட்ட பட்டடையில் தனித்தனியாக அவற்றை வைத்துவிடுவர். கூடவே விலை விபரம், பணத்தைப் போடுவதற்கு உண்டியல், நிறுத்து எடுப்பதற்கென தராசு போன்றவை வைக்கப்பட்டிருக்கும்.

விற்பனை நிலையங்களின் விலையோடு ஒப்பிடுகையில் மலிவாகவும், மிகக் குறுகிய நேரத்தில் பெறப்பட்ட பொருள்களாகவும் இருப்பதால் பலரையும் அவை ஈர்க்கும். எடுத்துச்செல்ல விரும்புவோர் தேவையான அளவில் எடுத்துக்கொண்டு பணத்தை உண்டியலில் போட்டுச் செல்வர் (இலங்கையில் இது சாத்தியமாகுமா?). ஆலயத்துக்குச் செல்கையில் மேசை மற்றும் பட்டடையில் நிறைந்திருக்கும் பொருட்களை திரும்பி வரும்போது காணமுடியாது என்பதால் முட்டையுடன் சில பழ வகைகளையும் ஆலயம் செல்லும்போதே கொள்வனவு செய்துகொண்டோம்.

அன்று பிலிப்பைன்ஸ் நாட்டு குடியேற்றவாசிகளுக்காக ஒதுக்கப் பட்ட நாளாக இருந்தது. ஐம்பதுக்கும் மேற்பட்ட சொகுசு பேருந்துகளிலும் கணிசமான தனியார் தானுந்து மற்றும் சிற்றூர்திகளிலும் திரளான பிலிப்பைன்ஸ் நாட்டு மக்கள் வந்திருந்தனர். அவர்களுக்காக ஆலயத்துடன் இணைந்த முற்றத்தில் காலை 10.30 மணிக்கு விசேட வழிபாட்டுக்கான ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆலயத்தினுள் காலை 9.00 மணிக்கு நடைபெற்ற வழமையான ஞாயிறு திருப்பலியில் பங்குகொண்டோம். அத்திருப்பலியில் பல இலங்கையர்களும் பங்குகொண்டனர்.

விசேட வழிபாட்டுக்கென ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இடம் பிலிப்பைன்ஸ் நாட்டு மக்களால் நிரம்பியிருந்தது. அதுதவிர இயேசுவின்

பாடுகளைக் குறிக்கும் 14 நிலைகளையுடைய சிற்பங்கள் மற்றும் வோல்சிங்கம் மாதாவின் உருவத்தை மேடைகளில் வைத்துத் தூக்கியவாறும் மாதாவின் படங்களை கைகளில் ஏந்தியவாறும் நிரையாகவும் குழுக்களாகவும் பவனி வந்தனர். அவர்கள் எங்கிருந்து வருகிறார்களெனத் தெரியவில்லை. அவர்கள் வந்த பாதை ஒழுங்கற்றதாக இருந்தது. அந்தப் பாதையாலேயே செபம் சொல்லியவாறு தொடராக வந்தனர். 1340 ஆம் ஆண்டளவில் இந்த நாட்களில் மக்கள் அந்தப் பாதையால் பாதணிகள் அணியாது பவனி வந்ததாக அறியப் படுகிறது.

பவனியாய் வந்த அனைவரும் ஆலய வளாகத்தை அடைந்ததும் ஆரம்பித்த வழிபாடு நிறைவுபெற மதியத்துக்கு மேலாகி விட்டது. குழுக்களாக இணைந்து தாம் எடுத்துவந்த உணவைப் பகிர்ந்து அருந்தினர். அந்நேரம் ஆலயத்தைச் சூழவிருந்த வெளிகள் யாவும் மக்களால் நிரம்பி விட்டது. எம்மவரும் இவ்வாறுதான் தமக்குரிய திருவிழாவை எதிர்கொள்வார்கள் எனப் பேசிக்கொண்டார்கள்.

பனிக்கட்டி களஞ்சியம்

உறவுக்கார பெண்ணின் கணவர் ஐக்கிய இராச்சியத்தைச் சேர்ந்தவர், அவர், குடியிருப்புகள் நெருக்கமற்ற இடத்தில் பிரமாண்டமான காணியின் ஒரு பகுதியை கொள்வனவு செய்திருந்தார். அந்தக் காணியில் நீளமாக இருந்த இருந்த பழமையான கட்டடத்தின் ஒரு பகுதி இவருக்குரியது. அது நீண்ட காலம் பாவனையற்றிருந்ததால் தமக்கு ஏற்ற வகையில் புனரமைப்புச் செய்திருந்தார். அவர்களைச் சந்திக்கச் சென்றிருந்தேன்.

புனரமைப்புச் செய்யப்படும் முன்னர் குடியிருப்புக்குரிய கட்டடமாக இருக்கவில்லை. இதுவும் இதனுடன் இணைந்திருந்த தொடர் கட்டடமும் குதிரைகள் கட்டப்படும் லாயமாக இருந்துள்ளது. குதிரைகள் பாவனை அருகிச்சென்ற பின்னாளில் தானுந்துகள் நிறுத்தி வைக்கப்படும் இடமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது என அவர் தெரிவித்தார்.

குதிரை லாயத்திலிருந்து (தற்போதைய வீட்டுக்கு) 50 மீ. தூரத்தில் 150 வரையான அறைகளும் அதற்கேற்ப ஏனைய வசதி களையும் கொண்ட மூன்றடுக்கு மாளிகை ஒன்றிருந்தது. செங்கற் களால் கட்டப்பட்டு, அதே நிறத்தைக் கொண் டிருந்த போதும் பாசி படிந்து காணப் பட்டது. அந்த மாளிகையின் பின்பக்கமாக சற்றுத் தூரத்தில் குளம் ஒன்றிருந்தது. மாளிகைக்




கும் குதிரைலாயத்திற்கும் இடையில் பயன் படுத்தப்படாமல் கட்டடம் ஒன்றும் இருந்தது. இவைபற்றி உறவினனுடன் உடையாடியபோதுதான், அந்த மாளிகை முன்னர் அரச குடும்பத்தினரின் வசிப்பிடமாக இருந்துள்ளது எனவும் அங்கு வசிப்பவர்களின் பயன்படுத்தலுக்குத் தேவையான குதிரைகள், வண்டில்கள் விடப்படும் இடமாக மற்றும் களஞ்சியப்படுத்தும் இடமாக ஏனையவையும் இருந்துள்ளன எனவும் தெரியவந்தது.

வீட்டைக் கொள்வனவு செய்த உறவினன், நீண்ட காலமாய்த் துப்பரவு செய்யப்படாமல் மேடாகக் குவிந்தும் மரஞ்செடிகள் நிறைந்தும் காணப்பட்ட காணியின் கழிவுகளை அகற்றி செம்மைப்படுத்தியபோது, சற்று உயரமாகவும் வட்டமாய்க் குவிந்தும் கூரைபோன்ற அமைப்பு தென்பட்டது. கல்லில் செதுக்கியது போன்று அமைந்திருந்த அந்தக் கூரையைச் சுற்றி, மண்ணுடன் கலந்து கிடந்த கழிவுகளை, ஆழமாய்த் தோண்டி அகற்றியபோது சமதரையிலிருந்து வட்டமான, குவிந்த கட்டட அமைப்பு தெரியவந்தது.

போர்க்கால பதுங்கு குழிபோல காணப்பட்ட கட்டடத்தின் நுழைவாசல், முன்பக்கம் கருங்கல் பதித்த தரை, பக்கவாட்டில் மண்தடுப்புக் கட்டு போன்றவை இருந்தன. நுழைவாசலை மறைத்திருந்த கழிவுகளை அகற்றிய போது உள்ளே கிட்டத்தட்ட எட்டு அடி அகலத்தையும் ஆறு அடி நீளத்தையும் கொண்டதாய், செங்கற்களால் பக்கச் சுவர் கட்டப்பட்டு, கற்கூரை மறைப்பிட்டதுமான அறைபோலக் காணப்பட்டது. நுழைவாசல் கதவு சிதைவுற்றிருந்தபோதும் அதன் தடுப்பால் உட்பக்கம் கழிவுகள் மிகக் குறைவாகவே இருந்தன. ஆட்கள் வசதியாக நிற்கக்கூடியதாக உட்பக்கம் இருந்தது.

உள்ளே நுழைவாசலின் எதிர்ப்பக்க சுவரில் வாசல்போலத் தெரிந்த இடம், கல்லில் வெட்டப்பட்டதும் நான்கு அங்குல கனமானதும் நகர்த்தக் கூடியதுமான பாளத்தால் மறைக்கப்பட்டிருந்தது. சிரமப்பட்டு நகர்த்திப் பார்க்கையில் உள்ளே இருளாக இருந்ததால் ஒளியேற்றிப் பார்த்தபோது 20 அடி வரையான விட்டத்தில் 12 அடிக்கு மேற்பட்ட ஆழத்தில் வட்டமான கிணறு போன்று அமைப்பில் கற்களால் கட்டப்பட்ட நிலத்தடி அறை தெரிந்தது. அதன் மேற்பகுதியே வெளித்தெரிந்த கற்கூரை.


பனிக்கட்டி களஞ்சியம் துப்பரவு செய்கையில்

நிலத்தடி அறையைக் கண்டு பிடித்ததை விபரித்த அவர், அந்தக் குகையின் பயன்பாட்டைப் பற்றித் தான் விசாரித்து அறிந்ததையும் கூறினார்.

இந்த நிலத்தடி அறை பனிக்கட்டிகள் களஞ்சியப்படுத்தப்படும் இடம். கடுங்குளிர் காலத்தில் மாளிகைக்கு

அண்மையிலிருக்கும் குளத்து நீர் உறைந்து கட்டியாகி விடுமாம். இது பொதுவாக மேலை நாடுகளில் நடைபெறுகிறது. 1982ஆம் ஆண்டு மார்கழியில் ஐரோப்பாவில் வரலாறு காணாத பனிப்பொழிவும் கடுங்குளிரும் நிலவியபோது ஜேர்மன் நாட்டில் பேர்ளின் நகரில் உறைந்திருந்த குளத்து நீரின் மேலாக பலர் நடமாடியுள்ளனர். குளத்தின் மையப் பகுதியில் பனிக்கட்டியின் உறைநிலை குறைவாக இருந்த இடத்தில் கால்கள் மிதிபட அது உடைந்து நீரினுள் அமிழ்ந்து இருவரும் உயிர் துறந்தனர். இவர்கள் இலங்கைத் தமிழர்கள். இந்தத் தகவலை நான் பிரான்ஸிற்கு வந்தபோது (1983) ஜேர்மனியில் இருந்து வந்தவர்கள் தெரிவித்தனர்.

மாளிகைக்கு அருகாமையிருந்த குளத்தின் உறைந்த நீர்க்கட்டியை (பனிக்கட்டியை) சதுரத் துண்டுகளாய் வெட்டியெடுத்து நிலத்தடி அறையின் தரையில் பரவி வைப்பர். பின்னர், நீரூற்றிகள் மூலம் தேம்ஸ் ஆற்றுத் துறை முகத்திற்குக் கொண்டுவரப்படும் பனிக்கட்டிப் பாளங்களை குதிரை வண்டில்களில் ஏற்றிவந்து, இந்த நிலத்தடி களஞ்சிய அறைக்குள் அடுக்கி வாசலை மூடிவிடுவர். குளிர்காலம் முடிந்து அடுத்துத் தொடங்கும் குளிர்காலம் வரை களஞ்சிய அறையில் சேமிக்கப்பட்டுள்ள பனிக்கட்டிகள் மாளிகை வாசிகளின் பல்வகைப் பயன்படுத்தலுக்கும் உதவுகின்றன.

தளத்தில் பரவிய பனிக்கட்டி எப்போதும் தனக்கு மேலே உள்ள வற்றையே நிறைவாய்க் குளிரூட்டும் என்ற இயற்கை நியதியைப் பயன்படுத்தி அமைக்கப்பட்டுள்ளது நிலத்தடி களஞ்சிய அறை. பண்டைய பனிக்கட்டி களஞ்சிய முறையைப் பார்த்து வியந்தேன்.

ரியூப் (Tube)

லண்டனில் பிரதான போக்குவரத்தாக உள்ளது நிலத்துக்கடியில் அமைக்கப்பட்டுள்ள தொடருந்து சேவையாகும். 1830களில் குதிரை வண்டி களே அதிகமாக பாவனையிலிருந்தன. அவற்றின் நெரிசல் காரணமாக வர்த்தக நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டதால் நிலத்துக்கடியில் பாதை அமைத்து, உலகின் முதலாவது நிலத்துக்கடியிலான தொடருந்து சேவையை 1863இல் ஆரம்பித்தார்கள். தற்போது முற்றிலும் மின்சாரத்தில் இயங்கும் சேவையாக்கப்பட்டு, நவீனமயப்படுத்தப்பட்ட தொடருந்து நிலையங் களுடன் 402 கி.மீ. துரத்தையும் 270 தொடருந்து நிலையங்களையும் கொண்டதாக இந்த சேவை நடைபெறுகின்றது. இச்சேவையிலீடுபடும் தொடருந்துகளை 'ரியூப்' என்றே அழைப்பர். எந்நேரமும் நெரிசலாகக் காணப் படும் இந்தத் தொடருந்துகளில் பல தடவைகள் நானும் பயணித்துள்ளேன்.

ஐந்து நாடுகளைச் சுட்டிநிற்கும் கடல் கடந்த பயணங்கள் - 05 இனை நிறைவு செய்கின்றேன். இத்தொகுப்பில் முக்கியமற்றதாகக் கருதப்பட்ட சிறு நிகழ்வுகள், அனுபவத்தைப் பகிர்ந்துகொள்வதற்கேற்ற போதிய விடயங்களை கிரகிக்க சந்தர்ப்பம் கிடைக்காத இடங்கள் சிலவற்றைத் தவிர்த்துள்ளேன். ■

கடல் கடந்த நாட்கள் – 06

உறவுகளைத் தேடிய பயணங்கள்

நோக்கம்

சுவிற்சர்லாந்தில் நிரந்தர வதிவிட விசா பெற்று வாழ்ந்ததால் அங்கிருந்து உறவுகளைச் சந்திப்பதற்காக பல தடவைகள் இலங்கை வந்து சென்றுள்ளேன். அப்பயணங்களே கடல் கடந்த நாட்கள் - 6 ஆக அமைகின்றது. கடல் கடந்த நாட்களில் பதிவு செய்யப்பட்ட நாடுகளின் பயணங்களுடன் இலங்கைக்கான பயணங்கள் பொருந்துமா? எனச் சிலருக்குக் கேள்வி எழலாம். இது தவிர்க்க முடியாததொன்று.

இலங்கையில் உருவான அசாதாரண சூழலால் எத்தனைபேர் சொந்த இல்லிடத்தை விடுத்து வேறு ஊர்கள், வேறு நகரங்களில் தமது வாழ்வைத் தொடங்கினார்கள். அது அவர்களுக்கு தற்காலிக வதிவிடமாக இருந்தாலும் கூட அங்கே வாழ்கின்ற காலங்களில் அவர்களுக்கான நிரந்தர வதிவிடமாகவே அமைகின்றது.

அத்தகையோர் தமது உறவுகளைச் சந்திக்க, தாம் வசித்த இடங்களைப் பார்வையிட தேடிச் செல்வதில்லையா? அங்கு சந்தித்த உறவுகள் எதிர்கொண்ட துன்பங்களை, தாம் வாழ்ந்த சொந்த மண் அடைந்த பாதிப்புகளை அறிந்துகொள்ள முனைவதில்லையா? அவ்வாறு அறிந்த தகவலை தம்மைப்போல் ஒன்றித்து வெளியேறிய அயலவர், உறவினர் மற்றும் பிறர் அறிந்திடச் சொல்லுவதில்லையா? அந்த நிலையேதான் என் நிலையும்.


நான் தற்காலிகமாக சுவிஸில் வசித்தாலும் என்னுடைய நிரந்தர வசிப்பிடமான இலங்கை மண்ணிற்குப் பயணித்து, அங்கு தங்கி நிற்கின்ற காலங்களில் நான் கண்டறிந்த, கேட்டுணர்ந்தவற்றை, அக்கால நடைமுறைகளை பிறருக்கும் தெரியப்படுத்துகின்றேன்.

அவ்வாறு, யாழ்ப்பாணத்தில் உறவுகளைச் சந்திக்கும் நோக்கில் நான் பயணித்த நாட்களில் கொழும்பு விடுதிகளில் தங்கியிருந்தும், யாழ்ப்பாணம் சென்றும் வந்துள்ளேன். யாழ்ப்பாணம் செல்லும்போது ஒரு தடவை படகிலும், சில தடவைகள் இராணுவ மற்றும் தனியார் வானூர்திகளிலும் சென்று வந்துள்ளேன்.

யாழ்ப்பாணம் சென்ற சந்தர்ப்பங்களில் எதிர்கொண்ட நடைமுறைகள், அந்நிய நாட்டுக்கு வந்ததுபோன்ற உணர்வை ஏற்படுத்தியது. அதனால், நானடைந்த அப்பயண அனுபவங்களை நீங்களும் அறிந்து கொள்வதற்காக அவற்றையும் இங்கே காலத்தின் பதிவாக்குகிறேன்.

இலங்கை

(1992, 1993, 1994, 1996, 1997, 1999, 2001)



பயணம் - 01

1983 புரட்டாதி மாதம் இலங்கையிலிருந்து புறப்பட்டு பிரான்ஸுக் குச் சென்ற நான், ஒன்பது வருடங்களின் பின்னர், ஆவணி *1992*இல் இலங் கைக்கான எனது முதலாவது பயணத்தை மேற்கொண்டேன்.

இலங்கை வருவதற்குத் திட்டமிட்டதிலிருந்து என் உள்ளத்தில் ஒரே குதூகலம். இலங்கை மண்ணில் கால் வைக்கப்போவதை, உறவுகளைச் சந்திக்கவுள்ளதை எண்ண எண்ண மனதிலே சந்தோஷம். அந்த சந்தோஷத்தில் 'ஏயார் லங்கா' வானூர்தி மூலம் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச வானூர்தி நிலையத்தை வந்தடைந்தேன். வானூர்தியிலிருந்து இறங்கியதும் பேருந்துகளில் ஏற்றப்பட்ட பயணிகள், வானூர்தி நிலைய குடிவரவு குடிய கல்வு கருமபீடங்களுக்கான நுழைவுப் பாதையில் இறக்கப்பட்டனர்.

திறந்திருந்த கருமபீடங்களுக்கான நிரையில் தத்தமது கைப்பொதி களுடன் பயணிகள் நின்றனர். நானும் அவ்வாறே நின்றேன். கருமபீடத்தில் பயணிகள் கடவுச்சீட்டு பரிசோதனை செய்யப்பட்டு உள்செல்ல அனுமதிக்கப் பட்டனர். எனக்கு முன்னால் நின்ற பயணிகள் சென்றதும் நான் கருமபீடத் திற்குச் சென்றேன். எனது அடையாள அட்டையை தருமாறு சிங்கள மொழி யில் கேட்டார். எனக்கு அது புரிந்தது. இல்லை என்று கூறி சுவிற்சர்லாந்து நாட்டின் வதிவிட விசா அட்டையைக் கொடுத்தேன்.

எனது கடவுச்சீட்டில் அடையாள அட்டை இலக்கம் பதியப்பட வில்லை. சுவிற்சர்லாந்து /ஜெனிவா நகரத்தில் இலங்கைத் தூதரகத்திலே கடவுச்சீட்டைப் பெற்றிருந்தேன். இலங்கை கடவுச்சீட்டு அலுவலகத்தி லிருந்தே நேரடியாகப் பெறப்பட்டுள்ளது. என்னைச் சற்று நிற்கச் சொல்லி விட்டு ஏனையோரின் கடவுச் சீட்டுகளைப் பரிசீலனை செய்தார் அதிகாரி. அந்த கருமபீட நிரையில் நின்ற அனைவரும் சென்றுவிட்டார்கள். அதிகாரி எழுந்து சென்று, சற்று நேரத்தால் கூடவே ஒருவருடன் வந்து அமர்ந்தார்.

அவரோடு கூட வந்தவர் என்னை நெருங்கி, அடையாள அட்டை இல்லாதபடியால் விசாரணை என்று இழுத்தடிப்பார்களாம். அதனால் நூறு

டொலரை கொடுத்துவிட்டு போகுமாறு தமிழில் கூறினார். சுவிஸிலிருந்து முன்னர் இலங்கைக்கு வந்தவர்கள் கூறியமை ஞாபகத்தில் வந்தது. எப்படியும் நூறு டொலர் கொடுக்காமல் செல்ல முடியாது என்றும் கூறியிருந்தனர். இது தான் நடைமுறையென்று முடிவெடுத்து, ஒரு முயற்சியாக ஐம்பது டொலர் தான் உள்ளது என்றேன். என்னுடன் கதைத்தவர் அதிகாரியிடம் கேட்டார். அவர் தலையசைத்ததும் நான் கருமபீடம் சென்றேன். அதிகாரி பணத்தைப் பெற்று, கடவைச்சீட்டை என்னிடம் ஒப்படைத்தார்.

தொடர்ந்து அண்மையிலிருந்த வரி விலக்களிக்கப்பட்ட கடையில் இரண்டு போத்தல் விஸ்கியைக் கொள்வனவு செய்துகொண்டு, தள்ளு வண்டிலுடன் பொதியை எடுப்பதற்காகச் சென்றேன். பொதி இன்னமும் வரவில்லையென்பதால் அங்கேயே காத்திருந்தேன். அவ்வேளை என்னுடன் தமிழில் கதைத்தவர் என்னை நெருங்கிவந்து, தான் மலையகத்தைச் சேர்ந்தவர் என்று தன்னை அறிமுகப்படுத்தினார். தன்னை மன்னிக்குமாறும், அவர் சொன்னதையே தான் என்னிடம் கூறியதாகவும் கூறி, சில நிமிடங்கள் என்னுடன் அன்பாக உரையாடினார். எனது பொதி வந்ததும் அதை எடுக்க உதவிசெய்துவிட்டு விடைபெற்றார்.

சுங்கப் பரிசோதனையில் எந்த இடையூறும் இருக்கவில்லை. பொதியைத் திறந்து பார்க்காமலே வெளியே எடுத்துச்செல்ல அனுமதித்தனர். நன்றிகூறி வெளியேறினேன்.

வானூர்தி நிலையத்திற்கு என்னை அழைத்துச்செல்ல வந்திருந்த மனைவி, மகன், மைத்துனனுடன் வாகனத்தில் ஏறி கொழும்பு நகரை நோக்கிப் பயணித்தோம். அங்கு செல்வதற்கிடையில் பல இடங்களில் வாகனத்தை மறித்து பத்திரங்கள் - பொருள்களை பார்வையிட்டு விசாரணை செய்தனர். சில இடங்களில் இராணுவம் தனியாகவும், சில இடங்களில் இராணுவம் மற்றும் காவல்துறையும் இணைந்து நின்று இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டன. கொழும்பு நுழைகையில் களனிப் பாலத்தில் கடுமையான சோதனை இருந்தது.

கொழும்பு நகருக்கு வர மதியமாகிவிட்டது. கொச்சிக்கடை, விவேகானந்தா மேட்டிலுள்ள விடுதி ஒன்றில் தங்கிக்கொண்டோம். மறுநாள் காலை, எனது வரவை பதிவுசெய்து 'பாஸ்' பெற்றுக்கொள்வதற்காக, 'கொட்டஹேனா' காவல்துறை அலுவலகத்திற்கு நானும், புதிதாக விடுதியில் தங்கவந்த வேறு சிலரும் சென்றோம். கூடவே விடுதி முகாமையாளர் பதிவேட்டுடன் வந்திருந்தார்.

நீண்ட நேரக் காத்திருப்பின் பின்னர் விடுதி முகாமையாளர் எம்மை அழைத்தார். எம்மிடம் அடையாள அட்டை மற்றும் கடவுச்சீட்டைப் பரிசீலித்த அதிகாரி, அதன் பிரதியை பெற்றுக்கொண்டு, பதிவேட்டில் ஒவ்வொருவருக்குமான பக்கத்தில் ஒப்பமிட்டு, அரக்கு முத்திரை குத்தித் தந்தார். காவல்துறை வழங்கும் 'பாஸ்' இல்லாமல் கொழும்பில் எவரும்

தற்காலிகமாகத் தங்கவும் முடியாது, வெளியே நடமாடவும் முடியாது. அதனைப் பெறுவதற்குக் காவல்துறை அலுவலகத்தில் பல மணித்தியாலங்கள் செலவிடவேவேண்டும்.

பதிவேட்டில் பதிவுசெய்யப்பட்ட விபரங்களின் நிழற்படப் பிரதியை ஒவ்வொருவரும் கூடவே வைத்திருக்கவேண்டும். வாகனங்களில் அல்லது நடையில் பயணிக்கும்போது அடிக்கடி மறித்து பரிசீலிப்பது நடைமுறையி லுள்ளதால். இப்பதிவைக் காண்பித்தே எங்களின் இருப்பை உறுதிப்படுத்த வேண்டும். விடுதிகளிலும் சந்திக்க வருவோரிடம் கடுமையான நடைமுறைகள் பின்பற்றப்பட்டன. போர்கால சூழலின் தன்மை இப்போதுதான் புரிந்தது.

குறைந்த விடுமுறை நாட்களில் சிங்கப்பூர் செல்லும் வழியில் பத்து நாட்கள் கொழும்பில் தங்கிச் செல்லும் நோக்குடனே இங்கு வந்திருந்தேன். அதனால், யாழ்ப்பாணம் சென்றுவரும் எண்ணம் இருக்கவில்லை. அத்துடன், யாழ்ப்பாணம் செல்வதாயின் 1983இல் பயணித்ததைப்போல தொடருந்திலோ அல்லது வாகனங்களிலோ இலகுவாகப் பயணிக்க முடியாது. வவுனியா - தாண்டிக்குளம் வரைதான் அவற்றில் பயணிக்க முடியும்.

தாண்டிக்குளத்தில் காவல்துறை கருமபீட அதிகாரியிடம் பதிவு செய்து, யாழ்ப்பாணம் செல்வதற்கான அனுமதியைப் பெற்று, அங்கிருந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில், அவர்களின் நடை முறைகளைப் பின்பற்றிச் சென்று, ஆனையிறவும் - இலங்கையின் பெருநிலப் பரப்பும் சந்திக்கும் 'கொம்படி' என்னும், சேறும் - சகதியும் நிறைந்த குறுகிய கடற் பாதையைக் கடந்துதான் யாழ்ப்பாணம் செல்ல முடியும்.

பெண்கள் - சிறுவர்களை ஓடத்தில் ஏற்றிவிட்டுப் பொதிகளைத் தலையில் சுமந்தவாறு, இடுப்பளவு கடல் நீரில் இறங்கி நடந்து, சேற்றில் புதைந்து மீண்டெழுந்து, மறுகரையை அடையவேண்டும். இதற்குள் எங்கிருந்து துப்பாக்கிச் சன்னங்கள், எறிகணைகள், விமானங்கள் தாக்குமோ என்ற நெஞ்சுவலி. இடையிலே வெற்றுத் தரைகளில் நடந்தும், வாடகை ஈருருளியில் ஏறியும் குலைநடுங்கும் பயத்துடன் செல்ல வேண்டும் எனப் பயணித்தவர் வாயிலாக அறிந்தேன்.

இதுபோன்ற எத்தனை எத்தனை தடைகளைத் தாண்டவேண்டு மாம்... இது இலகுவான பயணமாக இருக்காது என்பதால் யாழ்ப்பாணம் சென்றுவர நாட்டம் கொள்ளவில்லை. பத்து நாட்களின் பின்னர் சிங்கப்பூருக் குச் செல்வதற்காக வானூர் நிலையம் நோக்கிய பயணத்தை மேற்கொண் டேன். வரும்போது இருந்த நடைமுறைகள் திரும்பிச் செல்லும்போதும் மாற்றமின்றி இருந்ததே தவிர எந்த இடையூறும் இருக்கவில்லை.

பயணம் - 02

1993 சித்திரை மாதம் இலங்கை வந்திருந்தேன். பண்டாரநாயக்க சர்வதேச வானூர்தி நிலையத்தில் எந்த இடையூறோ, பிரச்சினையோ இருக்க

வில்லை. அதனால் மனதிற்கு நிம்மதி. கொழும்பு வரும்வரை முன்னரைவிட பாதுகாப்பு கெடுபிடிகள்தான் அதிகமாக இருந்தது. அன்று என்னவோ எமக்கு இடையூறு ஒன்றும் ஏற்படவில்லை. கடந்த வருடம் தங்கிய அதே விடுதியில் தான் தங்கினேன். முன்னரைப்போலவே காவல்துறை அலுவலகத்தில் பதிவு இடம்பெற்றது.

பிரான்ஸில் வசிக்கும் மைத்துனரின் திருமணம், வைகாசி மாதம் சிங்கப்பூரில் நடைபெறவிருந்ததால், அங்கு இரண்டு வாரங்களும் இலங்கையில் இரண்டரை வாரங்களும் தங்குவதென்ற ஏற்பாட்டிலேயே வந்திருந்தேன். கொழும்பில் தங்கிநின்ற நாட்களில் யாழ்ப்பாணம் சென்று வருவதற்கு முயற்சித்தேன். கடந்த வருடத்தைவிட தற்போதைய யாழ்ப்பாணப் பயணம் சிரமமாகவும் ஆபத்தாகவும் இருப்பதாகப் பலரும் தெரிவித்ததால் அந்த எண்ணத்தைக் கைவிட்டேன்.

அப்போது 'கிளாலி'யிலிருந்து பூநகரி - நல்லூர் வரையான கடற் பாதை பயன்படுத்தப்பட்டது. சிரமமற்ற சங்குப்பிட்டி கடற் போக்குவரத்து முஸ்லிம் மதத்தவர் சிலரது காட்டிக்கொடுப்பால் தடைப்பட்டுப் போனதாகவும் இதுவே முஸ்லிம் மக்களை யாழ்ப்பாணமிருந்து வெளியேற்ற ஆரம்பக் காரணமாக இருந்ததாகவும் அன்று பேசப்பட்டது. அடுத்து நடைபெற்ற கொம்படி பாதை ஆனையிறவு இராணுவத் தளத்தை புலிகள் கைப்பற்ற நடை பெற்ற 'ஆகாயத் தரைவெளிச் சமர்' காரணமாக முடிவுக்கு வந்தது. இவற்றின் தொடராக யாழ்ப்பாண மக்களின் போக்குவரத்துக்கென திறக்கப்பட்ட மூன்றாவது பாதையே 'கிளாலி'யிலிருந்து பூநகரி - நல்லூர் வரையான கடற்பாதை.

கொம்படி கடற்பாதையைப் போன்றதல்ல இந்தப்பாதை. நீண்ட கடற் பயணத்தையும் அதிக தூரத்தையும் கொண்டது. புதிதாக திறக்கப்பட்ட பாதை என்பதால் கடற்கரைகளில் சீரமைப்பு முழுமைபெறவில்லை. கிளாலியில் நீண்ட தூரம் சேறு, சகதியும் நிறைந்த கடற்கரையில் நடந்து சென்றே படகில் ஏறிக்கொள்ள வேண்டும். அவ்வாறே நல்லூரில் இறங்கிச் செல்லவும் வேண்டுமாம்.

அத்துடன், ஒழுங்கான பயணம் இடம்பெறுவதில்லை. இரவு நல்லூரிலிருந்து படகுகள் புறப்படவிருந்தால், அன்று காலை பத்திரிகைகளில் செய்தி வெளியாகும். அதன் பின்னரே கொழும்பிலிருந்து பயணிகள் புறப்பட முடியும். இப்பயணம் வாரத்தில் மூன்று நான்கு நாட்களே இடம்பெறும். சிலவேளை குறைவாகவும் இருக்கும். பயணிகளின் பாதுகாப்புக் கருதியே அவ்வாறு இடம் பெறுவதாகப் பலரும் பேசிக்கொண்டார்கள். இந்த நடைமுறை, எனது சிங்கப்பூர் பயணத்திற்கு சிக்கலாக இருக்குமென்பதால் யாழ்ப்பாணம் செல்லும் நோக்கத்தை விட்டு விட்டேன்.

வைகாசி மாதம் இரண்டாம் திகதி சிங்கப்பூர் புறப்பட விருந்ததால் முதலாம் திகதி நண்பர்களுக்கு மதிய விருந்து ஏற்பாடு செய்திருந்தேன். அன்று

'மே தினம்' கொழும்பில், ஐக்கிய தேசியக் கட்சியின் பிரமாண்டமான மேதின ஊர்வலத்திற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டிருந்தன. கொச்சிக்கடை பகுதி வாழ் மக்களில் ஆதரவானோர் ஊர்வலத்தில் பங்குகொள்ளவும், பார்வையிடவும் திரளாகச் சென்றனர்.

ஊர்வலம் வருகின்ற ஆமர் வீதிக்குச் சென்று பார்வையிட எனக்கு விருப்பமிருந்தும், மதிய விருந்து ஏற்பாடு செய்யப்பட்டதால் எங்களில் எவரும் செல்லவில்லை. அனைவரும் மகிழ்வுடன் அளவளாவி உணவருந்தும் நேரம், திடீரென கேட்டது பெரும் சத்தம். எனக்கு புதிதாக இருந்தது அந்தச் சத்தம். ஆனால், ஏனையோர் அதனை பெரிதுபடுத்தியவர்களாக இல்லை. இதுபோன்ற சத்தங்களை யாழ்ப்பாணத்தில் தினந்தினம் கேட்டு அவர்களின் செவிகள் மரத்துவிட்டன போலும். உணவருந்தி முடிவுற்ற சிறிது நேரத்தின் பின்னர், மேதின ஊர்வலத்தில் தற்கொலைக் குண்டுத்தாரியின் தாக்குதல் செய்தி வெளியாகியது. முற்றுப்பெறாத செய்தியாகவே அச்செய்தி அப்போது இருந்தது. அரைமணி நேரத்தின் பின்னர் இலங்கை வானொலியின் விசேட செய்தியில் முழுமையான விபரங்கள் வெளியாகின.

சுகதாசா விளையாட்டு மைதானத்திலிருந்து ஆரம்பித்து, ஜனாதிபதி ஆர். பிறேமதாசா அவர்கள் முன்செல்ல, தொடராய் வந்த வரலாறு காணாத மேதின ஊர்வலம், ஆமர் வீதிச் சந்தியை நெருங்கும் சமயம், எதிரே ஈருருளியை தள்ளியவாறு வந்த தற்கொலைக் குண்டுத்தாரியின் குண்டுத் தாக்குதலால் ஜனாதிபதி பிறேமதாசா அவர்கள் கொல்லப்பட்டார். அப்போது முதல் தற்காலிக ஜனாதிபதியாக பொறுப்பேற்ற டி. பி. விஜயதுங்கா அவர்களால், மக்களை அமைதி காக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டதுடன் ஊரடங்கு சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டது.

ஊரடங்கு சட்டம் பெயரளவிலேயே இருந்தது. பொதுமக்களின் இயல்பு வாழ்வை பெரிதும் பாதிக்கவோ, காவல்துறையின் கெடுபிடியோ இருக்கவில்லை. இதுபோன்ற சந்தர்ப்பங்களில் யாழ்ப்பாணத்தில் இறுக்கமான நடைமுறை கடைப்பிடிக்கப்படுவதுண்டு. ஊரடங்கு நிலை தொடர்ந்தால், மறுநாள் காலை சிங்கப்பூர் புறப்படவுள்ள எங்கள் பயணத்திற்கு பிரச்சினை ஏற்படுமெனக் கருதி, அறிமுகமானவர் மூலமாக கொச்சிக்கடை காவல்துறை பணிமனையில் எமது பயணம் பற்றி தெரிவித்தோம். காலை பயணத்தைத் தொடருமாறு கூறி, தற்செயலாக ஊரடங்கு நிலை அமுலிலிருந்தால் உரிய பயண அனுமதியைத் தருவதாக கூறியமை எமக்கு ஆறுதலாக இருந்தது. மறுநாள் காலை திட்ட மிட்டபடி எமது சிங்கப்பூருக்கான பயணம் அமைந்தது.

பயணம் - 03

1994 வைகாசி மாத இறுதி வாரத்தில் பண்டாரநாயக்க சர்வதேச வானூர்தி நிலையத்திற்கு வந்திருந்தேன். வானூர்தி நிலையத்தில் வழமைக்கு மாறான எதுவும் நிகழவில்லை. கொழும்பு வரும்வரை உள்ள பாதுகாப்பு

நடைமுறைகள் மாற்றமின்றி அப்படியே இருந்தன.

இம்முறை எத்தகைய இடரிலும் யாழ்ப்பாணம் சென்றுவர வேண்டுமென்ற முடிவிலேயே புறப்பட்டு வந்தேன். கொழும்பில் கொச்சிக்கடை விவேகானந்தா மேட்டில் தங்கியிருந்து, காவல்துறை பதிவை முடித்துக் கொண்டு, மூன்றாம் நாள் தாண்டிக்குளம் தொடருந்து நிலையம் வரை செல்வதற்காக தொடருந்தில் ஏறிக்கொண்டோம்.

தாண்டிக்குள தொடருந்து நிலையத்தில் இறங்கியதும், அங்கிருந்த இராணுவ பணிமனையில் பதிவுகள் செய்யப்பட்டன. பொதிகளுடன் இராணுவச் சோதனைச்சாவடி வரை நடந்து, அங்கு கால்கடுக்க வரிசையாக நின்று, ஒவ்வொருவராக உடல் சோதனை முடித்து, பொருட்கள் சோதனைக்கு எடுத்துச் செல்லவேண்டும். பணம் கொண்டுசெல்வதற்குத் தடையிருக்கவில்லை. ஆனால், பல பொருட்கள் தடை செய்யப்பட்டிருந்தன. அவ்வாறு தடைசெய்யப்பட்ட பொருட்கள் இருக்கக்கூடும் என்ற சந்தேகத்தில் பொதி சோதனை கடுமையாக இருந்தது. இவை யாவும் முடிந்த பின்னர் பேருந்தில் ஏற்றப்பட்டு தாண்டிக்குள பாலத்தை அண்மித்திருந்த முகாமில் இறக்கப் பட்டோம்.

அதிலிருந்து இருநூறு மீற்றர் வரை நடந்துவர, மரங்களின் மறைவில் சிலர் ஈருருளிகளுடன் நின்றனர். அங்கிருந்து பயணிகளையும் பொதிகளையும் புலிகளின் சோதனைச்சாவடி வரை ஈருருளியில் ஏற்றிச் செல்வது அவர்களின் வேலை. நாம் மூவர் பயணித்ததால் மூன்று ஈருருளிகளை கூலிக்கமர்த்தி புலிகளின் சோதனைச்சாவடி வரை பயணித்தோம்.

விடுதலைப் புலிகளின் சோதனைச் சாவடியில் பொருள் சோதனை கடுமையாக இருந்தது. வெளிநாட்டில் இருந்து வருகை தந்தமையால் ஒரு லிற்றர் விஸ்கி கொண்டுசெல்ல அனுமதித்தனர். ஏனையோருக்குக் குடிவகை கொண்டுசெல்ல அனுமதியில்லை. பொருட்களுடன் இரண்டு 'வோக்மன்கள்' இருந்தன. அவற்றை இராணுவச் சாவடியில் தடுத்தபோதும் வெளிநாட்டிலிருந்து பிள்ளைகளுக்கு வாங்கிச் செல்வதாகக் கூறியமைக்கிணங்க கொண்டு செல்ல அனுமதித்தனர்.

புலிகளின் சோதனைச் சாவடியில் இரண்டு வோக்மனையும் வெளியே எடுத்தனர். இதை இராணுவம் அனுமதிக்காதே என்று கூறி என்னை வோக்மனுடன் அருகிலிருந்த தனியான பணிமனைக்கு அனுப்பினர். அங்கே விசாரணை செய்துவிட்டு வோக்மனை கழற்றி பரிசீலனை செய்துவிட்டுத் திருப்பித் தந்தனர்.

சோதனைகள் முடித்து, மீண்டும் ஈருருளியிலேறி ஓமந்தையில் புலிகளின் பதிவுப் பணிமனை உள்ள இடத்திற்குச் சென்றோம். பயணிகள் நிறைந்திருந்தனர். வெளிநாட்டில் இருந்து வருபவர்களுக்குத் தனியான பணிமனை இருந்தது. அதை நான் அறிந்திருக்கவில்லை. பயணிகளோடே காத்திருந்தேன். வரிசையில் எமது முறை வந்தபோதுதான் தனியான

பணிமனை பற்றி கூறினார்கள். அங்கு நான் சென்று எனது விபரங்களைப் பதிவுசெய்து பயண அனுமதிச்சிட்டையைப் பெற்றுக்கொண்டேன். ஏனைய இருவரும் அனுமதிச்சிட்டையைப் பெற்றுக் காத்திருந்தனர்.

வெளியே வரும்போது இரண்டு பேருந்துகள் நின்றன. ஒன்றில் இடமில்லை. மற்றைய றோசா ரக பேருந்தில் ஏறிக்கொண்டோம். அதுதான் இன்றைய கடைசி வாகனம். நின்ற பயணிகள் அனைவரும் நெருக்கமாக ஏற்றப்பட்டனர். பயணம் எனக்கு உவப்பாக இருக்கவில்லை. உடல் உபாதையாக இருந்தது. சிரமத்துடனே அமர்ந்திருந்தேன்.

வாகனப் பதிவுக்காக மாங்குளத்தில் தரித்தது பேருந்து. அருகாமை தெரிந்த தேநீரகத்தில் வயோதிபர் ஒருவர், கவிழ்த்து வைக்கப்பட்டிருந்த ஈருருளிச் சக்கரத்தின் பெடலை கைகளால் சுற்றி சக்கரத்தை வேகமாக சுழற்றிக் கொண்டிருந்தார். எனக்குப் புரியாமல் முன்னால் இருந்தவரிடம் கேட்டேன். "லைற் எரியிறதுக்கு கறன்ட் எடுக்கிறாங்க" என்று விளக்கமளித்தார். போர்க்கால சூழலின் தன்மையை உணர்ந்தேன்.

அங்கிருந்து பூநகரி/நல்லூரை வந்தடைய இரவு 10.00 மணிக்கு மேலாகி விட்டது. பயணிகளின் அனுமதிச்சிட்டைகளைச் சேகரித்த பேருந்து நடத்துனர், அவற்றை நல்லூரிலிருந்த புலிகளின் பணிமனையில் ஒப்படைத் தார் எமது அடுத்த பயணத்துக்காக.

பலரையும்போல் அங்கே போடப்பட்டிருந்த அடைப்புகளற்ற கொட்டிலில் அன்றைய இரவை கழித்தோம். மறுநாள் அங்கிருந்த உணவ கங்களில் காலை, மதிய உணவை அருந்தித் தங்கியிருந்தோம். வருகைதரும் பயணிகளுக்கு குடிநீர் வசதி செய்திருந்தாலும் நிறைவானதாக இருக்கவில்லை. ஒரு கிணறு இருந்தது. அது உடலைக் கழுவுவதற்குப் பயன்படுகிறது. சில மலகூடங்கள் இருந்தும் பாவிக்க முடியாத நிலையில் தூய்மையற்று இருந்தன. அதனால் பலரும் பற்றைகளையும் மறைப்புகளையும் நாடவேண்டியிருந்தது.

சாயந்தரமானதும், அன்று படகுப் பயணம் செய்யும் பயணிகளின் விபரம் அறிவிக்கும் பணிமனைக்கு முன்னால் மக்களோடு மக்களாய் மணலில் அமர்ந்திருந்தோம். அன்று பயணம் செய்பவர்களின் பெயர்ப் பட்டியலில் எங்களது பெயர் வாசிக்கப்படவில்லை. தொடர்ந்து இரண்டு நாட்கள் படகோட்டம் இல்லையென அறிவிக்கப்பட்டது. தாமதமானபடியால் அன்றைய இரவும் அங்கேயே தங்கவேண்டிய நிலை. தொடர்ந்து அங்கு தங்கியிருக்க விருப்பற்று, மறுநாள் காலை பேருந்தில் புறப்பட்டு கிளிநோச்சி புனித திரேசாள் ஆலயத்தை வந்தடைந்தோம். ஆலய வெளி விறாந்தையில் பொருட்களை வைத்து அதிலேயே தங்கிக்கொண்டோம். தேவைக்கேற்ற மலகூடங்களும் கிணறும் இருந்தன.

இரணைமடுக் குளத்திலிருந்து வாய்க்கால் வழி ஓடிவந்து தேங்கி நிற்கும் வில்சன் வீதியிலுள்ள நீர்த்தேக்கத்தில் உடல் உபாதை நீங்க நன்றாக நீராடினோம். நல்லூரில் வெயிலின் வெப்பத்தால் தவித்த நாம், ஆலய வளவில்

நிழல்தரும் மரங்களின் கீழும், ஆலயத்திலும் சுகமாக ஓய்வெடுத்துக் கொண்டோம்.

பதினொரு வருடங்களுக்கு முன்னர் இருந்த கிளிநொச்சியை நினைத்துப் பார்த்தேன். இப்போ களையிழந்து செழிப்பிழந்து காணப்பட்டது அது. எங்கும் சிதைந்த வீடுகள், உடைந்த கடைகள், நொருங்கிய கட்டடங்கள், முறிந்த மரங்கள் என சிதைவடைந்த ஊராகக் காண்கையில் மனதிற்கு வேதனையைத் தந்தது.

குறித்த நேரத்தின் பின்னர் வேறு ஊர்களுக்கான பேருந்து வசதிகள் இல்லையென்பதால் பயணிக்க முடியாமல் போனவர்கள் ஆலயத்தில் தங்கியிருந்து மறுநாளே பயணத்தைத் தொடர்வார்கள். அவ்வாறு தங்கியிருந்த பல ஊர்க்காரர்களுடன் நான் உரையாடவும், அவர்கள் அடைந்த துன்பங்களை, போரின் தாக்கங்களை அறிந்துகொள்ளவும் சந்தர்ப்பம் கிடைத்தது.

மூன்றாம் நாள், யாழ்ப்பாணம் கொண்டு செல்வதற்காக மாம்பழங்கள் கொள்வனவு செய்யச் சந்தைக்குச் சென்றேன். முன்னர் வியாபாரிகளால் நிரம்பி வழிந்த பிரமாண்டமான சந்தைக் கட்டடம் கற்குவியலாகக் கிடந்தது. மணல் தரையில் உரப்பை மறைப்புகளில் வியாபாரம் நடைபெற்றது. தேவையான மாம்பழங்களைக் கொள்வனவு செய்து, உணவருந்திய பின்னர் தானுந்து ஒன்றை வாடகைக்கமர்த்தி நல்லூரை வந்தடைய பி.ப. 3.00 மணியானது. சற்றுநேரம் ஓய்வெடுத்த பின்னர், முன்னரைப் போலவே பணிமனைக்கு முன்னால் மக்களோடு மக்களாய் அமர்ந்திருந்தோம்.

அன்று எமது பெயர் வாசிக்கப்பட்டதும் பயண அனுமதிச் சிட்டையைப் பெற்றுக்கொண்டு பிறிதொரு இடத்தில் பொதிகளுடன் வரிசையாகக் காத்திருந்தோம். அங்கிருந்து உழவு இயந்திரத்தின் பெட்டியில் பொதிகளுடன் நெருக்கமாக ஏற்றப்பட்டு, வரம்புகளும் பள்ளமும் திட்டியுமான வெளிகளால் கொண்டு செல்லப்பட்டோம். வேகமாக ஓடிய உளவு இயந்திரப் பெட்டியின் துள்ளலால் அதனுள் அமர முடியாமல், எழவும் முடியாமல் பலரும் தவித்தனர். என்னால் இருக்கவே முடியவில்லை. ஒருவாறு சமாளித்து இருக்க வேண்டிய தாயிருந்தது. அரை மணித்தியாலப் பயணத்தின் பின்னர் இருள் மங்கிய நேரம் வெட்டையான இடத்தில் இறக்கப்பட்டோம்.

அந்த வெட்டையில் இருந்த பணிமனையில் ஒளி ஏற்றப்பட்டிருந்தது. எம்மை இறக்கிய இடத்திலிருந்து பணிமனை வரை நிரையாக இருபக்கமும் தடிகள் கட்டப்பட்டு இருந்தன. அதற்கிடையில் பொதிகளுடன் நிரையாக நின்றோம். இருள் முற்றாகச் சூழ்ந்து கொண்டது. ஆட்கள் வெளியேறுகிறார்களே தவிர நிரை முன்னேறவில்லை. அறிமுகங்கள் நிரையின்றி பணிமனைசென்று அங்கிருந்து வெளியேறிக்கொண்டிருந்தனர். நிரையில் நின்ற பலரும் தமது விசனத்தைத் தெரிவித்து தர்க்கத்தில் ஈடுபட்டனர். இதன் பின்னர் நிரை மெல்ல மெல்ல நகரத் தொடங்கியது. பணிமனையில் எமது பயணச்சிட்டையை ஒப்படைத்துப் பெயர் பதிவுசெய்து

கொண்டதும் பிறிதொரு சிட்டை தரப்பட்டது. அதைப் பெற்றுக்கொண்டு கடற்கரை வரை நடந்துசென்று நிரையில் நின்றோம்.

நிரையில் நின்றவர்கள் வெளியிணை இயந்திரம் பொருத்தப்பட்ட சிறிய கண்ணாடி நாரிழைப் படகுகள், வள்ளங்களில் கணக்கிட்டு ஏற்றப் பட்டனர். நாம் வள்ளத்தில் ஏறியதும் எம்மிடமிருந்த சிட்டையைப் பெற்றுக் கொண்டு, பொதிகள் ஏற்றப்பட்டு, ஒவ்வொருவருக்கும் உயிர்காப்பு அங்கி தரப்பட்டதும் வள்ளம் புறப்பட்டது. ஒளி ஏற்றப்பட்டு அடையாளம் காட்டிய ஓடைபோன்ற பகுதியால் சென்ற வள்ளம், சற்று நேரத்தால் விரிந்த கடல் நோக்கி வெளியேறியது.

சோளகக் காற்று சற்று வேகமாக வீசியது. காற்றுக்கு சாய்வான பயண மென்றாலும் வேகமாக எழுந்துவந்த அலைகள், மண்ணெண்ணையில் இயங்கும் வெளியிணை இயந்திரங்கள் பொருத்தப்பட்ட வள்ளத்தை முந்திச் செல்வதற்கு முயற்சிப்பதுபோல இருந்ததால், வள்ளம் பதிந்து எழுந்தது. இதனால் வள்ளத்தின் இரு பக்கத்தாலும் மோதிய கடல்நீர் பயணிகளை தோய்த்தது. பொதிகள் யாவும் வள்ளத்தின் அணியத்தில் வைக்கப்பட்டு றபர் சீற்றால் மூடப்பட்டு இருந்ததால் நனையாது இருந்தன.


புனித யாகப்பர் ஆலயம்

15 கடல் மைல் தூரத் தையுடைய, நீண்ட நேரப் பயணப் பாதையின் வர லாற்றை வள்ளத்தில் இருப்ப வர்கள் அறியாதவர்களல்லர். கிழக்கே ஆனையிறவு முகாம். தென்மேற்கே நாகதேவன்துறை முகாம். இவற்றிலிருந்து எதிரும் புதிருமாக தாக்குதல்கள் பல நடத்தப்பட்டுள்ளன. பல உயிரிழப்புகள் இடம்பெற்றுள்ளன. விசைபடகுகளில் தாக்கவரும் கடற்படையினரை, கடற்புலிகள் வழி மறித்து மூர்க்கத்தனமாக தாக்குதல் நடத்தி செயலிழக்கச் செய்வதனாலும், கடந்த ஆண்டு நாகதேவன்துறை படைமுகாம் தாக்குதலால் இலங்கை கடற்படை அடைந்த பின்னடைவி னாலும் அவர்களின் நடவடிக்கை குறைந்திருந்தது எனப் பேசிக்கொள் வார்கள். இருப்பினும் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பொருட்டு, இரு மருங்கும் கடற்புலிகள் விசைப்படகுகளில் காவலுக்கு வந்தனர்.

இடையூறு எதுவுமின்றி அதிகாலை இரண்டு மணிக்கு கிளாலியை வந்தடைந்தது வள்ளம். கடவுளை மனத்தில் நினைத்துக்கொண்டோம். யாழ்ப் பாணம் செல்வதற்கான பேருந்து தரிப்பிடம் ஒரு கி.மீ. தூரத்தில் இருப்பதால், கடற்கரையிலிருந்து பேருந்து தரிப்பிடம் வரை பொதிகளை ஈருருளியில் ஏற்றிச் செல்பவரிடம் கூலியைப் பேசி ஒப்படைத்துவிட்டு, நாம் நடந்து

சென்றோம். பேருந்து தாமதித்தே புறப்படுமென்பதால் அங்கு மேலும் நிற்க விரும்பாமல் முச்சக்கர வண்டியில் ஏறி யாழ்ப்பாணத்தை வந்தடைந்தோம்.

மறுநாள் காலை தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் பிரதிநிதி வீட்டுக்கு வந்திருந்தார். தன்னைப் பற்றி அறிமுகம் செய்த அவர், என்னைப் பற்றிய விபரங்களை குறிப்பெடுத்துக்கொண்டார். தங்களது பயண நடை முறையில் ஏதேனும் குறைபாடு இருக்கிறதாவென விசாரித்தார். மனதிற்பட்ட சிலவற்றை கூறினேன்.

யாழ்ப்பாணத்தில் நின்ற நாட்கள் மறக்க முடியாத நாட்கள். வேதனையைக் கொடுத்த நாட்களும்தான். பார்க்குமிடமெல்லாம் தகர்ந்த வீடுகள், போகுமிடமெல்லாம் துன்பச் சுவடுகள், கேட்கும் கதையெல்லாம் துயரச் செய்திகள், நோக்கும் திசையெல்லாம் நிச்சயமற்ற வாழ்வுகள். நெஞ்சம் கனத்தது நாளும் பொழுதும் கேட்கும் கதைகளால், நடந்த நிகழ்வுகளால்.

நான் யாழ்ப்பாணத்தில் காலடிவைத்த அன்றே கண்ட காட்சி 132 வருடங்கள் நிலைத்திருந்த புனித யாகப்பர் ஆலயம், ஊனமாகி ஊன்று



கோலின் உதவியுடன் நிற்கும் காட்சி. அடைக்கலம் தேடி வருவோர்க்கு ஆதரவாய் நின்ற ஆலயம், ஆதாரம் தேடும் நிலையிலிருந்தது. 13.11.1993 அன்று காலை 'சுப்பர்சோனிக்' விமானம் வீசிய குண்டுகளிலிருந்து ஆலயத்தினுள் இருந்த ஒன்பது பேரின் உயிரைக் காப்பாற்ற முடியாமல் போன தனால் தன்னையே கற்குவியலாக்கிக் கொண்டது பழம்பெரும் ஆலயம்.

1990ஆம் ஆண்டு யாழ்ப்பாணக் கோட்டையை முற்றுகையிட்டுக் கைப்பற்றும், பாதுகாக்கும் போராட்டத்தில் நிகழ்ந்த எறிகணைத் தாக்குதல்களால் நான் வாழ்ந்த வீடு முற்றாக நொருங்கியும், தென்னை மரங்கள் துண்டாடப்பட்டும் அடையாளமாய்க் கிடந்தன.

1986 ஆனி 10 இல் கடற்றொழிலுக்குச் சென்ற 31 பேர் கூட்டாக கொலையுண்ட கொடூரத்தை நினைவுகூர்ந்த தினமன்று நானும் திருப்பலியில் கலந்து கொண்டேன். கூட்டாக புதைத்த இடத்தையும் பார்வையிட்டு, சேமக்காலையைவிட்டு வெளியேறவே மனமின்றி நின்றேன் வேதனையில். (கூட்டாகப் புதைத்த இடம் தற்போது, படத்தில் உள்ளமைபோல் தனித் தனியாக பிரிக்கப்பட்டுள்ளது).

இருவரது வீட்டுக்குச் சென்றபோதும், ஏனையோர் வீடுகளுக்குச் செல்ல இயலவில்லை. பொட்டிழந்து - வெண்ணிற ஆடையணிந்து நிற்ப வரைப் பார்க்க முடியவில்லை. ஒரே குடும்பத்தில் ஒன்றுக்கு மேற்பட்டோரை

இழந்தவர்களின் கதறலைக் கேட்க முடியவில்லை. அமைதியிழந்தவனாய் வீடு திரும்பினேன்.

நின்ற நாட்களில் சிலரைச் சந்தித்தேன் ஒவ்வொருவரையும் ஒவ்வொரு வரலாறாய். சிலரைக் கண்டேன் ஒவ்வொரு நிகழ்வுகளின் சாட்சிகளாய். சிலரைப் பார்த்தேன் துன்பத்தின் அடையாளமாய். சிலருடன் உரையாடக் கிடைத்தபோது துயரத்தின் பிம்பமாக அவர்களைக் கண்டேன்.

01.06.1986 இல் குருநகர் விளையாட்டு மைதானத்தில் விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்களில் மூவர் எறுகணையால் உடல் சிதறிப் பலியாயினர்.

15.10.1987 இல் அகதிகளாய் பள்ளிக்குடா சென்றிருந்த மக்களில் நோயுற்ற சிலரை யாழ். வைத்தியசாலையில் சேர்க்கும் நோக்கில், படகில் ஏற்றிவந்தபோது முகத்துவாரக் கடற்பகுதியில் 05 பேர், ஆகாயப் படையினரால் கொல்லப்பட்டனர்.

21.10.1987 இல் வீடுகளில் வசிக்க முடியாமல் அகதிகளாய், யாழ்/புனித பத்திரிசியார் கல்லூரியில் தங்கியிருந்தவர்களில் 04 பேர் இந்திய இராணுவத்தின் எறிகணையால் கொல்லப்பட்டனர். அங்கு காயப்பட்டவர்களை வாகனத்தில் ஏற்றிச் சென்றபோது வைத்தியசாலை முன்பாக 11 பேர் உயிரோடு எரியூட்டிக் கொல்லப்பட்டனர்.

22.10.1987 இல் அராலியிலிருந்து தீவகம் நோக்கி வள்ளங்களில் இடம்பெயர்ந்து சென்றவர்களில் 15 பேர் அராலிக் கடலில் ஆகாயப் படையினரால் கொல்லப்பட்டனர்.

18.08.1990 இல் பாஷையூர் /புனித அந்தோனியார் ஆலயத்தில் அடைக்கலம் புகுந்திருந்த குருநகர் மக்களில் 05 பேர் எறிகணையால் உடல் சிதறிப் பலியாயினர். காயப்பட்டவர்களை தள்ளுவண்டியில் கிடத்தி வைத்திய சாலைக்கு கொண்டுசென்றனர். இந்நிகழ்வுகளின் பாதிப்பிலிருந்து மீண்ட பலரை சந்தித்தேன். இன்னமும் எத்தனை எத்தனையோ. அவற்றில் சிலவே இவை. இவற்றுள் சிலவற்றை அவ்வாண்டே 'தமிழொலி' வானொலிக்கு கவிதைகளாக எழுதியிருந்தேன். அவை 'அவலத்தின் இராகங்கள்' என்னும் பெயரில் நூலாகவும் வெளிவந்தது. சில தகவல்களைத் தெரியப்படுத்தலாம் என்ற எண்ணத்தில் அவற்றில் மூன்று கவிதைகளை இங்கே தருகின்றேன்;


1. நம்பிக்கை

.....

சொந்த மண்ணின் சுகம்தேடி
செறிந்துள்ள சொந்தங்கள் நண்பர்கள்
சிந்தை நிறைந்தவர்களைத் நாடி
சென்றேன் பிறந்த மண்ணிற்கு
விந்தை கண்களைக் குளமாக்க
வியப்புற்று நின்றேன் மரமாக.

பன்னொரு ஆண்டுகளுக்கு முன்னர்
படமாகப் பதிந்த அத்தனையும்
சின்னா பின்னமான காட்சிகளை
சரித்திரமாய்க் கண்டதால் கலங்கினேன்
அன்னியன் கற்பழித்த வடுக்களின்
அடையாளமாய் அவ்வூரைக் கண்டேன்.

சுருங்கிவிட்ட சொந்தங்களை எண்ணி
செந்நீர் வடித்து நின்றேன்
சரிந்த குடும்பங்களின் கதிக்கு
சாட்சியான சிறுவர்களை கண்டேன்
நெருப்பிலே புகையின்றி
வயிற்றிலே புகைவரும்
குடும்பங்களைப் பார்த்தேன்.



கல்லாய்க் குவிந்து கிடந்த
யாகப்பர் ஆலயம் கண்டேன்
சல்லாபித்து மகிழ்ந்தவர் கொலையுண்ட
சரிதைகள் சொல்லக் கேட்டேன்
இல்லங்க ளெல்லாம் குண்டடியால்
இடிபட்டுக் கிடப்பதைக் கண்டேன்.

ஷெல்லடி ஓசையால் படுக்கையுடன்
சிதறியோடும் மக்களைப் பார்த்தேன்
தொழிலுக்கு சென்றவர் திரும்பும்வரை
தூங்காது விழிப்போரை அறிந்தேன்
எல்லாவற்றையும் ஜீரணிக்கும் மக்களிடம்
எழுந்துள்ள நம்பிக்கையையும் கண்டேன். ⊙

2. அவலத்தின் இராகங்கள்

துப்பாக்கி முழங்கல் சத்தங்கள்
தொடர் இராகமாய் இசைத்தது
உறக்க மின்மையால் கண்கள்
உலையின் நெருப்பாய் சிவந்தன
உள்ளத்தின் வலியை சுருக்கிட
உடனெ ழுந்தேன் முனைப்பாய்
கடற்கரை சென்றேன் பலரோடு
கதிரவன் விழித்திடும் முன்னரே

மீன் பிடிக்கச் சென்றிருந்த
ஓடங்கள் வந்தன தொடராய்
மீன்பிடி வலை கம்புடன்
கிடந்தன சடலங்கள் பலவும்
வானம் இடிந்ததாய் அழுகுரல்
வீரிட் டெழுந்து வியாபித்தது

குருதியில் மூழ்கி வந்தவர்
கொடூர சேதியைக் கூறினர்
கடலலை ஓசையை மீறியே
கரை நெடிதாய் அழுகுரல்

அடையாளம் கண்டவர் கணத்தில்
பிணங்களைத் தூக்கிச் சென்றனர்
கடைவரை முகத்தைக் காணதார்
கதறிய வண்ணம் கலைந்தனர்

அழுகுரல் சத்தம் இரவுபோல்
தொடர் இராகமாய் கேட்டது
உலகத்தின் காதுகளில் இந்த
அவலத்தின் இராகங்கள் கேட்குமா? ⊙

3. இதுதான் வழமை

சுழன்று வீசும் சோளகக் காற்றை
சுவர்கள் தடுத்தால் வியர்க்குமென
முற்றத்தில் படுத்தேன் உறங்கிட
முற்றிலும் காற்றை ஏற்றபடி
நடுச்சாம நேரம் "டுடும்...."
நல்லுறக்கம் கலைந்து விழித்தேன்
செவிப்பறை உடைந்தது போல்
எழுந்த ஓசை கேட்டதால்

இதயம் துடித்து உடல்பதற
விழித்த விழிகள் நிலைத்தன
முதலில் உலகத்தைப் பார்ப்பவனாய்
முயன்றேன் முற்றிலும் பார்த்திட
மற்றவர் அழைப்புக் குரலிட்டு
வெளியேறிக் கொண்டிருந்தனர்

வீதியில் மக்களின் மரதன்
வீறிடும் குழந்தைகள் அழுகுரல்

சிறுவர்கள் கொடுக்கும் கூக்குரல்
பெரியவர் தடுக்கும் அதட்டல்
இதயம் வெடித்தது போல
நெஞ்சம் துடியாய்த் துடித்தது

என்கையை பிடித்த மனையாள்
எடுத்தடி வைத்தாள் ஓடிட
தடுத்து நிறுத்தித் திரும்பினேன்
எவரையும் காணவில்லை அங்கு
என்னால்தான் மனையாள் நிற்கிறாளா?
மர்மம் விளங்காமல் வினாவினேன்

"கேட்டது ஷெல்லடிச் சத்தம்
தொடர்ந்து நாலுதரம் அடிப்பாங்க
அதனால மேல்வீட்டுக்கு ஓடுறாங்க"
உண்மை புரிந்த கணம்முதல்
படபடத்தது இதயம் முன்னைவிட



சிறிது நேரத்து அமைதி
"இனிமேல் அடிக்கான் வாங்க..."
சிறுமி அமைதியைக் குலைத்தாள்
நான் புரியாமல் பார்த்தேன்
பத்து நிமிடத்தில முடிந்திடுமாம்
நேரமிப்போ கழிந்து விட்டது
சிறுமியின் ஞானம் சிதறாமல்
சிந்திக்கத் தூண்டியது என்னை

ஒருமணி நேரங் கழித்து
விபரங்கள் வந்தன பறந்து
'வீடொன்றில் ஷெல் விழுந்து
நால்வர் இறந்து விட்டனர்
அறுவருக்கு கடுங் காயமாம்'
அறிந்தவர் எனக்குக் கூறினர்

அனுதாப வார்த்தையை கூறி
கலையத் தொடங்கினர் பலரும்
மௌனமாய் படுக்கை சென்றேன்
"இதுதான் வழமை இங்கு"
மனையாள் கூறினாள் அமைதியாய்
என் நெஞ்சில் அமைதியில்லை.... ⊙

இனங்கண்ட வேதனைகளும் சோதனைகளும் இதயத்தைப் பிழியும் வரலாறாய் இருந்தபோதும் அவற்றை ஒருபுறம் ஒதுக்கிவிட்டுப் பார்த்தால், பதினொரு வருடங்களின் பின்னர் உறவுகளைச் சந்தித்த சந்தோஷம் அளவிட முடியாதது. ஒவ்வொருவரும் போட்டிபோட்டு அழைத்து மதியம், இரவு என விருந்து வைத்த நாட்கள் நெஞ்சைவிட்டு அகலாதவை.

யாழ்ப்பாணத்தில் நிலவிய பொருளாதாரத் தடையிலும் மக்களின் தேவையை ஓரளவேனும் பூர்த்திசெய்யும் விற்பனை நிலையங்கள் இருந்தன, ஆங்காங்கு தேனீரகங்கள் - உணவு விடுதிகள் - மதுபானச்சாலைகள், பல் தேவைப் பொருட்களின் விற்பனை நிலையங்கள் எனப் பல இருந்தன. இங்கு பிடிபடும் கடலுணவுகள், விவசாய உற்பத்திகள் மற்றும் தேவைக்குரிய உற்பத்தி பொருட்களே பெருமளவில் சந்தைப்படுத்தப்பட்டன.

முன்னைரைப் போன்று வீதிகளில் மின்ஒளிகள் இல்லை. இருளில் வாழ மக்கள் பழகிக்கொண்டார்கள். நான்தான் சங்கடப்பட்டேன். எறிகணைத் தாக்குதல் எங்கும் நிகழலாமென்ற அச்சம் மக்களிடம் இல்லாம லில்லை. கடற்கரையில் இயங்கிய தற்காலிக மீன் சந்தைக்கு இறால் கொள்வனவு செய்யச் சென்றிருந்தேன். நான் திரும்பிய பத்து நிமிடத்தால் அச் சந்தையில் எறிகணை வீழ்ந்து ஒருவர் கொல்லப்பட்டும் எட்டுப் பேர் வரை காயமடைந்தனர்.

மக்கள் எதிர்கொள்ளும் பல விடயங்களில் இறுக்கமான நடை முறைகள் நிர்வாக, அரசியல் துறையால் பின்பற்றப்பட்டன. இதனால் மக்களின் இடையூறுகள், எதிர்பார்ப்பின் நிறைவின்மைகள், விருப்பற்ற நிலைகள் போன்றவற்றை இனங்காணக்கூடியதாக இருந்தது. காவல் துறை சிறப்புடன் இயங்கியது.

நான்கு வாரங்கள் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து திரும்பவும் கொழும்புக்குச் செல்லவுள்ளதால், கொழும்பு பயணத்திற்கு ஏதுவாக யாழ்ப் பாணத்தில் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகளுக்கமைய, நானும் மனைவியும் தமிழீழ விடுதலைப் புலிகளின் பணிமனைக்குச் சில தடவைகள் சென்று, கொழும்பு செல்வதற்கான காரணத்தை எடுத்துரைத்து பதிவுசெய்து கொண்டோம்.

யாழ்ப்பாணத்திலிருந்து எவரும் நிரந்தரமாக வெளியேறத் தடை விக்கப்பட்டுள்ளது. அவ்வாறு செல்வதாயின் அசையாச் சொத்துக்களை ஒப்படைக்கவேண்டும். அன்றேல், கொழும்பு செல்பவர் திரும்பி வரும்வரை ஒருவர் பிணை நிற்கவேண்டும். தனது அடையாள அட்டையை ஒப்படைத்து, மனைவியின் பிணைப் பத்திரத்தில் மைத்துனன் ஒப்பமிட்ட பின்னர் பயண அனுமதி பெற்றுக் கொண்டோம். நான் கொழும்பிலிருந்து வந்ததால் எனக்குப் பிணை அவசியமிருக்கவில்லை.

திருமணத்திற்காக நோர்வே நாட்டுக்குப் பயணிக்கவுள்ள உறவுக்கார இளம் பெண்ணும் அவளது தாயும் எம்முடன் இணைந்து கொழும்பு

வருவதற்கு விரும்பியதற்கிணங்க அவர்களையும் அழைத்துக்கொண்டு திட்டமிட்டபடி வெள்ளிக்கிழமை காலை, முச்சக்கரவண்டியை வாடகைக் கமர்த்தி கிளாலித்துறை வரை பயணித்தோம்.

சில நாட்கள் தொடராக அதிக பயணிகள் பயணம் செய்து கொண்டிருந்ததால், படகுகளில் இடம் கிடைக்காமல் கிளாலி துறையில் தங்கியிருந்து மறுநாள் பயணம் செய்வதும், சிலர் வீடு திரும்பி பிறிதொரு நாளில் பயணம் செய்வதுமாக இருந்ததை அறிந்ததால், எமக்கு பயணத்தடை ஏற்படாமல் இருப்பதற்காக, காலை பத்து மணியளவில் கிளாலி துறைக்கு வரவேண்டி நேரிட்டது. அன்று வெள்ளிக்கிழமையாக இருந்ததாலோ என்னவோ அவ் வேளை பயணிகள் குறைவாக இருந்தனர். 'வெள்ளியில் பயணிப்போர் வீடு திரும்பார்' என்ற வாய்வழி வந்த முதுமொழியினால் பலரும் வெள்ளிக் கிழமைகளில் பயணம் செய்யத் தயங்கினர்.

கிளாலியில் பிரயாண அனுமதிச்சீட்டு வழங்கும் பணிமனை திறக்கப் படவில்லை. அதனால், பயணிகள் தங்குமிடத்தில் சில மணித்தியாலங்கள் தங்கியிருந்தோம். சுற்றாடலில் குறித்த பகுதி தவிர்ந்த ஏனைய இடங்களுக்குப் பாதுகாப்புக் கருதி செல்லக்கூடாதென எழுதப்பட்டிருந்ததால் எங்கும் செல்லாது அங்கிருந்த தேநீர் அருந்தகத்தில் நேரத்தைப் போக்கினேன்.

மதியத்துக்கென தயாரித்து எடுத்து வரப்பட்ட உணவை அருந்தினோம். முதல்நாள் பொரித்துவைத்த இறாலையும், நன்கு பொரிக்கப்பட்ட கணிசமான வெங்காயத்தையும் மறுநாள், மிளாய்த் தூளிலிட்டு, அவற்றில் தண்ணீரும் புளியும் சேர்த்து நன்றாக கொதிக்க வைத்துப் பிரட்டலாய்க் காய்ச்சி, பிரயாணம் செய்யும்போது எடுத்துவரும் கறியை சாப்பிட்டு பதினொரு வருடங்களாகிவிட்டது என்பதால் சுவைத்துச் சாப்பிட்டேன்.

பி.ப. 4.00 மணிக்கு பணிமனை திறக்கப்பட்டது. பயணிகள் தங்குமிடத்தில் குறைந்த பயணிகளே இருந்ததால் அவசரமின்றி பணிமனை சென்று, பணம் செலுத்தி நுழைவுச்சீட்டுகளைப் பெற்றுக் கொண்டேன். அப்போது தான் யாழ்ப்பாணத்திலிருந்து பயணிகளை ஏற்றிய 'தமிழீழ போக்குவரத்துச் சபை' பேருந்துகள் வந்து தரித்தன. வழமையை விடக் குறைவானவர்களே வந்திருப்பதாக அங்கு பேசிக்கொண்டார்கள். பயணிகளுக்கான அழைப்பு விடுக்கப் பட்டதால் பொதிகளை எடுத்துக்கொண்டு உள்நுழைந்தோம். அங்கு, வள்ளங்கள், படகுகளில் ஏறுவதற்கு வசதியாக வரிசையாக இருத்தப் பட்டோம்.

இருள் சூழும் நேரம்... இருந்த ஒழுங்கின்படி வரிசையாகச் சென்று, தொடராக நின்றவற்றில் சிறிய கண்ணாடி நாரிழைப் படகில் ஏறிக் கொண்டோம். பயத்துடன் கூடிய பயணம் என்பது பயணிகளைப் பார்க்கையில் புரிந்தது. படகில் ஏறியதும் இணைந்து செபம் சொல்லத் தொடங்கினர். நல்லூரிலிருந்து புறப்படும்போது பயணிகளிடையே காணப்படாத பயம் இப்போது இருப்பதைக் கண்டு எனக்கும் பயம் தொற்றிக்கொண்டது.

இருள் நன்றாக மூடியதும் படகுகள், வள்ளங்கள் ஒன்றன்பின் ஒன்றாகப் புறப்பட்டுச் செல்லலாயின. வானிலிருந்து கிடைக்கும் விண்மீன் களின் வெளிச்சத்தைத் தவிர வேறு வெளிச்சம் இல்லை. வெண்ணிலவும் அன்று ஒளித்துக்கொண்டது. சோளகக்காற்று வேகமாக வீசியது. காற்றுக்கு எதிரான ஓட்டமென்பதால் படகின் ஓட்டத்தால் இரு பக்கமும் பிளவுபட்டு சீறிப் பாயும் கடல்நீர் படகில் இருந்தவர்களை தோய்த்தவாறே இருந்தது. எல்லோரும் முற்றாக முழுகிவிட்டோம். கடலின் இரைச்சல், காற்றின் உந்தல், மனதில் பயத்து டன் மூன்று மணித்தியாலம் வரை கடல் நீரில் தோய்ந்தவாறு பயணித்தோம்.

பூநகரி/ நல்லூர் துறையை நெருங்கியதை, எத்தகைய காற்றுக்கும் மழைக்கும் அணையாது எரியும் 'லோமியா' விளக்கு உணர்த்தியது. இதுவரை இருந்த காற்றின், அலைகளின் தாக்கம் குறைந்தும் காணப்பட்டது. வெளியிணை இயந்திரத்தின் இயக்கம் நிறுத்தப்பட்டு, சேறும் சகதியுமான பரவைக்கடலை ஊடறுத்துச் செல்வதற்காக, வெட்டப்பட்டிருந்த வாய்க் காவினால் ஓட்டிகள் வள்ளத்தை இழுத்தவாறு புதைந்து எழுந்து நடந்தனர். அவர்களுக்கு இலகுவாக இருக்கட்டும் என்பதற்காக ஆண்கள் கடலில் இறங்கி நடந்தனர். நானும் இறங்கினேன். நடப்பதற்கு எனக்குச் சிரமமாக இருந்தது. கால் கள் புதைந்து எழும்போது எரிவைக் கொடுத்தது. சிறு ஊரிகள் கால்களைத் தாக்கியதால் மேற்கொண்டு நடக்க முடியாமல் படகில் ஏறிக் கொண்டேன்.

பூனகரி/நல்லூரில் ஆலங்கேணி என்னுமிடத்தை அடைந்ததும் பொதிகளுடன் இறங்கிக்கொண்டோம் முற்றும் தோய்ந்த நிலையில். அங்கு இருந்த தேநீர் அருந்தகம் ஒன்றினுள் நுழைந்த நாம், தண்ணீர் பெற்று முகம், கைகளைக் கழுவி, தேநீரும் சிற்றுண்டியும் அருந்திவிட்டு, ஒதுக்கான இடத்தில் நின்று உடை மாற்றிக்கொண்டோம்.

நேரம் இரவு 12.00 மணியைத் தாண்டியது. அடுத்த பிரயாணத்துக்கான நடைமுறைகளைப் பார்வையிடச் சென்றேன். ஓமந்தைக்குப் போகும் முன் னர் உள்ள 'பன்றிக்கெய்த குளத்தில்' விடுதலைப் புலிகளின் பணிமனைக்குச் செல்லும் தொடருந்து அதிகாலை 05.00 மணிக்கே புறப்படுமென்பதால், தானுந்து ஒன்றை வாடகைக்கு அமர்த்திச் செல்ல முடிவெடுத்தோம்.

அங்கு நின்ற தானுந்து சாரதியிடம் கூலியைப் பேசி, பிரயாண ஏற்பாட்டைச் செய்தேன். சாரதி எங்களிடமிருந்த பயண அனுமதி சிட்டை யைப் பெற்று, தானே தேவையான பதிவுகளை செய்துமுடித்தார். நாங்கள் நால்வரும் தானுந்தில் புறப்பட்டோம். அதிகாலை 3.00 மணியளவில் மாங்குளம் முல்லைத்தீவுச் சந்திக்கு வந்ததும், சாரதி தனக்கு அறிமுகமான தேநீர் அருந்தகமொன்றின் முன்னால் நிறுத்தினான். விடியும் வரை அங்கேயே நிற்கவேண்டுமென்பதால், நால்வரும் தானுந்திவில் சற்று உறங்கினோம்.

காலை விடிந்தும் விடியாதவேளை, எழுந்து பற்றைகளின் மறைவில் பலரையும்போல் காலைக்கடனை முடித்துக் கொண்டு, தேநீர் அருந்தகத்தில்

இருந்த கிணற்றில் முகத்தைக் கழுவி, தேநீர் அருந்தினோம். அருந்தகத்திற்கு எதிராக 20 மீற்றர் தூரத்திலிருந்த மூன்று விற்பனை நிலையங்களைக் கொண்ட மாடிக் கட்டடம் தகர்ந்து, சரிந்து கிடந்ததைக் கண்டதும் நெஞ்சு திக்கென்றது.

விடுதலைப் புலிகளின் நிலப்பரப்பு ஆளுகையின் இறுதி இடமான பன்றிக்கெய்த குளத்தில் இருந்த விடுதலைப் புலிகளின் சோதனைச் சாவடியில் எம்மிடம் தரப்பட்ட பயண அனுமதிச் சிட்டையை ஒப்படைத்துவிட்டு வெளியேறி, நொச்சிமொட்டை வரையிருந்த யுத்த சூனியப் பிரதேசத்தால் செல்ல வேண்டும். இந்தப் பிரதேசம் மோதல் நிகழ்ந்தால் மூடப்பட்டு விடும். மோதலெதுவும் ஏற்படக்கூடாதென்பது பயணிகளின் அப்போதைய வேண்டு தலாக இருந்து. யுத்த சூனிய பிரதேசத்தில் பிரதான வீதியால் பொதிகளைச் சுமந்தவாறு சென்று, வீதியின் அருகே இருந்த பெரிய வெளியில், விரிந்த வட்ட மாக நீண்ட வரிசையில் நடந்து, இராணுவத் தடை முகாமை அடைந்தோம்.

அங்கு தனித்தனியாக உடல் - பொதி சோதனைகள், அடையாள அட்டை, பெயர் பட்டியல் பரிசோதனைகள் முடித்து, சாக்கினால் மறைக்கப் பட்ட மறைப்பிலிருந்த தலையாட்டிக்கு முன்னால் செல்ல வேண்டும். நுளம்பு கடித்ததால் தலையாட்டியின் தலையசைந்தாலும்கூட பயணிக்கு ஆபத்து காத்திருக்கிறது.

எனக்கு முன்னால் சென்ற இளம் பெண்ணைப் பார்த்து தலையாட்டி தலையசைத்ததும் தாய் கதறி அழ, அவள் விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்டாள். அதைப் பார்த்ததும் எமக்குத் தூக்கிவாரிப் போட்டது. முதலில் நானும், அடுத்து மனைவியும் தலையாட்டியைக் கடந்து வெளியேறி னோம். வெளியேறும்வரை இதயத்தின் துடிப்பு அதிகமாகவே இருந்தது. தொடர்ந்து எம்முடன் பயணித்த உறவினளான இளம் பெண் வந்தாள். தலையாட்டி தலையசைத்திருக்க வேண்டும். அப்பெண்ணை இராணுவத்தினர் வழிமறித்தனர். அவளைத் தொடர்ந்துவந்த அப் பெண்ணின் தாய் வெளியே றியதும், இராணுவ சிப்பாயிடம் தனது மகள் என்று அழுதவாறு கூறி, விட்டு விடுமாறு கெஞ்சினாள்.

தாங்கள் விசாரித்துவிட்டு கொண்டுவந்து விடுவதாகக் கூறி எம்மை அங்கிருந்து போகுமாறு கட்டாயப்படுத்தினர். வேறு வழியின்றி அங்கு தயாராய் நின்ற இராணுவ பேருந்தில் ஏறிக்கொண்டோம். பயணிகள் நிறைந் ததும் புறப்பட்ட பேருந்து, வவுனியாவில் முன்னர் 'பிறவுண் கொம்பனி' இயங்கிய கட்டடத்திற்கு அண்மையில் தரித்தது. அனைவரும் அங்கே இறக்கப் பட்டோம்.

வெயிலின் அகோரத்தின் மத்தியில் பிரதான தார் வீதியில் நீண்ட வரிசையாக நின்று, மெல்ல மெல்ல நகரும் வரிசையில் உள்ளே சென்று பதிவுகளை மேற்கொண்டு, மூவரும் அனுமதிப் பத்திரத்திற்காகப் பதிந்து கொண்டோம். இப்பத்திரம் இல்லையேல் கொழும்பில் தங்குவதற்கு காவல் துறை அலுவலகத்தில் பதிவுசெய்துகொள்ள முடியாது.

கட்டடத்திலிருந்து வெளியேறி, அதனுடன் இணைந்திருந்த கரும பீடத்தின் முன்னால் காத்திருந்து, எமது பெயர் வாசிக்கப்பட்டதும் அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக் கொண்டோம். அங்கிருந்து வெளியேறி வீதியோரம் நின்ற பாரிய மரத்தின் நிழலில் அமர்ந்துகொண்டோம் இளம் பெண்ணை எதிர்பார்த்து.

ஒரு மணித்தியாலத்திற்கு மேலாகிவிட்டது. பெண்ணின் தாயாரின் கண்ணீரைப் பார்க்க எனக்கு கஷ்டமாக இருந்தது. எம்மால் என்னதான் செய்ய முடியும். அன்று பயணித்த பயணிகளின் பதிவு பெரும்பாலும் முடிவுறும் நிலை. பதிவு முடிந்து வெளியேறும் பயணிகள், கொழும்பு செல்லும் நோக்கில், வவுனியா தொடருந்து நிலையம் நோக்கிச் சென்றவாறேயிருந்தனர். தினமும் பி.ப. 1.00 மணிக்கு கொழும்பு செல்லும் தொடருந்து புறப்படுவது வழமை. எம்முடன் சிலர் மாத்திரமே நின்றனர். நேரம் செல்லச்செல்ல எமக்கு நிம்மதி யற்ற நிலை. பி.ப. 2.00 மணியளவில் இராணுவ வாகனமொன்று வந்து தரித்தது. அதிலிருந்து இளம்பெண்ணை இறக்கிய இராணுவத்தினர், அவளை தாயிடம் ஒப்படைத்தனர். இப்போதுதான் எமது மனம் குளிர்ந்தது.

அவளையும் அழைத்துச்சென்று பதிவை மேற்கொண்டு அனுமதிப் பத்திரத்தைப் பெற்றதும், தாமதியாது முச்சக்கர வண்டியிலேறி அண்மையி லிருந்த வவுனியா தொடருந்து நிலையத்தை அடைந்தோம். இரவு 10.00 மணிக்கே கொழும்பு செல்லும் தொடருந்து புறப்படுமென்பதால் தொடருந்து நிலையத்தில் தங்கியிருந்து அங்கிருந்த பயணிகள் தங்குமிடத்தில் முகம், கை, கால்களைக் கழுவிய பின்னரே நிம்மதிப் பெருமூச்சு வெளியேறியது.

பயணச் சிட்டையைப் பெற்றுக்கொண்டு இரவு 10.00 மணிக்குப் புறப்பட்ட தொடருந்தில், எமது பயணத்தை தொடர்ந்து இடையூறு எதுவுமின்றி கொழும்பை வந்தடைந்தோம். அன்றே கொழும்பில் காவல்துறை பதிவுகளை முடித்து நிம்மதியுடன் விடுதியில் ஓய்வெடுத்துக் கொண்டோம்.

பெரும் மனச் சுமையுடன், ஒரு வாரத்தால் சுவிற்சர்லாந்து நோக்கிய எனது பயணத்தைத் தொடர்ந்தேன்.

பயணம் - 04

*1996*ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் முதல் வாரத்தில் இலங்கைக்கான எனது நான்காவது பயணம் அமைந்திருந்தது. புரட்டாதி 15ஆம் திகதி எனது திருணம் நிகழ்ந்த இருபதாவது ஆண்டு தினமாகும். இந்தப் பயணத்தின்போது வானூர்தி நிலையத்திலோ, வீதிகளிலோ இடையூறு எதுவும் இருக்கவில்லை. கொழும்பில் தங்குவதற்கு ஏதுவாக காவல்துறை தலைமையகத்தில் வழமை போல் பதிவினை மேற்கொண்டு விடுதியில் தங்கியிருந்தேன்.

யாழ்ப்பாணத்து மக்களுக்குத் துயரம் மிகுந்த ஆண்டாக 1995ஆம் ஆண்டு அமைந்திருந்தது. 09.07.1995இல் நவாலி சென் பீற்றர் தேவாலயத்தில் அடைக்கலம் புகுந்த மாணவர்கள் உட்பட 147பேர் விமானக் குண்டுத் தாங்கு

தலால் பலியானார்கள். இலங்கை இராணுவம் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும் நோக்கிலான படையெடுப்பில் பலவகை இன்னல்களை அனுபவித்தார்கள். வரலாற்றில் சந்தித்திராத இடப் பெயர்வை, 30 .10.1995இல் சந்தித்தனர். குறுகிய நேரத்தில் விடுதலைப் புலிகளால் விடப்பட்ட அறிவிப்பிற்கிணங்க, ஐந்து இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள், இரவோடு இரவாக யாழ்ப்பாணத் திலிருந்து வன்னி பெருநிலப்பரப்பு, தென்மராட்சி என இடம்பெயர்ந்து சென்றனர்.

ஐந்து மாதங்களின் பின்னர் தென்மராட்சியை இராணுவம் கைப்பற்றி யதும், தென்மராட்சியில் தங்கியிருந்த மக்கள், மீண்டும் யாழ்ப்பாணம் செல்லத் தொடங்கினர். எனது குடும்பமும் அவ்வாறு வந்திருந்த போதிலும் என்னை வரவேற்க கொழும்பு வருவதிலுள்ள பிரயாண நெருக்கடி காரணமாக எவரும் வரவில்லை.

'லயன் எயார்' வானூர்தி மட்டுமே அப்போது சேவையிலிருந்தது. அச் சேவையில் சிலரது தலையீடும், செல்வாக்கும் மேலோங்கி இருந்ததால் இலகு வில் பயணச்சிட்டை பெறமுடியாத நிலை நிலவியது. அத்துடன், யாழ்ப் பாணத்திற்கு பொருட்களை ஏற்றிச்செல்லும் 'லங்கா முடித,' 'சஜிந்தா', 'அட்லான்ரிக் றீபர்' எப் பல பெயர்களையுடைய சரக்கு நீரூர்திகள், சரக்குகளை இறக்கிவிட்டு திரும்பி வரும்போது காங்கேசன்துறையில் இருந்து திருகோண மலை வரை பயணிகளை ஏற்றிவரும். அங்கிருந்து தொடருந்து, பேருந்துகளில் கொழும்புவரை பயணிகள் பயணத்தைத் தொடர்ந்தனர்.

சரக்கு நீரூர்திக்குப் பாதுகாப்பு வழங்கவென கடற்படை நீரூர்திகள், டோரா படகுகள் செல்வது வழமை. நடுக்கடலில் கடற்படையினருக்கும் கடற்புலிகளுக்குமிடையே சமர் மூண்டால் சரக்கு நீரூர்தியில் ஏற்றிய பயணிகள் பரதவிப்பார்கள். வெடிச் சத்தங்கள் நெருங்கிவரக் கேட்டால் கூக்குரலிடுவார்கள். இத்தகைய கடற் சமர் காரணமாக பயணம் புறப்பட்ட நீரூர்திகள் சில நேரங்களில் கரைதிரும்பி வர ஏமாற்றத்துடன் பயணிகள் வீடுசென்ற சம்பவங்களும் நிகழ்வதுண்டாம்.

சோளகக் காற்று மூர்க்கமாக வீசுகின்ற காலமாகையால் நீரூர்தி பயணம் சிரமமாகவே இருந்தது. காற்றினால் நீரூர்தி ஆட்டம்காண பயணிகள் வாந்தி எடுக்கத் தொடங்கிடுவர். வாந்தி வராமலிருப்பதற்கான குளிசைகளை கடைகளில் பெற்று அருந்தியும் மிகுதியான வாந்தியால் சுயநினைவிழந்த பலரது கதைகள் கொழும்பில் உலாவின.

யாழ்ப்பாணம் சென்றுவர விருப்பமிருந்தும், இத்தகைய நிலைகளால் சென்று வருவது இலகுவாகத் தோன்றவில்லை. அதனால், கொழும்பிலேயே நான்கு வாரங்கள் தங்கியிருக்க முடிவெடுத்தேன்.

கொழும்பில் தங்கியிருந்த நாட்களில் அங்கிருந்த யாழ்ப்பாண மக்களிடம் கேட்டறிந்தவற்றை, பத்திரிகைகளில் வாசித்தவற்றையும் கொண்டு 1995ஆம் ஆண்டின் இடப்பெயர்வு பற்றிய நீண்ட கவிதையை

'உணர்வு' என்ற தலைப்பில் எழுதியிருந்தேன். அக்கவிதையின் பகுதியை இங்கே தருகின்றேன் இடப்பெயர்வைப் பற்றிய பதிவிற்காக.

".....
ஷெல் துரத்துவது மக்களையா?
ஷெல்லைத் துரத்துவது மக்களா?
உண்மையை உணர்வதற்கு
எவரேனும் தரித்து நின்றால்தானே!
ஓடினர்... ஓடினர்... ஓடினர்...
கண்ணில் பட்டது
கையில் கிடைத்தது
உடல் சுமக்கக் கூடியவற்றை
சுமந்தவர்களாய் ஓடினர்!
சோகம் ஒருபுறம்
தாகம் ஒருபுறம் - மன
வேகம் ஒருபுறம்
சிதறுண்ட உணர்வுகளின்
சிந்தனை ஒருபுறம்
கதறும் குழந்தைகளின்
கண்ணீர் ஒருபுறம்
பாசத்தின் வித்துக்கள்
பதறிடுங் கோலம் ஒருபுறம்
பாகுபாடின்றி விரட்ட
ஓடினர்... ஓடினர்...
ஓடிக்கொண்டேயிருந்தனர்

.....
நடந்து செல்பவர்களின் வியர்வை
சுமந்த சோகங்களின் கண்ணீர்
கல்லடித்த கால்களின் செந்நீர்
மழை பெய்து விட்டதைப்போல்
வழிந் தோடியது தெருவெலாம்...

.....
மிதிபடுவது கற்களா?
தவறவிட்ட பொருட்களா?
மற்றவரின் கால்களா?
புரியாமல் விழித்தவர் பலர்
சரிய முடிந்தால்தானே
தலை சாய்த்துப் பார்ப்பதற்கு ...." ⊙

எனது பயணம் எதிர்பார்ப்புகள் நிறைவேறாத, உறவுகளைச் சந்திக்க முடியாமல்போன பயணமாக இம்முறை இருந்தாலும், இலங்கை மண்ணிற்கு வந்திருந்த மன நிறைவு மற்றும் அறிமுகமான பலருடன் ஓய்வாக உரையாடக் கிடைத்த சந்தர்ப்பத்தின் மகிழ்வில் சுவிற்சர்லாந்து நோக்கிய எனது பயணத்தைத் தொடர்ந்தேன்.

பயணம் - 05

இம்முறை எதிர்பார்ப்பு நிறைவேறும் என்ற வேண்டுதலுடன் 1997 ஆடி மாதம் உறவுகளைச் சந்திக்கும் பயணம் அமைந்திருந்தது. கொழும்பு வரும்வரை உள்ள நடைமுறைகளை கடந்து, கொழும்பு காவல்துறை அலுவலகத்தில் பதிவை முடித்துக் கொண்டு விடுதியில் தங்கியிருந்த நான், யாழ்ப்பாணம் செல்வதற்கான நடவடிக்கையில் இறங்கினேன்.

யாழ்ப்பாணத்தில் இயங்கிய ஒரு அமைப்பின் கட்டுப்பாட்டில் காங்கேசன்துறை முதல் திருகோணமலை வரை 'நியூகோ என்டியூரன்ஸ்' என்னும் சிறியரக பயணிகள் நீரூர்தியும் ஏனைய சரக்கு நீரூர்திகளும், மேலதிகமாக 'ஹெலி ரூர்ஸ்' என்னும் பெயரில் இராணுவ வானூர்தியும் பயணிகளை ஏற்றியிறக்கும் சேவையிலீடுபட்டன.

கடல் பயணத்தைத் தவிர்க்கவே விரும்பினேன் அதனால் என்னுடைய தெரிவு 'ஹெலி ரூர்ஸ்' வானூர்தியாக இருந்தது. அதற்கான பயணச் சிட்டையைப் பெற்றுக்கொள்ள 'இரத்மலானை' 'ஹெலி ரூர்ஸ்' வானூர்தி சேவை பணிமனைக்குச் செல்லவேண்டும். பொதுவாக கொழும்பில் தங்கியிருக்கும் நாட்களில், பாதுகாப்பு கெடுபிடிகள் காரணமாக குறுந்தூரப் பயணங்களைத் தவிர வேறு இடங்களுக்கான பயணங்களை தவிர்த்து வந்துள்ளேன்.

இப்போது பயணச்சிட்டை பெற்றுக்கொள்ள நேராகச் செல்ல வேண்டிய நிலை. எனக்குத் தயக்கமும் பயமுமாக இருந்தது. இந்நிலையில் விடுதியில் வசித்த அறிமுகமானவர் மூலமாக தரகர் ஒருவர் அழைத்து வரப்பட்டார். அந்தத் தரகர், இராணுவத்தில் செல்வாக்குள்ள ஒருவர் கொச்சிக் கடையில் இருப்பதாகக் கூறி, மறுநாள் காலை இரத்மலானை செல்வதற்கு ஏதுவாக அவரை அழைத்து வருவதாகவும், கொஞ்சக் காசு செலவாகும் என்றும் கூறிச் சென்றார்.

மறுநாள் காலை, மூவரும் இரத்மலானை 'ஹெலி ரூர்ஸ்' வானூர்தி சேவை பணிமனைக்கு பேருந்தில் சென்றோம். பணிமனை வீதியோரத்தில் இருந்தது. இன்னமும் அது திறக்கப்படவில்லை. அப்போது எட்டு மணி. பணிமனை முன்பாக நாற்பது பேர்வரை வரிசையாக நின்றனர். நானும் அவ்வரிசையில் இணைந்துகொண்டேன். இராணுவத்தில் செல்வாக்குள்ளவ ரென கூறப்பட்டவர் என்னுடன் அடிக்கடிவந்து கதைத்துச் சென்றார்.

பணிமனையின் வீதிப்பக்கமிருந்த சாளரம்தான் பயணிகள் விமானப் பயணச் சிட்டைக்கான பதிவை மேற்கொள்வதும் பெற்றுக் கொள்வதற்குமான

துவாரமாக இருந்தது. பணிமனை திறக்கப்பட்டது. வரிசையை முறித்துக் கொண்டு பலர் சாளரத்தின் முன்னால் குவிந்தது விட்டனர். இராணுவத்தில் செல்வாக்குள்ளவரென கூறப்பட்டவரும் குவிந்து நின்றவர்களில் ஒருவராக நின்றார். சிறிதுநேரத்தில் என்னை தன்னருகே வருமாறு அழைத்தார். நானும் அவர் பின்னால் மெல்ல மெல்ல நுழைந்தேன். எனக்குப் பின்னாலும் பலர்.

நெருக்குப்பட்டு, இடிபட்டு, போதும் போதுமென்ற நிலையில் சாளரத்தை அண்மித்து விட்டேன். இது நான் எதிர்பார்க்காதது. இராணுவத்தில் செல்வாக்குள்ளவர் என் பின்னால் நின்றுகொண்டு, பணிமனையின் உள்ளே நின்று, அடையாள அட்டை மற்றும் கடவுச்சீட்டைப் பெற்றுப் பரிசீலித்து, பிரயாணச்சிட்டை எழுதுபவரிடம் ஒப்படைக்கும் இராணுவ அலுவலகரை நோக்கி, "சேருவதாம மம அம்புன்னாவே" (சிங்களத்தில்) கூறினார்.

இராணுவ அலுவலகர், "எய். மொனவாத பிரசன்னே?" (சிங்களத்தில்) எனக் கேட்டுவிட்டு பதிலையோ, அழைப்பையோ கருத்திலெடுக்காது தன் பணியிலேயே கண்ணாயிருந்தார். தொடராக நாலைந்து பேர் கடந்த பின்னர் அடுத்துவந்த என்னிடம் கடவுச் சீட்டைப் பெற்றுப் பரிசீலித்து, புறப்படும் - திரும்பும் திகதிகளைக் கேட்டுப் பதிவு செய்து பிராயாணச் சிட்டை எழுதுபவரிடம் ஒப்படைத்தார்.

அதிலிருந்து வெளியேறி பக்கத்திலிருந்த பிறிதொரு சாளரத்தினூடாகப் பணத்தைச் செலுத்தி, திகதிகளை சரிபார்த்து, பிரயாணச் சிட்டையை பெற்றுக்கொண்டு வீதிக்கு வந்தேன். இராணுவத்தில் செல்வாக்குள்ளவர், "இராணுவத்துக்குக் கொடுக்க வேண்டும் முதலில இரண்டாயிரம் ரூபா தாங்க" என்றார். அதற்கு நான், "அவர் ஒன்றும் செய்யவில்லையே ஏன் கொடுக்க வேண்டும்? உங்களுக்கென்றா பறவாயில்லை" என்று கூறினேன். "அவருக்குக் கொடுத்தால்த்தான் பிறகு நாங்க வந்து வேலை செய்யமுடியும்" என்று பதிலளித்தார்.

முகமறியா இராணுவ அலுவலகரை வைத்து பிழைப்பு நடத்துகிறார் என்பது புரிந்தது. அவரைக் கூட்டிவந்த தரகர் கொடுக்குமாறு சைகை செய்ததால், வேறு வழியின்றி பணத்தைக் கொடுத்தேன். பணத்தைப் பெற்றுக் கொண்டு போனவர், இராணுவ அலுவலகரிடம் செல்வதுபோல் சென்று, வேறு பக்கத்தால் திரும்பி நடந்து, சாளரத்தின் உள்பக்கம் நின்ற அந்த அதிகாரியிடம் செல்லாமலே திரும்பிவந்ததை நானும் தரகரும் பார்த்துக் கொண்டே நின்றோம். அவர் அதை அறிந்திருக்கவில்லை. "அவன் நாலாயிரம் கேட்டவன் ஒருமாதிரி ரெண்டாயிரத்தோட சமாளிச்சிட்டேன்" என்றார். நானும் தரகரும் ஒருவரையொருவர் நோக்கிக் கொண்டோம்.

விடுதிக்கு வந்தபின்னர் பி.ப. 5.00 மணியளவில் தரகர் தேடிவந்தார். "அவன், தனக்கு இரண்டாயிரம் ரூபா கேட்கிறான். எனக்கு எழுநூறு ரூபா தந்தா போதும்" என்றார். "இரத்மலானையில் இரண்டாயிரம் கொடுத்தேனே?" என்றேன். "அது இராணுவத்துக்கு" என்றார். "அவர்தான் இராணு

வத்துக்குக் கொடுக்காமல் வந்ததை நாங்க இருவரும் பார்த்தோமே!" என்றதும் தரகர் மௌனமானார். அவருக்கு எழுநூறு ரூபாவைக் கொடுத்து, "இராணுவத்துக்கென கொடுத்த பணத்தை அவர் எடுக்கட்டும்" என்றுகூறி அனுப்பி வைத்தேன். எத்தனை கோணங்களில் மனிதர் வாழ்கிறார்கள்.

இரத்மலானை வானூர்தி நிலையத்தில் கடுமையான உடல் - பொருள் சோதனைகள், பாதுகாப்பு முன்னேற்பாடுகளுக்கு மத்தியில் பயணிகள் அனைவரும் பேருந்தில் ஏற்றப்பட்டு, பச்சை நிறத்தையுடைய 'ஹெலி ரூர்ஸ்' வானூர்திக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

வானூர்தியின் பின்பகுதியில் தரையை நோக்கி இரும்புக் கதவு திறக்கப்பட்டிருந்தது. நான் இத்தகைய வானூர்தியை எதிர்பார்க்கவில்லை. சாதாரண வானூர்தியாகத்தான் இருக்குமென்றே எண்ணினேன். இராணுவத்தினர் பயணிக்கும் வானூர்தி அது. திறந்திருந்த கதவின் மேலாகப் பொருட்கள் உள்ளே கொண்டுசெல்லப்பட்டன. பயணிகளும் வரிசையாக இரும்புக் கதவின் மேலாக ஏறிச் சென்றனர். பயணிகள் பாதுகாப்பாக பிடித்து ஏறுவதற்கென இரு பக்கமும் இரும்புச் சங்கிலிகள் கட்டப்பட்டிருந்தன.

ஒருவாறாக வானூர்தியில் ஏறிக்கொண்டேன். ஒடுங்கி நீண்டு தெரிந்த வானூர்தியின் உட்பகுதியில் நடுவே பொருட்கள் குவிக்கப்பட்டு பச்சை நிற தடிப்பான நூலால் பின்னப்பட்ட வலை கொண்டு மூடப்பட்டிருந்தது. வானூர்தியில் இருப்பவை போன்று இருக்கைகள் எதனையும் காணவில்லை. பயணிகள் நிற்பதை அவதானித்த விமானப் படை அலுவலகர், எல்லோரையும் இருக்கையில் அமருமாறு கூறினார்.

பயணிகள் இருக்கையைக் கண்டுபிடிக்க முடியாத குழப்பத்தில் ஒருவரையொருவர் பார்த்தும், கேட்டும் கொண்டனர். அந்த விமானப் படை அலுவலகர் மக்களின் குழப்பத்தைப் புரிந்துகொண்டிருக்க வேண்டும். தானே வந்து, விமானத்தின் இரு கரையிலும் வானூர்தியோடு இணைத்து மடிக்கப்பட்டிருந்த பலகையை நிமிர்த்திக் காட்டினார். பலகையை நிமிர்த்தியதும் பக்கவாட்டில் வானூர்தியுடன் இணைந்த நீண்ட இருக்கையாக மாறியது. பயணிகள் அமர்ந்து கொண்டனர். முன்னைய யாழ்ப்பாணத்துத் தட்டிவான் இருக்கையை நினைவூட்டியது. இருபக்கமும் தலைக்கு நேராக கேபிள்கள் கட்டப்பட்டிருந்தன. அந்தக் கேபிள்கள் தான் பயணிகளின் கைபிடி.

எந்த அடிப்படை வசதியுமற்ற வானூர்தியாக இருந்ததால் பயம் தொற்றிக்கொண்டது. வானூர்தியில் கண்ணாடி சாளரங்கள் இருக்கவில்லை. மங்கலான வெளிச்சமே உள்ளே இருந்தது. ஏற்கெனவே இதுபற்றி அறிந்திருந்தால் யாழ்ப்பாணப் பயணத்திற்கு முயற்சித்திருக்க மாட்டேன். பின்பக்கக் கதவு மேலெழுந்து மூடிக்கொண்டது.சில பயணிகள் பஞ்சு கொண்டு செவிகள் இரண்டையும் அடைத்தனர். ஏனென்று தெரியவில்லை. வானூர்திப் பயணத்தின் பயம் காரணமாக சிலர் பஞ்சு மற்றும் 'கெற்போண்' அணிவதுண்டு. வானூர்தி எழும்போதும் இறங்கும்போதும் காது அடைத்து, தாடை

இறுகாதிருப்பதற்காகச் சிலர் ரொபி அல்லது சுயிங்கம் சப்புவதுண்டு. பல்லை இறுகக் கடித்துக்கொண்டாலே போதுமானதாகும். அதுவாக இருக்கலாமென்ற எண்ணத்துடன் கேபிளைப் பிடித்தவாறு அமர்ந்திருந்தேன்.

வானூர்தியின் இயந்திரம் இயங்கத் தொடங்கிய பின்னர்தான், பயணிகள் பஞ்சை செவிகளில் அடைத்ததன் காரணம் புரிந்தது. செவிப்பறை உடைந்திடும் அளவுக்கு வானூர்தியின் இரைச்சல். இந்த இரைச்சல் கேளாது தடுக்க எவ்வளவு பஞ்சை அழுத்தினாலும் போதாது என்றே தோன்றியது. அவ்வளவுக்கு உரத்த இரைச்சல். இரைச்சலின் மத்தியில் வானூர்தி முன் பக்கத்தை உயர்த்தி, வானோக்கி எழுந்து, சிறிது நேரத்தால் சமனான பயணத் தைத் தொடர்வதை உணரக்கூடியதாக இருந்தது. கேபிளின் பிடியை விட்டு விட்டு, கைகளால் செவிகளை இறுக அழுத்தியவாறு இருந்தேன்.

பக்கத்தில் இருப்பவருடன் பேசக்கூட முடியாத நிலை. ஒருவாறாக பலாலி வானூர்தி நிலையத்தை அடைந்தோம். அங்கிருந்து வானூர்தி வளாகத் தின் தற்காலிக கொட்டகை வரை இராணுவ பேருந்தில் ஏற்றிவரப்பட்டு, அங்கிருந்து இராணுவப் பாதுகாப்புடன் இ.போ.ச. பேருந்தில் யாழ்ப்பாணம் வரை பயணித்தோம். விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்து இலங்கை இராணுவத்தின் கைகளுக்கு மாறிய பின்னரான எனது முதலாவது பயணம் இதுவாகும். யாழ் - பலாலி வீதிகளெங்கும் இராணுவத்தினரையும் ஆங்காங்கு காவலரண்கள் மற்றும் முகாம்களையும் காண முடிந்தது. இந்துக் கோயில்களும் இராணுவ முகாமாக மாறியிருந்ததை வேதனையுடன் பார்த்துக்கொண்டேன். யாழ்ப்பாணம் வந்தும் வானூர்தியின் இரைச்சல் ஏற்படுத்திய தாக்கம் செவிகளிலிருந்து விடுபட வேயில்லை.

மீண்டும் உறவுகளைச் சந்தித்தது சந்தோஷமாக இருந்தாலும் இராணு வத்தினரின் பாதுகாப்புக் கெடுபிடிகள் அதிகமாக இருந்தமை வேதனை அளித்தது. பலரது வீடுகள் சிறிய முகாம்கள் - காவலரண்களாக இருந்தன. பல வீதிகள் பயணிக்கத் தடைசெய்யப்பட்டிருந்தன. சந்திக்குச் சந்தி, வீதிக்குவீதி இராணுவத்தினரையே காணமுடிந்தது.

வீதிகளில் பயணிப்போர் மறிக்கப்பட்டு அடையாள அட்டை பரிசீலிக் கப்பட்ட பின்னரே பயணிக்க அனுமதிக்கப்பட்டனர். வாகனங்களில் வருபவர் களும் அவ்வாறே நடத்தப்பட்டனர். இடையிடையே சுற்றிவளைப்புகள், வீட்டு சோதனைகள், வீதி சோதனைகள் நடை பெற்றுக்கொண்டிருந்தன.

தினமும் இரவு ஏழு மணி தொடக்கம் அதிகாலை ஆறு மணிவரை ஊரடங்கு நிலை அமுலில் இருந்தது. பொதுவாக சுதந்திரமான நடமாட்டத் திற்கு இவை இடையூறாகவே தென்பட்டது. ஆனாலும், அங்குள்ள மக்கள் தம்மைப் பழக்கப்படுத்திக் கொண்டவர்களாகவே காணப்பட்டனர்.

வன்னி பெருநிலப்பரப்புக்கு இடம் பெயர்ந்து சென்றவர்களில் சிலர், தனித்தும் குடும்பமாகவும் கடல் மார்க்கமாக யாழ்ப்பாணம் வரத் தொடங்

கினர். யாழ்ப்பாணத்திலிருந்து வன்னி பெருநிலப்பரப்பை இணைத்துச் செல்லும் மன்னார்க் கடல், கடற்படையினரால் வெகுவாகக் கண்காணிக்கப் பட்டு வந்தது. அந்தப் பகுதிக் கடலில் பயணம் செய்த கடற்றொழிலாளர் பலர் சுவடே தெரியாமல்போன வரலாறுகள் பல உண்டென அறிய முடிந்தது. இவ்வாறு கடற்பயணம் ஆபத்தானது எனத் தெரிந்திருந்தும், வன்னியிலிருந்து கடல் மார்க்கமாக ஆண்களும் - பெண்களும் யாழ்ப்பாணம் வந்துகொண்டே இருந்தனர்.

நள்ளிரவின் முன்னர் வள்ளம் / சிறிய கண்ணாடி நாரிழைப் படகில் புறப்பட்டு, வன்னி பெருநிலப் பரப்பின் கரையோரமாகப் பயணத்தைத் தொடர்ந்து, அதிகாலை பொழுது புலரும் முன்னரே யாழ்ப்பாணம் - முகத்துவார வெளிச்சவீட்டைக் கடந்து, ஐம்பது மீற்றர் தூரத்தில் வடக்குப் பக்கமாக இருக்கும் 'கடல்விரால் பிட்டி'யில் மக்களை இறக்கிவிட்டு, படகோட்டிகள் திரும்பி விடுவார்கள்.

புலிகள் மேற்கொண்ட 'தவளைப் பாச்சல்' தாக்குதலின் பின்னர், வன்னி பெருநிலப்பரப்பில் பூனகரி - கல்முனையிலிருந்து, மன்னார் - நாச்சிக் குடா வரை இராணுவ மற்றும் கடற்படை முகாம்கள் எதுவும் இல்லாமையும், இயற்கையாகவே கரையோரப்பகுதி ஆழமான கடலாக இருக்கின்றமையும், இடம்பெயர்ந்து வன்னிக்குச் சென்ற மக்கள் யாழ்ப்பாணம் வரவேண்டுமென இராணுவம் விரும்புவதும் படகோட்டிகளுக்கு சாதகமாக அமைந்திருந்தது. கல்முனையிலிருந்து முகத்துவார வெளிச்சவீடு வரையான விரிந்த கடற் பகுதியில்தான் அவதானம் தேவையாகவிருந்தது.

'கடவிரால் பிட்டி' (கடவிரால் மேடு) என அழைக்கப்படும், கடலில் உயர்ந்து இருக்கும் கடலடித் தரையான மேட்டைச் சுற்றிய கடற்பகுதி சற்று ஆழமாக இருந்தாலும், குவிந்திருக்கும் வெண் மணலிலான மேட்டில் ஆழம் குறைவாகவே இருந்தது. கடல் வடுவான நேரத்தில் முழங்கால் வரையும், கடல் வெள்ளமான நேரத்தில் இடுப்பு அளவும் நீர் நிற்பதால் மக்கள் பயமற்று, மழையோ - குளிரோ என்றாலும் அம்மேட்டில் இறங்கி நிற்பர் விடியும்வரை. கடற்பகுதியில் நன்கு பரிச்சயம் உள்ளவர்கள், கடல் வடுவாக இருந்தால் நடந்தும் கரையை நோக்கிச் செல்வர்.

குருநகர் ஜெற்றியில் முகாமிட்டுள்ள இராணுவத்தினர் காலையில், தொலைநோக்கி மூலம் 'கடவிரால் பிட்டி'யில் மக்கள் நிற்பதை அவதானித் தால் அல்லது எவரேனும் அவர்களுக்குத் தெரியப்படுத்தினால், படகுகளை அனுப்பி அங்கு நிற்பவர்களை ஏற்றிவந்து, 'சீநோர் வலைத் தொழிற்சாலை' கட்டடத்தில், யாழ். செயலகத்தின் மேற்பார்வையில் இயங்கிய தடை முகாமில் சேர்த்து விடுவர். இராணுவத்தைத் தவிர வேறு எவரேனும் அழைத்துவர முடியாத. இது நடைமுறையாகத் தினமும் தொடர்ந்தது.

தடைமுகாமில் இருப்பவர்களுக்கு மூன்றுநேர உணவுக்கான ஏற்பாட்டை யாழ். செயலகம் மேற்கொள்கின்றது. கிராம சேவையாளர்,

தத்தமது பிரிவுக்குட்பட்டவர்களென உறுதிப்படுத்தி, பொறுப்பெடுத்துக் கொள்ளும் பட்சத்தில் அவர்கள் வீட்டுக்குச் செல்ல அனுமதிக்கப்படுவர். சிலர் இரண்டு மூன்று நாள்களும், சிலர் இரண்டொரு கிழமைகளும் அங்கு தங்கியிருக்க நேரிடும்.

கிராம சேவையாளருடன் முகாமுக்குச் செல்லக்கூடிய சந்தர்ப்பம் கிடைத்ததால், அறிமுகமான சிலருடன் உரையாடி நிலமைகளை அறியக் கூடியதாக இருந்தது. ஒவ்வொருவருக்கும் ஏதோவொரு துன்பியல் வரலாறு இருந்ததை உணர்ந்து, ஜீரணமாகாத இழப்புகளை வேதனையுடன் கேட்டறிந்தேன்.

யாழ்ப்பாணத்தில் பத்து நாட்கள் மட்டும் தங்கியிருக்கும் நோக்கிலேயே பிரயாணச் சிட்டையைப் பெற்று வந்திருந்தேன். உறவுகள், நண்பர்களின் சந்திப்பால் ஒன்பது நாட்கள் விரைந்தே கடந்தது.

அன்றைய இரவு ஊரடங்கு நிலை தொடங்கிய பின்னர், காலை கொழும்பு புறப்படுவதற்காக 'சூட்கேஸி'ல் பொருட்களை ஒழுங்காக அடுக்கி, உணவருந்தி முடிய இரவு பத்து மணியாகிவிட்டது. பொதுவாக இந்நேரம் எல்லோரும் உறங்கிவிடுவோம். இன்று எதிர்மாறாக உணவருந்திய பின்னரும் சாப்பாட்டு மேசையில் சுற்றுவர இருந்து அரிக்கன் லாந்தர் ஒளியில் உரையாடிக் கொண்டிருந்தோம். மட்டுப்படுத்தப்பட்ட, சுழற்சி முறையான மின்சாரம் வழங்குதால் இரவு 9.00 மணிக்கு மின்சாரம் நிறுத்தப்பட்டுவிடும். பலரும் முன்கூட்டியே உறங்கச் செல்வதற்கு இதுவுமொரு காரணமாகும்.

ஊரடங்கு நேரமென்பதால் எங்கும் அமைதியே நிலவியது. இடையிடையே தெருநாய்கள் குரைக்கும் ஒலிகள் கேட்டாலும், எமது சுவாரஸ்யமான உரையாடல்தான் மேலோங்கியிருந்தது. வாக்குவாதமும் சிரிப்பும் களைகட்டியிருந்ததால் சந்தோஷமான நேரமாகவும் இருந்தது. அந்நேரம் சுடச்சுட பரிமாறப்பட்ட இஞ்சித் தேநீர், அந்த நேரத்திற்கு தேவையான ஒன்றாகவும் உற்சாகமாகவும் இருந்ததை மறுப்பதற்கில்லை.

சில மணித்துளிகளின் பின்னர், திடீரெனக் கேட்ட துப்பாக்கிச் சத்தங்களால் இதயம் வேகமாக துடிக்க உரையாடல் சத்தம் அடங்கியது. கண்மூடித் திறக்கும்முன் துப்பாக்கிச் சன்னத்திலொன்று, வீட்டின் சாளரக் கண்ணாடியை உடைத்து கொண்டு உள் நுழைந்து, மண்டபத்தின் தரையை உரசிய தீப்பொறியுடன் உட்பக்க சுவரில் மோதியதைப் பார்த்த நாங்கள் அதிர்ச்சியில் உறைந்து விட்டோம்.

காற்றோட்டத்திற்காக எப்போதும் மண்டபத்திலேயே உறங்குவது வழமை. இன்று, நாம் உறங்கச்செல்ல தாமதமானபடியால் மண்டபம் வெறுமையாக இருந்தது. வழமைபோல் முன்னரே மண்டபத்தில் உறங்கியிருந்தால்... நினைத்தபோது தேகம் நடுங்கியது. நல்லவேளையாக நாம் இருந்த சாப்பாட்டு அறை, சமையலறைக்கும் முன் அறைக்கும் இடையில் இருந்ததால் எமக்கு எந்த ஆபத்தும் ஏற்படாமல் காப்பாற்றப்பட்டோம்.

துப்பாக்கிச் சன்னம், இராணுவ முகாம் பக்கமிருந்து வந்திருந்தாலே வீட்டு சாளரத்தை நேராக ஊடறுத்திருக்க முடியும். வீட்டின் மேற்குப் பக்கம் ஐம்பது மீற்றர் தூரத்தில், அலுப்பாந்தி கடற்கரையோரமாகவே இராணுவ முகாம் இருந்தது. சிந்தனைகள் - கற்பனைகளால் பயம் உச்சம்பெற்றிட, உறங்க விருப்பமற்றபோதும், வேறு வழியின்றி நடுக்கத்துடன் உறங்கச் சென்றோம். அறைகளில் சுவர் மறைப்பைத் தேடிச்சென்று படுத்தும் பயம் நீங்கிய தாயில்லை. நீண்டநேரம் உறக்கம் வர மறுத்தது. மேற்கொண்டு எதுவும் நிகழாமையால் மனதிற்கு நிம்மதி.

காலை எழுந்து பார்த்தபோது மண்டபத்தில் துப்பாக்கி சன்னம் கிடந்தது. அதை நாங்கள் எடுக்கவில்லை. வெளியே இராணுவ நடமாட்டம் இருந்ததால் வெளியே செல்லவுமில்லை. வெளிக் கதவில் யாரோ தட்டிய சத்தம் கேட்டுத் திறந்ததும் இரண்டு இராணுவத்தினர் வளவில் நுழைந்தனர். வீட்டைச் சுற்றிப்பார்த்து, உடைந்த கண்ணாடிகளைப் பார்வையிட்டு, மண்டபத்தில் கிடந்த சன்னத்தையும் எடுத்துக் கொண்டு சென்றனர். இரவு நடந்த நிகழ்வுபற்றி எதுவும் கூறவில்லை.

இராணுவத்தினர் சென்றபின்னர் பயணத்திற்கான ஆயத்தத்துடன், சஞ்சலமான மனத்துடன் புறப்பட்டு, எட்டு மணியளவில் மாட்டின் வீதியும் (புகையிரதநிலைய வீதி) வைத்தியசாலை வீதியும் சந்திக்கும் இடத்தில் ஏனைய பயணிகளுடன் பொதிகளோடு காத்துநின்றேன். என் நினைவுகள் இரவு நடந்த நிகழ்வையே சுற்றிச் சுற்றி வந்தன.

ஒன்பது மணியளவில் இராணுவ அலுவலர் பயணச்சிட்டை, கடவுச்சீட்டைப் பார்வையிட்ட பின்னர் பொதிகளைத் தூக்கிக்கொண்டு, முன்னர் சிங்கள மகா வித்தியாலயம் இருந்த இடத்தில் அமைக்கப்பட்டுள்ள தற்காலிக கொட்டகைக்குச் செல்ல அனுமதித்தார். அங்கு போடப்பட்டிருந்த இருக்கைகளில் அரை மணித்தியாலத்திற்கு மேலாக அமர்ந்திருந்தேன்.

'ஹெலி ரூர்ஸ்' வானூர்தி அலுவலகர்கள் வந்து அமர்ந்ததும் பட்டியலின்படி பெயர் சொல்லி ஒவ்வொருதராக அழைத்தனர். அவர்கள் பயணச்சிட்டை, கடவுச் சீட்டைப் பதிந்து உறுதிசெய்து கொண்டதும் உடல் சோதனை செய்யப்பட்டு, பொதிகள் சோதனையிடப்படும் இடத்திற்கு பொதிகளுடன் வரிசையாகச் சென்றேன்.

அனைத்துப் பொருட்களும் 'சூட்கேஸ்'ல் இருந்து வெளியே எடுத்து வைக்கப்பட்டு மிக நுணுக்கமாக சோதனையிட்ட பின்னர் உள்ளே வைக்கப் பட்டன. சோதனை முடிந்ததும் பொதிகள் பேருந்தில் ஏற்றப்பட்டது. நாமும் அதே பேருந்தில் ஏற்றப்பட்டு, பலாலி வானூர்தி நிலையம் நோக்கி அழைத்துச் செல்லப்பட்டோம். பாதுகாப்புக்காக இரண்டு இராணுவத்தினர் எம்கூடவே பயணித்தனர்.

வானூர்தி நிலைய வளாகத்தில் அமைக்கப்பட்டிருந்த தற்காலிக கொட்டகையில் அமர்ந்திருக்க ஒவ்வொருவராக பெயர்சொல்லி அழைக்கப்

பட்டோம். அறை ஒன்றில் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு, கொழும்பு செல்வதற்கான காரணம் விசாரிக்கப்பட்டு, நிழற்படம் எடுக்கப்பட்டது. அடுத்த அறையில் பொதிகள் சோதனை துல்லியமாய் மேற்கொள்ளப் பட்டதும் பொதிகளை அங்கேயே ஒப்படைத்து வெளியேறினோம்.

அனைத்துச் சோதனைகளும் முடிவுற்றதும் பேருந்தில் ஏற்றப்பட்டு வானூர்திக்கு ஐம்பது மீற்றர் தூரத்தில் இறக்கப்பட்டதும் அங்கிருந்து நடந்து சென்று வானூர்தியில் ஏறிக்கொண்டோம். இம்முறை பஞ்சு எடுத்து வந்திருந்தேன் முன்னைய அனுபவம் காரணமாக. பயணிகள் ஏறிக் கொண்ட சிறிது நேரத்தால் பேரிரைச்சலுடன் புறப்பட்டது வானூர்தி, கொழும்பு இரத்மலானை வானூர்தி நிலையம் நோக்கி...

பயணம் - 06

1998 ஆவணி இறுதி வாரத்தில் எனது ஆறாவது இலங்கைப் பயணம் அமைந்திருந்தது. கொழும்பில் தங்குவதற்கு ஏற்ற வகையில் வழமைபோல் காவல்துறை பதிவை முடித்துக்கொண்டு, யாழ்ப்பாணம் செல்வதற்கான வானூர்தி பயணச் சிட்டை பெறும் முயற்சியில் ஈடுபட்டேன். கொழும்பில் நெருக்கடிகள் முன்னரைவிடக் குறைவாகத் தெரிந்தது.

கொழும்பு - யாழ்ப்பாண சேவைக்கென தனியாருக்குச் சொந்தமான 'லயன் எயார்' மற்றும் 'மொனரா எயார்' என்னும் ஐம்பது இருக்கைகளுள்ள சிறியரக வானூர்திகள் சேவையில் ஈடுபட்டன. 'லயன் எயார்' இற்குரிய பயணச்சிட்டை பெற்றுக்கொள்ளும் அலுவலகம் இரத்மலானையில் இயங்கி யதால் காலை 7.00 மணிக்குச் சென்றேன். முப்பது வரையான பயணிகள் வரிசையில் நின்றனர். அவர்களுடன் இணைந்து கொண்டேன். எனக்குப் பசித்ததால் முன்னாலும் பின்னாலும் நின்றவர்களிடம் சொல்லிவிட்டு தேநீரகம் சென்று உணவருந்தி வந்து வரிசையில் முன்னைய இடத்தில் புகுந்து கொண்டேன்.

அலுவலகம் திறக்கப்பட்டதும் உள் நுழைந்து 01.09.1998 இல் இங்கிருந்து பயணிப்பதற்கும், 25.09.1998 இல் யாழ்ப்பாணத்திலிருந்து திரும்புவதற்குமான இருவழி பயணச்சிட்டைகளை சிரம மின்றிப் பெற்றுக் கொண்டேன். குறித்த திகதியில் இரத்மலானை வானூர்தி நிலை யம் சென்று, அங்கு பாதுகாப்பு நடைமுறைகள், பொருட்கள் பரிசோதனை முடிந்ததும், வானூர்தி சேவைப்பிரிவில் பொருட்களை ஒப்படைத்தேன்.



இருபது கிலோ பொருட்களே உடன் எடுத்துச்செல்ல அனுமதிக்கப்பட்டது. மேலதிகமானவற்றிற்கு கிலோவுக்கு 100.00 ரூபா வீதம் செலுத்தவேண்டும். நான் 15 கிலோவுக்குப் பணம்செலுத்தி, 'லயன் எயார்' வானூர்தியில் பயணத்தைத் தொடர்ந்து பலாலி வானூர்தி தளத்தை வந்தடைந்தேன்.

பலாலி வானூர்தி தளத்திலிருந்து பயணிகள் பேரூந்திலும், பொதிகள் பாரவூர்தியிலும் ஏற்றப்பட்டு, வானூர்தி வளாகத்தின் தற்காலிக கொட்டகை வரை கொண்டுசெல்லப்பட்டோம். அங்கிருந்து இ.போ.ச. பேருந்தில் இராணுவத்தினரின் பாதுகாப்புடன் யாழ்ப்பாணம் வரை பயணித்தோம்.

முன்னரைபோலல்லாது யாழ்ப்பாணத்தில் கெடுபிடிகள் குறைவாக இருந்தது. ஊரடங்கு சட்டம், சுற்றிவளைப்புகள், வீடுகள் சோதனைகள், வீதி மறிப்புகள் மாற்றமின்றி இருந்தாலும் குறைவாக இருந்தது. சில வீதிச் சந்திகளில் அடையாள அட்டைப் பரிசீலித்தலில் மாற்றமிருக்கவில்லை.

நின்ற நாட்களில் உறவினர் ஒருவரின் திருமண விழாவுக்குச் சென்றிருந்தேன். திருமண விழா ஏற்பாட்டில் பந்தல் முதல் பந்தி வரை 1983 இற்கு முன்னரைப்போலவே இருந்தது. கேக் அடிப்பது, வீட்டில் - பந்தலில் அலங்காரம் செய்வது, திருமணத்திற்கு முதல் நாளிலிருந்து சமையலுக்கான முன்னாயத்தங்கள் செய்வது போன்றவற்றில் ஒன்றித்துச் செய்யும் நடைமுறை தொடர்ந்ததால் மகிழ்வுடன் நானும் பங்கு கொண்டேன்.

திருமண விழாவில் உறவினர், ஊரவர், நண்பர்கள் பலரையும் கடந்த தடவைகளைவிட அதிகமாகவும் ஒருசேரவும் சந்தித்தமை, உரையாடியமை மகிழ்ச்சியைக் கொடுத்தது. கடந்த பயணங்களைவிட இம்முறை வெற்றிட மாய்க் கிடந்த வீடுகள் சிலவற்றில் குடியிருப்பாளர்கள் இருந்தனர். யாழ்ப் பாண மக்களிடையே மாற்றமுமிருந்தது. பல கெடுபிடிகள் தளர்த்தப்பட்டதே காரணமாகும்.

உறவுகள், நண்பர்களைச் சந்தித்த மகிழ்வில் 25ஆம் திகதி கொழும்பு நோக்கிய பயணத்தை ஆரம்பித்தேன் பயணத்தின்போது முன்னைய நடைமுறையில் எவ்வித மாற்றமுமிருக்கவில்லை. பொருட்கள் பரிசோதனை கடுமையாகவே இருந்தது. 27ஆம் திகதி சுவிற்சர்லாந்துக்குப் பயணமானேன்.

பயணம் - 07

1999 ஆவணி மாத நடுப்பகுதியில் எனது ஏழாவது இலங்கைப் பயணம் அமைந்திருந்தது. வழமைபோல் கொழும்பு காவல்துறையில் இருப்பை பதிவு செய்துகொண்டு, மறுநாள் யாழ்ப்பாணம் செல்வதற்கான வானூர்தி பயணச் சிட்டை பெறுவதற்காகப் புறப்பட்டேன்.

தனியாருக்குச் சொந்தமான 'மொனரா எயார்' வானூர்தியும், விபத்தில் சிக்குண்ட 'லயன் எயார்' வானூர்திக்கு மாற்றீடாக 'ஹெலி ரூர்ஸ்' இராணுவ வானூர்தியும் கொழும்பு - யாழ்ப்பாண சேவையில் ஈடுபட்டன. 'ஹெலி ரூர்ஸ்' வானூர்தி பயணத்தில் 1997 ஆம் ஆண்டு ஏற்பட்ட அனுபவம்

காரணமாக அதை விடுத்து, 'மொனரா எயார்' இற்குரிய பயணச்சிட்டை பெற்றுக்கொள்ளும் நோக்கில் இரத்மலானையில் இயங்கிய அலுவலகத்திற்கு காலை 8.00 மணிக்கு முன்னரே சென்று வரிசையில் இணைந்து கொண்டேன். குறைவான பயணிகளே அவ்வேளை நின்றனர். ஒன்பது மணிக்கு அலுவலகம் திறக்கப்பட்டது. வரிசை ஒழுங்கில் உள் நுழைந்தேன்.

மூன்று வாரங்கள் யாழ்ப்பாணத்தில் நிற்பதற்கு ஏற்ற வகையில், குறித்த திகதியில் செல்வதற்கும் திரும்புவதற்குமென இருவழிப் பயணச் சிட்டையை இலகுவாகப் பெற்றுக்கொண்டு திரும்பினேன். ஆனாலும், உள்ளத்தில் இனம்புரியாத பயம் இருந்ததை மறுப்பதற்கில்லை. கடந்த ஆண்டு இடம்பெற்ற யாழ்ப்பாணம் - கொழும்பு வானூர்தி விபத்தே அந்த பயத்திற் கான காரணம்.

1998 செப்ரெம்பர் 29 அன்று யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வானூர்தி நிலையத்திலிருந்து இரத்மலானை வானூர்தி நிலையம் வரை சேவையில் ஈடுபட்ட 'லயன் எயார் 602' வானூர்தி, பயணிகளை ஏற்றிச் செல்கையில், மன்னார்க் கடற் பரப்பில், பள்ளிக்குடாவுக்கும் இரணைதீவுக்கும் இடையில் கடலினுள் வீழ்ந்தது. இவ்விபத் தில் 48 பயணிகளும், 04 வெளி நாட்டுப் பணியாளர்களும், 03 உள்ளூர் பணியாளர்களுமாக 55 பேர் கொல்லப்பட்டனர். இவ்வானூர்தி, கோளாறு காரணமாக விபத்துக்குள்ளா னது எனவும், விடுதலைப் புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டது எனவும் ஊகத்தின் அடிப்படையில் பரவலாகப் பேசப்பட்டது.


கடலில் மீட்கப்பட்ட விமானத்தின் பாகம்

சோளகக்காற்று வீசிய காரணத்தால் விபத்தில் சிக்குண்டவர்களின் உடல்கள் கல்முனை தொடக்கம் பெரியவேலி வரை கரையொதுங்கிய தாகவும். சிலவற்றை ஊரவர்கள் அடக்கம் செய்ததாகவும். சில பன்றிகளுக்கு உணவானதாகவும் அறியக்கூடியதாக இருந்தது.

வானூர்தி விபத்து நடந்த தினத்துக்கு நான்கு நாட்களுக்கு முன்னரே (25.09.1998) அதே வானூர்தி யில் பயணித்திருந்தேன். நான்கு நாட்கள் கழித்து எனது பயணம் அமைந்திருந்தால்... நினைத்தபோது தேகம் சிலிர்த்தது.

1998ஆம் ஆண்டின் பயணத்தின்போது இருந்த நடைமுறைகளே இவ்வாண்டும் கொழும்பு முதல் யாழ்ப்பாணம் வரை இருந்ததை அவதானித் தேன். யாழ்ப்பாணத்து மக்களின் வாழ்வியலில் மேலும் முன்னேற்றம் இருந்ததை காணக்கூடியதாக இருந்தது. படிப்படியான முன்னேற்றம். பல விற்பனை நிலையங்களும் புதிதாக முளைத்துள்ளன. இராணுவத்தினர்

வீடுகளிலிருந்து வெளியேறியமை காவலரண்கள் குறைக்கப்பட்டமையால் ஏற்பட்ட மக்களின் சுமை குறைந்த நடமாட்டமே மாற்றத்துக் காரணமாகும். பொதுவாக மக்கள் இராணுவ பிரசன்னத்தை வெறுக்கிறார்கள் என்பதை அறியக்கூடியதாக இருந்தது.

ஐரோப்பா வாழ் தமிழ் மக்களின் தேவை கருதி எழுதப்பட்டு, 1998 கார்த்திகை மாதம் சுவிற்சர்லாந்தில் வெளியீடு செய்யப்பட்ட, எனது நான்காவது நூலான 'செயல்முறைக் கணிப்பொறி' நூல் யாழ்ப்பாணத்து மாணவர்களுக்கும் அவசியம் எனக் கூறி, யாழ்ப்பாணத்தில் அறிமுகம் செய்யும் படி நண்பர்கள் வற்புறுத்தினார்கள். அதிக பிரதிகள் கைவசம் இருக்கவில்லை. இருப்பினும் அப்பிரதிகளைக் கொண்டு அறிமுகம் செய்ய முடிவெடுத்தேன்.

26.08.1999 அன்று பரி. யோவான் கல்லூரி மண்டபத்தில் செங்கை ஆழியான் க.குணராசா அவர்கள் தலைமையில், சில பேராசிரியர்கள், கணினி பயிற்றுவிப்பாளர் முன்னிலையில் அறிமுக விழா இடம்பெற்றது. எனது நண்பரும் 'நெயோ கல்சரல் கவுன்சில்' அமைப்பாளருமான திரு. வி.ஜே.கொன்ஸ்ரன்ரைன் அவர்களும், நண்பர்கள் - உறவினர்களும் இணைந்து இம்முயற்சியில் ஈடுபட்டனர். அழைப்பிதழ் அச்சிட்டதிலிருந்து விநியோகித்தல், மண்டப ஒழுங்குகள் செய்தல், பேச்சாளரை ஏற்பாடு செய்தல் போன்ற அனைத்தையும் அவர்களே மேற்கொண்டனர்.

நூறுக்கும் மேற்பட்டவர்கள் விழாவுக்கு வருகை தந்திருந்தார்கள். அழைக்கப்பட்டிருந்த துறைசார்ந்தவர்கள் செயல்முறைக் கணிப்பொறி பற்றிய ஆய்வை துல்லியமாக மேற்கொண்டனர். விழாவுக்கு வருகைதந்திருந்த பலரும் பாராட்டினார்கள். யாழ்ப்பாணத்தில் நூல்வெளியீடு செய்வது எனக்கு புதிது என்பதால் மகிழ்வாக இருந்தது. நூல் பற்றாக்குறைதான் பெரும் பிரச்சினையாக இருந்தது. கைவசமிருந்த பிரதிகளுக்கு ஏற்றவாறு சிறப்புப் பிரதிகள் வழங்கப்பட்டன.

நான் யாழ்ப்பாணத்தில் நின்ற நாட்களில், செயல்முறை கணிப்பொறி நூலை பெற்றுக்கொள்ள பலரும் ஆர்வம் காட்டியதால், மீள்பதிப்பு செய்வதற்கான ஏற்பாட்டைச் செய்துவிட்டு கொழும்பு நோக்கிய பயணத்தை ஆரம்பித்தேன். பயணத்தின்போது பொருட்கள் பரிசோதனையில் சிறிய தளர்ச்சியைத் தவிர முன்னைய நடைமுறையில் எவ்வித மாற்றமும் இருக்கவில்லை.

பயணம் - 08

2001 மாசி மாதம் எனது எட்டாவது பயணம் அமைந்திருந்தது. இம்முறை நான் சுவிற்சர்லாந்துக்குத் திரும்பிச்செல்லும் நோக்கத்தில் வரவில்லை. இரண்டு கால்களும் நரம்புச் சத்திர சிகிச்சைக்கு உட்பட்டுத்தப் பட்டிருந்ததால் எனக்கு ஓய்வு தேவைப்பட்டது. அதனால், நிரந்தரமாக இங்கே தங்கியிருக்கும் நோக்கிலேயே வந்தேன்.

மாற்றமற்ற நிலையிலேயே கொழும்பு இருந்தது. முன்னைய நடை முறைகளைப் பின்பற்றி கொழும்பில் தங்கியிருந்தேன். சுவிற்சர்லாந்திலிருந்து கப்பலில் அனுப்பியிருந்த பொதிகளை எடுப்பதற்காக ஒரு மாதம்வரை கொழும்பில் தங்கியிருக்கவேண்டிய தேவை ஏற்பட்டது.

அநேக பொருட்கள் பயணிகள் கூடவே எடுத்துச் செல்வதற்கு தடை யென்பதால், நான் அனுப்பிவைத்திருந்த பொதிகள் கிடைத்ததும் தரகர் மூலம் யாழ்ப்பாணம் அனுப்புவதற்கான ஏற்பாட்டை மேற்கொண்டேன். இதற்காக அதிக பணம் செலவிட வேண்டியதாயிருந்தது.

பொதிகளை ஒப்படைத்த பின்னர், யாழ்ப்பாணம் செல்லும் பயணத் திற்கான ஏற்பாட்டில் முனைப்புக்காட்டினேன். இரத்மலானையிலிருந்த 'மொனரா எயார்' வானூர்தி பணிமனையில் எந்தச் சிரமமின்றி பயணச் சிட்டையைப் பெற்றுக்கொண்டு, குறித்த திகதியில் வாகனத்தை வாடகைக் கமர்த்தி இரத்மலானையை அடைந்தேன். முன்னரைப்போன்று வானூர்தி நிலையத்தை நோக்கிச் செல்லாமல் வானூர்தி நிலையச் சந்தியைக் கடந்து பிரதான வீதியோரம் வாகனத்திலிருந்து இறக்கப்பட்டோம்.

அது ஒரு குறுக்கு கிறவல் வீதிச் சந்தி. அக்குறுக்கு வீதியில் பொதி களுடன் பயணிகள் பலரும் வரிசையாய் நின்றனர். நாமும் இணைந்து கொண்டோம். இரவு பெய்த மழை காரணமாக நிலம் ஈரமாகவும் சில இடங்களில் சேறாகவும் இருந்தது.

ஒன்பது மணியளவில் இராணுவ அலுவலகர் சீருடையில் வந்தனர். பயணிகளிடம் அடையாள அட்டை, பிரயாணச் சிட்டையை பரிசீலனை செய்த பின்னர் சூட்கேஸைத் திறந்து அதற்குள் உள்ளவற்றை வெளியே எடுத்துவைக்குமாறு கூறினர். ஈரமான நிலத்தில் புதிய உடைகளை எடுத்துவைப்பதற்கு பயணிகள் தயங்கியபோதும் எடுத்து வைக்கவேண்டிய கட்டாயத்தால் மறுப்பின்றி செய்தனர். சிலர் பிளாஸ்ரிக் பைகள், உரப் பைகளை விரித்து அதன்மேல் உடைகளை வைத்தனர். நாங்கள் உடைகள் வைக்கப்பட்டிருந்த பிளாஸ்ரிக் பாக்குகள் எடுத்து தரையில் விரித்து அதன் மேலே பொருட்களை பரவினோம்.

சோதனைகள் முடிவுற்றதும் பொதிகளுடன் பயணிகள் இராணுவ பேருந்தில் ஏற்றப்பட்டு, வானூர்தி நிலையத்திற்கு அண்மையிலிருந்த இராணுவ தடைமுகாமில் இறக்கப்பட்டனர். அங்கு அடையாள அட்டை, பிரயாணச்சிட்டை, பொருட்கள் யாவும் வெகு நுட்பமாகச் சோதனையிடப் பட்டு பொதிகள் பாரவூர்தியிலும், பயணிகள் பேருந்திலும் ஏற்றப்பட்டு வானூர்தி நிலையத்தில் இறக்கப்பட்டனர்.

அவரவர் பொதிகளைப் பெற்றுக்கொண்ட பயணிகள் வானூர்தி சேவையாளரிடம் பொதிகளை ஒப்படைத்து மேலதிக நிறைக்கான கட்டணத் தைச் செலுத்தி சிறு மண்டபத்தில் நுழைந்தனர். அங்கிருந்து வெளியேறும் போது கையிலிருந்த பொதிகள் சோதனையிடப்பட்டு சிறியரக பேருந்தில்

ஏற்றப்பட்டு வானூர்திக்கு அண்மையில் இறக்கப்பட்டனர். வரிசையாகச் சென்று வானூர்தியில் ஏறிக்கொண்டதும் புறப்பட்டது யாழ்ப்பாணம் பலாலி வானூர்தி நிலையம் நோக்கி...

பேருந்து வரத் தாமதமானபடியால் நாம் வானூர்தியினுள்ளே காத்திருந்தோம். அப்போது பொதிகள் பாரவூர்தியில் ஏற்றப்படுவது தெரிந்தது. நான் தரகரிடம் ஒப்படைத்த பொருள்கள் யாவும் இந்த வானூர்திலேயே ஏற்றிவரப்பட்டு இறக்கப்பட்டதை அவதானித்தேன். பலாலி வானூர்தி நிலையத்திலிருந்து புறப்பட்டு யாழ்ப்பாணம் வரும்வரை முன்னைய நடைமுறையில் மாற்றமிருக்கவில்லை. இம்முறை தொடர்ச்சியாக யாழ்ப்பாணத்திலேயே தங்கியிருக்கப் போகிறேன் என்ற மகிழ்வில் யாழ்நகர் மண்ணில் கால் வைத்தேன். யாழ்ப்பாண நடைமுறையில் மாற்றமெதனையும் காணவில்லை. தொடர்ந்து அவர்களது நடை முறைக்கு ஏதுவாக என்னை மாற்றிக் கொள்ள வேண்டிய அவசியத்தை உணர்ந்தேன்.

நான் சுவிற்சர்லாந்தில் இருந்து புறப்படும் முன்னர், தமிழ் மக்களுக்கு பயன்படும் வகையில் இலகு தமிழில் மிக்ரோ சொவ்ற் ஒவ்விஸ் 2000 (*Microsoft Office 2000*) தொகுப்பிலுள்ள வேர்டு (*Word*), எக்ஸெல் (*Excel*), ஆணைத்தொகுப்பு (*Macros*), பவர் பொய்ன்ற் (*Power Point*), அக்செஸ் (*Access*) ஆகிய ஆணைத்தொடர்களின் செயற்பாடுகளும் செயற்படுத்துவதற்கான விளக்கங்களையும் கொண்ட 'கணிப்பொறி 2000' என்னும் 560 பக்கங்களைக் கொண்ட நூல் ஒன்றை எழுதி முடித்து யாழ்ப்பாணத்தில் அச்சிட்டு வெளியீடு செய்யும் நோக்கில் கணிப்பொறியில் பதிவேற்றம் செய்திருந்தேன். அதன் பிரதியையும் வரும்போது கொண்டு வந்திருந்தேன். திட்டமிட்டதற்கமைய ஆசிரியர் ரமணி அவர்களின் அழகிய அட்டை ஓவியத்துடன், யாழ். புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் அச்சிடப்பட்டு, 05.03.2001 அன்று வேம்படி மகளிர் பாடசாலை மண்டபத்தில் வெளியீடு செய்யப்பட்டது.

யாழ். கோட்டக் கல்வி அதிகாரியும், உதவிக் கல்விப் பணிப்பாளருமான திரு. ஆறுமுகம் இராஜகோபால் அவர்கள் தலைமையில் வெளியீடு செய்யப்பட்ட இந்நிகழ்வில் நூறுக்கும் மேற்பட்டவர்கள் வருகை தந்திருந்தனர். நூல் வெளியீட்டின் பின்னர் ஆணைத்தொடர் பற்றிய விளக்கம் செயல் முறையில் காண்பிக்கப்பட்டது.

திரு. ஆறுமுகம் இராஜகோபால் அவர்கள் கணிப்பொறி 2000 நூலுக்கு எழுதியிருந்த அணிந்துரையின் ஒரு பகுதி பின்வருமாறு; "... செயல்முறை கணிப்பொறி என்ற முதல் நூல் மூலம், ஈழத் தமிழர்களிடையே கணினியைக் கற்றுணர வேண்டுமென்ற ஆவலையும், வீடுகளில் உடனடியாக ஒரு கணினியாவது இடம்பெற வேண்டுமென்ற சிந்தனையையும், பல்கலைக்கழக மட்டத்திலிருந்து பாமரனின் வீடு வரை தூண்டிவிட்டிருந்தார். இதனுடைய அறுவடையை இன்று யாழ். மக்கள் செய்து வருகிறார்கள். தமிழகத்தில்கூட எழுத்தாளரான சுஜாதா முதல் இரா. முருகன் வரை கணினி தொடர்பான

நூல்களை தமிழில் தந்துவருகிறார்கள். அந்நூல்கள் கணினியின் பொறியியல் சார்ந்த நுட்பங்களையும், அதன் செயற்பாடுகளையுமே கூறுகின்றன. பெரும்பாலும் கல்வியியல் நோக்கில் (Academy) அமைந்துள்ளன. ஆனால், இவரது நூலில் கணினியின் பாகங்கள், அவற்றின் செயற்பாடுகளும் எழும் பிரச்சினைகளும், அதன் தீர்வுகளும் எழுத்தாளனின் சொந்த அனுபவ விளக்கங்களாக அமைந்திருப்பது கணினி அறிவை உயிரோட்டம் உள்ளதாகச் செய்திருக்கின்றது.

கணினி தொடர்பான ஆங்கிலப் பதங்களுக்குப் பொருத்தமான தமிழ்ப் பதங்களைத் தேடிப் பயன்படுத்தியிருப்பது மிகுந்த ஆச்சரியத்தை விளைவிக்கின்றது. ஏனெனில், இத்தகைய புதிய பதங்கள் ஒன்றினைத் தேடிப் பெறுவதற்கே பல்கலைக்கழக பேராசிரியர்கள் கூடி பலநாள் முயன்றும் தோல்வியுற்ற வரலாற்றை நாம் நன்கு அறிவோம்..."

நீரூர்திப் பயணம்

2001இல் இலங்கையில் பொதுத்தேர்தல் நடைபெற்று, ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி அமைத்த பின்னர் இலங்கை வரலாற்றில் பாரிய மாற்றங்கள் நிகழ்ந்தன. மோதல்களில் ஈடுபட்டிருந்த இலங்கை இராணுவமும், தமிழீழ விடுதலைப் புலிகளும் ஆயுதங்களுக்கு ஓய்வு கொடுத்து சமாதான உடன்படிக்கையில் ஒப்பமிட்டனர். இதற்கு நோர்வே அரசாங்கம் பெரிதும் துணையாகவும், ஊக்குவிப்பாகவும் இருந்தது. இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு பொறுப்பாளராக நியமிக்கப்பட்ட 'எரிக் சொல்ஹெம்' அவர்களின் முயற்சி இந்த ஒப்பந்தத்தின் பின்னணியாக இருந்தது.

இதன் பிரதிபலனாக மக்கள் இயல்பு வாழ்க்கைக்கு மெல்ல மெல்லத் திரும்பக்கூடிய சாத்தியம் ஏற்பட்டது. இராணுவ பிரசன்னத்தின் ஆதிக்கம் குறையாது இருப்பினும் நடைமுறையில் சிறிது தளர்ச்சி காணப்பட்டது. பெரும் நெருக்குவாரத்தில் சிக்குண்டிருந்த மக்களுக்கு சிறு ஒளிக்கீற்றைக் கண்ட மகிழ்ச்சி.

எனது சுவிற்சர்லாந்து நண்பர்கள் மூவர் சிங்கப்பூர் வரவுள்ளதால், இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி நானும் சிங்கப்பூர் சென்றுவரத் தீர்மானித்தேன். பாதுகாப்பு அனுமதி பெறுவதற்காக விபரங்களை இராணுவ மக்கள் தொடர்பகத்தில் ஒப்படைத்தேன். இரண்டு நாளில் கிடைத்தது.

நானும் கொழும்பு செல்லவிருந்த இருவருமாக கே.கே.எஸ். வீதியில் பயணிகள் நீரூர்திக்கு பிரயாணச்சிட்டை வழங்கும் அலுவலகத்தில் சித்திரை 12 அன்று பயணிப்பதற்கு ஏதுவாக பயணச்சிட்டையைப் பெற்றுக் கொண் டோம். ஒப்பந்தத்தின் பெறுபேறாக 2002 சித்திரை மாதம் 08ஆம் திகதி யாழ்ப்பாணம் கொழும்புக்கான தரைப்பாதை திறக்கப்படுமென தகவல் வெளியானதால் நீரூர்தியில் பயணிக்க மக்கள் நாட்டம் காட்டவில்லை. காற்று சீராக இருப்பதால் ஒரு தடவையேனும் நீரூர்தியில் சென்றுவரவே நான்

விரும்பினேன். பாதை நடைமுறை வெளிச்சத்துக்கு வராமையும் ஒரு காரணம்.

நிர்வாகச் சிக்கல்கள் காரணமாக அறிவித்தபடி 08ஆம் திகதி தரைப் பாதை போக்குவரத்துக்கு அனுமதிக்கப்படாமல், 12ஆம் திகதி அனுமதிக்கப் படுமென அறிவிக்கப்பட்டது. நாம் திட்டமிட்டபடி யாழ்ப்பாண சிங்கள மகாவித்தியாலயம் இருந்த இடத்திற்குச் சென்றதும் பதிவுகள், பரிசோதனை யின் பின்னர் பேருந்தில் ஏற்றப்பட்டோம். வழமையாக மூன்றுக்கு மேற்பட்ட பேருந்துகள் பயணிகளை ஏற்றப் பயன்படுத்தப்படுமாம். இன்று பயணிகள் குறைவாக இருந்ததால் ஒரு பேருந்து மட்டுமே பயன்படுத்தப்பட்டது. பயணிகள் தொகையைக் கணக்கிட்டு நீரூர்தியை நிறுத்திவிடுவார்களோ என்ற பயமும் இருந்தது. இருந்தும் இராணுவப் பாதுகாப்புடன் தெல்லிப்பளை நகரை அடைந்தோம்.

அந்தப் பகுதியிலிருந்த தகரக் கொட்டகையில் ஓய்வெடுத்துக் கொண்டோம். மதியத்தை தாண்டிவிட்டதால் நாம் கொண்டுவந்த உணவை அருந்தும்வேளை மேலும் சில பயணிகள் வந்திறங்கினர். இவர்கள் தரைப் பாதையால் செல்வதற்கு முகமாலை வரை சென்று, பயண ஏற்பாடு முற்றுப் பெறாத காரணத்தால், பயணிக்க அனுமதியின்றி திரும்பி வந்தவர்களாவர்.

சிறிது நேரத்தால் பயணிகள் உடல், பொருள், அடையாள அட்டை, பாதுகாப்பு அனுமதி போன்றவற்றின் பரிசோதனை நடைபெற்று சற்றுத் தள்ளி இருந்த மரநிழலில் நிறுத்தப்பட்டோம். அங்கு வரிசையாகப் பயணச் சிட்டை பரிசோதிக்கப்பட்டு பட்டியல் சரி பார்க்கப்பட்டது. அரைமணி நேரத்தின் பின்னர் இரண்டு பேருந்துகளில் ஏற்றப்பட்டு செம்மையற்ற பாதைகள் வழியாக காங்கேசன்துறை முகாம் பகுதியில் இறக்கப்பட்டு, அடையாள அட்டை பரிசோதனையின் பின்னர், மீண்டும் பேருந்தில் ஏற்றப் பட்டு, காங்கேசன்துறை துறைமுகத்தில் நீரூர்தி கட்டப்பட்டிருந்த தளத்தில் இறக்கப்பட்டோம்.

1978ஆம் ஆண்டுக்குப் பின்னர் காங்கேசன்துறை கடற்கரையின் அழகைப் பார்வையிட்டேன். முற்றிலும் மாற்றமாக இருந்தது. புதிய பல கட்டங்கள் காணப்பட்டன. துறைமுகத் தளமும் புதிதாக இருந்தது. கடற்படையின் தேவைக்கு அமைக்கப்பட்டதாக பேசிக்கொண்டார்கள். 16.07.1995இல் விடுதலைப் புலிகளால் சேதமாக்கப்பட்ட 'எடித்தாறா' என்னும் பாரிய சரக்கு நீரூர்தி அகற்றப்படாமல் பாதி அமிழ்ந்த நிலையில், துறைமுகப் பகுதியினுள் கிடந்தது.

கடற்படை படகில் வந்த சுழியோடிகள் இருவர் நீரூர்தியின் கீழ்ப்பகுதி வரை சுழியோடி அதனைச் சுற்றிப் பார்வையிட்டு முடித்து புறப்பட்ட பின்னர் பயணிகள் அதில் ஏற அனுமதிக்கப்பட்டனர்.

'சிற்றி ஒப் றிங்கோ' என அடையாளமிடப்பட்ட பயணிகள் நீரூர்தியே சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் வழித்துணையுடன் சேவையில் ஈடுபட்டது. அது ஓரளவு வசதிகள் நிறைந்த பயணிகள் நீரூர்தியாகக்

காணப்பட்டது. உட்தளம் முழுவதும் இருக்கைகள் பொருத்தப்பட்டு இருந்தன. வாந்தி எடுப்பவர்களுக்காக இருக்கை நிரைகளில் இருபக்கமும் 'சொப்பிங் பாக்'குகள் தொங்கவிடப்பட்டிருந்தன. நோயாளருக்கென நீரூர்தியின் நடுப்பகுதியில் மறைப்புடன் கூடிய பிரத்தியேக இடம் இருந்தது.

மேல்தளத்தின் மையத்தில் சற்று உயர சிற்றுண்டிச்சாலையும் பயணிகள் அமர்ந்து அருந்துவதற்கான இருக்கைகளும் இருந்தன. சிற்றுண்டிச் சாலை திறக்கப்படும்வரை இருக்கைகளில் அமர எவருக்கும் அனுமதியில்லை. இது தவிர நீரூர்தியின் ஓரம் இருமருங்கும் பயணிகள் நிற்பதற்கு ஏற்றவகையில் நான்கு அடி அகலமுள்ள பாதை இருந்தது. நான்கு மலசலகூடங்களும் உள்ளே இருந்தன. அணியப் பக்கம் (முன்பக்கம்) மேல்தளத்தில் பயணிகளின் பொதிகள் அடுக்கப்பட்டு மேலாக பெரிய தறப்பாளால் மூடப்பட்டது.

பி.ப. 4.00 மணியளவில் துறைமுகத்திலிருந்து புறப்பட்ட நீரூர்தி, நேராக வடக்கு (இந்தியா) நோக்கி கிட்டத்தட்ட நான்கு மைல் தூரம் சென்று தரித்து நங்கூரமிட்டது. காற்று சீராக இருந்ததால், நங்கூரமிட்டுக் கிடந்த நீரூர்தி காற்றுக்கு இசைவாகத் திரும்ப முடியாமல், கடல் நீரோட்டத்தின் உத்தலால் நடுக்கத்துடன் ஆட்டம் கண்டது. நீரூர்தி பயணித்து வரும் போது அமைதியாக இருந்த பயணிகளில் சிலர், நீரூர்தி ஆடத் தொடங்கிய சிறிது நேரத்தால் வாந்தி எடுக்கத் தொடங்க, மெல்ல மெல்லப் பலரும் இணைந்துகொண்டனர். இது இயல்பாகவே ஏற்படுவதுண்டு. புறப்பட்ட உடனேயே பயணத்தைத் தொடர்ந்திருந்தால் பலர் வாந்தி எடுப்பது தவிர்க்கப்பட்டிருக்கும்.


சிற்றி ஒவ் றிங்கோ நீரூர்தி

வாந்தி எடுக்கும்போது படும் அவஸ்தையை பார்க்க முடியாதிருந்ததால், மேல் தளத்து நடைபாதைக்குச் சென்று ஆழ்கடலையும் யாழ்ப்பாணக் கரையையும் இரசித்தவாறு நின்றேன். இருள் சூழ்ந்து கொண்டதும் நீரூர்தி வடகிழக்கு நோக்கி நகரத் தொடங்கியது. நான், விலகிச் சென்று கொண்டிருக்கும் யாழ்ப்பாணத்து கரையைப் பார்த்த வாறு நீண்ட நேரமாக அந்த நடை பாதையிலேயே நின்றேன்.

சிற்றுண்டிச்சாலை திறக்கப்பட்டதும் கோப்பி அருந்திவிட்டு, உட்தளத்திலுள்ள இருக்கையில் ஓய்வெடுக்கச் சென்றேன். உறக்கம் அணைத்ததால் தூங்கித் தூங்கி விழித்தேன். கப்பல் தரித்துக் கிடந்தபோது ஆரம்பித்த வாந்தி எடுப்பவர் குரலொலி தொடர் இராகமாகவே இருந்தது.

அதிகாலை கதிரவன் ஒளி பூமியை ஆக்கிரமிக்கத் தொடங்கியபோது

மேற்குத் திசையால் திருகோணமலை குடாவை நோக்கிப் பயணித்தது நீரூர்தி. குடாவின் நுழைமுகத்தை நெருங்கியதும் நங்கூரமிடப்பட்டது. அரைமணி நேரத்தின் பின்னர் கடற்படை படகில் வந்த சுழியோடிகள் இருவர் நீரூர்தியின் கீழ்ப்பகுதி வரை சுழியோடிச் சுற்றிப் பார்வையிட்டு முடித்ததும் நங்கூரம் அகற்றப்பட்டு, கடற்படைப் படகு வழிகாட்டிச் செல்லத் தொடர்ந்து குடாவுக்குள் பிரவேசித்தது நீரூர்தி.

குடாவில் 'பிறிமா ஆலை'யைச் சுட்டியதாக பயணித்தது நீரூர்தி. குடாப்பகுதி பூராவும் கண்ணுக்கு விருந்தாக இருந்தது. குடாவின் கரையோரக் கட்டடங்கள், கடற்படைத் தளம், தரித்துக் கிடக்கும் கடற்படை நீரூர்திகள், ஆங்காங்கு அலைந்து திரியும் கடற்படைக் கலங்கள், எதிரே தெரியும் பிரிமா ஆலையின் அழகான தோற்றம், சரக்கு நீரூர்தி எனப் பலவற்றை இரசனை யோடு பார்க்கக்கூடியதாக இருந்தது.

பிறிமா ஆலையை நோக்கிச் சென்ற நீரூர்தி சற்றுத் திரும்பிப் புதிதாக நிர்மாணிக்கப்படும் முற்றுப்பெறாத துறைமுகத் தளத்தில் தரித்தது. அங்கு பயணிகள் இறக்கப்பட்டு, பேருந்துகளில் ஏற்றப்பட்டு திருகோணமலை பேருந்து நிலையத்தில் இறக்கப்பட்டனர்.

இலங்கை வங்கியில் பணியாற்றும் எனது ஒன்றுவிட்ட சகோதரனின் வீட்டில் ஓய்வெடுத்துக் கொண்டோம். மறுநாள் சித்திரை வருடப்பிறப்பு. அமைதியாக இருந்தது திருகோணமலை. அன்று மாலையே கணிசமான தூரத்திலிருந்த தொடருந்து நிலையத்திற்கு முச்சக்கர வண்டியில் சென்று இரவு எட்டு மணியளவில் புறப்பட்ட தொடருந்தில் கொழும்புக்கான பயணத்தைத் தொடர்ந்தோம்.

கொழும்பில் காவல்துறை வதிவிட பதிவு நடைமுறை மாற்றமின் றியே இருந்தது. அவற்றை முடித்துக்கொண்டு இரண்டு நாளால் சிங்கப்பூர் பயணித்து, அங்கு டிஜிற்றல் வீடியோ கமெரா, கணினி போன்ற பொருட்களை கொள்வனவு செய்து, ஒரு வாரத்தால் திரும்பிவிட்டேன். பயணிகள் நீரூர்தி சேவை தொடர்ந்து நடந்ததால், கொழும்பு பிறின்ஸ் வீதியிலிருந்த சிற்றி ஒப் றிங்கோ நீரூர்தி அலுவலகத்தில் இரண்டு பயணச் சிட்டைகளைப் பெற்று கூடவே மைத்துனனுடன் புறப்பட்டேன்.

குறித்த நாளில் காலை 7.00 மணிக்கு பொதிகளுடன் ஆமர் வீதியில் நின்றிருந்தோம். அங்கு பயணச்சிட்டை பட்டியலின்படி பார்வையிடப்பட்ட பின்னர் இரண்டு விசேட பேருந்துகளில் திருகோணமலை நோக்கிப் பயணித் தோம். மதிய உணவருந்துவதற்காக ஒரு அருந்தகத்தில் நிறுத்தியதைத் தவிர வேறெங்கும் பேருந்து நிறுத்தப்படவில்லை. பி.ப. 3.00 மணியளவில் திருகோணமலை நகர் கடந்து சீனன்குடா துறைமுகத்தை பேருந்து வந்தடைந் ததும் அனைவரும் இறக்கப்பட்டோம். சீனன் குடா, மீன்பிடி - வர்த்தகத் துறைமுகமென்பதால் அங்கு பாரிய கடற்றொழில் படகுகள், நீரூர்திகள் நங்கூரமிடப்பட்டுக் கிடந்தன.

பி.ப. 4.00 மணியளவில் பயணிகள் நிரையாக அழைக்கப்பட்டு அடையாள அட்டை, உடற்சோதனை, பொருள் சோதனைகள் இடம் பெற்றன. பொருள் சோதனை கடுமையாக இருந்தபோதும் எந்தப் பெருள்களையும் திருப்பி விடவில்லை. அதனால் மனதிற்கு நிம்மதி.

சிற்றி ஒவ் றிங்கோ பயணிகள் நீரூர்தியில் பொதிகளை ஒப்படைத்ததும் அவற்றை முன்னரைப் போலவே அணியப்பக்கம் பரவி அடுக்கினர். வரும்போது இருந்ததைவிட பல மடங்கு பொருட்கள் இருந்தன. பயணிகள் குறைவாக இருந்ததால் விரைவாக சோதனைகள் முடிவுற்றது. நாம் துறைமுகத் தளத்தில் நின்று நேரத்தைப் போக்கினோம். அறிவித்தல் விடப்பட்டு கைப்பொதிகளுடன் ஏறிக் கொண்டதும் நீரூர்தி தளத்தில்நின்று அகற்றப்பட்டு துறைமுகத்தினுள்ளே சற்றுத் தூரத்தில் விடப்பட்டது.

அங்கிருந்து சிறிது நேரத்தால் புறப்பட்ட நீரூர்தி, இருள் தொடங்கு முன் குடாவின் நுழைமுகத்தை அடைந்தது. அங்கு நங்கூரமிடப்பட்டதும் கடற்படைப் படகில் வந்த சுழியோடிகள், நீரூர்தியின் கீழ்ப் பகுதியை சுழியோடிப் பார்வையிட்டுச் சென்றனர். இருள் சூழ்ந்ததும் காங்கேசன் துறை நோக்கிய பயணத்தைத் தொடர்ந்தது நீரூர்தி. நீரூர்தி காங்கேசன்துறையிலிருந்து வரும்போதும் திருகோணமலையிலிருந்து திரும்பிச் செல்லும்போதும் நேரான மற்றும் அண்மைய கடற்பாதையால் பயணிக்கவில்லை. குறுக்காக இந்தியா நோக்கிச் சென்று சர்வதேச கடற்பாதையாலே பயணித்தது. இது தூரம் கூடியதும் அதிக நேரத்தை உள்வாங்கும் பாதையாகும்.

காலை காங்கேசன்துறை துறைமுகத் தளத்தில் தரித்ததும் அங்கு வந்த சுழியோடிகள் முன்னர்போல் பார்வையிட்ட பின்னர் பயணிகள் இறக்கப் பட்டனர். அங்கு பேருந்துகள் நின்றன. அதிலொன்றில் ஏறி தெல்லிப்பளை இராணுவ முகாமைக் கடந்து சந்தைப் பகுதியில் இறங்கிக் கொண்டோம். அங்கிருந்து பொதிகளுடன் யாழ்ப்பாணம் விரைந்தோம்.

கடல் கடந்த நாட்கள் - 06 இத்துடன் நிறைவாகிறது. இங்கு என்னால் வெளிக்கொண்டு வரப்பட்டவைகள் நான் பயணித்த நாட்களுக்குரியவையே. பிரயாண ஒழுங்குகளில் அடிக்கடி மாற்றம் ஏற்பட்டுக் கொண்டிருந்ததால் குறிக்கும் ஆண்டு பூராவும் ஒரே மாதிரி இருந்ததென்று சொல்வதற்கில்லை. அத்துடன் நான் வெளிநாட்டில் இருந்து வருகைதந்து பயணிப்பதால், சாதாரண மக்கள் பயணத்திற்கும் எனக்கும் இடையில், அதிகாரிகளின் நடவடிக்கைகளில் சில வேறுபாடுகள் இருந்ததை மறுப்பதற்கில்லை. ■

கடல் கடந்த நாட்கள் – 07

சுற்றுலா – நூற்றாண்டு விழா பயணங்கள்

களநிலை

இலங்கை இராணுவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் அமுலிலிருந்த யுத்த நிறுத்தத்தில் முறிவு ஏற்பட்டதால், 11 ஆவணி 2006இல் போர் மேகம் வடகிழக்குப் பகுதிகளைச் சூழ்ந்து கொண்டது. முன்னரைவிட கருமை நிறைந்த மேகமாக இருந்தது. அந்த மேகம் குறித்த இடத்தை மட்டு மல்ல பிரதேசத்தையே இருளாக்கியது. அதன் மழைப் பொழிவுகள் நவீனத் தன்மையைப் பெற்றிருந்தன. வரலாறு காணாத உயிர், உடைமை, கட்டட அழிவுகளால் மக்களைத் திணற வைத்தது காரிருள்.

திடீரென உருவான அந்தக் கருமேகத்தின் கருமை காரணமாக குறித்த பகுதிகளில் வாழும் மக்களை, அங்கிருந்து புறப்படுமாறு அறிவித்தல் விடுக்கப் பட்டதும், அமுலிலிருந்த ஊரடங்கு நிலையையும் புறந்தள்ளி பல திசை களாகப் பாதுகாப்புத் தேடிப் புறப்பட்டனர் அப்பகுதி மக்கள்.

ஆலயங்கள், பள்ளிக்கூடங்களெனத் தஞ்சம் புகுந்தனர். சிலர் உறவினர் தெரிந்தவர்களின் வீடுகளிலும் குடிபுகுந்தனர். பொருட்களின் தட்டுப்பாடு, வியாபாரிகளின் பதுக்கல், பல மடங்கு விலையேற்றம், வருவாயின்மை, இடப்பெயர்வு, திகில் நிறைந்த வாழ்வு. இவை அந்தக் கருமேகம் கொடுத்த கொடைகள்...

காலையில் ஊரடங்கு நேரம் முடிந்ததும் ஆண்களும் பெண்களும் ஆளுக்கொரு பக்கமாக உணவு மற்றும் நானாவிதப் பொருட்களைத் தேடி அலைவதும், கிடைக்கக்கூடிய இடங்களில் கூடுதல் விலையென்றாலும் பெற்றுக்கொள்வதும், குடும்ப அட்டையுடன் பிரதேச செயலகத்தால் அறிவிக் கப்படும் பதிவிடங்களைத் தேடி ஓடுவதும் எனத் தினமும் களேபரம்தான்.

அரச அதிகாரிகளின் திட்டமிடலற்ற செயற்பாடுகளினால், வர்த்தகர் களின் நெறிதவறிய முறைகேடுகளினால் மக்கள், அசாதாரண நிலையிலும் இடர்கள் பலவற்றை எதிர்கொண்டனர், சுமைகளைச் சுமந்தனர், மோசமாக நடத்தப்பட்டனர் என்பது மக்கள் மனங்களில் மறுக்கமுடியாத உண்மையாக பதிவாகியிருந்தது...

யுத்தம் உச்சகட்டத்தில் இருந்த காலம் என்பதால் கெடுபிடிகள் அதிகமாகவே இருந்தது. பயம் இருளாகச் சூழ்ந்திருந்தது. இன்று இவர் நாளை எவரோ என்ற அச்ச உணர்வு வாழ்க்கையோடு கலந்துவிட்டது. புலனாய்வுப் பிரிவினர், அரச ஆதரவு அமைப்பைச் சார்ந்தவர்கள் என அறியப்படுபவர்களால்

புலிகளின் ஆதரவாளர்கள், அனுசரணையாளர்கள், நெருங்கிப் பழகியவர்கள், உணவு கொடுத்தவர்கள், ஒருநாளேனும் தங்கிட இடம் கொடுத்தவர்கள், அரச ஆதரவு அமைப்பை விமர்சித்தவர்கள் எனச் சந்தேகிக்கப்படுவோர் பலர் வயது வேறுபாடின்றிக் கொல்லப்பட்டனர்.

விடுதலைப் புலிகள் அமைப்பைச் சார்ந்தவர்கள் என அறியப்படுபவர்களால் விடுதலைப் புலிகளுக்கு எதிரான அமைப்புகளைச் சார்ந்தவர்கள், விடுதலைப் போராட்டத்திற்கு எதிரான கருத்தைக் கொண்டிருப்பவர்கள், தகவல் கொடுப்பவர்கள், காட்டிக் கொடுப்பவர்கள், புலனாய்வாளர்கள் எனச் சந்தேகப்படுபவர்கள் கொல்லப்பட்டனர். சிலர் தமது சொந்தப் பகையைத் தீர்த்துக் கொள்வதற்கு ஏதுவாக குற்றச்சாடடை முன்வைத்து இரு பகுதியினரையும் தமக்கிசைவாகப் பயன்படுத்தியுமுள்ளனர் என்ற கதைகளும் உலாவாமலில்லை.

கொலைத் தாக்குதல்களிலிருந்து தப்பியவர்கள், தாக்குதல்கள் இடம்பெற்ற நிரலைக்கொண்டு தாம் கொல்லப்படலாமென கருதியவர்கள், மனித உரிமை பணியகத்திலும் - நீதிமன்றத்திலும் சரணடைந்தனர். அவ்வாறானவர்கள் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்தனர்.

அரசுடன் இணைந்த முன்னாள் போராளிக் குழுவின் பெயரில் தொலைபேசி ஊடாக மிரட்டிப் பணம் பறித்தல் தாராளமாக நடைபெற்றது. அவர்களால் விடப்பட்ட உயிர் அச்சுறுத்தல் காரணமாக அவர்களால் தரப்படும் கணக்கு இலக்கத்திற்கு வங்கிகள் ஊடாக பணம் அனுப்பியவர்கள், அவர்களால் குறிப்பிடப்படும் விற்பனை நிலையத்தில் உந்துருளிக்குப் பணம் செலுத்தப் பணிக்கப்பட்டு அவ்வாறு செய்தவர்கள், குறிப்பிட்ட இடத்தில் வைத்து பணத்தை ஒப்படைத்தவர்கள் எனப் பட்டியல் நீண்டுகொண்டே சென்றது.

வெளியே கூறினால் தண்டனையாக விடப்பட்ட உயிர் அச்சுறுத்தலால் மௌனமாகவே இருந்துள்ளனர் பலர். வெவ்வேறு தொலைபேசி இலக்கங்களிலிருந்து கிடைக்கும் அழைப்புகளால், 'அன்பழகன்' அல்லது 'மதியழகன்' என்ற பெயர்களால் மேற்கொள்ளப்படும் தொடர்புகளால் எதுவுமே செய்யமுடியாத கையறு நிலையில், அதனை ஏற்றுச் செயற்பட வேண்டிய நிலையில் மக்கள் இருந்தனர்.

யாழ்ப்பாணத்து மக்கள் கேட்டிருக்காத, செவிப்பறை அதிர்ந்த பன்நாட்டு பல்குழல்களின் சத்தத்தை யுத்தத்தின் ஆரம்பத்தில் மட்டுமன்றி தொடர்ந்தும் கேட்டதால் அதிர்ச்சியில் உறைந்து வாழ்ந்த மக்கள், சிறிய சத்தம் கேட்டதும் பயந்தவர்களாகவே காலத்தைக் கழித்தனர். இரவு நேரங்களில் வெளியேற முடியாத நிலை, இராணுவத்தினரின் வீதிச் சோதனைகள், வீதிகளெங்கும் கண்காணிப்புகள், வீடுவீடாக குடும்பப் பதிவு அட்டை பரிசோதனைகள், விசாரணைகள், கைதுகள் எனப் பல அரங்கேறின.

சில வீதிகள் பொது மக்கள் பாவனைக்கு முற்றாகத் தடை, சில

வீதிகளில் இராணுவத்தினரின் வீதித் தடைகளில் அடையாள அட்டை பரிசோதனை, பொருட்கள் சோதனை, பலாலியிலிருந்து முகமாலை வரை அடிக்கடி செல்லும் இராணுவ வாகனத் தொடரணியால் குறுக்குப் பாதைகள் அரைமணி சிலவேளை ஒருமணி நேரத்திற்கு மேலாக பயன்படுத்தத் தடை, நாளுக்குநாள் மாறிவரும் பொருட்களின் விலையேற்றம், அத்தியாவசியப் பொருட்களின் தட்டுப்பாடு, சில பொருட்களுக்கு இருந்த தடை, பொருள் சோதனை இடம் பெறும் வேளையில் பொதிக்குள் அவர்கள் அறியாதவாறு தமது கைவசமுள்ள 'கைக்குண்டை' இராணுவத்தினரில் ஒருவன் வைத்து விட்டு பின்னர் கைக்குண்டு வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்தல், யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறுவதற்கு விமான சேவையைத் தவிர வேறு மார்க்கமற்ற நிலை போன்றவற்றால் மக்கள் பெரும் இடையூறுகளை அனுபவித்தனர்.

இத்தகைய சூழலில்தான் எனது குடும்பமும் மகளின் குடும்பமும் இணைந்து இந்தியா புறப்படும் ஆயத்தங்களை மேற்கொண்டோம். இராணுவத்தின் மக்கள் தொடர்பகத்தில் பிரயாண அனுமதி கோருவதற்கான விண்ணப்பப் படிவத்தைப் பெற்று, அதனைப் பூரணப்படுத்தி, குடும்பமாக நிற்கும் நிழற்படம் மற்றும் குடும்ப அட்டையுடன் ஒப்படைத்தோம். பெற்றுக் கொண்டதற்கான சிட்டை தரப்பட்டது.

ஒரு வாரத்தின் பின்னர் வீட்டிற்கு வந்த இரண்டு இராணுவத்தினர் படிவத்தின் பிரகாரம் விசாரணையை மேற்கொண்டனர். ஒரு வாரம் கழித்து சிட்டையுடன் அலுவலகத்தில் பார்வையிடச் சென்றேன். எமது கோப்பு பரிசீலிக்கப்பட்டு விசாரணை அலுவலகத்திற்கு வந்திருக்கவில்லை. தொடர்ந்த நாட்களில் மூன்று தடவைகள் பார்வையிடச் சென்றும் கோப்பு வரவில்லை. சில நாள் தாமதித்துச் சென்றபோது கோப்பு வந்திருந்ததால் உட்புகும் அனுமதிக்கான தொடர் இலக்கத்தைப் பெற்றுக்கொண்டு குடும்பத்தினரை அழைத்துவந்தேன்.

எமது இலக்கம் அழைக்கப்பட்டதும் இராணுவ பொறுப்பதிகாரியிடம் அனுப்பப்பட்டோம். 20 நிமிடங்கள் தனித்தனியே மேற்கொண்ட விசாரணையின் பின்னர் பிரயாண அனுமதி வழங்கப்பட்டது. அனுமதி பெற்றுக்கொண்ட பின்னர்தான் வானூர்தி பயணச் சிட்டைப் பெறமுடியுமென்பதால் உடனேயே செயலிலிறங்கினோம். 'எக்ஸ்போ' மற்றும் 'ஏரோலங்கா' தனியார் வானூர்தி சேவைகள் இடம்பெற்றன. அவற்றில், 'எக்ஸ்போ' வானூர்தியில் பயணிப்பதற்கான பயணச் சிட்டைகளை ஐந்து நாட்களால் பயணிப்பதற்கு ஏதுவாகப் பெற்றுக்கொண்டோம்.

குறித்த திகதியில் பலாலி வானூர்தி நிலையம் செல்வதற்காக மாட்டின் வீதி - வைத்தியசாலை வீதிச் சந்தியில் பொதிகளுடன் காத்திருந்து, பெயர் அழைக்கப்பட்டதும் முன்னைய சிங்கள மகா வித்தியாலயம் வளவில் அமைக்கப்பட்டுள்ள கட்டடத்திற்குச் சென்று அமர்ந்து கொண்டோம்.

அதிகாரிகள் வருகைதந்ததும் பட்டியலின்படி பெயர் சொல்லி ஒவ்வொருவராக அழைத்தனர். அடையாள அட்டை, பயணச்சீட்டு, கடவைச் சீட்டைப் பதிந்து உறுதிசெய்து கொண்டதும் உடல், பொதிகள் சோதனை செய்யப்படும் இடத்திற்கு வரிசையாகப் பொதிகளுடன் சென்றோம்.

அனைத்துப் பொருட்களும் மிக நுணுக்கமாக சோதனையிடப்பட்டதும் பாரவூர்தி ஒன்றில் ஏற்றப்பட்டன. பயணிகள் பேருந்தில் ஏற்றப்பட்டனர். இராணுவ பாதுகாப்புடன் புறப்பட்டுச் சென்ற பேருந்து புன்னாலைக்கட்டுவனில் தரித்ததும் அனைவரும் இறக்கப்பட்டோம்.

பாரவூர்தியில் கொண்டுவரப்பட்ட பொதிகளும் பயணிகளிடம் ஒப்படைக்கப்பட்டன. மிகவும் அவதானமாக அடையாளஅட்டை, பயணச் சிட்டை பரிசோதனை முடிந்ததும் பிறிதொரு இடத்தில் உடல் சோதனை செய்யப்பட்டது. தொடர்ந்து பொருட்கள் சோதனை இடம் பெற்றது. பொருட்கள் சோதனையில் யாழ்ப்பாணத்தைவிட மேலதிக கவனம் செலுத்தப்பட்டது.

மீண்டும் அங்கிருந்த பணிமனையில் அடையாள அட்டை, பயணச் சிட்டை பார்வையிடப்பட்டு பதிவுசெய்யப்பட்ட பின்னர் முன்னரைப்போல பேருந்தில் ஏற்றப்பட்டோம். பொருட்கள் பாரவூர்தியில் ஏற்றப்பட்டன. பலாலி விமானத்தளத்திற்குச் சற்றுத் தூரத்தில் தற்காலிகமாக அமைக்கப்பட்ட பயணிகள் தங்குமிடத்தில் இறக்கப்பட்டோம்.

அங்கு தனித்தனியே விசாரணை செய்யப்பட்டு நிழற்படம் எடுக்கப் பட்டது. தொடர்ந்து, பயணிகள் தங்குமிடத்திற்கு அருகாமை இருந்த கட்டடத்திற்குப் பொதிகளுடன் சென்றோம். அங்கு பொதிகள் 'ஸ்கேனர்' இயந்திரம் மூலம் பரிசோதிக்கப்பட்டது. அங்கிருத்து வெளியேறி பக்கத்து அறைக்கு வரிசையாய்ச் சென்றோம். அங்கும் பொதிகள் சோதனையிடப் பட்டன. (ஒரு பொதிக்கு எத்தனை சோதனைகள்) அந்தச் சோதனையின் பின்னர் பொதிகளுக்கு 'ஸ்ரிக்கர்' ஒட்டப்பட்டு பாரவூர்தியில் ஏற்றப்பட்டது. நாம் பேருந்தில் ஏற்றப்பட்டு வானூர்தித் தளத்தில் தரித்துநின்ற வானூர்திக்கு அண்மைவரை சென்றோம்.

அங்கிருந்து வரிசையாக நடந்து 'எக்ஸ்போ' வானூர்தியிலேறிப் பயணித்து, கொழும்பு 'இரத்மலானை வானூர்தி நிலைய'த்தை வந்தடைந்ததும் நிம்மதிப் பெருமூச்சுடன் வெளியேறினோம்.

கொழும்பு வெள்ளவத்தையில் அறிமுகமானவரின் புதிய வீட்டில் தங்கியிருந்த நாம், தங்கியிருப்பதை காவல்துறையில் பதிவுசெய்து கொள்ள வேண்டும். அதற்காக மறுநாள் வீட்டு உரிமையாளருடன் காவல்துறை நிலையம் சென்று, பதிவுசெய்து கொண்டமைக்கான ஆவணத்தை பெற்றுக் கொண்ட பின்னர்தான் மனதிற்கு நிம்மதி. கொழும்பில் கடைப்பிடிக்கப்பட்ட இறுக்கமான நடைமுறை எமக்குப் பயத்தை உண்டாக்கவே செய்தது. தேவையின் நிமித்தம் மட்டுமே வெளியே சென்றுவந்தோம்.

இந்தியா செல்வதற்கான விசாவுக்கு விண்ணப்பிப்பதற்காக அதிகாலை 4.00 மணிக்கு காலி வீதியிலுள்ள இந்திய தூதரகம் சென்றோம். அங்கு வரிசையாய் நின்ற மக்களுடன் இணைந்து 9.00 மணிவரை காத்திருந்து அலுவலகம் திறக்கப்பட்டதும் உள்நுழைந்தோம்.

நாம் ஒரு குழுவினராகச் சென்றமையால் விசா பெற்றுக்கொள்வதில் சிரமமிருக்கவில்லை. விசாவுக்குரிய கட்டணத்தைச் செலுத்தி வெளியேறி னோம். அன்று பி.ப. 4.00 மணிக்கு நான் தனியாகவே தூதரக அலுவலகம் சென்று விசா பதியப்பட்ட கடவுச்சீட்டுகளைப் பெற்றுத் திரும்பினேன்.

இந்தியா விசா பெற்றுக்கொண்ட மறுநாள் வானூர்திப் பயணச் சிட்டைகளைப் பெற்றுக்கொண்டு, குறித்த திகதியில் இறுக்கமாகக் கடைப் பிடிக்கப்பட்ட பாதுகாப்பு நடைமுறைகளுக்கு அமைவாக கட்டுநாயக்க சர்வதேச வானூர்தி நிலையம் வரை வாகனத்தில் சென்று, 'இந்தியன் எக்ஸ்பிறஸ்' வானூர்தியில் இந்தியா - சென்னையை வந்தடைந்தோம்.

சென்னை வானூர்தி நிலையத்தில் எந்த இடையூறுமிருக்கவில்லை. ஆனால், சென்னை வானூர்தி நிலையம் விரிவாக்கம் செய்யப்படுவதால் தற்காலிக பணிமனைகளும், சீரற்ற தளப் பகுதிகளும் சிரமத்தைக் கொடுத்தது. இரண்டு மணித்தியாலம் தாமதித்தே வெளியேறினோம். எமக்கான தங்குமிடத்தை ஏற்பாடு செய்திருந்த திரு. செந்தில் என்பவர் வெளியே காத்திருந்து எம்மை வாகனத்தில் அழைத்துச் சென்றார்.

பிரான்ஸ் நாட்டில் வசிக்கும் பெறாமகளின் திருமணம் இந்தியா சென்னையில் நடைபெறவிருந்தது. இலங்கையின் நிலவிய அசாதாரண நிலையால் அவர்கள் இங்கு வர விரும்பாததால், அப்போதைய சூழலின் மத்தியிலும் அவர்களின் திருமண வைபவத்தில் கலந்துகொள்ளச் சென்ற பயணமாக 2007ஆம் ஆண்டுப் பயணம் அமைந்திருந்தது...



இந்தியா

(2007, 2008, 2009, 2013)



*1979*இல் மேற்கொள்ளப்பட்ட எனது கடல்கடந்த நாட்கள்-02 பயணத்தில் இராமநாத மாவட்டம், திருச்சி மாவட்டம், நாகை மாவட்டம், மதுரை மாவட்டம் போன்றவற்றில் சில இடங்களை பார்வையிட முடிந்தது. அவற்றின் பயண அனுபவங்களும் தரப்பட்டுள்ளன. கடல்கடந்த நாட்கள்-07 இற்கான நான்கு பயணங்களிலும் சென்னையில் கிடைத்த வாய்ப்புகளைப் பயன்படுத்தி சில இடங்களைப் பார்வையிட்டதுடன், தமிழ்நாட்டில் வேறு சில மாவட்டங்களிலுள்ள பிரபல்யமான இடங்கள் சிலவற்றையும், கேரளா மாநிலம் மற்றும் பெங்களூர் மாநிலங்களில் சில இடங்களையும் பார்வையிடச் சந்தர்ப்பம் கிடைத்தது.

இவற்றின் பயண அனுபவக் கலப்பாகவும் முதலாவது இந்திய பயணத்தின் தொடராகவும் இந்தப் பகுதி அமைகின்றது. முன்னர் பயணித்த இடங்களுக்கு இம்முறையும் பயணிக்க சந்தர்ப்பம் கிடைத்தபோதும், அவற்றில் இனங்காணப்பட்ட மாற்றங்களைத்தவிர ஏனையவற்றைத் தவிர்த்து புதிய இடங்களுக்கான பயண அனுபவங்களை பதிவு செய்கிறேன்.

தமிழ்நாடு மாநிலம்

சென்னை

'சென்னை', தமிழ்நாட்டின் தலைநகரமும், இந்தியாவில் நான்காவது பெரிய நகரமும், வங்காள விரிகுடாவின் கரையில் அமைந்துள்ள துறைமுக நகரங்களில் ஒன்றுமாகும். 1956ஆம் ஆண்டு மொழி வாரியாக மாநிலங்களைப் பிரித்தபோது தமிழ்நாட்டின் ஒரு பகுதியாகி, அந்த மாநிலத்தின் தலைநகரானது. 1996ஆம் ஆண்டுக்கு முன்னர் இந்நகரம் 'மெட்ராஸ்' (*Madras*) என்று அழைக்கப்பட்டுவந்தது. இது போர்த்துக்கேய மொழிச் சொல்லெனக் கருதிய தமிழ்நாட்டு அரசு முன்னர் வழக்கிலிருந்த

'சென்னை' என்ற பெயரை முதன்மையாக்கியது. தென்னிந்தியாவின் வாசலாகக் கருதப்படும் சென்னை, கி.மு. முதலாம் நூற்றாண்டு முதல் பல்லவ, சோழ, விஜயநகரப் பேரரசு மற்றும் அந்நியர்களின் ஆட்சிக் காலத்தில் முக்கிய இடமாக விளங்கியுள்ளது.

ஆங்கிலேயர் 1639ஆம் ஆண்டில் 'புனித ஜோர்ஜ் கோட்டை'யை கட்டியதைத் தொடர்ந்தே சென்னை நகரம் உருவாகி வந்தது. கோட்டை கட்டுவதற்கான நிலத்தைக் கொள்வனவு செய்தபோது அவற்றை விற்பனை செய்தவர்களின் தந்தையான 'சென்னப்ப நாயக்கன்' என்பவரின் நினைவாக கோட்டைக்கு வடக்கே உள்ள ஊர் 'சென்னப் பட்டணம்' என்று அழைக்கப் பட்டது. இதுவே பின்னர் சென்னை என்று மாற்றம் பெற்றதாம்.

தமிழகத் தலைமைச் செயலகம் 1956 முதல் புனித ஜோர்ஜ் கோட்டையில் செயற்பட்டு வருகின்றது. (13.03.2010 முதல் 400 கோடி ரூபாவுக்கு மேல் செலவு செய்து கட்டப்பட்ட 'பசுமைக் கட்டட'த்தில் இயங்குகின்றது.) இதுவே உலகில் முதல் 'பசுமைக் கட்டடம்' என்ற பெயரைப் பெறுகிறது. 1913ஆம் ஆண்டு கட்டப்பட்ட 'றிப்பன் கட்டட'த்தில் சென்னை மாநகராட்சி மன்றம் செயற்பட்டு வருகிறது.

குறைந்த விஸ்தீரணத்தில் கணிசமான மக்கள் வசிக்கும் நகராக உள்ளது. இங்கு பேசப்பட்டுவரும் பலமொழிகளின் கலவையில் உருவான 'மெட்ராஸ் பாஷை' என அழைக்கப்படும் அதிகாரபூர்வமாக ஏற்றுக் கொள்ளாத 'கொச்சை மொழி' உள்ளூர் மக்கள் மத்தியில் பேச்சு மொழியாக இருக்கிறது. குறிப்பாக சேரிப்புற மக்கள், கல்லூரி மாணவர்கள், முச்சக்கர வண்டி மற்றும் பாரவூர்தி ஓட்டுநர்களிடையே அதிகமாகப் பேசப்படுகிறது. சில விளம்பரங்களில் 'பீப்புரியாணி', 'பார்வசதி உண்டு' போன்ற சொற்கள் பலவற்றைத் தாராளமாகக் காணலாம்.

லண்டன் நகரத்தின் மத்தியில் ஓடுகின்ற தேம்ஸ் நதியைப் போல் சென்னை நகரை ஊடறுத்து ஓடுகின்றது கூவம் நதி. சில இடங்களில் அதன் அருகாமையில் சென்றால் முகஞ் சுழிக்கும் நாற்றம். மாடிகளைக் கொண்ட குடியிருப்புகள் ஏராளமாய் இருந்தபோதும் குடிசைகளுக்கும், வீதியோர வசிப்புகளுக்கும் குறைவில்லை.

இந்தியாவின் வாகன உற்பத்தியில் சென்னை முதலிடம் வகிக் கின்றது. சாதாரண ஈருருளி முதல் தொடருந்துவரை தயாரிக்கும் தொழிற் சாலைகள் உள்ளன. 1990களிலிருந்து சென்னை இந்தியாவின் முக்கிய தொழில் நுட்ப நகரங்களில் ஒன்றாக விளங்குகின்றது. 'பாலிவுட்டு'க்கு அடுத்தபடியாக மிகப்பெரும் திரைப்படத் துறையைக் கொண்டுள்ளது. இதனால் சினிமாக் கொட்டகைகளுக்குக் குறைவில்லை. அடுக்கு மாடிகளில் பல கொட்டகை களும் நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய கொட்டகைகளும் உள்ளன.

முன்னர் அமைக்கப்பட்டுள்ள பிரசித்தி பெற்ற கட்டடங்களுடன் நவீன வசதிகளுடன் உருவாக்கப்பட்டிருக்கும் சென்னை வானூர்தி

நிலையமும் நிர்மாணிக்கப்பட்டுவரும் 'பறக்கும் தொடருந்து' திட்டமும் பெரும் வரவேற்பைப் பெறுகின்றன.

சென்னையில் 'அரும்பாக்கம்' எனும் ஊரில், இலங்கை - வவுனியா வைச் சேர்ந்த ஒருவருக்குச் சொந்தமான மாடிவீட்டில் மூன்று வீடுகளை வாடகைக்கு அமர்த்தி, திருமணத்திற்கென வந்திருந்த 18 பேரும் தங்கிக் கொண்டோம். காலை உணவைத் தவிர ஏனையவற்றை நாங்களே தயாரித்துக் கொண்டமையால் சுவையில் மாற்றமின்றி சுவைத்துச் சாப்பிடக் கூடியதாக இருந்தது.

நாங்கள் திருமணத்தை நோக்காகக்கொண்டு வந்திருந்ததால் அதற்கான ஆயத்தங்களில் இறங்கினோம். பதிவுத் திருமணத்தை முடித்து, திருமணத்திற்கென குறித்த நாளில் அடையார் அன்னை 'வேளாங்கண்ணி' ஆலயத்தில் திருமணத்தை நிகழ்த்தி, நடிகை ராதா அவர்களின் பிரமாண்டமான ஹொட்டலில் சிறிய மண்டபத்தில் மதிய உணவை ஏற்பாடு செய்து வரவேற்பு நிகழ்வுடன் எமது நோக்கம் இடையூறின்றி நிறைவேறியதால் அங்குள்ள பிரசித்த தலங்கள், இடங்களைப் பார்வையிடப் புறப்பட்டோம்.

மெரீனா கடற்கரை

இந்தியாவின் கிழக்குக் கரையோரம் சென்னையில் அமைந்துள்ளது மெரீனா கடற்கரை. 13 கி.மீ. நீளத்தில் பரந்து விரிந்து காணப்படுகின்றது. இது சென்னையின் கடல் எல்லையை வரைவு செய்வதாயும், அதன் அடையாளங்களில் ஒன்றாகவும் அமைந்துள்ளது. கடற்கரை மணற்பாங்காக இருப்பதாலும் கடற்கரையையொட்டி புகழ்பெற்றோரின் உருவச்சிலைகள், நினைவிடங்கள், சமாதிகள் போன்றவை அமைந்திருப்பதாலும் சுற்றுலாத் தலங்களில் ஒன்றாகச் சிறப்புப் பெறுகிறது.

மெரீனா வழியாக தொடருந்து தளம் அமைக்க ஆங்கிலேய அரசு திட்டமிட்டு 1903இல் வேலையை ஆரம்பித்தபோது திரண்டுவந்த மக்கள், "மெரீனா சென்னை நகரத்தில் நுழையீரல் இதை அழித்தால் வருங்கால சந்ததியினர் மன்னிக்கமாட்டார்கள்" எனக் கூறி காட்டிய எதிர்ப்பால் கைவிடப் பட்டதாக தகவல் கூறுகிறது.

ஆண்டு முழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெறுவதுடன் எப்போதும் சனசந்தடியாகக் காணப்படும் இக் கடற்கரையை ஒட்டிய காமராஜர் தெரு, ஆறு வழிப் பாதையாக சிறப்பூட்டுகிறது. எதிரே உள்ள கலங்கரை விளக்கம் மேலும் அழகூட்டி நிற்கின்றது.

பரந்த கடற்கரையின் வீதியோரம் சிற்றுண்டிகள், இனிப்பு வகைகள், குளிர் மற்றும் சூடான பானங்கள் எனப் பலதரப்பட்ட கடைகள் இருக்கின்றன. சாயந்தரமானால் அந்தப் பாதையுடன் இணைந்த பகுதிகள் நிரம்பியதாகவே இருக்கும் என்று அறிந்ததைப் போல நாம் சென்றபோது திரளான மக்களை அங்கே கண்டோம்.

அதனைக் கடந்து கணிசமான துரம் மணற்பாங்காகவுள்ள கடற் கரையை நோக்கி நடந்தால் ஆங்காங்கு கூட்டம் கூட்டமாக மக்கள், விளை யாட்டில் சிறுவர்கள் - இளைஞர்கள் எனப்பலர்.

அந்த மணற்பரப்பில் கடலை அண்டிய பகுதியில் மணலைத் தோண்டி அதனுள் ஊறிக்கொண்டிருந்த நீரை குடிநீராக டம்ளர்களில் விற்றுக் கொண்டிருந்தான் ஒருவன். சிப்பிகள், கிளிஞ்சல்கள், சீப்புகள், கண்ணாடிகள், முத்துமாலைகள் போன்றவற்றை குரல்கொடுத்து நடை வியாபாரத்தில் ஈடுபட்டான் ஒருவன். சிறுவர்கள் விரும்பும் வகை வகையான இனிப்புகளை விற்பனை செய்வதில் சிலர். பொரித்த கடலை, வறுத்த கடலை, அவித்த கடலை, நிலக்கடலை போன்ற விற்பனையில் சிலர். தயிர்ச்சாதம், ஓரேஞ் சாதம் என பலவகை சுவையூட்டிய சோறு விற்பனையில் பெண்கள். சாயா, கலர், சுக்குத்தண்ணி எனக் குரல் கொடுத்தவாறு பானங்கள் விற்பனையில் சிலர் என மெரீனா கடற்கரை கலகலப்பாக இருந்தது.

சந்தடிமிக்க அந்தப் பகுதியில் அமைதிக்கு சான்றாக காணப்பட்டன சற்றுத் தூரத்திலிருந்த அண்ணா மற்றும் எம்ஜிஆர் சமாதிகள். அண்ணா சமாதியைப் பார்வையிட்டு அணையாத தீபம் மட்டுமல்ல அணையாத புகழுடன் உள்ள எம்ஜிஆர் சமாதியில் சிறிது நேரம் ஓய்வெடுத்த பின்னர் புறப்பட்டோம்.

சாந்தோம் பேராலயம்

சென்னை / மயிலாப்பூர் என்னும் ஊரில் அமைந்துள்ளது 'சாந்தோம் பேராலயம்'. சாந்தோம் என்னும் சொல், 'புனித தோமா' என்று பொருள்படும் 'San + Thome' என்னும் இரு சொற்கள் இணைந்து பிறக்கின்ற போர்த்துக்கேய வடிவமாகும்.


இப்பேராலயம், 'புனித தோமா'வுக்கு அர்ப்பணிக்கப்பட்ட வழிபாட் டுத்தலமாகும். தச்சுவேலை, கப்பல் கட்டும் வேலைகளைச் செய்பவராக விளங் கிய தோமா, இயேசுவின் 12 திருத்தூதர்களில் ஒருவராவர். இயேசுவின் மறை வுக்குப் பின்னர் திருவுளச்சீட்டின்படி பார்த்தியா நாட்டுக்கு நற்செய்தி அறிவிக் கப்புறப்பட்டார். கி.பி. 52ஆம் ஆண்டு அங்கிருந்து இந்தியா வந்து கேரளா விலும், சில ஆண்டுகளின் பின்னர் சென்னை மயிலாப்பூரிலும் தங்கியிருந்து கிறிஸ்தவ மறையைப் பரப்பி அங்கேயே ஈட்டியால் குத்திக் கொலை செய்யப் பட்டதாகவும், அவரது உடல் மயிலாப்பூரில் அவரே கட்டியிருந்த சிற்றாலயத் தில் அடக்கம் செய்யப்பட்டதாகவும் பாரம்பரியமாகப் பேசப்படுகின்றது.

கி.பி. 3ஆம் 4ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பல மேலைநாட்டு கிறிஸ்தவ வரலாற்று ஆசிரியர்களும், மேலை நாடுகளிலிருந்து இந்தியாவுக்கு பயணித்து வந்த பலரும் தோமா இந்தியா வந்ததையும், அவர் இறந்து மயிலாப்பூரில் அடக்கம் செய்யப்பட்டதையும் வெளிக்கொண்டுவந்து, தாம் கல்லறையைச் சந்தித்ததாகக் குறிப்பிட்டுள்ளார்கள்.

10ஆம் நூற்றாண்டில் கிறிஸ்தவர்கள் தோமா அடக்கம் செய்யப்பட்ட சிற்றாலயத்திற்கு அருகாமை புதிய ஆலயத்தைக் கட்டியுள்ளார்கள். 1349இல் 'ஜான் தே மரிஞ்ஞோலி' என்பவர் புனித தோமா ஆலயத்தையும் கல்லறையையும் சந்தித்ததாக எழுதியுள்ளார்.

1517இல் போர்த்துக்கேயரின் குறிப்புகளில்; தோமாவின் ஆலயம் பாழடைந்து கிடந்ததாகவும், 'தோமாவின் வீடு' என அழைக்கப்பட்ட சிற்றாலயம் மட்டும் தோமாவின் கல்லறையை அடையாளம் காட்டிய தாகவும் காணப்படுகிறது. 1523இல் அந்த இடத்தில் பெரியதொரு ஆலயம் போர்த்துக்கேய குடியேற்றத்தவரால் கட்டப்பட்டது.

ஆலயம் சிதைவுற்றுக் காணப்பட்டதால் பிரித்தானியர் குடியேற்றக் காலத்தில், அதாவது 1893ஆம் ஆண்டு அந்த ஆலயம் விரிவாக்கம் செய்யப் பட்டு, அவர்களால் அப்போது பயன்படுத்தப்பட்ட உயர்ந்த கோபுரங்களைக் கொண்ட நவீன கோதிக் கட்டடக் கலை வடிவமைப்பில் கட்டப்பட்ட ஆலயமே இன்றுவரை உள்ளது.



ஆலயத்தின் நீளம் 180 அடி, அகலம் 33 அடி, உயரம் 41.5 அடி, கோபுரத்தின் உயரம் 155 அடிகளாகும். உட்பகுதியில் 36 பெரிய சாளரங்கள் உள்ளன. அவற்றில் 'நிறப் பதிகை கண்ணாடி' (stained glass) அமைக்கப்பட்டு கிறிஸ்தவ சமயம் தொடர்பான காட்சிகள் அழகுற வரையப்பட்டுள்ளன. ஆலயத்திற்குப் போதியளவு ஒளி கண்ணாடிகள் ஊடாக கிடைக்கின்றது. பீடப் பகுதிக்குப் பின்னாலிருந்த சாளரக் கண்ணாடியின் ஒரு பகுதியில் இயேசு தோமாவுக்குத் தோன்றும் காட்சி எழிலுற வரையப்பட்டுள்ளது.

16.03.1956இல் பேராலயமாக தரமுயர்த்தப்பட்ட சாந்தோம் பேராலயத்தில் நிலவியஅமைதி, முற்றிலும் வெண்மை நிறத்திலான ஆலயத்தின் அழகு, நிறப்பதிகைக் கண்ணாடியில் வரையப்பட்டுள்ள ஓவியங்கள் எம்மை வியப்பில் ஆழ்த்தின. நாமும் அமைதியாக வழிபட்டோம்.

மரத்தில் செதுக்கப்பட்ட, மூன்று அடி உயரமுள்ள 1543ஆம் ஆண்டுக் குரிய 'மயிலை மாதா' திருவுருவம் ஆலயத்தின் உள்ளே வழிபாட்டுக்காக வைக்கப்பட்டிருந்தது. மரியா அரியணையில் அமர்ந்திருக் கிறார். கைகள் இறை வேண்டல் முறையில் குவிந்திருக்கின்றன. கண்கள் சற்று கீழ்நோக்கியிருந்தன. பயணிகளுடன் இணைந்து நாமும் அன்னையை வழிபட்டோம்.

புனித தோமாவின் கல்லறைச் சிற்றாலயம் புதுப்பிக்கப்பட்டு எழிலுடன் காணப்பட்டது. போர்த்துக்கேயர் ஆலயத்தை கட்டியபோது தோமாவின் கல்லறை என அடையாளம் காட்டப்பட்ட இடத்தைத் தோண்டினார்கள். அப்போது அங்கே தோமாவின் எலும்புத் துண்டுகள் சிலவற்றையும், அவரைக் குத்திக் கொலைசெய்யப் பயன்பட்ட ஈட்டியின் முன் பகுதியையும் கண்டெடுத்துப் பாதுகாத்தனர். அவை இப்போது அந்த கல்லறைச் சிற்றாலயத்தில் வைக்கப்பட்டுள்ளன.

கி.பி. 232ஆம் ஆண்டு தோமாவின் எலும்புகளில் ஒரு தொகுதி அகழ்ந்தெடுக்கப்பட்டு துருக்கி மற்றும் கிரேக்க நாட்டுத் தீவுக்குக் கொண்டு செல்லப்பட்டு ஈற்றில் இத்தாலியிலுள்ள 'ஓர்தோனா' நகரில் பாதுகாக்கப்படுகிறது என்ற தகவலையும் அறியக்கூடியதாக இருந்தது.

சாந்தோம் பகுதியை அகழ்ந்ததில் கிடைத்த பல தொல் பொருட்கள் பேராலயத்திற்குப் பின்பக்கமாயுள்ள அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டிருந்தன. கி.பி. 7ஆம் 8ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கருங்கல் சிலுவைகள், சிறு சிலுவைகளுடன் கத்தோலிக்க மறையைச் சார்ந்த பல பொருட்கள், பழைய கல்லறைச் சிற்றாலயத்தின் கட்டட எச்சங்கள் எனப் பல தொல்பொருட்கள் விளக்கக் குறிப்புகளுடன் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

வளாகத்திலிருந்த பேராலய விற்பனை நிலையத்தில் ஞாபகார்த்தப் பொருட்கள் சிலவற்றைக் கொள்வனவுசெய்துகொண்டு மனநிறைவில் வெளியேறினோம்.

திருவான்மியூர்

2008ஆம் ஆண்டு திண்டுக்கல் மாவட்டம் வத்தலக்குண்டு நகரில் நடைபெறவுள்ள திருமணத்தில் கலந்து கொள்வதற்காக இந்தியாவுக்குச் சென்ற நான், சென்னை / திருவான்மியூர் நகரில் தங்கியிருந்தேன். இலையான், நுளம்பு இல்லாத நகராக அதனைக் கண்டதால் அதிர்ச்சி. சென்னையில் எங்கு சென்றாலும் இவற்றுக்குக் குறைவே இருக்காத நிலையில் இங்குமட்டும் இந்த மாற்றம் ஏனென்று விளங்கவில்லை.

அங்கு சென்ற அன்றே, நாம் தங்கியிருந்த வீட்டிற்கு அயலிலிருந்தவர்களுடன் கதைத்தபோது இலையான்கள் தொல்லை இங்கில்லை யென்று கூறினார்கள். இதை என்னால் நம்ப முடியவில்லை. ஆனால், பின்னர்தான் உணர்ந்தேன். நாம் தங்கியிருந்த வீட்டிலிருந்து 100 மீ. தொலைவில் 'எலியட்ஸ் கடற்கரை' இருக்கிறது. அதனைப் பார்வையிடப் புறப்பட்டோம். கடற்கரைக்குச் செல்லும் குறுக்குப்பாதையின் முடக்குகளில் குப்பைகள் குவியலாகக் கிடந்தபோதும், வழமையாகக் குப்பையில் குவிந்து காணப்படும் இலையான்களை அங்கு காணாதது ஆச்சரியம்தான்.

'எலியட்ஸ் கடற்கரை' வெண்மணல் நிறைந்த அழகாகக் காணப்பட்டது. மரீனா கடற்கரையைப்போல் அகலமாக இல்லாது விட்டாலும்

அதற்கு எந்தவகையிலும் குறைவாக இருக்கவில்லை. நாங்கள் சென்றது சாயந்தர நேரமென்பதால் மக்கள் திரளாகக் காணப்பட்டனர். விளையாட்டில் ஈடுபட்டிருக்கும் சிறுவர் - இளையோர், கடலிலே வீழ்ந்து குளித்துக் கரையேறி மீண்டும் வீழ்ந்து சாகசம் காட்டும் வாலிபர், சிற்றுண்டிகள் - விளையாட்டுப் பொருட்கள் விற்பனை செய்வோரின் நடமாட்டம் என அந்தக் கடற்கரை களைகட்டியிருந்தது.


கடற்கரை ஓரமுள்ள வீதி நெடுகிலும் கடலைக் கலவை விற்பனை செய்யும் வண்டில்கள் காணப்பட்டன. அவற்றிற்கும் கூட்டம் குறைவில்லை. வீதிக்கு அப்பால் அழகிய வடிவமைப்பில் கட்டப்பட்டுள்ள ஹொட்டல்கள் அந்தப் பகுதியை அழகூட்டின. கடலில் தொடராகப் பயணிக்கும் நீரூர்திகள் கண்களை ஈர்ந்தன. இரவு எட்டுமணி வரை அந்த மணல்மீதே அமர்ந் திருந்தோம். மறுநாள் திருவான்மியூரை அண்டிய பகுதியிலுள்ள ஆலயம் மற்றும் கோவிலைப் பார்வையிடப் புறப்பட்டோம்.

மருந்தீஸ்வரர் கோயில்

திருவான்மியூரில் பிரபலமாகப் பேசப்பட்ட கோயில் 'மருந்தீஸ்வரர்' கோயிலாகும். காலையில் நீராடி முடித்த பின்னர் மருத்தீஸ்வரர் கோயிலைப் பார்வையிடும் ஆவலில் அங்கு சென்றோம். வணக்கத்துக்குரிய நிலையில் கோயிலின் ஓரமாக பெரியதொரு மரம் நின்றது. தன்னை வணங்கி திருந்திய வால்மீகிக்கு சிவன் காட்சிதந்தது, 'வன்னிமரம்' என அழைக்கப்படும் இந்த மரத்தினடியிலே. வால்மீகி இறைவனிடம் கேட்டுக்கொண்ட தற்கிணங்க அவரது பெயரிலேயே இக்கோயில் அழைக்கப்பட்டதாம்.

பின்னர், அகத்திய முனிவர் இங்கு வந்து சுவாமியை வணங்கித் தவம் செய்தபோது இதே மரத்தினடியில் அவருக்குக் காட்சி கொடுத்த சிவன், உலகில் தோன்றியுள்ள நோய்களுக்குண்டான மருந்துகளைக் குறிக்கும் மூலிகைகளின் தன்மைகள் குறித்து உபதேசம் செய்தாராம். அதனால் இத்தலத்து ஈசன், 'மருந்தீஸ்வரர்' என அழைக்கப்படுகிறாராம்.

இக்கோயில் பற்றி மேலும் அறியவருவதாவது: அபயதீட்சிதர் என்னும் பக்தர் சுவாமியை வழிபட வந்தபோது பெருமழையால் வெள்ளப் பெருக்கு ஏற்படவே அவரால் நீரைக் கடந்து சுவாமியைக் காண வரமுடியவில்லை. அவர் சுவாமிக்குப் பின்புறம் இருந்த தால் சுவாமியின் முதுகுப்பகுதி யைத்தான் தரிசிக்க முடிந்தது. வருத்தமடைந்த அவர், சுவாமி யின் முகதரிசனம் வேண்டி யதும் சிவன், மேற்கே திரும்பிக்



காட்சி தந்தாராம். இதனால் சிவன் மட்டும் மேற்கு நோக்க, அவருக்குப் பின்புறமாக அம்பாள் தெற்கு நோக்கியும், விநாயகரும் முருகனும் கிழக்கு நோக்கியும் காட்சி தருகிறார்கள்.

நடராஜர், அருணகிரியாரால் பாடல்பெற்ற முத்துக்குமார், மூன்று சக்தி விநாயகர்கள், 108 சிவலிங்கங்கள், பஞ்சலிங்கங்கள் தனித்தனி சந்நிதியில் உள்ளன. ஒரு மணித்தியாலத்துக்கு மேலாக இவைனைத்தையும் பார்த்த மனநிறைவில் கோயிலைவிட்டு வெளியேறி அண்மையிலிருந்த உணவகத்தில் காலை உணவருந்தச் சென்றோம்.

புனித அந்தோனியார் ஆலயம்

சாயந்தரம் ஐந்து மணியளவில், 08 கி.மீ. துரத்திலுள்ள 'பாலவாக்கம்' புனித அந்தோனியார் ஆலயத்தைத் தரிசிப்பதற்கென நாங்கள் எட்டுப்பேர் இரண்டு முச்சக்கரவண்டிகளில் புறப்பட்டோம்.

பல இயற்கை அழிவுகளைச் சந்தித்து மீளெழுந்த புனித அந்தோனியார் ஆலயம் மாடியுடன் கூடியதாக அமைக்கப்பட்டிருந்தது. ஆலயத்தின் முன் பக்கம் நான் தரிசிக்கச் சென்ற ஆலயங்கள் அனைத்திலும் மாறுபட்டதாக காணப்பட்டது. பழமை பேணப்படாமல் நவீனத்துவம் மேலோங்கியிருந்தது. இயற்கை அழிவுகளால் ஆலயம் முற்றாக அழிக்கப்பட்டதன் காரணமாக மாடியைக் கொண்டதாக ஆலயம் கட்டப்பட்டிருக்கலாமென எண்ணிக் கொண்டேன். அன்று ஞாயிற்றுக்கிழமையாதலால் மாடியில் வழிபாடு நடை பெற்றது. அதில் கலந்துகொண்டோம்.

வழிபாடு முடிவுற்றதும் அங்கிருந்த ஆலய விற்பனை நிலையத்தில் பக்திப்பாடல் இறுவட்டுகள் சிலவற்றைக் கொள்வனவு செய்துகொண்டு ஆலயத்தில் பகுதியாக அமைந்திருந்த மரியன்னை மேடை மற்றும் சிலுவையில் அறையுண்ட இயேசுவின் கல்வாரி மேடையையும் நெடி துயர்ந்து காணப்பட்ட வெளிச்சக் கோபுரத்தையும் பார்வையிட்டோம். இக்கோபுரத்தின் ஒளி, கடலில் பல மைல்களுக்கு அப்பால் பயணிக்கும் படகுகள், நீரூர்திகளுக்கு தெளிவாகத் தெரியுமாம்.



தொடர்ந்து அழகாகக் காணப்பட்ட சுற்றாடலையும் வீதியையும் பார்வையிட்ட பின்னர் புறப் படுவதற்காக முச்சக்கர வண் டியை எதிர்பார்த்திருந்தோம்.

அரைமணி நேரமாக முச்சக்கரவண்டி கிடைக்க வில்லை. பேரூந்தில் செல்லும் நோக்கில் தரிப்பிடத்தில் நின் றோம். அங்கு காத்திருந்த பயணிகள் சிலர் 'சேர்

ஆட்டோ' பற்றி பேசிக்கொண்டனர். அது பற்றி நாம் அறிந்ததில்லையாதலால் அதனில் பயணிக்கும் ஆவல் பிறந்தது.

சற்று நேரத்தால் 'சேர் ஆட்டோ' என அழைக்கப்படும் சாதாரண முச்சக்கர வண்டியைவிடச் சற்றுப் பெரிதான முச்சக்கரவண்டி இரண்டு பயணி களை ஏற்றியவாறு வந்து தரித்தது. நாம் அதனுள் ஏறி பின் வரிசையிலும் இரண்டாவது வரிசையிலும் அமர்ந்துகொண்டோம். வேறு பயணிகளும் ஏற்றப்பட்டனர். மூன்று வரிசையில் 15 பேர் வரை வண்டியில் ஏற்றப்பட் டோம். நெருக்கமாகவே இருந்தது. தூரம் குறைவென்பதால் சமாளிக்கலாமென அமர்ந்திருந்தோம்.

வண்டி புறப்பட்டு வேகமாக ஓடியது. சற்று நேரத்தால் எனக்கு நாரி உளையத் தொடங்கியது. கால், கை அசைக்கமுடியாது இறுகியிருந்தபோதும் நெழிந்து நெழிந்து நாரி உளைவைக் குறைக்க முயன்றேன். அதிலிருந்த பலரும் இதே நிலையில்தான் இருந்தார்கள் என்பதை ஊகிப்பதில் சிரமமிருக்கவில்லை.

ஒருவாறாக திருவான்மியூர் வந்து சேர்ந்தோம். பத்து ரூபா வீதம் ஒவ்வொருவரிடமும் அறவிட்டார் சாரதி. எனக்கு கை, கால்கள் விறைத்து கழன்று விழும்போல இருந்தது. எம்மவர் அனைவரும் இதேநிலையில் தான். எமக்கு சங்கடமாக இருந்தபோதும் பயணிகள் பலர் விருப்புடன் பயணிப்பதை கேள்விப்பட்டபோது ஆச்சரியமாக இருந்தது.

மறுநாள் திண்டுக்கல் மாவட்டம் செல்லவிருந்த நாம் ஒருநாள் ஒத்திவைத்தோம் வள்ளுவர் கோட்டத்தைப் பார்வையிடும் நோக்கில்...

வள்ளுவர் கோட்டம்

திருவள்ளுவருக்காகக் கட்டப்பட்டுள்ள நினைவகமே வள்ளுவர் கோட்டம். கோடம்பாக்கம் பெருந்தெரு சந்தியில் இந்தக் கோட்டம் அமைந் துள்ளது. அழகான கோபுர வளைவுகளில் அமைந்த நுழைவாயில் பார்வை யாளரை வரவேற்றது. உள்ளே நுழைந்ததும் பாதையின் பக்கங்களில் காணப்பட்ட பலவகைப் பூஞ்செடிகள், அழகூட்டும் நிழல்தரு மரங்களால் நிறைந்த பூங்கா கண்ணுக்கு விருந்தாக இருந்தது.


ஏற்கெனவே வாகனத்தில் 'ரி' நகருக்கு பயணித்த தடவைகளில் கண்களை ஈர்ந்ததும், வள்ளுவர் கோட்டம் என்பதை அடையாளப் படுத்தியதும் அங்கு காணப்பட்ட 'சிற்பத்தேராகும்'. அதைப் பார்த்தது முதல் வள்ளுவர் கோட்டத்தைப் பார்வையிடவேண்டுமென இரண்டு தடவைகள் முயற்சித்தும் முடியாமல்போய் இப்போது நிறைவேறியதில் மிகவும் மகிழ்ச்சி. ஏற்கெனவே கண்ணுக்குப் பரீட்சயமான சிற்பத்தேரை முதலில் பார்த்துவிட வேண்டுமென்ற ஆவலில் அங்கே சென்றோம்.

திருவாவூர் கோயில் தேரின் மாதிரியில் செதுக்கப்பட்டுள்ளது இச்சிற்பத்தேர் என்று அறிந்தேன். இதன் அடிப்பகுதி 7.5 மீ. சற்சதுரமான பளிங்குக் கல்லினாலானது. 39 மீ. உயரமான இத்தேரை, 2.1 மீ. உயரமுள்ள

இரண்டு யானைகள் அரங்கத்திற்குள்ளே இழுத்துச் செல்வதைப்போன்று வடிவமைக்கப்பட்டிருந்தது. திருக்குறள் கருத்துக்களை விளக்கும் சிற்பங்களும் செதுக்கப்பட்டுள்ளன.

தேரின் கரைகளில் உள்ள நான்கு பெரிய சக்கரங்கள், நான்கு சிறிய சக்கரங்கள் ஒவ்வொன்றும் தனிக்கல்லினால் அமைக்கப்பட்டிருந்தது. பெரிய சக்கரம் 3.43 மீ. விட்டத்தையும் 0.76 மீ. தடிப்பையும் கொண்டது. மத்தியி லிருந்த சிறிய சக்கரங்கள் பாதியளவு விட்டத்தைக் கொண்டிருந்தன.

09 மீ. உயரத்தில் 12 மீ. அகலத்தையுடைய எண்கோண வடிவிலமைந்த கருவறையில் திருவள்ளுவர் சிலை வைக்கப்பட்டுள்ளது. கருவறை வாயிலில் திராவிடக் கட்டடக்கலை பாணியிலமைந்த சிற்பத் தூண்கள் அழகுற அமைக் கப்பட்டுள்ளன. நீண்டநேரம் அதனைப் பார்வையிட்டு, முன்னால் இருந்த பிரமாண்டமான அரங்கத்திற்குச் சென்றோம். இவ்வரங்கில் 4,000 மக்கள்



கொள்ளக்கூடிய வகையில் 67 மீ. நீளத்தை யும், 30.5 மீ. அகலத்தையும் கொண்டது. இவ்வரங்கத்தின் வெளிப்புறமாக 06 மீ. அகலத்தில் தாழ்வாரங்கள் உள்ளன.

இதன் ஒருபகுதி மேற்தளத்தில் 'குறள் மணிமாடம்' அமைக்கப்பட்டுள் ளது. இங்கு திருக்குறளில் உள்ள 1,330 குறட்பாக்கள் கற்பலகையில் செதுக்கப் பட்டு பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. இவற்றுள் அறத்துப்பால் குறள்கள் கரு நிறப் பளிங்குக் கல்லிலும், பொருட்பால் குறள்கள் வெள்ளை நிறப் பளிங்குக் கல்லிலும், காமத்துப்பால் குறள்கள் செந்நிறப் பளிங்குக் கல்லிலும் பொறிக் கப்பட்டிருந்தன. இவற்றுடன் குறள்களி லுள்ள கருத்துக்களைத் தழுவி வரையப்பட்ட நவீன, மரபுவழி ஓவியங்களும் காணப்பட்டன.

அரங்கத்தின் கூரைத்தளம் 'வேயாமாடம்' என அழைக்கப்படுகிறது. வேயாமாடத்திற்குச் செல்வதற்கு அரங்கத்தின் வாயிலில் படிக்கட்டுகள் அமைக்கப்பட்டுள்ளன. வேயாமாடத் தளத்திலிருந்து சிற்பத்தேரிலுள்ள கருவறைக்குச் செல்வதற்கு பாலம் போன்ற பாதையும், பாலத்திற்குக் கீழாகத் தரையில் தேரை இழுக்கும் யானைகளும் அமைக்கப்பட்டுள்ளன. திருவள்ளு வர் சிலையையும், கருவறைக்குச் மேலமைந்த கோபுரத்தையும் கலசத்தையும் அண்மையிலிருந்து பார்க்கக் கூடியதாக இருந்தது.

நீண்டநாள் ஆவல் நிறைவேறிய நிலையில் அந்தச் சுற்றாடலின் அழகை உள்வாங்கி மனநிறைவுடன் வெளியேறினோம்.

காஞ்சிபுரம் மாவட்டம்

மாமல்லபுரம்

மாமல்லபுரம் அல்லது மகாபலிபுரம் என அழைக்கப்படும் இந்நகரம், காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள பேரூராட்சி நகராகும். ஏழாம் நூற்றாண்டில் காஞ்சிப் பல்லவர்களின் முக்கிய துறைமுக நகராக இது விளங்கியுள்ளது.

புடைப்புச் சிற்பத் தொகுதிகள் உள்ளும் புறமும் காணப்படும் மாமல்லபுரத்துக் கட்டடங்களை; குடைவரைக் கோயில்கள் அல்லது மண்டபங்கள், ஒற்றைக்கல் கோயில்கள் அல்லது இரதங்கள், கட்டுமானக் கோயில்கள் என மூன்று வகையாகப் பிரித்துப் பார்க்கலாம்.

பல்லவ அரசன் முதலாம் மகேந்திரவர்மனின் மகன் முதலாம் நரசிம்மவர்மன் (மாமல்லன்) காலத்திலேயே மாமல்லபுரத்துச் சிற்பங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. தனித்தனி குன்றுகளில் செதுக்கப்பட்டுள்ள பஞ்ச பாண்டவர் இரதங்கள் பஞ்ச பாண்டவர்களின் பெயர்களால் அழைக்கப்படினும் இவை மகாபாரதத்துடன் தொடர்பு பட்டிருக்கவில்லை என அறிய முடிந்தது.



மாமல்லன் மன்னனைத் தொடர்ந்து அவனது மகன் பரமேஸ்வரவர்மன் மற்றும், இரண்டாம் நரசிம்மவர்மன் (இராஜசிம்மன்) ஆகியோரால் தொடர்ந்து கட்டப்பட்டதாக அறியப்படுகிறது.


மாமல்லபுரத்துக் கோயில்கள், மண்டபங்கள், இரதங்கள், புடைச் சிற்பங்கள் போன்றவற்றை 'ஏ.பி.நாகராஜா' தனது 'வா ராஜா வா' திரைப் படத்தில் தத்ரூபமாகப் படமாக்கம் செய்துள்ளதைப் பலரும் பார்த்திருப்பீர்கள். பிரபல எழுத்தாளர் 'கல்கி'யின் 'சிவகாமியின் சபதம்' கதையிலும் சுவைத்திருப்பீர்கள்.

பெரும் பாறையொன்றின் முகப்பை மட்டும் பட்டையாகச் செதுக்கி, அப்பாறையைக் குடைந்து உருவாக்கப்பட்டவையே குடைவரைக் கோயில்கள் அல்லது மண்டபங்கள் எனப்படும். இவற்றின் பின்புறச் சுவர்களில் சிவன், பிரமன், துர்க்கை, திருமால், சுப்பிரமணியன் ஆகிய தெய்வங்களுக்கான சிலைகள் வடிவமைக்கப்பட்ட கருவறைகளும், முன்பாக அர்த்த மண்டபம், முகமண்டபம் போன்றவையும் இருக்கின்றன. முகமண்டபத்துக்கும் அர்த்த மண்டபத்திற்கும் இடையில் சிறு வெளி உள்ளது. கட்டுமானத்தைத் தாங்கும் வகையில் தூண்கள் செதுக்கப்பட்டிருந்தன.

இவ்வகை கோயில்கள் ஒன்பதும், முற்றுப்பெறாத சிலவும் உள்ளன. சிலவற்றில் முகமண்டபம் இருக்கவில்லை. சில கோயில்களில் ஒன்றுக்கு மேற்பட்ட கருவறைகளும் இருந்தன. ஒவ்வொரு கருவறைக்கும் வெளியே இரண்டு துவாரபாலகர்களின் சிற்பங்கள் இருந்தன.

இயற்கையான பாறையை மேலிருந்து கீழ்நோக்கிச் செதுக்கி தோற்றுவிக்கப்பட்டவையே ஒற்றைக்கல் கோயில்கள் அல்லது (இரதம்போல் இருப்பதால்) இரதங்கள் எனவும், இவற்றின் மேற்பகுதி விமானங்கள் எனவும் அழைக்கப்படுகின்றன. ஒவ்வொன்றிலும் கருவறையும் துவாரபாலகர்களின் சிற்பங்கள் உள்ளன.

ஐந்து பாண்டவர் இரதங்கள், இரண்டு வலையன்குட்டை இரதங்கள், பிடாரி இரதம், கணேசன் இரதம் போன்றவை உள்ளன. இவற்றில் மூன்று தளங்களைக்கொண்ட தருமராச இரதமே பெரியதும் மிகவும் அழகு வாய்ந்ததுமாக உள்ளது. தரைத்தளம் முற்றுப்பெறாமலே இருக்கின்றது. அத்தளத்தின் எட்டு மூலைகளிலும் அழகான சிற்பங்கள் இருக்கின்றன. அதில் சிவனும் பார்வதியும் இணைந்த அர்த்த நாரீஸ்வரர் சிற்பமும், தர்ம ராசா இரதமும் பல்லவர் சிற்பக்கலைக்கு ஒப்பற்ற சான்றாகும். மேல் இரண்டு தளங்களிலும் ஒவ்வொரு கருவறை இருக்கின்றது. இத்தளங்களின் சுற்றுப்புறங்களில் அற்புதமான சிற்பங்கள் நிரப்பியுள்ளன.



பல்வேறு கற்களை வெட்டியெடுத்து ஒன்றின்மீது ஒன்றாக அடுக்கி செய்யப்பட்டவையே கட்டுமானக் கோயில்கள் எனப்படும். கடற்கரையை மருவியதாக கிழக்கு நோக்கியும் மேற்கு நோக்கியும் சிவன் கோயில்களும் மத்தியில் திருமால் தரையில் படுத்திருக்கும் கோயிலும் உள்ளன. கிழக்கு நோக்கிய கோயில் ஐந்து அடுக்குகளைக் கொண்ட உயரமான கோபுரத்தையும், தெற்கு நோக்கிய கோயில் மூன்று அடுக்குகளைக்கொண்ட சிறிய கோபுரத்தையும் கொண்டதாக உள்ளன. இவை சற்றுச் சேதமுற்று பழமையை பறைசாற்றுகின்றன. சுவரின் பல இடங்களில் பல்வேறு தெய்வச் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இதற்குச் சிறப்பூட்டுவதாக கடற்கரை விளக்கு (கலங்கரை விளக்கு) கடற்கரையோரம் நெடிதுயர்ந்து காணப்படுகிறது.

இங்குள்ள புடைப்புச் சிற்பத் தொகுதிகள் இந்தியாவில் வேறு எங்கும் காணமுடியாதவை என அறியப்படுகிறது. மாமல்லபுரத்தின் அதிசயம் என்றே சொல்லவேண்டும். இதற்கு எடுத்துக் காட்டாக அர்ஜுனன் தபசு புடைப்புச்

சிற்பத் தொகுதியைக் கூறலாம். 30 மீற்றர் உயரம், 60 மீற்றர் அகலங்கொண்ட ஒரு பாறையில் 150இற்கும் மேற்பட்ட சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. வானவர்கள், மனிதர்கள், மிருகங்கள், பறவைகள் எனப் பலவகையான சிற்பங்கள் காணப்படுகின்றன.

இவற்றைப் பார்ப்பதற்கு இந்தியர்கள் ஏழு ரூபாவும், வெளிநாட்டவர்கள் 250 ரூபாவும் செலுத்தியே உட்செல்ல முடியும். வழிகாட்டியின் உதவியுடன் பார்வையிட்டோம். அதனால் மேற்குறித்த பல விபரங்களை அறியமுடிந்தது. மாமல்லபுர வீதியில் பல சிற்பக் கூடங்கள் உள்ளன. அங்கே கருங்கல் சிற்பங்கள், ஐம்பொன் விக்கிரகங்கள் விற்பனைக்குள்ளன. விற்போரும், வாங்குவோரும், சிற்பிகளின் கைவண்ணத்தைப் பார்ப்போரும் என மனிதர்கள் நிறைந்து காணப்பட்டனர். நாமும் பார்வையாளராக நுழைந்து வெளியேறினோம்.

புதுச்சேரி ஒன்றியப்பகுதி

புதுச்சேரி

சென்னையிலிருந்து 170 கி.மீ. தொலைவில் உள்ள தமிழ்நாட்டு எல்லைக்குட்பட்ட ஒரு நகரமும், அதே பெயரையுடைய நான்கு மாவட்டங்களைக் கொண்ட ஒன்றியப் பகுதியின் பெயரும் அதன் தலைநகருமே புதுச்சேரி. வங்கக் கடலோரம் அமைந்திருக்கும் இந்நகர், 'பாண்டிச்சேரி' மற்றும் 'புதுவை' என்றும் அழைக்கப்படுகின்றது. முன்னர் 'பாண்டி' என அழைக்கப்பட்ட இந்த நகரம், நான்காம் நூற்றாண்டு முதல் காலத்துக்குக் காலம் காஞ்சிபுரத்துப் பல்லவ பேரரசு, தஞ்சாவூர் சோழர்கள், விஜயநகரப் பேரரசு, பீஜப்புர் சுல்தான் போன்றோரின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது.

1673 - 1954 காலப்பகுதியில் பிரான்ஸ் நாட்டின் கடல்கடந்த ஆட்சி நிலப்பகுதியாக, 'பிரான்ஸிய கிழக்கிந்திய கம்பெனி'யின் ஆதிக்கத்தின் கீழ் இருந்தது. இவர்களது ஆதிக்கத்தின் கீழ் இருந்தாலும் இடையிடையே குறுகிய காலப்பகுதியில் ஒல்லாந்தர் மற்றும் ஆங்கிலேயரின் ஆளுமைக்கு உட்பட்டு மீண்டுள்ளது. தற்போது இந்திய நடுவண் அரசின் ஒன்றியப் பகுதியாக இருக்கின்றது.

ஒன்றுடனொன்று இணைக்கப்படாத வங்காள விரிகுடாப் பகுதியைச் சார்ந்த புதுச்சேரி, காரைக்கால், ஏனாம், அரபிக்கடல் பகுதியைச் சார்ந்த மாஹோ ஆகிய நான்கு மாவட்டங்களைக் கொண்ட ஒன்றியப் பகுதியைக் கொண்டமைந்துள்ளது.

பிரான்ஸ் நாட்டுக் கடல்கடந்த ஆட்சி நிலப்பகுதிகள் மற்றும் இந்தியாவின் எல்லைகளைத் தக்கவைத்துக் கொள்வதற்காக இந்த வழக்கத்துக்கு மாறான புவியியல் அமைப்பு தோற்றுவிக்கப்பட்டது எனலாம்.

புதுச்சேரியில் நுழையும்போது தானுந்து (Car) தவிர்ந்த தனியாரின் பெரிய வாகனங்களில் வரும் சுற்றுலாப் பயணிகள் நுழைவு வரி செலுத்தியே நுழையமுடியும் என்பதால், அங்கிருந்த பணிமனையில் பணம் செலுத்தி நகரினுள் நுழைந்தோம்.

இரண்டாகப் பிரிக்கப்பட்ட வீதிகளின் நடுவில் இருந்த முகப்பு வரவேற்றது. நேர்க்கோட்டிலானதும் துப்புரவாகக் காணப்பட்டதுமான வீதிகள் நகருக்கு அழகூட்டி நின்றன. தமிழ்நாட்டில் நான் சென்ற இடங்களில் இதுபோன்ற வீதிகளைக் காணவில்லை. இரவு ஊர் உறங்கும் நேரத்தில் வீதிகள் சுத்திகரிக்கப்பட்டு கழிவுகள் அகற்றப்படுகின்றன. ஒருநாள் அதிகாலை 1.00 மணிக்கு அப்பாதையால் பயணித்தபோது இதனைக் காணமுடிந்தது.

புதுச்சேரியின் நகரமைப்பு, பிரான்ஸிய வலைமுறை வடிவமைப்பு திட்டத்தை அடிப்படையில் ஒன்றையொன்று வெட்டும் வீதிகளைக் கொண்டமைந்துள்ளது. நகரம் இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. முதலாவது,



பிரான்ஸிய மொழியில் வெள்ளை நகரென பொருள் படும் 'வில் பிளாஞ்' (Ville Blanche); இந்நகரில் 'குடிமைப் பட்ட கால' பிரான்ஸிய கட்டடக் கலை பாணியிலான பிரமாண்டமான வீடுகள், தனி மாளிகைகளுடன் உள்ளன. இரண்டாவது, கறுப்பு நகரென பொருள் படும் 'வில் நுவார்' (Ville Noire); இந்நகரில் பாரம்பரியமான, தமிழக பாணியிலான கட்டடக்கலை கட்டடங்களுடன் உள்ளன. இரு கட்டடக் கலைகளின் இணைவு இந் நகரத்தின் தனித் தன்மையை எடுத்தோதுவதுடன் அழகுக்குப் பெருமை சேர்க்கிறது என்றே சொல்லலாம்.

சீறிவரும் வங்காள விரிகுடா கடலும், கரையைத் தேடிவரும் அலைகளைத் தடுத்து நிற்கும் வீதியுடன் இணைந்த அணையும், அணையின் மேல் அமைக்கப்பட்டுள்ள 'மகாத்மா காந்தி' சிலையும் பார்ப்பவரை மெய் மறக்கவே செய்யும். விலகிச் செல்ல மனமின்றி அரை மணித்தியாலத்திற்கு மேலாக அவ்விடத்திலேயே இருந்தோம்.

பிரான்ஸ் நாட்டுத் தூதுவரின் அலுவலகமும், மக்கள் நலன் பேணும் அலுவலகமும், விருந்தினர் விடுதிகளும், பிரான்ஸிய பெயர்களைத் தாங்கியுள்ள வீதிகளும் பிரான்ஸிய அரசின் இருப்பை நிலைநிறுத்துவதாக உணர முடிந்தது. இங்குள்ளவர்களில் பலர் பிரான்ஸ் நாட்டின் குடியுரிமையைப் பெற்றுள்ளார்கள்.

நான் பிரான்ஸ் - லியோனில் வசித்த காலத்தில் பலரை அங்கு அறிந்திருக்கிறேன். இவர்கள் 1954இல் பிரான்ஸிய அரசு புதுச்சேரியை விட்டு விலகியபோது அவர்கள் வழங்கிய விருப்பத் தேர்வின்படி பிரான்ஸிய குடிமக்களாக நீடிக்க விரும்பியவர்களும் அவர்களின் சந்ததியினருமாவர்.

புதுச்சேரி வாழ் மக்களிடையே பிரதான பேச்சு மொழியாக தமிழ் இருந்தபோதிலும் உரையாடலின்போது பேச்சுவழக்கில் பிரான்ஸிய சொற்கள் கணிசமாக ஊடுருவியிருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது. என்னால் பிரான்ஸிய மொழியை விளங்கிக்கொள்ள முடியுமென்பதால் இதனை இனங்காணக்கூடியதாக இருந்தது.

மகாத்மா காந்தி சிலை, பிரான்ஸின் போர் நினைவுச் சின்னம், பிரான்ஸின் வீராங்கனை 'யோண் ஒவ் ஆர்க்'கின் சிலை போன்ற பல்வேறு கலை நினைவுச் சின்னங்களையும் சிலைகளையும் பார்த்து இரசிக்கக்கூடியதாக இருந்தது. யோண் ஒவ் ஆர்க் பிரான்ஸ் நாட்டினரால் மிகவும் மதிக்கப்படும் வீராங்கனை. கத்தோலிக்க திருச்சபையால் புனிதராக பிரகடனப்படுத்தப்பட்டவர். சிறுவயது முதலே இறையன்பில் இரண்டறக் கலந்திருந்த இவர், தனது 13ஆவது வயதில் புனிதர்களின் குரலைக் கேட்டுள்ளார். 16வது வயதில் அதாவது 1428ஆம் ஆண்டு மே மாதத்தில் மீண்டும் அப்புனிதர்களின் குரலைக் கேட்டாள்.


மகாத்மா காந்தி சிலை

புனிதர்களால், 'பிரான்ஸ் அரசரை ஆங்கிலேயர் தாக்க வருவதாகவும் அவர்களிடமிருந்து பட்டத்து இளவரசர் டோஃபென் என்பவரை காப்பாற்றுமாறும்' கூறப்பட்டது. அக்கணமே ஜோண் ஒவ் ஆர்க், ஆண் உடை தரித்து டோஃபென்னைச் சந்தித்ததுடன் அவரிடமும் திருச்சபை நிர்வாகத்திடமும் அனுமதிபெற்று 1429இல் பிரான்ஸியப் படையை நடத்திச் சென்று ஆர்லியன்ஸ் என்ற இடத்தில் ஆங்கிலேயரின் முற்றுகையை முறியடித்து வெற்றிகொண்டாள். படாய் என்ற இடத்திலும் அவர்களைத் தோற்கடித்தாள்.

இதையடுத்து ரெய்ம்ஸ் என்ற இடத்தில் ஏழாம் சார்லஸ் என்ற பெயருடன் டோஃபென் முடி சூட்டப்பட்டார். முடி சூட்டு நிகழ்வில் ஜோண் அருகிலேயே நின்றாள். பர்கண்டியர்களின் ஆக்கிரமிப்பிலிருந்த பாரீஸ் நகரை விடுவிக்கும் பொருட்டு 1430இல் நடத்திய பாரீஸ் முற்றுகை, காட்டிக் கொடுப்பால் தோல்வியைத் தழுவியது. பர்கண்டியர்களால் சிறைப் பிடிக்கப்பட்ட ஜோண், ஆங்கிலேயர் கேட்டதற்கிணங்க அவர்களுக்கு விற்கப்பட்டாள். இவளது வரலாற்றைத் திரைப்படத்தில் பார்த்திருக்கிறேன்.

ஏழாம் சார்லஸ் கைவிட்ட நிலையில், ஆங்கிலேயர் தமக்கு சார்பான நீதிமன்றத்தில் சதிசெய்தது உட்பட பல குற்றச்சாட்டுகளை முன்வைத்து ஆயுள் தண்டனை விதித்து தீர்ப்பளித்தனர். இச் சந்தர்ப்பத்தில் "இறை அருள்தான் என்னை வழி நடத்தியது" என்று அவள் உரத்துக் கூறியதைக் கேட்டுக் கொதிப் படைந்த நீதிபதி, கொலை செய்ய உத்தரவிட்டார். 30.05.1431 அன்று அவளது 19ஆவது வயதில் கம்பத்தில் கட்டி எரித்துக் கொலைசெய்யப்பட்டாள்.

புதுச்சேரியில் சிறியதும் பெரியதுமான பல விற்பனை நிலையங்கள், அழகிய காட்சியறைகளுடன் ஆங்காங்கு இருந்தன. பொருட்களின் விலை தமிழகத்தின் ஏனைய இடங்களுடன் ஒப்பிடுகையில் குறைவாகவே இருந்தது. மதுபான வகைகளுக்கு வரிவிலக்குள்ளதால் அங்கு செல்பவர்கள் தவறாமல் கொள்வனவு செய்வார்கள். எவ்வளவும் கொள்வனவு செய்யலாம். ஆனால், எடுத்துச்செல்லும்போது காவல் துறையினரின் கண்களில் பட்டுவிட்டால் இரண்டு போத்தலுக்கு மேல் வரி செலுத்தவேண்டும். அந்தப் பகுதியில் காவல் துறையினரின் கண்காணிப்பு அதிகமாகவே இருந்தது.

முடிந்தவரை பலதையும் பார்த்ததுடன் தேவையான பொருட்களை கொள்வனவு செய்த பின்னர் 12 கி.மீ. தொலைவிலிருக்கும் வில்லியனூர் மாதா திருத்தலத்துக்குப் புறப்பட்டோம்.

வில்லியனூர் மாதா திருத்தலம்

புதுச்சேரி ஒன்றியப் பிரதேசத்தில் அமைந்திருக்கும் வில்லியனூர், எழில் கொஞ்சும் மரங்கள் - தோப்புகள் - பரந்து விரிந்த வயல்வெளிகள் நிறைந்த அழகிய சிற்றூராகும். இவ்வூர் 'வில்வநல்லூர்' என்றும் அழைக்கப் படுகின்றது.

புதுவையைச் சேர்ந்த மருத்துவரான 'லெப்பீஸ் துரை' தனது குழந்தைக்கு ஏற்பட்ட கொடிய நோயை நீக்கி உயிர்ப்பிச்சை அளித்த அன்னை மரியாவுக்கு நன்றியாக ஆலயம் கட்டுவதற்கெனச் செய்யப்பட்ட பொருளுதவியைக்கொண்டு 1877இல் ஆலயம் கட்டுவதற்கான காணி கொள்வனவு செய்யப்பட்டது.

1858ஆம் ஆண்டு பிரான்ஸ் - லூர்து நகரில் 'மசபியேல்' குகையில் பெர்ணடெத் சொறுபி என்ற சிறுமிக்கு காட்சி கொடுத்த லூர்து அன்னையின் பெயரிலேயே வில்லியனூரிலும் ஆலயம் அமைக்க முடிவெடுக்கப்பட்டது. லூர்து அன்னையை 18 தடவைகள் சந்தித்து உரையாடிய பெர்ணடெத் சொரூபியின் உறவினரான 'தார்பஸ் அடிகளார்' அந்நாளில் அங்கு பணி யாற்றிக் கொண்டிருந்தார்.

ஆலயம் கட்டுவதற்கு போதிய நிதி இல்லாமையால் அவற்றைப் பெறுவதற்கு, கிறிஸ்தவ பெரியார்களும் மதபோதக சபையினரும் அதி தீவிரம் காட்டிய வேளையில், ஏழைகளின் மீது அக்கறைகொண்டு உதவிவரும் புண்ணியவதி ஒருவர், லூர்து அன்னை சுரூபத்தை தருவித்துத் தருவதற்கும்

ஆலயம் கட்டிட நிதி வழங்கவும் முன்வந்தார். இவரினதும் வேறு பலரது நிதியுதவியினாலும் ஆலய கட்டுமானப்பணி 04.04.1877இல் இடையூறின்றி நிறைவேறியது.

இதற்கு முன்னதாகவே பிரான்ஸ் நாட்டிலிருந்து புதுச்சேரிக்கு 'லூர்து அன்னை சுரூபம்' கொண்டுவரப்பட்டது. கப்பலிலிருந்து அந்தச் சுரூபத்தை இறக்கியபோது மூன்று தடவைகைள் கீழே விழுந்தது எனினும் சுரூபத்திற்கு எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை. 21.02.1886 அன்று திருத்தந்தை 13ஆம் சிங்கராயர் அவர்கள் வழங்கிய உத்தரவின் பிரகாரம், மாதா சுரூபத்திற்கு முடிசூட்டப்பட்டதுடன் திருத்தலமாகவும் உயர்த்தப்பட்டது எனப் பல தகவல்களை அறியக் கூடியதாக இருந்தது.

பண்டைய கட்டடக் கலையில் புதுப்பொலிவுபெற்று, கம்பீரமாக நிற்கிறது வில்லியனூர் மாதா ஆலயம். ஆலய முகப்புக்கு முன்னால் இந்து கோவில்களில் உள்ள தீர்த்தக்குளத்தை நினைவூட்டும் வகையில் குளமொன்று அமைக்கப்பட்டுள்ளது. கரைகள் செங்கற்களால் கட்டப்பட்ட இக்குளத்தின் நான்கு பக்க சுவர்களிலும் குளத்து நீர் வரை படிகள் அமைக்கப்பட்டுள்ளன. குளத்தின் மத்தியில் உயரமான பீடத்தில் லூர்து-அன்னையின் சுரூபம் வைக்கப்பட்டுள்ளது. பார்வைக்கு கலைத்துவம் மிக்க தாய் விளங்கியது அக்குளம்.



ஆசியாவிலேயே குளத்தை முன்றலில்கொண்டு அமைந்துள்ள ஆலயம் வில்லியனூர் மாதா ஆலயம் மட்டுமே. பிரான்ஸ் / லூர்து நகரில் மாதா காட்சி கொடுத்ததற்கான அடையாளமாக சுரக்கத் தொடங்கிய புனித நீர் ஆண்டுதோறும் இக்குளத்தில் கலக்கப்படுகிறது என அறியப்படுகிறது.

குளத்தை மையமாகக்கொண்டு இருபக்கமும் சுவரோரம் சிலுவைப்பாதை சிற்பங்கள் 14 பீடங்களில் வைக்கப்பட்டிருந்தன. பக்தர்கள் முழந்தாளில் இருந்து வழிபடுவதற்கு ஏதுவாக சிலுவைப்பாதை பீடங்களுக்கும் குளத்துக்கும் இடையில் வெண்மணல் பரவப்பட்டிருந்தது.

நாங்கள் சென்றபோது திரளான பக்தர்களை ஆலய வளாகத்தில் காணக்கூடியதாக இருந்தது. மாதா செய்த புதுமைகள் பற்றி அங்கு நின்ற பலரும் உரையாடிக் கொண்டிருந்தபோதும் இரண்டு புதுமைகள் பற்றி பெரிதும் பேசப்பட்டது. அவையாவன:

07.04.1877 அன்று அலங்கரிக்கப்பட்ட தேரில் மாதா சுரூபம் வைக்கப்பட்டு, இராணுவ இசைக்கருவிகள் முழங்க, வானவெடிகள் அதிர

பவனியாக வில்லியனூருக்குக் கொண்டுசெல்லப்பட்டபோது, மக்கள் பிரமாண்டமான வரவேற்பளித்து உற்சாகத்தினை வெளிப்படுத்தினர். திட்டமிட்டபடி 'சுல்தான்பேட்டை' வழியாக சுரூபத்தைக் கொண்டு செல்ல முனைகையில் ஒருசாரார் எதிர்த்தன் காரணமாக கலவரம் ஏற்பட்டது. அப்போது மாதா சுரூபம் தானாகத் திரும்பி வேறு வழியைக் காட்டிட, சீரற்ற அந்த மணல் பாதையால் கொண்டு செல்லப்பட்டு கலவரத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது என்றும்,

1977ஆம் ஆண்டு புயலினால் புதுவைக்கு பேரழிவு ஏற்படுமென்று வானிலை ஆராய்ச்சி நிலையம் எச்சரிக்கை விடுத்தபோது, அப்போதிருந்த பேராயர் 'வெண்மணி செல்வநாதர் ஆண்டகை' புயலிலிருந்து புதுவையைக் காப்பாற்ற தேவ அன்னையிடம் செபிக்கும்படி மக்களுக்கு அழைப்பு விடுத்தார். புயலிலிருந்து காப்பாற்றப்பட்டால் வில்லியனூருக்குப் பாத யாத்திரையாக வந்து நன்றிசெலுத்துவோமென்று வாக்குக் கொடுத்தார். இவர்களது வேண்டுதல் நிறைவேறியதுபோல் புயல் புதுவையைத் தாக்காமல் வேறு இடம் நகர்ந்ததாகவும் அறியக்கூடியதாக இருந்தது. இதையடுத்து ஆண்டுதோறும் பாதயாத்திரை இடம் பெறுவதாகவும் பக்தர்கள் கூறுகி றார்கள். 1983இல் வெளிவந்த 'வில்லியனூர் மாதா' திரைப்படத்தில் மேற்குறித் தகவல்களை அறியக்கூடியதாக இருந்தது.

ஆண்டுதோறும் ஐப்பசி மாதம் இரண்டாவது வாரத்தில் திருவிழா கொண்டாடப்படும் 'வில்லியனூர் மாதா' ஆலயத்தினுள் வீற்றிருந்த லூர்து அன்னையின் மாற்றீடான வில்லியனூர் மாதாவை தரிசித்து, வழிபட்டு வெளியேறினோம்.

நாகை மாவட்டம்

அன்னை வேளாங்கண்ணி ஆலயம்

கடல் கடந்த நாட்கள் 02 இல் வேளாங்கண்ணி ஆலயம் பற்றிய தகவல்களை அறிந்திருப்பீர்கள். நீண்ட இடைவெளியின் பின்னர் அங்கு சென்றபோது ஆச்சரியப்படத்தக்க மாற்றங்களைக் கண்டேன்.

ஆலயம் மாற்றமெதுவுமின்றி இருந்தாலும் சுற்றிவர காணப்பட்ட தரையில், மண்ணுக்குப் பதிலாக சீமந்து கற்கள் பதிக்கப்பட்டுள்ளன. நாங்கள் தங்கியிருந்த தென்னோலைக் கிடுகு விடுதிகளுக்குப் பதிலாக மாடிகளுடன் கூடிய விடுதிகள் பல அமைக்கப்பட்டுள்ளன. ஆலயப் போசனசாலை விசால மாகக் கட்டப்பட்டுள்ளது.

ஆலயத்திலிருந்து கடற்கரை நோக்கிச் செல்லும் கடைத் தொகுதிகள் கட்டடமாகவும், தகரக் கொட்டகையாகவும் காணப்படுகின்றன. வீதியும் செப்பனிடப்பட்டுள்ளது. வெளிகளாக இருந்த இடங்களெல்லாம் கட்டங் களால் நிறைந்திருந்தன.

மாதா குளத்தை நோக்கி முழந்தாழ்படியிட்டுச் செல்லும் பாதை முற்றிலும் மணலாக இருந்தது. இருமருங்கும் சுவர் கட்டப்பட்டு சிலுவைப் பாதை நிலைகள் புதிய பீடங்களில் வைக்கப்பட்டிருந்தன. பக்தர்கள் நலன் கருதி சிலுவைப்பாதையை மருவியதாக நடைபாதை அமைக்கப்பட்டிருந்தது.

மாதா குளம் என அழைக்கப்படும் அன்னை காட்சிகொடுத்த குளத்தை காணமுடியவில்லை. அக்குளத்தை சீமெந்து தளத்தால் மறைந்து மேலாக சிற்றாலயம் அமைக்கப்பட்டு, காட்சிகொடுத்த நிலை, சிலைகள் கொண்டு வெளிப்படுத்தப்பட்டுள்ளது. ஐந்து அடி விட்டத்தையுடைய வட்டத்தில் போடப்பட்டுள்ள துவாரங்களால் குளத்து நீரைப் பார்வையிடக் கூடியதாக இருந்தது. உற்றுப் பார்க்கும்போது அந்நீரில் '*Ave Maria*' என்ற எழுத்துகளின் ஒளித்தெறிப்பைக் காணமுடிந்தது. குளத்துடன் மருவியதாக இருந்த மரம் இப்போது காணப்படவில்லை.

'நடுத்திட்டி' என்னுமிடத்தில் தயிர் விற்ற கால் ஊனமான சிறுவனுக்குக் காட்சி கொடுத்தாக அடையாளப்படுத்தப் பட்டிருந்த இடத்தில் சிற்றாலயம் அமைக்கப்பட்டு காட்சி கொடுத்த நிலை, சிலைகள் கொண்டு வெளிப்படுத்தப் பட்டுள்ளது.



ஆராதனை இல்லம் அமைதி வேணும் வகையில் புதிதாக அமைக்கப்பட்டுள்ளது. இம்மூன்று சிற்றாலயங்களும் கோதிக் கட்டடக்கலை அமைப்பிலேயே கட்டப்பட்டுள்ளன. ஆராதனை இல்லத்திற்கு அருகாமையில் மனிதனின் படைப்பை நினைவுட்டும் வகையில் விசாலமான 'ஏதேன் தோட்டம்' அமைக்கப்பட்டிருந்தது.

புதிதாக உணவு விடுதிகள், விற்பனை நிலையங்கள், தங்குமிடங்கள், ஹொட்டல்கள், மதுபான விற்பனை நிலையம் என நிரம்பி முற்றிலும் மாறுபாட்டைக் காணக்கூடியதாக இருந்ததுடன், பக்தியை சிதறடிக்கும் வகையில் ஆலயம் தவிர்ந்த இடங்கள் கேளிக்கை நிறைந்ததாகவே இருந்தன.

அங்கு நாம் நின்ற நாட்களில், தெலுங்கு மாநிலத்தைச் சேர்ந்த மக்கள், கார்மேல் அன்னை திருவிழாவை இங்கே கொண்டாடுவதற்காகத் திரளாக வந்திருந்தார்கள். இளம் பெண்களைத் தவிர ஏனைய பெண்கள் தார்ப்பாச்சிக் கட்டுவதைப்போல சேலையைக் கோலி, சுருக்கி பின்பக்கத்தால் சொருகியிருந்தார்கள். ஆண்களும் அவ்வாறே வேஷ்டியைக் கட்டியிருந்தார்கள். பெண்களுக்கு அவை அழகாக இருக்கவில்லை. என்ன செய்வது அது அவர்களது தேசிய உடையாக இருக்கலாம்.

இரண்டு இரவுகள் வேளாங்கண்ணியில் தங்கியிருந்து வழிபட்ட துடன் சுற்றாடல் இடங்களையும் பார்வையிட்டு, மறுநாள் காலை திருச்சி நோக்கி பயணித்த நாம், இடையிலுள்ள தஞ்சாவூரை அடைந்தோம்.

தஞ்சை மாவட்டம்

தஞ்சாவூர் (தஞ்சை)

இந்தியா தஞ்சாவூர் மாவட்டத்தின் தலைநகரமே 'தஞ்சாவூர்' அல்லது 'தஞ்சை' ஆகும். தஞ்சை என்பதற்கு, 'குளிர்ந்த வாய்க்கால்கள் நிறைந்த பகுதி' என்று பொருள்படும். தஞ்சாவூரை தமிழ்நாட்டின் நெற்களஞ்சியம் என்றும் அழைப்பர்.

'தஞ்சன்' என்னும் அரக்கன் இம்மக்களைத் துன்புறுத்தி வந்ததால், மக்களைக் காக்க சிவபெருமான் வதம்செய்த இடம் இதுவாகையால், தஞ்சாவூர் எனப் பெயர் வந்தது என்றும், எட்டாம் நூற்றாண்டில் இவ்வூர் உருவாக்கப்பட்டபோது இப்பகுதியினை வளமோடு ஆண்டுவந்த, 'தனஞ்சய முத்தரையரி'ன் பெயரையே இந்நகரம் பெயராகப் பெற்றிருந்ததாகவும், 'தனஞ்சய ஊர்' என்பது மருவி தஞ்சாவூர் என்று நிலைபெற்றது என்றும் கூறப்படுகிறது.

சோழர்களின் தலைநகராய் விளங்கிய இந்நகரம், உலகப் புகழ்பெற்ற தஞ்சைப் பெரியகோயில் (பெருவுடையார் கோயில்) மற்றும் சரஸ்வதி மஹால் நூலகத்தையும், உலகில் தமிழுக்கென்று அமைக்கப்பட்ட முதல் பல்கலைக் கழகத்தையும் கொண்டுள்ளது. தஞ்சாவூர் தலையாட்டிப் பொம்மை மிகவும் புகழ்பெற்றது.

கி.பி. 850ஆம் ஆண்டிலிருந்து 13ஆம் நூற்றாண்டுவரை சோழ மன்னர்களின் ஆளுகையின் கீழ் இருந்த தஞ்சாவூர், பின்னர் பாண்டியர் - நாயக்கர் - மராட்டியரின் ஆட்சிக்கு உட்படுத்தப்பட்டு 1856இல் ஆங்கிலேயர் வசமானது.

தஞ்சைப் பெரியகோயில்


இந்தியாவில் சோழர்கால கட்டட, சிற்பக் கலையின் மகத்துவத் தைப் பறைசாற்றி நிற்கும் 'தஞ்சைப் பெரியகோயிலை'ப் பார்வையிடச் சென்றோம். கடல் கடந்த நாட்கள் - 02 பயணத்தில் தஞ்சாவூர் பேருந்து தரிப்பிடத்தில் பேரூந்துக்காகக் காத்துநின்றபோது தஞ்சைப் பெரிய கோயிலின் அழகை அங்கிருந்து பார்வையிட்ட நான், இப்போது நேரடியாகவே கோயிலுக்குச் சென்றுள்ளேன்.

நெடிதுயர்ந்த முகப்புக் கோபுரத்துடன் வரவேற்கும் இக் கோயில், சோழ மன்னர்கள் காலத்தில் 'இராஜராஜேஸ்வரம்' மற்றும் 'பெரிய கோயில்'

என்றும், நாயக்க மன்னர்கள் காலத்தில் 'பெருவுடையார் கோயில்' என்றும், மராட்டிய மன்னர்கள் காலத்தில் 'பிரகதீஸ்வரர் கோயில்' என்றும் அழைக்கப் பட்டன. இப்போதும் இப்பெயர்கள் வழக்கிலுள்ளன.

சோழரின் ஆட்சி சிறப்புற்றிருந்த பொற்காலத்தில், கற்களே கிடைக்காத காவிரி சமவெளியில், 15 தளங்களைக்கொண்ட 60 மீற்றர் உயரமான இக்கோயில் 'முதலாம் இராஜராஜசோழன்' என்று பிரபல்யம் பெற்ற 'அருண் மொழிவர்மனா'ல் ஏழு ஆண்டுகளில் கட்டி முடிக்கப்பட்டு, 1010 ஆம் ஆண்டில் கும்பாபிஷேகம் நடத்தப்பட்டது. (2010இல் 1,000 ஆவது ஆண்டு நிறைவு 1,000 இந்திய நடனக் கலைஞர் களின் நாட்டிய நிகழ்வினால் நினைவு கூரப்பட்டது.)

வெளியே நின்று கோயில் வளாகத்தைப் பார்க்கையில் முன்பக்க பாதுகாப்பு அகழி போன்ற அகண்ட குழியும், கோட்டைச் சுவர்கள் போன்ற சுவர்களும், கொத்தளங்களும் பண்டைய கோட்டையை நினைவூட்டின. முன்பக்க குழிக்கு மேலாகப் போடப்பட்டுள்ள பாலத்தால் நடந்து வரவேற்புக் கோபுர வாயிலால் நுழைந்தால் வலது பக்கச் சுவரில் கோயில் சார்ந்த விபரங்கள், பண்டைய வரலாற்றுக் குறிப்புகள் எழுதப் பட்டு காட்சிப்படுத்தப்பட் டுள்ளது.


வரவேற்புக் கோபுரம்

அதைத் தாண்டியதும் யானை ஒன்று வரவேற்றது. அதன் தும்பிக்கையில் நாணயத் தைக் கொடுத்ததும் பெற்றுக் கொண்டு தும்பிக்கையை தலைமேல் வைத்து ஆசி வழங்கியது. சற்றுத் தூரத்தில் மத்தியில் தூண்களா லான சற்று உயரமான சதுர மண்டபம் இருந்தது. படிகளால் ஏறி அம்மண்டபத்தில் நுழைந்ததும் மண்டபத்தின் மத்தியில் நின்று பூசகர் விபூதி வழங்கினார்.

அதைக் கடந்து சென்றதும் முன் மண்டபத்துடன் கூடிய அர்த்த மண்டபம், மகாமண்டபத்துடன் நீட்சிபெற்று கோயில் பின்பக்க கோபுரத்தின் உள்ளேயுள்ள கர்ப்பக்கிரகம் வரை நீண்டுள்ளது. நாம் கோயிலின் உள்ளாகச் செல்லாமல் இடதுபக்க வெளிவீதியால் கோபுரம்வரை சென்றோம்.

06 அடி உயரமும், 54 அடி சுற்றளவும்கொண்ட ஆவுடையார், 23.6 அடி உயரங்கொண்ட லிங்கம் ஆகியவை தனித்தனி கல்லில் செதுக்கப்பட்டு, இணைக்கப்பட்டு, கருவறையில் வைக்கப்பட்டுள்ளன. கோயிலின் நீளம் 150 அடிகளாகும். எகிப்திய பிரமிட்டைப்போல் கூர்மையாக அமைந்த 216அடி உயரமுள்ள கோபுரத்தின் சிகரத்தில் 81.28 தொன் நிறையையுடைய தனிக்

கல்லினாலான 'விமானம்' வைக்கப்பட்டுள்ளது. இது பலரையும்போல எம்மையும் ஆச்சரியத்துக்குள்ளாக்கியது. இக்கல் 6.44 கி.மீ. நீளமான சாய்தளச் சாரத்தின் மூலம் கோபுரத்தின் உயரம்வரை உயர்த்தப்பட்டதாகவும் சாரம் ஆரம்பித்த இடம் 'சாரவூர்' என்று அழைக்கப்படுவதாகவும் அறியப்படு கின்றது. இந்தத் தகவலை ஏற்கெனவே கலைஞர் கருணாநிதியின் நூலொன் றில் வாசித்திருக்கிறேன். இவ்வளவு உயரத்திற்கு உயர்ந்து நிற்கும் கோபுர நிழல் தரையில் விழாத வகையில் அமைத்துள்ளமை பலரையும் வியப்புக் குள்ளாக்குகிறது.

இன்றுவரை இந்தியாவின் மிகப்பெரிய கோயிலாகக் கருதப்படும் தஞ்சைப் பெரியகோயிலின் உட்புறம் வர்ணச் சித்திரங்களால் தீட்டப்பட்டு அழகுறக் காட்சிதருகிறது. 12 அடி உயரமும், 19.6 அடி நீளமும், 8.6 அடி அகலமும், 20 தொன் நிறையையுமுடைய ஒரே கல்லாலான திருநந்தி வைக்கப் பட்டுள்ளது.

சுற்றிவர மதில் கட்டப்பட்டுள்ளது கிழக்குப்பக்க மதிலில் ஒரு கோபுரம் இருக்கிறது. மதிலை யொட்டி உட்புறமாக பல தூண்களுடைய நீண்டதொரு மண்டபம் செல்கிறது. இம் மண்டபம் 35 உட்கோயில் களை இணைக்கின்றது.



கோபுரத்தின் வெளிப் பக்கம் சிற்பங்களால் நிறைந் துள்ளன. எழுத்துக்களாலும் பொறிக்கப்பட்டுள்ளன. அவற்றை எம்மால் வாசிக்க, கிரகிக்க முடியவில்லை. கீழ்த் தளத்திலிருந்து சிகரம் வரை குடாவும், மாடமுமாக மாறி மாறி காணப்படுகின்றன.

1010ஆம் ஆண்டுக்கு முன்னர் பாரிய கற்கள்கொண்டு பிரமாண் டமான இக்கட்டுமானக் கோயில் கட்டிமுடிக்கப்பட்டமையை நினைத்துப் பார்த்தபோது தேகம் சிலிர்த்தது. நடிகர் திலகம் சிவாஜி கணேசன் நடித்த 'இராஜராஜசோழன்' திரைப்படத்தில் காண்பிக்கப்பட்ட கோயில் கட்டு மானப்பணிக் காட்சிகளை நினைத்துக்கொண்டேன்.

இயற்கை அனர்த்தங்களால் கோபுரம் அமைக்கப்பட்டுள்ள பெரிய கற்களில் தரையுடன் இணைந்த கற்கள் சிலவற்றில் சேதங்கள் ஏற்பட் டுள்ளன. சிரமத்தின் மத்தியில் அவை சீரமைப்பு நடைபெற்றன.

வெளி வீதிக்கு அப்பாலுள்ள புற்தரையில் அமர்ந்து ஓய்வெடுத்துக் கொண்ட நாம், அதிசயத்தைப் பார்த்த மனநிறைவில், மறக்கமுடியா நினைவுகளுடன் வெளியேறி, கோயிலுக்கு அண்மையிலிருந்த உணவகத்தில்

மதிய உணவை அருந்திவிட்டு, தஞ்சாவூரிலிருந்து 35 கி.மீ. தொலைவிலுள்ள பூண்டிப் புதுமைமாதா தேவாலயத்தை நோக்கிப் பயணித்தோம்.

பூண்டி புதுமை மாதா தேவாலயம்

திருக்காட்டுப்பள்ளிக்கு அருகேயுள்ள பூண்டி என்னும் ஊரில், காவேரி ஆறுக்கும் கொள்ளிடம் ஆறுக்கும் நடுவில் அமைந்துள்ளது 'பூண்டிப் புதுமைமாதா தேவாலயம்'.

இத்தேவாலயம், இத்தாலி நாட்டைச் சேர்ந்த, 18ஆம் நூற்றாண்டில் இந்தியாவில் வாழ்ந்த, கிறிஸ்தவ போதகரான 'வீரமாமுனிவர்' அடிகளாரின் முயற்சியால் கட்டப்பட்டது. இவரது இயற்பெயர் 'கொன்ஸ்ரன்ரைன் யோசேப் பெஸ்கி' என்பதாகும். இவர் இந்தியாவுக்கு வருகைதந்த பின்னர் அங்கே தமிழைக் கற்று இலக்கண வழுவின்றி 'தேம்பாவணி' என்னும் நூலை மரபுக் கவிதைகளாய் எழுதித் தமிழ்ப்பணி ஆற்றியமை குறிப்பிடத்தக்கது



இக்கோயில் கட்டப்பட்ட சமயத்தில் 'மேரி குயின் இமாக்குலற் ஆலயம்' *(Church of Mary Queen of Immaculate)* என்றே அழைக்கப்பட்டு வந்தது. 1955இல் இவ்வாலயத்தில் பங்குத் தந்தையாகப் பணியாற்றிய அருள் தந்தை 'லூர்து சேவியர்' அடிகளார், இவ்வாலயத்தின் உள் கட்டமைப்புகள் பாதிக்காமல் கூரையை மட்டும் சீரமைக்க எண்ணி, பொறியலாளரிடம் ஆலோசனை கேட்டார். இதற்கான செலவுக்குரிய பணத்தை தன்னால் ஏற்பாடு செய்ய முடியாது என்று எண்ணிய அடிகளார். 'இமாக்குலற்' அன்னையிடம் தன் வேண்டுதலை முன்வைத்து பிரார்த்தனை செய்தார்.

அன்றிரவு பெய்த மழையில் ஆலயத்தின் கூரை மட்டும் இடிந்து விழுந்தது. ஆலயத்தினுள்ளே எந்தப் பொருளும் சேதமடையவில்லை. இதைத் தொடர்ந்து சேகரிக்கப்பட்ட பணத்தைக்கொண்டு புதிய வடிவில் தற்போது உள்ள ஆலயம் கட்டிமுடிக்கப்பட்டது. இதன் பின்னரே 'பூண்டி புதுமை மாதா' ஆலயம் என அழைக்கப்பட்டது. நாளடைவில் திருத்தலம் என்னும் தகுதியையும் பெற்றது.

'லூர்து சேவியர்' அடிகளார் இறந்த பின்னர் அவரது உடல் ஆலயத்தினுள்ளே அடக்கம் செய்யப்பட்டது. ஆலயம் மற்றும் அடிகளார் பற்றிய விபரங்களை 'பூண்டிப் புதுமை மாதா' என்னும் திரைப்படம் மூலம்

பலரும் அறிந்திருப்பார்கள்.

இத்திருத்தலத்தின் பலிபீடத்தில் இயேசு மரணித்த சிலுவையின் சிறு பகுதி வைக்கப்பட்டுள்ளது. அதனை முத்தி செய்யக்கூடியதாக இருந்தது. தொடர்ந்து திருத்தல வளாகத்தில் இருந்த அருங்காட்சியத்தைப் பார்வையிட்டோம். அங்கே, வேண்டுதல் நிறைவேறிய பக்தர்களின் சாட்சிகளாக ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆவணங்களும் தங்க ஆபரணங்களும் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்தன.

வருகைதரும் பயணிகளின் நலன்கருதி ஆலய நிர்வாகத்தினால் குறைந்த விலையில் தங்குமிட வசதியும், உணவகமும் நடத்தப்படுகிறது. 1வது மற்றும் 3வது சனிக்கிழமைகளில் மதிய உணவு இலவசமாக வழங்கப்படுகிறது. 24 மணித்தியாலமும் இலவச தண்ணீர் வசதியும், கழிப்பிட வசதியும் செய்யப்பட்டுள்ளது. விசாலமான வாகனத் தரிப்பிடமும் இருந்தது.

பேராலயத்தின் நுழைவு வாயிலின் இருபுறமிருந்தும் மாடிக்குச் சென்று பிரார்த்திக்கும் வகையில் ஆராதனைகூடம் அமைக்கப்பட்டிருந்தது. பக்தர்களுக்கு இடையூறு சிறிதும் இல்லாத வகையில் அமைதி நிலவியது.

பயணிகளுக்கு புத்துணர்ச்சியை ஏற்படுத்தும் வண்ணம் 'பூண்டி புதுமை மாதா' பூங்கா அமைக்கப்பட்டுள்ளது. குழந்தைகளுக்கான விளையாட்டுக் கருவிகளுடன் அமையப்பெற்றுள்ள பூங்கா நடுவே பூண்டி புதுமை மாதாவின் சிலையும் அமைந்துள்ளது. அரை மணித்தியாலத்துக்கு மேலாக அங்கே அமர்ந்திருந்தோம். புத்துணர்ச்சி ஏற்பட_வே செய்தது.

மொத்ததில் கேளிக்கை ஆடம்பரமற்ற வகையில் ஆலய வளாகம் காணப்பட்டது. அங்கிருந்து புறப்பட_வே விருப்பற்றிருந்த போதும், இரவு திருச்சியில் தங்கும் ஏற்பாட்டுட_னேயே வந்திருந்தோம். அதனால் புறப்பட வேண்டியதாக இருந்தது.

பூண்டியிலிருந்து திருச்சி நோக்கிப் புறப்பட்ட நாம், கரிகாலன் கட்டிவைத்த கல்லணையைப் பார்வையிட்டுச் செல்லும் நோக்கில் காவிரி ஆற்றுப் பாதையை மருவியதாக இருந்த வீதியால் சென்றோம். காவேரி ஆறு நீரின்றி உலர்ந்து வெண்மணலாகக் காணப்பட்டது.

கல்லணை

திருச்சியில் 'அகண்ட காவேரி' எனக் கூறப்படும் 'காவேரி முக்கொம்பு'வில் உள்ள மேலணையில் காவேரி ஆறு, காவேரி - கொள்ளிடம் என இரண்டாகப் பிரிகிறது. அவற்றில் காவேரி ஆற்றின் கிளை வந்தடையும் இடத்திலேயே இரண்டாம் நூற்றாண்டில் 'கரிகாலன்' (கரிகால சோழன்) என்ற சோழ மன்னனால் கட்டப்பட்ட கல்லணை இருக்கின்றது.

தற்போதும் பாவனையிலுள்ள மிகப் பழமையான கல்லணை இது என அறியப்படுகிறது. காவேரி ஆற்றில் அடிக்கடி வெள்ளம் வருவதால் மக்கள் படும் துயரைப் போக்குவதற்கும், வயல் நிலங்களை வெள்ளத்தின்

அழிவிலிருந்து காப்பாற்றி, அந்நீரை திசைதிருப்பி நீர்ப்பாசனத்திற்குப் பயன் படுத்தும் நோக்கோடும் இக்கல்லணை கட்டப்பட்டது. இதுவே உலகின் மிகப் பழமையான நீர்ப்பாசனத் திட்டம் என்றும் கூறப்படுகிறது. வேகமாக ஓடுகின்ற ஆற்றின் மணலில் அடித்தளம் அமைத்து, கல்லணையைக் கட்டி முடித்த பழந்தமிழரின் தொழில் நுட்பம் இன்றுவரை வியத்தகு சாதனையாகப் புகழப்படுகிறது.

கல்லணையின் நீளம் 1,080 அடி, அகலம் 66 அடி, உயரம் 18 அடி. இது நெளிந்து வளைந்த அமைப்புடன் காணப்படுகிறது. கல்லும், களி மண்ணும் மட்டுமே பயன்படுத்திக் கட்டப்பட்டதாக அறியப்படும் இக்கல்லணை இத்தனை ஆண்டுகளாக பாய்ந்து வரும் காவேரி வெள்ளத்தைத் தடுத்து நிறுத்தி வருவது ஓர் அதிசயமே.

கல்லணைக்கு அமைக்கப்பட்டுள்ள அடித்தளத்தை பல ஆண்டுகளாக ஆராய்ந்து, பழந் தமிழரின் அணைகட்டும் திறன் மற்றும் பாசன மேலாண்மையை, 1829இல் உலகுக்கு எடுத்துக் கூறியவர் 'ஆர்தர் காட்டன்' என்ற ஆங்கிலப் பொறியியலாளரேயார். இவர் 'இந்திய நீர்ப்பாசனத்தின் தந்தை' என அறியப்படுகிறார்.



இக்கல்லணை அமைக்கப்பட்ட விதம் பற்றி அறிய வருவதாவது: நாம் அலை மோதுகின்ற கடல் நீரில் அல்லது ஓடுகின்ற ஆற்று நீரில் நின்றால், நீர் எமது கால்களை அணைத்துச் செல்லும்போது பாதங்களின் கீழ் மணல் அரிப்பு ஏற்பட்டு, கால் மணலில் புதைவதை உணரலாம். இதைத்தான் சூத்திரமாக மாற்றினார்கள் அவர்கள்.

காவேரி ஆற்றின் மீது பொருத்தமான இடங்களில் பெரிய பெரிய பாறைக் கற்களைக் கொண்டு வந்து போட்டனர். அப்பாறைகள் நீரின் அரிப்புக் காரணமாக மெல்ல மெல்ல மண்ணுக்குள் புகலாயின. மேலும் இவ்வாறான பாறைகளைக் கொண்டுவந்து, தண்ணீரில் கரையாத ஒருவகை ஒட்டுக் களிமண்ணை (எடுத்தோ - தயாரித்தோ) பாறையின் மேல் பூசி, அதனை முன்னைய பாறையின்மேல் வைத்துள்ளார்கள். அவை ஒட்டிக் கொண்டன. இப்படியே பாறைமேல் பாறையை ஒட்டி வேகமாக ஓடிய காவேரியைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளனர்.

கல்லணைக்கு அண்மையில் உள்ள சிறியதொரு பூங்காவில் 'கரிகால சோழனி'ன் முழு உருவச்சிலையும், 'ஆர்தர் காட்டனி'ன் உருவத்தின் மேற்பகுதிச் சிலையும் வைக்கப்பட்டு விபரங்கள் குறிக்கப்பட்டிருந்தன.



கரிகாலன் சிலை

பூங்காவைச் சுற்றிச் சிறிய பெட்டிக் கடைகள் இருந்தன. அந்நேர வெயிலுக்கு வெள்ள ரிக்காய் பிஞ்சு வாங்கி சாப்பிட இதமாக இருந்தது.

காவேரி ஆறு வற்றி யுள்ளதன் காரணமாக கல்ல ணைப் பகுதியில் நீர் அதிகம் காணப்படவில்லை. அதனால், மேலணையிலிருந்து கீழிறங்கி ஆற்று மணில் மற்றும் குறை வாகக் கிடந்த நீரிலும் நடக் கவும் பார்க்கவும் கூடியதாக இருந்தது. பழந்தமிழரின் சாதனையைப் பார்த்து, அறிந்த மகிழ்வோடு திருச்சி நோக்கிய பயணத்தை ஆரம்பித்த நாம், விரைவாகவே திருச்சியை அடைந்தோம்.

திருச்சி 'உச்சிப் பிள்ளையார்' கோயிலின் மலையடிவாரத்திலுள்ள 'பாண்டி பஜாரி'ல், சன நெருக்கடியால் பெரும் சிரமத்தின் மத்தியில் வாகனத்தை நிறுத்தினோம். நான் முன்னர் ஒருதடவை உச்சிப்பிள்ளை யாரைத் தரிசிக்கச் சென்றுவந்ததால், எம்முடன் கூட வந்தவர்களில் சிலர் கோயிலுக்கு மலையேறிச் செல்ல, ஏனையோர் பொருள் கொள்வனவில் ஈடுபட்டனர். நான் அப்பகுதியிலிருந்த புத்தக விற்பனை நிலையத்துக்குச் சென்று சில புத்தகங்களைக் கொள்வனவு செய்தேன். 15% கழிவு தந்தனர்.

அன்றைய இரவை திருச்சியிலுள்ள ஹொட்டலில் கழித்து, மறுநாள் காலை புறப்பட்டு 'ஸ்ரீ ரங்கநாதசுவாமி கோயிலை'த் தரிசிக்கச் சென்றோம். 'கடல் கடந்த நாட்கள் - 02' பயணத்தின்போது மொட்டையாகக் காணப் பட்ட தெற்குப்பக்க 'இராஜகோபுரம்' 1987இல் 13 நிலைகள் 13 கலசங்களுடன் 236 அடி உயரத்தில கட்டி முடிக்கப்பட்டிருந்தது. விரைவாக கோயிலைப் பார்வையிட்டுப் புறப்பட்ட நாம், மதியம் 'மதுரை'யை அடைந்தோம். அங்கே மதிய உணவை அருந்தி, 'மதுரை மீனாட்சி அம்மனை'த் தரிசிக்கப் புறப்பட்டோம்.

தெற்கு பக்கமுள்ள பிரதான கோபுர வாசலால் உள்நுழைய முனை கையில், அங்கு கோயில் பணியாளர் எம்மை மறித்து, ஆண்கள் வேஷ்டியும், பெண்கள் கலாசார உடையும் அணிந்தே உட்செல்ல வேண்டுமென தெரியப் படுத்தினர். அங்கே வேஷ்டிகள் விற்பனைக்கும் வாடகைக்கும் இருந்தன. சில ஆண்கள் வேஷ்டியை கொள்வனவுசெய்து அணிந்துகொண்டு உட்செல்ல, பெண்கள் சிலர் கூடவே சென்றனர். ஏனையோர் விற்பனை நிலையங்களைப் பார்வையிட்டனர். 1979ஆம் ஆண்டு எவ்வித கட்டுப்பாடுமில்லாமல் பல தடவைகள் சென்றுவந்ததை நினைத்துக்கொண்டேன். (திருச்சி, மதுரை

பற்றிய, மேற்குறித்த கோயில்கள் பற்றிய விபரங்களை 'கடல் கடந்த நாட்கள் 02' இல் வாசித்திருப்பீர்கள்.)

அனைவரும் ஒன்று சேர்ந்ததும் 'திருநெல்வேலி' நோக்கிப் புறப் பட்டோம். எழில்மிகு காட்சிகளை இரசனையுடன் பார்த்தவாறு எமது பயணம் தொடர்ந்தது. திருநெல்வேலியை நெருங்க, வயல்கள் - புற்தரைகளி லெல்லாம் காற்றாடி மூலம் மின்சாரம் பெறக்கூடிய 'காற்று ஆலை'கள் (Wind Mill) பல காணப்பட்டன. வெள்ளை நிறங்கொண்ட பாரிய காற்றாடிகள் பிரமாண்டமானதும் உயரமானதுமான இரும்புச் சட்டங்களில் பொருத்தப் பட்டு நிரைகளாக, திரளாக, அழகாகக் காட்சிதந்தன.

இந்தக் காற்று ஆலை ஒன்று அல்லது சில குறித்த ஒருவருக்குச் சொந்த மானதாக இருக்கும். அவற்றிலிருந்து பெறப்படும் மின்சாரத்தை அரச நிறுவனம் நியாய விலைக்குப் பெற்றுக்கொள்ளும். காற்றாடி அமைத்து பராமரிக்க விருப்பமுள்ளவர்கள் விண்ணப்பிக்கும் பட்சத்தில் அரசாங்கம் மானியம் வழங்கி உரிமையாளராவதற்கு ஊக்குவிக்கின்றது.

அரசிடம் பெறப்படும் மானியத்துடன் சிறிய தொகையை மேலதி கமாக முதலையிட்டு, காற்றாடி பொருத்தும் நிறுவனத்தின் மூலம் காற்றாடி யைப் பொருத்துவதும், இடையிடையே பார்வையிட்டுக் கொள்வதும் மட்டுமே உரிமையாளரின் வேலையாகும்.

அரச நிறுவனம் 'கேபிள்' மூலம் தனித்தனி இணைப்பை ஏற்படுத்தி மின்சாரத்தைப் பெற்றுக்கொண்டு, தமது தேவைக்கான விநியோகத்தை மேற்கொள்ளும். பெறப்படும் மின்சாரத்திற்கான பெறுமதி ஒவ்வொரு மாதமும் உரியவருக்கு வழங்கப்படும். ஒவ்வொரு காற்று ஆலையிலிருந்தும் பெறப்படும் மின்சார அளவை உரியவர் சரிபார்த்துக்கொள்ள 'மானி' மூலம் வசதி செய்யப்பட்டுள்ளது. சுயதொழிலாக பலரும் இதனை விரும்பிச் செய்கிறார்கள்.

இந்தப் பகுதியில் 'காற்றாடி மலை' என்ற இடமுண்டு. பிரதான வீதியிலிருந்து கணிசமான தூரம் உள்சென்றே பார்க்கமுடியும். மதுரையிலி ருந்து புறப்பட்ட சிறிது நேரத்தால் வாகனத்தின் ரயரில் ஆணி குத்தி காற்று வெளியேறியது. அதைச் சீர்செய்து புறப்பட இரண்டு மணித்தியாலத்துக்கும் மேலாக செலவிட நேரிட்டது. அதனால் நேரமின்மையைக் கருத்தில்கொண்டு, வீதியோரத்திலிருந்து சற்று அப்பாலிருந்த நுழைவுப் பாதையில் காணப்பட்ட முகப்பில் சிறிதுநேரம் நின்று, காற்றாடி மலை பற்றிய தகவலையும் - மலையின் மாதிரித் தோற்றத்தையும் பார்வையிட்டோமே தவிர மலைக்குச் செல்ல வில்லை. ஆனாலும், காற்றாடி மலையின் வரலாற்றை நான் நன்கு அறிந்திருக்கிறேன்.

'அராலி'யைச் சேர்ந்த புலவர் 'ஸ்ரீ முத்துக்குமாரு' அவர்களால், 1827இல் பாடப்பெற்று 1926ஆம் ஆண்டு அச்சாக்கம் பெற்ற 'தேவசகாயம் பிள்ளை' நாட்டுக்கூத்தில் சொல்லப்படும் தேவசகாயம்பிள்ளை கொலை

செய்யப்பட்ட இடமே 'காற்றாடி மலை'.

ஊரில் அடிக்கடி மேடையேறும் இக்கூத்தில் காற்றாடி மலை அமைத்து, அம்மலையில் பாடியவாறு ஏறிச்செல்லும் தேவசகாயம் பிள்ளையை கொலைசெய்யும் இறுதிக் காட்சியை உணர்வுபூர்வமாக இரசிக்காதார் இருக்கமாட்டாரென்றே சொல்லலாம். கூத்தை பலதடவைகள் பார்த்ததன் மூலம் காற்றாடி மலைபற்றி அறியக்கூடியதாக இருந்தது.

இக்கூத்தின் மூலக்கதை உண்மை நிகழ்வு என்றே கூறப்படுகிறது. 1752 தை மாதம் 14ஆம் திகதி திருவாங்கூர் மகாராசாவினால் தேவசகாயம்பிள்ளை கொலை செய்யப்பட்டதாகவும், 'கோட்டாறு' 'தூய பிரான்சீஸ் சவேரியார்' ஆலயத்தில் அடக்கம் செய்யப்பட்டதாகவும் வரலாறு கூறுவதாக, 1926ஆம் ஆண்டு நூல் பதிப்பின் முகவுரையில் இந்தத் தகவல் காணப்படுகிறது.

இரவு தாமதமாகவே திருநெல்வேலியை அடைந்தோம். அங்கு 'ஹொட்டலி'ல் தங்கியிருந்து, காலையில் நண்பனின் வீட்டில காலை உணவை முடித்துக்கொண்டு கன்னியாகுமரிக்கான பயணத்திற்கு ஆயத்தமானோம்.

கன்னியாகுமரி மாவட்டம்

கன்னியாகுமரி


இந்தியா - தமிழ்நாட்டில் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ளதும், வங்காள விரிகுடா - அரபிக்கடல் - இந்திய பெருங்கடல் ஆகிய முக்கடலும் முத்தமிட்டு பிரவாகித்துக்கொண்டிருக்கின்றதும், இந்தியாவின் தென் கோடியில் அமைந்திருக்கின்றதுமான புகழ்பெற்ற சுற்றுலாத் தலமே 'கன்னியாகுமரி'.

சிவபெருமானை அடைவதற்கு கன்னியாக பார்வதி தவம் செய்த முனையின் காரணமாக 'கன்னியாகுமரி' என வழங்கியது என்றும், குமரிக் கண்டம் அழிவுற்ற பிறகு அங்கிருந்து வந்த பெண் தன் நாயகனுக்காகக் காத்திருந்த இடம் என்ற பொருளிலும் இப்பெயர் வந்தது என்றும் கூறப்படுகிறது.

இவ்வூரில் காலையில் சூரியனின் உதயத்தையும் மாலையில் மறைவையும் தெளிவாக கண்டுகளிக்கலாம். சித்திரா பௌர்ணமி அன்று சூரியன் மறைவதையும் சந்திரன் பெரிய பந்துபோல் தோன்றுவதையும் இங்கேதான் காணமுடியும். இவற்றைக் காண பலரும் திருண்டு வருவார் களாம். சிப்பியால் செய்யப்பட்ட அலங்காரப் பொருட்கள் ஏராளமாக விற்பனை செய்யப்படுகிறது. குறைந்த நேரத்தில் வெள்ளைச் சங்கில் எழுத்துக் களைப் பதித்துத் தருதலும் இடம் பெறுகிறது.

கடற்கரை அருகிலே 'குமரியம்மன் கோவில்' இருந்தது. அழகிய சிறிய கோயிலது. வெகு நேர்த்தியாக, துப்பரவாக, அலங்காரமாக கோவிலை

வைத்திருந்தார்கள். பாவாடை அணிந்த சிறுபெண்ணாக குமரித் தெய்வம் காணப் பட்டாள். அழகுக் கன்னியாக விளங்கிய அம்மனின் கிரீடத் தில் பிறைச் சந்திரனின் வடிவம் பொறிக்கப்பட்டு இருந்தது.



'மகாத்மா காந்தி அடிகளி'ன் அஸ்தி கரைக்கப் பட்டதும் கன்னியாகுமரி யிலேதான். வடஇந்திய பாணியில் கட்டப் பட்ட மகாத்மா காந்தி மண்டபம், காமராஜரினது நினைவு மண்டபம் இங்கே உள்ளன. உலகப் பிரசித்தி பெற்ற விவேகானந்தா பாறையில் திருப்பாத மண்டபம் அல்லது அம்மன் பாதக் கோயில், விவேகானந்தர் நினைவு மண்டபம் மற்றும் உலகில் உயரமான திருவள்ளுவர் சிலை போன்றவை தினந்தினம் பல்லாயிரம் உல்லாசப் பயணிகள் பார்வையிட வருகைதரும் இடங்களாகும்.


நீல வானத்தை பின்னணியாகக்கொண்ட விவேகானந்தா பாறையில் கம்பீரமாக எழுந்து நின்ற கட்டடத்தின் அழகுக் கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. சுற்றிவர இருந்த பாறையில் கடல் அலைகள் முட்டி மோதி வெண் நுரையைக் கொப்பளித்தன. பின்னர் அலை திரும்பிச் செல்லும் அழகுதான் என்ன! முக்கடலினதும் பேரிரைச்சலின் மத்தியிலும் அமைதியின் இருப் பிடமாக காட்சியளித்தது அப் பாறை.

கடற்கரையிலிருந்து விவேகானந்தா பாறைக்குச் சென்றுவர 'லோஞ்சி' போக்குவரத்து நடைபெறுகிறது. பாறையில் ஒரு லோஞ்சி மட்டுமே தரித்துநிற்க வசதி செய்யப்பட்டுள்ளதால் பயணிகளை ஏற்றிச் சென்ற லோஞ்சி அங்கிருந்து அகன்ற பின்னரே அடுத்த லோஞ்சி புறப்பட முடியும். இதனால் பயணிகள் பலமணிநேரம் காத்திருக்க வேண்டிய நிலை.

நாங்கள் சென்றது புதன்கிழமை என்பதால் வார இறுதி நாட்கள் போல கூட்டம் இருக்கவில்லை. இருந்தபோதும் வரிசையாகச் சென்று ஒரு மணித்தியாலம் காத்திருந்தே லோஞ்சியிலேற முடிந்தது. பயணிகளுக்கு உயிர் பாதுகாப்பு அங்கி வழங்கியதும் லோஞ்சிபுறப்பட்டது. மூன்று கடலும் சந்திக்கும் இடமென்பதை கடலின் வீரியம் உணர்த்தியது.

திருப்பாத மண்டபம்

விவேகானந்தா பாறையில் லோஞ்சி தரித்ததும் பாறைமீது ஏறிக் கொண்டோம். அங்கிருந்து விவேகானந்தரின் நினைவு மண்டபத்திற்கு எதிரிலே இந்து சமயத்தவர்களால் 'அம்மன் பாதம்' எனக் கருதப்படும் பாறையிலுள்ள பாதப் பதிவுத் தடம் கண்ணாடியில் பார்வைக்குத் தெரியும்படி



பாதுகாக்கப்பட்டுள்ளது. பாதங்களில் மலர்கள் வைக்கப் பட்டு இருந்தன. இப்பாதப் பதிவுத் தடத்தைச் சுற்றி கோயில் போன்ற அமைப்பில் 'திருப்பாத மண்டபம்' அமைக் கப்பட்டுள்ளது. 'அம்மன் பாதக் கோயில்' என்று அழைத் தனர்.

இப்பாறையில் சிவனை மணம் முடிப்பதற்காக 'பார்வதி அம்மன்' ஒற்றைக் காலில் நின்று தவமிருந்தார் எனக் கூறப்படுகிறது. அதனால் ஒற்றைக் காலில் நின்ற அந்தக் காலின் ஐந்து விரல்களின் தடம் இப்பாறையில் பதிந்துள்ளதாக நம்புகின்றனர் மக்கள். இந்தத் தொன்ம நம்பிக்கையில் இப்பாறைக்கு முதலில் 'ஸ்ரீ பாதப் பாறை' என்றே பெயர் இருந்தது என அறியப்படுகிறது.

விவேகானந்தரின் நினைவு மண்டபத்திற்கு வழி காட்டுவதற்கு தரைப்பாறையில் அம்புக் குறியீடுகள் போடப்பட்டிருந்தன. அதன் வழியே செல்லும் பயணிகள் தவறவிடாமல் அங்குள்ளவற்றைப் பார்க்க முடியும்.

விவேகானந்தர் நினைவு மண்டபம்

1892 மார்கழி 25ஆம் திகதி கன்னியாகுமரி வந்த 'சுவாமி விவேகானந்தர்', கடலுக்குள் நீந்திச்சென்று, 'குமரிமுனை பாறை' மற்றும் 'ஸ்ரீ பாதப் பாறை' என அழைக்கப்பட்ட பாறையில் மூன்று நாட்கள் தீவிர தியானம் செய்தார். இந்தப் பாறையில்தான் அவருக்கு ஞானஒளி கிடைத்தது. அதன் பின்னரே நாட்டுக்குச் சேவைசெய்ய அவர் தன்னை அர்ப்பணிக்கவும் வேதாந் தங்களை உலகம் முழுவதும் பரப்பவும் முடிவுசெய்ததாகக் கூறப்படுகிறது.

09.09.1893இல் சிக்காக்கோ நகரில் நடந்த சர்வ சமய மகாநாட்டில் பங்குபற்றி, இந்து சமயத்தின் மகிமை பற்றி சொற்பொழிவாற்றி பிறந்த நாட்டிற்குப் பெருமை ஈட்டிக் கொடுத்தார். இந்த மகாநாட்டில் கலந்து கொண்ட பின்னரே விவேகானந்தரின் வாழ்க்கையில் ஒரு புதிய திருப்பம் ஏற்பட்டது என்பர்.

இவரது நினைவாக கடற்கரையிலிருந்து கிட்டத்தட்ட 400 மீ. தொலைவிலுள்ள இரட்டைப் பாறையில் அழகுற அமைக்கப்பட்டு 1970ஆம் ஆண்டு கட்டப்பட்டதே 'விவேகானந்தர் மண்டபம்'. அதன் பின்னர் இப் பாறைக்கு 'விவேகானந்தா பாறை' எனப் பெயர்வந்தது. நீலம் மற்றும் சிவப்பு 'கிறனைற்' (Granite) கற்களால் கட்டப்பட்ட அழகிய கலைநயத்துடன் கூடிய விவேகானந்தர் நினைவு மண்டபம் 17 மீ. உயரத்தில் 06 ஏக்கர் பரப்பளவில் அமைந்திருக்கிறது.



விவேகானந்தர் நினைவு மண்டபத்துள் நுழையும்போதே என்னை அறியாமல் மனதில் ஒரு அமைதி குடிகொண்டுவிட்டது. ஊசி விழுந்தாலும் கேட்குமளவிற்கு அமைதி நிலவியது அங்கே. பிரமாண்டமான இம்மண்டபத்தில் முன் நுழைவாயிலுடன் கூடிய முகமண்டபமும் சிற்ப வேலைப்பாடுகள் செய்யப்பட்ட தூண்களும் சலவைக்கல் பதித்த தரையும் கண்ணைக் கவர்ந்தன.

உள்ளே இரண்டரை மீற்றர் உயரத்தில் சுவாமி விவேகானந்தரின் முழு உருவ வெண்கலச்சிலை, நம் முன்னே அவர் உயிருடன் நிற்பது போன்ற முக எழிலுடன் காணப்பட்டது. அதனை நேருக்கு நேராக பார்த்தபோது கண்களை மூடிக்கொண்டு பிரார்த்திக்க வேண்டும்போல் தோன்றியது. சுற்றுலாப் பயணிகள் தியானம் செய்யப் பயன்படுத்தப்படும் மண்டபம் கீழ்ப்பக்கம் அமைக்கப் பட்டுள்ளது இத்தியான மண்டபத்தில் 'பந்திப் பாய்' போல நீளமாய் விரிக்கப் பட்டிருந்த பாயில் பலர் உட்கார்ந்து கண்களை மூடிக் கொண்டு தியானத்தில் ஈடுபட்டிருந்தனர்.

மண்டபத்தில் ஓர் இடத்தில் இரண்டு அறைகள் ஒதுக்கி இராம கிருஷ்ணர் - அவரது துணைவியார் சாரதாதேவியின் சிலைகள் வைக்கப் பட்டிருந்தன

தியான மண்டபத்தின் வெளியே நின்று கடலைப் பார்க்க அதன் அழகு மனதைக் கொள்ளையடித்தது. அலை வந்து அடிக்கும் ஒவ்வொரு அடுக்கிலும் பல வர்ணங்கள் தெரிந்தது. 26.12.2004இல் நிகழ்ந்த சுனாமி அனத்தர்த்தின்போது மண்டபத்தின் உள்ளே இருந்தவர்களைத் தவிர வெளிப் பிரவாகத்தில் இருந்தோரை அலைவந்து இழுத்துச்சென்று ஏராளமானோர் இறந்து விட்டதாக அறியப்படுகிறது.

வெளித் தரையில் சூரிய உதயம், அஸ்தமனம் மற்றும் வெவ்வேறு நேரங்களைக் காட்டும் கருவி ஒன்று தரையிலே வடிவமைக்கப்பட்டிருந்தது. விவேகானந்தர் தொடர்புடைய பல மொழிகளிலான புத்தகங்கள், படங்கள், விவேகானந்தர் படத்துடனான பல்வேறு கைவினைப் பொருட்களை கொள்வனவு செய்யக்கூடிய விற்பனை நிலையங்களும் இருந்தன.

வள்ளுவர் சிலை

விவேகானந்தர் மண்டபம் உள்ள பாறைக்குச் சற்றுத் தள்ளி தனிப்பாறையில் 'வள்ளுவர் சிலை' இருக்கின்றது. லோஞ்சியில் ஏறி அங்கு

சென்றோம். ஒழுங்கற்ற பாறையாக இருப்பதால் இப்பாறையில் லோஞ்சி தரித்து நிற்கக்கூடிய வசதி போதுமானதாக இருக்கவில்லை. காற்று வேகமாக இருப்பின் லோஞ்சி தரிக்க முடியாது என்றே தோன்றியது.

வள்ளுவரின் புகழை பறைசாற்ற திருக்குறள் ஒன்றே போதுமானது. வள்ளுவரை, திருக்குறளை அறியாத நாடுகள் உலகில் இல்லையென்றே கூறலாம். அதனைப் பொலிவூட்டுவதுபோல் கடலின் நடுவே தனிப் பாறையில் 38 அடி உயரப் பீடத்தின் மீது 95 அடி உயரச் சிலையென 133 அடி உயரத்தில் வள்ளுவர் சிலை அமைந்துள்ளது.

இது திருக்குறளில் 133 அதிகாரங்களைக் குறிப்பதாக அமைக்கப் பட்டுள்ளது. அதேபோல் அதிகாரத்துக்கு 10 குறட் பாக்கள் யாக்கப்பட்டி ருப்பதைக் குறிக்கும் வகையில் மொத்தச் சிலையும் 10 பகுதிகளாகப் பிரிக்கப் பட்டுள்ளன. தமிழிலும் ஆங்கிலத்திலும் குறட் பாக்கள் அனைத்தும் செதுக்கப் பட்டிருந்தன.



7,000 தொன் 'கிறனைற்' கற்கள் கொண்டு உருவாக்கப்பட்டு, 01.01.2000 அன்று திறந்துவைக்கப்பட்ட இந்தச் சிலை, உலகிலேயே பெரிய கற்சிலை என்ற பெருமையைப் பெற்றுள்ளதாக அறியப் படுகிறது. இவற்றை நிறைவாகப் பார்வை யிட்ட மனநிறைவில் லோஞ்சிலேறி துறையை அடைந்தோம்.

அண்மையிலிருந்த உணவகத்தில் உணவருந்திய பின்னர் கற்பாறைகளும் இடையிடையே வெண் மணலாலும் நிறைந்திருந்த கடற்கரையோரம் சென் றோம். அங்கு சுற்றுலாப் பயணிகள் கணிசமாய் நின்றனர். அந்த ஊரவர் பலரும் ஆங்காங்கு நின்றனர். அவர்களிடம் சுனாமி பாதிப்பு பற்றி உரையாடினோம். நாம் அறிந்திராத தகவல்கள் பலவற்றை வேதனையுடன் கூறினார்கள். பாதிக்கப்பட்ட சிலரும் அங்கே நின்றதால் அவர்களது நிலையை, உணர்வு களை அறியக்கூடியதாக இருந்தது.


கற்பாறையிலும் வெண்மணலிலும் சிறிது நேரம் அமர்ந்து, பின்னர் கரையோரமாய் நடந்து, எதிர்ப்புறமாக மைதானம்போல மணல் பரவப்பட்ட கடற்கரைக்குச் சென்றோம். அங்கு சீமேந்து இருக்கைகள் போடப்பட் டிருந்தன. அதனோடு இணைந்திருந்த கடைகளில் சிப்பியால் செய்யப்பட்ட அலங்காரப் பொருட்கள், சிற்றுண்டிகள், பாவனைப் பொருட்கள் போன்ற வற்றைக் கொள்வனவு செய்துகொண்டு காந்தி நினைவு மண்டபத்தைப் பார்வையிடச் சென்றோம்.

காந்தி நினைவு மண்டபம்

12.12.1948இல் மகாத்மா காந்தியின் அஸ்தியில் ஒரு பகுதி கன்னியாகுமரிக் கடலில் கரைப்பதற்காக கொண்டு வரப்பட்டு மக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டிருந்த இடத்தில் ஒரு நினைவு மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. இரண்டு அடுக்கு மாடிக் கட்டடமாக அம் மண்டபம் அமைந்துள்ளது. 1956ஆம் ஆண்டு கட்டப்பட்ட இம் மண்டபத்தின் மையக்கூண்டு 79 மீ. உயரம் கொண்டது. இது காந்தியின் வயதைக் குறிப்பிடுவதாக உள்ளது.

காந்தி அடிகளின் பிறந்த நாள் ஒக்ரோபர் 02ஆம் திகதி. ஒவ்வொரு வருடமும் அன்று மட்டும் கூரையினூடாக காந்தியின் அஸ்தி வைக்கப் பட்டுள்ளதென அடையாளமிடப்பட்டுள்ள மேடையில் சூரியனின் ஒளி படக்கூடிய வகையில் துவாரம் அமைக்கப்பட்டுள்ளது.

உள்ளே நுழையும்போது நான்கு பெரிய தூண்கள் இருந்தன. அவற்றில் வாய்மை, அஹிம்சை, சமாதானம் என காந்தியத் தத்துவங்கள் எழுதப்பட்டுள்ளன. மண்டபம் முழுவதும் காந்தியின் வாழ்க்கை வரலாறு படங்களாக விரிகிறது. பல் வேறு உலகத் தலைவர்களுடன் காந்தி இருக்கும் படங்கள் அலங்கரிக்கிறது.



வெளிக் கட்டடம் ஒவ் வொரு பக்கமும் ஒவ்வொரு விதமாகக் காட்சியளித்தது. கட்டடத்தைச் சுற்றிலும் புல்வெளி மற்றும் சிறுவர்கள் விளையாட சறுக்கல் உள் ளிட்ட விளையாட்டு சாதனங்கள் உள்ளன. பாடசாலை மாணவர்களை பெருமளவில் காணக்கூடியதாக இருந்தது.

காந்தி நினைவு மண்டபத்துக்கு அருகே காமராஜர் நினைவு மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. அதனையும் பார்வையிட்ட பின்னர் திருநெல்வேலி நோக்கிய பயணத்தைத் தொடர்ந்தோம்.

திருநெல்வேலி மாவட்டம்

திருநெல்வேலி (நெல்லை நகர்)

தமிழகத்தில் திருநெல்வேலி மாவட்டத்திலிருக்கும் மாநகராட்சியும், அதே பெயரையுடைய மாவட்டத்தின் தலைநகரமுமாகும். வரலாற்றுக்கு முற் பட்ட காலத்திலிருந்தே பாண்டியர்களால் ஆழப்பட்ட திருநெல்வேலி

(திருநெல்வேலிச் சீமை), ஐவகை நிலங்களையும் ஒருங்கேகொண்டு திகழ் கின்றது. கிழக்கில் வங்காள விரிகுடா மற்றும் தூத்துக்குடி மாவட்டத்தையும், மேற்கில் கேரளத்தையும், வடக்கில் விருதுநகர் மாவட்டத்தையும், தெற்கில் கன்னியாகுமரி மாவட்டத்தையும் கொண்டுள்ளது.

மலை முகடுகள் பலவற்றால் போர்த்தப்பட்டதால் இரண்டு பருவக் காற்றுகளாலும் நன்மையடைகிறது. அகத்திய மலை என அழைக்கப்படு வதுமான பொதிகை மலை இங்குதான் இருக்கிறது. இதன் உயரம் 1,800 மீ. இப்பொதிகை மலையில்தான் தமிழ்மொழி தோன்றியதாகக் கருதப்படுகிறது. சிவனால் அனுப்பப்பட்ட அகத்தியர் பொதிகை மலைக்கு வந்து தமிழை உருவாக்கினார் என்ற கதை உண்டு.

மேற்குத் தொடர்ச்சிமலை இருப்பதால், பல சிற்றாறுகளும் பேராறு களும் இங்கு உற்பத்தியாகி நீர்வளத்தைப் பெருக்குகின்றன. பொதிகை மலையில் பேயாறு, உள்ளாறு, பாம்பாறு, களிரியாறு, சேர்வையாறு ஆகியவற்றின் நீரால் பிரபலமான தாமிரபரணி ஆறு தோன்றுகின்றது. இந்த ஆறு புன்னைக்காயல் என்னுமிடத்தில் மன்னார் குடாக்கடலுடன் கலக்கிறது.

பல அணைகளையும் காட்டு வளங்களையும் கொண்ட இங்கு, விவசாயப் பயிர்களுடன் பலவகை பயன்தரு காட்டு மரங்கள் நிறைந்து, செழித்து வளருகின்றன.

'அல்வா'வுக்குப் பேர்போன திருநெல்வேலியில் நண்பனின் இல்லத்தில் இரவைக் கழித்த நாம், மறுநாள் பத்திரிகைத் தகவலை அறிந்து, இங்கிருந்து 50 கி.மீ. தொலைவிலுள்ள குற்றாலம் அருவிக்குச் செல்வதற்காகப் புறப்பட்டோம்.

குற்றாலம்

திருநெல்வேலி மாவட்டத்தில் மேற்கு தொடர்ச்சி மலை 'குற்றாலம்'. இம்மலை சிற்றாறு, மணிமுத்தாறு, பச்சையாறு, தாமிரபரணி ஆறுகளின் பிறப்பிடமாக இருக்கிறது. குற்றாலத்தை மையமாகக்கொண்டு எழுதப்பட்ட 'திருக்குற்றாலக் குறவஞ்சி,' தமிழ்ச் சிற்றிலக்கியங்களில் புகழ்பெற்றது என்பது பலரும் அறிந்ததே.

தேவாரத் திருத்தலங்களில் ஒன்றான 'திருத்துருத்தி' என்னும் ஊரே 'குற்றாலம்' (ஆறு பிரியுமிடத்தில் துருத்திக் கொண்டிருக்கும் ஊரே துருத்தி எனப்படும்.) என்னும் பெயரைப் பெற்றுள்ளது என்றும், 'குர் ஆல்' என்பது ஒருவகை ஆலமரம் அத்தகைய மரங்கள் அதிகமாகக் காணப்படும் வனப்பகுதி என்பதால் குற்றாலம் என்று பெயர் ஏற்பட்டது என்றும், சங்ககாலத்தில் 'தேனூர்' என்னும் பெயருடன் திகழ்ந்ததாகவும் பெண்ணின் அழகுக்கு உவமையாகக் கூறப்பட்டதாகவும் அறியப்படுகிறது.

தென்மேற்குப் பருவக்காலம் (ஆனி - ஆவணி) ஆரம்பித்தவுடன் குற்றால அருவியில் நீர் ஆர்ப்பரித்து விழத் தொடங்கும். அவ்வேளை

அருவிகளில் குளிப்பதற்காகச் சுற்றுலாப் பயணிகள் பல பகுதிகளிலிருந்தும் இங்கு வருகின்றனர். இக்காலத்தை 'குற்றால சீசன்' என்பர்.

குற்றாலத்தின் அருவிகளின் பெருக்குக் காரணமாக அந்நாட்களில் பயணிகள் குளிப்பதற்குத் தடைவிதிக்கப்படுகின்றது. காலைப் பத்திரிகையில் இது பற்றிய விபரம் வெளியாகும். பத்திரிகையைப் பார்த்தே பலரும் அங்கு செல்வர். அவ்வாறே நாமும் காலை பத்திரிகையைப் பார்வையிட்டு மதியம் புறப்பட்டு குற்றாலத்தை அடைந்தோம்.

குற்றாலத்தில் மொத்தம் ஒன்பது அருவிகள் அமைந்துள்ளன. ஒவ்வொன்றுக்கும் போய்வரக்கூடிய போக்குவரத்து வசதிகள் உள்ளன. ஒன்பது அருவிகளையும் பார்வையிட விருப்பமிருந்தும், நாம் சென்ற அன்று ஓரிரு அருவிகளைத் தவிர ஏனைய அருவிகளில் நீராடச் செல்ல முடியாதவாறு பாதைகள் தடைசெய்யப்பட்டிருந்தன.

அங்கு பெறப்பட்ட அறிவித்தலின் பிரகாரம் நீராட அனுமதிக்கப் பட்டிருந்த 'ஐந்தருவி'க்குச் சென்றோம். அங்கு வாகனத் தரிப்பிடத்தில் வாகனத்தை நிறுத்தி 200 மீ. தூரத்திலுள்ள மலையடிவாரத் தில் அருவி வீழும் இடத்திற்குச் சென்றோம்.


ஐந்தருவி

இந்த 'ஐந்தருவி' யானது 'திரிகூட மலை'யின் உச்சியிலிருந்து 40 அடி உயரத் தில் உருவாகி சிற்றாற்றின் வழியாக ஓடிவந்து ஐந்து கிளைகளாகப் பிரிந்து அருவி யாக விழுகிறது. இங்கு பெண் கள் குளிக்க இரண்டு அருவிக் கிளைகளும் ஆண்கள் சிறுவர்கள் குளிக்க மூன்று அருவிக் கிளைகளும் ஒதுக்கப்பட்டிருந்தன. சற்று குளிராக இருந்தபோதும் ஒதுக்கப்பட்ட இடங்களில் மகிழ்வாகக் குளித்தோம்.

குளித்து முடித்து அந்தச் சுற்றாடலைப் பார்வையிட்டோம். 'சபரிமலை சாஸ்தா கோயிலு'ம் 'முருகன் கோயிலு'ம் இருந்தன. அங்கிருந்து வெளியேறி ஐந்து கி.மி. தூரத்திலிருந்த 'பேரருவி'க்குச் சென்றோம். பொது வாக 'குற்றாலம் அருவி' என்றே இது அழைக்கப்படுகிறது. இந்த அருவி 288 அடி உயரத்திலிருந்து 'பொங்குமாங் கடல்' என்ற ஆழமான ஒரு துறையில் விழுந்து பொங்கிப் பரந்து, விரிந்து கீழே விழுகிறது. அருவிக்கரையில் 'குற்றால நாதர்' (சிவன்) சன்னதி உள்ளது. அருவியில் குளிக்கவரும் சுற்றுலாப் பயணிகள் தவறாது தரிசித் துச் செல்வர்.

'குற்றாலம் அருவி' முக்கியமானதொரு அருவியாகப் பலராலும் பேசப்படுகிறது. இந்த அருவி நீர் பல்வேறு மூலிகைகளில் கலந்து வருவதால்

இதில் நீராடுவது ஆரோக்கியமாகக் கருதப்படுகிறது. மூலிகைக் குணம் கலந்திருப்பதால் இதனில் நீராடுபவர்களுக்கு எல்லா நோய்களும் நீங்கும் என்ற நம்பிக்கை மக்களிடம் இருக்கிறது. இந்த அருவியிலும் பெண்கள் நீராடுவதற்குத் தனியாக இடம் ஒதுக்கப்பட்டிருந்தது.

அருவியில் நிரையாக நின்று குளிக்க வசதிசெய்யப்பட்டுள்ளது. மலையடியில் விழும் அருவி நீர், கீழே ஆறாக ஓடுகிறது. அந்த ஆற்று நீரில் பலர் முகம், கை, கால்களை கழுவுவதை அவதானித்து நாமும் அவ்வாறே செய்தோம். இருள் மங்கிய நேரம், அருவி நீர் குளிராக இருப்பதாக அறியப்பட்டமை, அருவி நீர் பெருகுவதாக விடப்பட்ட அறிவிப்பு போன்றவற்றால் அருவியில் நீராடத் துணியவில்லை.

ஏற்கெனவே சென்ற பலரும் நீராடுவதை சிறிதுநேரம் பார்வையிட்டோம். மலையும் அதிலிருந்து பாய்ந்துவரும் அருவியும், வீழ்ந்து ஆறாக ஓடும் நீரும் கண்ணைக் கவரும் காட்சியாக இருந்தது. தரையில் மின்விளக்குகளால் ஒளியூட்டப்படுவதால் அச்சமின்றி வலம்வர ஏதுவாக இருந்தது.


குற்றால அருவி

குற்றால அருவிப் பகுதியில் பெறப்பட்ட மூலிகைகள் கொண்டு தயாரிக்கப்பட்ட 'மருத்துவ எண்ணெய்' விற்பனை செய்யப்படுகின்றது. சிலர் தாமே சுயமாக மூலிகைகளைச் சேகரித்துத் தயாரிக்கப்பட்ட மருத்துவ எண்ணெயை பயணிகளிடையே கொண்டு திரிந்து விற்பனை செய்வதையும் காணக்கூடியதாக இருந்தது.

நாமும் இரண்டு போத்தல் எண்ணெய் வாங்கிக் கொண்டு 'கேரளா' மாநிலத்திற்கான பயணத்தை ஆரம்பித்தோம். இடையில் 'மணி முத்தாறு' (குற்றால மலையில் பிறந்து ஓடி வருகின்ற ஆற்றின் பெயர்) என்னும் இடத்தில் பிரமாண்டமான உணவகங்கள் இருந்தன. அங்கே வாகனம் தரிப்பதற்கு போதிய வசதியும் காணப்பட நாமும் இரவுணவு அருந்துவதற்காக அங்கே தரித்தோம்.

வலது பக்கம் பெரிய கட்டடமாக இருந்த உணவகத்தில் பயணிகள் வரிசையாக நிற்பதுகண்டு ஓரமாகச் சென்று உள்ளே எட்டிப் பார்த்தேன். நூறுபேர் வரை உணவருந்திக் கொண்டிருந்தனர். மேலும் நீண்ட வரிசையில் அதேயளவு பயணிகள் நிற்பதை அவதானித்து, இடது பக்கமிருந்த உணவகத்திற்குச் சென்றோம்.

அந்த உணவகம் முன்னர் பார்த்ததைவிட சிறிதாக இருந்தது. பயணி கள் வரிசையாக இல்லாமல் குவியலாக நின்றனர். நாங்கள் ஒருவாறாக உள் நுழைந்தோம். வெவ்வேறு இருக்கைகளே கிடைத்தன. பொதுவாக அங்குள்ள உணவகங்களின் விசேட உணவாக 'காடை' என்னும் பறவைப் பொரியல், 'பறோட்டா' மற்றும் காட்டு மிருகங்களின் கறிகளும் இருந்தன. உணவக இருக்கைகளின் மத்தியில் இருந்த பெரிய அடுப்புகளில் 'பரோட்டா' போடுவதும் 'காடை' பொரித்தலும் இடம் பெறுகின்றன. புகை, ஆவி, எண்ணெய் மணத்தை பொறுத்துக்கொள்ளவே வேண்டும்.

உணவருந்த வந்திருப்பவர்களின் விருப்பத்திற்கேற்ப சுடச்சுட வழங்கப்பட்டது. சிலவேளை போதாமைக்காய் பெறுவதற்கு காத்தி ருக்கவேண்டும். சிலர் கிடைத்ததே போதுமென்று எழுந்தவர்களுமுண்டு. அவ்வாறே எங்களில் சிலரும் எழவேண்டியிருந்தது.

அங்கிருந்த பழக்கடையில் குறுகிய நேரத்தில் ஆய்ந்து கொண்டு வரப்பட்ட 'அப்பிள்' வாங்கிச் சாப்பிட்ட பின்னர் 'கொச்சி' நகர் நோக்கிய பயணத்தைத் தொடர்ந்தோம். கொச்சி நகர் கேரளா மாநிலத்தில் இருப்பதால் இப்பயண தொடரின் அனுபவங்களை 'கேரளா' மாநிலப்பிரிவில் பார்க்கலாம்.

திண்டுக்கல் மாவட்டம்

திண்டுக்கல்

தமிழகத்தில் ஒரு நகரமும், அதே பெயரையுடைய மாவட்டத்தின் பெயரும் 'திண்டுக்கல்' என்பதாகும். முன்னர் இதன் பெயர் 'திண்டீஸ்வரம்' எனவிருந்தது. 'திண்டி' என்ற மன்னன் இந்நகரை ஆண்டபோது மக்களைத் துன்புறுத்தி வந்தான். இதனால் மக்கள் 'ஈசனை' வேண்டித் தவம் புரிந்தனர். திண்டி மன்னனை சிவனாகிய ஈசன் அழித்ததால் 'திண்டீஸ்வரம்' என அழைக் கப்பட்டு பின்னர் மாற்றமடைந்ததென்று சிலரும், ஊரின் நடுவே திண்டைப் போல பெரிய மலை இருந்ததால் 'திண்டுக்கல்' எனப் பெயர் வந்ததாகச் சிலரும் கூறுகிறார்கள்.

திண்டுக்கல், தொன்றுதொட்டு சேரர் மற்றும் பாண்டியரின் ஆட்சி யின் கீழ் இருந்துவந்தது. விஜயநகரப் பேரரசின் ஆட்சியில் ஏற்றம் பெற்ற துடன் திருமலை நாயக்கர்களால் 'மலையில் கோட்டை' கட்டப்பட்டது. வெவ்வேறு ஆட்சியாளர்கள் அந்தக் கோட்டையைக் கைப்பற்ற மாறிமாறிப் போரிட்டனர். இவர்களது ஆட்சியின் கீழ் படிப்படியாக கோட்டை பலப்படுத் தப்பட்டுச் சிறந்த இராணுவத்தளமாக மாறியது.

1985இல் மதுரை மாவட்டத்தின் இணைப்பிலிருந்து பிரித் தெடுக்கப்பட்டே திண்டுக்கல் மாவட்டம் உருவாக்கப்பட்டது. கி.பி. 13ஆம் நூற்றாண்டில் மதுரையை ஆண்ட முதலாம் சடைவர்மன் குலசேகர பாண்டி

யன் திண்டுக்கல் மலையில் 'இராஜராஜேஸ்வரி' கோயிலைக் கட்டினான். இந்த மலைக்கோயிலில் ஐந்து கடவுள்களுக்கான கருவறைகள், தனித்தனியாக இருந்தபோதிலும் இப்போது எந்தவொரு கருவறையிலும் சிலைகள் இல்லை. இதனால் வழிபாடுகள் இல்லாதபோதிலும் சுற்றுலாப் பயணிகளை கவர்ந்திழுக்கிறது.

திருமணவிழாவில் கலந்துகொள்வதற்கென திண்டுக்கல் வந்திருந்த எமக்கு, 'வத்தலக்குண்டு' என்னும் ஊரில் தங்குவதற்கான ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது.

வத்தலக்குண்டு

கொடைக்கானல் மலையடிவாரத்தில் உள்ள குன்றுப் பகுதியே வத்தலக்குண்டு. வேளாண்மை தொழிலும் அது சார்ந்த வர்த்தகமும், பருத்தி நெய்தலும் இங்குள்ளவர்களின் பிரதான தொழிலாகும். வெற்றிலை அதிகமாக விளைவதால் வெற்றிலைக்குன்று என அழைத்து வந்தனர். காலப்போக்கில் அது மருவி வெத்திலைக்குண்டு எனவும் பின்னர் வத்தலக்குண்டு எனப் பெயர் பெற்றதாகவும் அறியப்படுகிறது.

வத்தலக்குண்டு பின்தங்கிய பல சிற்றூர்களையும், தரவை நிலங் களையும், 'உட' மரப் பற்றைகளையும், பாறைத் தரைகளையும், அதேவேளை பயிர்செய் நிலங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது. திண்டுக்கல் பிரதான வீதியை சந்திக்கும் குறுக்குவீதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட, சகல வசதி களுடன் கூடிய மாடி வீட்டை வாடகைக்குப் பெற்றுத் தங்கியிருந்தோம்.

இதுவரை நாம் சென்ற இடங்களைவிட அருவருப்பு மிக்க ஊராகவே எமது பார்வையில் பட்டது. பிரதான வீதி, குறுக்கு வீதிகளின் ஓரங்கள் மற்றும் பற்றைகளுடன் கூடிய தரை போன்றவற்றை மலம் கழிப்பதற்குப் பயன் படுத்துவதை இங்கே காணக்கூடியதாக இருந்தது. சிறுவர் முதல் பெரியவர் வரை ஆண், பெண் என்ற வித்தியாசமின்றி அனைவரும் அவ்வாறே செய்கி றார்கள். போய் வருவோரைப்பற்றி சிறிதேனும் கருத்தில் கொள்வதில்லை.

நாம் தங்கியிருந்த வீட்டிற்கு கிழக்குப் பக்கத்தால் கணிசமான தூரம் 'உட' மரப் பற்றைகள் நிறைந்த பகுதியாக இருந்தது. அந்தப் பகுதிக்கு காலை முதல் தொடராக, பாடசாலை பிள்ளைகள் முதல் பலரும் மலம் கழிக்கச் சென்றுவருவார்கள். இரவானதும் பன்றிகள் அவற்றை இல்லாமற் செய்து விடும். சிறிய, பெரிய வீதிகளின் இரு கரைகளிலும் கிடக்கும் மலத்தை அகற்றி கருங்கல் அரைத்த தூள்கொண்டு அந்த இடங்களை மூடிச் செல்வர் நகராட்சி ஊழியர்கள். நாங்கள் தங்கியிருக்கின்ற வீட்டைத்தவிர ஏனைய வீடுகளில் மலசலகூடத்தைப் பயன்படுத்துபவர் இல்லை என்றே தோன்றியது.

நூறு மீற்றர் தூரத்தில் கடைகள் பல இருந்தன. அங்கு சென்றபோது கடைகளுக்கு பத்து யார் முன்னுக்கு சிறுமிகள் நால்வர் உரையாடியபடி ஓரமாக மலம் கழித்துக்கொண்டிருந்தனர். அங்கிருந்து 15 அடி தூரத்தில் மேசை

ஒன்று வைத்து வியாபாரம் செய்துகொண்டிருந்தார் ஒருவர். அவர் இடை யிடையே சிறிய மரக்கொப்பை அசைத்து மூடி மொய்த்துக்கிடந்த இலையான் களைக் கலைக்கும் போதுதான் அவர் பலாப்பழ விற்பனை செய்கிறார் எனத் தெரியவந்தது. வீதியால் அல்லது கடைகளுக்குப் போவோர் எவரும் இதுபற்றி அலட்டிக் கொள்வதில்லை. பலாப்பழ வியாபாரம் நன்றாகவே நடைபெற்றது.

திண்டுக்கல் பிரதான வீதி 'சென் தோமஸ்' ஆலயத்தில் திருமணத் திருப்பலி நடைபெற்று முடிவுற்றதும் அங்கிருந்து 02 கி.மீ. தூரத்தில் 'கெங்குவார்பட்டி' வீதியிலுள்ள 'துரை புஸ்பம் மஹால்' மண்டபத்தில் வரவேற்புபசாரம் நடைபெற்றது. மண்டபத்திலிருந்து 03 கி.மீ. தூரத்தில் வத்தலக்குண்டு அகதி முகாம் இருந்தது. உறவினரும் அறிமுகமான சிலரும் அங்கு இருப்பதால் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி சந்தித்துவரச் சென்றோம்.

செம்மையற்ற, கரடுமுரடான, சல்லிகள் கொட்டிக் கிடப்பது போன்ற கொழுக்கிக் கற்பாறைத் தரை அது. அதில் நடப்பதே எமக்குச் சிரமமாக இருந்தது. செருப்பு இல்லாதிருந்தால் கற்கள் கால்களைத் துளைபோட்டுவிடும். அங்கு உள்ளவர்களுக்குப் பழகிவிட்டதாயினும், இப்படியொரு இடத்தைத் தெரிவு செய்து அகதிகளுக்கு வழங்க மனிதாபிமானம் இடங்கொடுத்ததோ என எண்ணத் தோன்றியது.

தற்போது காணிகளை பகிர்ந்துகொடுத்து சுயமாக வீடு அமைத்துக் கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதால் அங்குள்ளவர்களில் பலரும் தரைக்குச் சீமேந்து போட்டு தென்னை ஓலைக் கிடுகுகளால் வீடு அமைத் துள்ளனர். நடைபாதை முன்னரைப்போல் செம்மையற்ற கற்தரையாகவே இருந்தது.

நிறுவனம் ஒன்று நான்கு வீடுகளுக்கு ஒரு மலகூடமெனப் பொது மலகூடங்களைக் கட்டி அவர்கள் ஒவ்வொருவருக்கும் திறப்பு கொடுக்கப் பட்டுள்ளது. இதற்கு முன்னர் இந்த கரடுமுரடான கற்தரையால் சற்றுத் தூரம் நடந்தே காலைக் கடனை முடித்துள்ளார்கள். முன்னர் தாம் பட்ட கஸ்ரங்களை அவர்கள் சொல்லும்போது கேட்கவே சங்கடமாக இருந்தது. இப்போது பிள்ளைகள் வளர்ந்து வேலைகளுக்குச் செல்வதால் முன்னைய துன்பத்தை மறந்து அவர்களால் வாழமுடிகிறது. அவர்களின் நிலையை எண்ணி வேதனையுடன் புறப்பட்டோம்.


பழநி முருகன் கோயில்

முருகனது சிறப்புடைய கோயில்களில் திண்டுக்கல் மாவட்டத் திலுள்ள 'பழநி முருகன்' கோயிலும் ஒன்று. தமிழ்நாட்டில் அதிக வருவாயைத் தருகின்ற கோயிலும் இதுவாகும். பழநிக்குச் சென்றவுடன் சிவாஜி கணேசன் நடிப்பில் வெளிவந்த திருவிளையாடல் திரைப்படம்தான் ஞாபகத்திற்கு வந்தது. கே.பி.சுந்தரம்பாள் பாடிய, "பழம் நீயப்பா ஞானப் பழம் நீயப்பா..."

என்னும் பாடல் எங்கிருந்தோ ஒலிப்பதுபோன்ற உணர்வு.

ஒரு சமயம் 'கயிலங்கிரி'க்குச் சென்ற நாரதர், மாங்கனி ஒன்றை சிவபெருமானுக்குக் கொடுக்க, அதை கண்ணுற்று ஆசைப்பட்ட முருகனுக்கும், கணபதிக்கும் இடையே 'உலகத்தை யார் முதலில் சுற்றி வருகிறார்களோ அவர்களுக்கே கனி உரியது' என ஒரு போட்டியை வைக்க, தாய் - தந்தையை சுற்றிவந்து மாங்கனியை கணபதி பெற்றுக் கொண்டார். மயிலேறி உலகத்தை சுற்றி விட்டு ஆவலுடன் ஓடிவந்த முருகன், கனி தனக்குக் கிடைக்காத கோபத்தினாலும் ஏமாற்றத்தினாலும், ஆடை ஆபரணங்களைக் களைந்தெறிந்துவிட்டு 'திருஆவின்குடி' என்னும் ஊரிலுள்ள மலையிற்போய் இருக்க, பெருமானும் தேவியாரும் குமரனின் சினம் தணித்து, பழம் நீ எனவும் நீயே பழம் எனவும் இன்னும் பலவாறாகவும் புகழ்ந்து சமாதானப்படுத்திய புராண நிகழ்வை பலரும் அறிந்ததுண்டு. 'திருஆவின்குடி'யிலிருந்த அந்த மலை இச்சம்பவத்தின் பின் 'பழநி' என வழங்காலாயிற்று என அறியப்படுகிறது.

'பழநி' ஒரு புண்ணிய பூமி. அந்த மலை உச்சியில் 18 சித்தர்கள் வாழ்ந்துள்ளனர். இந்த சித்தர்களில் ஒருவரான 'போகர்' என்பவர், ஒன்பது வகையான நச்சுப் பொருட்களைச் சேர்த்த நவபாஷாணத்தால் 'தண்டாயுதபாணி' (முருகன்) சிலையை வடித்தார். இந்த சிலையானது மீன்களைப் போன்று செதில்களைக் கொண்டதாக அறியப்படுகிறது. இரவில் இந்த சிலையின்மீது முழுவதுமாக சந்தனம் பூசப்பட்டு (சந்தனக் காப்பு) காலையில் பக்தர்களுக்குப் பிரசாதமாக வழங்கப்படுகிறது. இதனை மிகச் சிறந்த மருந்தாகக் கருதுகின்றனர்.



மலையடிவாரத்திலிருந்து 450 அடி உயரத்தில் அமைக்கப்பட்டிருந்த கோயிலின் கோபுரம் மேகத்தைத் தொடுமாற்போல் தெரிந்தது. கோபுர அழகை பார்க்கும்போது அது தெய்வலோகத்தில் இருந்து விடுபட்டுவந்த ஒரு பகுதியென எண்ணத் தோன்றியது. மனமும் உடலும் உருகி நிற்க சில நிமிடங்கள் கோபுர அழகை பார்த்துக் கொண்டே நின்றோம்.

மலையின் அடிவாரத்தில் 'பாத விநாயகர்' கோயில் 'குழந்தை வேலாயுதசுவாமி' கோயில் 'மீனாட்சி சுந்தரேஸ்வரர்' கோயில்கள் அமைந்துள்ளன. மலைமீதுள்ள 'தண்டாயுதபாணி' கோயிலே அறுபடை வீடுகளில் ஒன்றெனப் பலராலும் தவறாகக் கருதப்படுகிறது எனவும், மலையடிவாரத்திலுள்ள 'குழந்தை வேலாயுதசுவாமி' கோயிலே 'திருஆவின்குடி' மூன்றாம்படைவீடு எனவும் அறியப்படுகிறது.

மலையேறுவதற்கு சுமார் 820 படிகள் வரையில் உள்ளன. அதைவிட

மலைக்குச் செல்வதற்கு முன்று இழுவைத் தொடருந்துகளும் ஒரு கம்பி வட இழுவை ஊர்தியும் இருக்கின்றன. வேண்டுதலின் நிமித்தமும், காவடி எடுத்தும், பக்திப் பரவசத்தாலும் படியேறிச் செல்வோரையும் தொடருந்து மற்றும் ஊர்தியில் பயணிப்போரையும் மலையடிவாரத்திலிருந்து பார்க்கக் கூடியதாக இருந்தது. மலையேறத் தொடங்கு முன்னர் 'பாத விநாயகருக்கு' கற்பூரம் கொளுத்தி வணங்கிய பின்னரே ஏறத் தொடங்கினர்.

அடிவாரத்தில் சனக் கூட்டம் நிறையக் காணப்பட்டது. கோயில் வழி பாட்டுக்குத் தேவையான பலவகைப் பொருட்கள் உட்பட வேறுபல பொருட் களும் விற்பனை செய்யும் கடைகள் ஏராளமாக இருந்தன. நேர்த்திக்காக தலை மொட்டை அடித்துக் கொள்ளும் நிலையங்களும் இருந்தன. சுவாமிக்கு விபூதி, பஞ்சாமிர்தம் சாத்தி பூஜை செய்யும் வழக்கம் இங்கு இருப்பதால் பஞ்சாமிர் தத்தை பல அளவான தகர ரின்களில் அடைத்து விற்பனை செய்கிறார்கள். இதனைப் பல நாட்களுக்கு வைத்துக் கொள்ளலாம்.

எமக்கு மலையேறிப் பார்த்துவரும் நோக்கம் இல்லை என்பதால் மலையடிவாரத்தில் நின்றவாறே வணங்கி பின் சற்று நேரம் கடை வீதிகளைச் சுற்றிப் பார்த்ததுடன் பஞ்சாமிர்த ரின்களைக் கொள்வனவு செய்துகொண்டு மனநிறைவோடு புறப்பட்டோம்.

கொடைக்கானல்

திண்டுக்கல் மாவட்டத்திலுள்ள ஒரு சுற்றுலாத் தலமும், தமிழ் நாட்டில் மலைகளில் இளவரசியாக உள்ள புகழ்பெற்ற கோடை வாசஸ்தல முமாகும். இது மேற்குத் தொடர்ச்சி மலையில் 2,133 மீ. உயரத்தில் 22 சதுர கி.மீ. பரப்பளவில் அமைந்துள்ளது. இதனால் இங்கு குளிர்மையான தட்பவெப்பம் நிலவுகிறது. 'கானல்' என்னும் ஒருவகைச் செடி இங்கு ஏராளமாகக் காணப்படுவதால் 'கொடைக்கானல்' எனப் பெயர் வந்ததாக அறியப்படுகிறது. சங்ககாலத்தில் 'கோடை மலை' என்றும் பின்னர் 'குறுஞ்சி மலை' என்றும் அழைக்கப்பட்டது. இங்குள்ள முருகன் கோயில் 'குறுஞ்சி ஆண்டவர்' கோயில் எனஅழைக்கப்படுகிறது.

அரச பணியில் இருந்த ஆங்கிலேயர் வசிக்க ஏற்ற இடமெனக் கருதி அவர்களால் 1845இல் பங்களாக்கள் அமைக்கப்பட்டன. போக்குவரத்துக்குப் போதிய வசதி இல்லாத காரணத்தால் குதிரைகளில் பயணித்தே மலைக்கு வந்து தங்கினர். படிப்படியாக 1914ஆம் ஆண்டில்தான் முழுமையான வீதி வசதிகள் செய்யப்பட்டன. ஆங்கிலேயர் காலத்தில் வசதி படைத்தவர்கள் மட்டும் அனுபவித்துவந்த கோடை வாசஸ்தலம் இப்போது அனைவரும் சென்றுவரும் சுற்றுலாத் தலமாக மாறியுள்ளது.

12 ஆண்டுகளுக்கு ஒருமுறை பூக்கும் குறிஞ்சி மலர்ச் செடிகள் இங்கு பரவலாக வளர்ந்துள்ளன. கடந்த 2006 ஆம் ஆண்டு கடைசியாகப் பூத்ததாக அறியப்படுகிறது. செப்ரெம்பர் மாதம் முதல் சில மாதங்கள் தொடர்ச்சியாகப்

பூப்பதால் மலைப்பகுதி கண்கவர் காட்சியாக இருக்குமாம். மீண்டும் குறிஞ்சி மலர் பூப்பதைப் பார்ப்பதற்கு மக்கள் 2018ஆம் ஆண்டுவரை காத்திருக்க வேண்டும்.

கோடை காலத்திலும் குளிர் காலத்திலும் பெரும்பாலும் மாறாத பருவநிலையைக்கொண்ட இங்கு, 'வானபௌதிக' *(Astrophysics)* துறைக் கான ஆராய்ச்சிக் கூடமும், அப்பிள் - கொக்கோ ஆராய்ச்சி நிலையங்களும், சிறந்த 'கோல்வ்' விளையாட்டு மைதானமும் உள் ளன. பலவித நெடிதுயர்ந்த மரங்களும், செழிப்பான செடி கொடிகளும், பூத்துக் குலுங்கும் பல வர்ண மலர்களும், பாய்ந்தோடும் அருவிகளும், இடையிடையே காணப்படும் புற்தரைகளும் இயற்கை அன்னை கொடுத்த கொடைகளாக உள்ளன. தமிழ்த் திரைப்படங்களில் பெரிதும் ஆக்கிரமித்திருக்கும் கொடைக்கானலின் பல இடங்கள் சுட்டும் காட்சிகளை இரசிகர்கள் பார்த்திருப்பர்.

கொடைக்கானலுக்குச் செல்லும் பாதைகளில் வத்தலக்குண்டு ஊடாகச் செல்லும் பாதைதான் சிறந்த பாதை என அறியப்பட்டபோதும்,


குறுஞ்சி ஆண்டவர் கோயில்

அந்தப் பாதையும் நேரியதாய் இல்லாமல் வளைந்தும், நெளிந் தும் செங்குத்தாகவும் செல்வதால் பயத்தை உண்டு பண்ணியது. சில இடங்களில் மலையிலிருந்து கற்கள் விழுவதுமுண்டாம். அந்தப் பாதை சாரதிக்கு அத்துபடி என்ப தால் அவதானமாகச் செலுத்தி னான். கற்கள் விழுகின்ற இடங் களையும் விழுந்து கிடக்கும் கற்களையும் காண்பித்தபோது நெஞ்சு திக் கென்றது.

மலையில் ஏறி காலை உணவுக்காக உணவகம் ஒன்றில் நிறுத்திய பின்னர்தான் மனம் அமைதியானது. உணவகத்தில் இலையான் தொல்லை அதிகமாக இருந்தது. இலையான் மொய்த்து விடாமல் கலைத்தவாறு உணவை அருந்தி முடித்துப் புறப்பட்டோம். வாகனச் சாரதி பலதடவை இங்கு வந்து சென்றுள்ளதால் இடங்களைப் பார்வையிடுவதற்கு ஏற்ற ஒழுங்கில் எம்மை அழைத்துச் சென்றார்.

பார்வையிட்ட இடங்கள்

கொடைக்கானல் ஏரி அல்லது நட்சத்திர ஏரி என்று அழைக்கப்படும் மரங்களால் சூழப்பட்ட ஏரி, கொடைக்கானலின் மையப்பகுதியாகும். 24 ஹெக்டேர் பரப்பளவைக் கொண்டது இந்த ஏரி, இயற்கையின் அழகை யெல்லாம் கொட்டிவைத்திருப்பதுபோல காணப்பட்டது. இது ஆங்கிலேயர்

காலத்தில் திருத்தியமைக்கப்பட்டு மீன்கள் விடப்பட்டன. தமிழ்த் திரைப் படங்கள் பலவற்றில் இந்த ஏரியைப் பார்க்கக்கூடியதாக இருந்தது. குளிப்பதற்கும், மீன் பிடிப்பதற்கும், படகுச் சவாரி செய்வதற்கும் அனுமதி யுண்டு. ஏரிக்கு அருகாமை குதிரைச் சவாரி செய்யும் இடமும் இருந்தது. நேரத் தைக் கருத்திற்கொண்டு பார்வையிட்டு முடிந்ததும் புறப்பட்டோம்.

'கோக்கர்ஸ்வாக்' *(coaker's walk)* மனதைக் கொள்ளை கொள்ளும் இயற்கைக் காட்சிகள் நிறைந்தது. காட்சிகளை கண்ணருகே பார்ப்பதற்கு தொலைநோக்கி பொருத்தப்பட்டிருந்தது. சாதாரணமாய்ப் பார்க்கும்போதே கொடுத்துவைத்த ஒன்றாக இருக்கும் நிலையில், தொலை நோக்கியில் நெடிய தூரத்தை, பரந்த அளவில் பார்க்கையில் ஏற்படும் மகிழ்வை விபரிக்க வார்த்தைகளே இல்லை. ஒவ்வொருதராக மாறிமாறி பார்த்து மகிழ்ந்தோம்.

'பிர்யண்ட்' *(Bryank Park)* பூங்கா, தாவரவியலில் ஆர்வமுள்ள வர்களுக்கு அரியதொரு கொடையாகும். நிரையாக, தொகையாகப் பூத்துக் குலுங்கும் பல வர்ண 'பேன்சி' ரக பூக்கள், வயலட் - மஞ்சள் - சிவப்பு - வெள்ளை உள்ளிட்ட பல வர்ணங்களிலான 'சிங்கமுக'ப் பூக்கள் மற்றும் பல்வகைத் தாவரங்களைப் பார்வையிட சுற்றுலாப் பயணிகள் குவிந்த வண் ணமே உள்ளனர். சிங்கத்தின் முகம்போலவே தோற்றமளிக்கும் சிங்கமுகப் பூக்களை அனைவரும் ஆச்சரியமாகப் பார்த்தனர். பயணிகள் கூட்டம் அதிகமாக இருந்ததால் நாம் விரைவாகவே பார்வையிட்டு முடித்தோம். அங்கு வைக்கப்பட்டிருந்த தொலைநோக்கிகளில் எதிர்ப்புறமாக இருந்த மலையையும், அதனில் வழிந்தோடும் நீர்வீழ்ச்சியையும், இடையிலுள்ள பள்ளமான பெரு வெளியையும் பார்த்து மகிழக்கூடியதாக இருந்தது.

தற்கொலை முனையெனப் பேர்பெற்ற முனைக்குச் சென்றோம். அந்த முனைப் பகுதியில் தற்கொலைகள், தவறி விழுவதால் ஏற்படும் இழப்புகளால் பயணிகள் அருகே செல்வதற்கு தடை விதிக்கப்பட்டு கம்பிவலை வேலி அடைக்கப்பட்டிருந்தது. வேலியோரம் நின்று பார்வையிட்டோம். ஆழமாகத் தெரிந்த பகுதியைப் பார்க்கத் தேகம் சிலிர்த்தது. சரிவாக இல்லாமல் நேர் வெட்டுப்போன்று காணப்பட்டது அந்தப் பள்ளம். புகாரினால் மூடப்பட்டுத் தெரிந்த தரையில் இடையிடையே மரங்களைக் காணக்கூடியதாக இருந்தது. இதில் விழும் எவரும் தப்பிடார் என்பது உண்மைதான்.

அடுத்து இருந்த மலைச்சரிவுக்குச் சென்றோம். மலைச் சரிவின் மேற் தளத்தில் குரங்குகள் ஏராளமாய் உலா வந்தன. பயணிகளுக்கு அருகாமை எவ்வித தயக்கமுமின்றி அவை வந்து சென்றன. பருத்த, பெரிதான குரங்குகளால் பயணிகள்தான் பயந்தனர். அத்தளத்தில் இரண்டு வியாபாரிகள் வெட்டிய பாண்துண்டுகள் இரண்டை முட்டையில் தோய்த்து சுவையூட்டி உடனே தயார்பண்ணி சுடச்சுட விற்பனை செய்தனர். அவற்றை வாங்கிச்

சாப்பிட சுவையாக இருந்ததால் மேலும் சாப்பிடவேண்டும் போல இருந்தது. எமது தேவையை உடனே நிறைவேற்ற அவர்களால் முடியவில்லை. ஒரு தடவையில் இரண்டு மட்டுமே தயாரிக்க முடியுமென்பதால் நேரம் அதிகமாகத் தேவைப்பட்டது. இதனை வாங்கியவர்கள் குரங்குகளுக்குப் பயந்து தனித்துச் சென்று சாப்பிடாமல் கூட்டமாகவே நின்று சாப்பிட்டனர்.

மலைச்சரிவு தொடங்கும் முன்னர் சதுரமும், உயரமுமான மணிக்கோபுரம் இருந்தது. அதைச் சுற்றி நான்கு படிகள் இணைந்திருந்தன. மலைச்சாரலில் இறங்கி ஏறிக் களைப்புற்று வருவோர் அந்தப் படிகளில் அமர்ந்து இளைப்பாறுவர்.

மலைச்சாரல் கணிசமான ஆழத்திற்குச் சரிந்து செல்கின்றது. ஒழுங்கான பாதையில்லை. கற்பாறைத் தரையும், குறுக்காக மரங்களின் வேர்களுமாக இருந்தது. சற்றுக் கீழே இறங்கினால் தற்கொலை முனைப் பாறையைப் பார்க்க முடியும். அதுவரை சென்று பார்வையிட்டு நானும் சிலரும் மேலேற, இள வயதினர் ஆழத்தின் எல்லையை நெருங்கச் சென்று திரும்பினர். ஆபத்தான பயணம். சற்றுச் சறுக்கினாலும் உருண்டு தரைநோக்கிச் செல்ல வேண்டி யதுதான்.

மலைச்சாரலில் இறங்கியவர்கள் மேலே வந்ததும் அனைவரும் மணிக் கோபுரப் படிகளில் அமர்ந்துகொண்டோம். நாம் கூடவே எடுத்து வந்திருந்த சிற்றுண்டிகளைப் பகிர்ந்து சாப்பிட்டபோது சுற்றிவர குரங்குகள் எம்மைப் பார்த்தவாறு அமர்ந்தும் அலைந்தும் திரிந்தன. சாப்பாடு போடாமல் நாம் சாப்பிட்டுக்கொண்டிருந்தது அதற்குக் கோபத்தை உண்டுபண்ணியிருக்க வேண்டும் எங்களில் ஒருவர் கழற்றி வைத்திருந்த செருப்பைத் தூக்கிக் கொண்டு கண்ணிமைக்கும் நேரத்துக்குள் மரத்தின்மேலேறி மறைந்துவிட்டது ஒரு குரங்கு.

இது சாதாரணமாகவே இங்கு நடக்கிறதாம் பெண்கள் கைப்பையைத் தவறவிட்டாலோ அல்லது பக்கத்தில் வைத்திருந்தாலோ உடனே தூக்கிச் சென்றுவிடுமாம். உணவு கொடுக்காவிட்டால் பாய்ந்து பறிக்குமாம். கோபம் ஏற்பட்டால் ஆட்களையும் கடிக்குமாம். இதைக் கேட்டதும் எமக்குப் பயம் தொற்றிக் கொண்டது. வைத்திருந்த உணவில் அவற்றுக்கு எறிந்துகொண்டு கூட்டமாக வாகனத்திற்குச் சென்றோம்.

அடுத்து கமலஹாசன் நடித்து வெளிவந்த 'குணா' திரைப்படத்தி லுள்ள குகையைப் பார்வையிடச் சென்றோம். 'குணா குகை'யே அதன் பெயர். பிரதான வீதியிலிருந்து ஒரு கி.மீ. வரை செம்மையற்ற பாதையால் நடந்தே குகையைப் பார்க்க முடியும். நடந்து செல்கையில் இடையில் இருந்த பெட்டிக் கடைகளில் பெரிய கொய்யா செங்காயை துண்டுகளாக நறுக்கி மிளகாய்த் தூளும் உப்பும் தூவி விற்பனை செய்தனர். நாம் அதனை வாங்கி சாப்பிட்ட வாறு நடந்தோம். நான் இறுதியாளாகச் சென்றுகொண்டிருந்தேன். கொய்யாவைக் கடிப்பதற்கு வாயருகே கொண்டுசெல்லும் சமயம் எங்கி ருந்தோ வந்த குரங்கு சட்டெனப் பாய்ந்து என்னிடமிருந்து கொய்யாத் துண்

டைப் பறித்துக்கொண்டு கடந்தது. நான் பயந்துவிட்டேன். இதயம் வேகமாக அடித்தது. மேற்கொண்டு நடக்கையில் அனைவரும் அவதானமாகவே நடந்தோம்.

கற்பாறைகளும், மரத்தின் வேர்களுமான பாதையால் நடந்து குணா பாறையை அடைந்தோம். பயணிகள் ஆவலாய் பாறையை நெருங்கிச் சென்று பார்ப்பதற்கு இறங்குகையில் சிலர் விழுந்து காயமடைந்த, உயிரிழந்த நிகழ்வு களால் எவரும் இறங்கிச்செல்ல முடியாதவாறு கம்பிவலையால் அடைத் துள்ளனர். கம்பி வலையோரம் நின்று பல கோணங்களில் குகையைப் பார்க்கக் கூடியதாக இருந்தது. குகையோடு சேர்த்துப் பயன்படுத்திய பாலம், கற்பாறை போன்றவற்றில் ஏறிப் பார்க்கக்கூடியதாக இருந்தது. இந்த இடத்தை, நிலத்துக்குக் கீழிருந்த கற்பாறைக் குகையை தேர்ந்தெடுத்துப் படமாக்கிய கமலஹாசனை பாராட்டாமல் இருக்க முடியாது.

மிகவும் பழமை வாய்ந்த முருகைக் கற்களால் கட்டப்பட்ட மாதா சிற்றாலயம் இருந்தது. பல படிகள் ஏறியே சிற்றாலயத்தை அடைய முடியும். ஏறிச்சென்று வழிபட்டோம். பழமையில் எந்த மாற்றமோ திருத்தமோ இல்லாது காணப்பட்டது. அங்கு இருந்த மாதா சுரூபத்தில் உள்ள ஒரு சிறப்பு மாதா சிரித்தவாறே காணப்படுகிறார்.

கொடைக்கானலை முற்றாகப் பார்ப்பதென்றால் ஒருநாள் போதாது. எமக்கு கால அவகாசம் இல்லாத காரணத்தால் ஒரு நாளில் அதுவும் குறைந்த நேரத்தில் மேற்குறித்தவை தவிர வேறெதனையும் பார்க்க முடியவில்லை. இருப்பினும் பயணித்த பாதையில் தெரிந்தவற்றை சிறிது நேரம் நின்று பார்த்துச் சென்றோம். அவை இங்கு குறிக்கப்படவில்லை.

தூத்துக்குடி மாவட்டம்

தூத்துக்குடி

இது, இந்தியா - தமிழகத்திலுள்ள ஒரு நகரமும், அதே பெயரை யுடைய மாவட்டத்தின் தலைநகரமுமாகும். மன்னார்க் குடாவிலுள்ள துறைமுக நகரான இது, முத்துக் குளிப்புக்குப் பிரசித்தி பெற்ற இடமாகும். நீர் நிறைந்த நிலத்தை தூற்று, துறைமுகமும் குடியிருப்பும் தோன்றிய இடமாகை யால் 'தூற்றுக்குடி' என அழைக்கப்பட்டு பின்னர் 'தூத்துக்குடி'யாக மருவியதாகவும் கூறப்படுகிறது.

தூத்துக்குடியின் கரையோரம் முன்னர் பெரும் காடாக இருந்ததாம். இராணவணன் சீதையைக் கடத்திச் சென்ற பின்பு அவளைத் தேடிவர அனுமானை அனுப்பிவிட்டு இராமன் இக்காட்டுப் பகுதியில், மந்திரங்களை உச்சரித்தபடி தவஞ்செய்யத் தொடங்கினாராம். அவருடைய தவத்திற்கு கடலலைகளின் பேரிரைச்சல் இடையூறாக இருக்க, இராமன் கடலலைகள்

சப்தம் எழுப்பாதிருக்கச் சபித்து விட்டாராம். அன்றுமுதல் இப்பகுதியில் கடலலைகள் அடங்கி சப்தம் இல்லாமல் போய்விட்டதாம். இதனால் 'திருமந்திர நகர்' என அழைக்கப்படலாயிற்று.

தூத்துக்குடி கடலில் ஆண்டுக்கொரு முறை முத்துக்குளித்தல் நடை பெறுகிறது. இது ஒரு பிரதான வருவாயுள்ள தொழிலாகையால் 'முத்துக்குளியல் துறை' என அழைக்கப்பட்டு பின்னாளில் 'முத்துநகர்' என மாற்றம் பெற்றதாகவும் கூறப்படுகிறது.

மன்னார்க் குடா அருகில் அமைந்துள்ள தூத்துக்குடி துறைமுகம் இயற்கைத் துறைமுகமாகும். புயல் தாக்கமுடியாத பூகோள அமைப்பைக் கொண்டுள்ளது. ஆஸ்திரேலியா, நியூசிலாந்து ஆகிய நாடுகளிலிருந்து வரக்கூடிய கப்பல்களுக்கு இந்தியாவின் நுழைவாயிலாகவும் விளங்குகிறது. 600 அடி முகத்துவாரத்தோடு, ஆறு பக்கவாட்டுத் தளங்களையும், பல கிட்டங்கி களையும் கொண்டமைந்துள்ள பிரதானமான துறைமுகமாகும்.

கோரைப் புற்களைக்கொண்டு பாய் பின்னுதல், உப்பு சேகரித்தல், மீன் பிடித்தல், நூலாலைகள் போன்றவை இங்குள்ள பிரதான தொழில் களாகும். கனிவளங்களும் நிறையவே உள்ளன. இங்குள்ள கத்தோலிக்கத் தேவாலயமான தூய பனிமய மாதா பேராலயம் மிகவும் பிரபலமானது.

தூய பனிமயமாதா பேராலயம்

தூத்துக்குடி நகரின் கடற்கரையோரமாக அமைந்து, 'தங்கத் தேரில்' வீதி வலம்வரும் 'தூய பனிமய மாதா'வின் பேராலயத்திற்கு நீண்ட வரலாறு இருப்பதை அறியக் கூடியதாக இருந்தது.

'இரக்கத்தின் பனிமயமாதா ஆலயம்' என்னும் பெயரில் கட்டப்பட்ட இவ்வாலயம் 05.08.1582 அன்று புனிதப்படுத்தும் சடங்கு செய்யப்பட்டு, திருவிழாத் திருப்பலி நிறைவேற்றப்பட்டது. உரோமையிலுள்ள 'பனிமய மாதா பேராலய'த்தின் சாயலாகவே இவ்வாலயம் கட்டப்பட்டது.

மதுரை நாயக்க மன்னன் 1603ஆம் ஆண்டில் படையெடுத்து வந்து தூத்துக்குடியைத் தாக்கினான். அங்கிருந்த இயேசு சபைக் குருக்களின் தலைமையகம், இராயப்பர் ஆலயம், பனிமயமாதா ஆலயம் போன்றவற்றை இடித்துத் தீ மூட்டினான். அங்கிருந்த பெறுமதிமிக்க பொருட்களையும் சூறையாடினான். பனிமயமாதா சுரூபத்தை மட்டும் ஒருவாறாக மக்கள் மீட்டெடுத்து மறைத்து வைத்தனர்.


மதுரை நாயக்கனின் கொடுமைகளிலிருந்து தப்பிப்பதற்காக தூத்துக் குடியையும் அதை அண்டிய ஊர்களையும் சேர்ந்த மக்கள். தூத்துக்குடிக்கு எதிரேயிருந்ததும் தற்போது 'முயல் தீவு' என அழைக்கப்படுவதுமான 'ராஜா தீவில்' குடியேறினர். அங்கு 02.07.1604இல் அடிக்கல் நாட்டப்பட்டு கட்டப் பட்ட ஆலயத்தில், 1606இல் மக்கள் தம்முடன் எடுத்துவந்த பனிமயமாதா சுரூபத்தை ஆடம்பரச் சிறப்போடு வைத்து வழிபடத் தொடங்கினர். 1609ஆம்

ஆண்டு அங்கிருந்து வெளியேறி மீண்டும் சொந்த இடங்களில் குடியேறும் போது பனிமயமாதா சுரூபத்தையும் எடுத்து வந்தனர்.

இடிந்து பாழாய்க் கிடந்த இராயப்பர் ஆலயத்தை புனரமைக்கும் வேலை முடிவுற்றதும் மக்கள் தங்களின் வழிபாட்டிற்காக அங்கேயே பனிமய மாதா சுரூவத்தை வைத்தனர். 1621 இல் பனிமய மாதா ஆலயம் முன்னர் இருந்த இடத்தில் எளிய முறையில் ஒரு ஆலயத்தை கட்டி மாதா சுரூபத்தை அங்கே வைத்துப் பாதுகாத்தனர்.

1655இல் ஒல்லாந்தர் தூத்துக்குடியைக் கைப்பற்றியபோது ஆலயங் களை கையகப்படுத்தியதால், பனிமயமாதாவை இரகசியமாக எடுத்துச்சென்று சிவந்தாகுளம், கொற்கை போன்ற ஊரில் மறைவாக வைத்துப் பாதுகாத்த மக்கள், 1699இல் தூத்துக்குடியில் இடித்தழித்த ஆலயங்களை அமைக்க அனுமதி கிடைத்ததும். அச்சுரூபத்தை புதிதாக அமைத்த குருவானவர் இல்லத்திற்குக் கொண்டு வந்தனர்.

ஒருநாள் கடும் மழை பெய்கையில் பனிமய மாதா வைக்கப்பட்டி



ருந்த இடத்தை இடி தாக்கி கூரையைப் பிய்த்துக்கொண்டு அப்பகுதியைச் சேதப்படுத் தியது. மாதா சுரூபமும் அச் சுரூபம் வைக்கப்பட்டிருந்த பீடமும் சேதமுற்றதுடன் இடி யின் கெந்தகப் புகையினால் சுரூபம் கருநீல நிறமாக மாறியிருந்தது.

10 ஆண்டுகளின் பின் னர் மக்கள் வழங்கிய நிதி உதவியினால் போர்த்துக்கேய கட்டடக்கலை அமைப்பில் கட்டப்பட்ட பனிமய மாதாவின் புதிய ஆலயம் 05.08.1713 அன்று புனிதப்படுத்தும் சடங்கு செய்யப்பட்டு, திருவிழாத் திருப்பலி நிறைவேற்றப் பட் டது. இந்த ஆலயமே இன்று வரை இருக்கின்றது.

தூத்துக்குடி செல்வதற்காக வத்தலக்குண்டிலிருந்து தொடருந்தில் புறப்பட்ட நாம், மதுரை சென்று அங்கிருந்து தூத்துக்குடி செல்ல இரவு 12.00 மணிக்கு மேலாகிவிட்டது. அண்மையிலிருந்த ஹொட்டலில் தங்கியிருந்து காலை உணவு அருந்திய பின்னர் முச்சக்கர வண்டியில் பனிமயமாதா பேராலத்தை அடைந்தோம்.

பண்டைய ஆலயம் சில தடவைகள் புனரமைப்புச் செய்யப்பட்டுள் ளதை இனங்காணுவது கடினமாக இருக்கவில்லை. முகப்பும் மணிக் கோபுரமும் அப்படியே அமைந்திருக்க முகப்பிலிருந்து முன்னோக்கி நீளமாகக் கட்டப் பட்டு சிறிய கோபுரமும் அமைக்கப்பட்டுக் காணப்பட்டது. முகப்புக்கு முன்னால் நீண்டுள்ள ஆலயத்தை இங்கு மட்டும்தான் கண்டிருக்கின்றேன்.

பேராலயமாக தரமுயர்த்தப்பட்டுள்ள ஆலயத்திற்கு முன்னால் பிரதான கடற்கரை வீதியும், 100 மீ. தூரத்தில் கடலும் உள்ளது. நீளமாக உள்ள ஆலயத்தின் முன் அலங்கார முகப்பற்ற மண்டபத்தில் நுழைந்தோம். கருநீல நிறமாக மாறிய பனிமய மாதாவின் சுரூவம் கண்ணாடிப் பீடத்தில் வைக்கப் பட்டிருந்தது. பண்டைய போர்த்துக்கேய நாகரிகத்தின் அடையாளமாக ஆலயத்தை காணக்கூடியதாகவும், அலங்கரிக்கப்பட்ட பீடப்பகுதி கண்ணுக்கு விருந்தாகவும் இருந்தது. வழிபாட்டை முடித்து வெளியேறினோம்.

ஆலயத்தின் இடதுபக்கம் உள்ள இரண்டு கட்டங்களில் தேர்கள் விடப்பட்டிருந்தன. ஒன்று தங்கத் தகடுகள் பொருத்தப்பட்ட 'தங்கத்தேர்'. அது மிகவும் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது. ஆலயத் திருவிழா ஆவணி மாதம் 05ஆம் திகதியாகும். 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை தங்கத்தேரில் தூய பனிமயமாதா பவனி வரும் 'தங்கத்தேர் திருவிழா' இவ்வாலயத்தின் சிறப் பானதொரு திருவிழாவெனவும், இன மத பேதமின்றி திரளான மக்கள் இவ் விழாவில் கலந்து கொள்வார்கள் எனவும் அறியக்கூடியதாக இருந்தது. ஏனைய திருவிழாக்களின் தேர்ப்பவனிக்கு சாதாரண தேர் பயன்படுத்தப்படுகின்றது.

தங்கத்தேர் திருவிழா நடைபெறுவதற்கு இன்னமும் மூன்று வாரங் களே (2009ஆம் ஆண்டு) இருப்பதால் தங்கத்தேரை துப்பரவு செய்யும் வேலை நடைபெற்றுக்கொண்டிருப்பது கண்டு, திறந்திருந்த ஒரு பக்கக் கதவால் கட்டடத்தின் உள்ளே பளபளக்கும் தங்கத் தகடுகள் பொருத்தப்பட்ட தேரை எம்மால் பார்வையிட முடிந்தது. எம்மை இலங்கையர் என இனங்கண்டதால் துப்பரவு செய்தவர்கள் எதுவும் கூறவில்லை. ஆனாலும், நாங்கள் உள்ளே செல்லவில்லை.

ஆலயத்தில் சிறிது நேரம் ஓய்வெடுத்துப் பின்னர் கடற்கரை வரை சென்று, இரைச்சல் பெரிதுமின்றிச் சீறியெழும் கடலைப் பார்வையிட்ட பின்னர், 'உவரி' செல்வதற்காக 'தேனி' செல்லும் பேருந்தில் பயணித்த நாம், உவரிக்குச் செல்லும் பேருந்துக்காக தேனியில் ஒரு மணித்தியாலம்வரை காத்திருக்க வேண்டியதாயிருந்தது. பேருந்து நிலையத்தில் பனங்கிழங்கு விற்பனை பிரதான வியாபாரப் பொருளாக இருந்தது. நாமும் அதனை வாங்கிச் சாப்பிட்டோம். யாழ்ப்பாணக் கிழங்குக்கு சளைத்ததாக இருக்கவில்லை.

உவரி செல்லும் பாதையில் பல கிராமங்களைக் காணக்கூடியதாக இருந்தது. அந்தப் பகுதியெங்கும் வெண் மணலும், பனை மரங்களும் நிறைந்து காணப்பட்டது. இடையில் ஒரு இடத்தில் பயணிகளை ஏற்றுவதற்காக பேருந்து தரித்தது. அந்த இடத்தில் மண்ணுக்குள் புதையுண்டிருந்த ஆலயம் பார்வையில் பட்டது. ஆலயக் கோபுரத்தின் பாதி வரையே மேல் தெரிந்தது. ஏனைய கட்டடம் முற்றாக மணலின் புதையுண்டிருந்ததை பார்க்கக்கூடியதாக இருந்தது. இறங்கி அருகே சென்று பார்த்துவர அவகாசம் இருக்கவில்லை. அதுபற்றிய விபரத்தையும் அறியவும் முடியவில்லை. பேருந்து புறப்பட்டது. மதியம் தாண்டிய பின்னர் உவரியை வந்தடைந்தது.

திருநெல்வேலி மாவட்டத்தில், 75 கி.மீ. தூரத்தில் குறைந்த மக்கள் தொகையைக் கொண்ட கடலோரக் கிராமமே 'உவரி'. இங்குள்ள மக்களின் பிரதான தொழில் மீன்பிடியேயாகும். ஆழமான அந்தக் கடலில் கட்டுமரங்கள், சிறு கண்ணாடி நாரிழைப் படகுகளில் சென்று மீன்பிடித் தொழிலைச் செய்துவருகின்றார்கள். சுனாமி அனர்த்தத்தால் பெரிதும் பாதிக்கப்பட்ட கிராமங்களில் இதுவுமொன்று.

கடற்கரை ஓரமாக தூய அந்தோனியார் ஆலயமும், முன்பக்க திசையில் இருநூறு மீற்றர் தூரத்தில் தூய செல்வமாதா ஆலயமும் இருக்கின்றன. இவ்விரண்டு ஆலயங்களுக்கும் இடையில் 100 இற்கும் மேற்பட்ட வீடுகள் உள்ளன. வீடுகளுக்கு முன்னால் கடற்கரைப் பக்கமாக தார் வீதி இருந்தது. மின் கம்பங்கள், இரு பக்க மரங்களுடன் கடற்கரையோர மீன்வலைக் கூடமும் இருந்தன. சுனாமியின் தாக்கத்தால் சில வீடுகளும் ஏனையவை அனைத்தும் கடலுக்குள் இழுத்துச் செல்லப்பட்டதாக அறியப் படுகிறது. இப்போது அந்த இடம் முற்றிலும் வெண்மணலாகவே காணப்படு கின்றது. அடிக்கடி ஏற்படும் கடல் சீற்றத்தால் சில வீடுகள், பல வீடுகளின் சுவர்களை கடல் இழுத்துச் செல்வதுண்டு. இடையிடையே கடல் அத்தி பாரத்தை அரித்துச் செல்வதால் உயிர் பயத்திலேதான் மக்கள் அங்கு தொழிலுக்காக வாழ்கிறார்கள்.

பேருந்து தரிப்பிடத்திற்கு அருகாமை இருந்த உணவகத்தில் மதிய உணவை அருந்தினோம். அங்கிருந்து மணல் தரையால் நடந்துசென்று புனித அந்தோனியார் ஆலயத்தை அடைந்தோம்.

புனித அந்தோனியார் ஆலயம்

பிரமாண்டமான ஆலயமாக இருந்தது 'தூய அந்தோனியார் ஆலயம்'. கடலரிப்பைத் தடுப்பதற்காக ஆலயத்துக்கு வலது பக்கம் கடற்கரை யோரம் பத்து அடிக்கும் மேற்பட்ட உயரத்தில் அணை கட்டப்பட்டு மணல் கொண்டு மேவப்பட்டிருந்தது. இந்த அணை முன்னர் பதிவாக இருந்த தாகவும், சுனாமியின் தாக்கத்தால் அணை பிடுங்கப்பட்டு ஆலயம் முற்றாக வீழ்ந்து நொருங்கியதுடன் கட்டடச் சிதைவுகளை கடல் அள்ளிச் சென்ற தாகவும் அறியப்படுகிறது.

சுனாமியின் பின்னர் புதிதாக கட்டப்பட்டுள்ள ஆலயமே இதுவாகும். ஆலய முகப்பின் வலதுபக்கம் கண்களை உறுத்தியவாறு இருந்த, சுனாமியால் நிர்மூலமாக்கப்பட்ட ஆலய அடித்தளத்தின் பாகம் பேரழிவை நினைவூட்டு வதாக இருந்தது. அணையில் நின்று கடலலைப் பார்த்து அதனுடைய ஆர்ப்பரிப்பைப் கண்டு வியந்தோம். சாதாரண நிலையிலே இவ்வளவு அலையும் வேகமுமென்றால் சீற்றத்தின்போது எவ்வாறு இருந்திருக்கும் என்பதை சிந்தித்த போது தேகம் சிலிர்த்தது.

ஆலயத்தின் உள்ளே சென்று மெழுகுவர்த்தி ஏற்றி வழிபட்டோம். ஆலயத்தின் இடது பக்கம், நடுவிலே தூண்களற்ற பிரமாண்டமான மண்டபம் கட்டப்பட்டிருந்தது. அதற்கு முன்பக்க மறைப்பு இருக்கவில்லை. கணிசமான பக்தர்கள் அங்கு தங்கியிருந்தார்கள். மண்டபத்தின் விசாலம் மற்றும் பக்தர்களின் தொகையைப் பார்க்கும்போது பிரசித்தமான, நம்பிக்கைக்குரிய ஆலயமாக தூய அந்தோனியார் ஆலயம் இருக்கவேண்டுமெனத் தோன்றியது.

மண்டபத்தில் நாங்களும் சிறிது நேரம் அமர்ந்திருந்த பின்னர், எதிரே தென்பட்ட குடியிருப்புகளுக்கு முன்னால் உள்ள மணல் தரையால், தூய செல்வமாதா ஆலயத்தை நோக்கி நடந்தோம்.

இடையில் கடற்கரையோரமாக கட்டுமரங்களும், சிறிய கண்ணாடி நாரிழைப் படகுகளும் மணல்மேல் ஏற்றிவைக்கப்பட்டிந்தன. அவற்றுக்கு முன்னால் மீன்பிடி வலைகள் பல குவியல்களில் கிடந்தன. உச்ச வெயிலிலும் பலர் வலைகளைச் செம்மைப்படுத்துவதில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர்.

அவர்களுடன் சிறிதுநேரம் உரையாடினோம். சென்னையில் பேசுகின்ற தமிழுக்கும் இவர்கள் பேசுகின்ற தமிழுக்கும் நிறையவே வித்தியாசம் இருந்தது. எம்மவருடைய பேச்சுக்கு ஓரளவு இணையாகவும் இருந்தது. அந்தப் பகுதி கத்தோலிக்கர் நிறைந்த இடமாக இருந்தும் இந்து மதத்தவர்களும் கலந்து தொழில் செய்கின்றனர். அவர்களும் அங்கு நின்றனர். அவர்களிடம், ஆலயங்கள் - கோயில்கள் மற்றும் ஊர்மக்கள் பற்றி உரையாடினோம்.

உரையாடலின்போது, கிட்டத்தட்ட ஐந்துமைல் தொலைவில் இயற்கை எழில்மிக்க கடற்கரையோரமாக அமைந்துள்ள 'சுயம்புலிங்க சுவாமி' கோயில் பற்றி குறிப்பிட்டார்கள். அங்கு சிவன், 'சுயம்பு லிங்கோத் பவரா'க எழுந்தருளியுள்ளார். நான்கு நன்னீர் ஊற்றுக்கள் அமைந்துள்ளன. இவற்றிலிருந்து சுயம்புநாதருக்கு அபிஷேகத்துக்கு தண்ணீர் கொண்டு செல்லப்படுகிறது.

பனங்கூடலிலுள்ள குடியிருப்பிலிருந்து தினமும் பால் விற்க சென்று வரும் ஒருவர், ஒரு இடத்தில் வரும்போது எப்போதும் காலிடறி விழுந்து கொண்டேயிருந்தார். காலிடறக் காரணமாக இருந்த 'கடம்ப மர'த்து வேரை வெட்டியபோது இரத்தம் பீறிட்டது. இறைவனும் அசரீரியாக, தான் இந்த இடத்தில் குடிகொண்டிருப்பதாகவும், தனக்கு கோயில் கட்டி வழிபாடு செலுத்தும்படி சொல்லக் கேட்டுப் பனை ஓலையில் கோயில் கட்டினார். நாளடைவில் பெரிய கோயிலாகக் கட்டப்பட்டது. சுவாமியை



வழிபட்டால் கூன், குஷ்டம் ஆகிய நோய்கள் குணமாதலால் இத்தலம் மிகவும் பிரபலமாக உள்ளதென அவர்கள் கூறினார்கள்.

தூய செல்வமாதா ஆலயம் (தூய கப்பல் மாதா ஆலயம்)


இதுவரை நான் பார்த்த ஆலயங்களில் வித்தியாசமான ஆலயமாக இருந்தது 'தூய செல்வமாதா ஆலயம்'. கடற்கரையில் கட்டப்பட்டுள்ள இவ்வாலயத்தின் தரைப்பகுதி நீரூர்தி தோற்றத்திலும் கூரைப்பகுதி வானூர்தி தோற்றத்திலும் காணப்படுகின்றது. பார்வைக்கு, கடலில் நீருர்தி வானூர்தியை ஏந்தி வைத்திருப்பது போன்ற தோற்றத்தையே கொண்டிருக்கிறது. இதனால் 'தூய கப்பல் மாதா ஆலயம்' எனவும் அழைக்கப்படுகின்றது.

முன்பு கட்டப்பட்டிருந்த தூய செல்வமாதா ஆலயம் கடல் அரிப்பு காரணமாக முற்றாக அழிந்துவிட்டது. பின்னர், 1974ஆம் ஆண்டு அவ்வாலயத்தின் இடிபாடுகளின்மீது இப்போதுள்ள ஆலயம் கட்டியெழுப்பப் பட்டுள்ளதாக அறியப்பட்டது.

கோவா கிறிஸ்வ குருமார்களால் பல்லாண்டுகளாகப் பராமரிக்கப் பட்டுவந்த இவ்வாலயத்தின் சக்தி பற்றி பல கதைகள் பேசப்படுகின்றன. பாரம்பரிய சடங்குகளும் செய்யப்படுகின்றன. இளம் பெண்கள் இங்கு வந்து ஓர் இரவு முழுவதும் தங்கிச் செல்வது அவற்றில் ஒரு சடங்காக அனுசரிக்கப் படுகிறது.

முன்பொருநாள், இரவில் ஆலயத்திலுள்ள தூய செல்வ மாதாவின் சுரூபம் மீது பிரகாசமான ஒளி தோன்றி ஒரு மணி நேரம் வரை பிரகாசித்ததாம். வேறு விளக்கோ மெழுகுவர்த்தியோ எரியாதபோது இவ்விதமான அதிசய ஒளி தோன்றிய புரட்டாதி மாதம் 18ஆம் நாளை ஆண்டுதோறும் வெகு விமரிசை யாகக் கொண்டாடி வருகிறார்கள்.

கடற்கரை மணலிலிருந்து நீரூர்தி மேல் தளத்துக்குச் செல்வதற்கு படிகள் அமைக்கப்பட்டுள்ளன. படிகளால் ஏறி நீரூர்தி தளத்துக்குச் சென்றோம். அத்தளத்தில் திருப்பலி பீடம் உள்ளது. கண்ணாடிப் பீடத்தில் செல்வ மாதா சுரூபம் வைக்கப்பட்டிருந்தது. சுற்றிவர அடைப்புகள் இல்லாமையால் காற்றோட்டமாக இருந்தது. வழிபாட்டை முடித்து ஆலயத்தை சுற்றிப் பார்த்து வெளியேறினோம்.



நாங்கள் வந்த தேனி பாதையால் செல்லாமல் வேறு பாதையால் தூத்துக்குடி செல்லும் பேரூந்து புறப்படத் தயாராக இருந்ததால் அதிலே ஏறி தூத்துக்குடி - சென்னை

நோக்கிய பயணத்தைத் தொடர்ந்தோம். இந்தப் பேரூந்தில் பயணித்தமையால் சுயம்புலிங்க சுவாமி கோயிலைத் தரிசிக்க முடியவில்லை. இருளாவதற்கு முன்னர் தூத்துக்குடி சென்றேயாக வேண்டிய நிலை.

தொழிலாளர்களுடனான திட்டமிடாத உரையாடல் இப் பகுதியை எழுதுவதற்குப் பெருந்துணையாக இருந்தது எனலாம்.

000

தமிழ்நாடு / குற்றாலத்திலிருந்து புறப்பட்டு மணிமுத்தாறு பகுதியில் உணவருந்திய பின்னர், கேரளா மாநிலத்திலுள்ள கொச்சி நோக்கிப் பயணத்தைத் தொடர்ந்ததைக் குறிப்பிட்டிருந்தேன். கொச்சிக்குச் செல்லும் பாதை மலைகள் நிறைந்த பகுதி. மலைகள் மீது ஏறி, இறங்கிச் செல்ல வேண்டும் என்பதால் அப்பயணம் எமக்குப் புது அனுபவமாக இருந்தது. குற்றாலக் குளிப்பு, மணிமுத்தாறில் அருந்திய நிறைவான உணவின் அசதியுடன் மின்னொளிகளற்ற காட்டு மலைப் பாதையால் பயணிப்பது எமக்குப் பயத்தை உண்டாக்கியது. வாகனச் சாரதிக்கு இது புதிதல்ல என்பதை அவரது செலுத்துதல் மூலம் உணரக் கூடியதாக இருந்தது. அதனால் தென்பு ஏற்படவே செய்தது.

வாகன ஒளியைத் தவிர வேறு ஒளிகளெதுவும் இன்மையால் உள்ளே இருந்த எங்களால் எதையும் அறிய முடியவில்லை. இடையிடையே உள்ள கிராமங்களில் சிறிது தூரத்திற்கும், ஆங்காங்கு இருந்த சிறிய கோப்பி அருந்தகங்களிலும் ஒளியைக் காணக்கூடியதாக இருந்தது. ஓய்வுக்காக அருந்தகங்களில் வாகனத்தை நிறுத்தி கோப்பி அருந்திச் சென்றோம்.

அதிகாலை ஒருமணி இருக்கும் வானம் பிளந்ததுபோல மழை பெய்யத் தொடங்கியது. இதனால் வாகனத்தை சாரதியால் வேகமாகச் செலுத்த முடியவில்லை. மழை குறையும்வரை தரித்து நிற்க நேரிட்டதால் எமது பயணம் காலைவரை தொடர்ந்தது.

கேரளா மாநிலம்

கேரளா

'கேரளம்', 'மலையாளம்' ஆகிய பெயர்களால் 'கேரளா' அழைக்கப் படுகிறது. இது கிழக்கில் தமிழ் நாட்டையும் வடக்கில் கர்நாடகத்தையும் எல்லையாகக் கொண்டுள்ளது. மேற்கே அரபுக்கடல் உள்ளது. இதன் தலைநகரம் 'திருவானந்தபுரம்'. நீர் வளமும் நில வளமும் ஒருங்கே பெற்று பசுமையாய், எழிலாய், செழிப்பாய் காணப்படுகிறது.

இராமாயண காலத்தில் வாழ்ந்த ஸ்ரீ பரசுராமர் அரேபியக் கடலில் தனது கோடரியை வீசி எறிந்தபோது, இந்தக் கேரள மாநிலப்பகுதி கடலில்

இருந்து துண்டிக்கப்பட்டு வேறாகி வந்துவிட்டது என்ற கதை வழக்கி லுள்ளது.

வரலாற்றுக் காலத்தில் சேரநாடு என அழைக்கப்பட்ட இடமே தற்போதைய 'கேரளா' வாகும். 'கேரளா' என்ற பெயர் தமிழ்ச் சொல்லான 'சேரளம்' (மலைச்சரிவு) அல்லது 'சேரநாடு' என்பதிலிருந்து தோன்றியி ருக்கலாமெனக் கருதப்படுகிறது. கேரளா மக்கள் 'மலையாளிகள்' என்றும் அழைக்கப்படுகிறார்கள். 'மலையில் வாழ்பவர்கள்' என்பதே அதன் பொருள்.

இந்தியாவின் நறுமணத் தோட்டமாக விளங்கும் கேரளா, இந்திய செவ்வியல் நடன வடிவமான கதகளி மற்றும் களரிப் பயிற்சி, தற்காப்புக் கலையின் பிறப்பிடமாக விளங்குகின்றது. இந்திய மாநிலங்களில் கல்வியறிவு விகிதத்தில் முதலிடம் வகிக்கும் இம் மாநிலத்தில், முதன்மை மொழி மலையாளம். தமிழ் பேசுவோரும் கணிசமாக இருக்கின்றனர்.

உலகெங்குமிருந்து இலட்சக்கணக்கில் சுற்றுலாப் பயணிகள் வருகை தருமிடமாக கேரளா உள்ளது. கடற்கரைகளில் வரிசையாகக் காணப்படும் தென்னை மற்றும் பனை மரங்களும், அழகும் அமைதியும் நிரம்பிய கடல் நீரேரிகளில் மிதக்கும் படகு இல்லங்களும், கவின் கொஞ்சும் தீவுகளும், எண்ணற்ற கோயில்களும் சுற்றுலாப் பயணிகளுக்கு கரும்பாக இனிக்கிறது. அத்தோடு ஆண்டுதோறும் நடத்தப்படும் பாரம்பரிய பாம்பு படகுப் போட்டி யில் கடல்நீரேரியைக் கிழித்துக்கொண்டு மின்னல் வேகத்தில் சீறிப் பாய்ந்து செல்லும் படகுகளை வேடிக்கை பார்க்கும் சுற்றுலாப் பயணிகளின் கூட்டம் எல்லையற்றது.

வேறுபட்ட ஒரு கலாசாரத்தைக் கொண்டுள்ள கேரளா மாநிலத்தில் காணப்படும் பலவகைப்பட்ட கலைவடிவங்களும், உணவு வகைகளும், ஆடை - ஆபரணங்களும் இந்தியாவின் ஏனைய பகுதிகளிலிருந்து முற்றிலும் வித்தியாசமானதாகக் காணப்படுகிறது. இலங்கையர், குறிப்பாகத் தமிழ் மக்கள் தயாரிக்கும் பிட்டு, இடியப்பம், அப்பம், மீன் உணவுகள், சிவப்பரிசி சோறு போன்றவற்றின் பாவனை இங்கு பரவலாகக் காணப்படுகிறது. தேங்காய்ப் பால், காரமான மிளகாய் உள்ளடக்கி ஆக்கப்படும் கறிகள் மற்றும் அரைத்த கறி போன்றவற்றை ஒத்தனவாகவும் இருந்தன.

உரையாடல் பாவனை, உபசரிப்பு போன்ற பல விடயங்களில் எம்மவருடன் ஒத்ததாகக் காணப்படும் கேரளாலில் திருவானந்தபுரத்துக்கு அடுத்ததாக பெரிய மற்றும் சிறப்புக்கள் மிகுந்த நகரமாகக் காணப்படும் 'கொச்சி' நகரை காலை ஏழு மணிக்கு வந்தடைந்தோம்.

கொச்சி

'கேரளா' மாநிலத்தில் 'அரபிக்கடலின் அரசி' என அழைக்கப்படும் மிகப்பெரிய நகரமே 'கொச்சி'. சேர மன்னர்களின் ஆட்சிக்காலம் முதல் இன்று வரை இது முக்கியமான, பிரசித்தமான துறைமுக நகராக விளங்குகின்றது.

முன்னர் 'கொச்சின்' என்ற பெயரிலேயே இக்கடற்கரை நகரம் அழைக்கப்பட்டது. பின்னர், 'சிறிய தீவு' என்று பொருள்படும் (சிலர் 'சிறிய குளம்' என்றும் பொருள்கூறுவர்) 'கொச்சு அழி' என்னும் மலையாள மொழிச் சொல்லிலிருந்து பிறந்த பெயராக 'கொச்சி' என்ற பெயர் வழங்கப்பட லாயிற்று. வரலாற்றுக் காலத்தில் மட்டுமன்றி இன்றும், உலகளாவிய சுற்றுலாப் பயணிகளால் விரும்பப்படும் நகரமாக புகழ்பெற்று விளங்குகிறது.

14ஆம் நூற்றாண்டு முதல் வாசனைத் திரவியங்கள், மூலிகைப் பொருட்களின் வணிக மையமாகத் திகழ்ந்துள்ளது. யூதர், சீனர், போர்த்துக் கேயர், கிரேக்கர், அரேபியர், ரோமானியர் போன்றோர் தமது நாடுகளிலிருந்து கடல் கடந்துவந்து, வாசனை மற்றும் மூலிகைப் பொருட்களை கொள்வனவு செய்வதிலும், தாம் கொண்டுவந்த பொருட்களை விற்பனை செய்வதிலும் ஈடுபட்டிருந்தனர். இவ்வாறு பல நாகரீகங்களை உடைய மக்களுடன் ஏற்பட்ட தொடர்பே கொச்சியில் பன்முகத் தன்மை கொண்ட கலாசாரம் உருவாக வழிவகுத்தது. மக்களின் தேவைக்கேற்ப நவீன மேற்கத்தைய கலாசாரம், பாரம்பரிய இந்திய மரபு ஆகியவற்றின் சீரான பிணைப்பு இந்த நகரத்திற்கு உன்னதமான அடையாளத்தைத் தந்திருக்கிறது.

கொச்சியை வந்தடைந்த நாம், கடல் நீரேரிக்கு அண்மையிலிருந்த 'ஹொட்டலி'ல் தங்கிக்கொண்டோம். காலை உணவாக இட்லி சாப்பிட் டோம். அங்கு காலையும் - மதியமும் இந்தியாவின் பொதுவான உணவு வகைகளும், இரவில் கேரளா உணவு வகைகளும் விற்பனை செய்யப் படுகின்றன.

ஒரு மணிநேர ஓய்வின் பின்னர் புறப்பட்டு கடல்நீரேரியை அடைந்தோம். பயணிகளை ஏற்றி, ஏரியில் சில இடங்களுக்கு அழைத்துச் சென்று பார்வையிட்டு திரும்பும் பணியில் ஈடுபடும் இயந்திரப் படகுகளும், நாட்கணக்கில் குழுமமாகத் தங்கிவரக்கூடிய வசதிகளைக்கொண்ட 'படகு வீடு'களும் இருந்தன. அவை மிதக்கும் ஹொட்டல்களாக இயங்குகின்றன. இயந்திரப் படகு ஒன்றிற்கு கூலியைப் பேசி அதிலேறி அனைவரும் புறப்பட் டோம்.

சாதாரண வேகத்தில் படகு பயணித்தது. பயணித்த பாதையில் காணப்பட்ட இடங்கள் பற்றிய விளக்கத்தை படகோட்டியுடன் கூடவந்த ஒருவர் சொல்லிக்கொண்டே வந்தார். ஒரு தனித் தீவு காணப்பட்டது. அங்கு, திரும்பி வரும்போது செல்லலாமெனக் கூறிவிட்டு ஏனைய பகுதிகளுக்கு அழைத்துச் சென்றனர். சில இடங்களுக்குக் கரையோரமாகச் சென்றபோதும் ஆட்கள் இறக்கப்படவில்லை.


கொச்சி கோட்டை வளாகக் கரையில் பயணிகள் இறக்கப்பட்டனர். கடற்கரையோரம் காணப்பட்ட மூங்கில் தாங்கிகளில் பொருத்தப்பட்ட மீன்பிடி வலைகளை அதிசயமாகப் பார்த்தோம். இதுவரை நான் கண்டிராத மீன்பிடி முறையாகத் தெரிந்தது. விசாரித்தபோது 'சீன மீன்பிடி வலை'த்

தொழிலென்று கூறினார்கள். இந்த மீன்பிடி முறை, 'கோல் இழு வலை' என அழைக்கப்படுகிறது. இந்தத் தொழில் சீனாவில் பெரிதும் பயன்படுத்துவ தாகவும். வலைகள் யாவும் சீனாவிலிருந்து தருவிக்கப்படுவதாகவும் அறியக்கூடியதாக இருந்தது. இது ஒரு வித்தியாசமான இழு வலையாகும்.

கோட்டை வளாகத்திலுள்ள 'மட்டஞ்சேரி' அரண்மனையைப் பார்வையிட்டோம். அரண்மனைக்கு அண்மையிலிருந்த 'சாண்டா குருஸ் தேவாலயத்'துக்குச் சென்று தரிசித்தோம். மிகவும் பழமைவாய்ந்த தேவாலய மாகக் காணப்பட்டது. இவை இரண்டும் பிரசித்தி பெற்ற கட்டடங்களாகும்.

அங்கிருந்து புறப்பட்ட படகு அரபிக்கடலில் அமைந்துள்ள கொச்சி கடற்படைத் தளத்துக்குச் சென்றது. கடலில் அடையாளமிடப்பட்டுள்ள பகுதிக்கு அப்பால் கடற்படைத் தளத்தை நெருங்கிச் செல்ல முடியாது. அந்த இடமே பார்வையிடப் போதுமானதாக இருந்தது.

பிரமாண்டமான கடற்படைத் தளம் அது. நவீன ரகம் உட்பட பாரிய பல போர் நீரூர்திகள் ஆங்காங்கு தரித்து நின்றன. சிறிதும் பெரிதுமான கடற் படைப் படகுகள் நூறு வரை காணப்பட்டன. பெரியதொரு 'டொக்கியாட்' தெளிவாகத் தெரிந்தது. அரை மணித்தி யாலம் வரை வட்ட மடித்துப் பார்வையிட்டுத் திரும்பி, கடற்படைத் தளத்திலிருந்து குறிக்கப்பட்ட எல்லைக்கு அப்பால் கடற்கரையில் இறக் கப்பட்டோம். அங்கிருந்து கடற்படைத்தளத்தை பிறிதொரு கோணத்தில் பார்க்கக் கூடியதாக இருந்தது.



போகும்போது கடந்துசென்ற தீவை அடைந்ததும் அங்கு இறக்கப் பட்டோம். பயணிகள் பாதுகாப்பாக இறங்குவதற்கான தளம் அமைக்கப் பட்டிருந்தது. அந்தத் தீவில் ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்து ஆளுனர் மாளிகை உள்ளது. அவர்களது ஆட்சியின் அடையாளங்கள் பல ஆங்காங்கு காணப் பட்டன. ஒவ்வொரு பகுதிகளுக்கும் செல்வதற்கு புல்தரையை ஊடறுத்து சீமேந்து கல் பதிக்கப்பட்ட பாதை இருந்ததால் சென்றுவரக்கூடியதாக இருந்தது.

சிறியதொரு சிற்றுண்டிச்சாலையும் சிறுவர் ஆடுகளமும் இருந்தன. சிற்றுண்டிசாலையில் சிற்றுண்டியும், தேநீரும் அருந்திய பின்னர் அங்கு அழகுறக் காட்சி தந்த பூஞ்செடிகளைப் பார்வையிட்டு படகிலேறி புறப்பட்ட கரையை வந்தடைந்தோம். கரை நெடுகிலும் நிழல்தரும் மரங்களும் அவற்றின் கீழ் இருக்கைகளும் இருந்தன. சுற்றுலாப்பயணிகள் இருக்கைகளில் அமர்ந்தி ருந்தனர். வெற்றிடமாயிருந்த இருக்கைகளில் நாங்களும் அமர்ந்து ஏரியின்,

சுற்றாடலின் அழகை ஒருவர் மாறி ஒருவர் கூற இரசிப்பில் மூழ்கிவிட்டோம்.

இருளாகிச் சென்றதால் ஹொட்டலுக்குத் திரும்பி, இரவு உணவை அங்கேயே அருந்தினோம். இடியப்பமும் கேரளாவின் விசேட உணவும் பெற்று கலந்து சாப்பிட்டோம். விசேட உணவு எம்மவரின் 'கொத்து றொட்டி' போன்ற தன்மையில் தயாரிக்கப்பட்டிருந்தது. அத்துடன் வாழை இலையால் சுற்றப்பட்ட மீன் துண்டும் இருந்தது. வட்டமாக வெட்டிய மீன் துண்டுக்கு மசாலா பூசி, வாழை இலையில் சுற்றி எண்ணெய் விடாது வாணலியிலிட்டு நெருப்பில் வைத்து நன்றாக வேகும்வரை புரட்டிப் புரட்டி எடுப்பதாக சிப்பந்தி கூறினார். மசாலாவில் முழுமையாக ஊறி எண்ணெய் இல்லாமலே பொரித்ததுபோன்று இருந்தமை எமக்கு விசேடமான சுவையைத் தந்தது.

மறுநாள் காலை ஹொட்டலுக்கு உரிய கூலியைச் செலுத்திய பின்னர் சுற்றாடலிலிருந்த பல மாடிகளைக்கொண்ட பிரமாண்டமான விற்பனை நிலையங்களைப் பார்வையிட்டோம். கையடக்க அலைபேசிகள் சென்னையைவிட மிகவும் மலிவாக இருந்தன. தொடர்ந்து வேறு சில இடங்களையும் பார்வையிட்டு சென்னை திரும்பும் நோக்கில் புறப்பட்டோம். அதற்கிடையில் கடலில் குளிக்கும் ஆசையில் அரபிக் கடற்கரைக்குச் சென்றோம்.



அலையின் ஆர்ப்பரிப்புக்கு மத்தியில் கடற்கரை வெண்மணலாக தெரிந்தது. கரையோரமெங்கும் தென்னை மரங்கள் நிறைந்து இருந்தன. அங்கிருந்த பெரும்பாலான குடியிருப்புகள் குடிசைகளாகவே காணப்பட்டன. 'கள்' சீவுதலே அங்குள்ளவர்களின் தொழிலாக இருந்தது. கேரளா கள்ளைப் பற்றி பலரும் பெரிதாகப் பேசுவதால் சுவைத்துப் பார்க்கும் ஆவலில் மரத்திலிருந்து இறக்கிய கள்ளைப் பெற்றுக் குடித்தோம். யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டையில் உடன் மரத்துக் கள்ளைளைப்போல இனிப்பாக இருந்தது. எந்த வகையிலும் சுவையில் குறைவு இருந்ததாகத் தெரியவில்லை.

சுவையான கள்ளு அருந்திய நிறைவுடன் குளிக்கச் சென்றோம். பலர் கடற் குளிப்பில் ஈடுபட்டிருந்தனர். நாமும் குளித்தோம். காற்று சீராக இருந்த தால் கடலின் தாக்கம் குறைவாக இருந்தது. இருப்பினும் அலைகள் வந்து திரும்பும்போது அலையின் உந்துதல் ஆட்களை இழுக்கத் தவறவில்லை. முல்லைத் தீவு கடலில் குளித்ததை நினைவூட்டியது. அந்தக் கடலில் இருந்தமைபோன்று கரையோரத்தில்தான் அலையின் தாக்கம் இருந்தது. சற்று அப்பால் நீரில் நீந்தும்போது அவ்வாறு தெரியவில்லை. என்னால் நிமிர்ந்தவாறு கடல்நீரில்

மிதக்க முடியுமென்பதால் காற்றின் தாக்கக் குறைவைப் பயன்படுத்தி நெடுநேரமாக மிதந்தேன். மதியம்வரை நன்றாக நீராடி வெளியேறினோம்.

நீராடி முடித்துச் செல்லும் பாதையில் 'றெஸ்ரோறன்ற' காணப் பட்டது. அந்த 'றெஸ்ரோறன்ரி'ல் இடம் வலமாக இரண்டு மதுபான அருந்தகங்களும் நடுவில் உணவகமும் இருந்தன. நாம் உணவருந்தச் சென்ற நேரம் இருக்கைகள் போதவில்லை. சற்று நேரம் தாமதாகும் என்பதால் மண்டபத்தில் காத்திருக்க நேரிட்டது.

நால்வர் மதுபான அருந்தகம் செல்லும் நோக்கில் புறப்பட்டோம். குறிப்பறிந்த வரவேற்பாளர் எங்களை அழைத்து, வலதுபக்கம் உள்ளது உள்ளூர் ஆட்களுக்குரியது என்றும் இடதுபக்கம் உள்ளதற்குச் செல்லுமாறும் கூறினார். எமக்கு வியப்பாக இருந்தது மது அருந்துவதற்கும் உள்ளூர் வெளியூர் வித்தியாசம் இருக்கிறதேயென்று. அவரது ஆலோசனையின் பேரில் இடது பக்கம் உள்ள மதுபான அருந்தகத்திற்குச் சென்றோம். யாழ்ப்பாணம் நெல்லியடியைச் சொந்த இடமாகக்கொண்ட ஒருவர் அங்கு சிப்பந்தியாக வேலை செய்கிறார். அவரே எமக்குப் பரிமாறினார். உள்ளூர் ஆட்களுக்கு விற்பனை செய்வது வடிசாராயம் என்பது சிப்பந்தி கூறிய பின்னரே புரிந்தது.

திரும்பி வந்தபோது உணவருந்தக் கூடியதாக இருந்தது. கோழி புரியாணி அருந்திய பின்னர் சென்னை நோக்கிய பயணத்தைத் தொடர்ந்தோம். 'வல்லார்பாடம்' என்னும் ஊரின் ஊடாகச் செல்லும்போது பெரிய தொரு ஆலயம் தென்படவே வாகனத்தை அங்கு நிறுத்தி, அந்த ஆலயத்தை தரிசிக்க விரும்பிஅங்கு சென்றோம்.

ஈடு வழங்கும் அன்னை மரியா தேவாலயம்

'ஈடு வழங்கும் அன்னை மரியா' *(Our Lady of Ransom)* அல்லது 'வல்லார்பாடத்து அம்மா' என்ற பெயர்களால் அழைக்கப்படும் 'அன்னை மரியா தேவாலயம்' இதுவாகும். இதுவரை அறிந்திருக்காத புதியதொரு தேவாலயத்துக்கு எதிர்பாராமல் வந்தடைந்ததால் அளவிடமுடியாத மகிழ்வு. இத்தேவாலயத்துக்கு மதவேறுபாடின்றி திருப்பயணிகளாக பலரும் வருகை தருகின்றனர் என அறியக்கூடியதாக இருந்தமை மேலும் மகிழ்வைத் தந்தது.

போர்த்துக்கேயரால் 1524இல் கட்டப்பட்ட மாதா ஆலயம் 1676இல் ஏற்பட்ட பெருவெள்ளத்தால் அழிந்துபோனதாகவும், அவ்வாண்டிலேயே மீளவும் கட்டப்பட்டதாகவும், 1888இல் திருத்தந்தை '13ஆம் லியோ' இவ் வாலயத்தை சிறப்பு வழிபாட்டு இடமாக அறிவித்து ஆலயத்தின் திருப் பீடத்தை 'தனிச் சிறப்புடைய பீடம்' என்னும் நிலைக்கு உயர்த்தினார் என்ப தையும் அறியக்கூடியதாக இருந்தது. தற்போது உள்ள ஆலயம் பின்நாளில் நிர்மாணிக்கப்பட்டதாகும்.

பெரும் புயல்களிலிருந்து மக்களைக் காப்பாற்றியதாக வரலாறு கூறும் 'ஈடு வழங்கும் அன்னை மரியா'வின் திருவிழா, ஆண்டுதோறும் புரட்டாதி


24 இல் வெகு சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

'பள்ளியில் வீடு' என்னும் குடும்பத்தைச் சார்ந்த 'மீனாட்சியம்மா' என்ற நாயர்குலப் பெண்ணும், அவரது மகனும் சென்ற படகு புயலில் சிக்கி நீரில் வீழ்ந்து மூழ்கிய நிலையில் உயிரோடு காப்பாற்றப்பட்ட சம்பவம் பெரிதாகப் பேசப்படுகிறது. இவர்கள் பின்னர் திருமுழுக்குப் பெற்று மரியா, இயேசுதாஸ் எனப் புதுப்பெயர் சூடி, ஆலய வளாகத்திலேயே வாழ்ந்து வந்தனர். இவர்களுடைய வாரிசுகள் சிலர் இன்றும் ஆலயச் சுற்றாடலில் வாழ்கின்றனர் என்பதையும் அறியக்கூடியதாக இருந்தது.

வெண்மையில் மூழ்கி, பழமைத் தோற்றத்தைத் பறைசாற்றும் வகையில் காணப்பட்டது 'ஈடு வழங்கும் அன்னை மரியா' ஆலயம். ஆலயத்தின் அலங்கார நுழைவு வளைவு பக்தர்களுக்கு முகமன்கூறி வரவேற் பதுபோல் இருந்தது. நுழைவு வளைவிலிருந்து இரு பக்கத்தாலும் வளைவாக, ஆலய முகப்பை நெருங்கிவரும் வகையில், பாரிய மரத்தில 'பொந்து' போன்று குடையப்பட்ட அமைப்பில் பல பீடங்கள் இருந்தன. அந்த பீடப் பொந்துகளில் காணப்பட்ட உருவக் காட்சிகள் அன்னையின் புதுமைகளை விபரிக்கும் வகையில் இருந்தன. மீனாட்சியம்மாவும் அவளது மகனும் காப்பாற்றப்பட்ட நிகழ்வும், அன்னையின் திருவுருவப்படம் வெள்ளத்தில் மிதந்துவந்த நிகழ்வும் அங்கு காணப்பட்ட புதுமைகளில் உள்ளடக்கப்பட்டிருந்தன.

இயேசு சிலுவையில் அறையப்பட்ட நிலையில் துன்பப்படும்வேளை அன்னை மரியாள் அவரது காலடியில் நின்று கதறியழுவதை விபரிக்கும் காட்சி, சாதாரண மனித அளவுள்ள உருங்களால் அமைக்கப்பட்டிருந்தது. கல்லான மனதையும் உருகச்செய்யும் காட்சி அது.

இவற்றைப் பார்வையிட்டு முடித்து, அமைதி நிலவிய 'ஈடு வழங்கும் அன்னை மரியா' ஆலயத்தினுள் நுழைந்து அன்னையை வழிபட்டோம். பழைய ஆலயத்தின் எச்சங்கள் சில நினைவாகப் பேணப்படுவதை பார்க்கக் கூடியதாக இருந்தது. 1676இல் நிகழ்ந்த பெருவெள்ளத்தில் மிதந்துவந்த அன்னையின் திருவுருவப்படம் வழிபாட்டுக்கென வைக்கப்பட்டுள்ளது. அனைத்தையும் பார்த்த, உளமார வழிபட்ட மனநிறைவில் வெளியேறி,



ஆலய வளாகத்தின் இடப் பகுதி

மீனாட்சியம்மாவின் வாரிசுகள் வசிக்கும் பகுதிக்குச் சென்று அங்கிருந்த உணவகமொன்றில் கோப்பி அருந்தி, அங்கிருந்தவர்களுடன் உரையாடி விடைபெற்று எமது பயணத்தைத் தொடர்ந்தோம்.

கர்நாடக மாநிலம்

பெங்களூர்

பெங்களூர், இந்தியா - கர்நாடக மாநிலத்தின் தலைநகரும், தென் கிழக்குப் பகுதியில் மைசூர் சாம்ராஜ்யத்தின் இதயமான தக்கண பீடபூமியில் அமைந்திருக்கும் மாவட்டத்தின் பெயருமாகும். 'பெங்களூரு' என்பதே இதன் முன்னைய பெயர். இந்நகரம் மக்கள் தொகை அடிப்படையில் இந்தியாவின் மூன்றாவது பெரு நகரமாகவும், நகர்ப்புற மக்கள் தொகை அடர்த்தியில் ஐந்தாவது நகராகவும் திகழ்கின்றது. 1537இல் விஜயநகர சாம்ராஜ்ய பிராந்தியமாக நிறுவப்பட்டதன் பின்னர்தான் இந்த நகரத்தின் நவீன வரலாறு தொடங்குவதாக வரலாற்று ஆசிரியர்கள் கூறுகிறார்கள்.

இந்நகர் கடல் மட்டத்தில் இருந்து 3,021 அடி உயரமுடையது. இங்கு கன்னடம், தமிழ், தெலுங்கு, உருது, ஹிந்தி, ஆங்கிலம் போன்ற மொழிகளைப் பேசுகிறார்கள். பெங்களூர் பொருளாதாரத்திலும் தொழில் வளத்திலும் முன்னேற்றம் அடைந்துள்ள நகர் என்பதற்கு ஹிந்துஸ்தான் நிறுவனங்களே சாட்சியாகும்.

வளர்ந்துவரும் இப்பெருநகர் புகழ்பெற்ற கல்லூரிகள், ஆராய்ச்சி நிறுவனங்களின் தாயகமாக விளங்குகின்றது. பலவகை கனரகத் தொழிற் சாலைகள், மென்பொருள் நிறுவனங்கள், விண்வெளி தொலைத்தொடர்பு மற்றும் பாதுகாப்புத் துறை நிறுவனங்கள் இந்நகரில் அமைந்துள்ளன. தகவல் தொழில் நுட்பத்துறை வேலைவாய்ப்பு மற்றும் ஏற்றுமதியில் இந்தியாவில் முதன்மையாகத் திகழ்கின்றது. இதனால் இந்தியாவின் 'சிலிகான் பள்ளத் தாக்கு' என்றும் அழைக்கப்படுகிறது.

வேளாங்கண்ணி அன்னை திருத்தலத்திற்குச் சென்றிருந்த நாம் மூவர், பேருந்தில் பயணத்து, இத்தகை சிறப்புமிகு பெங்களூர் பேருந்து நிலையத்தில் இறங்கினோம். நாம் செல்லவேண்டிய இடம் பெங்களூர் நகருக்கு அப்பால் உள்ள 'வீர்கோன்' நகராகும். அங்கு செல்வதற்கு பேருந்து வசதியிருந்தும் அதில் பயணிப்பதில் உள்ள சிரமத்தைக் கருத்திற்கொண்டு முச்சக்கரவண்டியில் பயணிக்கும் முடிவில் கூலியை விசாரித்தோம். பெங்களூர் நகர் எல்லை வரை சாதாரணமாக 'மானி' காட்டும் பணமும் எல்லை கடந்து சென்றால் வரி செலுத்த வேண்டுமென்பதால் எல்லைக்குப் பின்னர் குறித்த முகவரிக்குச் செல்வதற்கு முன்னூறு ரூபா அறவிடுவதாக சாரதி கூறினார். சம்மதித்து

முச்சக்கர வண்டியில் பயணித்தோம்.

பேரூந்து நிலையம் உள்ள பெங்களூர் நகரின் மையப்பகுதி அலுவலகக் கட்டடங்கள், அழகான மாடி வீடுகள், நிறுவனங்களின் காரியாலயங்கள், படமாளிகைகள், பிரமாண்டமான விற்பனை நிலையங்கள் நிறைந்த பகுதியாக செல்வச் செழிப்போடும் - அழகின் செருக்கோடும் - சந்தன வாடையோடும் திகழ்கிறது. மொத்தத்தில் குபேர பட்டணமாகவே காட்சியளித்தது.

"சந்தன மணமாயிருக்கே" என்று எமது சந்தேகத்தை முச்சக்கரவண்டி சாரதியிடம் கேட்டோம். சந்தன மரங்களைப் பயன்படுத்தித்தான் இங்கு பலவகை உற்பத்திப் பொருட்களே இருக்குதாம். சந்தனக் (சாம்பிராணி) குச்சிகள், சந்தன எண்ணெய், சந்தன சோப்புக்கள், சந்தனக் களி போன்ற பலவற்றை உருவாக்கி விற்பனை செய்கிறார்களாம். இங்கு நெருக்கமாக விற்பனை நிலையங்கள் இருப்பதால் அவற்றிலிருந்தே மணம் வருகுதாம். அவனது விளக்கம் சரியெனப்பட்டது.

அகன்ற வீதிகளில் பிரமாண்டமான தானுந்துகள், சாதாரண மற்றும் இரட்டைத் தட்டு பேருந்துகள், பாரவூர்திகள், முச்சக்கர வண்டிகள், சைக்கிள் ரிக்ஷாக்கள், வேறு ரக வாகனங்கள் என விலக இடமில்லாமல் உராய்ந்து செல்வதுபோல் தெரிந்தது. இவற்றுக்கிடையில் நாம் பயணிக்கும் முச்சக்கர வண்டி மாறிமாறி ஊடறுத்து நுழைந்து வேகமாகச் சென்று கொண்டிருந்தது.

"நீங்க பெங்களூருக்கு புதுசா?" திடீரென சாரதி கேட்க, நாங்களும் "ஆமா" என்றோம். "விதான் சௌதா பாக்கப்போறீங்களா?" என்று மீண்டும் கேட்டான். அது என்ன என்று கேட்டதற்கு விளக்கத்தைக் கூறியவன், ஐந்து நிமிடத்தில் அந்த இடத்தில் வண்டியை நிறுத்தினான்.

விதான சௌதா மாளிகை

நாங்கள் பயணித்த பாதையிலிருந்து சற்றுத் தூரத்தில்தான் விதான சௌதா மாளிகை இருந்தது. இதனை மாதிரியாகக்கொண்டே யாழ்ப்பாண பொதுசன நூலகம் கட்டப்பட்டுள்ளது என்பதை விதான சௌதா மாளிகை உணர்த்தியது. பொதுசன நூலகத்துக்கும் இதற்கும் சிறு சிறு வித்தியாசங்களைத் தவிர வேறு இருப்பதாகத் தெரியவில்லை. நான் மாநகரசபையில் வேலை செய்த காலத்தில் இந்தத் தகவலை அறிந்திருக்கிறேன். அதனால், இந்த மாளிகையை தற்செயலாகப் பார்க்கக் கூடியதாக இருந்ததால் பெரும் மகிழ்வாக இருந்தது. சாரதியை நன்றியுடன் நினைத்துக் கொண்டேன்.

கர்நாடக சட்ட மன்றம் இயங்குவதற்காக 1956இல் கட்டி முடிக்கப் பட்டதே 'விதான் சௌதா மாளிகை'. நான்கு மேல் தளங்களையும் ஒரு அடித்தளத்தையும் கொண்ட இக்கட்டடம் 700 அடி நீளத்தையும் 350 அடி அகலத்தையும் உடையது போன்ற விபரங்களை அறியமுடிந்தது. கட்டடத்தை உள் நுழைந்து பார்க்கவில்லையாயினும் கட்டடத்தின் வெளி அழகை பகுதி பகுதியாகப் பார்த்து மகிழ்ந்தேன். கட்டத்தின் முன்பக்க தரை பெரிய பூங்கா

போன்று பூச்செடிகளாலும் கத்தரித்து அழகுபடுத்தப்பட்ட மரங்களாலும் நிறைந்திருந்தன. இவை கட்டடத்தை மேலும் அழகூட்டி நின்றன.



அரை மணித்தியாலம் அங்கு நின்றிருப்போம். சாரதி மாளிகையைச் சுற்றியுள்ள வீதியால் அழைத்துச்சென்று அதன் முழுமையான அழகைக் காண்பித்தான். எமது பயணம் தொடர்ந்தது. "சார்! இங்கயிருந்து கொஞ்சத் தூரம் போனா பெங்களூர் அரண்மனை இருக்கு. அதப் பாக்கப் போறீங்களா? ஐம்பது ரூபா சார்ச் கூடவரும்" எனக் கேட்டான். எமக்கு விருப்பம் இருந்தது. ஆனால், நாம் போகவேண்டிய ஊரில் எமக்காகக் காத்திருப்பார்கள் என்பதால் திரும்பி வரும்போது பார்க்கலாமெனக்கருதி பயணத்தைத் தொடர்ந்தோம்.

பாதையின் இடையில் பாரிய இரும்புத் தூண்கள் தரையிலிருந்து நிமிர்ந்து நிற்க, அந்தத் தூண்களிலிருந்து இரு பக்கக் கரையோரத்தாலும் விரிந்தவாறு கட்டப்பட்டுள்ள கேபிள்கள் பாலத்தைத் தாங்கியவாறு இருப்பதைப்போன்று இருந்த, 100மீ. வரையான நீளமுடைய தொங்கு பாலம் போன்றதொரு பாலம் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது. அழகிய அந்தப் பாலத்தைப் பார்க்கவும் அதில் பயணிக்கவும் மகிழ்வாக இருந்தது. பாலத் திற்குக் கீழாக வெவ்வேறு இடங்களுக்குச் செல்லும் பல வீதிகளும் தொடருந் துத் தடங்களும் உள்ளன.

விர்கோன் நகர்

கணிசமான தூரம் பயணித்து விர்கோன் நகரிலுள்ள குறித்த முக வரியை அடைந்தோம். கல்லூரியில் கல்வி கற்கும் எனது மருமக்கள் இருவரும் வேறு இலங்கைத் தமிழர் மூவரும் தங்கியிருக்கும் வீடு அது. இலங்கைத் தமிழர்களும் சிங்களவர்களும் தங்கியிருக்கும் வீடுகள் பல அந்தச் சுற்றாடலில் இருந்தன. ஆண்கள் பெண்களெனத் தனித்தனி குழுக்களாகத் தங்கியிருந்தனர். நாம் சென்ற மறுநாள் சிங்களப் பெண் ஒருவரது பிறந்தநாள் கொண்டாட் டத்தில் கலந்துகொண்டமை மகிழ்வைத் தந்தது.

இவர்கள் கல்வி கற்கும் 'கார்டன் சிற்றி கல்லூரியை' *(Garden City College)* பார்வையிடச் சென்றோம். பிரமாண்டமான கல்லூரி அது. பகுதி பகுதியாக வெவ்வேறு துறைசார்ந்த வகுப்புகள் நடைபெறுகின்றன. பல நாடுகள், இந்தியாவின் பல மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் கல்வியைப் பெறுகிறார்கள்.

கற்பித்தல் ஆங்கிலத்திலேயே நடைபெறுகிறது. கல்லூரியில் இணைப

வர்களுக்கு முதலில் ஆங்கில வகுப்புகள் நடத்தப்பட்ட பின்னரே துறைசார் கல்வி போதிக்கப்படுவதால் அக்கல்லூரியில் இணைபவர்கள் ஆங்கிலத்தில் பாண்டித்தியம் பெற்றிருக்கவேண்டிய அவசியமில்லை. சாதாரண ஆங்கில அறிவே போதுமானதாகும். பன்னாட்டு, பலமொழி பேசும் மாணவர்கள் அங்கு கல்வி கற்பதால் உரையாடல் ஆங்கிலத்திலேயே இடம்பெறுகின்றது. இது மேலும் ஆங்கில அறிவு விருத்தியாகின்றது.

ஒருவர் தங்கக்கூடிய வசதிகளைக்கொண்ட விடுதிகள் கல்லூரியில் போதிய அளவு உள்ளன. அங்கு சமைக்க முடியாது. அதற்கு வாடகையும் அதிக மென்பதால் வெளியே வீடுகளை வாடகைக்கு அமர்த்தி குழுக்களாக இணைந்து வசிக்கிறார்கள். சமைத்து உண்ணவும் வசதியாக இருக்கின்றது. கடல் மீன் வகைகள் அரிதாகவும் ஏரியில் பிடிக்கப்படும் மீன் வகைகள் தாராள மாகவும் கிடைக்கும்.

மதியம் உணவு அருந்திய பின்னர் இரண்டு மணித்தியாலத்திற்கு மேற்பட்ட பேருந்து பயண தூரத்திலுள்ள மைசூர் அரண்மனையைப் பார்வையிடச் சென்றோம்.

மைசூர் அரண்மனை

மைசூர் அரண்மனை அல்லது அம்பாவிலாஸ் என அழைக்கப்படும் இந்த அரண்மனை கர்நாடக மாநிலம் / மைசூர் தெற்கில் அமைந்துள்ளது.

1565 வரையில் விஜயநகரப் பேரரசின் கீழ் சிற்றரசாக இருந்த மைசூர் யதுவம்ச வொடையார் குடும்பத்தினராலும் பின்னர் விஜநகரப் பேரரசால் அதன் வீட்சிவரையும் ஆளப்பட்டு வந்தது. பல சிற்றரசுகள் தென்னிந்தியாவில் விடுதலை பெற்ற காலத்தில் மைசூரும் விடுதலை பெற்றது. நரசராஜ வொடையார் மற்றும் சிக்க தேவராய வொடையார் ஆகிய அரசர்களின் கீழ் தற்போதைய தெற்கு கர்நாடகா மாநிலத்தின் பல பகுதிகள் மைசூர் பேரரசின் கீழ் கொண்டுவரப்பட்டு இப்பகுதியில் பலமான ஒரு பேரரசாக அமைக்கப் பட்டது.


மைசூர் ஆட்சியாளர்களின் தாயகமாக இருந்தபோது 1887ஆம் ஆண்டில் கட்டத் தொடங்கப்பட்டு 1912ஆம் ஆண்டில் கட்டி முடிக்கப்பட்ட தும், பிரமாண்டமும், வரலாற்றுப் பின்னணியையும் கொண்டதே 'மைசூர் அரண்மனை'. இந்தோ, சராசனிக், திராவிடம், ரோமன், ஓரியண்டல் போன்ற கட்டடக்கலை அம்சங்களின் கலவையாக இந்த அரண்மனை உருவாக் கப்பட்டுள்ளதாம்.

பி. 4.00 மணிக்குப் பின்னரே மைசூர் அரண்மனையை அடைந்தோம். வெயிலின் அகோரம் இன்னமும் குறையவில்லை. அழகியதொரு கட்டடமாக கண்ணை ஈர்ந்து இழுத்தது. மிகப்பெரிய நுழைவாயில், திறந்தவெளி மண்டபங்கள், மாட மாளிகை, கூட கோபுரங்கள், அரச தர்பார் மண்டபம், மல்யுத்த மைதானம், அந்தபுரம் எனப் பிரமாண்டமாகக் கட்டப்பட்ட இந்த

அரண்மனை சுமார் 175 அறைகளையும் ஏறக்குறைய 50,000 ஹெக்டர் பரப்பளவையும் கொண்டது. ஆயுத அறை, நூலகம், வேட்டை அறை, பிரத்தியேகப் படுக்கை அறைகள் எனப்பல மூன்றாவது மாடியில் அமைந் துள்ளன. பாரந்தூக்கி வசதியும் உள்ளது.

மூன்று அடுக்குகளைக் கொண்டு சலவைக் கற்களால் உருவாக்கப் பட்டுள்ள இந்த அரண்மனையில் இளஞ் சிவப்புநிற குமிழ் கோபுரங்கள் மூன்று காணப்படுகின்றன. அரண்மனையை ஒட்டி 44.2 மீ. உயரத்திற்கு ஐந்து அடுக்குகளைக் கொண்ட தூண் கோபுரம் காணப்படுகிறது. இதன் மேற்குப் பகுதியிலுள்ள அலங்காரக் கலசங்கள் தங்கத்தால் உருவாக்கப்பட்டுள்ளன.

'கோப்பே தொட்டி' அல்லது 'பொம்மை விதானம்' என்ற வாசல் வழியாக அரண்மனையினுள் நுழையலாம். வாசலின் முன்னால் ஏழு பீரங்கிகள் வைக்கப்பட்டிருந்தன. இந்த விதானத்தில் 19ஆம், 20ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பொம்மைகள் காணப்படுகின்றன. மரத்தாலான ஒரு யானை 81 கிலோ தங்கத்தால் அலங்கரிக்கப்பட்டுக் காணப்படுகிறது. இந்த விதானம் வரையே பார்வையிட அனுமதிக்கப்பட்டது.



அரண்மனைச் சுவர்களை பிரபல இந்திய ஓவியர்களின் ஓவியங்கள் அலங்கரிக்கின்றன. அரண்மனையின் உள்ளே வெவ்வேறு கட்டடக்கலை வடிவமைப்பை பின்பற்றி 14 கோயில்கள் கட்டப்பட்டுள்ளனவாம். தசரா திருவிழா தொடங்கும்போதும் முடியும்போதும் பீரங்கிகள் முழங்கி விழாவினைக் கௌரவப்படுத்துமாம்.

மேலும் இவ்விழாவின்போது அரண்மனையிலுள்ள தங்க அரியாசனம் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்படுகிறது. அரண்மனையில் அரச உடைகள் வைக்கப்பட்டுள்ள அறை, அரச ஆபரணங்கள் வைக்கப்பட்டுள்ள அறை, ஓவியக் காட்சி அறை போன்றவற்றை திருவிழாக் காலத்தில் எந்தத் தடங்கலு மின்றி பொதுமக்கள் அருகில் சென்று பார்வையிடலாமாம்.


வரலாற்றுச் சிறப்புமிக்க மைசூர் அரண்மனையின் பகுதியை பார்த்த மனநிறைவோடு திரும்பிய நாம், மறுநாள் விற்பனை நிலையங்களுக்குச் சென்றோம். பிரமாண்டமான, அழகுபடுத்தப்பட்ட விற்பனை நிலையங்கள் பல காணப்பட்டன. கணிப்பொறி உதிரிப் பாகங்கள், கையடக்கத் அலைபேசிகள் போன்றவை, இந்தியாவின் ஏனைய பகுதிகளோடு ஒப்பிடுகையில் பாதி விலையில் பெற்றுக்கொள்ளலாம். நான் 'மெமறி காட்' இரண்டு வாங்கினேன். ஆனால், உத்தரவாதச் சிட்டை தரப்படவில்லை.

நான்கு நாட்களை அங்கு கழித்து ஐந்தாம்நாள் சென்னைக்குப்

புறப்படத் தயாரானோம். முச்சக்கரவண்டி சாரதி கூறியது நினைவுக்கு வந்ததும் பெங்களூர் அரண்மனையைப் பார்வையிடும் நோக்கில் நாங்கள் முச்சக்கர வண்டியில் அரண்மனை செல்ல மற்றவர்கள் பேருந்தில் பயணித்து அரண்மனையை அடைந்தனர்.

பெங்களூர் அரண்மனை

பெங்களூரில் உள்ள முக்கிய சுற்றுலாத் தலங்களில் ஒன்று இந்த பெங்களூர் அரண்மனை. பெங்களூர் மத்தியிலுள்ள அரண்மனைப் பூங்காவில் இந்த அரண்மனை அமைந்துள்ளது. இங்கிலாந்தில் உள்ள 'வின்ட்ஸர் கேஸ்டில்' அரண்மனையை மாதிரியாகக்கொண்டு, ஐரோப்பிய 'தூடர்' (Tudor) கட்டடக்கலை வடிவமைப்பில் 1862இல் தொடங்கிய கட்டுமானப்பணி 1944இல் (82 வருடங்கள்) முடிவுற்றது. 45,000 சதுர அடியில் அமைந்துள்ளது இந்த அரண்மனை.



பிரசித்தி பெற்ற, அழகுடன் மிளிரும் பெங்களூர் அரண்மனையின் கீழ்த்தளத்திலுள்ள திறந்த வெளி முற்றத்தில் நீலநிற பீங்கான் ஓடுகள் பதிக்கப் பட்ட கிரனைட் கல்லாலான இருக்கைகள் அமைந்துள்ளன. இரவில் இந்த நீலநிற பீங்கான் இருக்கைகள் ஒளிர்வது போன்ற அழகாகத் தோற்ற மளிக்குமாம்.

உட்புறச் சுவர்களில் கிரேக்க, டச்சு, இந்திய ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன. இவை மண்ட பத்திற்கு மேலும் அழகூட்டுகின்றன. மேல் தளத்தில் அரசன் தன் அவையி னருடன் கலந்தாலோசிக்கும் இடமாகக் கருதப்படும் தர்பார் மண்டபம் இருக்கின்றது.

அரண்மனையைச் சுற்றியுள்ள வெற்று நிலப்பகுதியில் இசை நிகழ்ச்சிகள் உட்பட பொது நிகழ்வுகள் நடத்துவதற்கு உபயோகப்படுத்தப் படுகிறதாம். உலகப் புகழ்பெற்ற இசையமைப்பாளர்கள், பாட கர்கள் பலரும் இங்கே நிகழ்ச்சிகளை நடத்தியிருக்கிறார்களாம். இவைதவிர கலை, இலக்கிய, சினிமா, வணிகப் பொருட்காட்சி, அரசியல் மகாநாடுகள் போன்றவையும் இந்நிலப்பகுதியில் நடத்தப்படுகிறதாம்.

நீண்ட காலத்தைச் செலவிட்டு, நன்கு திட்டமிட்டு, தொலைநோக் கோடு அமைக்கப்பட்டுள்ள பிரமாண்டமான பெங்களூர் அரண்மனையைப் பார்க்க சந்தர்ப்பம் கிடைத்ததால் அளவிடமுடியாத மகிழ்ச்சி. மேலும் இங்கு தங்கி நின்ற நாட்களில் பார்க்க முடிந்தவற்றைப் பார்த்த மனநிறைவில்

பேருந்து நிலையத்தை அடைந்தோம். மீண்டும் சந்தனக் காற்றைச் சுவாசித்து, சந்தன மரத்தில் செய்த கைவினைப் பொருட்களின் அழகைப் பார்வையிட்டு தமிழ்நாடு சென்னை நகர் நோக்கி பேருந்தில் புறப்பட்டோம்.

ooo

நூற்றாண்டு விழா

தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டு விழா நிகழ்வில் கலந்துகொள்வதற்காக பார்வையாளராக நானும், பேராளராக வண. ஜெயசேகரம் அடிகளாரும் இணைந்து புறப்பட்டோம். இலங்கையிலிருந்து நாம் புறப்பட்ட காலகட்டம் அமைதியும் அபிவிருத்தியும் நிலவுவதாக வெளித் தெரிந்தபோதும் யுத்தத்தின் பின்னரான தாக்கங்கள் தொடர்கதையாக நீண்டுகொண்டிருந்த காலகட்டமாகும்.

போர் நடைபெற்றுக் கொண்டிருந்த காலப்பகுதியில் வன்னியில் 75,000 பேர் வரையிலானோரே உள்ளனர் என இலங்கை அரசாங்கம் அறிவித் திருந்ததுடன் அந்தத் தொகையினருக்குத் தேவையான அளவு உணவுப் பொருட்களை மாத்திரமே வன்னிக்குள் அனுமதித்தது. ஆனால், எறிகணைத் தாக்குதல்கள், விமானக் குண்டுத் தாக்குதல்கள் மற்றும் பட்டினி போடப்பட்ட தனால் கொல்லப்பட்டவர் போக 3,00,000 பேருக்கும் மேலானோர் போர் முடிவுற்றபோது வன்னி முற்றுகைக்குள் இருந்து வெளியேறினார்கள். இத்தனை பேரும் எங்கிருந்து முளைத்தார்கள் என்ற கேள்வி எழாமலில்லை. இதற்காகவும், தமிழின அழிப்பு - மனித உரிமைகள் மீறல் என்பவற்றை நிகழ்த் தியதற்காகவும் சர்வதேசத்தின் முன் தலைகுனிந்து நிற்கின்றது இலங்கை அரசாங்கம்.

போரின் இறுதியில் 1,40,000 பேர் கொல்லப்பட்டதாக சுயாதீன தகவல்கள் தெரிவித்திருந்தும், ஐ.நா. மனித உரிமைப் பேரவை துல்லியமற்ற தகவலாக 40,000 பேர் என்ற போதும் இவற்றை அரசாங்கம் மறுத்தது. அரச மற்றும் வேறு நாடுகளின் ஒத்துழைப்பு இன்மையாலும் பல நாடுகள் யுத்தத்தில் அரச தரப்புக்கு ஒத்துழைப்பு வழங்கியிருந்தமையாலும் உண்மையை வெளிக் கொண்டுவர முடியாமற் போனது.

கொடிய போரினால் இத்தனை பேர் தமது இன்னுயிரை நீத்தது மட்டுமல்ல, சரணடைந்த மற்றும் கைது செய்யப்பட்ட பலர் காணாமல் போயுள்ளனர். பல்லாயிரக் கணக்கானோர் தமது அவயவங்களை இழந்தனர். பலர் கணவனை இழந்து விதவையானார்கள். பலர் மனைவியை, உறவுகளை இழந்து நிற்கதியானார்கள். தமது சொந்த இடங்களிலும் அகதிகளானார்கள். அவர்களது சொந்த நிலங்களில் இராணுவம் அமர்த்தப்பட்டது. இராணுவத் தின் தொடர் அச்சுறுத்தலுக்குளே மக்கள் சிக்குண்டார்கள்.

இவைகளனைத்தும் நேரடி அல்லது கண்கண்ட சாட்சிகளாய், ஆதாரங்களாய் ஐ.நா. மனித உரிமைப் பேரவையைச் சென்றடைந்ததால்

இலங்கைக்குக் கடும் அழுத்தம் ஏற்பட்டது. அதனால் பலரும் சர்வதேச விசாரணையைக் கோரிய நிலையில் ஐ.நா. மனித உரிமைப் பேரவையின் அறிக்கைக் காகக் காத்திருந்த காலகட்டம். இந்த சூழ்நிலையில்தான் நூற்றாண்டு விழாவுக்கான பயணம் அமைந்திருந்தது.

தவத்திரு தனிநாயகம் அடிகளாருக்கு நூற்றாண்டுவிழா கொண்டாடப்படுவது சாலச்சிறந்ததே. 12 மொழிகளில் புலமைபெற்ற இவர், மேலை நாடுகள் தமிழ் பற்றி ஓரளவேனும் அறிந்துகொள்ள தனது மொழிப் புலமையைப் பயன்படுத்தியவர். தமிழ் விழுமியங்களை உலகில் உயர்த்திப் பிடித்தவர். உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு போன்ற பல தமிழ் மாநாடுகளுக்கு வித்திட்டவர். இத்தகையோனுக்கு உலகின் பல நாடுகளிலும் (இலங்கை உட்பட) நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

24.11.2013 காலை 11.00 மணியளவில் இந்தியன் எக்ஸ்பிறஸ் வானூர்தியில் புறப்பட்ட நாம், பி.ப. 1.00 மணிக்கு திருச்சி வானூர்தி நிலையத்



தைவிட்டு வெளியேறினோம்.

இரண்டாம் உலகப் போரின்போது ஆங்கிலேயரால் கட்டப்பட்டு பயன்படுத்தப் பட்டு வந்த பழமையான வானூர்தி நிலையம் இது வாகும். தற்போது புதுப்பிக்கப் பட்டு புதுப்பொலிவு பெற்ற துடன் பன்னாட்டு வானூர்தி நிலையமாகவும் தரமுயர்த்தப் பட்டுள்ளது.

சென்னை வானூர்தி நிலையத்தைப் போன்று விசாலமானதாக இல்லாதிருப்பினும் புதிதாக கட்டப்பட்ட பயணிகள் முனையம் அழகாக அமைக்கப்பட்டிருந்தது. ஓடுபாதைகள் பல வானூர்திகளின் பயன்படுத்தலுக்கு ஏற்றவகையில் புதிதாக அமைக்கப்படிருந்தன. பழைய முனையம் சர்வதேச சரக்கு வளாகமாக இயங்குகின்றது. வானூர்தி நிலையத்தின் முன்பக்கம் பலவர்ணப் பூஞ்செடிகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. இவை வானூர்தி நிலையத்திற்கு மேலும் அழகைக் கொடுத்தது.

வானூர்தி நிலையத்திலிருந்து கணிசமான துரத்திலிருந்தது திருச்சி நகரப்பகுதி. வாடகை தானுந்துவில் அங்கிருந்து புறப்பட்டு திருச்சி புதிய பேருந்து நிலையத்திற்கு முன்பாக இருந்த விடுதியில் அறையெடுத்துத் தங்கிக்கொண்டோம். அன்றையதினம் அதாவது 24ஆம் திகதி பிற்பகல் பெரியார் ஈ.வே.ரா கல்லூரியில் நூற்றாண்டு விழா நிகழ்வு நடைபெற்றதால் விடுதியிலிருந்து செல்ல வசதியாக இருந்தது. நடனம், சிறு நாடகம், உரைகள்

போன்ற நிகழ்வுகளில் இரவு எட்டு மணி வரை இணைந்திருந்து பின்னர் விடுதிக்குத் திரும்பினோம்.

25ஆம் திகதி காலை உச்சிப் பிள்ளையார் கோயிலுக்கு எதிர்ப் பக்கமாக இருந்த பிரமாண்டமான தூய வளனார் கல்லூரி வளாகத்தில் நூற்றாண்டு விழா நிகழ்வுகள் நடைபெற்றன. கருத்தரங்குகள், சொற்பொழிவுகள் என அன்றைய நிகழ்வுகள் அமைந்திருந்தன. பார்வையிட வந்தவர்களால் மண்டபம் நிறைந்திருந்தது. இலங்கையர் சார்பாக அருள்பணி. அ.பி.ஜெயசேகரம் அடிகளார் சொற்பொழிவாற்றினார்.

கல்லூரி வளாகத்தில் விழாவுக்கு வருகைதந்த அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்பட்டு, 1.30 மணிக்கு மீண்டும் விழா ஆரம்பமானது. பி.ப. 3.00 மணிவரை விழாவில் கலந்துகொண்ட நாம், பின்னர் திருச்சியில் பிரபலமாகப் பேசப்படும் 'கலைக்காவிரி கலை அறிவியற் கல்லூரி'க்குச் சென்றோம்.

கத்தோலிக்க குருமார், கன்னியாஸ்திரிகளின் மேற்பார்வையில் இக் கல்லூரி திறம்பட இயங்குகின்றது. கல்லூரியைச் சுற்றிப்பார்த்தோம். கலை நயத்துடன் கட்டப்பட்டிருந்தது. கல்லூரியின் வகுப்பறைகள், அங்கு கற்பிக்கப்படும் முறை, மாணவர்களின் கற்கை போன்றவற்றை வகுப்பறைகளுக்குச் சென்று பார்வையிட்டோம். அப்போது ஐந்து இலங்கைத் தமிழர்கள் கல்வி கற்கிறார்கள். அவர்களில் மூவர் பெண்கள். அவர்களுடன் உரையாடினோம். பலருடனும் அங்கு உரையாடக் கிடைத்த சந்தர்ப்பம் மகிழ்வுக்குரியது.



அடுத்து நடைபெறவுள்ள நூற்றாண்டு விழா நிகழ்வுகள் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள பாளையங்கோட்டையில் 30.11.2013இல் நடைபெறவுள்ளதால் கலைக்காவேரி சந்திப்பை முடித்து வந்த நாம், மதுரையில் தங்கியிருந்து பாளையங்கோட்டை செல்லும் நோக்கில், அன்றே திருச்சியிலிருந்து விரைவுப் பேருந்தில் மதுரைக்குச் சென்றோம். சரியாக ஒரு மணித்தியாலத்தில் மதுரை 'மாட்டுத்தாவணி' பேருந்து நிலையத்தில் தரித்தது பேருந்து. அங்கிருந்து முச்சக்கர வண்டியில் நாங்கள் தங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இடத்திற்குச் சென்றோம்.

மதுரை பற்றிய விபரங்களை கடல்கடந்த நாட்கள் - 02இல் அறிந்திருப்பீர்கள். இம்முறை நான் தங்கியிருந்த இடம் இந்து மதத்தவரும் கத்தோலிக்க மதத்தவரும் கலந்து வாழும் சிற்றூர். தங்கியிருந்த நாட்களில் அங்கு வாழும் மக்களுடனான தொடர்புகள், ஒருவருக்கு ஒருவரின்

ஒத்தாசைகள் பிரமிக்க வைத்தது.



அதிகாலை 5.30 மணிக்குப் பின்னர் உறங்க முடியாது. அரைக்கீரை, முளைக்கீரை என நீண்ட பட்டியலாய் கீரை வகைகளை இராகத்துடன் உரத்துக் கூறியபடி விற்பனை செய்யும் பெண்களை வீதிகளில் காணலாம். வளர்ப்பு நாயும் அவர்களுடனே செல்வதைக் காண முடியும். ஒலிபெருக்கி இல்லாமலே அவர்களது குரல் உச்சத்தில் ஒலித்து நித்திரையைக் குழப்பிவிடும்.

வெயிலின் உச்சம் காரணமாக கற்தரையைக்கொண்ட அப்பகுதி மிகவும் அகோரமாக இருந்தது. வெளியே சென்றுவர விருப்பற்ற நிலையால் சாயந்தரம் மட்டுமே விற்பனை நிலையங்களுக்குச் சென்று வரக்கூடியதாய் இருந்தது. இடங்களைப் பார்வையிடுவதற்கான ஏற்பாடுகள் எதுவுமில்லை என்பதால் வீட்டிலேயே தங்கியிருந்து 30ஆம் திகதி அதிகாலை தானுந்துவில் பாளையங்கோட்டை நோக்கிப் புறப்பட்டோம்.

பாளையங்கோட்டை

பாளையங்கோட்டை, திருநெல்வேலி மாவட்டத்தில் திருநெல்வேலியுடன் இணைந்த இரட்டை நகரங்களில் ஒன்றாகும். இங்கு ஏராளமான பாடசாலைகளும் கல்லூரிகளும் உள்ளதால் தென்னிந்தியாவின் 'ஒக்ஸ்ஃபோர்ட்' என்ற பெயரும் உண்டு. பாளையங்கோட்டை சிறையும் புகழ் பெற்றது. இந்தியச் சுதந்திரப் போராட்டத்தின்போது பல சுதந்திரப் போராட்ட வீரர்கள் இங்குதான் அடைக்கப்பட்டிருந்தனர்.

02.08.1913இல் பிறந்த தவத்திரு தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டு விழாவின் பிரதான நிகழ்வு, பாளையங்கோட்டையில் நடைபெற்றது. அவர் துணைத் தலைமை ஆசிரியராகப் பணியாற்றிய நெல்லை/ வடக்கன் குளம், தூய தெரேசாள் உயர்நிலைப் பள்ளியிலிருந்து தீபங்களை ஏந்திய பலர் ஊர்வலமாகப் புறப்பட்டு காலை 9.00 மணிக்கு, தனிநாயகம் அடிகளார் நூற்றாண்டு விழா வளாகம் என முகப்புப் பதாதை தெரியப்படுத்திய, தென்னிந்தியத் திருச்சபை கேட்போர் கூடத்தை வந்தடைந்ததும் விழா நிகழ்வு ஆரம்பமாகியது.

இலங்கையிலிருந்து வருகைதந்த கிழக்குப் பல்கலைக்கழக மொழித் துறைத் தலைவரான முனைவர் நதிரா மரியசந்தனம் மற்றும் அருள்கலாநிதி ஜெயசேகரம் அடிகளார் உட்பட பல பேராளர்கள் விழாவிற்கு வருகைதந்தி

ருந்தார்கள். பாரிய அந்த மண்டபம் பார்வையாளர்களால் நிறைந்திருந்தது. உயர் கல்வி கற்கும் மாணவ மாணவியர் குறிப்புக் கொப்பிகளுடன் அதிகமாகக் காணப்பட்டனர். குறிப்புக் கொப்பியும் பேனாவும் மாணவர்களுக்கு இலவசமாக வழங்கப் பட்டன.

சொற்பொழிவுகள், ஆய்வுக் கட்டுரைகள், கருத்துரைகள் என விழா சிறப்பாக நடைபெற்று, பி.ப.1.00 மணிக்கு விழாவுக்கு வருகை தந்திருந்த அனைவருக்கும் உணவு வழங்கப்பட்டது. ஒரு தடவை மட்டும் பயன்படுத்தும் வாழை மடல் தட்டில் (பீங்கான்) உணவு பரிமாறப்பட்டது. இலங்கையில் பயன்படுத்தும் பிளாஸ்ரிக் தட்டுகளைவிட கெட்டியாகவும் எமக்குப் புதிதாகவும் இருந்தது. தேவையற்றதென வீசப்படும் வாழைத்தடலை இயந்தித்திலிட்டு அழுத்தி பீங்கான் வடிவில் செய்து உணவு உண்ணப் பயன் படுத்துகிறார்கள். சுவையான சுறி வகை பாயாசத்துடன் வயிராறச் சாப்பிட்டோம்.

உணவின் பின்னர் மண்டபத்திற்கு வெளியே அமைத்திருந்த கொட்டகையில் அரங்க நிகழ்வுகள் இடம்பெற்றன. தொடர்ந்து அங்கு நீண்ட நேரம் இருக்கமுடியாத நிலை எமக்கு. நாம் மதுரைக்குச் செல்லவேண்டும். அத்துடன் மறுநாள் காலை இலங்கைக்குப் பயணிக்க வேண்டும். இதனால் பி.ப. 4.00 மணியளவில் அங்கிருந்து மதுரை நோக்கிப் புறப்பட்டோம்.

மறுநாள் காலை மதுரையிலிருந்து தானுந்துவில் திருச்சி வானூர்தி நிலையம் வரை பயணித்து, வானூர்தி மூலம் இலங்கைக்குத் திரும்பினோம். மறக்க முடியாத பயணமாக இந்தப் பயணம் இருந்தது.

000

தொடரான இந்திய பயணங்கள் அடங்கிய கடல் கடந்த நாட்கள் - 07 நிறைவடைகின்றது. இந்திய மண்ணில் நான் பார்வையிட்ட இடங்கள், ஆலயங்கள், கோயில்கள், கட்டடங்கள் போன்றவற்றை விரிவாக ஆராய்ச்சி நடத்தி அவற்றின் பின்புலங்களை, சீர் சிறப்புக்களை எல்லாம் விரிவாக எழுதக் கூடிய ஆற்றல், தேர்ச்சி என்னிடமில்லை. இருந்தபோதும் முடிந்தவரை முயன்று இயன்றவரை வெளிக்கொண்டு வந்திருக்கின்றேன்.

என்னால் வெளிக்கொண்டுவரப்பட்ட பின்புல வரலாறுகள் அவை பற்றிய வரலாறுகளில் சிலவேயன்றி முழுமையானவையல்ல. இந்து சமய அறிவு, அவை சார்ந்த வழிபாட்டு முறைகள், கோயிலின் பகுதிகள் - சூழலின் முக்கியத்துவம் எதனையும் சிறப்பாக அறிந்தவனல்ல. அதனால் கூடியவரை பிறரிடம் கேட்டறிந்து கிரகித்துக்கொண்ட தன்மையிலேயே வெளிக்கொண்டு வந்திருக்கிறேன்.

மேலும், இந்தியா தமிழ்நாடு மற்றும் அருகாமையுள்ள மாநிலங்களில் உள்ளவற்றை ஓரளவேனும் பார்த்து அனுபவிப்பதற்கு குறைந்தது தொடராக ஆறு மாதங்களேனும்தேவைப்படும். எனது தேவையிலைமைந்த குறைந்த நாட்களில் அனுபவித்தவைபற்றிய தகவல்களாகவே இவை அமைந்துள்ளது. ■

நிறைவாக

சில குறிப்புகள்

ஐரோப்பிய நாடுகள் பலவும் ருமேனியா, பொஸ்வினியா போன்ற நாடுகளைச் சேர்ந்தவர்களின் வரவால் கலங்குவதை நான் பயணித்த நாடுகளிலிருந்து உணரக்கூடியதாக இருந்தது. ஐரோப்பிய ஒன்றியத்தில் அந்நாடுகளும் அடங்குவதால் எல்லைகளற்ற ஐரோப்பியத் திட்டத்தில் அவர்களின் தடையற்ற வரவு அதிகரித்துள்ளது. ஒன்றை நினைக்க வேறொன்றாய் முடிந்த நிலையில் மக்கள். வழிப்பறி, கொள்ளை, பிச்சையெடுத்தல், தீவிரவாதம் போன்றவை அந் நாடுகளுக்குப் பெரும் சவாலாக அமைகின்றது.

ஐரோப்பிய நாடுகள் தன்நிலையெண்ணிக் கலங்குகின்ற வேளையில் அந்நாடுகளில் எம்மவரின் நிலையையும் எண்ணிப் பார்க்கவேண்டிய நிலையில் நலன் விரும்பிகள் உள்ளனர். பல்வகை மாற்றங்களுக்கு இலக்காகியிருக்கும் எம்மவர்களில் வரவேற்கத்தக்க மாற்றங்களும் அதேவேளை விரும்பத்தகாத மாற்றங்களும் உள்ளன. இத்தகையோர் மத்தியில் சரியான திசையை நோக்கிய பயணம் அவசியமென்பதை வெளிப்படுத்துவதாக அமையும் இப்பகுதி, எவரது மனதையும் புண்படுத்தும் மற்றும் எவரையேனும் அடையாளப்படுத்தும் நோக்கத்தைக் கொண்டதல்ல.

நேர்காணல்

கடந்த ஆண்டு லண்டனில் நான் தங்கியிருந்தபோது அங்கு ஒளிபரப்பாகும் தமிழ்த் தொலைக்காட்சி சேவை ஒன்றில் நிகழ்ச்சியாளருக்கும் ஜேர்மனியப் பெண்ணுக்கும் இடையில் தமிழில் நடந்த நேர்காணலைத் பார்க்க நேரிட்டது.

ஜேர்மன், ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழிகளை சரளமாகப் பேசக்கூடிய அந்தப் பெண், ஜேர்மனியில் தனது பன்னிரண்டாவது வயதில் அதாவது 1987 ஆம் ஆண்டில் பக்கத்து வீட்டில் வசித்த இலங்கைத் தமிழ்க் குடும்பம் ஒன்றுடன் நட்புக்கொண்டு அவர்கள் மூலமாகத் தமிழைக் கற்றுள்ளார். நேர்காணல் நடந்தபோது அவர் இலங்கைத் தமிழர் ஒருவரைத் திருமணம் செய்து லண்டனில் வசித்துவருகிறார்.

லண்டனில் உள்ள சிறுவர் தமிழ்ப் பாடசாலை ஒன்றில் தமிழ் ஆசிரியராகப் பணியாற்றுகிறார். எந்தப் பிசிறுமின்றி யாழ்ப்பாணத் தமிழை அழகாகப் பேசிய அவரின் பதில்கள் சிந்திக்க வைத்தது. ஒவ்வொரு பதிலும் தான் அதிகமாக நேசிக்கும் தமிழையும் தமிழரையும் பற்றியதாகவே இருந்

தது. நேர்காணலின் இறுதியில், புலம்பெயர்ந்து வாழும் குடும்பத்துப் பிள்ளைகள் பேசும் மொழிபற்றி கேட்கப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையில்;

தான், தமிழ்ச் சிறுவர்கள் இருவரை 'சொப்பிங் சென்றரி'ல் சந்தித்ததாகவும், அவர்களுடன் தமிழில் கதைக்க முனைந்தபோது, தமக்கு தமிழ் தெரியாது என்று ஆங்கிலத்தில் கூறியதாகவும், உங்கட பெற்றோர் தமிழர்கள் தானே? என்று கேட்டதற்கு, தாம் லண்டனிலே பிறந்ததாகப் பதிலளித்ததாகவும், இங்கே பிறந்தா தமிழ் கதைக்கக்கூடாதா என்று கேட்க பதிலேதும் கூறாது சிரித்தவாறு சென்றுவிட்டதாகவும் கூறினார்.

இந்தக் குறைபாட்டை லண்டனில் வசிக்கும் பல தமிழ்க் குடும்பத்தினரிடையே காண்பதாகவும், தனது 'பிள்ளைக்குத் தமிழ் பேசத் தெரியாது ஆங்கிலம்தான் தெரியும்' என்று சொல்வதை சிலர் பெருமையாகக் கொள்வதாகவும் குறிப்பிட்டார். (இவரது கூற்றை நான் சுவிஸில் வசித்த காலங்களில் அறிந்திருக்கின்றேன். நான் கலந்துகொண்ட சில கவியரங்குகளில் இதனைச் சுட்டிகாட்டி ஆதங்கத்தை தெரியப்படுத்தியுமுள்ளேன்.)

"ஏன் அவர்கள் அவ்வாறு நடந்துகொள்ளுகிறார்கள்? தமது பிள்ளைகளுடன் தாய்மொழியில் கதைப்பதில் என்ன அவமானம் இருக்கிறது? தாய் மொழியை விடுத்து பிற மொழியைப் பேசுவதில் என்ன பெருமை இருக்கிறது?" என அடுக்காக கேள்விகளை எழுப்பிய அவர்;

"எனது பிள்ளைகள் மற்றவர்களைப் போலவே பாடசாலைக் கல்வியை ஆங்கிலத்தில் கற்கிறார்கள். அது அவர்களுக்குப் போதுமானது. நானும் தகப்பனும் பிள்ளைகளுடன் தமிழில்தான் பேசுகிறோம். நாம் இலங்கை சென்றிருந்தபோது பிள்ளைகள் அங்கு பேத்தி, உறவினர், அயலவர்களோடு பேசிப் பழகக்கூடியதாக இருந்ததைப் பார்த்துச் சந்தோஷப்பட்டோம். தமிழ் பேசத் தெரியாத பிள்ளைகளாக இருந்திருந்தால் அவர்கள் பட்டிருக்கக்கூடிய வேதனையை நினைத்துப் பார்க்கவே முடியாதுள்ளது. இதை ஏன் தமிழ்க் குடும்பங்களில் பலர் உணருகிறார்களில்லை?" எனத் தொடர்ந்த நேர்காணலின் முடிவில்;

"தமிழ்ப் பெற்றோரே! உங்களிடம் நான் கேட்டுக்கொள்வது; நீங்கள் உங்கள் பிள்ளைகளோடு தாய்மொழியான தமிழிலேயே உரையாடுங்கள். அவர்கள் தமக்குத் தேவையான ஆங்கிலக் கல்வியை பாடசாலையில் கற்றுக் கொள்வார்கள். போதிய ஆங்கில அறிவற்ற பெற்றோராயின் உங்களது ஆங்கில உரையாடல் அவர்களின் கல்விக்கு பாதகமாகவும் அமையும்."

ஐரோப்பிய நாட்டில் பிறந்து வளர்ந்த பெண்ணிடம் காணப்படும் தமிழ்மொழிப் பற்று எம்மவரிடம் இருக்கிறதா என்று கேட்கத் தோன்றிய அதேவேளை, அண்மையில் நிகழ்ந்த நிகழ்வொன்று இந்தப் பெண்ணின் கூற்றை மீண்டும் நினைவுக்குக் கொண்டுவந்தது.

ஜேர்மன் நாட்டிலிருந்து ஒரு குடும்பம் இலங்கைக்கு வந்திருந்தது. கணவனின் பெற்றோர் எனக்கு அறிமுகமானவர்கள் என்பதால் ஜேர்மன்

நாட்டிலிருந்து வந்தவர்களைச் சந்திக்கச் சென்றிருந்தேன். கணவன் இலங்கைத் தமிழன், மனைவி ஜேர்மன் நாட்டினள். 9, 6 வயதுகளையுடைய பிள்ளைகள் இருந்தனர். கணவனைத் தவிர எவருக்கும் தமிழ் தெரியாது. அதனால் அவர்கள் தமது தாய், தகப்பன் மற்றும் தமக்குள்ளேயே பேசிக்கொண்டனர். தகப்பன் சிலவற்றை மொழிமாற்றம் செய்து தமிழிலும் எமது தகவலை ஜேர்மனிய மொழியிலும் கூறினார். இது இருபகுதியினருக்கும் சங்கடமாக இருந்தது.

பேரன், பேத்தி, அங்கிருந்த சம வயதையொத்த சிறுவர்கள் மற்றும் பெரியவர்களுடன் கதைப்பதற்கு அவர்களுக்கிருக்கும் ஆவலை முகத்திலும் செய்கையிலும் கிரகிக்கக்கூடியதாக இருந்தது. ஆர்வம் மிகுதியால் தம்மை மறந்து தமது மொழியிலேயே சிவற்றைக் கூற, அது புரியாமல் மற்றவர்கள் விழிக்க, அதனால் அவர்கள் திண்டாடுவதைப் பார்க்கும்போது, உள்ளார்ந்த ஏக்கத்தை உணரும்போது எனக்கு வேதனையாக இருந்தது. இந்த நிலையை மாற்ற தமிழர்களான கணவன் அல்லது மனைவி முன்வரவேண்டும். அது கடினமென்று ஒதுக்கிவிடக்கூடியதல்ல. முயற்சித்தால் நிச்சயம் நிறைவேறும்.

பிறழ்வுகள்

ஐரோப்பாவில் வசிக்கும் அநேக தமிழ் குடும்பங்களில், மனைவி கணவனை பெயர் சொல்லி அழைப்பதையும், பிள்ளைகள் தாயையும் தந்தையையும் பெயர் சொல்லி அழைப்பதையும் காணக்கூடியதாக இருந்தது. இது நவீனத்துவமான மேலைநாட்டவரின் நாகரீகமாக இருக்கலாம். எமக்கு அவ்வாறில்லையே. கணவனை அப்பா என்றோ, என்னங்க என்றோ அழைக்கும்போது மனைவியிடமிருந்து வெளிப்படும் அன்பு, கணவனுக்கு ஏற்படும் புத்துணர்வு, உண்டாகும் அமைதி பெயர்சொல்லி அழைப்பதில் இருக்குமா?

பிள்ளைகள் தாயை அம்மா என்று அழைக்கும்போது தாய்க்கு ஏற்படுகிற பாச உணர்வு, தாய்க்கும் பிள்ளைக்கும் பெருக்கெடுக்கும் அன்பு, உலகத்திலே நிகரற்ற தாய் சேய் உறவின் வெளிப்பாடு, அம்மா என்ற அழைப்பின் ஓசைக்குள் அடங்கியிருக்கும் மகத்துவம், அந்தச் சொல்லின் வலிமை பெயர் சொல்லி அல்லது 'மா' என்று அழைப்பதில் ஏற்படுமா?

பிள்ளைகள் தந்தையை அப்பா என்றோ, ஐயா என்று அழைக்கும் போது உண்டாகிற எழுச்சி, புடைத்தெழும் அன்பு, பிள்ளைக்கும் தந்தைக்கு மான உறவின் நெருக்கம், உண்டாகும் மதிப்பு, பெயர் சொல்லி அழைப்பதில் ஏற்படுமா? மாமா, மச்சான், அக்கா, அத்தான் என்று அழைக்கும்போது ஏற்படுகின்ற உறவின் பிணைப்பு பெயர் சுட்டி அழைப்பதால் அந்நியமாகி விடாதா? என்ற கேள்விகள் அத்தகையோரைக் காணும்போது என்னுள் எழாமலில்லை.

புலம்பெயர்ந்து ஐரோப்பிய நாடுகளில் குடியேறிய பெற்றோரின் பிள்ளைகள் அங்கெல்லாம் எவ்வளவு திறமையானவர்களாக மிளிர்ந்தாலும்

கரும்புள்ளிகளாக சில பிறழ்வுகளும் இருக்கவே செய்கிறது. உடையில் ஐரோப் பியர்களாக மாறுவதை தவறென்று சொல்வதற்கில்லை. அங்குள்ள காலநிலை மாற்றம் மற்றும் பாடசாலை, வேலைத்தலங்கள் போன்றவற்றால் அந்த அவசியம் அவர்களுக்கு ஏற்படுகிறது. எல்லோரும் அவ்வாறான உடையணி பவர்களென்பதால் அதனை எவரும் அலட்டிக்கொள்வதில்லை. இலங்கை வரும்போது அந்த உடைகள் அவசியமென்றில்லை. அவற்றை இங்கு அணிந்து பலரையும் திரும்பிப் பார்க்க வைக்கிறார்கள்.

கடந்த ஆண்டு லண்டனில் இருந்து வருகைதந்த தமிழ் யுவதி வேறு சில பெண்களுடன் யாழ்ப்பாணக் கோட்டையைப் பார்வையிடச் சென்றுள் ளாள். அங்கு காவலரணில் நின்ற இராணுவத்தினன் அந்த யுவதியை அழைத்து, இந்த உடை அசிங்கமாக இருப்பதாகக்கூறி, அவளுடன் கூடவே வந்தவர் களைக் காண்பித்து, வீட்டுக்குப்போய் இவர்களைப்போல உடை உடுத்தி வருமாறு கூறி அனுப்பிவிட்டான். இதெல்லாம் எமது யுவதிகளுக்குத் தேவையா?

உடைப் பிரச்சினையை ஒதுக்கிவிட்டுப் பார்த்தாலும் காலகாலமாய் கட்டிக் காத்து வந்த தமிழர் பண்புகளைப் புறந்தள்ளி ஐரோப்பியர்களின் கலாசாரத்திற்குள் நுழைந்து விடுகிறார்கள். அங்கேதான் தவறுகள் விஸ்வரூபம் எடுக்கின்றது.

புலம்பெயர்ந்து குடியேறிய பின்னர் எமது சமூகத்தின் விழுமியங் களிலும், தனிமனிதத் தன்மைகளிலும் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டுவிட்டன. புலம்பெயர்ந்து வாழும் எமது பிள்ளைகள் புலம்பெயர் நாட்டில் பிறந்தவர்கள் அல்லது சொந்த நாட்டில் வாழ்ந்தவர்கள். வாழும் சூழல் தன்மையால் அவர்களது மனத்தின் மாற்றங்களோ, மனத்தின் விருத்திகளோ வேகமாக நடைபெறுகின்றன. சில சமயங்களில் பெற்றோரால் அம்மாற்றங்களுக்கு ஈடு கொடுக்க முடியாமல் போய்விடுகிறது. அவ்வேளைகளில்தான் சிக்கல்கள் உருவாகுகின்றன.

ஐரோப்பிய தமிழ் பிள்ளைகளின் (ஆண், பெண்) சில தவறான நடத்தைகள் பற்றி அறியவந்ததன் காரணத்தால், இந்த மாற்றம் பற்றி சுவிஸில் எனக்கு ஏற்கெனவே அறிமுகமான குடும்பநல, உளவியல் ஆலோசகர்களுடன் உரையாடியபோது சில கருத்துகளை அறியக் கூடியதாக இருந்தது. இது சம்பந்தமான தனிப்பட்ட அல்லது நிறுவனத்தின் பெயரையோ உரையாடல் விபரங்களையோ இங்கே குறிப்பிடக்கூடாது என்பதால் என்னால் கிரகிக்கப் பட்ட அனுகூலமான தகவல்களை மட்டும் தருகிறேன்.

ஒரு பிள்ளை 18 வயதிற்கு மேற்பட்டால் பிரிந்துசென்று சுதந்திரமாக வாழ்வதற்கு அங்கு சட்டத்தால் உரிமை வழங்கப்படுகிறது. பாரம்பரிய கலாசாரத்தின் வழி வாழுகின்ற தமிழ்ப் பெற்றோர்களுக்கு இது விரும்பத் தகாததாக இருந்தலும் 18 வயதைத் தாண்டிய பிள்ளைகளுக்கு மகிழ்ச்சிக்கும், துணிவுக்கும் வாய்ப்பாக அமைகிறது. எங்கெல்லாம் அங்கீகாரம் கிடைக்

கிறதோ, எங்கெல்லாம் உறுதுணையாக நிற்க அல்லது வக்காலத்து வாங்க தயாரானோர் உள்ளனரோ அங்கெல்லாம் சார்ந்துகொள்வதும், ஒத்த வயதுடைய பிள்ளைகளிடையே ஈர்ப்பு இருப்பதும் மனித இயல்பு.

பெற்றோரே தம்மை அறியாது காரணராகிறார்கள். பிள்ளை பிறந்தது முதல் தொடராகக் கொடுக்கப்படும் அதீத செல்லம், அவர்களது வாழ்வோடு ஊறிவிடுகிறது. குறித்த அதாவது 18 வயதைத் தாண்டியதும் அவர்களுக்கு வழிகாட்டவேண்டிய பெற்றோர் செல்லம் காரணமாக விட்டுக் கொடுப்பில் ஈடுபடுதல் அல்லது பெற்றோரின் திடீர் மாற்றத்திலான வழி காட்டலை ஏற்று நடக்க மறுத்தலை ஏற்றுக்கொள்ளுதல் போன்றவை காரணமாக அமைகிறது.

பெற்றோரின் அரவணைப்பு பெறாத பிள்ளைகளிடம் மிக மோசமான நிலையையும் காணலாம். அரவணைப்பு என்பது போட்டிபோட்டு செல்லம் கொடுப்பது என்பதில்லை.

தமது பிள்ளைகள் பற்றிய முழுமையான அறிவு எந்தப் பெற்றோருக் கும் இருப்பதில்லை. தாம் காணாத, காணமுடியாத ஒரு குறையினை மற்றவர்கள் கண்டிருப்பதில் ஆச்சரியமெதுவுமில்லை. ஆனால், சில பெற்றோர் தெரிந்தும் தெரியாதார்போல பாசாங்கு செய்கிறார்கள். இது ஆரோக்கிய மானதன்று.

சில பெற்றோரிடையே தொடராக இருக்கின்ற கணவன் மனைவி உறவின் விரிசல்கள், அதனால் ஏற்படுகின்ற பிரச்சினைகளின் வெளித் தாக்கங்கள், பிரச்சினைகளைத் தீர்க்கமுடியாமல் அடிக்கடி ஈடுபடும் வாய்த் தர்க்கங்கள், தாய் அல்லது தந்தையின் தவறான நடத்தைகள், இந்நடத்தை களின் வெளிப்பாடாய் கணவனின் தவறான தொடர்பால் மனைவி பிரிந்து சென்று வேறு திருமணம் செய்து அல்லது தனித்து இருப்பதும் மனைவியின் தவறான தொடர்பை அறிந்த கணவன் மனைவியைத் துடிதுடிக்கக் கொலை செய்திருப்பதும் நிகழ்வுகளாக உள்ளன.

ஜேர்மன் நாட்டில் ஒருவன் தன் மனைவியைக் கத்தியால் நாற்பது குத்துக்கள் வரை குத்தி கொலை செய்துள்ளான். சுவிஸில் ஒருவன் மனைவி வேலைசெய்யும் இடம் தேடிச்சென்று கத்தியால் வெட்டிக் கொலை செய்துள்ளான். இன்னுமொருவன் சப்பாத்துக்குக் கட்டும் நூலால் கழுத்தை இறுக்கி கொலைசெய்து உரப் பையிலிட்டு ஆற்றில் போட்டுள்ளான். இருவர் சேர்ந்து ஒருவனை வீட்டில் கொலைசெய்து காட்டில் தீயிட்டுக் கொழுத்தி யுள்ளனர். இவை உதாரணத்துக்காகவே. இதுபோன்ற நிகழ்வுகள் அவர்களது பிள்ளைகளை மட்டுமல்ல அவர்களோடு நெருங்க உறவாடும் பிள்ளைகளின் தெரிவில் தாக்கத்தை ஏற்படுத்தத் தவறுவதில்லை.

அம்மா குடிக்கிறா நான் குடித்தாலென்ன என்று கேட்கும் மகள். அம்மா அப்பிடித் திரியிறா நான் திரிஞ்சால் என்ன என்று கேட்கும் பிள்ளை கள். தான் எப்போதும் குடித்து மதுபோதையில் காலத்தைக் கழிக்கையில், தன்

மகனை குடிக்கக்கூடாதென அறிவுரை கூறமுடியாத தந்தை. இந்நிலைகளால் தடுமாற்றத்திலிருக்கும் பிள்ளையிடம், "நான் வீட்ட சொல்லீட்டுத்தான் வந்ததனால் இண்டைக்கு குடிச்சுப் போட்டுத்தான் வருவேன்" என்று கூறி, மது அருந்த மற்றும் டிஸ்கோ கிளப்பிற்கு அழைக்கும் அந்நாட்டு நண்பனின் அழைப்பு மனமாற்றத்தை ஏற்படுத்தாமலிருக்க முடியுமா?

இரவு நேரம் தாமதித்து வந்தாலும், அதையே வழமையாயக் கொண்டிருந்தாலும் தட்டிக் கேட்கமுடியாத நிலையை ஏற்படுத்தும் அதீத செல்லமும், அதற்காகத் தமக்குத் தாமே கூறிக்கொள்ளும் சமாதானமும் பிள்ளைகளின் நன்நடத்தைக்கு வழிகோலுமா?

18 வயதிற்கு மேற்பட்டவர் பிரிந்து செல்ல சட்டத்தில் இடமிருந்த போதும், பிரிந்து செல்லும் ஒருவர் பெற்றோரின் உதவியின்றி தனது வாழ்வைத் தடையின்றி மேற்கொள்வதற்கு வருவாயைப் பெறக்கூடியவராகவும் இருக்கவேண்டுமென்ற அறிவுறுத்தலும் விடப்படுகிறது.

இந்த அறிவுறுத்தல் காரணமாக சுயமாகப் பிரிந்து செல்ல முடியாத நிலையிலுள்ள எம்மவர்கள், தமது அந்நாட்டு நண்பர்களின் உந்துதல், அவர்களின் கவர்ச்சிகரமான போக்கினால் ஏற்படும் மனமாற்றம் பிரிந்து வாழும் எண்ணத்தை அவர்களுக்கு ஏற்படுத்தத் தவறுவதில்லை. இந்த மனமாற்றத்திற்கு பெரிதும் துணைபுரிவது பெற்றோரின் கண்டிப்பே இல்லாத அதீத செலல்வத்தனமே. அதிலே ஊறிவிட்டதால் பெற்றோரின் காலம் பிந்திய கண்டிப்பை புறக்கணித்து தமது போக்கிற்கு முன்னுரிமை கொடுக்கிறார்கள். இதைத் தட்டிக்கேட்கமுடியாத கையறு நிலையே பெற்றோருக்கு ஏற்படுகிறது.

தடுமாறும் திருமணங்கள்

தற்போது புதியதொரு நடைமுறை நவீன கலாசாரமாகத் தொற்றியுள்ளது. முதல்முறை நிகழ்ந்தபோது விபத்தாகப் பார்க்கப்பட்டது. பின்னரும் தொடர்ந்தபோதுதான் வாடிக்கை என்ற எண்ணம் தோன்றியது. இங்குள்ள பெற்றோர் தமது பிள்ளைகளை மேலைநாடுகளில் வசிப்பவர்களுக்குத் திருமணம் செய்து கொடுத்து அங்கு அனுப்பிட வேண்டுமென்ற வெளிநாட்டு மோகம், மேலை நாடுகளில் வசிக்கும் பெற்றோர் தமது பிள்ளைகளை ஊரில் திருமணம் பேசி செய்துவைக்க வேண்டுமென்ற மண் மீதான ஆவலுடன் பெண் அழகாக இருக்கவேண்டும் படித்தவளாக இருக்க வேண்டும் குறைந்த வயதினளாக இருக்கவேண்டுமென்ற அவர்களின் எதிர்பார்ப்பு போன்ற வையே நவீன இந்த கலாசாரம் உருவாகக் காரணங்களாகின்றன.

இத்தகைய திருமணங்களில் இங்குள்ள பெண்கள் பெரும்பாலும் இருபது வயதுக்குக் குறைந்தவர்களாகவும் திருமணம் செய்யவுள்ள மேலை நாட்டு ஆண்கள் பெரும்பாலும் முப்பது வயதுக்கும் மேற்பட்டவர்களாகவும் இருக்கின்றார்கள். மேற்குறிப்பிட்டுள்ள காரணிகளால் திருமண ஏற்பாடு செய்ய முனைப்புக் காட்டும் பெற்றோர் தமது பிள்ளைகளின் விருப்பு

வெறுப்புகளை, உள்ளக்கிடக்கைகளை, எதிர்பார்ப்புகளை கேட்டறிவதோ, விசாரித்தறிவதோ, கருத்தில் எடுப்பதோ இல்லை. இதனால் பல விழைவுகள் அரங்கேறியிருக்கின்றன. அவற்றிற்கு பொருந்தக்கூடிய சில நிகழ்வுகளை உதாரணமாய் முன்வைக்கின்றேன் (அவசியம் கருதி நாட்டின், சம்பந்தப் பட்டவர்களின் பெயர்கள் மறைக்கப்படுகின்றன).

1. மேலைநாடொன்றில் வசித்துவந்த பெண்ணுக்கு இலங்கையில் மணமகனை ஏற்பாடுசெய்து குறித்தநாளில் பெண் வந்ததும் பதிவுத் திருமணமும், சிறப்பாகத் திருமணமும் நடைபெற்று, பத்து நாட்களால் கணவனின் கடவுச்சீட்டு பிரதியுடன் பெண் நாடு திரும்பிவிட்டாள். மனைவியிடம் செல்வதற்கான விசாவுக்குரிய பத்திரங்களை எதிர்பார்த்திருந்த கணவனுக்கு இரண்டு வாரங்களின் பின்னர், 'தான் அங்கு ஒருவரை விரும்பி அவருடன் நீண்டநாள் வாழ்வதாகவும், நடந்த தவறுக்கு மன்னிக்குமாறும்' எழுதப்பட்டிருந்த கடிதம் மட்டும் அவளிடமிருந்து கிடைத்தது.

2. மேலைநாட்டில் வசிக்கும் மாப்பிள்ளைக்கு இலங்கையில் மணப்பெண்ணை நிச்சயம் செய்து, மாப்பிள்ளை இலங்கை வருவதில் இருந்த சிக்கலால் அயல்நாட்டில் பெரும் செலவில் பதிவுத் திருமணம் மற்றும் திருமணம் நடைபெற்றது. சில வாரங்களால் மணமகள் இலங்கை திரும்ப, மணமகன் தனது நாடு திரும்பினான். ஒரு மாதத்தின் பின்னர், திருமண பந்தத்தைத் தூக்கி யெறிந்து விட்டு, தான் காதலித்தவனுடன் சென்று விட்டாள் மணமகள்.

3. இதே முறையில் வேறொரு பெண் இந்தியாவில் திருமணம் முடிந்து கூடவே ஒரு மாதம் இருந்து இலங்கை வந்த ஒரு வாரத்தால், அந்த மாப்பிள்ளை வேண்டாமென அடம் பிடித்ததால் திருமண பந்தம் முறிந்தது.

4. மேலைநாட்டில் வசிக்கும் மாப்பிள்ளைக்கும் இங்குள்ள பெண்ணுக்கும் திருமணம் பேசி ஒரு வருடத்தின் பின்னர் பதிவுத் திருமண மும், திருமணமும் நடைபெற்றன. மனைவியை விரைவில் அங்கு அழைப் பதற்குரிய ஏற்பாட்டைச் செய்வதாகக் கூறி, மூன்று வாரங்களால் மாப்பிள்ளை தான் வசிக்கும் நாடு சென்றுவிட்டார். ஐந்தாறு மாதங்களாகியும் விசா பெறுவதற்கான தகவல் தூதரகத்திலிருந்து கிடைக்கவில்லை. ஆனால், மாப்பிள்ளை தனது காதலியை அழைத்துக்கொண்டு வேறு நகரில் குடியேறி விட்டதாக தகவல் கிடைத்தது பெண்வீட்டுக்காரருக்கு.

5. இலங்கையில் இருந்தபோது திருமணம் பேச்சு இடம்பெற்றது. மாப்பிள்ளை வெளிநாடு செல்ல இருப்பதால் திருமணத்தைத் தாமதித்துச் செய்யும் நோக்கில் பதிவுத் திருமணம் நடைபெற்றது. பெற்ற சீதனத்தில் மாப்பிள்ளை வெளிநாடு செல்லும் நடவடிக்கையில் இறங்கி ஏதோவொரு வகையில் மேலைநாடு சென்றுவிட்டான். இரண்டு வருடம் கழிந்தும் நிரந்தர விசா இல்லாத காரணத்தால் மேலைநாட்டுப் பெண்ணைத் திருமணம் செய்துகொண்ட தகவலை பெண்வீட்டார் அறிந்துகொண்டனர்.

6. வருடக்கணக்கில் உயிருக்குயிராய் காதலித்த காதலி / காதலன் இலங்கையிலிருக்க மேலைநாடு செல்கின்றார் தனித்து, அங்கு சென்றதும் அழைப்பதாகக் கூறி சென்றவருக்கு ஒழுங்கான விசா இல்லை. ஒழுங்கான வேலையில்லை. இந்நிலையில் அந்நாட்டுக் குடியுரிமை பெற்ற இலங்கையரை திருமணம் செய்துகொள்கிறார் தனது வாழ்வு செழிப்பதற்காக. இலங்கையிலுள்ள காதலி / காதலன் நிகழ்ந்ததை அறிந்து ஊமைக் காயத்துடன் உலாவருகின்றனர்

7. முகமறியா மேலைநாட்டு வதிவிட மாப்பிள்ளையை மணந்து ஏமாற்றப்பட்டவர்கள், ஏற்கெனவே திருமணம் செய்த மேலைநாட்டு வதிவிட மாப்பிள்ளை என்பதை அறியாது சீதனத்தை அள்ளிக்கொடுத்து மணம்செய்து கொண்டவர்கள், திருமணம் முடிந்து மேலைநாடு செல்லும்வரை எதையும் அறியாது அங்குசென்றபின் கணவனின் நடத்தையை அறிந்து அல்லது அவனது துன்புறுத்தல் தாங்காது பிரிந்து கண்ணீரில் மிதப்பவர்கள் - வேறு மணம் செய்தவர்கள் எனப் பலர் உள்ளனர்.

மேற்குறித்தவைபோல் நீண்டு செல்லும் பட்டியலுக்கு முற்றுப்புள்ளி வைக்க மேலைநாட்டு மற்றும் இந்நாட்டுப் பெற்றோர்கள் முன்வரவேண்டும். அவன் அல்லது அவள் கொஞ்சம் 'குழப்படி' தான் திருமணம் செய்தால் எல்லாம் சரியாகிவிடுமெனக் கூறித் தமக்குத் தாமே சமாதானம் செய்ய முனையும் நிலை பலவற்றையும் மறைக்கிறது. எனவே உங்கள் பிள்ளைகளின் எதிர்கால நலனுக்காகச் சிந்தித்துச் செயற்படுங்கள். நாட்டு நடப்பை அறிந்து தீர விசாரித்துத் தீர்மானத்தை எடுங்கள் அதுவே உங்களுக்கு உகந்தது.

உணராத தவறுகள்

மேலைநாட்டில் வசிக்கும் எம்மவர்கள் இரண்டு வயதுக்கு உட்பட்ட குழந்தைப் பிராயத்திலேயே தன் பிள்ளை பலவற்றையும் அறிந்து வைத்துள்ளதென பிறருக்குக் காட்டுவதற்காக பெற்றோர் சில செயல்களில் ஈடுபடுகிறார்கள். வீட்டிலுள்ள மின் விசைகளை இவ்வாறு அழுத்துவது, இணைப்புகளை இவ்வாறு பொருத்துவது, வீட்டு மண்டபம் மற்றும் அறைகளிலுள்ள தொலைக்காட்சி பெட்டிகள், சமையலறையிலுள்ள நுண்ணலை உணவு சூடேற்றி (microwave oven), அரைக்கும் இயந்திரம், வெதுப்பி (oven), வாட்டி (grill) மற்றும் குளியலறையிலுள்ள சலவை இயந்திரம் (washing machine) போன்றவற்றின் விசையை இவ்வாறுதான் போடுவது, இவ்வாறுதான் இயக்குவது எனச் சொல்லிக் கொடுப்பதுடன் அவ்வாறு செய்யும்படி ஏவுகிறார்கள்.

இதனைப் பெருமையாகக் கருதியபோதும் சில சந்தர்ப்பங்களில் இவர்களது ஏவல் இல்லாமல், இவர்கள் அங்கு இல்லாத வேளைகள் அல்லது அவதானமில்லாத நேரங்களில் அப்பிள்ளை அவற்றைச் செய்ய முனையாதா என்று சிந்திக்கிறார்களில்லை. அவ்வாறு செய்யும்போது அதனால் ஏற்படும்

விளைவுகள் எவ்வாறு இருக்குமென்பதை உணருகிறார்களில்லை. இந் நேரத்தில் ஜேர்மன் நாட்டில் ஒரு தமிழ்க் குழந்தைக்கு நேர்ந்த பரிதாபம் நினைவுக்கு வருகிறது.

மூன்றரை மற்றும் ஒன்றரை வயதுகளையுடைய சிறுமிகளுடன் வாழும் தாய், சலவை இயந்திரத்தில் உடைகள் கழுவும் சந்தர்ப்பங்களில் கைக்குழந்தையை தான் ஏந்தியவாறு மூத்த பிள்ளையையே இயந்திரத்தின் கதவை மூடுதல், அதனை இயக்குதல் போன்றவற்றைச் செய்யும்படி ஏவுவதை பெரும்பாலும் வழமையாகக் கொண்டிருந்தாள். இயந்திரத்திலிட்டு கழுவிய பின்னர் உடைகள் தூய்மையாக வருவதை பார்த்தும் கேட்டறிந்துமிருந்த மூத்த சிறுமி தன் சகோதரி தன்னைவிட நிறம் குறைவாக இருப்பதால் "தங்கச்சிய இதுக்குள்ள போட்டா வெள்ளையா வருமாம்மா?" எனக் கேட்டதற்கு தாயும் விளையாட்டாக "ஓமடா உன்னைப்போலவே வெள்ளையாய் வரும்" எனப் பதிலளித்தாள்.

ஒருநாள் பிள்ளைகள் இருவரும் விளையாடிக்கொண்டிருக்கும் போது அவசரமாக வெளியே சென்றுவிட்டாள் தாய். ஐரோப்பிய சட்டப்படி இது தவறாயினும் சிறிதுநேர அலுவலென்பதால் சென்றுவிட்டாள். தாய் கூறியதை ஞாபகத்தில் வைத்திருந்த அச்சிறுமி, தாய் வரும் முன்னரே சகோதரியை வெள்ளையாக்கிக் காண்பிக்கும் ஆவலில் சலவை இயந்திரத்தி லிட்டு, கதவை முடி அதனை இயக்கி விட்டாள். இயந்திரம் இயங்கியதால் கதவை திறக்க முடியவில்லை அவளால். அந்நேரத்தில் அங்கு வந்த தாய் நிலைமையைக் கண்டு இயந்திரத்தின் இயக்கத்தை நிறுத்தி கதவைத் திறந்தாளாயினும் குழந்தையைக் காப்பாற்ற முடியவில்லை.

சுவிற்சர்லாந்தில் பாசல் நகரிலிருந்த நண்பனின் வீட்டுக்கு சென்று வருவதுண்டு. அவருக்கு நான்கு மற்றும் ஒன்றரை வயதுள்ள பிள்ளைகள் இருக்கின்றனர். புதைத்தல் பழக்கம் அவருக்குள்ளதால் சில சந்தர்ப்பங்களில் தனது வாயில் சிகரெட்டை வைத்துக்கொண்டு நான்கு வயது பையனிடம் லைற்றரைக் கொடுத்து சிகரெட்டுக்கு நெருப்பு வைக்கச் சொல்ல அவனும் அவ்வாறே செய்வான். ஒரு தடவை நானங்கு சென்றிருந்தவேளை குழந்தைக்கு சுகயீனம் காரணமாக பெற்றோர் வைத்தியசாலை செல்ல, சிறுவன் என்னுடன் தங்கிவிட்டான். நான் தொலைக்காட்சியைப் பார்வையிட அவன் பக்கத்து அறையினுள் விளையாடிக்கொண்டிருந்தான். சிறிது நேரத்தால் எழுந்த புகை மணத்தால் சிறுவனைப் பெயர் சொல்லி அழைத்தவாறு அறைக்குள் நுழைந்தேன். அறையின் உள்பக்கக் தரையோரம் பொருத்தியிருந்த பிளாஸ்ரிக் சட்டம் எரிந்ததுடன், சிறிது உயரமாகத் தொங்கிக் கொண்டிருந்த கேட்டின் சீலையில் தீப்பற்றியிருந்தது. உடனே அணைத்து விட்டேன். சிறுவன் கையில் லைற்றருடன் சிரித்தவாறு நின்றான். நான் விரைந்து அணைத்ததால் விபரீதம் தடுக்கப்பட்டது.

எனவே, பெற்றோர் பிள்ளைகளின் பருவத்திற்கு ஏற்றவற்றைச்

செய்யச் சொல்லிக் கொடுப்பதே மிகவும் உகந்தது. அதீத செல்லம் கொடுக்கலாம், அளவுகடந்த பாசத்தை பொழியலாம் ஆனாலும் கண்டிக்க வேண்டிய தருணங்களில் கண்டித்து வளர்த்து வருதலும், பெற்றோரின் சுயநலமற்ற அரவணைப்பு தமக்கு உள்ளதென உணரச் செய்வதுமே சிறந்த நடைமுறையாகும். அதீத செல்லமும் அரவணைப்பற்ற நிலையும் பிள்ளைகள் பலதையும் வெளிப்படுத்தத் தயக்கத்தைக் கொடுக்கிறது. அவர்கள் அந்தத் தன்மைக்குத் தம்மை பழக்கப்படுத்திக் கொள்வார்கள்.

ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா? என்ற முதுமொழியை ஐரோப்பா வாழ் தமிழ்ப் பெற்றோர்கள் கருத்திற் கொள்ளுதல் நல்லது. தாயும் தகப்பனும் போட்டிபோட்டு கொடுக்கும் கண்டிப்பற்ற செல்லம் என்றோ ஒருநாள் எதிர்பார்ப்பு தடம்புரளும்போது பெருந்தாக்கத்தை ஏற்படுத்தாது என்று சொல்வதற்கில்லை. அதற்கும் தயாராக உங்களைப் பக்குவப்படுத்திக் கொள்ளுங்கள். இலங்கையில் அவ்வாறில்லையா? என்று கேட்கலாம். அத்தகையோர் பின்னர் விடும் கண்ணீரைக் கண்முன்னே காண்கிறோம், அறிகிறோம். அந்தநிலை புகலிட மண்ணில் வாழ்பவர்களுக்கும் ஏற்படாமல் காத்துக்கொள்வது நல்லதுதானே!

மகிழ்வுடன்


கலையார்வன்











வெளிவந்தவை...

இலக்கியம்

01. தடுமாறும் சாஸ்திரங்கள்	*(கவிதைத் தொகுப்பு)*	சுவிற்சர்லாந்து	1993
02. அவலத்தின் இராகங்கள்	*(கவிதைத் தொகுப்பு)*	சுவிற்சர்லாந்து	1995
03. களம் தந்த களங்கம்	*(தென்மோடிக் கூத்து)*	யாழ்ப்பாணம்	2003
04. குருதிக் குளியல்	*(மூன்று குறுநாவல்கள்)*	யாழ்ப்பாணம்	2007
05. ஆகுதி	*(சிறுகதைத் தொகுப்பு)*	இந்தியா	2009
06. கூத்துக்கள் - 5	*(5 தென்மோடிக் கூத்துக்கள்)*	யாழ்ப்பாணம்	2009
07. குறுங்கூத்துக்கள்	*(5 தென்மோடிக் கூத்துக்கள்)*	யாழ்ப்பாணம்	2011
08. அறுவடை	*(காவியம்)*	யாழ்ப்பாணம்	2014
09. கடல் கடந்த நாட்கள்	*(பயண அனுபவப் பதிவுகள்)*	யாழ்ப்பாணம்	2015

அறிவியல்

10. தமிழ்ச்சோலை	*(ஐரோப்பா வாழ் சிறுவர் பாட நூல்)*	சுவிற்சர்லாந்து	1994
11. செயல்முறைக் கணிப்பொறி		சுவிற்சர்லாந்து	1998
12. கணிப்பொறி 2000		யாழ்ப்பாணம்	2001
13. தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குரிய முன்னோடிக் குறிப்புகள்		யாழ்ப்பாணம்	2009

பல்துறை

14. குருநகர் கலைமாட்சி	யாழ்ப்பாணம்	2003
15. கடலலைகள் கொஞ்சும் நகர்	யாழ்ப்பாணம்	2006
16. ஆன்மீகத்தில் குருநகர் மக்கள்	யாழ்ப்பாணம்	2008

நாவல்

17. உப்புக்காற்று	யாழ்ப்பாணம்	2012
18. வேப்பமரம்	யாழ்ப்பாணம்	2013

இறுவட்டு (பாடலாக்கம்)

01. யாகப்பரே எங்கள் காவலரே	யாழ்ப்பாணம்	2002
02. புகழ் பூத்த புனிதர்	யாழ்ப்பாணம்	2011
03. வெள்ளோட்டம்	யாழ்ப்பாணம்	2011



நூல் விருதுகள்

கடலலைகள் கொஞ்சும் நகர்
வடக்கு மாகாண கல்வி அமைச்சின் விருது 2007

குருதிக் குளியல் (3 குறுநாவல்கள்)
வடக்கு மாகாண கல்வி அமைச்சின் விருது 2008



கூத்துக்கள் - 5 (5 தென்மோடிக் கூத்துக்கள்)
அரச இலக்கிய (சாஹித்திய) விருது 2010
தமிழியல் விருது 2010

குறுங்கூத்துக்கள் (5 தென்மோடிக் கூத்துக்கள்)
அரச இலக்கிய (சாஹித்திய) விருது சான்றிதழ் 2012
இலங்கை இலக்கியப் பேரவையின் விருது 2012



உப்புக்காற்று (நாவல்)
அரச இலக்கிய (சாஹித்திய) விருது 2013
வடக்கு மாகாண கல்வி அமைச்சின் விருது 2013
தமிழியல் விருது 2013
இலங்கை இலக்கியப் பேரவையின் விருது 2013

வேப்பமரம் (நாவல்)
இலங்கை இலக்கியப் பேரவையின் விருது 2014



அறுவடை (காவியம்)
வடக்கு மாகாண கல்வி அமைச்சின் விருது 2015

வேறு விருதுகள்

கலாபூஷணம் (கலாசார அலுவல்கள் திணைக்களம்) 2014
யாழ் ரத்னா (யாழ் பிரதேச கலாசார பேரவை) 2014

சிங்கள மொழி மாற்றம்


கறதிய சுலங் (කරදිය සුළං) 2015











ஜெயந்த் சென்ரர்
021 222 9021



ISBN 978-955-0197-05-7